பிரமோத்தர காண்டம்

59/4-74



O-,15VP,P
N74;1
11003

வாவடுதுறை ஆதீனம்
திருவிடைமருதூர்
லிங்க் சுவாமி தேவஸ்தானம்

வெளியீடு எண் 44.

உ
சிவமயம்

வரதுங்கராமபாண்டியர்

இயற்றிய

பிரமோத்தரகாண்டம்

பொழிப்புரையுடன்

இது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

திருவிடைமருதூர்

ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானத்தில்

வெளியிடப்பெற்றது.

1974

பொருளடக்கம்

		பக்கம்
முகவுரை		ரு
நூலாசிரியர் வரலாறு	...	கூ
அத்தியாய அட்டவணை	...	கக
பிரமோத்தரகாண்டம் .	...	1—417
பாட்டு முதற்குறிப்பு அகராதி	...	419



ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை. —

உ
சிவமயம்

முகவுரை

திருச்சிற்றம்பலம்

குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ அருத்தமின்பம் என்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

உலகங்கள் மேன்மை அடையும்பொருட்டு வேதவியாச முனிவரால் பதினெண்புராணங்கள் கூறி அருளப்பட்டுள்ளன. அப்புராணங்களுள் உலகிற்கு இன்றியமையாத முக்கிய சாதனங்களும் சிவபுண்ணியங்களும் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. அத்தகைய சிவபுண்ணியங்கள் அடங்கிய வரலாற்று நூல்களை அந்தந்த நாட்டிலுள்ளவர்கள் தங்கள் தங்கள் மொழிகளில் பெயர்த்தெழுதி ஆர்வமுடன் பயின்றும் பிறருக்கு எடுத்துச் சொல்லியும் வருவது உலகறிந்த ஒன்றாகும்.

சிவபெருமான் திருவடியின்கண் பத்தி செய்பவர்கள் இத்தகைய வரலாறுகள் அமைந்த நூல்களை வெளியிடுவதைக் காட்டிலும் மேலான சிவபுண்ணியம் எதனையும் பெறுதல் என்பது இயலாத ஒன்றாகும். இந் நற்செயலே மக்கட்பிறவி எடுத்தவர்களுக்குச் சிறப்புடையதான சிவ புண்ணியப் பயன்களைத் தருகின்றது. இம்மையிலும் அரும்பெரும் புகழினையும் அளிக்கின்றது.

" தேடினு ரியாவரேகொல் எழுவகை யானுஞ்சீர்த்தி
நீடினு ரவரேயென்பர் நீணிலத் துயர்ந்தமாந்தர் "

என மகாபாரதத்துச் சிறப்புப்பாயிரத்திலே வில்லிபுத்தூராழ்வார் குமாரர் வரந்தருவார் கூறியுள்ளார். அவர் புகழுக்கு ஏதுவாக எழுவகைச் சிறந்த செயல்களைக் குறிப்பிட்டுள்ளார். அவைகள் பசு புண்ணியங்களாகிய குளம் வெட்டல், சோலைகள் வைத்தல், தானங்கொடுத்தல் முதலியன. இவைகளைக் காட்டிலும் சிவபுண்ணியமாகிய பதிபுண்ணியம் செய்தல் ஆயிரமாயிரம்

மடங்கு அதிகம் எனலாம். அத்தகைய சிவபுண்ணியங்களை அறியுமாறு விளக்கிக் கூறுவனவே சிவபுராணங்களாகும். இச்சிவபுராணங்கள் இயற்று வதை ஆன்ரோர்கள் பிரபந்த நிர்மாணம் என்பார்கள்.

சிவபுராணங்கள் பத்து. அவைகளுள் காணப்படும் விரதங்களின் சிறப்புக்கள், திருவைந்தெழுத்துச் சிறப்பு, உருத்திராக்கச் சிறப்பு, சீருத்திர மந்திரச் சிறப்பு முதலாகிய சிறப்புக்களையும், சிவபுராணங்கள் கேட்கும் முறைகளையும், கேட்டலால் அடையும் நன்மைகளையும் ஒருவர் அவசிய மாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அவைகள் யாவும் பதிபுண்ணியங்களை விளக்கிக்கூறும் மாண்பினை உடையனவாம்.

மேலே கூறியமுறையில் பிரமோத்தர காண்டத்துள் காணப்படு கின்ற சிவவரலாறுகள் யாவும் முன்னுள்ள புராணங்களில் காணப்படு வனவேயாயினும், அவைகளை ஆசிரியர் மிக விரிவாக விளக்கிக் கூறியுள்ள முறைமை அறிந்து இன்புறற்குரியது. அன்றியும் பின்னர்வந்த நூல்களும் ஏற்ற முறைகளில் இவைகளை எடுத்தாண்டுள்ள முறைகளும் எண்ணுதற் குரியன. ஆகவே சிவபெருமானது முழுமுதற்றன்மையைத் தெள்ளத்தெளிய எடுத்து விளக்குவது இப்பிரமோத்தர காண்டமாகும். மக்கள் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய நன்னெறிகள் பலவும் இதனுள் ஏற்ற பெற்றி எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

பிரமோத்தர காண்டத்துள் பதிப்பொருள் உறுதி, யோகஞான நன்னெறிகள், சிவபரத்துவம், விரதாதி நன்மைகள், அவைகளை மேற் கொண்டோர் அடைந்த பயன்கள், ஆகியவை யாவும் கூறும் பகுதிகள் கற்றறிவுடையோர் கருதக்கூடிய நிலையில் அமைந்துள்ள சிறப்பு அறிந்து இன்புறக்கூடிய ஒன்றாகும். மேலும் அவைகள் யாவும் மக்கள் தம்வாழ்வில் இன்றியமையாது மேற்கொள்ள வேண்டியனவாகவும் உள்ளன. கற்ரோர்க்குக் களிபேருவகை ஊட்டுவன.

பிரமோத்தரகாண்டம் சிவபுராணங்களில் காணப்படுகின்ற சிறப் புடைய செய்திகளை எடுத்து விளக்கும் ஓர் அரும் பெரும் நூலாகும். சிவதத்துவங்களையும், சித்தாந்தச் செந்நெறிகளையும் தெள்ளத்தெளிய எடுத்து விளக்கும் ஒரு பெருநூலாகும். எண்ணியார்க்கு எண்ணிய பயனை அளிக்கும் திண்ணிய நூலுமாகும். இக்காண்டம் முழுவதையும் முறைப்படி படித்தாலோ, படிக்கக்கேட்டாலோ சித்திமுத்திகளை அளிக்கும் பெற்றியினை உடையது. இம்மையில் பொருளையும் போகத்தையும் அளித்துச் சிறந்த

புத்திரப்பேற்றினையும் அளிக்கும் மாண்பினை உடையது. இதனைப் பலர் அனுபவத்தில் கண்டறிந்ததை அடியேன் அறிந்ததும் உண்டு.

இத்தகைய சிறந்த பொருள்களையுடைய பழமையான நூல்கள் சிலவாவது சிறப்பான முறையில் பொழிப்புரையுடன் வெளிவந்தால் சைவ நல்லுலகம் பெரும் பயன் அடையும் என்று ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணையின் வாயிலாக அடியேனுக்கு அறிவுறுத்தினார்கள். அடியேனும் நீண்ட நெடுநாளாகப் பழமையான நூல்கள் வெளியிடப் பட்டுப் பாதுகாத்தல் வேண்டும் என்ற நினைவுடையவன். அடியேனது அந்த நினைவு நனவாகமுடிய "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ" என்ற முதுமொழிக்கிணங்க அடியேன் முன்னவன்பால் பல முறை விண்ணப்பித்ததுமுண்டு. "அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் வந்தால்தானே எதுவும் ஆகும் என்பது ஆன்றோர் வாக்கன்றோ.

இறைவனும் "உள்ளமுள் கலந்து ஏத்தவல்லார்க்கு" எளிவந்து அருள் செய்பவன் என்பது ஞானாசாரியர் திருவாக்கு. அத்தகைய ஞானாசாரியாரது பரம்பரையிலே வந்தது எங்கள் துறைசை ஆதீனம். தமிழும் சைவமும் தழைத்தினிதோங்கத் தவமார் முனிவர்கள் தவமிருந்தருளும் தவத்தலம்.

அத்தகைய தலத்தில் அடியேனையும் ஆட்கொண்டு இத்தகைய சிவப்பணியாம் நற்பணியில் ஈடுபடுக என்று திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்திரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பெருங் கருணையோடு அடியேனுக்கு அருளாணையிட்டார்கள்.

அருளாணைபெற்ற அடியேன் பிரமோத்தர காண்டம் காஞ்சீபுரம் சபாபதிமுதலியார் அவர்கள் இயற்றிய பொழிப்புரையோடு 1887-ம் ஆண்டு அச்சிடப்பட்டு வெளிவந்துள்ள பழைய பிரதி ஒன்று கிடைக்கப்பெற்றேன். அந்த நூலின் பழைமை கருதி, பழைய நூல்களை ஒருவாறு பாதுகாத்து வைக்கவேண்டும் என்னும் பேரவாவுடைய காரணத்தால் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்பால் விண்ணப்பித்தேன். அவர்களும் பெருங்கருணையோடு திருந்திய பதிப்பாக வெளியிடுக என்று அருளாணையிட்டார்கள். அருளாணையையேற்று அடியேனும் வேண்டிய திருத்தங்கள் செய்து முடித்துள்ளேன். இதனினும் திருத்தமான பிரதிகள் இருந்து நல்லறிஞர்கள் கொடுப்பார்களாயின் அடுத்த பதிப்பில் திருத்தி வெளியிடக் கூடும் என்னும் துணிபும் உடையேன்.

இந்தப் பிரமோத்தர காண்டம் பொழிப்புரையோடு கூடிய நூல் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானத்தின் நாற்பத்தி நான்காவது வெளியீடாக இது பொழுது வெளிவருகின்றது. ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களது அருளாதரவால் மேலும் பல நூல்கள் வெளிவருவதற்குச் சித்தமாக உள்ளன என்பதையும் சைவ நல்லுலகத்துக்கு விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களது அருளாட்சியில் சிவாலய பரிபாலனமும், திருமந்திர மாநாடும், திருமுறை கருத்தரங்குகளும் நடைபெறச்செய்து, அதனையடுத்து நூல்களும் வெளியிடச்செய்து அடியோங்களை அவ்வப்போது ஊக்கி அருள்செய்துவரும் மாட்சியினை வந்தித்து வழிபடுவதைவிட அடியேன் வேறு என்செயவல்லேன்!

குற்றம் நீக்கிக் குணமுளதேல் கொள்க.

இங்ஙனம்

திருவிடைமருதூர்
23—8—74

பொன். சுப்பிரமணியபிள்ளை
தலைமைத் தமிழாசிரியர்
திருவாவடுதுறை ஆதீனம் உயர்நிலைப்பள்ளி.

உ

சிவமயம்

நூலாசிரியர் வரலாறு

பிரமோத்தரகாண்டம் என்னும் நூலைத் தமிழகத்துக்குத் தந்தருளியவர் வரதுங்கராமபாண்டியவர் ஆவார். பாண்டிய அரசகுடியிற் பிறந்தவர் என்பது இவரது பெயராலேயே எளிதில் அறியக்கிடப்பது. இவர் தந்தையார் திருநெல்வேலிப்பெருமாள் என்பார். குலசேகரர் என்று அவரைக் கூறுதலும் உண்டு. அவர் தம் முன்னோனாகிய பராக்கிரமனுக்குப் பின் தென்பாண்டி நாட்டை ஆண்டுவந்த பேரரசர் ஆவார். அது, கி. பி. 1552 முதல் 1564 வரை என்பர். பராக்கிரமன் ஆட்சிக்காலம் 1543 முதல் 1550 வரை. வரதுங்கராமர் மதுரையை ஆண்ட பாண்டிய வமிசத்திலே வந்த பிற்கால அரசர். திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்தவர். அதிவீரராம பாண்டியனுக்குச் சகோதரர். இவரது ஆசிரியர் வேம்பத்தூர் சங்கத்தவராகிய ஈசான முனிவர் ஆவார்.

அதிவீரராமபாண்டியர் தாம் செய்த நைடதத்தை இவர்க்குக் காட்ட இவர் பதிநூல் இயற்றுது பசுநூலியற்றினுரெனச் சொல்லக் கேட்டு அவர் அதனைத் தமயன் மனைவிபால் காட்ட அவர் 'வேட்டைநாய் வேட்டை பிடித்துச்செல்ல மற்றொன்று வாளாபின்னோடுதல் போல என' அவமதித்த தறிந்து கோபித்துச் சண்டைக்குத் தூதனுப்பக்கண்டவர்,

செஞ்சுடரின் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே - விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்.

என்னும் கருத்துள்ள சீட்டுக்கவியெழுதி அனுப்பக் கண்டு தமயனை நோக்கி வணங்கிநின்றார்.

பின் இவர் சொற்படி அதிவீரராமபாண்டியர் கூர்ம புராணம் காசிகண்டம் முதலிய நூல்களைச் செய்தருளினர் என்பர்.

பராக்கிரமபாண்டியனே தென்காசிக் கோயிலை தன் ஆட்சியில் ஆறு ஆண்டுகளில் கட்டி முடித்த பேரரசன். இவ்வரசனுக்குப் பின் ஒருநூற்றாண்டு கழித்து அரியணை யேறியவன் அபிராமபராக்கிரமன். அவனது குமாரர்களே பராக்கிரமன், திருநெல்வேலிப்பெருமாள் என்பவர்கள். வரதுங்கராம பாண்டியன் முடி சூடியகாலம் பாண்டிய நாடு மிக்க சீருடன்

இருந்தது. இவனுக்கு வீரபாண்டியன், வீரமாறன், அபிராமசுந்தரன், அபிராமன் என்ற வேறு பெயர்களும் உண்டு. இவரது பின்னவர் அதிவீர ராம பாண்டியர் என்னும் பேரரசர் ஆவார்.

இக்கவியரசர் புவியரசராயினும் அரசியல் அலுவல்களைச் செவ்விதின் முடித்து எஞ்சிய காலங்களிளெல்லாம் இவர் தத்துவஆராய்ச்சி, சிவபூசை, சிவாலயப்பணி, புலவர்களுடன் அளவளாவுதல், வடமொழியில் உள்ள அரிய நூல்களைத் தமிழிலே மொழிபெயர்த்தியற்றல் முதலிய நற்செயல் களையும் உம்மைப்புண்ணிய விசேடத்தால் இயல்பாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர் என்பதை இவரது நூல்கள் கொண்டு நன்கறியலாம். சிவநலம் மிளிரும் பெருமையுடையன இவரது நூல்கள் என்பது ஆன்றோர் முடிவு.

''மனகறிவு தந்தையறிவு'' என்பதற்கிணங்க இவர் தந்தையார் திருநெல்வேலிப்பெருமாள் கல்விநலம் பெரிதும் வாய்ந்திருந்தமையாலே புலவர்கள் பலரிடையே பொழுது கழிப்பிப்பதுடன் மைந்தரையும் அவையத்து முந்தியிருப்பச் செய்தார். இவரது மனைவியாரும் உடனிருந்து கல்வி நலந்துய்க்கும் புலமை சான்றிருந்தார் என்பது வரலாற்ருல் அறியக் கிடக்கின்றது.

இவர் தமது மரணப்படுக்கையில் இருக்கையில் தேவியார் யமதருமன் வந்துள்ளதறிந்து கூற இவர் ''அஞ்சலென்ற கரதலமும்'' என்ற செய்யுள் கூற, இவர் மனைவியார் ''ஆக்கையெனும் புழுக்குரம்பை'' என்ற செய்யுள் கூறி இருவரும் சிவபதம் அடைந்தனர் என்ப. இவரது காலம் கி. பி. 16-ஆம் நூற்ருண்டாகும்.

அத்தியாய அட்டவணை

		பக்க எண்
1	பஞ்சாட்சர மகிமையுரைத்தது ...	8
2	சிவதலப் பெருமையுரைத்தது ...	21
3	கன்மாடபாதராசன் முத்திபெற்றது ...	43
4	விமரிசன் முத்திபெற்றது ...	59
5	சந்திரசேனன் பூசைசெய்தது ...	85
6	சத்தியாதனன் பூசைசெய்தது ...	99
7	பிரதோட பூசைமகிமை ...	119
8	சோமவாரவிரத மான்மியம் ...	144
9	சீமந்தனி பாவஙபெற்றது ...	182
10	சிவயோகி மகிமையுரைத்தது ...	203
11	பத்திராயுவுக்கு அரசியலளித்தது ...	224
12	சிவகவசமுரைத்தது ...	234
13	பத்திராயுவின்கதை உரைத்தது ...	241
14	பத்திராயு முத்திபெற்றது ...	261
15	விபூதிமகிமை உரைத்தது ...	276
16	திரிபுண்டரமுரைத்தது ...	290
17	வேடன் சிவபூசை கடைப்பிடித்தது ...	304
18	உமாமகேசுவர பூசைமகிமை உரைத்தது ...	316
19	உமாமகேசுவர பூசாபலமுரைத்தது ...	330
20	உருத்திராட்சமகிமை உரைத்தது ...	351
21	சீருத்திரமகிமை உரைத்தது ...	371
22	வஞ்சுளை முத்திபெற்றது ...	389

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பிரமோத்தரகாண்டம்

கடவுள் வாழ்த்து

விநாயகர் துதி

நல்ல சொற்பொரு ளுள நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வழுத்துவாம்.

இதன்பொருள் : நல்ல சொல்லையும் பொருளையும் உணர்ந்து கவிகள் பாடவும், எல்லை காணுதற்கரிய பேரின்பத்தை அடையவும், கயமுகாசுரனை வென்ற ஆனைமுகத்தையுடையவராய் வாழ்கின்ற வல்லபையென்னுஞ் சத்திக்குரிய விநாயகப்பெருமானை வணங்குவாம் என்றவாறு.

நடேசர்

(வேறு)

பூமேவு சதுமுகனுந் திருமாலும் போற்றி செய்யத்
தேமேவு குழலுமையாள் செழுங்குவளை விழிகளிப்ப
மாமேவு மிதழிநறு மழைதுளிப்ப மணிமன்றந்
தாமேவி நடம்புரியுந் தனிப்பொருளை வணங்குவாம். 1

இ - ள் : தாமரைமலரில் உறையும் பிரமனும் திருமாலும் போற்றி செய்யவும், இயல்பாகவே மணமுள்ள கூந்தலையுடைய சிவகாமி அம்மையினது வளமையுள்ள நீலோற்பல மலர்போன்ற அழகிய கண்கள் களிப்படையவும், அழகு பொருந்திய கொன்றைப்பூ மாலையானது தேன்மழையைச் சொரியவும், சிற்சபையை விரும்பி நடனஞ்செய்கின்ற ஒப்பில்லாத மெய்ப்பொருளாகிய நடராஜப்பெருமானை நாம் வணங்குவாம் என்றவாறு.

சிவகாமி

(வேறு)

பூரணியைத் தனுகரண புவனபோ கங்கடமைப் புரக்குமாயா
காரணியைப் பசுபாச மலமகல மெய்ஞ்ஞானக் கண்ணிற் றேன்றும்
ஆரணியைப் பரமசிவ னனந்த நடத்தின்வைத்த வருட்கண்ணுளைச்
சீரணிகொள் பொழிற்றில்லைச் சிவகாம சுந்தரியைச் சிந்தைசெய்வாம். 2

இ - ள்: எல்லாவுயிர்களிடத்தும் நிறைந்திருப்பவளும் தனுகரண புவனபோகங்களை ஆன்மகோடிகட்குத் தந்து முறைதவறுமல் காத்துக் கொண்டிருக்கிற மாயைக்கு நிலைக்களமாயிருப்பவளும், பக்குவாத்துமாக்களுடைய ஆணவமலம் நீங்கினவிடத்து விளங்குகின்ற மெய்ஞ்ஞானத்தை யருளுகின்ற வேதங்களால் போற்றப்பட்ட பரமசிவன் திருநடஞ்செய்கின்ற ஆனந்த நடனத்தை இடைவிடாது பார்த்துக்கொண்டிருக்கும் கருணை நோக்கினையுடையவளுமாகிய சிறப்பையும் அழகையும் பொருந்திய சோலை சூழ்ந்த தில்லைவன மென்னும் திவ்விய தலத்தில் வீற்றிருக்கும் சிவகாமி யம்மையை எப்போதும் வணங்குவோம் என்றவாறு.

தனு - உடம்பு. கரணம் - தத்துவங்கள். புவனம் - 224 புவனங்களும். போகம் - போகங்கள். பசு - ஆன்மா. பாசம் - ஆணவமலமாம். எனவே - ஆன்மாக்கட்குச் சரீரத்தைக் கொடுத்துப் புவனங்களில் பிறப்பித்துப் போகங்களை அனுபவிக்கச் செய்வது மாயையென்றும், அந்த மாயையைத் தொழில்படுத்துவது பராசத்தியென்றுஞ் சொல்லப்படும்.

கணபதி

(வேறு)

பிஞ்சுமதிச் சடாமகுடப் பெருமான் றனைப்பிரியா
வஞ்சியிம வான்றவத்தின் வருபேடை மயிலுதவும்
அஞ்சிறைவண் டிரைத்துவிழு மருவிமத மொழுகுகவுட்
குஞ்சரவெம் புகர்முகத்துக் குரிசிலடி யிணைதொழுவாம். 3

இ - ள்: இளந்திங்களையணிந்த சடாமகுடத்தையுடைய பரமசிவனைவிட்டு நீங்காத பூங்கொடிபோன்ற திருமேனியையுடையவளும், மலையரையன் தவத்தினால் அவனுக்குப் புதல்வியாகத் திருவவதாரஞ் செய்த மயிற்பேடை போன்றவளுமாகிய பார்வதியின் புதல்வராகிய அழகிய சிறகுகளையுடைய வண்டுகள் இசைபாடிக்கொண்டு உண்ணுதற்காக ஒன்றின்மேலொன்றுக விழுகின்ற மதநீர் மலையருவிபோல் ஒழுகும்படியான கவுட்குழியையுடையதாய்ப் புகர் நிறந்தங்கிய வெவ்விய யானைமுகத்தையுடைய கணபதியின் இரண்டு திருவடிகளையும் யாம் வணங்குவோம் என்றவாறு.

முதலில் விநாயகர் வணக்கங்கூறி மீட்டும் கூறுவதற்குக் காரணம் என்னவென்றால் விநாயகர் திருவவதாரம் ஆனபோது அவருக்குப் பரமசிவன் கணங்கட்கெல்லாம் பதியாயிருக்குஞ் சிறப்பருளித் தேவர்கள் முதலாகிய எவர்களேயானாலும் தொடக்கத்தில் உன்னைத்துதிசெய்து பின்பு ஒருகருமஞ் செய்யத் தொடங்குவார்களானால் அந்தக்கருமம் இடையூறின்றி முற்றுப்பெறுமென்று வரமருளிச் செய்தநாள் முதல் தொடக்கத்தில் விநாயகரைத் துதி செய்து ஒருகருமஞ் செய்யத்தொடங்குவது சைவசமயத்தின் நியதியாக வருகின்றதாதலால், இந்நூலாசிரியரும் தாம் செய்யத் தொடங்கும்நூல் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டுத் தொடக்கத்தில் விநாயகரைத் துதிசெய்து தந்தை, தாய், மக்கள் என்னும் முறைமைபற்றிச் சிவம் சத்தி இருவரையும் துதி செய்து பின்னும் விநாயகரைத் துதி செய்தனர். இதுவேகாரணமென அறிக.

சுப்பிரமணியர்

(வேறு)

இறுதியெனத் தகுவியற்போய்க் கைமையெய்த வயிராணி யின்ப மெய்தப்
பிறைகளொரு நான்கனைய திறன்மருப்பு வெள்ளானைப் பிடறி னேறி
மறுகுதொறும் பொன்னுலகின் வானவர்கோன் பவனிவரச் சூரன் மாயச்
சிறிதுகடைக் கண்சிவந்த சேவகன்கிண் கிணிச்சரணஞ் சென்னி வைப்பாம்.

இ - ள்: அசுரர் வழிமுறைமரபு என்பது இம்மட்டில் அழிந்ததென்று கூறுமாறு அந்த அசுரப் பெண்களெல்லாம் கைம்பெண்களாகவும், இந்திராணி முதலாய தேவமாதர்கள் மகிழ்வடையவும், நான்கு பிறைகளை ஒன்றாக அணிந்ததுபோன்ற வலியதந்தங்களையுடையவெள்ளையானையாகிய ஐராவதத்தின் பிடரியின்மேல் ஏறிக்கொண்டு, பொன்னுலக வீதிகள்தோறும் தேவேந்திரன் வலம் வரவும், சூரபன்மன் இறந்துபோகவும், கண்களிடமாகச் சிறிது கோபக் குறியைக் காட்டிய சுப்பிரமணியருடைய கிண்கிணியணிந்த திருவடிகளை எமது தலையில் சூட்டிக்கொள்வாம் என்றவாறு.

செம்மையும், கறுப்பும் கோபக்குறியென்று சூத்திரமிருப்பதால் கடைக்கண் சிவந்த என்பதற்குக்கோபக்குறி எனப்பொருள் கூறப்பட்டது.

திருஞானசம்பந்தர்

(வேறு)

அழியும் புனற்செஞ் சடையாளர் பங்கிற் றேகை துணைமுலைக்கண்
வழியும் கொழும்பாற் கடலுண்டு பாவக்கோடை மலிந்துசுட
ஒழியும் பசும்புல் லெனவுலக மொடுங்கா தோங்கத் தண்ணளியால்
பொழியுங் கவிதைக் காளிமுகில் பொன்னங் கமலத் தாடொழுவாம். 5

இ - ள் : சுழிகளைச் சுழிக்கும் நீருருவமாகிய கங்கையை அணிந்த செஞ்சடையையுடைய பரமசிவனது இடப்பாகத்தில் வீற்றிருக்கும் மயில் போன்ற சாயலையுடைய பார்வதிதேவியின் இரண்டு திருமுலையிடத்தினின்றும் பெருகாநின்ற வளமையுள்ள ஞானப்பாலுண்டு, பாவமாகிய கோடை மிகுந்துசுட, அக்கோடையினுல் கருகிப்போம் புல்லைப்போல இவ்வுலகமானது நரகத்தில் விழுந்து வெம்பாமல் முத்தியை அடையும்படி மிக்க கருணையினுலே தேவாரமாகிய மழையைப்பொழிந்த மேகமெனச் சொல்லத்தக்க, சீகாழியில் திருவவதாரஞ் செய்தருளிய, திருஞானசம்பந்தருடைய பொன்னிறமுள்ள திருவடித் தாமரைகளை யாம் தொழுவோம் என்றவாறு.

காளி முகில் என்பதில் காளி என்பது மேகத்தைக் குறிக்கும்போது கருமை நிறமுள்ளதாகவும், திருஞானசம்பந்தரைக் குறிக்கும்போது காளி என்பது தலமாகவும் பொருள் கொள்ளப்படும். காளியால் பூசிக்கப்பட்ட தலமாதலால் அது சீகாளி என்ற ஓர் பெயர்பெற்றது. இதுபொழுது சீகாழி என்று வழங்கப்படுகிறது.

திருநாவுக்கரசர்

ஆரண நன் னிலையறியாச் சாக்கியர்க ளருங்கற்றூண்
பாரறிய மருங்கசைத்துப் படுநீரிற் புகவுந்த
வாரண நல் லுரியானை யேத்திமுந்நீர் வடதளிரின்
நாரணன்போ லினிதமர்ந்த நாவலன்பொற் றுடொழுவாம். 6

இ - ள் : வேதத்தின் உண்மைப்பொருளை அறியாத சமணர்கள் சுமப்பதற்கரிய கற்றூணை இவ்வுலகத்தாரெல்லாம் அறியும்படி அரையிற் கட்டிக் கடலுக்குள் ஆழும்படிபோட யானையினது தோலை நல்ல போர்வையாகப் போர்த்திருக்கும் பரமசிவனைத் துதிசெய்து அந்தக் கற்றூணே தெப்பமாக மிதக்கும்படி, திருப்பாற்கடலில் ஆலிளந்தளிரில் பள்ளிகொண்டிருக்குந் திருமாலைப்போல மகிழ்ச்சியுடன் இருந்து திருப்பாதிரிப்புலியூர்க்கடுத்த கெடிலநதிக்கரையில் ஏறிய திருநாவுக்கரசருடைய அழகிய திருவடிகளை நாம் தொழுவோம் என்றவாறு.

சுந்தரமூர்த்திசுவாமிகள்

தாது நிறைக்கும் பசுந்துளபத் தாமத்தோனும் சரோருகச்செம்
போதி னகத்துச் சகமீன்ற புத்தேடானு மறியானை
மாதி னிடத்தின் முனிவொழிய வாரூர்ச் செம்பொன் மணிமறுகில்
தூது நடத்துங் கவிராசன் துணைத்தாட் கமலந் தொழுதிடுவாம். 7

இ - ள்: மகரந்தங்களால் நிறையப்பட்டிருக்கும் பசியதுளபமாலை யணிந்த திருமாலும், செந்தாமரைப் பூவிலிருந்துகொண்டு உலகங்களைப் படைக்கும் பிரமதேவனும் அறியக்கூடாத பரமசிவனைப் பரவைநாச்சியார் கொண்டிருந்தவூடல் நீங்கும்படி அவரிடத்திற்குத் திருவாரூரின் மணிகள் நிறைந்துள்ள திருவீதியில் தூதுபோம்படி அனுப்பிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய இரண்டு திருவடித் தாமரைகளையும் நாம் வணங்குவாம் என்றவாறு.

மாணிக்கவாசகர்

சீதவார் பொழிற் றில்லைப் பரமனுக்
கோது நற்றமிழ்க் கோவை யுரைசெய்த
நாதன் மாணிக்க வாசக னுண்மலர்ப்
பாத பங்கய மேத்திப் பரவுவாம். 8

இ - ள்: குளிர்ச்சியுடைய விண்ணளவுயர்ந்த சோலைசூழ்ந்த தில்லையில் ஆனந்த நடனஞ் செய்கின்ற நடராஜப் பெருமானுக்கு யாவருந் துதிசெய்கின்ற நல்ல தமிழினால் திருக்கோவையாருரை செய்த நாதனாகிய மாணிக்கவாசகசுவாமிகளுடைய வைகறை மலர்ந்த தாமரையை யொத்த திருவடிகளை நாம் துதிசெய்து பணிவாம் என்றவாறு.

குருவணக்கம்

தேசான சிவஞானச் செஞ்சுடரான் மும்மலமா
மாசான விருளகற்றி மன்னுயிரைப் புரந்தளித்துத்
தூசானை யுரியசைத்தோன் றொல்சமய நிறுத்துநிம்பை
யீசான மாமுனிவ னிணையடியை யிறைஞ்சுவாம். 9

இ - ள்: சோதிமயமான சிவஞானமென்னுஞ் செழுமையுள்ள சூரியனால் ஆணவம், கன்மம், மாயையென்கின்ற மும்மலமாகிய குற்றமுள்ள அஞ்ஞான இருளைநீக்கி நிலைபெற்ற உயிர்களைக்காத்து யானைத்தோலைப் போர்வையாகப் போர்த்தருளிய பரமசிவனது பழமையாகியசைவசமயத்தை நிலைநிறுத்திய பெருமைபொருந்திய நிம்பை ஈசானமுனிவருடைய இரண்டு திருவடிகளையும் நாம் பணிவாம் என்றவாறு.

நிம்பை என்பது - வேப்பத்தூர். தொல்சமயம் நிலைநிறுத்து மெனவும் பாடம். சிவம் இத்தன்மையதென்றும், சீவன் இத்தன்மைய தென்றும், ஆணவமலம் இத்தன்மையதென்றும் யாவருக்குந் தெரிவித்து சைவப்பற் றுண்டாகச் செய்தலால் சைவசமயத்தை நிலைநிறுத்துகின்றவ ரெனச் சொல்லப்பட்டது. வேப்பத்தூர் என்பது மதுரையைச் சார்ந்த வேம்பத்தூர் போலும்.

அவையடக்கம்

அஞ்சன மிடற்றிறைய் நின் னிலைமுற்று மளவிட்டன்றிச்
செஞ்சொலின் வழுத்தொணுதேல் விதியும்வாய் திறக்கொணுதாம்
விஞ்சைய ரெவருந்தத்த மதியினின் விபுலங்காறும்
வஞ்சமற் றுரைக்க லாமேல் லடியனும் வழுத்தலாமால். 10

இ - ள் : காளகண்டத்தையுடைய பரமசிவனே தேவரீருடைய நல்ல நிலைமை முழுவதையும் சாத்திரங்களாலளவிட்டறிந்து பாடல்களால் சொல்லவேண்டுமே யல்லது அளவிட்டறிவதற்குமுன் சொல்லவொண்ணுதே யென்ருல் வேதங்களையெல்லாம் ஓதியுணர்ந்த பிரமனும் தேவரீருடைய நிலைமை முழுவதையுஞ் சொல்லுகிறேனென்று சங்கற்பித்து நின்ருல் வாயைத்திறக்கவொண்ணுது. ஆனல் அப்படி வேண்டுவதில்லை. புலவர்கள் எல்லாரும் தங்கள் புத்தியின் விசாலமட்டும் வஞ்சகமின்றிச் சொல்லலாமென்ருல் அடியேனும் தெரிந்தமட்டில் சொல்லலாம் எ-று.

இதுவுமது

தொல்லைய முனிபாற் கேட்டுச் சூதமா முனிவன் சொன்ன
நல்லமுற் காதைதன்னை நான்றமிழ் வழிநடாத்தல்
கொல்லுலை வயிரவூசி குருமணி குழித்தவாயின்
மெல்லிய பஞ்சி நூல்போம் விழுதக வுடைய தம்மா. 11

இ - ள் : பழமையாகிய வியாத முனிவரிடத்தில் கேட்டுப் பெருமை பொருந்திய சூதமுனிவர் முன்பு சொல்லிய பழைய நல்ல சிவசரித்திரத்தை பின்பு நான் தமிழினல் சொல்லுதல் கொல்லனுலைமுகத்தில் செய்யப்பட்ட கூர்மையுள்ள ஊசியினல் துவாரஞ் செய்யப்பட்ட மேன்மையாகிய இரத்தினத்தின் துவாரவழியில் மிருதுவாகிய பஞ்சுநூல் நுழைகின்ற மேன்மையையுடையதாயிருக்கின்றது என்றவாறு.

இதுவுமது

பற்றிய வரவம் பாரார் முள்ளெண்ணுர் பங்கந் தேரார்
பொற்றுணர்க் கைதை சார்ந்து பொலிவெண்ணி மலர்கொள் வார்போல்
உற்றுணர் வில்லேன் செய்த பனுவலு ளுருத வோரார்
கற்றுணர் மாந்தர் கொள்வர் கடவுடன் சரித மென்றே. 12

இ - ள் : பாம்பிருக்குமென்று எண்ணுதவராயும், முள்ளுகள் கைகளில் தைக்குமேயென நினையாதவர்களாயும், சேற்றிலிருக்கின்றதே யென்று யோசியாதவர்களாயும், வாசனையின் மிகுதியைக் கருதிப் பொன்னிறமுள்ள கொத்துக்களையுடைய செந்தாழையினிடத்துச் சென்று அதன் மலரைப்

பறிப்பவர்போல, அறிவில்லாத யான்செய்த பாடலினிடத்துக் குற்றங்களை யெண்ணி நீக்கிவிடாமல் கற்றுணர்ந்த முன்னோர்கள் இது சிவசரித மென்று மனம் பொருந்தி ஏற்றுக்கொள்ளுவார்கள் என்றவாறு.

சிறப்புப்பாயிரம்

கறங்குதிரைப் பெருங்கடல்சூ ழவனிபுரந் திகல்கடிந்து கலியைமாற்றி
மறந்திகழ விலங்கிலைவேல் வரதுங்க ராமனியன் மதுரைச்சங்கம்
சிறந்தவறு காற்பீடந் தனிற்பிரமோத் திரகாண்டந் தென்சொலாக்கி
அறந்தழைக்குங் கவிஞர்செவிக் காரமுத மாகவரங் கேற்றினனே. 13

இ - ள்: ஒலிக்காநின்ற அலையையுடைய பெரிய கடல்சூழ்ந்த இவ்வுலகத்தைக் காத்துப் பகைவரைப் போர்முகத்தில்வென்று பாவங்களை நீக்கி வீரம் விளங்கப் பிரகாசிக்கும் தகட்டுவடிவாகிய வேலேந்திய வரதுங்க ராம பாண்டிய மன்னன் பிரமோத்திரகாண்டத்தைத் தமிழால் செய்து இயற்றமிழ்பயின்ற மதுரைச் சங்கத்தில் சிறப்புற்றிருக்கும் அறுகாற்பீடத்திருந்து தருமகுணமிருந்த புலவர்கள் காதுகளுக்குக் கிடைப்பதற்கரிய அமுதம்போல இனிக்கும்படி அரங்கேற்றினன் என்றவாறு.

கடவுள் வாழ்த்து முற்றிற்று

ஆகத் திருவிருத்தம்—14

முதலாவது

பஞ்சாட்சர மகிமையுரைத்த

அத்தியாயம்

வேத பாரகர் முனிவரர் வேள்வியாங் கியற்றப்
போதி னுன்முகத் திறையுரை சென்னியிற் புனையாச்
சீத வார்பொழி னைமிசா ரணியத்தைச் சேர்ந்தாங்
காதி வேள்வியை விதிமுறை யியற்றுவா னமைந்தார். 1

இ - ள்: வேதபாரகராகிய முனிவர்கள் வேள்விசெய்ய விரும்பித் தாமரைப் பூவிலிருக்கும் நான்கு முகங்களையுடைய பிரமதேவனுடைய உரையைச் சிரமேற்கொண்டு நைமிசாரணியமென்னும் குளிர்ச்சிபொருந்திய மேலுயர்ந்த பொழிலிடத்தைச் சேர்ந்து அவ்விடத்தில் வேதவிதியால் சிவயாகமொன்று செய்யத்தொடங்கினார்கள் என்றவாறு.

ஆங்கு - அசை.

ஆய காலையிற் புராணமீ ரொன்பது மறைந்த
தூய மாதவச் சூதமா முனிவந்து தோன்ற
ஏய மாதவர் முனிவனுக் கிருக்கையீந் தெமக்கு
நேய மாகிய சிவகதை நிகழ்த்துதி யென்றார். 2

இ - ள்: அவர்கள் வேள்வி செய்துகொண்டிருக்கும்போது பதினெண்புராணமுஞ்சொன்ன பரிசுத்தமான பெருமைபொருந்திய தவமுள்ள சூதமுனிவர் வந்துதோன்ற அவ்விடத்திலிருந்த முனிவர்கள் அவருக்கு இருக்கைகொடுத்து வீற்றிருக்கச்செய்து எங்கட்கு அன்பு தருவதாகிய சிவகதையை அருளிச்செய்யுஞ் சுவாமியென்றார்கள் என்றவாறு.

பதினெண்புராணங்களாவன:- மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலிங்கம், பௌடிகம், நாரதீயம், காருடம், பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம், பதுமம் என்பவைகளாம்.

நன்று நன்று நீர் மொழிந்தது நானிலத் தவர்போற்
பொன்ற நோன்றுத லொழிவிலாத் தேவரைப் போற்றல்
அன்றி நாயகன் காதையை விரும்பினீ ரதனுள்
ஒன்று கேட்டிடி னதன்பய னளவையா ருரைப்பார். 3

இ - ள்: முனிவர்களே நீங்கள் சொல்லிய வார்த்தை மிகவும் நன்று மிகவும் நன்று இவ்வுலகத்தில் இருப்பவர்கள்போல இறப்பதும் பிறப்பதும் ஒழியாத மற்றைத் தேவர்களைப் போற்றுதல் செய்யாமல் தோற்றக்கேடில்லாத பரமசிவன் வரலாற்றைக் கேட்க விரும்பினீர்கள். அந்தச் சிவசரித்திரம், அளவற்றவையாம். அதனுள் ஒன்று கேட்டாலும், அதனால்வரும் பயன் இவ்வளவென்று யார் அளவிட்டுச் சொல்லுவார்கள் என்றவாறு.

ஆசில் சீர்க்கதை பற்பல வறைந்தன மினியாம்
பேசு நற்கதை பிஞ்சகன் திருவுரு வான
மாசி லஞ்செழுத் தடைவுசொன் மான்மிய முதலா
ஈச னக்கதை கேட்பதே யறமென்ப தீரு. 4

இ - ள்: குற்றமில்லாத புகழையுடைய பலவாகிய சரித்திரங்களை உங்கட்கு முன்னஞ் சொன்னேம். இப்பொழுது நாம் உங்கட்குச் சொல்லும் நல்ல சரித்திரமாவது பரமசிவனுடைய திருவுருவமாகிய பழுதகன்ற பஞ்சாட்சரத்தின் முறைமையைச் சொல்லுகின்ற மான்மியம் முதலாகப் பரமசிவனது நல்ல சரித்திரத்தைக் கேட்பதே அறமென்று சொல்வதீருகும் என்றவாறு.

இந்து சேகரன் றானமுஞ் சிவநிசி யியல்பும்
பந்தந் தீர்ப்பிர தோடத்தின் பூசையின் பலனும்
வந்த னைக்குறு சோமவா ரத்தின்மான் மியமும்
அந்த மாதியி லாதவ னடியவர் திறமும். 5

இ - ள்: சந்திரசேகரனாகிய பரமசிவன் வீற்றிருக்கும் தலமான்மியமும், சிவராத்திரி மான்மியமும், பாசபந்தத்தை நீக்குகின்ற சனிப் பிரதோட பூசையினால் வரும்பலனும், வழிபடற்குரிய சோமவார விரத மான்மியமும், தோற்றமும் முடிவுமில்லாத அடியவர் மான்மியமும் எ-று.

பிரதோஷம் - என்பது இராத்திரியின் முன்காலம். அத்தமிப்பதற்குமுன் மூன்றேமுக்கால் நாழிகையும் அத்தமித்த பின்பு மூன்றேமுக்கால் நாழிகையும் உள்ளகாலமாம்.

தெரிவ ருஞ்சிவ கவசமும் பூதியின் செயலும்
புரியும் பத்திபி னியதிசெய் பூசனைப் பொலிவும்
ஒருவு கற்பினள் பழிசுற்று மாமகேச் சுரமும்
அர னெனத்தகு மக்கர மணியின தடைவும். 6

இ - ள் : எளிதாக அறிதற்கரிய சிவகவச வீபூதிகவசமான்மியமும், விரும்புகின்ற பத்தியினால் நீதியாகச் செய்கின்ற சிவபூசை மான்மியமும், கற்புநீங்கியவளுடைய பழிநீக்கிய உமாமகேசுவர விரதமான்மியமும், சிவனென்றே சொல்லத்தக்க பெருமைபொருந்திய உருத்திராக்கமான்மியமும் என்றவாறு.

வேத நான்கினும் விளங்குசீ ருருத்திர வீறும்
ஓது கேனிவை கேண்மின்க ளெனத்தொ குத் துரையா
ஆதி யஞ்செழுத் தமைவரு மான்மிய முதலாச்
சூத மாமுனி முனிவர்முன் வகுத்தனன் சொன்னான். 7

இ - ள் : நான்கு வேதங்களாலும் சொல்லப்படுகிற சீருருத்திர மான்மியமுஞ் சொல்லுகின்றேன் இந்தச் சரித்திரங்களைக் கேளுங்கள் என்று தொகுத்துச்சொல்லி பின்பு வாக்குக்கடங்காத சிவசொரூபமாகிய பஞ்சாட்சர மான்மிய முதலாகச் சூதமுனிவரானவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு வகுத்துச்சொன்னார் என்றவாறு.

தவங்கள் வேள்விகண் முதலவா ந் தருமவேள் விகளில்
அவங்கண் ணீக்குமெய்ஞ் ஞானமே வேள்வியே யதிகம்
பவங்க ணீக்குமவ் வேள்வியின் பாற்படு செபமாஞ்
சிவங் கலப்புறு மந்திர வேள்வியைச் செப்பின். 8

இ - ள் : தவங்கள் வேள்விகள் முதலாகிய தருமவேள்விகளில் பிறவிக்குக் காரணமாகிய பயனில்லாத முயற்சிகளை நீக்கத்தக்க பெருமையுள்ள மெய்ஞ்ஞான வேள்விகளே அதிகம். பிறவிகளை நீக்குகின்ற அந்த வேள்விகளை அடுத்த ஜபமாகிய நன்மைபொருந்திய மந்திரவேள்வியைச் சொன்னால் என்றவாறு

முக்க ணுயக னமரருண் முதல்வனு மதுபோல்
தக்க மந்திர மெவற்றினு ந் தலைமையை ந் தெழுத்தே
தொக்க நான்மறைப் பிரணவ மாதியாத் தொடங்கி
ஒக்க வோதியே பரகதி யளப்பில ருற்றார். 9

இ - ள் : மூன்று கண்களையுடைய பரமசிவன் தேவர்களுக்குள் தலைவனும். அதுபோலத் தகுதியுள்ள எல்லா மந்திரங்களிலும் பஞ்சாட்சரமே முதன்மையாம். இப்பஞ்சாட்சரத்தை வியாசமுனிவரால் நான்காகத்

தொகுக்கப்பட்ட வேதங்களில் சொல்லப்படுகிற பிரணவமாதியாகத் தொடங்கிச் சேர்த்தோதிப் பலர் முத்தியடைந்தார்கள் என்றவாறு.

ஏகாரம் - தெளிவு.

இன்ன மந்திரத் தோரெழுத் தின்பய னெல்லை
அன்ன வூர்தியுந் திருமறு மார்பனு மறியா
முன்னை நான்மறை தனித்தனி மொழிவது மிதுவே
மன்னி யெங்கணுஞ் சிவன்றிரு வுருவமாய் மயங்கும். 10

இ - ள்: இத்தன்மையுள்ள பஞ்சாட்சரத்தில் ஒரு எழுத்தின் பயனளவினைப் பிரமதேவனும் திருமாலுமறியார்கள். பழமையான நான்கு வேதங்கள் சொல்வதும் இம்மந்திரத்தையே. இது அண்டபிண்டமெங்கும் நிலைபெற்றுச் சிவன் திருவுருவமாய் விளங்கும் என்றவாறு.

ஐந்தெ ழுத்தினுண் ணெறிவினு மாருயிர் சென்று
சிந்தை காணருஞ் சிவபதஞ் செறிந்திடுஞ் சிரத்தால்
இந்த மந்திர நிலைப்பரப் பிரமமே யென்பர்
வந்த னைத்தொழில் சச்சிதா நந்தசின் மயத்தோர். 11

இ - ள்: இப்பஞ்சாட்சரத்தின் அதிசூட்சும முறையைக் குருமுன்னிலையில் வினவும் அழிவில்லாத உயிரானது சென்று மனதுக்கெட்டாத சிவபதத்தைச் சேர்ந்திடுந்தன்மையால் இந்த மந்திரத்தின் உண்மை பரப்பிரமமேயாகும் என்று வந்தனைத் தொழிலையுடைய சச்சிதாநந்த சின்மயர்களாகிய பெரியோர்கள் சொல்லுவார்கள் என்றவாறு.

கருப்ப யோனியிற் சுழிப்படு பவக்கடல் கடப்பப்
பொருப்பி னெம்பிரா னுயிர்க்கெலாம் புணையெனப் புகன்ற
விருப்ப ஞானவஞ் செழுத்தினை யுளத்திடை வித்தின்
தருப்பை சுட்டிடும் வேள்வியேன் ருனமேன் றவமேன். 12

இ - ள்: கருத்தங்கும் எண்பத்துநான்குலட்சம் யோனிபேதமாகிய இருவினையென்னும் சுழிபொருந்தியபிறவியாகிய கடலைக்கடக்க, தெப்பமாக உயிர்க்கெல்லாம் கயிலாயகிரியில் வீற்றிருக்கும் நங்கடவுளாகிய பரமசிவன் அருளிச்செய்த விருப்பமுள்ள ஞானமயமான பஞ்சாட்சரமென்னும் விதையை மனமென்கிற நிலத்தில் விதைத்தால் மோட்சமாகிய பயனைத் தருமாதலால் தானமேன் தவமேன் வேண்டுவதில்லை என்றவாறு.

வித்தின் - எனக்கூறினமையால் விதையும் நிலமும் கூறப்பட்டது. விதைத்தலாவது - தியானித்தல்.

பருதி வந்தெழா வளவு நீ டிருளெனப் பவமுஞ்
சுருதி யஞ்செழுத் துணர்கலா நாளெலா ந் தொடருங்
கருதி னன்மறை யந்தத்தும் வேதத்தின் கண்ணும்
ஒரு தனிப்பெருங் கடவுளஞ் செழுத்தலா லுளதோ. 13

இ - ள் : சூரியன் உதையமாகாதவரையில் இருள் நீடித்திருப்பது போல வேதத்தில் சொல்லப்படுகிற பஞ்சாட்சரத்தை அறியாத நாளெல்லாம் பிறவியானது தொடரும். எண்ணுமிடத்தில் வேதாந்தமாகிய உபநிடதத்திலும், வேதங்களினிடத்திலும் ஒப்பற்ற பெருங்கடவுளாகிய பரமசிவனது பஞ்சாட்சரமல்லது வேறுண்டோ? இல்லை என்றவாறு.

முத்தி நன்னெறிக் கொருதுணை மோக வாரிதிக்கு
வைத்த செஞ்சிகை வடவனல் வினைவனத் திற்குப்
பொத்தி நுங்குவெங் கதழெரி புனைமதிக் கண்ணி
யத்த னெந்தையஞ் செழுத்திது கடைப்பிடித் தறிவீர். 14

இ - ள் : திங்களாகிய மாலையைத்தரித்த அத்தனாகிய எம்மையனது பஞ்சாட்சரமானது நல்ல மோட்சவழிக்கு ஒப்பற்ற துணையாம். மோகமாகிய கடலுக்கு அமைத்துவைத்த செஞ்சிகையையுடைய வடவாமுகாக்கினியாம். இருவினையாகிய வனத்திற்கு வியாபித்துக்கொண்டு மிகுந்த வேகமாக எரிக்காநின்ற வெப்பமுள்ள தீயாம். இதனைத் தெளிவாகக் கொண்டறிவீர்கள் என்றவாறு.

வடவாமுகாக்கினி - பெட்டைக் குதிரையின் முகம்போல் உருவமுள்ளதாகச் கடலில் இருந்துகொண்டு அதில் நீர் அதிகரிக்காதவண்ணம் சுவறச்செய்வதாகிய அக்கினி.

ஊன நீக்கிய சிவமுன்னர் நமவினை யுரைக்கின்
ஞான மெய்திடு மனைவர்க்கு நம்பனுர் நயக்குந்
தான மெய்திநற் குரவராற் பெற்றவர் தங்கட்
கான சித்தியு முத்தியு மக்கணத் தாமால். 15

இ - ள் : மும்மலங்களையும் நீக்கிய சிவ என்பதன் முன் நம என்பதைச் சேர்த்துச் சபித்தால் அவர்கட்கெல்லாம் ஞானபதம் கிடைக்கும் பரமசிவன் விரும்பித் திருக்கோயில்கொண்டு வீற்றிராநின்ற ஆலயத்தில் சென்று நல்ல குருவினால் உபதேசஞ் செய்துகொள்ளப் பெற்றவர்களுக்கு விரும்பியவைகளையெல்லாம் கொடுக்கத்தக்கதான எண்வகைச்சித்திகளும் மோட்சமும் அப்பொழுதே கிடைக்கும் என்றவாறு.

ஆல் - அசை.

வேறு

தாதவிழ் கடுக்கையஞ் சடில நாயகன்
ஆதியி னவின்றநல் லஞ்செ ழுத்தையு
மேதகு குரவனு லுணர்ந்தோர் வேந்தன்றன்
தீதறுத் துய்ந்தமை செப்பு வாமரோ. 16

இ - ள்: *மகரந்தத்தோடு மலர்ந்த கொன்றைப்பூமாலை அணிந்த சடாமகுடத்தையுடைய பரமசிவன் ஆதியில் அருளிச்செய்த நல்ல அஞ்செழுத்தையும் மேன்மை மிக்க குருவாலறிந்து ஒரு அரசனானவன் பாவங்கள் நீங்கிக் கடைத்தேறிய சரித்திரத்தை யாம் சொல்லுகிறோம் என்று சூதமுனிவர் சொல்லுகின்றார் என்றவாறு.*

அரோ - அசை.

தேங்குபே ராழியுந் திகிரிக் குன்றுமொத்(து)
ஓங்குநீ ரகழியொ டுயரு மூதெயில்
பாங்கர்சூழ் மதுரையம் பதிக்கு மன்னவன்
வாங்குவி லெதுகுல மரபிற் றோன்றினன். 17

இ - ள்: *நிறைந்துள்ள பெரும்புறக்கடலையும் சக்கிரவாள கிரியையுமொத்து மிகுந்த நீரையுடைய அகழியுடன் உயர்ந்த பழமையாகிய மதிலானது புறத்தில் சூழ்ந்திருக்கும்படியாகிய அழகிய மதுராநகரத்துக்கு இறைவன் போர்முகத்தில் வளைக்கும் வில்லையுடைய எதுகுல மரபில் பிறந்தவன் என்றவாறு.*

வடுவிலாப் பெரும்புகழ் வயங்க வையகத்
திடுபெயர்த் தசாருக னென்னு மாண்பினன்
தொடுகழற் றாளினன் புல்லச் சோரிவேல்
அடுகழற் றானையா ளரி மொய்ம்பினன். 18

இ - ள்: *குற்றமில்லாத பெரிய புகழானது உலகமெங்கும் விளங்கத் தசாருகனென்று சொல்லப்பட்ட பெயர்கொண்ட மாட்சியையுடையவன். வீரகண்டை அணிந்த காலையுடையவன். பகைவருடலின் உதிரத்தில் தோயத்தக்க வேலால் எதிர்த்தவரைக் கொல்லுகிற கடல்போன்ற சேனையையுடையவன். சிங்கத்தையொத்த பலமுள்ளவன் என்றவாறு.*

நாளினின் மனுமுறை நடாத்து மாணையான்
வாளினிற் றெவ்வர்தம் வலியை மாற்றினோன்
தோளினில் வரைகளைத் துளக்கு மாற்றலான்
வேளினின் வனப்பினன் றவத்தின் மேன்மையான். 19

இ - ள்: தன் காலத்தில் மனுமுறை தவருதபடி நீதி செலுத்திய ஆக்கினையுள்ளவன். தன் கைவாளினுல் பகைவருடைய பலங்களை மாற்றினவன். தன் தோள்களால் மலைகளை அசைக்கத்தக்க பராக்கிரமத்தை உடையவன். மன்மதனையொத்த அழகுள்ளவன். தவத்திலும் மேன்மை பொருந்தியவன் என்றவாறு.

இத்தகை மன்னவ னிள நிலா நகை
முத்தணி முகிழ்முலை முளரி வாண்முகக்
கொத்தலர் நறுங்குழற் கோதை வேல்விழி
மெய்த்தவக் கொடியினை விதியின் வேட்ட நாள். 20

இ - ள்: இப்படிப்பட்ட பெருமையுள்ள அரசனுனவன் நிலவினது இளங்கதிரைப் பரப்புகின்ற ஒளிபொருந்திய முத்துமாலை யணிந்த தாமரை யரும்பை ஒத்த தனங்களையும், செந்தாமரை மலர்போன்ற ஒளிபொருந்திய முகத்தையும் கொத்துகளாகிய மலர்களையணிந்த நறிய அளகத்தையும் வெற்றிமாலை அணிந்த வேல்போன்ற கண்களையுமுடைய உண்மையாகிய தவத்திஞல் பிறந்த ஒரு கன்னிகையை வேதவிதிப்படி விவாகஞ் செய்து கொண்டநாளில் என்றவாறு.

நல்கிய தூமமு நானத் தீபமு
மல்கிய மணவறை மலர்பெய் பாயலிற்
பல்கிய விருப்பினுன் வளைக்கை பற்றலும்
ஒல்கிய கொடியினி லொதுங்கிக் கூறுவாள். 21

இ - ள்: தாதிகளாலூட்டப்பட்ட அகிற்புகையும் கத்தூரி சேர்த்த தீபமும் நிறைந்துள்ள மணவறையுள் மலர்கள்பரப்பிய படுக்கையிலிருந்து கொண்டு மிகுந்த விருப்பமுள்ளவனுகி வளையணிந்த கையைப் பற்றவும் அவள் அசைகின்ற பூங்கொடிபோலப் பின்னெதுங்கிச் சொல்லுகின்ருள் என்றவாறு.

நின்னெடுந் தோள்வரை நெருமுங்கப் புல்லுதற்(கு)
உன்னருங் காதலென் னுளத்தின் ருதலான்
மன்னகே ளொருதலைக் காம மன்னினர்க்
கின்னலே யன்றிமற் றின்ப மில்லையே. 22

இ - ள்: உன்னுடைய மலையொத்த புயங்களை அழுந்தப் புல்லுதற்கு நினைத்தற் கருமையாகிய ஆசையானது என்மனதிலில்லை. ஆகையினுல் மன்னவனே கேள் ஒருதலைக் காமத்தைப் பொருந்தினவர்கட்குத் துன்பமுண்டாகுமேயன்றி இன்பமுண்டாவதில்லை என்றவாறு.

மற்று - அசைநிலை. ஏ - ஈற்றசை.

ஒருதலைக் காமமென்பது ஒருவரிடத்து உண்டான ஆசை. ஈண்டு அரசனிடத்துமாத்திரமுண்டானமையால் ஒருதலைக்காமமென்னப்பட்டது.

சிந்தைவே றுயினர் பிணியிற் றேம்பினர்
புந்தியின் விருப்பிலார் விரதம் பூண்டுளார்
உந்தியிற் கருவினு ரொருவு பூப்பினர்
முந்துறு வலியினுன் முயங்கற் பாலரே. 23

இ - ள் : மனது வேருகிய மாதர்களும், வியாதியினுல் வருந்திய மாதர்களும், உள்ளத்தில் விருப்பமில்லாத மாதர்களும், விரதங்கொண்டிருக்கும் மாதர்களும், வயிற்றில் கருப்பமுள்ள மாதர்களும், சூதகம்நீங்கிய மாதர்களும் முந்துகின்ற பலாத்காரத்தினுல் அணையுந் தன்மையுடையவர்கள் அல்லர் என்றவாறு.

கயங்கெழு நறுமலர் கயங்கு ருவகை
பயங்கெழு தேனுகர் சுரும்பின் பான்மைபோல்
வயங்கிழை மகளிரை மனந்தி ருத்தியே
முயங்கினர்க் கன்றிமற் றின்ப முற்றுமே. 24

இ - ள் : தடாகங்களிற் பொருந்திய வாசனையுள்ள மலர்கள், கசங்காமல் வண்டுகள் தங்களுக்குப் பிரயோசனமாயுள்ள தேனைக் காலமறிந்துண்ணுந் தன்மைபோல், விளங்குகின்ற ஆபரணங்களையணிந்த தங்கட்கு உரிய மனைவிகளுடைய மனதைத்திருத்திப் புணர்ந்தவர்க்கல்லது இன்பமுண்டாகுமோ உண்டாகாது என்றவாறு.

மற்று - அசைநிலை.

என்றவள் கூறலு மெழுந்த காமநோய்
தன்றலை மீக்கொளத் தாங்க லாதவன்
குன்றென வீங்கிய குவவுத் தோளினுல்
பொன்றிகழ் வனமுலை வலிதிற் புல்லினுன். 25

இ - ள் : என்று மனைவி சொல்லவும் தன்மனத்துண்டாகிய காமநோயானது தலைமட்டுமேறுதலால் அந்தக் காமத்தைச் சகிக்கமாட்டாதவனுய் அவ்வரசனுனவன் மலைபோல உயர்ந்த திரண்ட தன்தோள்களால் அவளுடைய பொன்னிற முள்ளதாய் விளங்குகின்ற அழகிய தனங்களை வலுவில் புல்லினுன் என்றவாறு.

புல்லிய காலையிற் பொருது மாதவ
மெல்லியல் குளிர்தளிர் மேனி வெம்பியே
கொல்லுலை யழல்புகக் கொளுந் திரும்புபோல்
வல்லழ லிறைத்தது மகிணன் மேனிமேல். 26

இ - ள் : அப்படிப் புல்லிய காலத்தில் பொருமல் மாதவத்தையுடைய அந்தமாதின் குளிர்ந்த தளிர்போன்ற மேனியானது வெதும்பிக் கருமான் உலைக்களத்தில் சேர்ந்ததினல் அக்கினிமயமாய்ச் சுடுகின்ற இரும்புபோல் கணவன் மேனிமேல் மிக்கவெப்பமுள்ள தீயை இறைத்தது என்றவாறு.

சாந்தமும் பொரிந்தது தாமந் தீந்தது
தோய்ந்தொளி ராரமுஞ் சுண்ண மானதால்
ஏந்தலும் வெருவிமெய் யிறுகப் புல்லிய
நாந்தகத் தடக்கைக ணடுங்கி வாங்கினன். 27

இ - ள் : அந்த வெப்பத்தினல் அரசன் மார்பில் அணிந்திருந்த சந்தனக்குழம்பும் பொரிந்துதிர்ந்தது. பூமாலையும் கருகியது. அணியப்பட்டொளிர்கின்ற முத்துமாலையும் நீருகியது. இவைகளெல்லாம் இவ்வாருகியதால் அந்த அரசன் பயந்து தன் மனைவி மேனியை இறுகப்புல்லிய வாள்பிடிக்கும் நீண்டகைகளை நடுங்கி வாங்கிக்கொண்டான் என்றவாறு.

வாங்கிய மன்னவன் மாதை நோக்கிநின்
தேங்கமழ் தளிர்புரை செய்ய மேனியின்
ஓங்கழல் வெதுப்பவென் னுடலம் வெந்ததால்
ஈங்கித நிமித்தம்யா தென வினவினன். 28

இ - ள் : கைகளை வாங்கிக்கொண்ட அரசனனவன் தன் மனைவியைப் பார்த்து வாசனை கமழ்கின்ற செந்தளிரை ஒத்த உன்னுடைய செவ்விதாகிய மேனியிலிருந்து உண்டாகிய மிகுந்த தீயானது சுட என்னுடல் வெந்தது. இதனுடைய காரணம் என்னென்று வினவினன் என்றவாறு.

ஆயிழை முறுவலித் தரச கேள்பவ
மாயிரு டெறுந்துரு வாச ரீசனர்
நேயவஞ் செழுத்தினை நிகழ்த்தலால் வினை
போயதென் னுடலமும் புனித மாயதே. 29

இ - ள் : அழகுள்ளதாகச் செய்யப்பட்ட ஆபரணங்கள் அணிந்த அந்த மாது நகைத்து அரசரே கேளும் பிறவிக்கேதுவாகிய பெருமையுள்ள ஆணவமல இருளைக்கெடுத்த துருவாச முனிவரானவர் பரமசிவன் அன்புறத்தக்க பஞ்சாட்சரத்தை எனக்கு உபதேசித்ததனல் இருவினையும் நீங்கியது என்னுடலும் பரிசுத்தமாகியது என்றவாறு. ஏ - அசை.

புண்ணியம் பாவத்தைப் பொருந்த லின்றிது
திண்ணமிப் புனிதமாஞ் செய்ய மேனியை
யண்ணலஞ் செழுத்தினை யறிய லாதநின்
தண்ணரிய மேனியாற் றழுவற் பாலையோ. 30

இ - ள் : புண்ணியமானது பாவத்தைச் சேராது. இது நிச்சயம். ஆதலால் புனிதமாகிய இந்த நல்ல உடலைப் பரமசிவனுடைய பஞ்சாட்சரத்தை அறியாத உம்முடைய குளிர்ச்சி பொருந்திய மேனியால் நீர் தழுவத்தக்கவரோ என்றவாறு.

இந்நிலை விரைந்துநீ யிறைவன் மந்திர
நின்னுடைச் செவிப்புல நிறைத்துத் தூய்மையாய்ப்
பின்னரென் மெய்ந்நலம் பெறுதி யென்றனள்
அன்னமந் திரமெனக் கருளென் றேதினன். 31

இ - ள் : நீர் இப்பொழுதே விரைவாகப் பரமசிவனுடைய பஞ்சாட்சரத்தை உம்முடைய காதினிடத்தில்உபதேசஞ்செய்யப்பெற்றுக்கொண்டு பரிசுத்தமாகி அதன்பின்பு என் மெய்யின்பத்தைப் பெற்றுக்கொள்ளும் என்று சொன்னாள். அப்படியானால்அம்மந்திரத்தை நீயெனக்கு உபதேசம் செய்யென்று சொன்னான் என்றவாறு.

மாதர்பான் மெய்ம்மொழி மகிழ்நர் கேட்பது
நீதியன் றரனரு ணிறைந்த தேசிகன்
மேதகு கர்க்கர்பால் விழைவி னுற்பெறப்
போதுக வென்றனள் பொருந்தி னனரோ. 32

இ - ள் : கணவர்கள் தங்கள் மனைவியரிடத்தில் உண்மையான மந்திரோபதேசம் பெற்றுக்கொள்வது நீதியல்ல. சிவனது கிருபையைப் பூரணமாகப் பெற்றுள்ள குருவாகிய மேன்மை பொருந்திய கர்க்கமுனிவரிடத்தில் விருப்பமுடன் பெற்றுக்கொள்ள நீர் என்னுடன் வாரும் என்றாள். (அவ்வரசன்) அதற்கு உடன்பட்டான் என்றவாறு.

அரோ - அசை.

குரவவார் குழலொடுங் கொழுந னக்கணந்
திரைபுணர் யமுனையந் தீர மெய்தியே
வரமுனி கர்க்கர்தாள் வணங்கி வந்தவா(று)
உரைசெய்து பின்னுமோ ருரைவி ளம்பினன். 33

இ - ள் : குரவம்பூ அணிந்த நீண்ட அளகத்தையுடைய தன் மனைவியோடும் கணவனானவன் அப்போதே அலைகள் மோதுகின்றஅழகிய யமுனைக்கரையையடைந்து உயர்ந்த கர்க்கமுனிவருடைய திருவடிகளைப் பணிந்து தான்வந்த காரியத்தைச் சொல்லி மேலும் ஒரு சொல் சொல்லுகின்றான் என்றவாறு.

மருளுறு பவக்கட லுழூம் வஞ்சனை
யருடரு மஞ்செழுத் தம்பி யாகநீ
தெருடரு தேசிக முத்தித் தீரமேல்
இருளற வேற்றுதி யென்ன வேத்தினன். 34

இ - ள் : தெளிவைத்தருகின்ற குருவே நீவிர் யாவரும் மயங்கத் தக்கதாகிய பிறவிக் கடலுள் முழுகியிராநின்ற பாவியாகிய அடியேனை அருளைத் தருகின்ற பஞ்சாட்சரமானது தெப்பமாகும் வண்ணம் உப தேசித்து மயக்கந்தீரும்படி மோட்சமாகிய கரையிலேற்றென்று துதி செய்தான் என்றவாறு.

அம்முனி நிருபன்மே லருளு நோக்குடன்
எம்மையா ளிறைவனை யுளத் திருத்தியே
செம்மலர்ச் சிவகரஞ் சென்னி சேர்த்துமே
மெய்ம்மையஞ் செழுத்தையும் விதியிற் கூறினன். 35

இ - ள் : அந்த முனிவரானவர் அரசனிடத்தில் கருணைசெய்யும் நோக்கத்துடன் நம்மையாட்கொள்ளும் இறைவனை இருதயத்தில்வைத்து வணங்கிச் செந்தாமரை மலர்போன்ற தம்முடைய நல்ல கையை அவன் தலையில் வைத்து உண்மையாகிய திருவைந்தெழுத்தினை முறைப்படி உபதேசித்தார் என்றவாறு.

வேறு

ஓகைபுரி தேசிக னுரைத்தபொருள் கொண்ட
வாகைவடி வேலிறை மயிர்க்குழிக ணின்றும்
வேகவினை யாவையும் விரைந்து சதகோடிக்
காகவுரு வாய்மிசை பறந்தன கரிந்த. 36

இ - ள் : மகிழ்வைச் செய்கின்ற தேசிகராகிய கர்க்கமுனிவர் உபதேசித்த திருவைந்தெழுத்தைப் பெற்றுக்கொண்ட வெற்றிபொருந்திய வடிவேலையுடைய அந்த அரசனுடைய ரோமத் துவாரங்களினின்றும் கடுமையுள்ள வினைகள் எல்லாம் நூறுகோடி காக்கைவடிவமாய் மேல் எழுந்து பறந்து கரிந்தன என்றவாறு.

மேனியி னெழுங்கொடிகள் வெந்துவிழல் கண்ட
மானவடி வேலரசர் மன்னவன் வணங்கி
ஊனுடலி னிக்கொடிக ளுற்றெழலெ னீருய்ப்
போனதெவ னென்னமுனி புங்கவ னுரைத்தான். 37

இ - ள் : தன்னுடலில் இருந்து மேலெழுந்த காக்கைகள் வெந்து விழுவதைக் கண்ட பெருமை மிக்க வடித்த வேலையுடைய அரசர்க்கரசனு னவன் வணங்கி அடியேனுடைய ஊன் தொடர்பாகிய உடம்பினின்றும் இந்தக் காகங்கள் உண்டாகி மேலெழுந்த காரணமென்ன அவைகள் நீருய்ப்போன காரணமென்னவென்று வினவ, சிறந்த முனிவராகிய கர்க்கர் சொல்லுகின்ருர் என்றவாறு.

நல்வினை யுழந்துபல நல்லுரு வெடுத்தும்
அல்வினை யுழந்துபல வல்லலுரு வுற்றுந்
தொல்வினை தொடர்ந்துதரு சூழ்பிறவி யென்னும்
வல்வினை யொழித்தனையிம் மந்திர நலத்தால். 38

இ - ள் : நல்வினையைச் செய்து பலவாகிய நல்ல உருவமெடுத்தும் தீவினையைச் செய்து துன்பமனுபவிக்கத்தக்க பலதிய வுருவமெடுத்தும் பழைய வினையாகிய சஞ்சிதம் தொடர்ந்து தருவதால் சுழலுகின்ற பிறப் பாகிய வலியவினையை இத்திருவைந்தெழுத்தின் நன்மையால் ஒழித்தாய் என்றவாறு.

ஒழிந்தவினை காகவ லுருக்கொடுட லின்றும்
எழுந்தன வருந்தொடர் பிலாதவைக ணீருய்
விழுந்தன வருந்தலுளம் வென்றிபுனை வேலோய்
செழுந்திரு வெழுத்தினிலை செப்பவெளி தன்றே. 39

இ - ள் : வெற்றிகொண்ட வேலாயுதத்தை யுடைய அரசனே ஒழிந்தவினைகள் உன்னுடலினின்றும் வலிய காக உருவங்கொண்டெழுந்து இனித்தொடருந் தொடர்ச்சியில்லாமையால் வெந்து நீருய் விழுந்தன, நீ மனம் வருந்தாதே, மேன்மையுள்ள திருவைந்தெழுத்தின் நிலைமை சொல்ல எளிதல்ல என்றவாறு.

ஏ - அசை.

கண்டனை விளைந்தபடி காமர்நக ரிற்போய்
ஒண்டொடியு நீயுநல னுண்டுட லொழிந்தால்
அண்டர்பதம் யாவையு மடைந்தவை துறந்து
தெண்டிரை விடத்தைநுகர் செம்மலடி சேர்வீர். 40

இ - ள் : அரசனே நடந்த காரியங்களையெல்லாம் கண்டனையல்லவா இனி நீயும் உன் மனைவியும் அழகிய நகரத்தில் போய் இன்பமனுபவித்துக் கொண்டிருந்து, இந்த உடல் ஒழிந்தால் பின்பு முறையே தேவர் பதவி களை அடைந்து அவைகளிலுள்ள இன்பங்களையும் அனுபவித்து, அவை களையும் நீங்கித் தெளிவான அலைகளையுடைய கடலிடத்துண்டாகிய நஞ்சினையுண்ட இறைவனுடைய திருவடிகளைச் சேர்வீர்கள் என்றவாறு.

என்றவ னியம்பலு மெழுந்துவடி வேலோன்
குன்றனைய மாடமணி கோநகர மெய்தித்
தன்றுணைவி யின்னல நுகர்ந்துட றணப்ப
மன்றல்மனை யோடுபரன் வாழ்பத மடைந்தான். 41

இ - ள் : இவ்வாறு கர்க்கமுனிவர் சொன்னமாத்திரத்தில் வடித்த வேலையுடைய அவ்வரசனனவன் எழுந்து மகமேருவை ஒத்த வீடுகளுள்ள அழகிய சிறப்புப்பொருந்திய நகரத்தையடைந்து, தன் மனைவியினிடத்தில் இனிய இன்பம் அனுபவித்து உடல்நீங்க, மணந்துகொண்ட அம்மனைவியுடன் இறைவன் உறைகின்ற சிவலோகஞ்சேர்ந்தான் என்றவாறு.

வேறு

மன்னுயிர்க் குயிராமீசன் வடிவெனு மஞ்செழுத்தின்
தன்னிலை யறிந்தவாறு சாற்றினே னென்றுனென்ற
பின்னரே தலத்தின்வீறுஞ் சிவநிசிப் பீடுஞ்சொல்வேன்
தொன்னெறி முனிவர்கேண்மி னென்றனன் சூதன்சொன்னான். 42

இ - ள் : நிலைபெற்ற உயிர்க்குயிராகிய இறைவனுடைய வடிவமான திருவைந்தெழுத்தின் நிலைமையை நானறிந்தமட்டில் கூறினேன் என்று சொன்னார். அப்படிச் சொன்னவுடனே சிவதல மான்மியமும் சிவராத்திரி மான்மியமும் சொல்லுகிறேன். பழமையாகிய நன்னெறி தவறாத முனிவர்களே கேளுங்களென்று சூதமுனிவர் சொன்னார் என்றவாறு.

பஞ்சாட்சர மகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம்—56

இரண்டாவது

சிவதலப் பெருமையுரைத்த

அத்தியாயம்

சூரிய குலத்தின் தோன்றல் தொன்னக ரயோத்தி வேந்தன்
வாரணி பெறுமென் கொங்கை மதயந்தி விரும்பு தோளான்
வேரியந் தொடையன் மார்பன் மித்திர சகநா மத்தோன்
ஆரணி யத்தின் வேட்டை யாடுவான் விரும்பிப் புக்கான். 1

இ - ள் : சூரியகுலத்தரசனும் பழமையாகிய அயோத்தி நகரத்து வேந்தனும் கச்சினையும் ஆபரணங்களையும் பொருந்திய மிருதுவாகிய தனங்களையுடைய மதயந்தியென்னும் பெயர்கொண்ட மனைவியினால் விரும்பப் பட்ட புயங்களை யுடையவனும், தேனிறைந்த அழகிய பூமாலையணிந்த மார்பையுடையவனும், மித்திரசகன் என்னும் பெயரையுடையவனுமாகிய அரசனவன் அரசாட்சி செய்துகொண்டிருக்கும் நாளில் ஒருநாள் வேட்டையாட விருப்பங்கொண்டு காட்டிற்குச்சென்றான் என்றவாறு.

பூட்டுவெஞ் சிலையிற் காலும் பொங்கழற் பகழி தூர்த்துக்
காட்டினுள் வல்வி லங்கின் கணமெலாந் தொலைக்குங் காலை
வேட்டஞ்செய் விருப்பி னன்முன் னிருவரோர் வயிற்றின் மேய
வாட்டிற லரக்க ரங்கி வரையென வந்தெ திர்த்தார். 2

இ - ள் : நாண்பூட்டிய கொடிய சிலையில் வைத்து வெப்பமிகுந்த தீயைக் கக்கும்படியான பாணங்களைப் பிரயோகஞ் செய்து காட்டினிடத் திருக்கும் மிருகக்கூட்டங்களை யெல்லாம் அழிக்கும்போது வேட்டையாடும் விருப்பமுள்ள அவ்வரசன்முன் ஒரு தாய் வயிற்றிற் பிறந்தவர்களாய் வாட் போரில் வல்லவராகிய இரண்டு அசுரர்கள் அக்கினி மலைபோல் வந்து எதிர்த்தார்கள் என்றவாறு.

முன்புற வெதிர்ந்து போர்செய் முன்னவன் றன்னை வாளால்
துன்புற மாய்த்தான் முன்னோன் றொலைவுகண் டிளைய நீசன்
வெந்புறங் காட்டி யேகி மீண்டுவஞ் சனையால் வெல்வான்
அன்புடை மனித னுய்வந் தரசன தடியிற் றாழ்ந்தான். 3

இ - ள் : தன்னெதிரில் முனேந்து போர்செய்கின்ற மூத்தவனே அந்த அரசனுனவன் வாளாயுதத்தினுல் துன்பமடையக் கொன்ருன். அண்ணனிறந்ததைக் கண்டு தம்பியாகிய நீசனுனவன் முதுகுகாட்டி ஓடிப்போய் வஞ்சனேயால் வெல்ல எண்ணங்கொண்டு அன்புள்ள மனித உருவங்கொண்டுவந்து அந்த மன்னவன் பாதத்தில் வணங்கினுன் எ - று.

அரசனுன் வரவே தென்ன வரக்கனு மண்ண லேயுன்
குரைகழற் கேவல் செய்யுங் கொள்கையி னடைந்தே னென்ருன்
நிருபனுங் குவந்து வஞ்ச னிலேயினேச் சிறிதுந் தேரான்
வரிசையி னடிசி னல்கு மடைத்தொழி லவனுக் கீந்தான். 4

இ - ள் : அரசன் அவனேக்கண்டு நீ வந்தகாரணம் என்னவென்று விஞவ அந்த அசுரன் அரசரே உம்முடைய ஒலிக்கின்ற வீரகண்டை அணிந்த திருவடிகட்குக் குற்றேவல் செய்யும் எண்ணத்துடன் வந்தேன் என்ருன். அம்மொழிகேட்ட அரசன் மகிழ்ந்து அவன் வஞ்சக எண்ணத்தைச் சிறிதுமறியாமல் கிரமமாகச் சோருக்கும் மடைத்தொழிலே அவனுக்குக் கொடுத்தான் என்றவாறு.

மடை - சோறு.

வெருக்கொள விலங்கு மாய்க்கும் வேட்டையங் கான நீங்கி
அரக்கனு முடன்வந் தெய்த வயோத்தியி னடைந்து வேந்தன்
மருக்கமழ் குமுதச் செவ்வாய் மதயந்தி யோடும் வாழ்நாள்
உருக்களி னகன் றிறந்தோர்க் கூட்டுநா ளுற்ற தன்றே. 5

இ - ள் : பயங்கொள்ளும்படி மிருகங்களேக் கொல்லும் வேட்டை ஆடுகின்ற அழகிய காட்டினேவிட்டு நீங்கி அந்த அசுரனுங் கூடவரும்படி அரசனுனவன் அயோத்தியை அடைந்து மணங்கமழ்கின்ற செவ்வல்லி மலரையொத்த வாயையுடைய மதயந்தியுடன் வாழ்கின்ற நாளில் உடலே விட்டிறந்த பிதிரர்கட்குச் சிரார்த்தஞ் செய்யும் நாள் வந்தது என்றவாறு.

அன்று - ஏ - இவ்விரண்டும் அசை.

தென்புல வாணர்க் கோகை செய்யுநா ளிதுநா ளென்ன
மன்பதை புரக்கும் வேந்தன் வசிட்டனே வரித்துப் பூசித்
தன்பினுண் மிசைக வென்ரு னரக்கன்ற னெண்ணந் தீர்ப்பான்
நன்கலத் தமுதத் தோடு நரருடை யூனிட் டானே. 6

இ - ள் : தெற்குத்திசையில் வாழ்கின்றவர்களாகிய பிதிர்க்கட்கு மகிழ்வை உண்டாக்கும் நாளாகிய சிரார்த்தநாள் இந்நாளென்று புரோகிதன் சொல்ல மக்களேக்காக்கும் அரசனுனவன் வசிட்டரை அழைப்பித்து

அன்புடன் வழிபாடுசெய்து அமுதுகொள்ளவேண்டுமென்றான். வஞ்சித்து வந்திருக்கின்ற அந்த அசுரனானவன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள வசிட்டருக்குப் பொற்கலத்தில் அமுதத்துடன் நரமாமிசத்தைப் படைத்தான் என்றவாறு.

ஏ - அசை.

உய்த்தவூன் மனித ரூனென் றுள்ளத்தி னோர்ந்து தூய
மெய்த்தவன் கனன்று சீறி வெய்யவன் வஞ்ச மோரான்
வைத்துறு சினத்தா னந்த மன்னனை யிதுநீ செய்தாய்
அத்தலை நரரூன் றின்னு மரக்கனே யாதி யென்றான். 7

இ - ள் : படைத்த இறைச்சி நரமாமிசமென்று தம்முள்ளத்தறிந்து தூயதவமுடைய வசிட்டமுனிவர் அந்த அரக்கன் செய்த வஞ்சத்தை அறியாதவராய் மனங்கொதித்துச் சீறிப் பொருந்திய கோபத்தினையுடையவராய் அந்த மன்னவனைப் பார்த்துச் சிரார்த்தகாலத்தில் ஆட்டு இறைச்சி படைக்கவேண்டுவது வேதவிதியாயிருக்க அதைவிட்டு இப்படி அக்கிரமமான காரியம் செய்ததினாலே காட்டினிடத்தில் சஞ்சரித்து நரமாமிசத்தை உண்ணும் அரக்கனாகக் கடவாய் என்று சபித்தார் என்றவாறு.

சாபத்தை நவின்ற மேலோன் றன்னுளந் தன்னின் மேய
கோபத்தி னின்று நீங்கிக் கொடியவல் லரக்கன் செய்த
ஆபத்தென் றறிந்து வேந்தே யறிகிலேன் சபித்த விந்தப்
பாபத்தின் றகைமை தீர்ப்பாய் பன்னிரு பருவத் தென்றான். 8

இ - ள் : சாபமிட்ட வசிட்டரானவர் தம்முள்ளத்தில் உண்டாகிய கோபத்தினின்றும் நீங்கிக் கொடுந்தொழில் செய்கின்ற வலிய அரக்கன் செய்த ஆபத்தென்றறிந்து அரசனே உன்னாலே நேரிட்டதல்லவென்று உணராமல் நான் சபித்த இந்தப் பாபத்தின் தன்மையைப் பன்னிரண்டாம் ஆண்டு தீர்ப்பாய் என்று சொன்னார் என்றவாறு.

வரிசிலை யுழவன் றானு மறைமுனி தன்னை நோக்கிப்
பெருகிய சினத்த னாகிப் பிழைபுரி யாதேன் றன்னை
நிருதனா கென்னச் சொன்ன நின்னையும் வெய்ய சாபம்
புரிகுவ னென்று சாபப் புனலினைக் கையிற் கொண்டான். 9

இ - ள் : நீண்டவில்லின் தொழில் பழகினவனாகிய அவ்வரசன் வேதமுணர்ந்த வசிட்டரை நோக்கி மிக்ககோபமுடையவனாய்க் குற்றம் செய்யாத என்னை அரக்கனாகக் கடவையென்று சபித்த உனக்கும் நான் கொடிய சாபமிடுகிறேனென்று சாபநீரைக் கையில் ஏற்றுக்கொண்டான் எ - று.

கண்டனள் கலங்கித் தேவி மதயந்தி காவல் வேந்தே
எண்டரு மன்னர் தம்முட் குரவரைக் காய்ந்தார் யாரே
விண்டெழு வெகுளி தீர்வா யென்றவள் விளம்ப வேலோன்
கொண்டகைச் சாப நீர்தன் குரைகழற் ருளிற் பெய்தான். 10

இ - ள் : மதயந்தியென்னும் அவன் மனைவியானவள் அதைக் கண்டு மனங்கலங்கி மன்னுயிரைக்காக்கும் காவல்பூண்ட அரசனே யாவரும் எண்ணும்படியான பெருமையுள்ள மன்னவர்கட்குள் ஆசாரியர்களைக் கோபித்தவர்கள் யாருமில்லையே. ஆதலால் அதிகரித்தெழுகின்ற கோபத்தைத் தணிப்பாயாக வென்று அவள் சொல்ல, வேலேந்தும் அவ்வரசன் தன்கையிலேற்றுக்கொண்ட சாபநீரை ஒலிக்காநின்ற வீரகண்டையணிந்த தன்காலில் விட்டுக்கொண்டான் என்றவாறு.

தீங்குறு சாப நீராற் செம்மல ரெரிதோய்ந் தென்னப்
பூங்கழற் கால்க ளாங்கே பொள்ளெனக் கறுத்த லோடும்
பாங்குளோர் காண மன்னன் கன்மாட பாத னாகி
வாங்கருங் குருசா பத்தா லரக்கனாய் வனத்திற் புக்கான். 11

இ - ள் : தீமையுள்ள சாபநீரினால் செந்தாமரைமலர் தீயில்படிந்தது போல் பொலிவுள்ளதாய வீரகண்டை யணிந்த கால்கள் அப்பொழுதே கருத்தமாத்திரத்தில் பக்கத்திலிருப்பவர்கள் எல்லாம் காண அம்மன்னவன் கன்மாட பாதனாகி நீக்குதற்கரிய குருவின் சாபத்தால் அசுரவுருவங் கொண்டு காட்டினையடைந்தான் என்றவாறு.

கன்மாடம் - கருப்பு.

வேறு

நெடிமுழங்கிச் செவிடுபடும் பேரடவி யிடந்தோறு நெடுவேய் தேய்ந்து
படுகனலிற் சிகையணவச் சுறுநாறு மயிர்க்கவிகள் பதறிப் பாயப்
புடைகலந்த தேனினங்கள் பகன்மதியை யிருலென்னப் புகுந்து மொய்க்கும்
குடுமிவரை யிடந்தோறும் பலவிலங்கின் குலமனைத்துங் கொலைசெய்
[துண்டான். 12

இ - ள் : காட்டுத்தீ சடசட வென்றொலிக்கக் கேட்போர் காதுகள் செவிடுபடும்படியான பெரிய காடுகள்தோறும் நீட்சியையுடைய மூங்கில்கள் ஒன்றோடொன்று தேய்ந்து உண்டாகாநின்ற தீயின் சிகைபொருந்தச் சுறுநாறும்படியான ரோமங்களுள்ள வானரங்கள் பதறிமரங்களில் பாயவும், அம்மரங்களினிடத்திலிருக்கும் வண்டுக்கூட்டங்கள் பகலில் தோன்றுஞ் சந்திரனைத் தேன்கூடென்று கருதி அதனிடத்திற்சென்று மொய்க்கவுமாக

இராநின்ற சிகரங்களையுடைய மலையிடங்கள்தோறுஞ் சஞ்சரித்துக்கொண்டிராநின்ற பலவகையாகிய மிருகக்கூட்டத்தையெல்லாங் கொன்று புசித்தான் என்றவாறு.

மாயிருஞா லப்பரப்பின் மன்னுமுட லனைத்தினுக்கு மயான மென்னக்
காயுமிரும் பசியுதரக் கனற்குழியை நிணந்தூர்த்துக் கழிக்கு நாளில்
தூயவொரு முனிபுதல்வன் புதுவதுவை புரிந்தவிள நந் தோகை யோடுந்
தீயதிறல் வாளரக்கன் வரவறியா னவ்வனத்திற் சென்றான் மன்னோ. 13

இ - ள்: மிக்கபெருமையையுடைய இவ்வுலகத்தின் அகன்ற இடமெங்கும் பொருந்திய சரீரங்கட்கெல்லாஞ் சுடுகாடு என்று சொல்லும்படி சுடுகின்ற மிகுந்த பசியுள்ள வயிறாகிய தீக்குழியை மாமிசங்களால் நிறைத்துக் காலம் கழிக்கும் நாளில் பரிசுத்தமுள்ள ஒரு முனிகுமரன் புதிதாக மணஞ்செய்துகொண்ட இளமைப் பருவமுடைய தன்மனைவியுடன் கொடிய வலியுள்ள கொலைத்தொழிலைச் செய்யும் அந்த அசுரன் வருவதையறியாமல் அந்தக்காட்டிற் போனான் என்றவாறு.

மன், ஓ - இவ்விரண்டும் அசை.

வந்தவனைக் கண்டரக்கன் வாளெயிறும் பிலவாயும் வயங்க நக்காங்
குந்தியுறு பசிதணிக்க வந்தானென் றுன்னுதொறு முவகை பொங்கக்
கொந்துமலர்ச் சிறுகுடுமி மறைமுனிவன் காளைதனைக் குருதி வேட்டு
முந்துசினப் புலிசேதா விளங்கன்றைக் கவர்ந்ததென முனிந்து பற்றா. 14

இ - ள்: வந்த அந்த முனிபுத்திரனைக் கண்டு அசுரனானவன் வாள்போன்ற கோரப்பல்லும் பிலத்துவாரம் போன்ற வாயும் பிரகாசிக்கும்படி நகைத்து அப்போது தன் வயிற்றில் மிகுந்திருக்கின்ற பசியைத் தணிக்க வந்தானென்று நினைக்குந்தோறும் மகிழ்வு தனக்குள்ளே பொங்க உதிரத்தைக் குடிக்க விரும்பி முன்னதாக உண்டாகின்ற கோபத்தையுடைய புலியானது ஒரு பசுவினிளங்கன்றைப் பிடித்துக்கொண்டது போலக் கொத்தாகிய பூமாலையணிந்த சிறு குடுமியையுடைய வேதம் உணர்ந்த அந்த முனிமகனைக் கோபங்கொண்டு பிடித்து என்றவாறு.

கொலைபுரிவா னுறுகாலை யதுகண்டு
வெருவிமலர்க் கொம்ப ரன்னாள்
நிலைதளர்ந்து கைநெரித்து நெடுங்கண்ணீர்
முலைமுன்றி னிறைப்பச் சோர்ந்து
தொலைவில்புகழ்ப் பரிதிகுலத் தொல்வேந்தே
மதயந்தி தோயுஞ் செம்பொன்
மலைபொருவு மணிமார்பா வென்றேத்தி
யினைந்தினைய மாற்றஞ் சொன்னாள். 15

இ - ள்: கொலை செய்யத் தொடங்கும்போது அதைக்கண்டு முனி மகனுடைய மனைவியாகிய பூங்கொம்பையொத்த அழகுள்ளவள் பயந்து நிலைதளர்ந்து கைகளை நெரித்துக்கொண்டு நெடிய கண்ணீரானது முலையினிடத்தை நிறைக்கும்படியாகச் சோர்ந்து பழமையாகிய சூரியகுலமன்னவனே மதயந்தி அணையும் பொன்மலையை ஒத்த அழகிய மார்பனே என்று துதிசெய்து மெலிந்து இந்த உரைகளைச் சொன்னாள் என்றவாறு.

வல்வினையா லிவ்வுருவம் வாய்ந்தனை நீ நிருதர்குல வழியா னல்லை
கொல்வதுனக் கடாதுபிறர் உயிர்க்குதவி புரிவதுங்கள் கொள்கையாமால்
வெல்கதிர்வேற் படைவேந்தே யிவனிறக்கில் யானுமுயிர் விடுவே னென்னா
மல்குவிழிப் புனல்பாயத் தொழுதிரந்தோ ருயிர்ப்பலிநீ வழங்கு கென்றாள். 16

இ - ள்: யாவராலும் விலக்கக்கூடாத வலியையுடைய வினையினால் இந்த உருவம் பெற்றனை, நீ அசுரகுல வழிமரபில் பிறந்தவனல்லை. ஆதலால் கொல்வது உனக்குத் தகுதியல்ல பிறருயிருக்கு உதவிசெய்வது உங்கள் குணமாம். பகைவரை வெல்லுகின்ற ஒளிதங்கிய வேலாயுதமேந்தும் அரசனே, இவன் இறந்தால் நானும் உயிர் விட்டுவிடுவேனென்று நிறைந்த கண்ணீர் பாயும்படித் தொழுதிரந்து ஒப்பற்றதாகிய உயிர்ப்பிச்சை கொடு என்றாள் என்றவாறு.

மனமறுகுற் றிவ்வாறு கவன்றுரைக்கு
முரைநிருதன் மனக்கொள் ளானாய்ப்
புனைமலர்த்தார் வேதியனை யுயிர்செகுத்துத்
தசைசுவைத்துப் புண்ணீர் மாந்திக்
கணநிணங்கண் மூளைகுடர் மென்றருந்தி
யென்பனைத்துங் கழித்து வாயால்
இனவளையாண் முன்னுமிழ்ந்தா னென்செய்வா
ளுமிழ்ந்தவெலா மெடுத்துக் கொண்டாள். 17

இ - ள்: மனமறுக்கங்கொண்டு இவ்வாறு வருத்தத்துடன் கூறுவதை அந்த அசுரன் தன் மனத்து ஏற்காதவனாய்ப் பூமாலை அணிந்திருக்கும் முனிமகனுடைய உயிரைக்கொன்று மாமிசத்தையுண்டு உதிரத்தைக் குடித்துக் கொழுத்திருக்கும் நிணங்களையும் மூளைகளையும் குடல்களையும் மென்று தின்று எலும்புகளையெல்லாம் கழித்து வாயினால் முனிபுத்திரன் மனைவி எதிரில் உமிழ்ந்துவிட்டான். அதைக்கண்டு எதிர்செய்யும் வலி தனக்கில்லாமையால் என்னசெய்வாள். அவன் உமிழ்ந்துவிட்டதை எல்லாம் எடுத்துக்கொண்டாள் என்றவாறு.

எழுந்துபடர் கதழெரியி னவ்வென்பை
யிட்டிறைஞ்சி யின்ன செய்தோன்
செழும்பதியிற் புகுந்துரிமை மதயந்தி
முதலாய தேவி மாரைத்
தழும்பொழுதி லாருயிர்மாண் டொழிகவெனக்
கொடுஞ்சாபஞ் சாற்றித் தானும்
கொழுந்தெரியிற் புக்கவிந்தாள் ஆண்டகையு
மவ்வனத்திற் குலவு நாளில். 18

இ - ள் : கொழுந்துவிட்டெழுந்து எரிகின்ற மிக்க காட்டுத்தீயில் அந்த எலும்புகளைப்போட்டுத் தீயினை வலமாகவணங்கி இப்பாவச்செயலைச் செய்த கொடியோன் சாபநீக்கம்பெற்று வளமுள்ள தன் நாட்டையடைந்து தனக்குரிய மதயந்தி முதலாய மாதர்களைத் தழுவும்போது பெறற்கரிய உயிர் மாண்டுபோகக் கடவனென்று கொடிய சாபங்கொடுத்துத் தானும் கொழுந்துவிட்டெரிகின்ற அத்தீயில் விழுந்து இறந்துபோனாள். அதன் பின்பு அசுரனாகிய அரசன் அக்காட்டில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் போது என்றவாறு.

பெறுதற்கரிய உயிரென்றது, உயிர்கட்கு மனிதப்பிறவி கிடைத்தல் அரிதென்ற கருத்துப் பற்றியது.

வேதமுனி சாபந்தீர்ந் தரக்கவுரு
வகலவிறல் வேந்தன் வேளுங்
காதலுறு முருவெய்தி முன்புபோ
லயோத்திநகர் கடிதி னெய்திச்
சீதமதி வாண்முகத்து மதயந்தி
கலவிநலத் தேற லுண்பான்
போதகமொன் றதன்பிடியின் சேவகம்புக்
கெனக்கோவில் புக்கான் மன்னே. 19

இ - ள் : வேதமுணர்ந்த வசிட்டருடைய சாபம்நீங்கி அரச உருவம் மாறவே வெற்றியுள்ள அரசனானவன் முன்போல மன்மதனும் ஆசை கொள்ளத்தக்க தன் பழைய உருவத்தையடைந்து விரைவாக அயோத்தி நகர் சேர்ந்து குளிர்ச்சி தங்கிய சந்திரனை ஒத்த ஒளிபொருந்திய முகத்தை யுடைய மதயந்தி என்னும் தன் மனைவியிடத்தில் மதுரமுள்ள தேன்போல இனிமையைத் தருகின்ற கலவியின்பம் அனுபவிக்க ஓர் ஆண் யானை யானது கிரீடையை விரும்பித் தன் பெட்டையானை நித்திரைசெய்யும் இடத்தில் சென்றதுபோல் தன் மனையிற்போனான் என்றவாறு.

மன், ஓ - அசை.

வேறு

கோயில் புக்குநற் குருமணி நெடுமுடிக் குரிசில்
வேயின் மிக்கநல் லுருவமை வெள்வளைத் தோளி
யாய மைக்கணுண் மதயந்தி மணிமுலை யவாவில்
தோய வுற்றனன் மறுத்தன ளிவையிவை சொன்னுள். 20

இ-ள்: தன் மனையிற்சேர்ந்து நல்ல நிறமுள்ள மணிகள் பதிக்கப்பட்ட நெடிய மகுடத்தை அணிந்திருக்கும் அரசனானவன் பசிய மூங்கிலின் அழகைப்பார்க்கிலும் மிக்க நல்ல அழகமைந்த சங்குவளையணிந்த தோளையுடையவளாகிய மையிட்ட கண்களையுடைய மதயந்தியின் ஆபரணங்கள் அணிந்த தனத்தை ஆசையுடன் அணையப்போனுன். அவள் தடுத்துச் சில உரைகள் வகுத்துக்கூறினுள் என்றவாறு.

உற்ற வாறென்று முணர்ந்திலை போலுநீ யுயர்கான்
முற்று நாடிவல் லரக்கனுய் முனிவரன் சேயைப்
பற்றி நுங்கினைக் கண்டவன் பார்ப்பனி சீறிச்
சொற்ற வாசகங் கேளென விளைந்தவை சொன்னுள். 21

இ-ள்: உனக்குச் சம்பவித்த முறைமையை நீ சிறிதும் அறிந்திலையோ. அது என்னவெனில் நீ அசுரனுய் உயர்ந்த காடுகளெங்கும் உணவை விரும்பித் திரியும்போது அவ்விடத்தில் நேரிட்ட ஒரு முனிமகனைப் பற்றிக் கொன்றுதின்றுய். அவ்வமயம் அதைக்கண்டு அவன் மனைவியானவள் கோபித்துச் சாபங்கூறியதைக் கேளெனச் சம்பவித்த காரியங்களைச் சொல்லுகின்றுள் என்றவாறு.

போலும் - முன்னிலை அசை.

இணையி லாதவென் கொழுநனை யின்னுயி ருண்ட
பணைநெ டும்புய மன்னவ பதியினிற் புகுந்துன்
துணைவி மார்கடந் துணைமுலைச் சுவடுமார் பிறுக
அணையு நாளுயி ரிறத்தியென் றழல்புகுந் தவிந்தாள். 22

இ-ள்: ஒப்பில்லாத என் கணவனுடைய இனிய உயிரை நீக்கிய பருத்து நீண்ட புயங்களையுடைய மன்னவனே அயோத்திநகரில் சேர்ந்து உன் மனைவியருடைய இரண்டு தனங்களின் தழும்புகள் மார்பில் அழுந்தும்படி அணையும்நாளில் உயிரிழந்துபோகக் கடவையென்று விழுந்திறந்தாள் என்றவாறு.

கொழுநனை என்பது உருபு மயக்கம்.

அன்னதா லெமை யணைவதற் கடாதுனக் கென்றுண்
மன்னர் மன்னனும் பசியினல் வருந்திய வொருவன்
பொன்னி னன்கலத் தமுதுபெற் றுணப்பொறி யிலான்போல்
இன்ன லெய்தினன் காமவேள் கணையின லிடைந்தான். 23

இ-ள்: அத்தகைய சாபம் நேரிட்டிருக்கின்றபடியினலே எங்களை அணைவதற்கு உனக்குத் தகாதென்று சொன்னுள். அதைக்கேட்ட அரசர்க்கரசனுகிய கன்மாடபாத ராசனனவன் பசியினல் வருந்திய ஒருவன் பொன்னுலாகிய நல்ல பாத்திரத்தில் அன்னமிடப்பெற்றும் உண்ணுதற்கு உபயோகமான உறுப்புக்கள் இல்லாதவனுயினுன்போல் மன்மதபாணத்தினல் துன்பமடைந்து இடைந்து நின்றுன் என்றவாறு.

பெண்ணலத்தினைப் பெருதவர் மகவினைப் பெருதார்
பெண்ணலத்தினைப் பெற்றவ ரேமகப் பெற்ருர்
பெண்ணலத்தினுன் மகவுபெற் றிருமையும் பெறுவார்
பெண்ணலத்தின லன்றியோர் பெரும்பொரு ளின்றே. 24

இ-ள்: பெண் இன்பத்தை அனுபவிக்கப் பெருதவர்கள் புதல்வர்களைப் பெருதவர்கள் ஆவார்கள். பெண்ணின்பத்தை அனுபவிக்கப் பெற்றவர்களே புதல்வர்களைப் பெற்றவர்கள் ஆவார்கள். பெண்ணின்பத்தை அனுபவிப்பதினுல் புதல்வர்களைப் பெற்று இம்மைப் பயனையும் மறுமைப்பயனையும் அடைவார்கள். பெண்ணின்பத்தினலன்றிப் பெறும் பொருள் யாதொன்றுமில்லை என்றவாறு.

ஏ - அசை.

உந்து நீர்க்கட லுடுத்தபார் முழுவது மொருங்கே
வந்து தாடொழு மரசியல் வளமெலாம் பெறினும்
இந்தி ராதியர் பெரும்பதத் திருக்கை யெய்திடினு
மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே. 25

இ-ள்: அலையினையுடைய கடல்சூழ்ந்த நிலத்திலுள்ள அனைவரும் ஒரு கூட்டமாக வந்து அடிகளில் பணியத்தக்க அரசுக்குரிய வளங்களெல்லாம் பெற்றிருந்தாலும் அல்லது தேவேந்திரன் முதலான தேவர்களின் பதங்களிலிருக்கும் பேறுகள் பெற்றுலும் புத்திரர் இல்லாமல் வாழ்வது வாழ்வல்ல என்றவாறு.

மற்று, அன்று, ஏ - அசைகள்.

என்று பற்பல சிந்தையில் எண்ணிவே லிறைவன்
குன்று மாண்புடைத் தரசிய லினியென்றுங் குறியா
னின்று மாதவம் புரிவதே கடனென நினைந்து
சென்று கானடைந் தருந்தவஞ் செய்தன னிப்பால். 26

இ - ள்: என்று பலவாகத் தன் மனதில் எண்ணிக்கொண்டு வேலாயுதமேந்தும் அரசன் நாம் துறந்துவிட்டால் இனி அரசியல் குன்றுந்தன்மையை உடையதாகுமே என்பதையுங் குறியாதவனாய், வனத்தில் போய் இருந்துகொண்டு பெருமை பொருந்திய தவஞ்செய்வதே நமக்கு முறைமையென்றெண்ணி இல்வாழ்க்கையைத் துறந்துபோய்க் காட்டில் சேர்ந்து அரிய தவத்தைச்செய்தான். இப்பால் நடந்ததென்னவெனில் என்றவாறு.

வேறு

காவலன் றனக்குப் பின்னோர் கான்முளை யில்லை யென்று
பூவல யத்தி லுள்ளோர் புகல்வதும் பொருந்தார் வீறும்
யாவையு முணர்ந்த நீதி வசிட்டனுங் கியல்பி னாய்ந்து
பாவருந் துயரந் தீர்க்கும் படிநினைந் தினைய செய்தான். 27

இ - ள்: நம்முடைய அரசனுக்குப் பின்பு இந்த நாட்டைக் காப்பதற்கு ஒரு புத்திரனாவது இல்லையேயென்று இவ்வுலகத்திலுள்ளவர்கள் இரக்கமுற்றுச் சொல்லுவதும் பகைவருடைய வீராப்புமாகிய இவைகளையெல்லாம் அப்போது அறிந்த நீதியுள்ள வசிட்ட முனிவரானவர் தரும சந்தானம் உண்டாக்கலாமென்கிற வாக்கியத்தை ஆராய்ந்துணர்ந்து நேரிட்டிருக்கிற துயரத்தை நீங்கும்படியெண்ணி இந்தக் காரியத்தைச் செய்தார் என்றவாறு.

அருந்ததி யனைய கற்பின் மதயந்தி யணங்க னுள்பாற்
பொருந்தியின் கலவி துய்த்தோர் புதல்வனைத் தந்து தீரா
இருந்துய ருலகந் தீர வியற்றினன் முனிவ னிப்பாற்
பெருந்தகை தவஞ்செய் வானைப் பேய்மக ளொருத்தி பற்றி. 28

இ - ள்: அருந்ததியை ஒத்தகற்பினையுடைய மதயந்தி யென்னும் தெய்வப்பெண்ணை ஒத்தவளிடத்தில் சேர்ந்து இனிய கலவி செய்து ஒரு புதல்வன் உண்டாகும்படி புரிந்து உலகத்துக்கு நேரிட்டிருந்த மிக்கதுயரம் தீரும்படி வசிட்டர் செய்தார். அங்கு அப்படியிருக்கக் காட்டில் நடந்தது என்னவெனில் தவஞ்செய்கின்ற பெருந்தகையாகிய அரசனை ஒரு பேய் மகள் தொடர்ந்து என்றவாறு.

அரசனில்லாத நாடு உயிரற்ற உடம்பை ஒக்குமாதலால் அறவழியில் புத்திரப் பேறுண்டாக்குதல் சாத்திரவிதியே. இப்படி அறவழியில்

புதல்வர் உண்டாக்குகிற முனிவருக்காவது, பெண்ணுக்காவது தவத்திலும் கற்பிலும் பழுதுண்டாவதில்லை. அவ்வாறு செய்ய இசைவில்லாவிட்டால் பட்டத்து யானையைக் கண்கட்டிச் செல்லவிட்டு அதனால் எடுத்துக் கொண்டு வரப்பட்டவனுக்குப் பட்டங்கட்டத்தக்கது.

பிறையெயி றிலங்கக் கண்கள் பிறங்கெரி கதுவச் சீறிக்
கறைவிட முருத்து வல்லே தொடர்தல்போற் றொடரக் கண்டாங்
கறைகழற் குரிசில் தானு மலகைமா தொருத்தி பற்று
முறைமை யேதென்ன வேத முனிவரை வினவி னானே. 29

இ - ள் : பிறைபோல் வளைவாகிய தந்தங்கள் ஒளிவிடவும் கண்களிலிருந்துமிக்க தீப்பொறியானது சிந்தவும் சீறிக் கரியவிடமானது கோபித்து விரைவாகத் தொடர்தல்போலத் தன்னைத் தொடரக்கண்டு ஒலிக்காநின்ற வீரகண்டையணியும் அந்த மன்னவன் ஒரு பேய்மகளானவள் என்னைப் பற்றுதற்குக் காரணமென்னவென்று அங்கிருக்கும் வேதமுணர்ந்த முனிவர்களை வினவினான் என்றவாறு.

ஏ - அசை.

கேட்டலு முனிவ ரெல்லாங் கிளியென மிழற்று மாதர்
மோட்டிள முலைகள் பாய்ந்து முருகு கொப்பளிக்குந் தாரோய்
காட்டினி லரக்கனுய்முன் காளைவே தியனை நீகொன்
றீட்டிய பாவங்கண்டா யலகையா யெய்திற் றென்றார். 30

இ - ள் : அவன் கூறிய சொல்லைக் கேட்ட மாத்திரத்தில் அந்த முனிவர்களெல்லாரும் அவனைப் பார்த்துக் கிளியைப்போல் பேசுகின்ற மாதர்களுடைய உயர்வாகிய சாயாத தனங்கள்பட்டுத் தேனைக் கொப்பளிக்கும்படியான பக்குவமுள்ள அரும்புகளால் தொடுக்கப்பட்ட பூமாலையணிந்த அரசனே, நீ முன்னே அசுரனாய்க் காட்டில் சஞ்சரிக்கும்போது அங்கு நேரிட்ட வாலிபனாகிய ஒரு முனிமகனைக் கொன்று தேடிக்கொண்ட பாவங் கண்டாய். இப்போது பேயாகவந்து உன்னைப் பற்றிக்கொண்டதென்றார்கள் என்றவாறு.

மாதவ ரிசைப்பக் கேட்டே மன்னனு மிதனை நீக்கச்
சேதுவே முதலா யுள்ள புனிதமா நீர்த்தம் யாவும்
காதலான் மூழ்கி மூழ்கிக் கடவுளா லயங்க ளேத்திப்
பாதக வினைக டீர்க்கும் பதிபல வணக்கஞ் செய்தான். 31

இ - ள் : முனிவர் சொல்லக் கேட்ட மன்னவனும் இந்தப்பாவத்தை நீக்கச் சேது முதலாயுள்ள புனிதமாகிய தீர்த்தங்களிலெல்லாம் ஆசையுடன் தனித்தனியே முழுகியும் சிவாலயங்களிற்போய் பரமசிவனைத்துதி

செய்தும் இவ்வாருகப் பாவவினைகளைத் தீர்க்கத்தக்க அனேக தலங்களிற் போய் வணங்கினன் என்றவாறு.

அங்கண்மா ஞாலவட்டத் தாலயந் தலங்க டீர்த்தம்
எங்கணு முழன்றும் பாவந் தீர்கலா திருத்தலாலே
வெங்கதிர்ப் புரவி மான்தேர் விலங்கெயின் மிதிலை ஞாங்கர்
மங்குரேய் பொழிலின் மேவி வருத்தமுற் றிருந்தான் மன்னே. 32

இ - ள்: அழகிய இடத்தையுடைய பெரிய பூமியினிடத்திலுள்ள ஆலயங்கள் தலங்கள் தீர்த்தம் எங்குமுழன்று திரிந்தும் தனக்கு நேரிட்ட பாவந்தீராமலிருப்பதினலே வெப்பமிக்க சூரியனுடைய குதிரைகட்டிய தேரானது ஒதுங்கிப்போகத்தக்க உயர்வையுடைய மதில் சூழ்ந்த மிதிலை நகரத்துக்கு அண்மையிலிருக்கும் மேகமண்டலத்தையளாவிய ஒரு சோலையிற்சேர்ந்து வருத்தங்கொண்டிருந்தான் என்றவாறு.

மன், ஓ - அசை.

ஆண்டகை யிருந்த காலை அருந்தவ முனிவர் சூழ
ஈண்டு செங் கதிரோன் ரேன்றி வருவதே யேய்ப்ப வொல்லை
காண்டகு வியப்பினேடு கவுதமன் வந்து தோன்றப்
பூண்டபே ருவகை பொங்கப் புரவலன் வணங்கி நின்ருன். 33

இ - ள்: அரசனப்படி இருந்தபோது அரியதவத்தை உடைய முனிவர்கள் அருகிற் சூழ்ந்துவரச் சூரியன் உதயமாகி இந்த உலகத்தில் வருவதை யொப்பாக யாவருந் தரிசிக்கத்தக்க வியப்புள்ள தவவேடத்துடன் கவுதமமுனிவர் விரைவாகவந்துதோன்றக்கண்டு மகிழ்ச்சியுண்டாக அம்மன்னன் வணங்கி நின்ருன் என்றவாறு.

நின்றமன் னவனை நோக்கி நீ பெருவளங்கண் மேவி
நன்றிருந் தனையோ வென்று முனிவர னவில வன்னேன்
என்றுநின் னருளைச் சேர்ந்தோர்க் கெய்திடாதீமை யேனும்
ஒன்றுள துரைக்கக் கேட்டி யுத்தம வென்று சொன்னன். 34

இ - ள்: வணங்கி நின்ற அரசனைக் கவுதமரானவர் பார்த்து அரசே! மிக்க செல்வத்தைப்பொருந்தி நலமாக இருக்கின்றனையோவென்று வினவ அவ்வரசனனவன், சுவாமி உம்முடைய கருணையைப் பெற்றவர்கட்கு ஒருகாலத்துந் துன்பங்கள்நேரிடா. ஆயினும் ஒன்றுண்டு, அதனைச் சொல்லுகிறேன் உத்தமரே கேளுமென்ருன் என்றவாறு.

எங்குலக் குரவன் முன்னாள் இயம்பிய சாபந் தன்னால்
வெங்கொலை யரக்க னாகி வேதியற் கொன்ற பாவம்
தங்கியோ ரலகை யாகித் தமியனைத் தொடர்தலாலே
அங்கது தணிப்பா னெண்ணி யளவிலா வேள்வி செய்தேன். 35

இ - ள்: எங்கள் குலகுருவாகிய வசிட்டர் முன்னாள் கூறிய சாபத்தினால் நான் கொடிய கொலைத்தொழில் செய்யும் அசுரனாகி ஒரு பிராமணனைக் கொன்ற பாவமானது ஒரு பேயாகி ஆதரவில்லாத எளியேனைப் பற்றித் தொடர்தலினாலே அப்பாவத்தைத் தீர்க்க எண்ணி அளவில்லாத யாகஞ்செய்தேன் என்றவாறு.

எண்ணினல் லறங்கள் செய்தே னெண்ணில் மந்திர நவின்றேன்
புண்ணிய தலங்க டேர்த்த மாலயம் பலவும் போனேன்
நுண்ணிய சாகமூல பலங்களை நுகர்ந்தி யான்முன்
பண்ணினேன் விரதங் கோடி பாவக மனந்தஞ் செய்தேன். 36

இ - ள்: அளவில்லாத நல்ல தருமங்கள் செய்தேன், அளவற்ற மந்திரங்கள் சபித்தேன், அனேக தலயாத்திரை செய்தேன், தீர்த்தயாத்திரை சென்றேன், சிவாலயங்கட்குப் போனேன்; அவைகளுமல்லாமல் நுட்பமாகிய இலைகளும் கிழங்குகளும்உண்டு நான் முன்னே பலவிதநோன்புகளும் மேற்கொண்டேன். பலவித தியானமுஞ்செய்தேன் எ - று.

இவ்வண முலப்பில் காலந் திரிந்துட லிளைத்தே னன்றி
வவ்விய பாவ நீங்கப் பெற்றிலேன் மறைக்கு மெட்டாத்
திவ்விய முணர்ந்தோ யின்றுன் திருமுகக் கருணை பெற்றேன்
அவ்விய மகன்றே னுய்வா னருளென வடியில் வீழ்ந்தான். 37

இ - ள்: இவ்வாறு அனந்தங்காலம் திரிந்து உடலிளைத்தேனல்லது என்னைப்பற்றிய பாவந்தொலையப்பெற்றிலேன். வேதத்துக்குமெட்டாத மெய்ஞ்ஞானப்பொருளையுணர்ந்தவரே இன்று தேவரீருடைய திருமுகக்கருணையைப் பெற்றேன். அதனால் பாவத்தை நீங்கினவனானேன். இனி நான் கடைத்தேறும்படிக் கருணைபுரியுமென்று அவர் பாதத்தில் வணங்கினான் என்றவாறு.

முனிவனு மிரங்கி யஞ்சேன் மொய்ம்மலர்த் தாரோய் முக்கண்
தனிமுத லொருவ னுண்டத் தகவினே னருளால் யார்க்கு
நனியிரு வினைக டேர்ப்பா னயந்தகோ கன்ன முண்டென்(று)
இனிதுணர்ந் தில்லை போலு மத்தலத் தியல்பு கேண்மோ. 38

இ-ள்: கவுதமரும் மனமிரங்கி நெருங்கிய பூமாலையணியுமன்னவனே! நீ அஞ்சாதே, முக்கண்களையுடைய ஒப்பற்ற முதலாகிய பரமசிவனொருவன் உண்டு. கருணையுள்ள அக்கடவுளருளால் மிகுந்த இருவினைகளைத் தீர்ப்பதற்கு யாவரும் விரும்புகின்ற கோகன்னமென்னும் தலம் உண்டென்று நீ அறிந்ததில்லையோ. அந்தத் தலத்தின் சிறப்பைக்கேள் எ - று.

போலும், மோ - அசைகள்.

மந்தர கிரியும் வெள்ளி மால்வரை யிடமும் போல
எந்தைவா ழிடமு மஃதே யிந்திர னயன்மால் விண்ணோர்
சந்திரா தித்தர் வேண்டுந் தவம்புரி யிடனுந் தானு
யைந்துபா தகத்தோ ரேனு மடையின்வீ டளிக்கும் வேந்தே. 39

இ - ள்: அரசனே! மந்தரகிரியில் வீற்றிருப்பதுபோலவும், பெரிய வெள்ளிமலையாகிய கயிலாயத்திடத்தில் வீற்றிருப்பதுபோலவும், நம் ஐயனாகிய இறைவன் வீற்றிருக்குந்தானமும் அந்தக் கோகன்னமாம். அத்தலமானது இந்திரன், பிரமன், திருமால், தேவர்கள், சந்திரன், சூரியன் என்னுமிவர்கள் வேண்டுந்தவஞ்செய்யுமிடமுந்தானாகிப் பஞ்சமகாபாதகரேயானாலும் தன்னிடத்து வந்து அடைவார்களானால் அவர்கட்கும் முத்தியைக் கொடுக்கும் என்றவாறு.

எத்தலஞ் சென்றுந் தீரா விடும்பை நோய் வினைக ளெல்லாம்
அத்தல நினைக்கு முன்ன ரகன்றிடு முடுக்கோ னாலும்
சித்திர பானுவாலு மகன்றிடாத் திமிர வீட்டம்
தத்துவாம் புரவி மான்றேர்த் தபனனு லகலு மாபோல். 40

இ - ள்: சந்திரன், அக்கினி இவர்களால் நீங்காத இருட்கூட்டமானது தாவிச்செல்கின்ற குதிரைகள் கட்டிய தேரையுடைய சூரியனால் நீங்குமாறுபோல எந்தத் தலத்தில் சென்றும் தீராத துன்பமுள்ள பிறவிநோயைத் தருகின்ற வினைகளெல்லாம் அந்தத் தலத்தை நினைக்குமுன்னமே நீங்கிவிடும் என்றவாறு.

ஒன்றுமுற் றுணரா ரேனு மொப்பில்சீர்க் கோகன்னத்தில்
சென்றொரு நிமிடம் வைகிற் சிறந்த வேறொரு தலத்தில்
கன்றுமைம் புலனு மோம்பிக் கற்பகா லஞ்செந் தீயில்
நின்றருந் தவங்கள் செய்யு நெடும்பயன் பெறுவர் கண்டாய். 41

இ - ள்: யாதொன்றையும் ஆராய்ந்தறியும் தன்மையில்லாதவர்களாயிருந்தாலும் ஒப்பற்ற பெருமையையுடைய கோகன்னத்திற் சேர்ந்து ஒரு

கணப்பொழுது தங்கியிருந்தால் சிறப்புமிக்க வேறொரு தலத்தில் ஐம் புலன்களையும் அடக்கிக் கற்பகாலம் அக்கினி நடுவிலிருந்து அரிய தவங்கள் செய்தலால் வரத்தக்க அழியாத பயனைப் பெறுவார்கள் எ - று.

வேறு

அப்பதி தன்னி லலங்கிலை வேலோய்
வைப்பென வாழ்வருண் மாபல லிங்கம்
ஒப்பில தாகி யுறைந்து விளங்கு
மெய்ப்படு காதை விரித்திடின் முன்னாள். 42

இ - ள்: ஒளிவிடாநின்ற தகட்டு வடிவுள்ள வேலாயுதமேந்தும் அரசனே! அந்தக் கோகன்னத்தில் புதையலிட்ட தனம் கண்டெடுத்தவனுக்கும் வாழ்வைத் தருவதுபோல் தன்னைத் தரிசித்தவர்கட்குப் பெருவாழ்வை அருளுகின்ற மாபல லிங்கமானது ஒப்பில்லாததாய் விளங்கிக் கொண்டிருக்கின்றது. அதனுடைய உண்மையான சரித்திரத்தை விவரித்துச்சொல்லில் முன்னாளில் எ - று.

இலங்கையின் மன்னன் இராவணன் வெள்ளி
விலங்கலின் மாதவ மெய்துதல் கண்டு
நலங்கெழு நாத னயந்தொரு லிங்கம்
வலங்கொள நல்கி மகிழ்ந்துரை செய்வான். 43

இ-ள்: இலங்கைக்கு மன்னவனாகிய இராவணன் வெள்ளிமலையாகிய கயிலாயத்தில் தவஞ்செய்துகொண்டிருந்ததை அருள்மிகுந்த இறைவன் கண்டு கருணைகூர்ந்து உறுதிகொள்ளும்படி ஒரு லிங்கங் கொடுத்தருளி மகிழ்ச்சியுடன் திருவாய் மலர்ந்தருளினர் என்றவாறு.

மான வரக்கநின் வாழ்பதி தன்னுள்
யானுத வுஞ்சிவ லிங்க மிருப்பின்
ஈன முருதவ் விலங்கை யமர்க்காய்
வானவர் மாலயன் வந்தென் மலைந்தென். 44

இ - ள்: பெருமையுள்ள இராவணனே! உன்னுடைய வாழ்வுள்ள இலங்கைப் பட்டினத்தில் இப்போது நாம் அருளிச்செய்த இந்தச் சிவ லிங்கமிருந்தால் இந்த இலங்கைப்பட்டினமானது ஒருகாலத்தும் அழியாது. இதுவுமல்லாமல் இந்திரன் முதலாய தேவர்களும் திருமாலும் பிரமனும் போர் செய்யவந்து எவ்விதப்போர் செய்தால்தான் என்ன, (அப்பட்டினத்துக்கு ஒரு குறைவும் நேரிடாது) என்றவாறு.

ஊர்தியி னேற லொழிந்தனை யேகிச்
சீர்பெறு நின்பதி சேர்த்துதி மற்ருேர்
பார்மிசை வைத்திடல் பார்மிசை வைத்தால்
ஓதரு லிங்க மெடுக்க வொணுதால். 45

இ - ள்: தேரின்மேலேறிக்கொண்டு போவதைவிட்டு நடந்து போய்ச் செல்வம் நிறைந்துள்ள உன்னூரில் இந்தச் சிவலிங்கத்தைத் தாபனஞ்செய். அவ்விடம்விட்டு வேறிடத்தில் வைக்காதே. வேருெரு பூமியினிடத்தில் வைத்தால் சொல்லுதற்கரியதாகிய சிறப்புள்ள இந்தச் சிவலிங்கம் மறுபடி யெடுக்கவொண்ணுது என்றவாறு.

என்ன நிகழ்த்தி யளித்த விலிங்கந்
தன்னெ டரக்கன் வழிக்கொடு சாரப்
பொன்னகர் வானவர் பொள்ளென மேவி
மன்னின ரைங்கர வாரண முன்னர். 46

இ - ள்: இவ்வாறு கூறிக் கொடுத்தருளிய சிவலிங்கத்தைக் கையில் ஏந்திக்கொண்டு இராவணன் வழிநடந்தான். அதையறிந்த பொன்னுலகத்திலுள்ள தேவர்கள் ஐந்து கரங்களையுடைய யானைமுகக்கடவுளாகிய விநாயகரிடத்தில் விரைவில் சென்று சேர்ந்தார்கள் என்றவாறு.

கைக்களி றேயிது கால மரக்கன்
அக்க ணிலங்கை யிலிங்க மமர்த்தின்
முக்கண ஞலு மழிப்பது முற்ரு
திக்கண மேயிடை யூறிழை யென்ருர். 47

இ - ள்: துதிக்கையையுடைய யானைமுகப்பெருமானே! இராவணனைவன் இப்போது இறைவன் கொடுத்தருளிய சிவலிங்கத்தைக்கொண்டு போய் அந்த விசாலமான இடமுள்ள இலங்கையில் தாபிப்பானேயானுல் முக்கண்களையுடைய அவ்விறையாலும் அழிப்பது முடியாது. (ஆகையால் இலங்கைக்குக் கொண்டுபோகவொட்டாமல்) இப்பொழுதே அதற்கு இடையூறு செய்தருள்க என்ருர்கள் என்றவாறு.

உம்பர் வருந்தி யுரைப்பது கேளா
நம்ப னளித்தகை யானன நாதன்
பம்பு புனற்கிறை வாபடர் செய்வோன்
வெம்பு வயிற்றை நிறைக்கென மேலோன். 48

இ - ள்: தேவர்கள் இவ்வாறு வருந்தி வேண்டிக்கொள்ளும் குறையை இறைவர் ஈன்றருளிய மூத்தநாயனுராகிய விநாயகர் நிறைந்துள்ள நீர்க்கிறையாகிய வருணனைப் பார்த்து, வருணனே! தேவர்கட்குத்

துன்பஞ் செய்யத்தக்கவனுகிய இராவணனுடைய வயிற்றில் நீர் நிறையச் செய்யென்று கட்டளையிட்டருள, அவ்வருணதேவனுனவன் என்றவாறு.

ஆமிஃ தென்ற வரக்க னகட்டில்
நீர்மிகு வித்தலி னீர்தொடு கிற்பான்
போமவன் முன்ன ரெதிர்ந்து புழைக்கை
மாமுகன் வந்தனன் மாமறை யோனய். 49

இ - ள் : அதைக்கேட்ட வருணதேவன் இக்காரியம் அடியேனு லாகுமென்று அந்த இராவணனுடைய வயிற்றில் நீர் அதிகரிக்கும்படிச் செய்ததினுல் நீர் தொட்டுக்கொள்ளுதற்குப் போகாநின்ற இராவணனுக்கு முன்னே துவாரம் பொருந்திய துதிக்கையையுடைய விநாயகரானவர் பெருமைபொருந்திய ஒரு அந்தணர் வடிவங்கொண்டு எதிராகவந்தார் என்றவாறு.

மல்லணி தோளவன் மாமறை யோயிவ்
வெல்லையி னீர்பெய் தியான்வரு காறும்
அல்லமர் கண்டனை யங்கை தரித்தே
நில்லென வந்த நெடுந்தகை யோனும். 50

இ - ள் : பலம்பொருந்திய தோளையுடைய இராவணனுனவன் எதிரில் வந்தவரைக் கண்டு பெருமையுள்ள பிராமணரே, நீர்தொட்டுக் கொண்டு இவ்விடத்தில் நான் வருமளவும் கருமைநிறந்தங்கிய கண்டத்தை யுடைய சிவவடிவாகிய சிவலிங்கப்பெருமானை உம்முடைய அழகிய கையில் வைத்துக்கொண்டிருமென்று சொல்ல, மிக்கபெருமையுள்ள அப்பிராமணர் சொல்கிருர் என்றவாறு.

இச்சிவ லிங்க மெடுத்திவ ணிற்பான்
நச்சிலை வேலவ நான்வலி யில்லேன்
முச்சொல் விளித்திடு முன்னனு காயேல்
கைச்சிவ னைப்புவி காட்டுவ னென்ருன். 51

இ - ள் : நஞ்சுபோலக் கொடுமையுள்ள தகட்டுவடிவமான வேலேந் தும் இராவணனே! நான் இந்தச் சிவலிங்கத்தை ஏந்திக்கொண்டிருக்கும் படியான சக்தியில்லாதவன், ஆதலால் மூன்றுசொல் அழைப்பதற்குமுன் நீ வராவிட்டால் என் கையிலிருக்குஞ் சிவலிங்கப்பெருமானைப் பூமியில் வைத்துவிடுவேனென்ருர் என்றவாறு.

செங்க ணரக்க னிசைந்தயல் சென்ருன்
வெங்கத வேழ விநாயகன் முக்கால்
இங்கணை வாயென வெய்தில னுக
அங்கையி லிங்க மகன்புவி வைத்தான். 52

இ - ள் : கோபக்குறியாகிய செம்மை நிறமுள்ள கண்களையுடைய இராவணன் அதற்கு உடன்பட்டு அப்புறம்போனான். வெவ்வியகோபங் கொள்ளும் யானைமுகத்தையுடைய விநாயகரானவர் இராவணா இங்கேவா, இராவணா இங்கேவா என மூன்றுதடவை அழைத்து அவன் வராமையாலே தமது அழகிய கையினிடத்தில் வைத்துக்கொண்டிருந்த சிவலிங்கத்தை விசாலமாகிய பூமியினிடத்தில் வைத்துவிட்டார் என்றவாறு.

அவ்வழி யோடி யடைந்த வரக்கன்
திவ்விய மண்மிசை சேர்ந்தது காணு
எவ்வ மிலாத விலிங்க மெடுத்தான்
வவ்வ லுருமையின் மாபல மென்ருன். 53

இ - ள் : அந்தவிடத்தில் அதிக விரைவாக ஓடி நீர்தொட்டுக்கொண்டுவந்த இராவணன் சிவலிங்கம் பூமியினிடத்தில் இருப்பதைக் கண்டு குற்றமில்லாத அந்தச் சிவலிங்கத்தை எடுத்தான். அது தன்னால் எடுக்கக்கூடாததாய் இருந்ததனாலே இது மகாபல லிங்கமென்ருன் எ-று.

காசி லரக்க னுரைத்தது கண்டே
பேசினர் மாபல வீச னெனும்பேர்
வீசிய கைகொடு மீட்டு மெடுத்தான்
நேச விலிங்க நிமிர்ந்தது நைந்தே. 54

இ - ள் : சிவநேசத்தில் பழுதில்லாத இராவணனானவன் சொன்னதையறிந்து அந்தச் சிவலிங்கத்துக்கு மாபல லிங்கமென்று பெயரிட்டார்கள். இராவணனானவன் மறுபடியும் நீண்ட கையினால் தன் பலங்கொண்டமட்டும் எடுத்தான். அப்படி எடுத்தபோது அன்பைத் தருகின்ற அந்தச் சிவலிங்கமானது குழைந்து நீண்டது என்றவாறு.

வேறு

ஆவினது செவிபோல வவ்விலிங்க நிமிர்வுறலான்
மேவினது கோகன்ன மெனும்பெயரவ் வியன்பதிக்குக்
காவனைய கைத்திரளாற் கனன்றரக்கன் மறைமதலைத்
தேவனது குடுமிமுடிப் புடைத்தனன்றன் சினமிகவால். 55

இ - ள் : அந்தச் சிவலிங்கமானது பசுவின் காதுபோல நீண்டபடியினாலே பெருமைமிக்க அத்தலத்துக்குக் கோகன்னமென்னும் பெயர் பொருந்தியது. இராவணனானவன் மனங்கொதித்துச் சோலையை ஒத்த இருபது கைகளாலும் பிராமணப்பிள்ளை வடிவுகொண்டிருக்கும் விநாயகப் பெருமான் சிகையுள்ள முடியில் தன் கோபமிகுதியினால் குட்டினான் எ-று.

புடைத்தவுட னுருத்தெழுந்து பொழிமதவாரணமுகத்தோன்
அடித்தலமு மணிமுடியு மகலிடமும் விசும்புமுறப்
படைத்தவுரு வெனநிமிர்ந்து பணைக்கரத்தா லிராவணனைப்
பிடித்துமணிக் கழங்கென்ன வெறிந்தெறிந்து பிடித்திடலும். 56

இ-ள்: குட்டினவுடன் மதநீரைப் பொழிகின்ற யானைமுகத்தை யுடைய விநாயகப்பெருமானுனவர் கோபித்தெழுந்து திருவடியும் அழகிய திருமுடியும் விசாலமுள்ள பூமியிடத்தும் விண்ணிடத்துமாகப் படைத்த உருவம்போல் ஓங்கிப் பனைபோன்ற துதிக்கையினுல் இராவணனைப் பிடித்து அழகிய கழற்சிக்காய்போல் பூமியில் விழவொட்டாமல் பலதடவை மேலெறிந்து பிடித்திடவும் என்றவாறு.

மறையோனென் றுறநினைந்து மடமையினு லீதிழைத்தேன்
பிறையோங்கு மணிமகுடப் பெருங்களிறே பிழைசெய்தேன்
இறையோனே பொறுப்பதுனக் கியல்பென்றென் றிரந்தேத்தப்
பொறையோடு முமைபுதல்வன் புவியிலரக் கனைவிடுத்தான். 57

இ-ள்: என்னுடைய பேதமையினுலே பிராமணப்பிள்ளையென் றெண்ணி இந்தக் காரியத்தைச் செய்தேன். பிறையணிந்தோங்கிய மணி மகுடத்தையுடைய பெரிய யானைமுக விநாயகமூர்த்தியே, அடியேன் பிழை செய்தேன். இறைவனே! பொறுத்துக்கொள்வது தேவரீர்க்குத் தகுதி யென்று பலதரஞ்சொல்லி யிரந்து துதிசெய்யப் பார்வதி புதல்வராகிய பெருமான் பொறுமையுடையவராய் இராவணனைப் பூமியில் விட்டார் என்றவாறு.

நிருதர்குலத் திகல்வேந்தே நினதுபிழை யாம்பொறுத்தற்
கிருபதுசெங் கரத்தாலு மெழின்மலரோ னுனக்களித்த
ஒருபதுமா முடித்தலையு முறப்புடைத்தி யெனவோடுங்
குருதிநிறங் கொளப்புடைத்துக் குனித்தாடி யுவப்பித்தான். 58

இ-ள்: பலமுள்ள அசுரகுலத்தரசனுகிய இராவணனே! நீ செய்த குற்றத்தை நாம் பொறுத்துக்கொள்வதற்கு அழகிய செந்தாமரை மலரில் இருக்கும் பிரமன் உனக்குக் கொடுத்த இருபது சிவந்த கைகளாலும் பெருமையுள்ள மகுடமணிந்திருக்கும் பத்துத்தலைகளிலும் பொருந்தக் குட்டிக்கொள்ளென்று சொன்னவுடன் சிவப்பு நிறங்கொள்ளும்படி குட்டிக் கொண்டு குதித்துக் குதித்துக் கூத்தாடி விநாயகமூர்த்திக்கு மகிழ்ச்சிவரச் செய்தான் என்றவாறு.

அன்னதுகண் டுவந்தருளி யைங்கரத்தோ னின்றுமுதல்
என்னதரு ணலம்வேண்டி னினைப்போல விருகரத்தால்
சென்னியுறப் புடைத்தவர்பாற் சிந்தைமகிழ் குவனென்று
மின்னின்மறைந் தனனிருதன் வேலையிலங் கையிற்புக்கான். 59

இ - ள் : அவன் குட்டிக்கொண்டு கூத்தாடுவதைக்கண்ட ஐந்து கரங்களையுடைய விநாயகமூர்த்தியானவர் மகிழ்வுகொண்டருளி இன்று முதல் எம்முடைய கருணை நலத்தை விரும்பினால் உன்னைப்போலத் தங்கள் இரண்டு கைகளாலும் தலையில் பொருந்தக் குட்டிக்கொள்ளுகிற வர்களிடத்தில் நாம் மனமகிழ்ச்சி அடைவோம் என்று சொல்லி மின்னல் மறைவதுபோல் மறைந்துவிட்டார். அதன்பின் அசுரனாகிய இராவணன் கடல் நடுவில் இருக்கும் இலங்கை நகர் போய்ச்சேர்ந்தான். எ - று.

தென்னிலங்கை யிராவணன்பாற் சிவனுதவத் திறலரக்கன்
பின்னிலங்கு மொருமருப்புப் பெருந்தகைதன் கைக்கொடுப்பப்
பொன்னிலங்கு முடியோயப் புகர்வேழம் புனலாடை
மின்னிலங்க வவ்விலிங்கம் விருப்பத்தா லமைந்ததால். 60

இ - ள் : பொன்னாற்செய்யப்பட்டு ஒளிமிக்க முடியணிந்த அரசனே! தெற்கிலுள்ள இலங்கை மன்னனாகிய இராவணனிடத்தில் இறைவன் கொடுக்க, வெற்றிமிக்க அவ்வசுரன் பின்பு ஒளிவிளங்கும்ஒற்றைக்கொம்பை யுடைய விநாயகரிடம் கொடுக்கப் பின்பு புகர் நிறந்தங்கிய யானைமுகத்தை யுடைய விநாயகர் கடலாகிய ஆடையணிந்த நிலமகள் விளங்கும்படி அந்தச் சிவலிங்கத்தை விருப்பத்துடன் தாபித்தார் என்றவாறு.

கோகன்ன னாலயத்திற் குலவுதிசை யிருநான்கு
நாகவணைத் துயினெடுமா னான்முகனிந் திரன்முதலா
மாகமுறு மமரர்குழா மருத்துவர்விஞ் சையர்முனிவர்
நாகருல கத்தவரே நாளுநிறைந் தடிதொழுவார். 61

இ - ள் : ஒளிவிடாநின்ற எட்டுத்திக்கிலுள்ள திக்குப்பாலகர்களும், பாம்பு அணையில் பள்ளிகொண்டுள்ள திருமாலும், நான்முகனும், இந்திரன் முதலாய சுவர்க்க உலகத்துள்ளவர்களும், மருத்துவர்களும், விஞ்சையர் களும், முனிவர்களும், நாகலோகத்தாரும் எந்நாளும் ஆலயத்தில் நிறைந்து கோகன்னநாதனுடைய திருவடிகளை வணங்குவார்கள் என்றவாறு.

வேறு

தும்புருநா ரதர்மகதி விபஞ்சிநரம் புளரவழி சுருதித் தேறல்
பம்புமொரு பால்வீணைத் தந்திரியு மிடருமொன்ருய்ப் பயின்ற கான
நம்புசதி முறைநிறுக்குங் கின்னரர்தம் பாடலெனு நவையி றீந்தேன்
கும்பமுலை யரம்பையர்த நடநவிலு மெய்யிலொன்றிக் குழையு மோர்பால். 62

இ - ள் : தும்புரு நாரதர் என்னும் முனிவர்கள் மகதி விபஞ்சி என்னும் வீணையின் நரம்பைத் தெறித்து வாசிப்பதினால் பெருகாநின்ற இசைத்தேனது ஒரு புறத்தில் நிறைந்திருக்கும். ஒருபுறத்தில் வீணைத்

தந்திரியினுதமும் கண்டத்தின் நாதமும் ஒன்றுபடக் கின்னரர்கள் பாடுகின்ற மாறுபடாத தாளப்பிரமாணத்தை வகுத்துக்காட்டும் குற்றமில்லாத மதுரமுள்ள தேன்போலச் சுவையுள்ள இசைப்பாடலானது பொற்குடம் போன்ற தனங்களேயுடைய அரம்பைமாதர்களாடுகின்ற கூத்தின் விகற்பத்தைக் காட்டும் அங்கங்கட்கு ஒத்துப் பேதமில்லாதிருக்கும் என்றவாறு.

ஆடுமுனிக் கணமொருபா லரன்புகழைக் கானத்தி லமைய வோதிப்
பாடுமருந் தவரொருபாற் பரமானு பூதியினிற் பழுத்து நெஞ்சங்
கூடுசமா தியரொருபாற் கோகன்ன நாயகனைக் கும்பிட் டேத்தி
வீடுபெறு வாரொருபால் வினையொழிப்பார்க் கத்தலம் போல் வேறுண்
[டாமோ. 63

இ - ள் : ஆனந்தத்தினுல் கூத்தாடும் முனிக்கூட்டங்கள் ஒருபுறத்திலிருப்பார்கள். பரமசிவன் புகழை இசையிற் பொருந்தும்படி சொல்லிப் பாடும் அரிய முனிவர்கள் ஒருபுறமிருப்பார்கள். சிவலீலையில் மனங்கனிந்து நிட்டை கூடியிருப்பவர்கள் ஒருபுறத்திலிருப்பார்கள். கோகன்னக் கடவுளாகிய பரமசிவனைக் கும்பிட்டுத் துதிசெய்து மோட்சமடையத்தக்கவர்கள் ஒருபுறத்திலிருப்பார்கள். ஆதலால் வினைகளையொழிப்பவர்கட்கு அத்தலத்தைப்போல் வேருெரு தலமுண்டோ? இல்லை என்றவாறு.

ஆயிடையிற் சிலையனைத்துஞ் சிவலிங்கம் புனல்யாவு மரியதீர்த்தம்
மேயநரர் யாவோரும் புத்தேளிர் மகளிரெல்லாம் விண்ணின்மாதர்
தூயபசு நிரையெல்லாம் வான்சுரபி பொழிலெல்லாஞ் சுரர்பூந்தாரு
மாயிருஞா லப்பரப்பிற் கோகன்னஞ் சிவலோக மன்னரேறே. 64

இ - ள்: பகைகொள்ளுமன்னவர்களாகிய யானைகளுக்குச் சிங்கம் போலிருக்கும் வேந்தனே! அந்தத் தலத்திலிருக்கும் கற்களெல்லாம் சிவலிங்கம். நீரெல்லாம் சிவதீர்த்தம். அவ்விடத்திலிருக்கின்ற மனிதர்கள் எல்லாரும் தேவர்கள். மாதர்களெல்லாரும் தேவமாதர்கள். பரிசுத்தமுள்ள பசுக்களெல்லாம் காமதேனு. சோலையெல்லாம் கற்பகச்சோலை. இத்தகுதியால் பெருமை பொருந்திய பெரிய இவ்வுலகத்தினிடத்தில் கோகன்னமானது சிவலோகமாம் என்றவாறு.

கூறுபல பெருந்தீர்த்தம் யாவுக்கு மேலாகும் கோடிதீர்த்தம்
பேறுதரு மிலிங்கங்க ளனைத்தினுக்கு மதிகமா பலலிங்கம்
வீறுதல மனைத்தினுக்கு மேலாகுங் கோகன்னம் வேந்தர்வேந்தே
தேறுவரோ வேறுமொன்றை விளக்கிருக்கத் தீத்தேடுந் தெருளிலார்போல்.

இ - ள்: அரசர்க்கரசனுகிய மித்திரசகராசனே! அத்தலத்திலிருக்கும் கோடி தீர்த்தமானது பலவாகச் சொல்லுகின்ற பெரிய எல்லாத் தீர்த்தங்களுக்கும் மேலானதாகும். மாபலலிங்கமானது மோட்சந்தரத்தக்க எல்லா

இலிங்கங்கட்கும் மேலானதாகும். கோகன்னமானது விளங்குகின்றஎல்லாத் தலங்களினும் சிறப்புடையதாகும். ஆகையால் விளக்கிருக்க நெருப்புத் தேடும் அறிவில்லாதவர்கள்போல் விவேகமுள்ளவர்கள் வேறொரு தலத்தைத் தேடுவார்களோ? தேடார்கள் என்றவாறு.

இத்தகைய நகர்மேவி மாகசதுர்த் தசியினர னிரவின்வைகி
யத்தனைமா பலவிலிங்க நாயகனை விதிமுறையா மருச்சித் திந்நாள்
வித்தகனுஞ் சனகன்முயல் வேள்விக்கு மிதிலைநகர் மீளுங்காலை
சித்தமுறும் இறும்பூது கண்டனமித் திரசகனே செப்பக்கேண்மோ. 66

இ - ள்: இத்தகைய பெருமையுள்ள கோகன்னத்திற்போய் மாசி மாத சதுர்த்தசியாகிய சிவராத்திரியிலிருந்து நம்முடைய அத்தனாகிய மாபலலிங்கநாயகனை வேதமுறைப்படி யாம் அருச்சனைசெய்து இன்றைய தினம் ஞானவானாகிய சனகராசன் செய்கின்ற யாகத்தைக் குறித்து மிதிலைநகர்க்கு வரும்போது ஞாபகத்தில் வைக்கத்தக்க ஓர் அதிசயங்கண்டோம். மித்திரசகனே! அதனைச் சொல்லக்கேட்பாயாக என்றவாறு.

மோ - முன்னிலையசை.

சிவதலப்பெருமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம்—122

மூன்றாவது

சிவராத்திரியில் கன்மாடபாதராசன் முத்திபெற்ற அத்தியாயம்

என்றுமுனி கூறிடலு மிகல்வேந்த னகமகிழ்வோ டிறைஞ்சி யேத்தி
நன்றுபுதி தப்புதுமை யுரைத்தியென வுரைத்திடலு நவைதீர் வேதத்
தொன்றியநா வினனுய பெருந்தவனுங் கண்டபரி சுரைப்பே னென்னத்
துன்றுநறு ந்தொடைப்புயத்து மன்னவனை முகநோக்கிச் சொல்லி னானே. 1

இ-ள்: கவுதமமுனிவரானவர் இவ்வாறு கூறவே வலிமிக்க அரச னானவன் மகிழ்வுடன் பணிந்து போற்றி மிகப்புதிய அதனைக் கூறுமாறு கேட்கவும், குற்றமற்ற வேதங்களிற் பழகிய நாவினையுடையவராகிய மேன்மையுடைய அம்முனிவர் தான் கண்ட முறைமையைச் சொல்லுகின் றேன் என்று நல்ல மணம்தங்கிய பூமாலையணிந்த புயங்களையுடைய அவ் வேந்தனை நோக்கிக் கூறுகின்றார் என்றவாறு.

அருங்கானில் வருந்துயரான் மலர்த்தடத்து ணீரருந்தி யதன்றீ ரத்தோர்
மருங்கால நிழலடைந்து சூழ்ந்தவருந் தவரோடும் வதிந்த காலைக்
கருங்காகம் போனிறமுங் காயமெலாம் புழுநெளியக் கவிந்த புண்ணும்
சுருங்காத குட்டமுதற் பலநோயு முடையாள்மெய் துளங்கு நீராள். 2

இ-ள்: சொல்லுதற்கரிய காட்டில் நடந்துவந்த இளைப்பினால் ஒரு மலர் நிறைந்த குளத்தினிடத்தில் நீருண்டு அதன்கரையில் ஒருபக்கத்தி லிருக்கும் ஆலமரத்தினிழலில் சேர்ந்து நம்மைச் சூழ்ந்த அரிய முனிவர் களுடன் நாம் இருந்தபோது கரியகாகம்போல நிறமும் உடலெங்கும் புழுவா னது நெளியும்படியுள்ள புண்ணும் குறையாத குட்டமுதலாகிய வியாதியும் உடையவளாயும் அவைகளால் உடல் நடுங்கும் தன்மையுடையவளாயும் என்றவாறு.

புண்டாரை முடைநாற வணங்குறுவாள் வெப்புநோய் புகையச் சூலை
கொண்டாவி வருந்துவாள் கண்ணில்லா ளொருபுலைச்சி கொடிய மூப்பாள்
கண்டோர்தங் கண்புதைப்ப வழிவருவா ளுளைந்தெழுந்த கயநோய் சீற
விண்டோயு மாதவத்தா லெரிகொளுந்து நிலத்தினிடை வீழ்ந்தாண்
[மன்னோ. 3

இ-ள்: புண்களிலிருந்து ஒழுகாநின்ற இரத்தத்தாரையானது துர்க்கந்தம் நாற வருத்தமடைகின்றவளாயும், சுரநோய் மேலெழுந்து அனல்வீச அதனுடன் சூலைநோய்கொண்டு உயிர்வருந்துகின்றவளாயும், பார்வையில்லாதவளாயும், கொடிய கிழத்தன்மையுள்ளவளாயும், பார்த்தவரெல்லாம் அருவருப்பினால் தங்கள் கண்களை மூடிக்கொள்ளும்படியாக வழிநடந்து வருகின்ற ஒரு இழிகுல மகளானவள் வருந்தி அதிகரித்த கயநோவானது துன்புறுத்த விண்ணில் தோன்றிய சூரியவெப்பத்தால் தீயாய்ச்சுடுகின்ற பாலைநிலத்தினிடத்தில் விழுந்தாள் என்றவாறு.

வீழ்ந்தவுடன் புலைமுதியா ளாவியுடல் விடுமவத்தை விதங்க ளெல்லாஞ்
சூழ்ந்தவருந் தவரோடுங் கண்டயனின் றனமாங்கோர் சோதி வானம்
போழ்ந்தொளிர்பொன் விமானமுட னிழிந்துபல கணநாதர் புவியிற் போதத்
தாழ்ந்தவரை யடிவணங்கி வரவென்கொ லென்னவவர் சாற்றலுற்றார். 4

இ-ள்: விழுந்தவுடன் அந்தப்புலைச்சியாகிய கிழவியின் உயிரானது உடலைவிட்டு நீங்கும்போதுண்டான அவத்தையின் வகைகளையெல்லாம் நம்மைச் சூழ்ந்திராநின்ற முனிவர்களும் நாமும் பார்த்துக்கொண்டு அயலிலிருந்தோம். அவ்வாறிருக்கும்போது அவ்விடத்தில் இருளைநீக்கி ஒளியைத் தருகின்ற அழகிய ஒருபொன் விமானமுடன் விண்ணினின்றிழிந்து பல கணநாதர்கள் மண்ணுலகில் வர நாம்கண்டு அவர்களைப் பணிந்து நீர் இங்குவரக் காரணம் என்ன என்று வினவ, அவர்கள் கூறலானார்கள் என்றவாறு.

மலைமகளை யொருபாகம் வைத்தபிரா னேவமணி மானமீதில்
புலைமகளைக் கொடுபோவான் அணைந்தனமென் றாரென்ற போழ்தின் வானின்
றிலகுசுடர் விமானத்தை யிவளடைதன் மறைவேள்வி யியற்று சாலை
யுலகினிழி புடைக்குரைவாய் ஞமலிபுகுந் தேறுமதை யொக்கு மாதோ. 5

இ-ள்: மலையரையன் மகளாகிய பார்வதியை இடப்பாகத்திலுடைய பரமன் கட்டளைப்படி இரத்தினங்கள் பதித்த பொன்விமானத்தின் மேல் இவ்விழிமகளை அழைத்துச்செல்ல வந்தோமென்றார்கள். அவர்கள் அவ்வாறு கூறியபோது விண்ணுலகிலிருந்து வந்து ஒளிவிளங்கும் இவ்விமானத்தில் இவளேறுவது உலகிலிருக்கும் உயிர்ப்பிராணிகளுள் மிக இழிவுடைய குரைக்கும் வாயுள்ள நாயானது வேதமுறைப்படி செய்கின்ற வேள்விச்சாலையிற் சென்று சுவர்க்கமடைய விமானத்திலேறுவதை ஒப்பாகும் என்றவாறு.

எனப்புகன்றேம் பின்னரும்பார்த் திழிபிறப்பி
னாள்கண்கள் இரண்டு மில்லாள்
தினைத்துணையுஞ் சிவனிலையுஞ் சிவனடியார்
நிலையுமுளஞ் சிந்தித் தில்லாள்

விணைத்திறனல் மிகுபிணியா ளெழுபிறப்பி
னல்விணையின் விழைவொன் றில்லாள்
தனைச்சிவலோ கத்தினிடைக் கொடுபோவான்
சமைந்ததுவென் சாற்றுகென்ன. 6

இ - ள்: என்று சொல்லிப் பின்னும் அவர்களைப் பார்த்து இழிவாகிய பிறப்பினையுடையவளும், இரண்டு பார்வைகளும் இல்லாதவளும், இறைவரது நிலையையும் சிவனடியார்கள் நிலையையும் தினையளவு பொழுதாவது எண்ணாதவளும், வினைவலியால் மிக்க பிணியுடையவளும், எழுவகைப் பிறவியிடத்தும் புண்ணியத்தில் எவ்வளவும் விருப்பமில்லாதவளும் ஆகிய இவளை நீங்கள் சிவலோகத்துக்குக் கொண்டுபோகச் சம்மதித்து வந்த காரணம் என்ன சொல்லுங்களென்று கேட்க என்றவாறு.

எழுவகைப் பிறப்பாவன:- தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகியவைகளாம்.

தாவரம்:- மலை, மரம் முதலாய அசையாப்பொருள்.

இருந்தவத்தின் மாமுனியே யிப்புலைச்சி
திறங்கேட்கி னிறும்பூதெய்துந்
திருந்துபுகழ்க் கேகயநாட் டொருமறையோ
னளித்தவருஞ் செம்பொற் பாவை
சரிந்தமலர்க் கருங்குழலாள் சவுமினியென்
னும்பெயராள் சம்ப ராரி
வருந்துவனப் பிரதியெனு மணங்கினையு
மழகழிக்கும் வனப்பின் மிக்காள். 7

இ - ள்: பெருமைபொருந்திய தவத்தினல் மேம்பட்ட முனிவரே! இந்தப் புலைச்சியினுடைய செய்திகளைக் கேட்கில் ஆச்சரியமுண்டாகும். நல்லபுகழையுடைய கேகய நாட்டிலிருக்கும் ஒரு பிராமணன்பெற்ற கிடைத்தற்கரிய செம்பொன்னினற் செய்யப்பட்ட பதுமையொத்தவளும், பூமாலை அணியப்பட்டுக் கருமைநிறமுள்ள தாழ்ந்த கூந்தலையுடையவளும், சவுமினி யென்னும் பெயரையுடையவளுமாய் மன்மதன் கண்டு மோகமடைந்து வருந்துதற்கேதுவாக அழகுள்ள தெய்வமகளாகிய ரதியினுடைய அழகுங் கெடத்தக்க அழகிலும் மிகுந்தவளுமாவாள் என்றவாறு.

கொங்கையடி கொண்டிளகிப் பணைத்திறுகி
யிறுமாந்து குரும்பை யேய்ப்ப
மங்கையெனும் பருவமிவ ளெய்துதலு
மிவடாதை மனத்தி னேர்ந்து

பங்கயமா முகத்தாளை யொருமறையோன்
விதியின்விழாப் பண்ண நல்கி
வெங்கயமும் பிடியுமெனக் கலவி நுகர்ந்
திருவோரும் விழைய நாளில். 8

இ - ள்: இத்தகைய அழகுள்ளவள் இரண்டு தனங்களும் அடி பரந்து இளகலாய்ப் பருத்து இறுகிப் பூரித்துத் தென்னங் குரும்பையை யொக்கும்படியான மங்கைப் பருவத்தை யடைந்தமாத்திரத்தில் இவள் தந்தை இனி மணஞ்செய்விக்க வேண்டுமென்று மனதில் உணர்ந்து செந் தாமரை மலர்போன்ற முகத்தையுடையவளை ஒரு பிராமணன் வேதவிதிப் படி மணஞ்செய்துகொள்ளக் கன்னிகாதானமாகக் கொடுக்க, வெவ்விய ஆண்யானையும் பெண்யானையும் இணைபிரியாமல் கூடிக்கொண்டிருப்பது போல இவ்விருவரும் கலவியின்பம் அனுபவித்துக்கொண்டு விருப்பமுற் றிருக்கும் நாளில் என்றவாறு.

பெண்கட்குரிய பருவங்கள்:- பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் ஏழுமாம்.

பேதை 5 வயது முதல் 7 வயதுவரை. பெதும்பை 8 முதல் 11 வரை. மங்கை 12 முதல் 13 வரை. மடந்தை 14 முதல் 19 வரை. அரிவை 20 முதல் 25 வரை. தெரிவை 26 முதல் 31 வரை. பேரிளம்பெண் 32 முதல் 40 வரை.

தன்னுயிர்போ னீங்காத கொழுநனுக்கு வினைதுரப்பச் சார்ந்த நோயால்
இன்னுயிர்விட் டவனிறப்பத் துணையிழந்த வன்றிலென விரங்கி மாழ்கிக்
கன்னன்மொழிக் குயிலனையாள் கைம்மையுற்ற பின்னரும்வெங் காம [நோயான்
மன்னுபெரு நிறையொருவிக் கரவின்கண் யாவரையு மருவு நாளின். 9

இ - ள்: தன்னுயிர்போல விட்டுப் பிரியாத கணவனுக்கு ஊழ் வினையால் நேரிட்ட வியாதியினால் இனிய உயிரைவிட்டு அவன் இறந்து போகவே துணையாகிய ஆண் அன்றிற் பறவையைப் பிரிந்த பெண் அன்றில் இரங்குவதுபோலக் கரும்பையொத்த மதுரமுள்ள சொல்லினால் குயில் போன்றவள் அழுது சோர்ந்து கைம்பெண்ணான பின்பும் வெவ்விதான காமநோயினால் நிலைபெற்ற பெரிய கற்பினை நீங்கிச் சோரத்தனமாக எல்லா ரையும் புணர்ந்துகொண்டிருக்கும் நாளில் என்றவாறு.

வேறு

உற்றா ரயலா ருரைக்குமுரை கொள்ளாள்
கற்றார் முதியார் கழறுவதுங் கைக்கொள்ளாள்
முற்றா முகிழ்முலைப் பான்முற்றி முகங்கறுப்பப்
பற்றா நுசுப்பாள் கருப்பம் படைத்தனளே. 10

இ - ள் : இவள் விபசரிப்பதை அறிந்து உறவினரும் அன்னியரும் நீ நடக்கும் நடத்தை சிறந்ததல்லவென்று கூறும் வார்த்தையைக் கேளாதவளாயும் கல்வி கற்றவர்களும் முதிர்ந்த வயதுள்ளவர்களும் கூறும் சொல்லை ஏற்றுக்கொள்ளாதவளாயும் தன் எண்ணப்படி நடந்து, உண்டென்று உறுதிசெய்து குறிக்கக்கூடாத நுட்பமாகிய இடையையுடையவள் முதிர்ந்து சாயாமல் குவிந்திருக்கும் தனங்கள் பால் நிறைந்து காம்புகள் கருமைநிறம் கொள்ளும்படி கருப்பம் அடைந்தாள் என்றவாறு.

அங்கதுகண் டுற்ரு ரயலா ரிவர்குழுமி
யெங்குலத்துக் கெல்லா மிருந்துபழி யீட்டுவாள்
தங்குதலிவ் வூர்க்குத் தகாதென்று நீக்குதலும்
செங்கண் புனல்கொழிப்பச் சேயிழையாள் கான்சென்ருள். 11

இ - ள் : இந்த மாதானவள் கருப்பமடைந்ததை அறிந்து சுற்றத்தாரும் அயலாருமாயுள்ளவர்கள்கூடி இவளிவ்விடத்திலிருந்து நமது குலத்துக்கெல்லாம் பழியூட்டுபவளாயிருக்கிருள்; ஆதலால் இவ்வூரிலிருப்பது தகாதென்று நீக்கிவிடவும், கண்கள் நீர்சொரியும்படி அழுதுகொண்டு காட்டிற்குப் போய்விட்டாள் என்றவாறு.

அத்தலையோர் வேளாண் மரபி லடுகாளை
சித்தமயல் கொண்டவடோள் சேர்ந்துமனை யிற்செறிப்பப்
புத்தமுத மென்னத் தணிய னிணப்புழுக்கல்
துய்த்தங் கவன்மார்பிற் ருேய்ந்துநல னுண்டிருந்தாள். 12

இ - ள் : அவ்விடத்தில் வேளாளகுலத்தனுகிய துர்நடத்தையுள்ள ஒரு விடபுருடன் கண்டு மனதில் காம மயக்கங்கொண்டு அவள்தோளைச் சேர்ந்து தன் வீட்டில் கொண்டுபோய் வைத்துக்கொள்ள, புதிய அமுதம் போல் கள்ளும் இறைச்சியுடன் சோறும் உண்டு அவன் மார்பிற்சேர்ந்து கலவியின்பம் அனுபவித்துக்கொண்டிருந்தாள் என்றவாறு.

பண்டைக் குலனெருவி வேளாளன் பன்னியாய்க்
கண்டின் சுவைக்கலவிக் காமபா னுதியெல்லாம்
உண்டின் புறுமகப்பே றுற்றுநெடு நாட்கழிப்பத்
திண்டிறலான் வேற்றூர்க் ககறலுமிச் சேயிழையாள். 13

இ - ள் : தான் பிறந்த பிராமணகுல ஆசாரத்தைவிட்டு வேளாளன் மனைவியாய் வெல்லக் கட்டியைப்போல இனிய சுவையைத்தருகின்ற கலவிக்குரிய அதரபான முதலாயவைகளை அனுபவித்து, இன்புறத்தக்க குழந்தைகளையும் பெற்று, நீண்டகாலம் கழியுமாறு இருக்கும்போது ஒருநாள் மிக்க பலமுள்ள அந்த வேளாளனுனவன் அயலூருக்குச் செல்லவும் இந்தப் பெண்ணுனவள் என்றவாறு.

மற்றொருவ ரில்லா மனையிற் றமியளாய்
அற்றையிருட் கங்குல்வர வாற்றாது காமத்தீ
யுற்று மதுவருந்தி யூன்றடிதின் பான்விரும்பிப்
பொற்றொடியா ளந்நிலையோர் தோழத் திடைபுகுந்தாள். 14

இ - ள் : வேறொருவருமில்லாத வீட்டில் தான்மட்டும் தனியளாயிருந்து அன்று இருள்சூழ்ந்த இரவுவரச் சகித்துக்கொள்ளமாட்டாமல் காமாக்கினியைப் பொருந்தி, மதுபானஞ்செய்து மாமிசம் தின்னவும் இச்சைகொண்டு அந்தவீட்டின் ஒருபுறத்திருக்கும் ஒரு தோழத்திற் சென்றாள் என்றவாறு.

வெள்ளாடுஞ் சேதா வெடிவாற் குழக்கன்றும்
உள்ளா தருந்து மதுவா லுணர்வழிந்து
தள்ளாடி யான்கன்றைப் பற்றித் தலையரியாப்
புள்ளாடு வேற்கண்ணா ளில்லிற் கொடுபுகுந்தாள். 15

இ - ள் : பருந்து காக்கை முதலாகிய பறவைகள் கண்டு மேலே வட்டமிட்டுக்கொண்டு பறக்கத்தக்கதாய்ச் சுத்த வீரன்கையிலிருக்கும் வேலாயுதம்போல நீட்சியுங் கூர்மையுமுள்ள கண்களையுடையவள் கள் உண்டவெறியால் அறிவழிந்து தள்ளாடிக்கொண்டுபோய் வெள்ளாடு இது வென்றும் கட்டைவாலுடைய பசுவின் இளங்கன்று இதுவென்றும் பகுத்துப்பாராமல் ஒரு பசுவின் கன்றைப்பற்றி அதன்தலையை அரிந்து வீட்டில் கொண்டுவந்தாள் என்றவாறு.

வெந்த தடிநுகர்வா னெண்ணி விளக்கொளியின்
முந்து தசையரிய வேண்டி முயல்போதின்
அந்திப் பிறைநுதலா ளான்கன் றெனவறிந்து
சிந்தித் தயர்ந்து சிவசிவவென் றோதினாள். 16

இ - ள் : அந்திப்பொழுதில் தோன்றுகின்ற பிறையையொத்த நெற்றியையுடையவள் வெந்த மாமிசத்தைத் தின்னவெண்ணி, ஒளிவிளங்கும் விளக்கு வெளிச்சத்தில் அந்தப்பசுவின் கன்றை அரியவிரும்பி எத்தனிக்கும்போது, பசுவின் கன்றென அறிந்து தகாதகாரியஞ் செய்தோமே என்று நினைத்துச் சோர்வையடைந்து சிவசிவ என்று சொன்னாள் எ - று.

கைதவமே செய்யு மதுவின் களியென்று
வெய்துயிர்த்து முப்புரமும் வேவக் குறுமூரல்
செய்தபெரு மானடியை யுள்ளந் தியானிப்ப
எய்துபட ராலங் கிருகடிகைப் போதிருந்தாள். 17

இ - ள் : மதுவின் மயக்கமானது துன்பத்தையே செய்யுமென்று எண்ணி நேரிட்ட வருத்தத்தினுல் பெருமூச்சு விட்டுக்கொண்டு திரிபுரங்கள் அழியும்படி புன்னகை செய்த இறைவனுடைய திருவடிகளை மனமானது தியானஞ்செய்யக் கன்றை அரிய உட்கார்ந்த இடத்தில் இரண்டு நாழிகை வரைக்கு மிருந்தாள் என்றவாறு.

ஊனருந்தும் வேட்கைதனை யூழின்வலி துரப்பக்
கானிருந்த கோதையந்தக் கன்றின் றசைமீட்டுந்
தானரிந்து நல்ல கருனை சமைத்தருந்தி
யேனை யெலும் புந்தசையும் வீதியினிட் டீதிசைப்பாள். 18

இ - ள் : மாமிசந்தின்னும் இச்சையை விதிவலியானது எழுப்ப வாசனை தங்கிய பூமாலை அணிந்திருப்பவள் அந்தப் பசுவின் மாமிசத்தை நீக்கிவிடாமல் பின்னும் அறிந்து நல்ல பொரிக்கறியாகச் சமைத்துண்டு, உண்பதற்குதவாத எலும்பையும் மாமிசத்தையும் தெருவிலே கொண்டு வந்து போட்டுப் பின்வருமாறு சொல்லுகின்ருள் என்றவாறு.

அந்தோ கொடுவினையே னாவினிளங் கன்றுதனை
வந்தோ ருழுவை வதைத்துண் டொழிந்ததிது
நந்தோ ரணமறுகி னம்மினத்தீர் காண்மினென
நொந்தோல மிட்டு நுணுகிடைபோல் வாடினுள். 19

இ - ள் : அய்யோ? கொடிய பாவியாகிய என் பசுவினிளங்கன்றை ஒரு புலியானது வந்து கொன்று உண்டு போய்விட்டது. இக்கொடுமையைத் தோரணங்கள் கட்டியிருக்கும் நமது வீதியிலிருக்கும் நம்மினத்தவர்களே பாருங்கள் என்று வருந்தி ஓலமிட்டுத் தன்னுண்ணிய இடை வாடியிருப்பதுபோல வாடினுள் என்றவாறு.

அவ்வளவிற் கங்குல் கழிய வவள்கேள்வன்
செவ்வியிளங் கன்றிறந்த தீவினையைக் கேட்டேங்கி
நவ்விவிழிச் சேயிழைமாட் டெய்தி நடுநடுங்கி
வெவ்வினையா ளோடு மனையகத்தில் மேவினுன். 20

இ - ள் : அவ்வாறு அவள் வாடுங்காலத்தில் இரவு நீங்கியது அது நீங்கியவுடன் அவள் கணவன் வந்து அழகிய இளங்கன்று இறந்து போன பாவத்தைக்கேட்டு இரங்கி மான்பார்வைபோன்ற பார்வையையுடையவளிடத்தில் சென்று அப்பாபத்திற்காக நடுநடுங்கி அக்கொடியவளோடு வீட்டினிடத்திருந்தான் என்றவாறு.

ஆங்க ணிருவோரு மதனு மணங்குமெனத்
தாங்கரிய வின்பந் தணவா தருந்துநாள்
பூங்குழலா ளுளிழப்பப் போமா ருயிர்பிணித்து
வீங்குபுயத் தூதுவர்போய் வெங்கூற்றின் முன்விடுத்தார். 21

இ-ள்: அவ்விடத்தில் அவ்விருவரும் மதனும் ரதியும்போல் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல் பிறரொருவர்க்குக் கிடைப்பதற்கரிய கலவி இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் நாளில் பூவணிந்த குழலையுடையாளுக்கு வாழ்நாள் முடிவாகிவிட அவள் உடலைவிட்டுப் பிரிகின்ற உயிரைப் பாசத்தினல் கட்டிக் கொண்டுபோய் பருத்த தோள்களையுடைய யமதூதர்கள் கொடிய தோற்றமுள்ள யமனெதிரில் விட்டார்கள் என்றவாறு.

கண்ட நமன்பேதை முகநோக்கி யிக்கயத்தி
பண்டிழைத்த வல்வினைதா னூன்முகத்தாற் பார்த்தெண்ணிச்
சண்டநிர யம்புகுத்தத் தக்காய்நீ யல்லைநெறி
விண்ட புலைமகளாய் மேதினியில் மேவு கென்ருன். 22

இ-ள்: தூதுவன் கொண்டுவரக் கண்ட யமன் அவள் முகத்தைப் பார்த்து இந்தக் கீழ்மையுள்ள புலைச்சி முன்செய்த வலியவினைகளைச் சாத்திரத்தின் முன்னிலையில் விசாரித்தெண்ணிக் கொடுமையுள்ள நரகத்தில் விழத் தக்கவளல்லை; ஆகிலும் முறைமைநீங்கிய புலையர் மகளாய் பூலோகத்திற் பொருந்தக்கடவை என்று சொன்னுன் என்றவாறு.

பசுவின் கன்றை அரிந்தபோது சிவசிவ என்று சொன்னதினல் நரகத்தில் விழுத்தத்தக்கவளல்ல என்றது.

அவ்வண்ணந் தண்டத்தான் கூறுவது கேட்டவளு
மைவண்ண மேனியளாய் வாட்கண் ணிலளாகி
இவ்வண்ணம் பாரி னெழிலிழந்தா ரில்லை யெனச்
செவ்வண்ண மின்றிப் புலைமகளாய்ச் சென்றுதித்தாள். 23

இ-ள்: யமதருமராசன் அவ்வாறு சொல்ல அதைக்கேட்ட அவள் கருமைநிற முள்ளவளாயும் ஒளிபொருந்திய பார்வை யில்லாதவளாகியும் இப்படி அழகிழந்தவர்களில்லை யென்று கண்டவர்களெல்லாம் சொல்லும் படி நல்ல அழகில்லாமல் நீசப்பெண்ணுகை வந்துபிறந்தாள் என்றவாறு.

அன்னவளை யின்ருேர் ஞமலி யயின்றமிச்சில்
கன்னியிளஞ் சேதாவி னூனுேடுங் கள்ளூட்டி
மன்னிவளர்க்க வளர்வதெலாம் வன்பிணியாய்த்
துன்னி வளரமயத் தீன்ருேருந் துஞ்சினர். 24

இ - ள் : அத்தன்மை யுடையவளைப் பெற்றவர்கள் நாய்தின்று மிகுதியான எச்சிலுனும் மிகுந்த இளமையாகிய பசுவின் கன்றிறைச்சியும் கள்ளும் ஊட்டி ஆசைபொருந்தி வளர்க்க வளர்வதெல்லாம் தீராப்பிணியாய்ப் பொருந்தி வளருங்காலத்தில் பெற்றவர்களும் இறந்தார்கள் எ-று.

அக்காலை நோயா லயர்ந்து மணஞ்செய்யத்
தக்கா ரிலராக வெம்பசிநோய் தாங்கலளா
யெக்கால மும்புலையர் சேரிதொறு மேற்றுண்ணப்
புக்காவி தேய்வாளை மூப்பும் பொருந்திற்றே. 25

இ - ள் : தாயும் தகப்பனும் இறந்தபின்பு முன்னமே தனக்கு நேர்ந்திருக்கிற வியாதியினல் சோர்வடைந்து தன்னை மணஞ்செய்துகொள்ளத் தக்கவர்களும் இல்லாமையாக நேரிட கொடிய பசியாகிய நோயைத்தாங்க மாட்டாதவளாய் எப்பொழுதும் புலையர் சேரிதோறும் இரந்துண்ணச் சென்று உயிர் மெலிகின்றவளைக் கிழத்தன்மையும் பொருந்தியது எ - று.

அத்தகைய நோயாலு மூப்பாலு மல்லலுற்றுச்
சித்தம் பசிகவற்றத் தேய்ந்த நடையினளாய்
முத்தன் சிவநிசியிற் கோகன்ன முந்துறுவார்
தத்தங் குழுவோடு மந்நகரில் சார்ந்தனளே. 26

இ - ள் : அத்தகைய நோயாலும் கிழத்தன்மையாலும் துன்பம் பொருந்திப் பசியானது மனத்தை வருத்தப்படுத்தச் சோர்ந்த நடையை யுடையவளாய்ப் பரமசிவனுக்குரிய சிவராத்திரியில் கோகன்னத்துக்குச் செல்லுகின்ற கூட்டத்தாருடன் தானும் அத்தலத்துக்குப்போனுள் எ-று.

தீய பசியா லொருமறுகைச் சேர்ந்திருந்து
தூயவிழி யில்லேற் களித்திடுமின் சோறென்னக்
கூய குரல்கேட் டொருவன் கொழுங்களியன்
ஏயுமவள் கைத்தலத்தின் வில்வமுண வென்றளித்தான். 27

இ - ள் : கோகன்னத்திற்போனவள் ஒரு வீதியிற் போயிருந்து கொண்டு பரிசுத்தமான கண்களில்லாத எனக்குச் சோறு கொடுங்கள் என்று கொடிய பசியினல் கூவிய குரலைக்கேட்டு மிக்க இறுமாப்புள்ளவனுகிய ஒருவன் தன் கையிலிருந்த வில்வத்தைக் கூவிக்கொண்டிருப்பவள் கையினிடத்தில் சோறென்று கொடுத்தான் என்றவாறு.

உண்ண வதையுணவென் றோர்ந்தா ளுணவன்மை
எண்ணி யயலே யெறிந்ததழை காளியிட
நண்ணு பழைய சிவலிங்க நாயகன்றன்
வண்ண முடியின் மரகதம்போல் வாய்ந்ததுவே. 28

இ-ள்: அவள் அவன் கொடுத்த வில்வத்தைச் சோறென்று உண்ண நினைத்துப் பின்பு சோறல்லவென்று தெரிந்துகொண்டு பக்கத்தி லெறிந்துவிட வில்வமாகிய தழையானது பார்வதி தேவியார் பொருந்திய இடப்பாகத்தையுடைய பழமையாகிய சிவலிங்கப்பெருமானது அழகிய திருமுடியில் மரகதமணிபோலப் பொருந்தியது என்றவாறு.

அற்றை முழுநாளு முணவிலளா யவ்விரவில்
பற்று துயினீத்துப் பனித்தண் புனலுரேய்ந்த
பெற்றியளெண் ணுதெறிந்த வில்வமே பிஞ்ஞகன்றன்
பொற்புநிசிப் பூசனையே போன்றதிரு ணீங்கிற்றால். 29

இ-ள்: அவளெறிந்த வில்வம் சிவலிங்கப்பெருமான் முடியில் தங்கினதுமல்லாமல் அன்றுமுழுவதும் உணவில்லாதவளாய் அந்தச் சிவ ராத்திரியில் ஒருபோதும் நீங்காத நித்திரையை நீங்கிக் குளிர்ச்சி பொருந் திய பனியாகிய நீரில்படிந்த முறைமையையுடைய அவள் இன்னதென எண்ணாமல் எறிந்த வில்வமே பரமசிவனுடைய அழகுள்ள சிவராத்திரி பூசை அருச்சனைபோலாகியது. இராப்பொழுதும் நீங்கிற்று என்றவாறு.

வெய்ய பசிமூப்பு நோயிவற்றான் மெய்வருந்த
உய்யு முணவிலளா யோர்புலேச்சி தோள்பற்றிக்
கையிற் றடியூன்றிக் கால்தளர மீள்போழ்தில்
நையுங் கருத்தா ணடுக்குற் றிவண்வீழ்ந்தாள். 30

இ-ள்: இரவு கழிந்தவுடன் கொடிய பசி கிழத்தன்மை இவை களால் உடலானது வருத்தத்தைப் பொருந்த பிழைத்திருப்பதற்கு ஏது வான உணவில்லாதவளாகி ஒரு இழிமகளின் தோளை ஆதரவாகப்பற்றிக் கொண்டும் ஒரு கையில் தடிபிடித்து ஊன்றிக்கொண்டும் நடக்கையில் நடக்கக்கூடாமல் கால் தளரும்படி வரும்போது வருந்துகின்ற மனதை உடையவள் உடல்நடுங்கி இவ்விடத்தில் விழுந்தாள் என்றவாறு.

வேதமுனியே யிவளிறக்கும் வேலையினில்
பாதிமதி வேணிப் பரம னெமை நோக்கிக்
கோதில் குணத்தாளைக் கொணர்வான் விமானமொடும்
போதி ரெனப்பணிப்ப யாமிங்குப் புக்கேமால். 31

இ-ள்: பிரமமுனிவரே இவ்விடத்தில் விழுந்த இவளிறக்குங் காலத்தில் ஒருபங்காகிய சந்திரனை அணிந்த சடாமகுடத்தையுடைய கயிலாசபதியானவர் எங்களை நோக்கிக் குற்றமில்லாத குணத்தையுடைய வளை இவ்விடத்துக்குக் கொண்டுவர ஒரு தேவவிமானம் கொண்டுபோங்க ளென்று கட்டளையிட்டருள நாங்களிங்கே வந்தோம் என்றவாறு.

ஈங்கெம் பரம னிடருழந்தோர் யாவரையும்
தாங்குங் கருணைத் தலைவ னெனுந்தகைமை
பாங்கொன் றறியா திழைத்த வருச்சனையால்
தீங்கின் புலைச்சிக் கருளத் தெளிந்தோமே. 32

இ - ள்: என்று சொல்லிப் பின்னும் கூறுகின்றார்கள், இன்று சிவராத்திரி என்றும் இது சிவலிங்கமென்றும் இந்நாளில் உணவு உறக்கம் நீங்கிச் சிவார்ச்சனை செய்தால் இன்னபலன் வருமென்றுந் தெரியாமற் செய்த அருச்சனையால் பாவத்தையுடைய இப்புலைச்சிக்குக் கருணைகாட்டிய தனால் எம்முடைய கடவுளானவர் இவ்வாறு துன்பம் அனுபவிக்கின்றவர் களையெல்லாம் காப்பாற்றுகின்ற கருணையுடைய தலைவன் என்னுந் தன்மையை நாங்கள் ஐயமற உணர்ந்துகொண்டோம் என்றவாறு.

வேறு

இனையளித் துயருற லென்னை யென்றியேன்
முனிவர கேளிவண் முற்பி றப்பினில்
நினைவினு மடிசிலிட் டுண்டி நேர்ந்திடா
வினையினாற் பசிதரு துன்ப மேயினாள். 33

இ - ள்: சிவலோகத்துக்கு அழைத்துக்கொள்ளும்படி பரமசிவன் கருணை செய்தருளத் தக்கதாகிய இவ்வகைத் தன்மையையுடைய இவள் இத்தகைய துன்பத்தைப் பொருந்துதற்குக் காரணம் என்னவென்று வினவுவாயானால் சிறந்தமுனிவரே கேளும்! இவள் முற்பிறவியில் எண்ணத் தாலும் உணவைப் பிச்சையிட்டுப் பின்புதான் உணவுகொள்ள எண்ணாத பாபத்தினால் பசிமிக்கு உணவு கிடைக்காமல் அப்பசி கொடுக்கிற துன் பத்தை அடைந்தாள் என்றவாறு.

தீயகள் ளுண்டற னல்ல செய்தலால்
தூயகண் ணிழந்தனள் சுரபிக் கன்றென
ஆயிடை யறிந்துமே யவள ருந்தலால்
நாயினு மிழிபவப் புலமை நண்ணினாள். 34

இ - ள்: கொடிய கள்ளுண்டு பாபமான காரியங்களைச் செய்தமை யால் பரிசுத்தமுள்ள பார்வையை இழந்தாள். விளக்கின்முன் கொண்டு வந்து பசுவின் கன்றென்றறிந்தும் அந்த மாட்டிறைச்சியை உண்டதினாலே நாயைக்காட்டிலும் இழிவுள்ள சண்டாளப் பிறவியை அடைந்தாள் எ-று.

கள்ளுண்ணுதலால் ஒழுக்கம், அறிவு, நாண், புகழ், செல்வம் இவை கள்முதலாய நன்மைகள் கெடும். இகழ்ச்சி - தன்னை மறத்தல் - நல்லவர்கள்

அவமதித்தல் இவைகள் முதலாகிய தீமைகள் நேரிடும் என்பதுபற்றித் தீயகள் என்றார்.

கைம்மையிற் பலரொடுங் கலந்த தீமையால்
இம்மையிற் குட்டநோய் முதல யாவையும்
வெம்மையி னலிதர வேட்டல் வேண்டுவார்
தம்மினத் தொருவரு மின்றிச் சாம்பினாள். 35

இ - ள் : கைம்பெண்ணான பின்பு பலபேரோடு சேர்ந்த பாபத்தினால் இப்பிறவியில் குட்டநோய் முதலான பல நோய்கள் வெப்பத்துடன் வருத்தவும் தங்களினத்தில் தன்னை மணஞ்செய்துகொள்ள விரும்புபவர்கள் ஒருவருமில்லாமலும் சோர்வடைந்தாள் என்றவாறு.

உரைத்தவிக் குறிபல வுற்றுத் தோன்றினோர்
திரைப்புவி யிடத்துச்செய் தீமை யாளரென்
றிரைத்திடு மறையென வெண்ணுந் தூயவர்
விரைத்துண ரிதழியாற் கடிமை வேண்டுவார். 36

இ - ள் : சொல்லிய பலவாகிய இத்தகு குறிகளைப்பொருந்திப் பிறந்தவர்கள் அலைகளையுடைய கடல்சூழ்ந்த நிலத்திடத்து முன் பிறப்பிற் பாவத்தைச் செய்தவர்களென்ன வேதமுறையிடுமென்று அறிந்த தூயர்கள் மணமிக்க கொத்துக்களாக மலர்ந்திருக்கும் கொன்றைமாலை அணிந்த பரமசிவனுக்கு அடிமைத்திறஞ்செய்ய விரும்புவார்கள் என்றவாறு.

அன்றியு மறலிதன் ஆலயத் திவள்
சென்றநா ளும்மையிற் சிவனை யுன்னிய
நன்றியா லெரியழ னரகம் புக்கவிந்
தொன்றிடுந் தீவினைக் குரிய ளல்லளால். 37

இ - ள் : பரமசிவனுக்கு அடிமைத்திறஞ் செய்யவேண்டுமென்கிற விருப்பங்கொண்டவள் அல்லாமலிருந்தாலும் யமதருமனது அவையில் இவள் போனநாளில் முன்பிறவியில் பரமசிவனை நினைந்தபுண்ணியத்தினால் எரிகின்ற தீ நரகத்தில் விழுந்து அவிந்து கிடக்கும்படியான பாவத்துக்கு உரியவளல்லள் என்றவாறு.

ஆயினு மவனியி னிழிபிறப் படைந்(து)
ஓயும்வல் வினைப்பய னுண்டொ ழிந்தபின்
ஏயுநல் வினையினு லீசன் பூசனை
மேயமுத் தியுமதான் மேவு வாளென்றான். 38

இ - ள் : அப்படி நரகத்துக்குப் போகத்தக்கவள் அல்லாதவளாய் இருந்தாலும் பூவுலகில் நீசப்பிறப்படைந்து ஓயும்படியான பாவத்தின் பயனை அனுபவித்தொழிந்த பின்பு பொருந்திய நல்வினையால் சிவபூசையையும் அந்தப் பூசையினால் அழியாத முத்தியையும் அடைவாளென்று சொன்னான் என்றவாறு.

இன்ன தன்மைய ளிவளென் றிப் பாவையைப்
பன்னக மவுலியான் பதத்தி னேற்றுதும்
அன்னதுங் காண்டியென் றவட னாவியை
யுன்னருந் திவ்விய வுருவஞ் சேர்த்தியே. 39

இ - ள் : இவள் இத்தன்மையுள்ளவள் என்று சொல்லி முனிவனே! இந்த மாதினைச் சர்ப்பங்கள் அணிந்திருக்கும் சடைமுடியையுடைய பரமசிவன் பதமாகிய சிவலோகத்துக்குக் கொண்டுபோகிறோம், அதையும் பாரென்று அவளுயிரை நினைத்தற்கரிய திவ்விய உடம்பிற்சேர்த்து அதன் பின்பு என்றவாறு.

விண்ணகம் போழொளி விமான மீக்கொடு
பண்ணிசை விஞ்சையர் பாட நாடகம்
எண்ணரு மரம்பைய ரியற்ற வேறினர்
அண்ணறன் றூதுவ ரவளைக் கொண்டரோ. 40

இ - ள் : சிவதூதர்கள் விண்ணிடத்துள்ள இருளை நீக்குகின்ற ஒளியையுடைய விமானத்தின்மேல் அவளை ஏற்றிக்கொண்டு வித்தியாதரர்கள் பண்ணுடன்கூடிய இசைபாடி வரவும் இத்தன்மையானதென்று மனதினாலும் நினைத்தற்கரிய அழகு முதலிய குணங்களையுடைய அரம்பை மாதர்கள் நடனஞ்செய்துவரவும் விண்வழியாகப் போனார்கள் எ - று.

இனி சிவலோகப்பெருமை கூறப்படுகிறது.

முக்குண வழிச்செலு முயற்சித் தீமையின்
எக்குண முங்கட ந் தின்பம் வேட்டவர்
தொக்குட னிருப்பதஞ் ஞானத் துன்னிருள்
புக்கவர் யாவரும் பொருந்தொண் ணாததே. 41

இ - ள் : முக்குணங்களின் வழியே செல்லுகின்ற முயற்சியாகிய பொல்லாங்கினையுடைய எவ்வித குணங்களையுங் கடந்து பேரின்பத்தை விரும்பினவர்கள் கூட்டமாகச் சேர்ந்திருக்கத் தக்கது; நிலைபெற்றதாகிய அஞ்ஞான இருளிற்சேர்ந்தவர்கள் எல்லாரும் பொருந்தக்கூடாதது எ-று.

முக்குணமாவன:- சத்துவம், இராசதம், தாமதம்.

பானுமின் மினியொளி கெடுக்கும் பான்மைபோல்
ஆனமுச் சுடர்களு மழுங்க வெங்கணும்
தானிமி ரொளியது சதுர்ம றைத்தரு
மேனிமிர் சாகைக்கோர் வித்து மாயதே. 42

இ - ள்: சூரியதேவன் மின்மினிப்பூச்சியின் ஒளியைக் கெடுக்கும் தன்மைபோல் மேன்மைபொருந்திய முச்சுடர்களும் ஒளி மழுங்கும்படி எவ்விடத்தும் விளங்கும் ஒளியையுடையது; மேலும் உயர்ந்த சாகைகளையுடைய வேதமாகிய மரத்துக்கு ஒருவிதையாயிருப்பது என்றவாறு.

சாகையென்பது வேதத்தினுட்பிரிவுக்கும் மரக்கொம்புக்கும் பெயராதலால் இவ்விடத்தில் இரண்டு பொருள்படும்படி கூறினர்.

திருமறு மார்பனும் கமலச் செல்வனும்
அருமையிற் பெறவின்ப வாழ்வ ளிப்பதாங்(கு)
இருமையு மிகந்தது மாயை யாலெழும்
கருமமுங் கடந்துநின் றருள்க ளிப்பதே. 43

இ - ள்: திருமாலும் பிரமதேவனும் அருமையாகப் பெற்றுக் கொள்ளப் பேரின்பவாழ்வையளிப்பது. இவ்வுலக வாழ்வினால் வரும் இன்ப துன்பங்களையும், சுவர்க்கபோகத்தினால் வரும் சுகதுக்கங்களையும் தன்னிடத்திலில்லாமல் இயல்பாகவே நீங்கியிருப்பது. மாயையினால் உண்டாகிற கருமங்களையும் இயல்பாக நீங்கி எக்காலத்தும் அழிவின்றித் திருவருள் களிப்படைந்திருக்கின்றது என்றவாறு.

ஆங்கு - அசை.

வேறு

விஞ்சைய ரியக்கர் சித்தர் விண்ணவர் முனிவர் முத்தர்
வஞ்சிநுண் ணுசுப்பிற் றெய்வ மடந்தைய ரமுத கானம்
பஞ்சமத் தியற்றும் வீணை நாரதர் முதலோர் பாங்கின்
அஞ்சலித் துவக்கும் வேதத் தந்தமு மஃதே யாமால். 44

இ - ள்: வித்தியாதரர்களும் யட்சர்களும் சித்தர்களும் தேவர்களும் முனிவர்களும் முத்திபெற்றவர்களும் பூங்கொடிபோல நுண்மையாகிய இடையினையுடைய அரம்பைமாதர்களும் அமுதம்போல மதுரத்தைத் தருகின்ற இசைப்பாடலைப் பஞ்சமமென்னும் கதியில் வாசிக்கும் வீணையையுடைய நாரதர் முதலாய முனிவர்களும் உரிமையுடன் வணங்கி மகிழும்படியான வேதத்தின் முடிந்த முடிவும் அதுவேயாம் என்றவாறு.

எம்மையா ளுடைய மாது மிளம்பிறை யமுதங் காலச்
செம்மையார் பவள வேணிச் செம்மலு மெடுத்த தாளச்
சும்மையா னந்த ஞான நடனத்தின் சுவைக னிந்த
திம்மையி னெம்ம னோராற் புகல்வதோ வீச லோகம். 45

இ - ள் : எங்களை அடிமையாகவுடைய பார்வதிதேவியார் திருக்கரங்களில் எடுத்துத் தாக்குந் தாளத்தில் உண்டாகின்ற நாதத்தின் இனிமையும் இளந்திங்களானது அமுதகிரணமாகிய வெண்ணிலவைப் பொழிந்துகொண்டிருக்கவும் செம்மைநிறம் மாருமல் பொருந்திய பவளம் போன்ற சடைமுடியினையுடைய பரமசிவன் தாண்டவஞ்செய்கிற ஆனந்த நட மதுரமும் முதிர்ந்திருக்கின்றது. ஆதலால் இந்தப் பிறப்பினையுடைய எம்போல்வார்களால் புகழ்ந்து சொல்லத்தக்கதோ சிவலோகமானது என்றவாறு.

பார்வதி தாளம்போடப் பரமசிவன் தாண்டவஞ்செய்வது சங்கார தாண்டவமாம். சும்மை - நாதம்.

அன்னதன் மைத்தா யென்று மடைந்தவர் மீள்க லாத
நன்னெறி யுடைத்தா யார்க்கு நணுகருஞ் சிவலோ கத்தில்
பன்னக மவுலியானும் பாவையு முவந்து காணப்
பொன்னொளி விமானத் தோடும் பூவையைச் சேர்த்தி னரே. 46

இ - ள் : அத்தகைய நன்மையுடையதாகியும் தன்னிடமடைந்தவர்கள் எக்காலத்தும் நீங்காத நல்ல முறைமையையுடையதாகியும் யாவர்க்கும் பொருந்துதற்கரியதுமாகிய சிவலோகத்தில் பாம்பணிந்த சடாமகுடத்தையுடைய கயிலாசபதியும் அவர் இடப்பாகத்திலிருக்கும் உமாதேவியாரும் திருவுளத்தில் மகிழ்கூர்ந்து நோக்கும்படிப் பொன்னொளியை உடைய விமானத்தோடும் அம்மாதினைச் சேர்த்தினர்கள் என்றவாறு.

அருந்தவ மன்ன கேளா யவணிலை யிஃது நீயும்
வருந்தல் கோகன்ன மென்னும் வள நகர் மருவி ஈசன்
திருந்துபூ சனைபுரிந்து சிவநிசித் துயிலை நீக்கி
யிருந்துபைந் தளிர்வில்வத்தா லருச்சிடி னின்ன லீங்கும். 47

இ - ள் : அருமையாகிய தவஞ்செய்த மன்னவனே! கேள் அந்தப் புலைச்சியின் நிலைமை இத்தன்மையாயது. நீயும் வருந்தவேண்டுவதில்லை. கோகன்னமென்கிற வளமிக்க தலத்தையடைந்து நம்மிறைவனாகிய மாபலலிங்கேசன் ஏற்றுக்கொள்ளத்தக்க பூசை சிவராத்திரியில்செய்து நித்திரை நீங்கியிருந்து பசுமைநிறமுள்ள வில்வத்தளிரினல் அருச்சனைசெய்தால் உன்னுடைய துன்பம் நீங்கும் என்றவாறு.

வேறு

என்று வீறுயர் கோகன்ன மான்மிய மியம்பிக்
கொன்றை வேணியன் சிவநிசி விரதமுங் கூறி
வென்றி வேன்மனு வேந்துக்கு விடைகொடுத் தருளிச்
சென்று கோதமன் மிதிலையங் கடிநகர் சேர்ந்தான். 48

இ-ள்: இவ்வாறு இன்பமிகுந்த கோகன்ன மான்மியத்தைச் சொல்லிப் பின்னும் கொன்றைமாலையணிந்த பரமசிவனுடைய சிவராத்திரி விரதமான்மியமுஞ்சொல்லி வெற்றிமிக்க வேலாயுதத்தையுடைய மனுச் சக்கரவர்த்தியை யொத்த அரசனுக்கு உத்தரவு கொடுத்தனுப்பிவிட்டுக் கௌதமரானவர் அவ்விடம் விட்டுச்சென்று காவலைக்கொண்ட அழகிய மிதிலைப்பட்டணத்துக்குப் போனார் என்றவாறு.

ஓகை வாரிதி படிந்தக மகிழ்ந்துவே லுரவோன்
பூக வார்பொழிற் கோகன்ன மாநகர் பொருந்தி
மாக மாமதிச் சிவநிசி வரன்முறை நோற்றுச்
சோக மேதரு பழவினை முழுவதுந் தொலைத்தான். 49

இ-ள்: கவுதமர் போனபின்பு வேலாயுதத்தையுடைய திண்மையுள்ள அவ்வரசனானவன் கமுகு முதலாய மரங்கள் நெருங்கின நீண்ட சோலைகள் சூழ்ந்த வளப்பமிக்க கோகன்ன மென்னுந் தலத்திற்போய்ச் சேர்ந்து பெருமைமிக்க மாசிமாதச் சிவராத்திரியில் முறைப்படி விரதம் இருந்து முனிமகனைக்கொன்ற பாவத்தை நீக்கியதுமல்லாமல் முன்பிறவிகளிற் செய்த சோகத்தையே தருகின்ற பழைய தீவினைகளையெல்லாம் நீக்கினான் என்றவாறு.

மூன்றாவது சிவராத்திரியில் கன்மாடபாதராசன் முத்திபெற்ற
அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 171

நான்காவது

சிவராத்திரியில் விமரிசன் முத்திபெற்ற அத்தியாயம்

கருமணி யனைய கண்டன் கதையினை யிவ்வா றென்று
தெருளுறச் சூதன் சொன்னான் தெளிந்தனர் கேட்டுப் பின்னும்
இருவினை தொலைய வின்னு மீசன தருளிற் கேய்ந்து
வருகதை புகறி யென்ன முனிவரர் வழங்க லோடும். 1

இ - ள் : *நீலமணிபோன்ற கண்டத்தையுடைய மகாபலலிங்கநாதன் சரித்திரமாகிய சிவராத்திரி மான்மியம் இம்முறைமையையுடையதென்று தெளிவுறும்படிச் சூதமுனிவர் சொன்னார். அதை நைமிசாரணிய முனிவர்கள் கேட்டுத் தெளிந்தவர்களாய்ப் பின்னும் முனிவரே எங்களிருவினைகளும் நீங்கும்படிப் பரமசிவனுடைய கருணையைப் பெறத்தக்கதாக நடந்திருக்கும் சரித்திரங்களை இன்னமும் நீர் சொல்லுமென்று சொல்லவும் (மேல் சூதமுனிவர் சொல்லத்தொடங்குகிறார்) என்றவாறு.*

வேறு

சிவநிசி யளவையு மன்பர் செய்கையு
நுவலருந் தகையவா மெனு நுவன்றனம்
புவனியி லவன்றிருப் பூசை கண்டொரு
தவமிலான் பெற்றமை சாற்று வாமரோ. 2

இ - ள் : *சிவராத்திரி மான்மியமும், அந்த விரதமும், இருந்த அடியார்கள் செய்கையுஞ் சொல்லுதற்கரிய பெருமையை உடையனவாயிருந்தாலும் (எமக்குத் தெரிந்தமட்டில் சொன்னோம்) இனி இந்த உலகத்தில் பரமசிவனது சிவராத்திரி பூசையைக்கண்டு தவமில்லாதவனாகிய ஒருவன் அடைந்ததன்மையைச் சொல்லுகிறோம் என்றவாறு.*

பாரிடைக் கிராதர்தம் பதிக்கு நாயகன்
பேரிகல் விமரிசன் என்னும் பெற்றியோன்
சோரிவேற் றானையான் றுரகத் தேரினன்
மாரியி னிருநிதி வழங்கும் வண்கையான். 3

இ - ள் : இவ்வுலகத்திலிருக்கும் வேடரூருக்கு நாயகனாக இருப்பவன். மிகுந்த வலிமையையுடைய விமரிசனென்னும் பெயரையுடையவன். பகைவர் உதிரத்தில் படியத்தக்க வேலேந்துஞ் சேனையை உடையவன். குதிரைகட்டிய தேரையுடையவன். இரங்குபவர்க்கு மேகம்போல மிகுந்த திரவியங்களைக் கொடுக்கும் வளப்பம் பொருந்திய கையை உடையவன் என்றவாறு.

இன்னும் அவரிடம் உள்ள தன்மை.

தீதுறு தசைவரை வின்றித் தின்பதால்
கோதறு வேட்டையிற் புரிந்த கொள்கையான்
வேதியர் மகளிரே முதல வெம்புலை
மாதரீ றனுதின மருவும் வேட்கையான். 4

இ - ள் : குற்றமிக்க மாமிசங்களை அளவில்லாமல் தின்பதினால் பழுதுபடாத வேட்டையில் விருப்பங்கொண்ட செய்கையையுடையவன். இதுவுமல்லாமல் பிராமணப் பெண்கள்முதல் கொடிய நீசப்பெண்கள் இறுதியாகச் சொல்லப்பட்ட பலவகைச் சாதிப் பெண்களையும் நாள்தோறும் புணருகின்ற ஆசையையுடையவன் என்றவாறு.

ஏழிரண் டாந்திதி யெதிர்ந்த ஞான்றெலாஞ்
சூழியங் கடகரி யுரித்த தோன்றலை
வாழிய வெனவிசே டித்து மாட்சியால்
பாழியம் புயத்தயன் பூசை பண்ணுவான். 5

இ - ள் : பலமிக்க அவ்வரசன் மேற்கூறிய கொடிய செய்கையை உடையவனாயிருந்தாலும் சதுர்த்தசி வருகின்ற நாளிலெல்லாம் முகபடாங் கட்டத்தக்கதாகிய கபோலமதத்தையுடைய யானையையுரித்த பரமசிவனை சங்கர, சம்பு, சதாசிவ வாழ்க என்று சிவநாமங்களை எடுத்துத் தோத்திரஞ் செய்து மாட்சிமையுடைய பூசைசெய்வான் என்றவாறு.

மாட்சியால் பூசை செய்தலாவது பூசாத்திரவிய முதலாகிய உபகரணங்களில் குறைவில்லாமல் செய்குதலாம்.

பூசனை யிறுதியிற் புளக மீக்கொள
ஈசனை யேத்துநின் றுடு மேழிசை
மாசறப் பாடும்பின் வணங்கு மற்றவன்
நேசமித் துணையென நிகழ்த்தற் பாலதோ. 6

இ - ள் : இவ்வாறு செய்யும் பூசையின் முடிவில் புளகமுண்டாகும்படிப் பரமசிவனைத் தோத்திரஞ்செய்வான். நின்றுகொண்டு பரத சாத்திரப்படிக் கூத்தாடுவான். எழுவகைச் சுரங்களும் வழுவாமல் பாடல்கள்

பாடுவான். பின்பு பணிகுவான். அவனுடைய சிவநேசம் இவ்வளவென்று அளவிட்டுச்சொல்லும் பான்மையுடையதல்ல என்றவாறு.

ஏழிசையாவன :- சட்சமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பவைகளாம்.

இன்னணம் புரிந்தவ னிறைமை பூண்டுதன்
சென்னெறிச் செய்யகோ றிசைகண் மீச்செல
நன்னெறி யாவரு நடப்ப நன்கிலாப்
புன்னெறி துறந்தறம் புரக்கும் நாளினே. 7

இ - ள் : இம்முறைமையாகப் பூசைசெய்கின்றவன் அரசாட்சி செய்யுந் தன்மையுடையவனுய்ச் செவ்வையான முறைமையை நடத்துகின்ற தன் செங்கோலானது திக்குகளெங்குஞ்செல்லவும், எல்லாரும் நன்மார்க்கத்தில் நடக்கவும், நன்மையல்லாத தீயநெறிகளையெல்லாம் நீக்கித் தருமத்தைப் பாதுகாக்கும் நாளில் என்றவாறு.

செங்கோல் என்பது அரசநீதி. அது ஒருபக்கத்தில் சாயாமல் தராசுகோல் போலச் சமமாயிருத்தலால் செங்கோலென்று சொல்லப்பட்டது.

வேறு

ஆண்டகை குமுத வதியெனு மனைவி அவனடி தொழுதிகல் வேலோய்
காண்டகு வனப்பி னீதியிற் றவத்திற் கல்வியி னறிவினே ரில்லாய்
சேண்டரு பிறையான் பூசனை வழாது செய்யு நீ தீவினைக் கிடமாய்ப்
பூண்டவூ னருந்தி நெறியிலா மடவார் போகமே நுகர்வது புகலே. 8

இ - ள் : யாதொன்றினுக்கும் அஞ்சாத வீரத்தன்மையையுடைய அவ்வரசன்மனைவியாகிய குமுதவதியென்பவள் ஒருநாள் தன்கணவன் திருவடியை வணங்கி யாவரும் வியப்புடன் பார்க்கத்தக்க அழகிலும் நீதியிலும் தவத்திலும் கல்வியிலும் அறிவிலும் ஒப்பில்லாதவரே தேய்வதும் வளர்வது மில்லாமல் எக்காலமும் ஒரேதன்மையாய் இராநின்ற இளந்திங்களை அணிந்திருக்கும் சந்திரசேகரனுகிய பரமசிவனுடைய பூசையை ஆகமவிதிப்படிச் செய்கின்ற நீர் பாவத்துக்கிடமாய்ப் பொருந்திய மாமிசங்களைத் தின்று முறைமையில்லாமல் பெண் போகங்களையே அனுபவிக்கின்றது என்னகாரணம் சொல்லும் என்றவாறு.

என்றவ ளுரைத்த வாசகங்கேளா விறைமகன் குறுநகை கோட்டிக்
குன்றென வுயர்ந்த குவிமுலை மடவாய் கூறுவல் கேட்டிநீ யென்ன
முன்றவப் பயனு லிறந்தது நிகழ்வு முன்வருங் காலமு முணர்ந்தேன்
அன்றுமுற் பவத்தோர் ஞமலியாய்ப் பம்பை யணிநக ரதனின்வந்
துதித்தேன். 9

இ - ள் : இத்தகைய பாவச்செயலைச் செய்வதற்குக்காரணமென்ன சொல்லுமென்று தன்மனைவி கூறிய உரையைக் கேட்டு அவ்வரசன் புன்னகைசெய்து பொன்மலைபோல் உயர்ந்து குவிந்த தனங்களையுடைய பெண்ணே! நான்சொல்லுகிறேன் கேளென்று பூர்வஞ்செய்த தவப்பயனால் இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும் அறிவேன். முன்பிறப்பாகிய அந்த நாளில் நான் என்ன பிறப்பையுடையவனாயிருந்தேனென்றால் ஒரு நாயாய்ப்பிறந்து அழகுள்ளதாகிய பம்பை நகரத்தில் தோன்றியிருந்தேன் என்றவாறு.

மாலயன் காணா வடிமுடிக் குரிசின் மதியணி பம்பைநா யகன்றன்
ஆலயங் குறுகிப் பலிக்கிடு மடிசி லருந்துவான் புகுந்திடு மளவில்
காலவன் றூத ரிவரெனக் கண்டோர் கல்லினாற் கதையினாற் றுரப்ப
ஓலொடு வெருவி யாலயம் வலங்கொண் டோடினே னுயிர்பிழைத்
துய்வான். 10

இ - ள் : பம்பை நகரத்தில் வாழும்போது திருமால் பன்றியுருவங் கொண்டு பாதாளத்தைப் பிளந்துகொண்டுபோய்த் தேடியுங் காணப்படாத திருவடிகளையும், பிரமன் அன்னமாக வுருவங்கொண்டு பறந்து மேலுலகம் போய்த் தேடியுங்காணாத திருமுடியையுமுடைய இறைவனாகிய பம்பையென்னுந்தலத்தில் வீற்றிராநின்ற பரமசிவனது ஆலயத்திற்சேர்ந்து பலிக்காக வைக்கும் அன்னத்தை உண்ணச்சென்ற காலத்தில் யமனுடைய தூதர் இவர்களென்று சொல்லும்படி என்னைக் கண்டவர்கள் கல்லினாலும் தடியினாலும் அடித்துத் துரத்த நான் பயந்து குரைத்துக்கொண்டு உயிர் தப்பிப்பிழைக்க அந்த ஆலயத்தை வலமாகச்சுற்றிக்கொண்டோடினேன் என்றவாறு.

சினகர மொருவிப் போகுவான் வழிகள்
நேடினேன் கண்டிலேன் திகைத்தேன்
மனவலி யிளைத்துப் பலிசொரி பீட
மருங்குநின் றீசனை நோக்க
அனகனுக் கன்று சிவநிசி யாக
வருஞ்சுடர்த் தீபமோ டெடுத்தல்
வினையறக் கண்டேன் கண்டுழி யொருவன்
வெஞ்சரந் துரத்தலும் விளிந்தேன். 11

இ - ள் : ஓடிய யான் அந்த ஆலயத்தை நீங்கிப் போவதற்கு வழிகள்தேடிக் காணாமல் திகைத்து மனவலியும் இளைத்துப் பலி போடுகின்ற பீடத்தின் அருகில் நின்று சிவலிங்கப்பெருமானைப் பார்த்தேன். அன்று சிவராத்திரியானதினால் நிர்மலனாகிய அந்தச் சிவலிங்கப்பெருமானுக்கு யாவருந் தரிசனஞ்செய்யக் கிடைப்பதற்கரிய சுடரினையுடைய தீப

ஆராதனை முதல் சில ஆராதனை செய்வதை என் பாவமெல்லாம் நீங்கும் படி கண்டேன். அவ்வாறு கண்டவளவில் ஒருவன் வில்லை வளைத்துக் கொடிய பாணத்தைப்பூட்டி எய்ய அது என்மேல் தைத்தவுடன் நான் இறந்தேன் என்றவாறு.

அருஞ்சுடர்த் தீப மெடுத்த பூசனையி
னமலனை மாலையம் போது
விரிஞ்சனுங் காணு மணிமுடி தமியேன்
விளிந்திடும் வேலைகண் டதனல்
பரஞ்சுடர் கோயில் வலங்கொளப் புகுந்த
பண்பினுற் பாரினிற் பகைஞர்
உரஞ்சுடு நெடுவே லிறைவனு யுதித்தேன்
காலமூன் றினையுமுற் றுணர்ந்தேன். 12

இ-ள்: அவ்வாறு இறக்குஞ்சமயத்தில் பிரதோட காலமாகிய அந்திப்பொழுதில் செய்யுஞ் சோடசோபசாரங்களில்ஒன்ருகிய அரியசுடர்த் தீபமேந்திய பூசாகாலத்தில் பிரமனுலுங் காணப்படாத பரமசிவனுடைய திருமுடியைத் தமியேனுகிய நான் தரிசித்ததனுலும், அந்தப் பரஞ்சுடர் வீற்றிருக்கும் ஆலயத்தை வலமாகவந்த தன்மையினுலும் இந்த உலகத் தில் பகைவருடைய மார்பைச் சுடத்தக்க நெடிய வேலாயுதத்தையுடைய அரசனுகப் பிறந்தேன். அவ்வாறு பிறந்ததிலும் மூன்று காலங்களையும் அறிந்தவனுனேன் என்றவாறு.

ஆதலா னிந்த நல்வினைப் பலத்தை யளித்தது சிவநிசி யென்னு
மாதரா யின்றும் வருமதி தோறும் வளர்பிறை தேய்பிறை யிரண்டில்
போதுமப் பக்க மேழிரண் டெய்திற் பொருந்துமச் சிவநிசி போல
மேதகு பூசை யனுதினந் தன்னின் விசேடமாய் வழிபடு கின்றேன். 13

இ-ள்: ஆதலால் பெண்ணே! சிவராத்திரியானது உலகத்தில் இழிவுள்ள செந்துவாகிய நாயாகப் பிறந்திருந்த நமக்கும் இத்தகைய அரச போகத்தை அனுபவிக்கத்தக்க நல்வினைப் பயனைக் கொடுத்ததென்றுட் கொண்டு இந்தப் பிறப்பிலும் மாதாமாதம் வருகின்ற பூர்வபட்சம் அமர பட்சம் என்ற இருபட்சத்திலும் வருகின்ற பதினன்காந் திதியாகிய சதுர்த் தசிதிதியில் மாசிமாதத்தில் பொருந்துகின்ற மகா சிவராத்திரியில் பூசை செய்வதுபோல மேன்மை மிக்க சிவபூசை நாள்தோறும் செய்துவருவதி லும் விசேடமாகச் செய்துவருகின்றேன் என்றவாறு.

இன்னணம் புரியும் பூசையிற் றிமை
யகலுமோ வெனவின வுதியேல்
மன்னனைக் கயிலை வரதனை வழுத்தின்
மலையெனக் குவித்தவிந் தனத்தைச்

செந்நிறப் பொறித்தீ நுழைந்து நீருக்குஞ்
செய்கைபோற் பவமெலாந் தீர்க்கும்
அன்னதா னீயு மரனடிக் கமலத்
தருச்சனை புரிதியா ரணங்கே. 14

இ-ள்: தெய்வப்பெண்ணையொத்தவளே! இவ்விதமாகச் செய்யும் பூசையினால் பாபங்கள் நீங்குமாவென்று கேட்பாயாகில் சொல்லுகிறேன் கேள். தேவர்கட்கெல்லாம் இறைவனும் கயிலாயத்தில் வீற்றிருக்கும் தேவர் தலைவனுமாகிய சாம்பசிவமூர்த்தியை ஒருதரம் தோத்திரஞ் செய்தால் அந்தத் தோத்திரத்தின் பலன் மலைபோலப் போரிட்ட விறகுகளைச் செம்மைநிறமுடன் பொறிகளையுடைய தீயானது அந்தப்போருக்குள் நுழைந்து சாம்பலாக்குந்தன்மைபோல் பாபங்களை யெல்லாம் நீக்கிவிடும். ஆகையால் நீயும் பரமசிவனுடைய திருவடிகளில் அருச்சனை செய்க என்றவாறு.

என்றது கேட்ட துடியிடை மடவா
ளிள நிலா முறுவல்முன் றேன்ற
மன்பதை யுள்ளுங் காலமூன் றுணர
வல்லையே லெனக்குமுற் பிறப்பின்
வன்புறு தோற்ற முழுதுரை யென்ன
மல்லிகார்ச் சுனவரன் மன்னி
யின்புறு கோயிற் புறவதா யுதித்தாங்
கிருந்தநீ யிரைகவர்ந் துண்பான். 15

இ-ள்: இவ்வாறு தன் கணவன் சொன்ன வார்த்தையைக் கேட்ட தமருகம் போன்ற இடையையுடைய அம்மாதானவள் சந்திரனது இளங் கதிர்நிலாப்போலப் புன்சிரிப்புவிளங்க நீர் மனிதர்கள் நினைக்கும் முக்காலங் களையும் அறிவீரேயானால் எனக்கு முன்பிறப்பில் என்னபிறவி நேரிட் டிருந்ததோ அப்பிறவியையும் அதில் நடந்தனயாவையும் சொல்லுமென்று வினவ மல்லிகார்ச்சுனேசுவரர் கருணையுடன் வீற்றிராநின்ற கோயிற் புறு வாகப் பிறந்து அவ்விடத்திருந்த நீ ஒருநாள் இரைதேடியுண்ணுவதற்காக என்றவாறு.

செந்நிறத் தசையொன் றெடுத்துநீ வரலுஞ்
சினவிழி யெருவைவந் தணுகி
யன்னது வலிதிற் கவர்வனென் றுன்னை
யழன்றுபின் றொடர்தலும் வெருவிப்
பொன்னெடுங் கோயில் வலங்கொடு பறந்து
பொருவிடைக் கொடிநெடுங் கம்பந்
துன்னுபு கரந்தங் கொதுங்கிநீ யிருப்பத்
தொடர்ந்தவக் கங்கமுங் கண்டே. 16

இ - ள் : செம்மை நிறத்தையுடைய ஒரு இறைச்சித் துண்டினை நீ எடுத்துக்கொண்டு, வரும்போது கோபம் பொருந்துதலால் சிவந்த கண்களையுடைய ஒரு பருந்து வந்து சேர்ந்து அந்த மாமிசத்தைக் கிரகித்துக் கொள்ளுவனென்று கோபித்து உன்னைப் பின் தொடரவே, நீ பயந்து பொன்னாற் செய்யப்பட்ட அந்தப் பெரிய கோயிலை வலமாகப் பறந்துபோய் போர் செய்யத்தக்க இடபக்கொடிகட்டும் பெரிய கம்பத்தில்தங்கி மறைந்து ஒரு பக்கத்திலிருந்தனை. அப்படி மறைந்திருந்தும் உன்னைத் தொடர்ந்து வந்த பருந்து கண்டு என்றவாறு.

சூழிமால் கரியின் றோட்டியிற் கூர்ந்த
துண்டவெம் படையினாற் கொத்தி
வாழிய வுன்னை யுயிர்செகுத் தந்த
வன்றசை கழுகுகொண் டேக
வீழுநீ யீசன் சன்னிதிப் பட்டு
விளிதலான் முன்வலஞ் செயலால்
ஆழிநீ ருடுத்த தராபதி மகளா
யவதரித் தெம்மையு மடைந்தாய். 17

இ - ள் : அப்படிக் கண்ட பருந்தானது முகபடாங்கட்டிய யானையைக் கொத்துகிற அங்குசத்தைப்போலக் கூர்மையுள்ள தன் மூக்காகிய வெவ்விய ஆயுதத்தினால் உன்னைக் கொத்தி உயிரைக்கொன்று நீ கொண்டுவந்த கொழுத்த இறைச்சியைப் பிடுங்கிக்கொண்டு போய்விட, கொடிமரத்திலிருந்து விழுகின்ற நீ சிவசந்நிதிக்கெதிரில் விழுந்து இறந்ததினாலும் முன்னே வலம்வந்ததாலும் நீர் நிறைந்த கடல்சூழ்ந்த நிலத்துக்கிறைவனாகிய அரசன் மகளாகப் பிறந்து அரசனாகிய என்னையும் மணம்செய்து கொண்டாய் என்றவாறு.

வாழிய - முன்னிலையசை.

வேறு

இவ்வாறு கொற்ற முடிமன்ன னிறத்தலோடுஞ்
செவ்வாய் மழலைக் கிளியன்னவள் செப்பலுற்றாள்
ஒவ்வாத வும்மை யுடனிம்மையு முற்றுணர்ந்தேன்
எவ்வா றினிமே லிருவோரு முதிப்ப தென்றாள். 18

இ - ள் : வெற்றியுள்ள முடிமன்னனாகிய அரசன் இவ்வாறு கூறியவுடன் சிவந்த வாயையும் மழலைச் சொல்லையுமுடைய கிளியொத்தவள் சொல்லுகின்றாள். ஒவ்வாததாகிய முன்பிறப்பும் இப்பிறப்பும் நன்றாக

அறிந்துகொண்டேன். இனிமேல் நாமிருவரும் எவ்விதப் பிறவியாகப் பிறப்போமென்றாள் என்றவாறு.

மேல் அரசன் சொல்லுகிறான்.

கேளா யிரண்டாம் பவத்தன்மை கிளத்துவன்யான்
வாளார் விழியாய் புகழ்ச்சிந்துநன் னாட்டுவந்து
தாளார் கழன்மா முடிமன்னவர் தாழ்ந்திறைஞ்சுந்
தோளாடல் வேந்தா யரசாள்வனித் தொல்லைஞாலம். 19

இ - ள்: வாளொத்த கண்களையுடைய பெண்ணே! இனிவரும் இரண்டாம் பிறப்பின் தன்மையை நான் சொல்லுகின்றேன். புகழ்தங்கிய நல்ல சிந்துதேசத்தில் பிறந்து, வீரகண்டை கட்டிய காலையும் பெரிய முடியணிந்த தலையையுமுடைய அரசர்கள் தாழ்ந்து வணங்கும்படியான வெற்றி மிக்க தோள்வலியையுடைய மன்னவனாகிப் பழைய இப்பூமியை என் ஆக்கினைக்குட்படும்படி அரசாட்சி செய்வேன் என்றவாறு.

சொல்லார் நறும்பூங் குழற்காமரு செல்வி நீயு
மல்லார் புயன்றஞ் சயன்றந்த மடந்தையாகித்
தொல்லா ரணத்தின் முறையேதொடை சூட்டியெற்கே
யில்லாகி முல்லை வடமீனி னியைந்துவாழ்வை. 20

இ - ள்: நீருண்ட மேகம்போற் கறுத்து மணந்தங்கிய பூமாலையணிந்த அளகபாரத்தையுடைய அழகிய பெண்ணே! நீயோவென்றால் பலம்பொருந்திய தோளையுடைய தஞ்சயனென்னும் அரசன் புத்திரியாகிப் பழைய வேதவிதிப்படி எனக்கே மணமாலை சூட்டி மனைவியாகி முல்லைப்பூ மாலையணிந்த அருந்ததிபோலக் கற்புள்ளவளாய் வாழ்குவை என்றவாறு.

அந்தப் பிறப்பு நீங்கின பின்பு.

வேறு

பாசிழைப் பரவை யல்குற் பனிமொழி யணங்கு கேளா
யாசின்மூன் றாம்ப வத்தி லணிசவு ராட்டி நாட்டில்
வாசவன் றிருவின் மிக்க மன்னனாய்த் தோன்றி யந்தக்
காசினி முழுதும் யானே பொதுவறக் காவல் பூண்பேன். 21

இ - ள்: பைம்பொன்னாற் செய்யப்பட்ட மேகலாபரணம் அணியும் பரந்த அல்குலையும் குளிர்ச்சிதங்கிய சொல்லையுமுடைய பெண்ணே! இன்னமும் சொல்லுகின்றேன் கேள். குற்றமில்லாத மூன்றாம்பிறப்பில் அழகிய சவுராட்டிரநாட்டில் தேவேந்திரன் செல்வத்திலும் மிகுந்த செல்வமுள்ள

மன்னவனாய்ப் பிறந்து அந்தத் தேசமுழுவதும் பொதுவின்றி நானே அரசாட்சி செய்வேன் என்றவாறு.

கொங்குடைந் தொழுகும் பைந்தார் குவிமுலை யணங்கே நீயு
மங்குல்கண் படுக்குந் தண்கா வளந்திகழ் கலிங்க நாட்டில்
செங்கைவேற் கலிங்கக் கோமான் றிருமக ளாகத் தோன்றி
யங்கெனக் குரிமையாகி வைகுவை யளப்பில் காலம். 22

இ - ள் : முருக்குடைந்து தேனொழுகாநின்ற பசிய பூமாலையணிந்த குவிந்த தனங்களையுடைய பெண்ணே! நீயும் மேகம் உறங்கும்படி உயர்வதாகிய குளிர்ச்சி மிக்க சோலைகள் சூழ்ந்த வளமிக்க கலிங்கதேசத்தில் வேலேந்திய செங்கையையுடைய கலிங்க மன்னனுக்கு மகளாகப் பிறந்து அப்பிறவியிலும் எனக்குரிமையுள்ள மனைவியாகி அளவில்லாத காலம் வாழ்ந்துகொண்டிருப்பாய் என்றவாறு.

மேகம் உறங்குதலாவது நீங்காமல் சூழ்ந்துகொண்டிருத்தல்.

குழலினிற் பாகிற் றேனிற் குயிலினி லமிழ்திற் றோய்ந்த
மழலையஞ் சொல்லாய் நாலாம் பவத்தினின் மணிசெய் மாட
நிழலிருள் சீக்குஞ் செவ்வி நிறைந்தகாந் தார நாட்டில்
கழல்புனை துணைத்தாள் வைவே லிறைவனா யுலகங் காப்பேன். 23

இ - ள் : அத்தகைய மூன்றும் பிறவி நீங்கிய பின்பு குழலிசையிடத்தும், வெல்லப்பாகினிடத்தும், தேனினிடத்தும், குயிலோசையிடத்தும், தேவாமிர்தத்தினிடத்தும்தோய்ந்ததுபோல மிக்க மதுரம்பொருந்திய மழலைச் சொற்களையுடையவளே! நாலாவது பிறப்பில் நவமணிகள் பதிந்திருக்கும் மாளிகைகளின் ஒளியானது இருளைக் கெடுக்கும்படியான அழகுமிக்க காந்தாரநாட்டில் வீரகண்டை அணியும் கால்களையுடைய கூர்மைபொருந்திய வேலாயுதமேந்தும் அரசனாகிப் பூவுலகினைக் காப்பேன் என்றவாறு.

நஞ்சினி லமிழ்திற் றோய்ந்து நலந்திகழ் நெடிய வாட்கண்
வஞ்சிநுண் ணிடையாய் நீயு மகதர்கோன் மகளாய்த் தோன்றி
யஞ்சனக் கடல்சூழ் வைய மளிக்குமென் மனைவி யாகிப்
பஞ்சின்மெல் லடியார் போற்றப் பரிவுடன் வாழ்வை மாதோ. 24

இ - ள் : நஞ்சிலும் அமிழ்திலும் தோய்ந்து அழகுடன் விளங்குகின்ற நெடிய வாள்போன்ற கண்களையும் பூங்கொடிபோன்றஇடையினையும் உடையவளே! நீயும் மகதமன்னன் மகளாய்ப் பிறந்து கருமைநிறமுள்ள கடல்சூழ்ந்த இவ்வுலகத்தைக் காக்கும் என் மனைவியாகிப் பஞ்சினைப்போல

மிருதுவாகிய அடிகளையுடைய மாதர்கள் போற்றப் பரிவுடன் வாழ்குவை என்றவாறு.

பொதுவாக நோக்கும்போது வருத்தத்தை உண்டாக்கிப் பின்பு விருப்புடன் நோக்கினல் அவ்வருத்தத்தை நீக்கி மகிழ்ச்சியைத்தருஞ் செய்கையையுடையதாதலின் 'நஞ்சினிலமிழ்தில் தோய்ந்து நலந்திகழ்கண்' என்றது.

வேறு

பண்ணியன் மகர வீணையுங் குழலும்
பழுத்தமு தளவிய குதலைப்
பெண்ணணங் கைந்தாம் பிறப்பினில் அவந்திப்
பெயருடைப் பெரியநா டளிக்கும்
அண்ணலஞ் செங்கோ லரசன் யாளுக
வருவனீ தசாருகன் மகளாய்
மண்ணிய விழவில் மாலையென் புயத்தில்
வனைகுவை மணந்தினி திருப்போம். 25

இ - ள் : அந்நாலாம் பிறவி நீங்கிய பின்பு இசைபாடும் இயல்பினை யுடைய மகர வீணையைப்போலவும் வேய்ங்குழலைப்போலவும் மதுரமிகுந்த தேவாமிர்தத்தைக் கலந்ததுபோலிராநின்ற குதலைச் சொற்களையுடைய பெண்ணணங்கே! ஐந்தாம் பிறவியில் அவந்திநாட்டை அளிக்கும் பெருமை மிக்க செங்கோலரசனகப் பிறப்பேன். நீ தசாருகன் என்னும் அரசன் மகளாய்ப் பிறந்து அலங்காரம்செய்த கல்யாண மண்டபத்தில் என் புயங் களில் மாலை சூட்டுவை. அதற்குமேல் நாமிருவரும் கூடிவாழ்குவோம் எ-று.

வீணைகளுள் பெரும்பான்மையாகச் சொல்லப்பட்ட வீணை 4. அவை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பவை களாம். சிறுபான்மையாக வரும் யாழுமுள.

வெண்பா

பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினர் — தார்பொலிந்து
மன்னுந் திருமார்பா வண்கூடற் கோமானே
பின்னு முளவோ பிற.

பேரியாழிற்கு நரம்பு 21. மகரயாழிற்கு 17. சகோடயாழிற்கு 16. செங்கோட்டியாழிற்கு 7.

ஒன்றே டிருபது மோரேழ்மேற் பத்துடனே
நின்ற பதினறேழ் நேடுங்காற் — குன்றுத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி.

குழலானது மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி என்னும் இவைகளில் ஒன்றால் செய்யப்படுவது.

வாங்கிய மூங்கிலு மாசந்தும் வெண்கலமும்
பாங்குடைச்செங் காலி கருங்காலி — பூங்குழலாய்
கண்ண னுவந்த கழைக்கிவைக ளாமென்பார்
பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து.

மூங்கிலால் செய்வதே உத்தமம். இவை சிலப்பதிகாரத்தில் காண்க.

வாளெனத் துளங்கிக் குருதிதோய் வேலின்
வரிபரந் தமுதொடு விடத்தின்
கோளுறப் பிறழு நெடுங்கணு யாருங்
குலப்பிறப் பதத்தியா னந்த
நீள்பெயர் நாட்டிற் கரசனுய் வருவ
னீயும்போ யயாதிகன் னிகையாய்
நாளணி விழவி னல்லணி யணிந்தென்
னன்மனை யாகிவாழ் குவையால். 26

இ - ள் : வாளாயுதம்போல ஒளிபொருந்தியும் பகைவர் உதிரம் தோயத்தக்க வேலாயுதம்போல் வலிபொருந்தியும் அமுதம்போல நன்மையைத் தருவதும் விஷம்போலத் தீமையைத் தருவதுமாகப் பிரகாசிக்கும் நெடிய கண்களையுடைய நாயகியே! ஆருவதாகிய மனிதகுலப் பிறப்பில் நான் அத்தினபுரிக்கு மன்னனுய் வருவேன். நீயும் யயாதிராசன் மகளாய்ப் பிறந்து அலங்காரஞ்செய்யும் கல்யாணத்தில் நல்ல முகூர்த்தத்தில் மாங்கலிய சூத்திரந் தரித்துக்கொண்டு என்னுடைய நல்லமனைவியாய் வாழ்வையென்று சொன்னன் என்றவாறு.

அந்த ஆரும்பிறவி நீங்கிய பின்பு.

வேறு

வம்பை முனிந்து முகங்கறுத்து மணிவா ரறுத்து மதவேழக்
கொம்பை வெகுண்ட துணைமுலையா யேழாம் பிறப்பிற் கூடற்கோ
னிம்ப மணியுந் தமிழ்ப்பாண்டி நிருபன் றனக்கு மகனுகி
அம்பைந் தொழிந்த காமனிவ னென்ன வுலகி னவதரித்தே. 27

இ - ள் : கச்சினை மீறியும் முகங்கறுத்தும் அந்தக் கச்சினைச் சேர்த்து முடியப்பட்ட வாரினை அறுத்தும் மதமுள்ள யானைக்கொம்பைக் கோபித்த இரண்டாகிய தனங்களையுடைய நாயகியே! ஏழாவது பிறப்பில் மதுரைக்கிறைவனுகிய வேப்பம்பூ மாலை அணியும் பாண்டியமன்னன் மகனுகிப் பஞ்சபாணங்களையும் கரும்பு வில்லையும் ஒழிந்து வந்திருக்கும்

மன்மதன் இவனென்று யாவருஞ் சொல்லத்தக்க அழகுடன் இவ்வுலகத்தில் பிறந்து என்றவாறு.

பதும வருண னெனும்பெயரும் படைத்துப் படைக்குங் கொடைதனக்கு
முதிய வெண்ணெண் கலைக்குநிகர் மொழியி னிணையி லிவற்கென்ன
மதியம் வளரும் படியென்பான் வளருநாளின் மாமயினீ
நதியம் வளங்கூர் விதேகவள நாட்டிற் கரசன் மகளாக. 28

இ-ள்: பதுமவண்ணன் என்கின்ற பெயரும் பெற்று ஆயுதப் பயிற்சியிலும் தியாகத்திலும் பழமையாகிய அறுபத்துநான்கு கலைகளிலும் இவனுக்கொப்பச் சொல்லுவோமானால் வேறொருவருமில்லையென்னும்படி பிறைவளருந் தன்மைபோல நான் வளரும்நாளில் பெருமைமிக்க மயில் போன்றவளே! நீ ஆற்றின் வெள்ளம் மிகுந்த வளப்பத்தைத் தரத்தக்க விதேகநாட்டரசன் புதல்வியாக என்றவாறு.

முளரிப் பொகுட்டு வட்டவணை முருகுநாறு மலர்க் கோயின்
விளரிக் குதலைச் செந்திருவும் விழைய மழகி னுடன்பிறந்து
வளரு நீயும் வசுமதியென் றொருபேர் புனைந்து வாழுநாள்
தளரு மிடைநின் றிருத்தாதை யமைச்ச ருடனே சாற்றுவான். 29

இ-ள்: பூங்கொட்டையாகிய வட்டவடிவமுள்ள ஆசனத்தில் வாசனைகமழ்கின்ற செந்தாமரைப்பூங்கோயிலில் வீற்றிராகின்ற இராகத்தையொத்த குதலைச்சொல்லையுடைய மகாலட்சுமியும் ஆண்மைத்தன்மை கொள்ளும்படி விரும்பத்தக்க அழகுடன் பிறந்து வளருகின்ற நீ வசுமதி என்கிற ஒப்பற்ற பெயர்பெற்றுவாழும்நாளில் மெலிகின்ற நுண்ணியதாகிய இடையினையுடைய உன்னைப்பெற்ற சிறப்புள்ளத் தந்தையானவன் மந்திரிகளுடன் சொல்லுவான் என்றவாறு.

ஆடவர்கள் அழகுள்ள மற்றோர் ஆடவனைக்கண்டால் தாங்கள் பெண்களாகப் பிறந்து அந்த ஆடவரைச் சேரவேண்டுமென்று ஆசை கொள்வதும், மாதர்கள் அழகுள்ள மற்றொரு மாதினைக்கண்டால் அவ்வாறு எண்ணுவதும் இயல்பு. "ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்" என்றமையுங் காண்க.

பாலை யனைய மொழிக்குமங்கைப் பருவம் வந்த திதுபோழ்தின்
மாலை யணியுஞ் சுயம்வரஞ்செய் மணிமண் டபமுங் கடிதினமைத்
தோலை எழுதித் திசைமன்னர்க் குய்ம்மி னென்ன வாங்கவருங்
காலை மணிமண் டபமியற்றித் தூதி னோலை கடிதுய்த்தார். 30

இ-ள்: என்ன சொல்லுகின்றோம் என்றால் பாலின் மதுரத்தையொத்த மதுரமுள்ள சொல்லையுடைய நம்முடைய புத்திரிக்கு இப்போது

மங்கைப்பருவம் வந்தது. ஆதலால் பூமாலைசூட்டும் சுயம்வரஞ்செய்யும்படியான அழகிய மண்டபமும் விரைவாக ஏற்படுத்திக் கல்யாண ஓலையெழுதி ஐம்பத்தாறு தேசத்து அரசர்கட்கும் அனுப்புங்கள் என்றுசொல்ல, அந்த உரையைக்கேட்ட மந்திரிகள் அவ்வரசன் நாளுக்கு மறுநாள் விடியற்காலமானபோது மணிகள் பதித்த கல்யாணமண்டபம் அலங்காரஞ்செய்து விரைவாகத் தூதர்களுடன் கல்யாணவோலையும் அனுப்பினார்கள் எ-று.

முடங்கற் பொருளை யுற்றுணர்ந்து மூரித் தேரின் முடங்குளைய
மடங்கல் வருவ தெனத்தமது நிகமங் கடல்போல் மருங்குவரக்
கடங்கள் கடந்து நதிகடந்து காடும் நாடுங் கழியப்போய்த்
தடங்கொள் விதேக நாடடையுந் தார்வேன் மன்னர் திறம்புகல்வாம். 31

இ - ள்: அந்தக் கல்யாண ஓலை வந்துசேர்ந்தவுடன், அதிலெழுதியிருக்கும் செய்தியை நன்ருகக் கேட்டுணர்ந்து தங்கள் தங்கள் பலம் பொருந்திய தேர்களிலேறிக்கொண்டு, வளைந்த கழுத்தின் மயிரினையுடைய சிங்கங்கள் வருதல்போல் தங்கள் நகரத்தில் இருப்பவர்களுங்கூடிக் கடல்போல் வரும்படி அருநெறி கடந்தும் காறுறுகள் கடந்தும் காடுகளும் நாடுகளும் பின்னிடப்போய் விசாலமுள்ள விதேகநாட்டில் அடைகின்ற வேலாயுதமேந்திய அரசர்கள் இன்னரின்னரென்று சொல்லுகிருேம் என்றவாறு.

கள்ளக் கருங்கண் கடைசியர்வாண் முகம்போற் கமலங் கவின்காட்டி
அள்ளற் பழனந் தோறுமலர் அயோத்தி நகர மரசாளும்
வெள்ளைக் கவிகைத் தனிச்செங்கோல் வேந்தர் வேந்தன் முடியுழுதாள்
வள்ளற் றகையாங் குருகுலத்தோர் மருமா னரசர் பெருமானே. 32

இ - ள்: கள்ளத்தன்மையையுடைய கருமையாகிய கண்களுள்ள கடைசியர்களின் முகங்களைப்போலச் செந்தாமரைமலர்கள் அழகுகாட்டிக் குழைசேற்றினையுடைய வயல்கள்தோறும் மலருகின்ற அயோத்தி நகரிலிருந்து அரசாட்சி செய்கின்ற வெள்ளைக் குடையினையும் தனிமையான செங்கோலையுமுடைய அரசனுகி, மறுதேசத்தரசர்கள் அணிந்த மகுடங்கள் படும்படியான அடியையும், இரப்பவர் முதலானவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் கொடுக்காநின்ற பெருமைப்பாட்டினையும் உடையவர்களாகிய கௌரவகுலத்தாருக்கு மருமகனுமாகிய மன்னர் மன்னவனும் என்றவாறு.

வேறு

வருகுல மகளிர் தங்கண் மனமெனத் திருந்து கோலான்
பெருகுலம் பொருத திண்டோட் பிறங்கலா னிறங்கொள் வேலோன்
முருகுல வாத செங்கேழ் முண்டக மடந்தை கேள்வன்
குருகுலந் தழைய வந்த குனிசிலை வயப்போர் வேந்தன். 33

இ - ள் : தாய்மரபு தந்தைமரபு என்னும் இரண்டு மரபிலும் சந்ததி பரம்பரையாய்க் கற்புநிலை தவறாமல் வருகின்ற குலமகளிர் மனம்போல நீதியில் தவறாத செங்கோலையுடையவனும், பெரிய திரண்ட கல்லுகளின் வலிகெடச் செய்யத்தக்க மலையொத்த பலம்பொருந்திய தோளையுடைய வனும், ஒளிபொருந்திய வேலையுடையவனும், மணம்கெடாத செந்நிறமுள்ள தாமரைமலரிலிருக்கும் இலக்குமியின் கணவனாகிய திருமாலைப்போலக் காக்கும் செய்கையுடையவனும், வளைந்த வில்லைக்கொண்டு போர்செய்து வெற்றி பெறுகின்றவனுமாகிக் குருகுலம் பெருமைபெற்று ஓங்கவந்த அரசனும் என்றவாறு.

மன்னவர் மகுட கோடி மணித்தொகை யுழுத தாளான்
கன்னவில் வயிரத் தோளான் கருணையங் கமலக் கண்ணன்
பொன்னவிர் சுணங்கு பூத்த பொங்கிள முலையி னார்தம்
மின்னகு வார்விற் செங்கை மீளிகாந் தார வேந்தன். 34

இ - ள் : அரசர்களது முடிகளில் பதித்திருக்கும் மணிகள் உராயும் படியான கால்களையுடையவனும், மலைக்கொப்பாகச் சொல்லுகின்ற பலம் பொருந்திய தோளையுடையவனும், கருணையுடைய அழகிய செந்தாமரை போன்ற கண்களையுடையவனும் பொன்போல் ஒளிவிடுகின்ற தேமலை யுடைய இளைய தனங்களையுடைய பெண்கள் கண்டு தமக்குள் மகிழத்தக்க அழகுள்ளவனாகி நீண்ட வில்லேந்திய செங்கையினையுடைய வீரனுமாகிய காந்தாரநாட்டு மன்னனும் என்றவாறு.

வேறு

உதய கிரிக ளோரிரண்டி னுதிக்கு முபய தபனரெனச்
சிதைவின் மகர குண்டலங்க டிளைக்கக் கவினுந் திணிதோளான்
புதைகொள் பகழி யூழிமுறை பொழியு முகிலிற் சொரியுமிகல்
குதைகொ ணெடிய வரிசிலைக்கைக் குந்தி போசன் குணமிக்கான். 35

இ - ள் : இரண்டு உதயமலைகள் இருந்து அவைகளில் இரண்டு சூரியர்கள் தோன்றினாற்போலக் கெடுதலில்லாத மணிமகர குண்டலங்கள் பொருந்தலால் அழகுசெய்யும் தோள்களையுடையவனும், கட்டுகள் கட்டப் பட்ட பாணங்களை ஊழிக்காலத்தில் முறையாக மழைபொழிகின்ற மேகம் போலப் பிரயோகம் செய்யும்படியான வயிரம்பற்றிய குதையினையுடைய நீண்ட பெரிய விற்பிடிக்கும் கையினையுடைய நல்ல குணத்தினால் உயர்ந்த வனுமாகிய குந்திபோச அரசனும் என்றவாறு.

வேறு

விலைவரம் பறியலாகா வெயின்மணி யிமைக்கு மார்பன்
கலைவரம் பறிந்த வுண்மைக் கருத்தினு னறத்தின் மிக்கான்
மலைவரம் பாயஞால வலயத்தில் வரிகொள் வேழச்
சிலைவரங் கொண்ட வேளுங் காமுறுஞ் சிந்து வேந்தன். 36

இ - ள் : இவ்வளவு பெறுமென்று விலையின் அளவை அறியக் கூடாதவைகளாய் ஒளிமிக்க இரத்தினுபரணங்களிலிருந்து ஒளிவிடும்படியான மார்பினையுடையவனும் சாத்திரங்களினளவையறிந்த உண்மையான மனதையுடையவனும் அறத்தில் மேம்பட்டவனுமாகிய சக்கரவாளமலையை எல்லையாக உடைய வட்டமாகிய இவ்வுலகத்தில் வண்டுகளாகிய நாண் பொருந்திய கரும்புவில்லினுல் மேன்மைகொண்டிருக்கும் மன்மதனும் பெண்ணுருவங்கொண்டு புணரவேண்டுமென்று விருப்பங்கொள்ளத்தக்க அழகுள்ள சிந்துதேசத்தரசனும் என்றவாறு.

கோளுறு மதிய நாண்மீன் குழாத்திடை வருவ தேய்ப்ப
வாளுறுந் தடக்கை மன்னர் புடைவர வருதிண் டேரான்
வேளுறு வனப்பின் மிக்கான் விரிதிரை வேலை ஞாலந்
தோளுறப் பரிக்கு மாணைத் துருபதன் சுடர்செய் பூணுன். 37

இ - ள் : நவக்கிரகங்களிலொன்ருகப் பொருந்திய சந்திரன் உடுக் கூட்டத்தின் நடுவில் வருவதைப்போல வாள்பொருந்திய கையையுடைய அரசர்கள் நாலுபக்கத்திலுஞ் சூழ்ந்துவரும்படி நடுவில் வருகின்ற பலம் பொருந்திய தேரையுடையவனும் மன்மதன் பெற்றிருக்கும் அழகிலும் மிகுந்த அழகுள்ளவனும் பரவிய அலைகளையுடைய கடல் சூழ்ந்த பூமி பாரத்தைத் தன்தோளிற்பொருந்தத் தாங்கும்படியான ஆணைச்சக்கரத்தையுடையதுருபதன் என்றபெயருள்ளவனுமாகிய ஒளிவிடாநின்ற ஆபரணம் அணிந்திருக்கும் அரசனும் என்றவாறு.

குடைநிழ லிருளைக் காட்டக் குரைகழன் மன்னர் செங்கைப்
படைநிழல் வெயிலைக் காட்டச் செல்லும்வாம் பரித்திண் டேரான்
மடைவளர் சங்க மீன்ற மணியினைக் கருவென் றன்னம்
அடைகிடந் துலவு நன்னுட் டவந்தியி னரசர் கோமான். 38

இ - ள் : குடைகளின் நிழல் இருளைக்காட்டவும் ஒலிக்கின்ற வீர கண்டை அணிந்த கால்களையுடைய அரசர்களது செங்கையில் இருக்கும் வாளாயுதம் முதலாகிய ஆயுதங்களின் ஒளி அவ்விருள்நீங்கும்படி வெயிலைக் காட்டவும் நால்வகைச் சேனையுடன் செல்லும்படியான தாவுகின்ற குதிரை பூட்டிய பலம்பொருந்திய தேரையுடையவனும் வயல்மடையில் தவழ்கின்ற சங்கங்களீன்ற முத்துக்களை அன்னங்கள் தங்கள் முட்டைகளென்றெண்ணி

அடைகிடந்து சஞ்சரிக்கும்படியான நல்ல அவந்தி தேசத்தை ஆளுகின்றவனும் மன்னர் மன்னனுமான அரசனும் என்றவாறு.

கண்ணகன் ஞால மெல்லாங் கலிகடிந் தருளிற் காத்தோன்
வண்ண நீ ளலத்தி ளுன்றன் பின்வந்த மழையாம் வண்ணத்
தண்ணரு னுதித்த தொல்சீ ரெதுகுல மதனிற் றேன்றும்
புண்ணுறு புலவு வாட்கைப் புரவல னறிவின் மிக்கான். 39

இ - ள்: பாபத்தை நீக்கி உயிர்களிடத்தில் கருணைவைத்து இடமகன்ற பூமியெல்லாம் காப்பவனும் அழகிய நீண்ட கலப்பை ஆயுதத்தையுடைய பலபத்திரராமன் பின்வந்த நீருண்ட மேகம்போலக் கருமைநிறமுள்ள கண்ணன் தோன்றிய புகழ்பெற்ற பழமையாகிய எது குலத்திற் பிறந்த பகைவருடைய உடலிலூன்றிப் புண்ணுண்டாகச் செய்வதற்கேதுவான வாள்பிடிக்கும் கையை உடையவனும் அறிவில் மிகுந்தவனுமாகிய அரசனும் என்றவாறு.

புல்லடு வெகுளி வேகப் புழைக்கைமேல் புலரிக் காலை
எல்லொளி யுதயத் தும்ப ரியைவதே போலத் தோன்றுங்
கல்லடு திரடோ ளாற்றற் காவலன் கரும்பின் வேலிப்
பல்லவ தேச மாளும் பார்த்திபன் பகைவர்ச் செற்றேன். 40

இ - ள்: வைகறையில் சூரியன் ஒளியையுடைய உதயமலையில் பொருந்துவதுபோல் புலியையும் கொல்லுகின்ற கோபமும் வேகமுமுள்ள யானையின்மேல் தோன்றுகின்ற மலைகளையும் பிளக்கத்தக்க திரண்ட புயவலியையுடைய காவலனும் பகைவர்களை யுத்தத்தில் கொன்றவனுமாகிய கருப்பஞ்சோலைகளை வேலியாகச் சூழ்ந்திருக்கத்தக்க பல்லவதேசத்தை ஆளும் அரசனும் என்றவாறு.

காரணங் கடந்த ஞானக் கண்ணுதல் சடையில் வாழும்
நீரணங் கூழி காறு நீத்தரு வளங்கூர் நாடன்
ஆரணம் புகலு நாவி னந்தணர்க் களிக்குங் கையான்
வாரணம் பொருந்து தானை வாரண வாசி மன்னன். 41

இ - ள்: தனக்குமேல் ஒரு முதலில்லாமல் யாவர்க்கும் யாவைக்கும் தானே முதலாய்நின்ற நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன் சடைமுடியில் வாழ்கின்ற நீருருவமாகிய கங்கையானவள் ஊழிக்காலம் வரைக்கும் நீங்காமல் பெருகிக்கொண்டிராநின்ற வளப்பமிக்க நாட்டினையுடையவனும் வேதம் ஓதுதலையுடைய பிராமணர்க்குத் தானங்கொடுக்கும் கையையுடையவனுமாகிய யானைகளுள்ள சேனையையுடைய வாரணவாசிப் பட்டணத்தில் இருக்கும் அரசனும் என்றவாறு.

வீரர்கள் போர்க்களத்தில் சண்டைசெய்யும் திறத்தால் வீர சுவர்க்கம் அடையலாம் என்கின்ற எண்ணங்கொண்டு போர்செய்கின்றவர்கள். யானை அத்தகைய எண்ணமில்லாமல் கோபமிகுதியால் சண்டை செய்யத்தக்கதாகையால் அரசர்க்குள்ள நால்வகைப்படையுள் யானைப் படையைச் சிறப்பாகச் சொல்வது மரபு.

கொல்லுலை யகத்திற் காய்ந்து குருதிதோய் கொடிய வேற்கண்
அல்லுரு வமைந்த கோதை யணங்கனுர்க் கமுத மன்னன்
எல்லுயர் கனகக் குன்றத் தெழுதிய பழுதி லாற்றல்
வில்லுயர் துவசத் திண்டேர் வில்லவன் கொல்லி வேந்தன். 42

இ - ள்: கருமானுடைய உலைக்களத்திற் காய்ந்து பகைவரது உதிரத்தில் படிகின்ற கொடியவேலாயுதம்போலக் கூரியதாகிய கண்களையும், இருளானது மயிருருவங்கொண்டு இருப்பதுபோலக் கருமைநிறந் தங்கிய அளகத்தையுமுடைய தெய்வப்பெண்களை ஒத்தமாதர்கட்கு அழகினல் அமுதம்போல் இருப்பவனும், ஒளியுடன் உயர்ந்திராநின்ற பொன்மலையாகிய மகமேருவினிடத்தில் தீட்டிய குற்றமில்லாத பலமுள்ள உயர்ந்த விற்கொடி கட்டிய உறுதியான தேரையுடைய கொல்லிமலைக்கு அரசனுமாகிய சேரராசனும் என்றவாறு.

மகமேருவில் கொடிதீட்டினவன் என்பதினல் அரசர்களை எல்லாம் வென்றவனென்பதாயிற்று.

பண்டைய மனுநூல் காட்டிப் படையெடுத் தடுபோர் வென்று
சண்டனைத் தனது தேயத் தடைவது தவிர்த்த விரன்
கொண்டலை யிபங்க ளென்று கோளரி முழங்கிச் சீறி
மண்டமர் புரியு நேரி மலையினன் வளவர் கோமான். 43

இ - ள்: பழமையாகிய மனுநூல் முறைமையைக் காட்டிப் படையெடுத்துப்போய்க் கொல்லுகின்ற போர்செய்துவென்று யமதருமராசனைத் தன்னுடைய தேசத்தில் வரவொட்டாமல் தடுத்தவனும், மேகங்களை யானைகள் என்றெண்ணி ஆரவாரித்துச் சீறி எதிரேற்றுப் போர்புரியும் படியான சிங்கங்கள் இருக்கின்ற நேரிமலையை உடையவனுமாகிய சோழ அரசனும் என்றவாறு.

என்றிவர் முதல வேந்தர் யாவரும் சுயம்வ ரத்தின்
பொன்றிகழ் மண்ட பத்தே புகுதயான் புகுத லோடு
மன்றலந் தண்டார் நீயென் மணிப்புயத் தணிதல் கண்டு
கன்றிய மனத்த ராகிக் காவலர் வெகுளி மிக்கார். 44

இ - ள் : ஆகிய இந்த அரசர்கள் முதலாகிய அரசர்களெல்லாரும் பொன்னால் செய்யப்பட்டு ஒளிவிடாநின்ற சுயம்வரமண்டபத்தில் சேர நானும் வந்து சேர்ந்த அளவில் நீ வாசனையும் குளிர்ச்சியுமுள்ள பூமாலையை என்னுடைய அழகிய புயத்தில் சூட்டுவதை வந்திருந்த அரசர்களெல்லாரும் பார்த்து மனம் வெதும்பினவர்களாய் மிக்க கோபங்கொண்டார்கள் என்றவாறு.

வேறு

யாம்பல ரொருவனீண் டிவன்மணஞ் செய்து
போம்பழிக் கியாமுளம் பொருந்தி லோமென
வாம்பரித் தேர்கடாய் வந்து மற்றவர்
பாம்பினங் கருடனைப் பகைக்கும் பண்பினே. 45

இ - ள் : இவ்வாறு கோபங்கொண்ட அந்த அரசர்கள் நாம் பல பேராயிருக்கின்றோம். இப்போது மாலை சூட்டிக்கொண்ட இவ்வரசன் ஒருவன் (அவ்வாறிருக்க நமக்கெல்லாம் இகழ்ச்சி உண்டாகும்படி) இவன் மணஞ்செய்துகொண்டு போவதை நம்முடைய மனதில் ஒத்துக்கொள்ளப் படாதென்று (தங்களில் ஆலோசனை செய்துகொண்டு) தாவுகின்ற குதிரைகள் கட்டிய தேர்களைச்செலுத்திப் பாம்புக்கூட்டங்கள் கருடனுடன் சண்டைசெய்ய விரும்பி எதிர்க்குந்தன்மைபோல என்னெதிரில் வந்து என்றவாறு.

வேறு

அவரம ரெதிர்தலு மழலெழ விழியா
இவருயிர் பருகுவ னெளிதினி லெனவே
யுவர்படு கடனில முவளுற வடுதேர்
பவனனில் விசையுறு பரிகொடு கடவா. 46

இ - ள் : அந்த அரசர்கள் சண்டைசெய்ய எதிர்த்தார்கள். அவ்வாறு எதிர்க்கவே நான் என் கண்களில் தீப்பொறி உண்டாகும்படி அவர்களைக் கோபத்துடன் பார்த்து இவ்ர்களுயிரை எளிதாக இப்போது வாங்கிவிடுகிறேன் என்று உப்புநீர் பொருந்திய கடல்சூழ்ந்த பூமியும் வாடும்படி பிளந்துகொண்டு செல்லுகின்ற என்னுடைய தேரை வாயுவைப் போல விரைவுடன் செல்லுகின்ற குதிரைகளைக்கொண்டு அவர்கள் எதிரில் செலுத்தி என்றவாறு.

தேரணி பரியணி சிறுதுக ளுறவுந்
தாரணி படையணி தரைமிசை கெடவுங்
காரணி யெனமத களிறுகள் விழவும்
போரணி கருவிகள் பொடிபொடி படவும். 47

இ - ள் : தேர் குதிரைப்படை வகுப்புக்கள் சிறியதுபோலாகவும் தும்பைப்பூ மாலை அணிந்த காலாட்படை வகுப்பு கால்வேறு கைவேறு தலைவேருக அறுபட்டுப் பூமியில் விழவும், மேக ஒழுங்குபோல யானை வகுப்பு அறுபட்டு விழவும், போர் செய்வதற்காகச் சாணைபிடித்திராநின்ற ஆயுதவர்க்கங்கள் பொடிப்பொடியாகி உதிர்ந்து விழவும் என்றவாறு.

மன்னவர் தேர்மிசை மந்திர மொழிவார்
சென்னிகள் விழவவர் தேர்மிசை யிறையோர்
பொன்னவிர் முடிவிழு பூசலின் வெருவா
அன்னவ ரொடுமவ ரடவிகள் புகுவார். 48

இ - ள் : (இவ்வாறு நடக்கின்ற போர்க்களத்தில்) ஒரு புறத்தில் அரசர்கள் இருக்கும் தேர்களினிடத்தில் மந்திரிகளுடைய தலைகள்விழ மற்றொருபுறத்தில் மந்திரிகளிருக்கும் தேரினிடத்தில் அரசர்களுடைய பொன்னால் செய்யப்பட்டு ஒளிவிடுகின்ற கிரீடம் அணிந்திருக்கும் தலைகள் விழுகின்ற சண்டையில் பயந்து இறந்தவர்கள்போகப் பிழைத்திருக்கும் அரசர்களும் மந்திரிகளும் காட்டில்போய் ஒளித்துக்கொள்ளுவார்கள் என்றவாறு.

வேறு

சுயமரத் தெதிர்ந்தோர் தம்மைத் துருபதன் றனையைக் காக
வயமலி சிலையால் வென்ற வாகைவேல் விசய னேபோல்
கயமலர்க் கண்ணி நிற்காக் காவலர் தம்மை வென்று
புயறெடு புரிசைக் கூட னின்றெடும் புகுந்த பின்னர். 49

இ - ள் : (இத்தன்மையாகப் போரில் தோற்று ஓடிப்போகும்படி) சுயம்வரத்தில் எதிர்த்த அரசர்களைத் துருபதராசன் புத்திரியாகிய துரோபதைக்காக வெற்றி மிக்க வேலாயுதத்தையுடைய அருச்சுனனானவன் வெற்றி மிகுந்த காண்டீபத்தினால் செயங்கொண்டதுபோலத் தடாகத்தில் மலருந் தாமரைமலரையொத்த கண்களையுடைய நாயகியே! உன்பொருட்டு எதிர்த்த அரசர்களையெல்லாம் வென்று உன்னை என் தேரில் வைத்துக் கொண்டு மேகமண்டலத்தை அளாவுகின்ற மதில்சூழ்ந்த மதுரையில் நான் சேர்ந்த பின்பு என்றவாறு.

துருபதராசனென்பவன் பாஞ்சாலராசன்.

ஆயிழை நீயும் நானு மளப்பருங் காலமின்பம்
ஒய்வறத் துய்த்து நேமி யொருகுடை நிழல்கொண் டோச்சி
காயெரிக் கடவுண்முன்னர்க் கணக்கில மகங்கள் செய்து
சேயுயர் விசும்பின் வாழுந் தேவர்தங் கடன்க ழித்தும். 50

இ-ள்: நல்ல ஆபரணங்களை அணிந்திருக்குந் தலைவியே! நானும் நீயும் அனேககாலம் ஒழிவில்லாமல் இன்பம் அனுபவித்து இந்தப்பூமியை என் ஒற்றைக்குடை நிழலில்வைத்துச் செங்கோல் செலுத்தியும் ஒளிவிட்டெழுகின்ற அக்கினிதேவன் முன்னுக அளவில்லாத யாகங்கள் செய்து மிகவும் உயர்ந்ததாகிய சுவர்க்கலோகத்தில்வாழும் தேவர்கள் கடன்களைத் தீர்த்தும் என்றவாறு.

யாகம் 5. அவை பிரமயாகம், தேவயாகம், பூதயாகம், பிதிர்யாகம், மானுடயாகம் என்பவைகளாம்.

1. பிரமயாகம் - வேதமோதுதல்.
2. தேவயாகம் - வேள்விசெய்தல்.
3. பூதயாகம் - பலியிடுதல்.
4. பிதிர்யாகம் - தர்ப்பணஞ்செய்தல்.
5. மானுடயாகம் - இரப்போர்க்கு உணவு முதலியன ஈதல்.

அந்தணர் தங்க ணெஞ்சத் தவாக்கெடத் தான மீந்துஞ்
செந்தழல் புரையு மேனிச் சிவனடி பூசை செய்தும்
பைந்தொடி நீயும் யானும் பண்டுசெய் தவத்தி னலோர்
மைந்தனை யீன வந்த மைந்தனு மறையோர் தம்பால். 51

இ-ள்: பிராமணர்கள் மனதிலுண்டாகும் ஆசை நீங்கும்படித் தானங்கொடுத்தும் சிவந்த நெருப்பினை ஒத்த திருமேனியையுடைய பரமசிவனது திருவடியைப் பூசித்தும் மாற்றுயர்ந்த பொன்னினல் செய்யப்பட்ட வளையல் அணிந்த கையையுடையவளாகிய மனைவியே! நீயும் நானும் பண்டுசெய்த தவவலிமையாலே ஒரு மகனைப்பெற அந்தமகன் (வேதம் முதலாகிய சாத்திரங்கள் கற்பிக்கும்) பிராமணர்களிடத்தில் என்றவாறு.

கலைபல பயின்று முக்கட் கடவுளுக் கடிமை பூண்டு
நிலையிலா வுலகு தன்னி னிலைபெறப் புகழ் நிறீஇயும்
சிலைவலித் திரடோ ளாற்றல் சேருநா ளமைச்சர் தம்மோ(டு)
அலைகடற் பார மெல்லா மவன்வயி னளித்து யானும். 52

இ-ள்: அறுபத்துநான்கு கலைகளுங்கற்றுணர்ந்து முக்கண்களையுடைய பரமசிவனுக்கு அடிமையாகி நிலையற்றதாகிய உலகத்தில் புகழ் நிலைநிற்கும்படி நிறுத்தி விற்போர் செய்யும் பலமுள்ள திரண்ட புயவலிமை சேர்ந்தநாளில் மந்திரிகளையும் அலையுள்ள கடல்சூழ்ந்த பூமிபாரமெல்லாவற்றையும் அந்தப் புதல்வனிடத்தில் கொடுத்து அதன்பின்பு நான் எ-று.

பொய்யுட லெடுத்து மாயப் புணரிக ணீந்தி நீந்திக்
கையிணை கடுத்து மீண்டக் கடலிலாழ்ந் திறந்து போக
மையுறு பிறவி மாய்த்து மறைகளின் சிரத்தி னிற்கு
மெய்யுறு நிலைமை தேர்வான் வேட்கைகூ ருளத்த ஞகி. 53

இ - ள் : பொய்யாகிய இவ்வுடலெடுத்து மாயையாகிய கடல்களில் விழுந்து (அவை கடக்கவேண்டுமென்று) நீந்தி நீந்திக் கைகளும் கடுத்து (கரைசேரக் கூடாமையால்) பின்னும் அந்தக் கடல்களில் ஆழ்ந்திறந்து போகும்படியான குற்றம்பொருந்திய பிறவியை ஒழித்து வேதங்களின் முடிவிலிராநின்ற உண்மையாகிய நிலைமையை அறியவேண்டும் என்கின்ற விருப்பமிக்க மனமுள்ளவனுக என்றவாறு.

காமத்தினுல் மாயைகளை நீங்கவேண்டினுல் மேலும்மேலும் அம் மாயைகள் விருத்தியாகும். ஆகவே மனம் வருந்தும் என்பார் 'புணரிகள் நீந்திநீந்திக் கையிணை கடுத்தும்' என்ருர். ஞானத்தினுல் கடக்கலாம் என்பது துணிவு.

பொன்னெடுங் குன்ற மன்ன புணர்முலைப் பொலன்கொம் பொப்பாய்
என்னெடுஞ் செல்வ மெல்லா மெனதல வென்று நீத்து
நின்ளெடும் போகி வேலை நெடுங்கட லங்கை கொண்ட
மன்னெடுந் தவத்தின் மிக்க மாதவ னிருந்து வாழும். 54

இ - ள் : உண்மைநிலையை அறியவேண்டுமென்கிற விருப்பம் என் மனதில் உண்டானதினுல் நெடிய பொன்மலையை ஒத்த நெருங்கிய தனங் களையுடைய பொன்கொம்பினை ஒத்த நாயகியே! அஞ்ஞானத்தினுல் என் னுடையதென்று நினைத்துக்கொண்டிருந்த பெரிய செல்வங்களையெல்லாம் என்னுடையதல்லவென்று நீக்கிவிட்டு உன்னுடன் போய்க் கரையை யுடைய அளவிடக்கூடாத கடல்நீரை உள்ளங்கையில் ஏற்றுண்ட நிலை பெற்ற பெரிய தவத்தில் மிகுந்த அகத்தியமுனிவர் தங்கிவாழும் எ - று.

சந்தனப் பொதும்பர் சூழப் பொருநையந் தாம நாற்றிச்
செந்தமிழ் முழுது நாறத் தென்றலங் கன்று நல்கும்
சுந்தரப் பொதியக் குன்றைத் தொழுதனம் வலங்கொண் டேத்திக்
கொந்தழ லைந்தி னுப்பண் கோதறு தவஞ்செய் காலை. 55

இ - ள் : சந்தனச்சோலை சூழ்ந்திருக்கத் தாமிரபருணியென்னும் பூமாலையைத் தொங்கவிட்டு இயல், இசை, நாடகமென்கிற தமிழ் முழுவதை யும், வாசனை வீசுகின்ற இளந்தென்றற் காற்றினைத் தருகின்ற அழகுள்ள பொதியமலையை நாம் வலமாகவந்து தோத்திரஞ்செய்து சிகைவிட்டெரி கின்ற பஞ்சாக்கினி மத்தியிலிருந்துகொண்டு குற்றமற்ற தவஞ்செய்யும் காலத்தில் என்றவாறு.

குறுமுனி வந்து தோன்றிக் கொடும்பவக் கடலை மாய்த்து
மறுவுறு பிறவி மாய மம்மர்நோ யகற்றிப் பின்னர்
அறுசம யங்க ளுக்கு மதீதமாஞ் சிவயோ கத்தை
உறுதியா யுபதே சிப்ப யாமந்த வுபதே சத்தால். 56

இ - ள் : அகத்தியமுனிவர் வந்து கொடியதாகிய பாபக்கடலை ஒழித்துக் குற்றந்தங்கிய பிறவியானது நீங்கும்படி மயக்கமாகிய பிணியைத் தொலைத்துப் பின்பு அறுசமயங்களுக்கும் அதீதமாகிய சிவயோகத்தை உறுதியாக உபதேசிக்க நாம் இந்த உபதேசத்தினால் என்றவாறு.

சிவயோகமாவது ஞானசாரியர் கருணையினால் தன்னையும் சிவத்தை யுங்கண்டு தற்போதஞ் சீவியாமலிருப்பது.

எள்ளுறு மெண்ணெய் போல வெங்கணும் பரந்து நின்ற
வள்ள றன் வடிவு கண்டு மனத்தினா னந்த மூறி
விள்ளுத லில்லா வின்பம் விளைசிவ வனுபூ திக்கே
கள்ளரு மலர்வீழ் வண்டின் முத்தியிற் களிப்பேங் கண்டாய். 57

இ - ள் : எள்ளிற்பொருந்திய எண்ணெய்போல எவ்விடத்தும் நிறைந்திருக்கும் பரமசிவனது சொரூபத்தைக்கண்டு மனதில் ஆனந்தமூறி ஒருக்காலும் ஒழியாத பேரின்பம் விளையாநின்ற சிவானுபூதி அனுபவிக்கும் பொருட்டுத் தேன் இடைவிடாது பெருகாநின்ற மலர்களில் தங்கி அந்தத் தேனையுண்ணும் வண்டுகளைப்போல மோட்சவுலகில் ஆனந்தம் அடைந் திருப்போம் என்றவாறு.

வேறு

என்று மன்னவ னிறுத்தனன் பின்னரு மிசைத்தான்
அன்று நாயுரு வெடுத்தியா னிறந்திடு மளவில்
கொன்றை யஞ்சடைக் குரிசிலைக் கண்ணுறுங் கொள்கை
தொன்று பட்டதாற் பிறப்பெலாந் துரிசற வுணர்ந்தேன். 58

இ - ள் : இவ்வாறு பேரானந்தம் அடைவோமென்று சொல்லி அவ்வரசன் பின்னுஞ் சொல்வான், நான் முன்னாளில் நாயுருவெடுத்திருந்து இறக்குங்காலத்தில் கொன்றைப்பூ மாலையணிந்த அழகிய சடாமகுடத்தை யுடைய பரமசிவனைத் தரிசிக்குந் தன்மை முன்னமே கிடைத்ததினால் பிறப்புக்களையெல்லாம் களங்கமற அறிந்தேன் என்றவாறு.

வேறு

பரவை யுலகிற் பதினாலாம் பக்கத்
திரவு தொறுஞ்சிவனை யேத்தியடி பேணி
யரிவை பிறவி யகற்றுவா யென்று
குரிசின் மொழிந்தான் குலக்கொடியுங் கேட்டே 59

இ - ள் : மனைவியே! சிவராத்திரியில் பரமசிவனை வழிபட்டதினாலே இத்தகைய மேலான பதங்கிடைத்தது. ஆதலால் நீயும் கடல்சூழ்ந்த பூவுலகில் சிவராத்திரிதோறும் பரமசிவனுடைய திருவடிகளைப் பூசித்துத் தோத்திரஞ்செய்து பிறவியை நீக்கிக்கொள் என்றுசொன்னான். அதனை அம்மாது கேட்டு என்றவாறு.

நன்று சிவநிசியி னன்மை யென நவிலா
அன்று முதலரனை யாயிழையும் பூசித்தாள்
மன்றல் கமழ்செழுந்தார் மன்னவனு மாதருமாய்ச்
சென்றுபிறப் பேழ்கழியச் சின்மயவீ டெய்தினர். 60

இ - ள் : இவ்வாறு தன்கணவன் கூறிய உரையைக்கேட்ட அரசியானவள் சிவராத்திரியின் பலன் மிகவும் நன்மையாயுளதென்று கூறி அந்நாள்முதல் அவளும் சிவராத்திரியில் பரமசிவனைப் பூசித்துவந்தாள். அவ்வாறு பூசித்துவந்து ஏழாம்பிறவி நீங்கியவுடன் மணங்கமழும் மலர்மாலையணிந்திருக்கும் அந்த அரசனும் அவன் மனைவியும் ஒருநாளில் இவ்வுலகை விட்டுநீங்கி முத்தியுலகை அடைந்தார்கள் என்றவாறு.

இத்தகைய வாமென்றே யீரேழாம் பக்கத்தின்
மெய்த்திறனு மீசன் விளையாட்டின் வித்தகமும்
பத்தி வழியடியார் பான்மையுமற் றுங்கவர்தா
முத்தி பெறும்வழியு மென்றான் முனிவரனே. 61

இ - ள் : பராசரமுனிவரானவர் விமரிச மன்னனைப் பார்த்து, அரசே! சிவராத்திரியின் உண்மையான பெருமையும், பரமசிவனது திருவிளையாட்டின் உயர்வும், அன்புவழியில் செல்லும் அடியார்களின் தன்மையும், அவ்வடியார்கள் முத்திபெறும் முறைமையும் இத்தன்மையன என்றார் என்றவாறு.

மற்று, ஆங்கு - அசைநிலை.

பேரறிவின் மாமுனிவன் பின்னருநன் றோதினான்
வாரிபுடை சூழுலகின் மன்னுயிர்கள் யாவர்க்கும்
நீரணியும் வேணி நிமலனே தெய்வதமும்
ஈரமுறு கேளு மிருடீர் குரவனுமே. 62

இ - ள் : ஞானவறிவினையுடைய கவுதமரானவர் இதுவரையில் கூறியதுமல்லாமல் மேலும் விளக்கமுறச்சொல்லுகிறார். நாற்புறமும் கடல்சூழ்ந்த இவ்வுலகத்திராநின்ற நிலையாகிய உயிர்கட்கெல்லாம் கங்கையை அணிந்த சடையையுடைய பரமசிவனே தெய்வமும், அன்புள்ள சுற்றத்தாரும், அஞ்ஞானத்தை நீக்குகின்ற ஞானசாரியருமாவார் என்றவாறு.

உடல் அனித்தியம், உயிர் நித்தியம் இம்முறைமைபற்றி மன்னுயிர் என்றார்.

என்னு முரைமனக்கொண் டீசன் றனைநோக்கி
மன்னு மகமுடிப்பார் மந்திரங்கள் சிந்திப்பார்
அன்னை யுதரத் தடையார் மறந்துமென
முன்னை யருமறைகள் யாவு மொழியுமால். 63

இ-ள்: இவ்வுரையை மனதில் உறுதியாய்க்கொண்டு அத்தன்மையுள்ள பரமசிவனைக் குறித்து அழியாத யாகங்களைச் செய்கின்றவர்களும், மந்திரங்களை உச்சரிப்பவர்களும், இவ்வுடலைவிட்டு நீங்கினபின் மறந்தும் தாய் வயிற்றில் கருவாகத் தங்கார்களென்று பழமையாகிய வேதங்களெல்லாம் கூறுகின்றன என்றவாறு.

மறந்தும் என்றது பிறவார்கள் என்ற துணிவுபற்றி என்க.

வேத முரைசெய்த விதியேனுங் கைவிட்டுச்
சீத மதிவேணிச் சிவனடியைப் பூசிக்கும்
போத முடைய புராதனரே பொய்ப்பிறவி
வாதனையை நீக்கி மறைவீட்டின் வைகுவார். 64

இ-ள்: வேதங்களால் கூறப்பட்ட விதிகளேயானாலும் அவைகளைச் செய்யாமல் விட்டொழிந்து, குளிர்ச்சி மிக்க இளந்திங்களை அணிந்த சடாபாரத்தையுடைய பரமசிவனது திருவடிகளைப் பூசிக்கும் ஞானத்தையுடைய பெரியோர்களே நிலையில்லாத பிறவித் துன்பத்தைநீக்கி வேதங்களில் கூறப்பட்ட நித்தியமாகிய முத்தியுலகில் எக்காலமும் பொருந்தியிருப்பார்கள் என்றவாறு.

வாழு மனைமேல் மதலையர்மேல் வான்பொருண்மேல்
வீழு மனமவற்றின் வீழாது தானேம்பித்
தாழு மவிர்சடையோன் றருள்விழையப் பெற்றவரே
ஏழு பவக்கடலு மேறும் புணைபெற்றார். 65

இ-ள்: வாழ்கின்ற மனைவியிடத்தும் புதல்வர்களிடத்தும் சிறப்புடைய பொருளிடத்தும் விரும்புகின்ற மனத்தை அவைகளை விரும்பாமல் அடக்கி ஒளிவிடுகின்ற தொங்கியசடையையுடைய பரமசிவன் திருவடிகளை விரும்பப்பெற்றவரே ஏழுபிறவியாகிய கடல்களைக் கடந்து முத்தியாகிய கரையில் ஏறுகின்ற தெப்பத்தைப் பெற்றவராவார்கள் என்றவாறு.

கங்கையணி வேணியான் காமன் றனைவென்றோன்
மங்கையொரு பாகன் றனக்கு வழியடியார்
தங்கள்பெருஞ் செல்வமெலா ந் தாழா தளிப்பரன்றி
அங்கமரி வாளா லரிந்துங் கொடுப்பாரே. 66

இ-ள்: கங்கையை அணிந்த சடையையுடையவரும், மன்மதனை வென்றவரும், பார்வதியை ஒருபாகத்தில் வைத்தருளியவருமாகிய பரமசிவனுக்குப் பரம்பரையாகிய அடியவர்கள் தங்களது பெரிய செல்வங்களையெல்லாம் கொடுத்துவிடுவார்கள்; அதுவுமல்லாமல் தங்கள் உடம்பையும் வாளால் அரிந்து கொடுப்பார்கள் என்றவாறு.

வேறு

கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடும் நன்னாவே நன்னாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலங் கழல்நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை. 67

இ-ள்: நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன் வீற்றிருக்கும் ஆலயங்களைத் தரிசிக்கும் கண்களே கண்கள். காளகண்டத்தையுடைய அந்தப் பரமசிவன் வீற்றிருக்கும் ஆலயங்கட்குச் செல்லுகின்ற கால்களே நல்ல கால்கள். பார்வதியை இடப்பாகத்தில் வைத்தருளிய அந்தக் கடவுளை வணங்குகின்ற தலைகளே நல்ல தலைகள். பிஞ்ஞகன் என்னும் ஒரு திருப்பெயரையுடைய அந்தக் கடவுளை அருச்சிக்குங் கைகளே நல்ல கைகள். அவருடைய புகழைப் பாடுகின்ற நாவே நல்ல நா. அந்தப் பரமனது சரிதங்களைப் பெரியோர்களால் சொல்லக் கேட்கப்படும் காதுகளே நல்ல காதுகள். பெருமையிற் சிறந்த அந்தக் கடவுளுடைய பொன்மயமாகிய வீரகண்டை அணிந்த திருவடியை வழிபடும் மனமே நல்ல மனம். அவருடைய திருவடிகட்கு அடிமையாகிற அடிமைத்திறமே நல்ல அடிமைத்திறம் எ-று.

வேறு

குணமில ராயினுங் குலீன ராயினும்
மணமலி கருங்குழன் மகளி ராயினும்
பணமணி யரவரைப் பரம னன்பரே
கணமலி யுலகெலாம் பரவுங் காட்சியார். 68

இ - ள் : நற்குணம் இல்லாதவர்களானாலும், நல்ல குலத்தினர்களானாலும், மணம் பொருந்திய கருமையாகிய அளகபாரத்தையுடைய மாதர்களானாலும், மாணிக்கம் பொருந்திய படத்தையுடைய பாம்பினைக் கச்சாக அணிந்திருக்கும் அரையினையுடைய பரமசிவன் அடியார்களே கூட்டமாகவுள்ள மூவுலகத்தவரும் துதிசெய்யும்படியான பெருமையுடையவராவார்கள் என்றவாறு.

வேறு

இன்னதன் மையதென வீச னன்பர்சீர்
அன்னவா கனனுக்கு மறிவ தன்றெனு
மன்னுமா தவத்தினீர் மனக்கொள் வீரெனப்
பின்னுமோர் பெருங்கதை பேசி னனரோ. 69

இ - ள் : பரமசிவன் அடியார்களது புகழ் இத்தகையதெனப் பிரமதேவனுக்கும் அறியத்தக்கதல்லவென்று அழியாத பெருமை தங்கிய தவத்தையுடைய நைமிசாரணிய முனிவர்களே அறிந்துகொள்ளுங்கள் என்று பின்னும் ஒரு பெரிய கதையைக் கூறுகின்றார் என்றவாறு.

சிவராத்திரியில் விமரிசன் முத்திபெற்ற அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம்—240

ஐந்தாவது

சனிப்பிரதோடத்தில் சந்திரசேனன் பூசைசெய்த அத்தியாயம்

அகழணி நாஞ்சில்சூ ழாய்பொன் மூதெயில்
திகழுமுச் சீனியாஞ் செல்வ மாநகர்க்
கிகழ்வருங் குணத்திறு னிறைமை பூண்டுளான்
புகழணி தகைமையான் புலவு வேலினன். 1

இ-ள்: அகழியும் அழகிய உறுப்புக்களை உடையதாய்ச் சூழ்ந்து இருக்கும் நல்ல பொன்னாற்செய்யப்பட்ட பழமையாகிய மதிலும் ஒளிவிடா நின்ற உச்சயினி என்னும் நகரத்துக்கு, இகழ்தற்கரிய நற்குணங்களோடு அரசுத்தன்மை கொண்டிருப்பவனும், புகழையே ஆபரணமாக அணிந்து கொள்ளும் தகுதியையுடையவனும், பகைவர் உதிரத்தில் தோய்வதற்கு ஏதுவான வேலாயுதத்தையுடையவனும் என்றவாறு.

நகரத்துக்கு அரசுத்தன்மை கொண்டிருப்பவனென ஒட்டிக்கொள்க. பழமையான மதிலென்றது இவ்வரசன்காலத்துக் கட்டப்பட்டதல்ல, இவன் வழிவந்த முன்னோர்கள் காலத்தே கட்டப்பட்டதெனத் தெரிவிக்கிறது.

இந்திரன் திருவென விசைக்குஞ் செல்வத்தான்
மந்தர மலையென வளருந் தோளினன்
செந்திரு வனமுலை திளைக்கு மார்பினன்
சந்திர சேனனுந் தரணி மன்னனே. 2

இ-ள்: தேவேந்திரனுடைய செல்வத்துக்கு ஒப்பானதென்று சொல்லத்தக்க மிகுந்த செல்வத்தையுடையவனும், மந்தரகிரியைப்போல உயர்ந்த தோள்களையுடையவனும், மகாலட்சுமியின் அழகுபொருந்திய தனங்கள்புணரும் மார்பையுடைய திருமாலையொத்தவனும், சந்திரசேனன் என்ற பெயரையுடையவனுமாகிய இவ்வுலகத்தையாளும் அரசன் ஒருவன் உளன் என்றவாறு.

மன்னவ னந்நகர் மாகா ளேசுரன்
என்னவா ரீசனை யிமயம் பூத்தருள்
கன்னியோர் பாகனைக் கருத்து ளேத்தியே
பொன்னடி யருச்சனை புரியுங் காலையே. 3

இ - ள்: இத்தன்மையுள்ள அந்த அரசனனவன் அந்நகரத்தில் மாகாளேசுவரன் என்ற திருப்பெயரையுடைய பரமசிவனுகிய மலையரையன் பெற்ற பார்வதியை இடப்பாகத்திலுடைய கடவுளை மனதிலே நினைத்துத் தியானஞ்செய்து அவருடைய அழகிய திருவடிகளில் பூசைசெய்யுங் காலத்தில் என்றவாறு.

தாணுவி னேவலிற் ருரை கைக்கெலா
நாணிலா வெனக்கண நாதர் நாயகன்
வேணவா வுளத்தினன் விலங்கற் ருேளினன்
மாணிபத் திரனென வழங்கு பேரினன். 4

இ - ள்: சிவநேசமிகுந்த மனதையுடையவனும் மலைபோலத் திண்ணிய தோளையுடையவனும் மாணிபத்திரன் என்று சொல்லப்படுகின்ற பெயரையுடையவனும், நட்சத்திரங்களுக்கெல்லாம் பூரண சந்திரன் தலைமையாயிருப்பதுபோலச் சிவகணநாதர்களுக்கெல்லாம் தலைவனுமாய் இருக்குமொருவன் பரமசிவனுடைய கட்டளையினலே என்றவாறு.

வந்து சந்திர சேனனை நோக்கிமன் னவனே
யெந்தை பூசனைக் கிணையிலாய் நின்னுடை நட்பு
முந்த வேண்டுவ னென்றுதான் வந்தமை மொழிய
அந்த வேந்தனு மகமகிழ்ந் தவனெடு நட்டான். 5

இ - ள்: அவ்விடத்தில் வந்து சந்திரசேனனைப் பார்த்து அரசனே! எம்மையனுகிய பரமசிவன் பூசையில் ஒப்பில்லாத பத்தியையுடையவனுகிய உன்னுடைய நட்புக்கொள்ள விரும்பினேனென்று, தான் வந்ததைச் சொல்ல அதுகேட்டு அந்த அரசனும் அந்தக் கணநாதனுடன் நட்பினன் ஆனன் என்றவாறு.

இன்ன வாறிவ ரிருவரு மொழுகுமந் நாளின்
மன்ன னன்பினன் மாணிபத் திரனுள மகிழ்ந்து
துன்னு சோதிச்சிந் தாமணிச் சுடர்கெழு மணியை
நின்ன தாகெனக் கொடுத்தனன் கொண்டன நிருபன். 6

இ - ள்: இம்முறைமையாக இவ்விருவரும் நடக்கும்நாளில் சந்திரசேன மகாராசனுடைய அன்பினுக்கு மாணிபத்திரன் மனமகிழ்ந்து சூரியனுக்கு ஒப்பாகிய ஒளிபொருந்திய சிந்தாமணி என்கின்ற இரத்தினத்தை

இது உன்னுடையதாய் இருக்கட்டுமென்று கொடுத்தான். அப்படிக் கொடுத்த மணியை அந்த அரசன் வாங்கிக்கொண்டான் என்றவாறு.

அந்த மாமணிப் பெருமையா மளப்பதற் கெளிதோ
சிந்தை யாலதை நினைப்பினுஞ் செல்வமே கொடுக்கும்
கந்த நாண்மல ருந்தியான் கவுத்துவ மணியும்
நந்த வாளொளி விடுவது ஞாயிறுெத் ததுவே. 7

இ-ள்: அந்தச் சிந்தாமணியின் பெருமையை நாம் அளவிட்டுச் சொல்வதற்கு எளிதானதல்ல. அதை மனதினால் நினைத்தாலும் செல்வத்தைக்கொடுக்கும். அன்றியும் மணம் பொருந்திய செந்தாமரை மலர் பூத்த நாபியையுடைய திருமால் அணிந்திருக்கும் கவுத்துவமணியும் கெடும்படி மிகுந்த ஒளியைவிடுவது பலகோடி சூரியர்களுக்கொத்தது என்றவாறு.

அரிதி னுத்தம னளித்தசெம் மணியினை யணியாப்
புரைப டுத்தின னணிதலும் புரவலன் மார்பில்
மரக தக்குல மலையினின் மழகதிர்க் கடவுள்
இரதம் விட்டிழிந் திருந்தென வொளிதயங் கியதே. 8

இ-ள்: உத்தமனாகிய மாணிபத்திரன் அருமையாகக் கொடுத்த சிவந்த நிறமுள்ள சிந்தாமணியைத் துளைசெய்து சந்திரசேனமகாராசன் தன்மார்பில் ஆபரணமாக அணிந்துகொள்ளவும் உதயகாலசூரியன் தான் இருக்குந் தேரைவிட்டிழிந்து நல்ல மரகதமலையிடத்து இருப்பதுபோல் ஒளிவிட்டு விளங்கியது என்றவாறு.

இனைய நன்மணி யணிபுனைந் திறைமக னிருப்ப
வனையு மாமணித் திறனெலா மயலறக் கேட்டு
வினைய மெண்ணிய திசைதொறு மேவிய வேந்தர்
புனையும் வேட்கையால் யாவருந் தூதரிற் புகன்றார். 9

இ-ள்: இத்தன்மையுள்ள சிந்தாமணியென்னும் ஆபரணத்தைச் சந்திரசேனமன்னன் அணிந்துகொண்டு வாழும்நாளில் அப்படி அணிந்து கொள்ளப்பட்ட மணியின் பெருமையினையெல்லாம் நாடுகள்தோறும் பொருந்திய அரசர்களெல்லோரும் ஐயமில்லாமல் கேள்விப்பட்டு அதைத் தாங்கள் அணிந்துகொள்ள வேண்டுமென்கிற விருப்பத்தினால் தூதர் முன்னிலையிற் சொல்லியனுப்பினார்கள் என்றவாறு.

அன்பின் வேட்டனர் சிலர்சிலர் வினையிடை யடுபோர்
வன்பில் வேட்டன ரன்னது மன்கொண்ட மறவோன்
என்பு யங்களு மென்னுடை வரங்களு மிறந்த
பின்பு நல்குவேன் மணியென வஞ்சினம் பிடித்தான். 10

இ - ள்: சிலபேர் நட்பினால் விரும்பினவர்களாய்க் கேட்டனுப்பினார்கள். சிலபேர் அரசர்கள் ஒருபொருளை அடையவேண்டுமானால் செய்யுஞ் செய்கையில் ஒன்றாகிய கொல்லுகின்ற போர் செய்து வன்பினால் வாங்கிக்கொள்வதாக விரும்பிச் சொல்லியனுப்பினார்கள். அப்படி அவர்களால் சொல்லியனுப்பப்பட்ட தூதர்கள் வந்துசொல்லியதை மனதில் அறிந்துகொண்டு சந்திரசேனமகாராசன் என் புசபலமும் யான் பெற்ற வரங்களும் ஒழிந்தபின்பு என்னிடத்திலிருக்கும் சிந்தாமணியைத் தருகின்றேன் என்று தூதர்களுக்குச் சொல்லியனுப்பிவிட்டுத் தன்மனதில் வைரங் கொண்டவனானான் என்றவாறு.

பகையில் தாம் வலியனென்று கருதிய அரசர்கள் போர்செய்து வாங்க நினைத்தார்கள். பகையில் சமமானவர்களும் மெலியவர்களுமாய் இருப்பவர்கள் நட்பினால் வாங்கக்கருதினார்கள். இதனை,

"ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்"

என்னும் குறளானுமறிக.

அன்ன வாசகங் கேட்டலு மவனிகா வலரின்
மன்னு மாகத ராரியர் மத்திரர் மராடர்
துன்னு கேகயர் சாளுவ ரவந்தியர் துருக்கர்
மின்னு கோசலர் சஞ்சையர் கவுரவர் விராடர். 11

இ - ள்: சந்திரசேனன் கூறிய உரையைக் கேட்டமாத்திரத்தில் இவ்வுலகத்தையாளுகின்ற அரசர்களில் பொருந்திய மகத, ஆரிய, மாத்திர, மராட, கேகய, சாளுவ, அவந்தி, துருக்கி முதலாய நாட்டினரும் ஒளிவிடாநின்ற கோசல, சஞ்சைய, கவுரவ, விராட தேசத்தாரும் என்றவாறு.

என்று பேர்பெறு மன்னவர் யாவரு மிகலிக்
கன்று நெஞ்சினர் கடற்படை தன்னொடுங் கடுகி
வென்று கோடுமுச் சீனியை யென்பது விளம்பிச்
சென்று சூழ்ந்தனர் சூழ்தலுஞ் சந்திர சேனன். 12

இ - ள்: என்று சொல்லப்பட்ட பெயர்பெற்ற அரசர்கள் எல்லோரும் பகைகொண்டு கோபமுள்ள மனதையுடையவர்களாய்க் கடல்போல் அளவிடப்படாத சேனையுடன்முடுகி உச்சீனிபட்டணத்தை வென்று நம்முடைய கைவசப்படுத்திக் கொள்ளுவோமென்று சொல்லிக்கொண்டு அந்தப் பட்டணத்தைச் சூழ்ந்துகொண்டார்கள். அப்படிச் சூழ்ந்தமாத்திரத்தில் சந்திரசேன மகாராசன் என்றவாறு.

பகைஞர் வந்துதன் பதிவளைத் தனரெனக் கேட்டு
மிகையு நெஞ்சினன் வெருவலன் வினையமொன் றெண்ணுன்
முகைகொள் கண்ணியுஞ் சந்தமு மொய்யொளிக் கலனும்
புகையுந் தீபமு மயினியும் புனலொடு மேந்தி. 13

இ - ள்: பகைவர் வந்து தன் நகரத்தைச் சூழ்ந்துகொண்டார்கள் என்று கேள்விப்பட்டுத் தளராத மனதையுடையவனாய் அஞ்சாமலும் வேறொரு காரியஞ்செய்ய எண்ணாமலும் மலரும் பக்குவமுள்ள அரும்புகளால் தொடுக்கப்பட்ட பூமாலையும் சந்தனமும் மிகுந்த ஒளியுள்ள ஆபரணங்களும் தூபமும் தீபமும் அன்னமும் திருமஞ்சனமும் ஏந்திக் கொண்டு என்றவாறு.

வேறு

மாகாள மென்றுபெயர் மன்னுமரன் மன்னும்
பூகாட விச்சிநக ரத்தினிடை போகி
யேகானு பூதியோ டிருந்திதய மேவு
மோகாதி கத்தையு முனிந்து புற மாக்கி. 14

இ - ள்: மாகாளம் என்று பெயருள்ளதாய்ப் பரமசிவன் வீற்றிரா நின்ற கமுகஞ்சோலை சூழ்ந்த ஆலயத்திற்போய் பரமசிவன், திருவடியில் மனம் அயிக்கியமாகும்படியான நிட்டையிலிருந்து, இருதயத்திற்பொருந்திய மோகம் முதலிய பொய்களையெல்லாங் கடிந்து புறமாக நீக்கி என்றவாறு.

மறையாக மங்களிடை மந்திர மனைத்தும்
குறையாம லோதியரு ளின்குரவன் கூறும்
முறையா லருச்சனைசெய் தன்பினெடு முந்நீர்க்
கறையார் களத்தனடி யைக்கருதி னுனே. 15

இ - ள்: வேதங்களிலும் ஆகமங்களிலும் சொல்லப்பட்ட மந்திரங்களையெல்லாம் குறைவுபடாமற்சொல்லித் தோத்திரஞ்செய்து, அருளினால் ஆசாரியர் அனுக்கிரகஞ் செய்த முறைமையின்படி பூசைசெய்து, கடலில் உண்டாகிய விடந்தங்கிய கண்டத்தையுடைய மாகாளேசுவரனுடைய திருவடிகளைத் தியானித்தான் என்றவாறு.

இவ்வாறு பூசையிறை வன்புரியு மேல்வை
அவ்வா லயத்தணுகி யாயர்குல மன்னுஞ்
செவ்வாய் மடக்கிளிய னுள்சிறுவ னேடே
மைவ்வா ரணத்துரிவை யானடி வணங்கா. 16

இ - ள்: சந்திரசேன மகாராசன் இத்தன்மையாகப் பூசைசெய்து கொண்டிருக்கும் சமயத்தில் ஆயர்குலத்தில் பிறந்த சிவந்த வாயையும்

அறியாமையையும் கிள்ளையின் மொழியொத்த இனிய மொழியையுமுடைய ஒரு மாதானவள் தன் புதல்வனுடன் அந்த ஆலயத்திற்குப்போய் கருமை நிறங்கொண்ட யானைத்தோலைப் போர்த்திருக்கும் மாகாளேசுவரன் திருவடிகளை வணங்கி என்றவாறு.

மனையிற் றிரும்பிவர லும்மவடன் மைந்த
னினைவற்று நென்னலிடை நீண்முடி மகீபன்
முனைவற் றெரும்பரிசு கண்டதனை முன்னு
நனைமுற்று போதுகொடு நாடிவழி படுவான். 17

இ-ள்: தன்வீட்டில் திரும்பி வரவும் (மறுநாள்) அவள் புதல்வன் நெடிய மகுடத்தையுடைய சந்திரசேன மகாராசன் முன்னுள் மாகாளேசுவரனை மனதில் தியானித்துத் தொழுந்தன்மையைத் தன்னுடைய மனதில் நினைத்து, அரும்புகள் முதிர்ந்த மலர்களைக்கொண்டு முறைமையினேடு பூசைசெய்கின்றவன் என்றவாறு.

விரையுற்ற மாலிகை விடக்குவடி தெண்ணீர்
புரையற்ற தெள்ளமுது பொன்னணிக ளாடை
தரையுற்ற பாசடை மணற்கொடு சமைத்தாங்
குரையற்ற பூசனை சமாதிநிலை யுற்றுன். 18

இ-ள்: (பூசாத்திரவியங்கள் எல்லாம் தனக்கு நேரிடாமையால்) மணலையும் அவ்விடத்திலிருக்கும் பச்சிலைகளையும் இவைகள் மணம்பொருந்திய பூமாலையென்றும், இவைகள் தீபங்கள் என்றும், இது வடித்த தெளிவான திருமஞ்சனமென்றும், இது குற்றமற்ற நல்ல அமுதமென்றும், இவைகள் பொன்னுபரணங்கள் என்றும், இவைகள் ஆடைகள் என்றும் ஏற்படுத்திக்கொண்டு சொல்லுக்கடங்காத தன்மையுள்ள பூசைசெய்தலாகிய சிவநிட்டையிலிருந்தான் என்றவாறு.

ஐம்புல வழிச்செலு மனத்தையு மடக்கி
நம்புசிவ நிட்டையி னிருக்குமிட நண்ணிக்
கும்பமுலை யன்னைமக வின்பசி குறித்தே
எம்பிமனை வாவென வியம்பவு மெழாதே. 19

இ-ள்: ஐம்புலன் வழியில் செல்லுகின்ற மனதை உள்ளேயடக்கி நம்புகின்ற சிவநிட்டையில் இருக்குமிடத்தில், கும்பம்போன்ற தனங்களையுடைய தாயானவள் தனது புதல்வனுடைய பசியைக் குறித்துப் போய், அப்பா மகனே! உணவு உண்ண வீட்டுக்குவா என்று அழைக்கவும் அவன் எழுந்திராமல் என்றவாறு.

ஈசன தடிக்கமல மீதிதய வண்டைப்
பாசமுற வைத்தவ னிருந்தபடி யெல்லா
நேசமுறு மன்னையறி யாதிஃது நேர
மாசிலுண வுண்பது மறந்ததெது போலாம். 20

இ - ள் : பரமசிவனுடைய திருவடித்தாமரையினிடத்தில் இருதய மாகிய வண்டினை அன்புபொருந்த வைத்துத் தன் மகன் இருக்குந்தன்மைகளைப் புத்திரனிடத்தில் ஆசைமிகுந்த தாயானவள் அறியாமல் இந்த விளையாட்டொன்று உண்டாக நல்ல உணவு உண்ணுவதை மறந்திருப்பது என்ன காரணமோ என்றவாறு.

போலாம்: ஆம் - அசை.

என்றுவெகு ளாமகவை யெற்றின ளடர்த்தாள்
வன்றிறலி னுைமை மணுளனென வைத்த
மின்றிகழ் கருஞ்சிலை யெடுத்தகல வீசிக்
கன்றிய மனத்தண்மனை யிற்கடிது போனாள். 21

இ - ள் : இவ்வாறு சொல்லிக் கோபித்து மகனைக் கையால் மோதி அடித்தாள். (அதுவுமல்லாமல் சிவபூசையில்) மிக்க உறுதிப்பாட்டையுடைய அம்மகன் சிவலிங்கப்பெருமானாகப் பாவனைசெய்துவைத்த ஒளி விளங்குகின்ற கருங்கல்லையெடுத்துத் தூரத்தில் எறிந்துவிட்டு வெம்பிய மனதையுடையவளாய்த் தன்வீட்டில் விரைவாய்ச் சென்றாள் என்றவாறு.

எந்தையை எடுத்திவ ணகற்றின ளெனத்தன்
சிந்தைமிக நொந்துமுறை யிட்டழுது சேயோன்
வெந்துயர் பொருமலிரு கன்னல்விழி யானுய்
முந்திய வுயிர்ப்புமற மூர்ச்சனை யடைந்தான். 22

இ - ள் : (அவள் எறிந்துவிட்டுப் போனதைப் பார்த்த பரிசுத்தனை அந்தமகன்) என்னையனுகியபரமசிவனை இவ்விடத்திலிருந்து எடுத்து எறிந்துவிட்டாளென்று தன்மனம் மிகவும் வருந்தி முறையிட்டழுது தனக்கு நேரிட்ட துயரத்தைச் சகிக்கமாட்டாமல் இரண்டு நாழிகை வரையில் கண்களையுந் திறவாமல் மூச்சுமில்லாமல் மூர்ச்சையை அடைந்தான் என்றவாறு.

வேறு

விழித்தனன் விழித்து நோக்கலும் பழைய
மனையெலா நவமணி விளக்கம்
பழித்துநின் றிமைக்கும் புரந்தரா லயம்போற்
பழுதற விளங்குதல் கண்டான்

ஒழித்தனள் கடிந்த விலிங்கந் திப்பியமா
யொளிமணி யொண்சுடர்ச் சோதி
கொழித்துநின் றிருந்த தன்மைகண் டுள்ளங்
குளிர்ந்தன னதிசயங் கொண்டான். 23

இ - ள் : அவ்வாறு மூர்ச்சையாகிப் பின்பு மூர்ச்சை தெளிந்து கண்களைத் திறந்து பார்க்கவே பழையதாயிருந்த வீடுமுழுவதும் நவமணிகளின் ஒளிமிகுந்து மாறுமல் ஒளிவிடாநின்ற தேவேந்திரன் கோயில்போல் விளங்குவதைக் கண்டான். பின்னும் தன் தாயானவள் எடுத்து எறிந்து விட்ட சிவலிங்கமானது சிறப்புமிக்க ஒளியுள்ள மணிபோலக் கிரணமுள்ள சோதியைக் கொழித்துக்கொண்டு அழியாத தன்மையுடன் இருப்பதைக்கண்டு மனங்குளிர்ந்து அதிசயங்கொண்டான் என்றவாறு.

தொல்லையம் பிறவிக் கடற்கரை யேறத்
தொண்டெனும் அம்பியைக் காட்டும்
அல்லணி கண்டன் பூசனைப் பயனே
வல்லது திருவிளை யாட்டோ
முல்லையங் கண்ணி யெங்குல முதல்வர்
முறைசெய்த நல்வினைப் பயனே
எல்லையி றவத்தோர் தமக்கு மெய்தாத
தெளியனுக் கெய்திய தென்னே. 24

இ - ள் : பழமையாகிய பிறப்பு என்னும் கடலினைக் கடந்து முத்தியென்னும் கரையிலேறும்படி அடிமைத்திறமென்னும் கப்பலைக் காட்டிய இருள்நிறந்தங்கிய கண்டத்தையுடைய பரமசிவனைப் பூசித்தலால் உண்டாகும் நற்பயனே? அல்லது அவருடைய திருவிளையாட்டோ? முல்லைப்பூவால் தொடுக்கப்பட்ட அழகிய பூமாலையணிந்த எங்குல முதல்வர் பண்டைய முறைதவறுமல்செய்த புண்ணியத்தினுல் உண்டாகும் பயனே? அளவில்லாத தவத்தையுடையவர்கட்கும் கிடைப்பதற்கரிய நன்மை எளியனுக்குக் கிடைத்தது என்ன காரணம் என்றவாறு.

சிறியருக் கியல்பு தீவினை யிழைத்தல்
சிறியவர் சிற்றிய லீதென்(று)
அறிஞருக் கியல்பு பொறுப்பதென் றுரைப்ப
ராதலா லடியனே னன்னை
நெறியிலா திழைத்த சிற்றியல் பொறுத்தி
நிமலனே கருணையங் கடலே
மறியுறை கரத்து வரதனே யென்ன
வாழ்த்தினன் மாசிலாத் தவத்தோன். 25

இ-ள் : என்று இவ்வாறு துதிசெய்த குற்றமற்ற தவத்தையுடைய அந்தப் பிள்ளையானவன் பின்னும் பிழைசெய்தல் சிறியோர்கட்கியல்பு; சிறியோர்கள் பிழைசெய்தல் இவ்வாறுதானென்று பொறுத்துக் கொள்ளுதல் பெரியோர்கள் கடனென்று சொல்லுவார்கள். ஆதலால் அடியேன் தாயானவள் முறைமையில்லாமற்செய்த குற்றத்தை நீ பொறுத்துக்கொண்டருள்வாய், நிருமலனே! அழகிய கருணைக்கடலே! மான்பொருந்திய கையையுடைய கடவுளேயென்று வாழ்த்தினன் என்றவாறு.

தன்மனை புகுந்து துயின்றநற் றாயும்
விழித்தலுந் தன்மனை யெல்லாம்
பொன்மய மாகக் கண்டுமெய்ப் புளகம்
பொங்கிட மகவினை நோக்கி
நன்மக வீன்றே னென்றுளங் களித்து
நரபதிக் குரைப்பனென் றெல்லை
மன்மனை குறுகிப் புகுந்தவா றெல்லா
மன்னனுக் குரைத்தலு மன்னன். 26

இ-ள் : இவ்விடத்திலே இவன் இவ்வாறிருக்கத் தன் மகன் சிவலிங்கமாகப் பாவனை செய்துவைத்துப் பூசித்த கருங்கல்லை எறிந்துவிட்டுத் தன் வீட்டில்போய் உறங்கிய தாயானவளும் உறக்கந்தெளிந்து பார்த்த மாத்திரத்தில் தன் வீடெல்லாம் பொன்மயமாயிருக்கக்கண்டு உடல் புளகமுண்டாகப் புதல்வனைப் பார்த்து, நல்ல புதல்வனைப் பெற்றேனென்று மனம்களித்து இந்நிகழ்ச்சியை அரசனுக்குச் சொல்லுவேனென்று விரைவாக அரண்மனைக்குப்போய்க் கண்டு நடந்தவைகளையெல்லாம் கூறினள். அதைக்கேட்ட அரசன் என்றவாறு.

மந்திர விதியி னமைச்சரு மாதி மறைவலா ளரும்புடை சூழத்
தந்திரந் தழுவச் சேரிசென் றணுகித் தமனிய மனைவள னோக்கி
அந்தரத் தகடு கிழிய நீள் பசும்பொ னாலயம் வலங்கொடு புகுந்து
சந்திர சேனன் சந்திர மவுலி தாளிணை விதிமுறை தொழுதான். 27

இ-ள் : மந்திராலோசனையின் முறைமையுணர்ந்த மந்திரிகளும் முதன்மையாகிய அந்தணர்களும் புடைசூழ்ந்து வரவும் நால்வகைச் சேனைகளும் பக்கங்களில் பரவிவரவும் ஆயர்சேரியிற் போய்ச்சேர்ந்து பொன்மயமாயிராநின்ற வீட்டின் வளப்பத்தைப் பார்த்து அண்டமுகடு கிழியும்படியாக உயர்ந்திராநின்ற ஆலயத்தை வலம்வந்து சந்நிதியிற்போய்ச் சந்திரசேனனென்னும் அந்த அரசன் சந்திரசேகரனாகிய பரமசிவனுடைய திருவடியை முறைப்படி தொழுதான் என்றவாறு.

வேதமும் வேத விரிஞ்சனு மாதி விண்டுவு மண்டருங் காணு
ஆதியம் பரம னடியவர்க் குருகி யருளினு லடைந்தன னென்னுங்
காதலிற் பொதுவர் மதலையைத் தழுவிக் காவலன் களிமகிழ் வெய்தி
ஓதநீ ருவாவி னொலித்தென மூதூ ருவகையா லொலியெழுந் ததுவே. 28

இ-ள்: அவ்வாறு தொழுத அரசன் நான்கு வேதங்களும் வேதங்களையுணர்ந்த பிரமனும், அப்பிரமனுக்கு ஆதியாகிய திருமாலும், மற்றுமுள்ள தேவர்களும் கண்டறியாத யாவர்க்கும் ஆதியாகிய பரமசிவன் அடியவர்க்காகத் திருவுளமிரங்கிக் கருணையினல் திருக்கோயில் கொண்டுள்ளாரென்ற அன்பினல் அந்த இடைப்பிள்ளையைத் தழுவிக்கொண்டு மிக்க மகிழ்ச்சியையடைய (அதைக்கண்ட) அந்தப் பழமையாகிய நகரத்தாருக்கு உண்டாகிய மகிழ்வினல் ஒலித்த ஆரவாரமானது பருவகாலத்தில் கடல் ஒலிப்பதுபோல் இருந்தது.

வரதவ மதலை பூசனை புரிந்த
    வண்மையுந் தண்மதிக் குழவிப்
புரிசடை யண்ண லருளினுங் கடைந்த
    புதுமையும் புரவலன் கண்டு
கரையிலா வுவகை யுற்றது நகரங்
    களிப்பதுங் காணவந் தவன்போற்
குரைகட னடுவுட் கதிர்க்குலம் பரப்பி
    யெழுந்தனன் குணதிசை வெய்யோன். 29

இ-ள்: சிறந்த தவத்தையுடைய அப்பிள்ளையானவன் பூசை செய்த வளப்பமும் குளிர்ச்சிபொருந்திய இளம்பிறையை அணிந்து கட்டுப்பட்ட சடைமுடியையுடைய பரமசிவன் திருவருளினல் அவ்விடத்துத் திருக்கோயில் கொண்டமர்ந்த அற்புதமும் சந்திரசேன மகாராசன் கண்டு அளவற்றமகிழ்வடைந்ததையும் நகரத்தார் எல்லாம் களிப்படைந்ததையும் காணவந்தவன்போல் ஒலிக்காநின்ற கடலின் நடுவில் ஆயிரங்கிரணங்களையும் பரப்பிக்கொண்டு கீழ்த்திசையில் சூரியன் உதயமானன் என்றவாறு.

மூதெயில் வளைந்த காவல ரொற்றர் முழுதுமற் புதமென வேகித்
தாதவி ழிதழிச் சடிலவா னவனைச் சனிப்பிர தோடத்தி னொருநாள்
காதுவேன் மன்னன் வழிபடக் கண்ட காளைசெய் பூசனை முதலா
ஆதியெம் பரமன் றேன்றிய வளவு மவரவ ரரசருக் குரைத்தார். 30

இ-ள்: பழமையாகிய மதிலைச் சூழ்ந்துகொண்ட அரசர்களுடைய ஒற்றர்களெல்லாம் இது அதிசயமென்று பேசிக்கொண்டு சென்று மகரந்தத்துடன் மலர்ந்த கொன்றைப்பூ மாலையணிந்த சடைமுடியை உடைய பரமசிவனைச் சனிப்பிரதோடத்தில் ஒருநாள், கொலைசெய்யத்தக்க

வேலாயுதத்தையுடைய சந்திரசேன அரசன் பூசைசெய்யக்கண்ட இடைப் பிள்ளையானவன் செய்த பூசைமுதலாக ஆதியாகிய நம்மிறைவன் தரிசனங் கொடுத்த அளவும் வழுவாமல் அவரவர் அரசர்கட்குச் சொன்னார்கள் என்றவாறு.

தம்முடி துளக்கிக் கேட்டவேல் வேந்தர்
தனித்தனி துண்ணென வெருவிக்
கொம்மையங் கொங்கை கொடிபுரை நுசுப்பிற்
கோகில மிரங்குதீங் குதலை
யம்மைபங் காள னடியவ னிந்த
வரசனை யவமதித் தந்தோ
வெம்மையி னடைந்தே மெனத்தமை முனிந்து
மேற்செயும் வினையமீ தென்னா. 31

இ - ள்: ஒற்றர்கள்வந்து கூறியதைக் கேள்விப்பட்ட வேலேந்தும் அரசர்கள் (இது ஆச்சரியமான காரியமாயிருக்கிறதென்று) தனித்தனியாகத் தங்கள் தங்கள் தலைகளை அசைத்து நடுக்கமுறப் பயந்து, இந்தச் சந்திரசேன அரசன் குவிந்த அழகுள்ள தனபாரத்தையும், பூங்கொடியையொத்த இடையினையும் குயிலோசைபோலப் பேசும் மதுரமுள்ள மழலைச் சொல்லையுமுடைய பார்வதிதேவியை இடப்பாகத்தில் வைத்தருளிய பரமசிவனுடைய மெய்யன்பனாயிருக்கிறான். (இதை அறியாமல்) இவனை அவமதித்துப் பகைகொண்டு வந்தோமென்று தங்களைத் தாங்கள் வெறுத்துக் கொண்டு இனி நாம் செய்யவேண்டிய காரியம் இதுவென்கிறதாக எ - று.

கடற்படை யனைத்துந் தத்தமூர்க் கேகக்
கதுமெனப் பணித்தம ரெதிர்ந்தார்
அடற் கருஞ் சேனைச் சந்திரசேன
னன்பதே யமையுமென் றெண்ணிப்
படைக்கலந் துரந்த கையின ராகிப்
பதிபுகுந் தரசனைப் பணிந்து
விடற்கரு நட்பு வேண்டின ரிவனும்
விள்ளலா நட்பெதிர் விழைந்தான். 32

இ - ள்: கடல்போல மிகுந்த தங்கள் தங்கள் சேனைகளையெல்லாம் தங்கள் ஊருக்குப் போகும்படி விரைவாக உத்தரவுசெய்து அனுப்பிவிட்டு யாவராலும் போர் செய்வதற்கரிய சேனைகளையுடைய சந்திரசேன மகாராசனுடைய நட்பே நமக்குப் போதுமானதென்று கருதிக்கொண்டு தங்கள் கைகளில் இருந்த ஆயுதங்களையெல்லாம் நீங்கினவர்களாய் உச்சயினி பட்டணத்திற்போய் அந்த அரசனைக்கண்டு வணங்கி, அரசனே! உம்முடைய நட்பு எப்போதும் நீங்காமல் இருக்கும்படி எங்களுக்கு வேண்டுமென்று வேண்டினார்கள். அதைக்கேட்ட அரசனும் (அவர்களைப்பார்த்து)

அரசர்களே! உங்களுடைய நட்பும் என்னிடத்தில் எப்போதும் நீங்காமல் இருக்கும்படி நானும் விரும்பியிருக்கின்றேன் என்ருன் என்றவாறு.

மன்னனு நட்பின் மன்னரு மேகி
மாகாள நாதனை வணங்கிப்
பின்னரே தொறுவன் பூசனைக் கெதிர்ந்த
பிஞ்ஞகன் ருளிணை தொழுது
முன்னர்நின் றிறைஞ்சு மதலையைத் தழுவி
முகமனன் ககமகிழ்ந் துரையா
இந்நிலத் தாயர் குலங்கட்கு நீயே
யிறைமக ஞகென விசைத்தார். 33

இ-ள்: இவ்வாறு நட்புக்கொண்ட பின்பு சந்திரசேன மகாராசனும் நட்பினரான மறு தேசத்து அரசர்களும்போய் மகாளேசுவரனை வணங்கி உடனே இடைப்பிள்ளை செய்த பூசைக்காக எழுந்தருளி வீற்றிரா நின்ற சிவலிங்கமூர்த்தியையும் பணிந்து தங்களெதிரில் நின்று வணங்கிய அப்பிள்ளையைத் தழுவிக்கொண்டு மகிழ்வுடன் நல்ல உபசார வார்த்தைகள் சொல்ல இந்த உலகத்திலிருக்கும் ஆயர்குலத்துக்கெல்லாம் நீயே இறைவராகக்கடவை என்று சொன்ஞர்கள் என்றவாறு.

வேறு

அக்காலை யின்வந்தா னடலடையார் புரநூறப்
புக்கார் கலியிலங்கைப் பதிபுகையத் தழன்மடுத்துக்
கைக்கார் முகநெடியோன் றனைக்கலுழன் றனிற்பொருத்த
மிக்கான் கவிகுலநா யகனனுமா னெனுமேலோன். 34

இ-ள்: இவ்வாறு அரசர்கள் கூறியபோது பலம் பொருந்திய பகைவராகிய அரசர்களுடைய பதியை அழிக்கும்படி போய்க் கடலின்நடுவிலிருக்கும் இலங்கையானது புகைந்தெரியத்தக்கதாகத் தீயூட்டிக் கையினிடத்துக் கோதண்டத்தையுடைய இராமமூர்த்தியைப் போர்க்களத்தில் கருடனைப்போல வாகனமாய்த்தாங்கிய மிகுந்த பராக்கிரமசாலியும் வானரர்களுக்குப் படைத்தலைவனுமாகிய அனுமானென்னும் பெயரையுடைய மேலானவன் என்றவாறு.

அம்மா ருதிவரக்காண் டலுமடிவீழ்ந் தடல்வேந்தன்
செம்மாந் தலர்மழைதூய்ப் பலவழிபா டுகள்செய்தே
யெம்மா னிவணெய்தத் தவமென்செய் தனமெனவே
விம்மா வுளங்களித்தார் வமொடிருப்பக் கவிவீரன். 35

இ-ள்: அத்தன்மையுள்ள அனுமான் வந்ததைக் கண்டமாத்திரத்தில் பலமுள்ள சந்திரசேன மகாராசன் அவர் பாதத்தில் வணங்கிக்

கொண்டு மிக்க களிப்படைந்து மேகம் பொழிவதைப்போல மலர்களைச் சொரிந்து பலவகையாகிய வழிபாடுகள் செய்து எம்மிறைவன் இந்நாட்டில் வரும்படி நாங்கள் என்ன தவஞ் செய்தோமென்று துதிசெய்து மனக்களிப் படைந்து ஆசையுடனிருந்தான். அவ்வாறு இருக்கும்போது அனுமான் என்றவாறு.

கோபாலர் தங்குலச்சே யினைக்குளிர்மார் புறவணைத்தே
பூபாலர் கள்கேண்மின் னுறுபொருளொன் றையுமுணரா
மாபால னிங்கிவன்செய் திடுவழிபாட் டினுண்மகிழ்ந்தே
காபாலி வந்தருள்செய் தமைகண்டீ ரிவையெல்லாம். 36

இ - ள்: ஆயர்குலப் புதல்வனைக் குளிர்ச்சிபொருந்திய தன் மார்பில் அணைத்துக்கொண்டு, அரசர்களே கேளுங்கள்! உலகினில் பொருந்திய யாதொரு பொருளையும் அறியாத பெருமைபொருந்திய இப் புதல்வன் செய்த வழிபாட்டிற்குத் திருவுளமகிழ்ந்து பரமசிவன் காட்சி தந்தருளியதைக் கண்டீர்களே, இவைகளெல்லாம் என்றவாறு.

இறைசந் திரசேனன் புவியேழும் புகழுரவோன்
அறையுஞ் சனிவார பிரதோடந் தனினரனை
மறையின் படிவழிபட் டமைகண்டிங் ஙனமதலை
பொறையொன் றியமனத்தாற் புரிபூசா பலம்போலும். 37

இ - ள்: ஏழுலகமும் புகழத்தக்க வல்லமை உடையவனாகிய சந்திரசேன மகாராசன் (வேதாகமங்களால்) விசேடமாகச் சொல்லப்படுகிற சனிப்பிரதோடத்தில் முறைமைப்படி பரமசிவனைப் பூசித்ததைக்கண்டு இந்தப்புத்திரன் சாந்தந்தங்கிய மனத்துடன் செய்த பூசையின்பலமாகும் என்றவாறு.

அப்பூ சனைகண்டார் பெறும்பேறித் துணையளவோ
இப்போ திவண்வழியாய் வருமெட்டாந் தலைமுறையில்
கைப்போ தகமழைக்கும் மழைக்கார்வண் ணனைவளர்ப்பான்
மெய்ப்போதத் தநந்தனெனுங் கோன்றோன் றுவன்விளங்க. 38

இ - ள்: அத்தன்மையுள்ள சனிப்பிரதோட பூசையைக் கண்டவர்கள் பெரும்பேறு இவ்வளவில் அடங்குவதோ! இப்போது பூசைசெய்த இந்தப்புத்திரனுடைய சந்ததியாய் வருகின்ற எட்டாந் தலைமுறையில் (முதலை வாயிலகப்பட்டுக்கொண்ட) துதிக்கையையுடைய ஒரு காட்டானையானது அழைக்க அதைக்காப்பாற்றிய மேகவண்ணங்கொண்ட திருமால் (கண்ணனாக அவதாரஞ் செய்வார்) அவரை வளர்க்க உண்மையறிவுடைய நந்தனென்கிற ஆயர்கோனொருவன் அந்தக்குலம் விளங்கும்படி தோன்றுவன் என்றவாறு.

இன்றே முதல்வேல்வேந் தர்களெல்லீ ருமற்றிவனை
நன்றே தருபுகழ்ச்சீ தரனெனவே பெயர்நவில்வீர்
என்றே யடலனுமான் சிவபூசா பலத்தியல்பை
அன்றே தவமதலைக் கினிதருள்செய் தனன்போனான். 39

இ - ள்: வேலாயுதத்தையுடைய அரசர்களே! நீங்கள் எல்லோரும் இன்றுமுதல் இந்தப்புதல்வனை நன்மையைத் தருகின்ற புகழினையுடைய சீதரன் என்று பெயரிட்டழையுங்கள் என்றுசொல்லி மேலும் பராக்கிரமமுள்ள அனுமான் அப்போதே சிவபூசையின் முறையினை தவத்தையுடைய அந்தப் புதல்வனுக்கு இனிதாக உபதேசித்தருளிப் போனார் என்றவாறு.

காற்றின் புதல்வன்போய் பின்கருதா தமர்சொல்லி
மாற்றஞ் சியபடைமன் னரைவழிக்கொள் ளூநும்பதிக்கென்
றூற்றந் தருகரிதேர் பலயொண்பூண் டுகிலுதவிப்
போற்றுந் தவக்கோபா லனொடிருந்தான் புனைதாரான். 40

இ - ள்: வாயுதேவன் புதல்வனாகிய அனுமான் போய்விட்டபின் எண்ணாமல் போர் செய்வோமென்று சொல்லிக்கொண்டுவந்து பின்பு சண்டைசெய்யப் பயந்த சேனையுள்ள அரசர்களைப்பார்த்து நீங்கள் உங்கள் ஊருக்குப் போங்களென்று சொல்லி வலிபொருந்திய யானைகளும் தேர்களும் குதிரைகளும் ஒளியுள்ள ஆபரணங்களும் ஆடைகளும் பரிசாகக் கொடுத்து அனுப்பிவிட்டுப் பூமாலை அணிந்திருக்கும் அவ்வரசன் போற்றுகின்ற தவத்தையுடைய அந்தப் புதல்வனுடன் தன் நகரத்திலிருந்தான் என்றவாறு.

நெடுநா ளிருவோருந் திருநிலமா மகள்போகங்
கடவா தினிதருந்திச் சிவன்கழல்பூ சனைபுரிந்தே
முடியா விறுதியினே றினர்முந்திக் கரையென்னாப்
படுபா தகவினைவென் றவர்க்குரைத்தான் பழந்தவத்தோன். 41

இ - ள்: அரசனும் ஆயர்குலப் புதல்வனும் நெடுநாள்வரைக்கும் ஒருநாளாவது முட்டுப்படாமல் இவ்வுலகத்து இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்து பரமசிவனுடைய திருவடிகளையும் பூசித்து முடிவில்லாத அந்தியத்தில் முத்தியாகிய கரையிலேறினார்கள் என்று பிறவிதோறும் பொருந்திய தீவினையைவென்ற நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூத முனிவர் சொன்னார் என்றவாறு.

சனிப்பிரதோடத்தில் சந்திரசேனன் பூசைசெய்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 281

ஆறுவது

சனிப்பிரதோடத்தில் சத்தியாதனன் பூசைசெய்த அத்தியாயம்

பின்னு நான்மறை முனிவரர் பெருந்தவத் தோனே
முன்ன ரோதுபிர தோடமும் பூசையின் முறையு
மன்னி நாடொறும் வழிபடு மவர்பெறு வரனும்
இன்னு மெங்களுக் கிருளற வியம்புதி யென்ருர். 1

இ - ள் : இவ்வாறு சூதமுனிவர் சொல்லக்கேட்டு, பின்னரும் நான்கு வேதங்களுமுணர்ந்த நைமிசாரணிய முனிவர்கள் (சூதமுனிவரைப் பார்த்து) மிக்க தவத்தையுடைய சுவாமிகளே ! முன்னஞ்சொல்லிய பிரதோடகாலமும் அந்தப் பிரதோடபூசையின் முறைமையும் இடைவிடாமல் நாள்தோறும் பூசிப்பவர்கள் பெறும் வரமும் இன்னமும் எங்களுக்கு மயக்கம் தீரும்படிச் சொல்லுமென்ருர்கள் என்றவாறு.

முந்தை நூன்முனி யன்னவை மொழிவலென் றுரைத்தான்
சிந்தை செய்குதிர் பதின்மூன்ரும் பக்கமாந் திவாவின்
அந்த மாகிய மாலேயே பிரதோட மாகும்
இந்து சேகரன் விரும்பிய காலமு மஃதே. 2

இ - ள் : அவைகளேச் சொல்லுகிறேன் கேளுங்கள்; பதின்மூன்ரும் நாளாகிய திரயோதசி தினத்தில் பகற்பொழுதின் முடிவாகிய மாலேப் பொழுதே பிரதோடமாகும். சந்திரசேகரனுகிய பரமசிவன் விரும்பியகாலமும் அதுவேயாமென்று வேதமுணர்ந்த சூதமகாமுனிவர்சொன்னுர் எ-று.

ஆய காலேயி னடையலர் திரிபுர மழலில்
தீய வாணகை முகிழ்த்தருள் செம்மலே யல்லால்
மாய னுன்முகன் முதலிய தேவரை வணங்கி
மேய பூசனே புரிபவர் நரகிடை வீழ்வார். 3

இ - ள் : அந்தப் பிரதோடகாலத்தில் தேவர்களுக்குப் பகைவருடைய திரிபுரங்கள் தீயால் வெந்துபோகும்படி ஒளிபொருந்திய புன்னகை செய்தருளிய பரமனேப் பூசிக்காமல் திருமால் பிரமன் முதலாய தேவர்களே வணங்கி விரும்பிப் பூசை செய்கிறவர்கள் நரகத்தில் விழுவார்கள் எ - று.

சொன்ன காலேயி லீசனே வழிபடுந் தூயோர்
மன்னு மாக்கட லுடுத்தபார் முழுவதும் வணங்க
முன்னு போகங்கள் யாவையு முறையினிற் றுய்த்துப்
பின்னர் வீற்றினி திருப்பராற் பேரின்ப வீட்டின். 4

இ - ள்: மேலேகூறிய பிரதோடகாலத்தில் பரமசிவனேப் பூசை செய்கின்ற பரிசுத்தர்கள் நிலைபெற்ற பெரிய கடல்சூழ்ந்த பூலோகத்தில் இருப்பவர்கள் யாவரும் வணங்கும்படி (அரசர்களாய்) நினைக்காநின்ற போகங்களேயெல்லாம் முறையாக அனுபவித்துப் பின்பு மறுபிறவியில் முத்தியுலகில் இனிதாக வீற்றிருப்பார்கள் என்றவாறு.

அனேய காலேயி னருச்சனே புரிந்துவீ டடைந்தார்
எனேய ரென்றுநீர் வினவுதி ரேலஃ திசைக்கேன்
வினேய வென்றியான் விதர்ப்பதே சாதிப னெழிலால்
தனேயொவ் வாதவேள் காமுறுஞ் சத்தியா தனனே. 5

இ - ள்: அத்தன்மையுள்ள பிரதோடகாலத்தில் பரமசிவனே அருச்சித்து முத்தி அடைந்தவர்கள் யாவரென்று நீங்கள் கேட்பீர்களானல் அதைச் சொல்லுகிறேன். போர்த்தொழில் செய்து பெற்ற வெற்றியையுடையவனும் விதர்ப்பதேசத்து அதிபதியுமாகிய அழகினல் தனக்கொப்பில்லாத மன்மதனும் இச்சை கொள்ளத்தக்க அழகுள்ள சத்தியாதனன் என்னும் பெயருள்ள ஒரு அரசன் என்றவாறு.

காமமுறுமென்பது விகாரவகையான் காமுறுமென நின்றது. காமம் உறும் எனப் பிரித்துக்கொள்க.

அறிவி னீதியின் வாய்மையி னமைச்சினி னழகில்
பிறிதில் கல்வியிற் பெருமையி லிருநிதிப் பெருக்கில்
செறியு மூதர ணுடைமையின் வீரத்திற் றிறல்வேல்
எறிய வூறஞ்சாக் கடற்படை யுடைமையி னிசையின். 6

இ - ள்: அறிவினுலும், நீதியினுலும், சத்தியத்தினுலும், ஆலோசனேயினுலும், அழகினுலும், ஒப்புவேறில்லாத கல்வியினுலும், பெருமையினுலும், பெருமை பொருந்திய பொருள் மிகுதியினுலும், அழியாமல் பழமையாகிய நால்வகை அரண்களேயுடைமையாலும், வீரத்தினுலும் வெற்றி பொருந்திய வேலாயுதத்தைப் பகைவர்கள் தங்கள்மேலெறிய அவைகள் வந்து படும் காயத்துக்குப் பயப்படாத கடல்போன்ற சேனேகளேயுடைமையாலும், புகழினுலும் என்றவாறு.

நால்வகை அரண்களாவன :- மதிலரண், அகழரண், மலேயரண், காட்டரண் என்பனவாம்.

மற்று மின்னன தருமிறை மாட்சியின் மலிவில்
கொற்ற வேந்தரி னவனியி னிகரிலாக் குரிசில்
பற்ற லார்கள்வந் தடிதொழ நானிலம் பரித்தாங்
குற்ற நாளினி லவன்பகை யாகிய வுரவோர். 7

இ-ள்: முன் சொன்னவைகளும் அல்லாமல் இவைகள்போல இன்னமும் விசேடமான குணங்கள் உண்டாயிருக்கும் அரசுக்குரிய பெருமையின் மிகுதியினலும் வெற்றி பெற்றிருக்கும் வேந்தர்களுக்குள் இந்த உலகத்தில் ஒப்பில்லாத அரசன். அத்தன்மையுள்ளவன் பகைமன்னவர் வந்து தனது திருவடியை வணங்கும்படி தன்னுடைய நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் நாளில் அவனது பகைவர்களாகிய பலமுள்ள வேந்தர்கள் என்றவாறு.

விண்டலம் புகழ் சாளுவ தேசத்தின் வேந்தர்
கொண்ட லன்னதுன் மருடணன் முதலியோர் குழாங்கொண்
டெண்டி சாமுகந் தூளியின் மறைந்திட வெழுந்து
மண்டு தானையாற் சத்தியா தனன்பதி வளைத்தார். 8

இ-ள்: தேவலோகத்தாரும் புகழத்தக்க பெருமையுள்ள சாளுவ நாட்டரசர்களாகிய மேகத்தையொத்த துன்மருடணன் முதலானவர்கள் கூட்டமாகச் சேர்ந்துகொண்டு அட்டதிக்குகளும் தூளியினல் மறையும்படி எதிர்சென்று போர்செய்யத்தக்க நால்வகைச் சேனைகளோடும் புறப்பட்டுச் சத்தியாதனனுடைய நகரத்தை வளைந்துகொண்டார்கள் என்றவாறு.

முகைபு டைந்துதார் மதுமழை பிலிற்றிட முல்லை
நகைம டந்தையர் முலைபொரு நலந்திகழ் மார்பன்
பகைஞர் வந்துதன் பதிவளை ந் தனரெனப் பகரு
மிகைய டைந்தசொற் கேட்டலு நக்கிவை விளம்பும். 9

இ-ள்: அரும்புகள் முருக்கு விரிந்து தேன்மழை பொழியும்படியாக முல்லை அரும்புகளையொத்த பற்களையுடைய மாதர் தனங்கள் பொருந்தத்தக்க பூமாலையணிந்திருக்கும் அழகு விளங்காநின்ற மார்பையுடைய சத்தியாதன மகாராசன் பகைவர்கள் வந்து தன்நகரத்தை வளைந்து கொண்டார்களென்கிற குற்றம்பொருந்திய சொல்லைக்கேட்டமாத்திரத்தில் நகைத்துக்கொண்டு இந்தவார்த்தைகளைச் சொன்னன் என்றவாறு.

மன்ற றங்கிய மாலைவேற் றனைமாற் றரசர்
வென்றி யம்புயத் தருக்குமென் றடம்புய விறலும்
இன்று காண்குவன் கடற்படை யெழுகென வியம்பித்
துன்று தாரவ னேறினன் சுடர்மணி நெடுந்தேர். 10

இ - ள் : மணந்தங்கிய மாலையணிந்த வேலாயுதத்தையுடைய பகை மன்னவர் வெற்றி பொருந்திய அழகிய புயபலத்தையும், என்னுடைய பெரிய புயபலத்தையும் இன்றறிகிறேன் என்று கடல்போன்ற சேனைகளைப் புறப்படச்சொல்லி உத்தரவுசெய்து நெருங்கிய பூமாலை அணிந்திருக்கும் அந்த அரசன் ஒளிவிடாநின்ற பெரிய தேரில் ஏறினன் என்றவாறு.

இருவர் தம்பெருஞ் சேனையு மேற்றெதி ரிகலிப்
பொருக ளந்தனின் விளை ந்தபோ ரமலையிற் புழுங்கிக்
கருவ ழிந்துரு முதிர்ந்தன கார்க்குல மென்றால்
பரவை மாநிலம் வெருவருந் தன்மையார் பகர்வார். 11

இ - ள் : சத்தியாதன மன்னன் தேரிலேறிக்கொண்டு போர்க் களத்திற்குச் சென்றவுடன் இருவர் சேனையும் எதிர்த்துப் பகைகொண்டு யுத்தஞ்செய்யும் போர்க்களத்தில் உண்டாகிய பெரிய ஓசையினால் மேகங் களும் பயந்து கருவழிந்து இடிகளைக் கக்கினவென்றால் கடலினாற் சூழப் பட்ட இவ்வுலகத்தார் பயமுற்ற தன்மை இத்தகையதென்று தெரிந்து சொல்லுகின்றவர்கள் யார்? ஒருவருமில்லை என்றவாறு.

நிணநெ டும்படை தாக்கலி னெடுங்குடர் சரிந்து
மணம லிந்ததார் சிரம்புய மணிக்கரந் துணிந்து
பிணம்வி ழுந்தவக் களவயிற் றுணங்கைப்பே யுடனக்
கணமெ ழுந்துநின் றாடின வெண்ணிலாக் கவந்தம். 12

இ - ள் : பகைவர் நிணங்கள் பொருந்திய பெரிய ஆயுதங்கள் படுகிறதினால் நெடியகுடல்கள் சரிந்து மணந்தங்கிய மாலையணிந்திருக்கும் சிலதலைகளும் புயங்களும் அழகிய கைகளும் அறுபட்டுப் பிணங்கள் விழுந்த அந்தப் போர்க்களத்தில் கைகோத்துக்கொண்டாடுகின்ற பேய் களுடன் அப்போதே அளவில்லாத கவந்தங்களும் எழுந்துநின்று ஆடின என்றவாறு.

கவந்தம் என்பது தலையறுந்த உடல்கள்.

வினைய மெண்ணுறு மந்திரத் தலைவரும் விரைந்தார்
புனையுந் திண்புயச் சேனைகா வலரும்விண் புகுந்தார்
இனைய பூசலிற் றுன்மரு டணன்கொல விறந்தான்
வனையும் வார்கழற் சத்தியா தனனெனு மறவோன். 13

இ - ள் : (இவ்வாறு நடக்கும் போர்க்களத்தில்) நடக்குங் காரியங் களை ஆலோசிக்கத்தக்க மந்திரிகளும் மணமுள்ள வெற்றிமாலையணியும் புயங்களையுடைய சேனாதிபதிகளும் இறந்து வீரசொர்க்கஞ் சேர்ந்தார்கள்.

இத்தகைய யுத்தத்தில் நீண்ட வீரகண்டையணிந்திருக்கும் சத்தியாதனன் என்னும் அரசன் துன்மருடணனுற் கொல்லப்பட்டு இறந்தான் எ - று.

யுத்தமுகத்தில் பின்னிடாமல் சண்டை செய்திருக்கின்றவர்கள் வீர சொர்க்கஞ்சேர்ந்து அங்குள்ள தேவமாதர்களுடன் இன்பம் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

வேறு

வென்ற வேந்தர் தம்மணியை விளித்து மாய்ந்தோன் வியன்பதியை
இன்று கொண்டு கூட்டுண்மினென்னும் வெஞ்சொற் பொருன்போல
கன்று சிந்தைக் கதிரவனுங் காயுங் கதிரை யறச்சுருக்கிக்
குன்றி னின்றுந் தேரோடுங் குடபாற் கடலிற் குப்புற்ருன். 14

இ - ள் : இவ்வாறு வெற்றிபெற்ற அரசர்கள் தம்முடைய சேனைகளை அழைத்து இறந்துபோன சத்தியாதனனுடைய பெரிய நகரத்தைக் கொள்ளையிடுங்கள் என்று சொல்லியது கேட்டுச் சகிக்காத மனதையுடையவன்போலச் சூரியதேவன் காய்கின்ற தன்து கிரணங்கள் முழுவதையுஞ் சுருக்கிக்கொண்டு உதயகிரியினின்று தேருடன் மேல்கடலில் குதித்து விட்டான் என்றவாறு.

ஆகவே பகற்பொழுது போயிற்று.

கங்குல் வந்து புகுமளவிற் கருதார் சேனை பதிபுகுத
மங்கு போர்ச்சத் தியாதனன்றன் மனைவி சதியா மடநல்லாள்
அங்கை கொண்டு வயிற்றெற்றி யந்தோ வினையே னெனவரற்றிப்
பொங்கு மிருளிற் றமியளாய்க் கரந்து குடபாற் போயினுள். 15

இ - ள் : இரவுநேரம் வந்த அளவில் நகரத்தைக் கொள்ளையிடும்படி அந்தச் சேனைகள் பிரவேசித்ததை அறிந்து போரில் இறந்துபோன சத்தியாதனன் மனைவியாகிய சதியென்னும் பெயருள்ள மாதானவள் இரண்டு கைகளினுலும் தன் வயிற்றில் அடித்துக்கொண்டு ஐயோ! பாவியானேன் என்றழுது அந்த இராப்பொழுதில் ஒருவருந்துணையில்லாமல் தனியளாய் யாருக்குந் தெரியாமல் மேல்திசை நோக்கிப் போய்விட்டாள் என்றவாறு.

துன்பத் துணையே யன்றிமற்ருேர் துணையொன் றயலிற் காணுதாள்
அன்பிற் சேவற் றுணையிழந்த வன்றிற் பெடைபோ லழுதிரங்கி
வன்பிற் செலவுங் கருமுதிர்ந்த வருத்த முறலா னடைமாய்ந்து
முன்புற் றறியா நெடுங்கான வாவிக் கரையை முடுகினுள். 16

இ - ள் : மேல்திசை நோக்கிப்போனவள் துன்பமாகிய துணையே யல்லாது வேறொருவரைத் துணையாக அயலில் காணாதவளாய் அன்பினை யுடைய ஆணன்றிலைப் பிரிந்த பெட்டையன்றில் அழுவதுபோல அழு திரங்கி நடக்கமாட்டாமல் நடந்துபோகவும் கருப்பமுதிர்ந்த வருத்தத்தை அடைவதினால் நடை தள்ளாடிக்கொண்டுபோய் ஒருக்காலும் போய்க் கண்டறியாத பெரிய காட்டிலிருக்கும் ஒரு குளத்தின் கரையைச்சேர்ந்தாள் என்றவாறு.

வேறு

நல்வினை தணக்கு மாறுந் தீவினை நணுகு மாறும்
ஒல்லையி னுறுவ தென்னா லுணருமென் றறிவிப் பாள்போல்
பல்லியந் துவைக்க முன்றில் விழாக்களி பகலிற் றுய்த்தாள்
அல்லினிற் றமிய ளாகி யணங்குறை வனத்த ளானாள். 17

இ - ள் : நல்வினைப்பயன் நீங்குமுறைமையும் தீவினைப்பயன் வந்து சேரும் முறைமையும் விரைவாகப் பொருந்துவதை என்னால் அறிந்து கொள்ளுங்கள் என்று தெரிவிக்கின்றவள்போலப் பல வாத்தியங்கள் ஒலிக்கும்படி தன் அந்தப்புரத்தினிடத்தில் நடக்கும் சிறப்புகளைக்கண்டு பகற்பொழுதில் மகிழ்வை அனுபவித்தவள் இராப்பொழுது வந்தபோது தனிமையானவளாய் வனதேவதைகள் வாசஞ்செய்யத்தக்க காட்டிலிருப் பவளானாள் என்றவாறு.

எற்றிய வருத்தத் தாலு மெழுச்சியி னடையி னாலு
முற்றிய கருப்ப மேன்மேல் வேதனை முதிர்ந்து காட்டப்
பெற்றன ளென்ப மன்னோ பெரும்பகை யிழைத்துச் செற்ற
கொற்றவர்க் கிடந்து டிப்பக் குமரனைக் கொலைவேற் கண்ணாள். 18

இ - ள் : பகைவரைக் கொலைசெய்யத்தக்க வேல்போன்ற கண்களை யுடைய அந்த அரசியானவள் தனியே காட்டிற் போனவுடன் கணவன் இறந்தபோது அடித்துக்கொண்ட வருத்தத்தாலும் வழிநடந்த வருத்தத் தினாலும் முதிர்ந்த கருப்பமானது அதிவேதனையைக் காட்டப் பகை கொண்டு போர்செய்து வென்ற அரசர்கட்கு இடத்தோளும் இடக்கண் ணும் துடிக்கும்படி ஒருபுதல்வனைப் பெற்றாள் என்றவாறு.

அருநெறி நீந்தலானு மரசனைத் தணத்தலானும்
திருமகன் றன்னை யீன்ற வேதனைத் தியக்கத் தானும்
ஒருமக ளுண்ணு நீர்வேட் டோடையி னிறங்க லோடுங்
கருநிறக் கொடிய சீற்றக் கராமுயிர் கவர்ந்த தன்றே. 19

இ - ள் : அருமையான வழியைக்கடந்து வந்ததினுலும், தன்கணவனுகிய அரசனை இழந்ததினுலும், சிறந்தபுத்திரனை ஈன்ற உபத்திரவமுள்ள மயக்கத்தினுலும் ஒப்பற்ற அந்த அரசியானவள் நீருண்ண விரும்பி ஒரு நீரோடையில் இறங்கிய நிலையில் கரிய நிறமுள்ள கொடியதாகிய கோபங்கொண்ட முதலையானது அவளுயிரை வாங்கிக்கொண்டது என்றவாறு.

உதிரமு நிணமு முண்ட கராமுளை யுழையிற் போக
அதிர்கட லவனி யாள வவதரித் தானைக் காண்பான்
கதிரவன் ருதை போலக் கதுமெனக் கடலின் வந்தான்
மதலையைப் புரப்பா ரின்றி வாய்திறந் தரற்றுங் காலை. 20

இ - ள் : அவளுடைய உதிரத்தையும், மாமிசத்தையும் உண்ட முதலையானது சேற்றினிடத்தில் போக, ஒலிக்காநின்ற கடல்சூழ்ந்த இவ்வுலகத்தை ஆள்வதற்காகப் பிறந்த புதல்வனைக்காண அவனுடைய பிதா வந்ததுபோலச் சூரியன் கடலினிடத்தில் உதயஞ்செய்தான். அந்தக் குழந்தையை ஆதரிப்பவர்கள் இல்லாமல் வாய்திறந்து அழும்போது என்றவாறு.

கமையினுள் கைமை யுற்ருள் பார்ப்பனி வறுமை பூண்டாள்
அமைவுறு காதற் றன்சே யாண்டொன்று புக்கான் றன்னை
சுமையென மருங்கு நின்று துவண்டிடக் கையிற் ருங்கி
யுமையெனும் பெயரி னளவ் வோடையின் றீர முற்ருள். 21

இ - ள் : பொறுமையினையுடையவளும் கைம்பெண் தன்மையினை அடைந்தவளும் தரித்திரமுள்ளவளும் உமையெனும் பெயரையுடையவளுமாகிய ஒரு பிராமணப்பெண்ணனவள் ஆசைபொருந்திய ஒரு வருடத்துக் குழந்தையாகிய தன் புதல்வனை ஒரு பளுவைச் சுமப்பதுபோல இடையானது துவளும்படிக் கையிலேந்திக்கொண்டு அக்குளத்தின் கரையில் சேர்ந்தாள் என்றவாறு.

தாயிழந் தாரு மின்றித் தரையினிற் கிடந்து செய்ய
வாய்திறந் தரற்று கின்ற மதலையை யுற்று நோக்கிக்
காய்கதிர்க் கடவுள் விம்பங் கடலினின் றுதித்த தேபோல்
ஏயுமிச் சேயை யீன்ருள் யாவளோ வென்று தேர்வாள். 22

இ - ள் : தாயையிழந்து வேறொருவருமில்லாமல் மண்ணிற்கிடந்து சிவந்த வாயைத்திறந்து அழுகிற குழந்தையின் அண்டையிற்போய்ப் பார்த்துச் சூரியதேவன் கடலினின்றும் உதயமானதுபோலத் தேசுபொருந்திய இந்தக் குழந்தையைப் பெற்றவள் எவளோவென்று யோசிக்கின்ருள் என்றவாறு.

அரசிளங் குமர னுக வந்தணன் மதலே யாக
விருநிலத் திவரே யன்றி யாவரே பெறுதற் பாலார்
நிரைவளே புனிற்றி னுண்மற் றியாண்டையாய் நின்ருண் மைந்தன்
புரிகொடி நாபி யின்னு மறுத்திலாள் புகுந்த தென்னே. 23

இ - ள் : இந்தப்பிள்ளை இராசகுமாரனுகவேண்டும், அல்லது பிராமணப் பிள்ளையாகவேண்டும், பெரிய இந்த உலகத்தில் மேற்சொல்லியவர்கள் பெறுந்தன்மையுடையவர்கள். இதைப் பெற்றவள் எவ்விடத்தில் இருக்கின்ருளோ? இந்தக் குழந்தையின் கட்டுப்பட்டிருக்கும் தொப்புள் கொடியை இன்னமும் அறுக்காதவளாயிருந்தாள். இடையில் என்ன நேர்ந்ததோ என்றவாறு.

என்னிளங் குழவிக் கின்னே னிளவலா யின்பா லூட்டி
மன்னிய காதல் கூர வளர்ப்பனே வென்ன வெண்ணும்
அன்னிய வருணத் தானே லந்தணர்க் கடாதே யென்னும்
தன்னிளங் குமர னேடு தராபதி மகவைப் பார்க்கும். 24

இ - ள் : என்னுடைய இளங்குழந்தைக்கு இவன் தம்பியாக இனிய பாலூட்டி நிலேயான ஆசை மிகுதியாகும்படி வளர்ப்பேனே என்று எண்ணுவாள். மேற்சொல்லிய இரண்டு வருணமுமில்லாமல் அன்னிய குலத்துப் பிள்ளையானல் பிராமணகுலத்துக்குத் தகாதே என்றெண்ணுவாள். தன்னுடைய புதல்வனேடு இராசகுமாரனைப் பார்ப்பாள் என்றவாறு.

இத்திற மைய மெய்தி யிடைந்திவ ணிற்கும் வேலே
சத்திரங் கரகங் கொண்டோர் தவமுனி யோடை சார்ந்து
புத்திர சோக முற்றுப் பொன்னனு ணின்ற வாறும்
உத்தமக் குமரன் வந்த வரவையு முளத்தி னேர்ந்தான். 25

இ - ள் : இவ்வாருக ஐயத்தைப் பொருந்திய இவள் இடைந்து நிற்கும்போது ஒருகையில் குடையும் மற்ருருகையில் கமண்டலமும் உடையவராய் ஒரு முனியானவர் அந்த மடுவினிடத்தில்வந்து புத்திரசோகத்தை அடைந்து இலக்குமிபோன்ற அழகுள்ள அப்பிராமணப் பெண்ணுனவள் நிற்குந்தன்மையையும் நன்மையுள்ள அரசகுமாரன் பிறந்த வகையையும் தமது மனதில் ஞானதிருட்டியினல் அறிந்தார் என்றவாறு.

வேறு

ஐய மெய்திய வந்தண மாதுகேள்
துய்ய வோரையிற் ருேன்றிய தோன்றலே
மைய லின்றி மருவி வளர்த்திடின்
உய்யு முங்கள் குலமு முலகுமே. 26

இ - ள் : *ஐயப்பட்டுக்கொண்டிருக்கும் பிராமணப்பெண்ணே! கேள் நல்ல இலக்கினத்தில் பிறந்த இந்த அரசகுமரனைச் சந்தேகமில்லாமல் விரும்பி வளர்த்தால் உங்கள் குலமும் இந்த உலகமும் கடைத்தேறும் என்றவாறு.*

என்ன மாமுனி கூறலு மேந்திழை
மன்னு மாநிதி போலு மகவுடன்
இன்ன நீர வெடுத்துக்கொண் டேகினுள்
மன்னர் மன்னன் மகனைமற் றென்பவே. 27

இ - ள் : *இவ்வாருக அந்த முனிவர் சொல்லலும், அதைக்கேட்ட பிராமணப் பெண்ணுனவள் நிலையான பெரிய நிதியொத்த தன்பிள்ளையுடன் சத்தியாதனன் புத்திரனைத் துன்பம் திரும்படி எடுத்துக்கொண்டு போனுள் என்றவாறு.*

போத லுற்ற புரிகுழற் பார்ப்பனி
மாக முட்டிய மாளிகை வான்றலை
மேக முற்று விழைவுடன் கண்படும்
ஏகச் சக்கர மாநக ரெய்தினள். 28

இ - ள் : *அரசகுமாரனை எடுத்துக்கொண்டு போகின்ற கட்டுப் பட்ட அளகத்தையுடைய பிராமணப் பெண்ணுனவள் விண்ணையளாவிய மாளிகைகளின் பெரிய சிகரங்களில் மேகங்கள்வந்து மகிழ்வுடன் நித்திரை செய்யும்படியான ஏகசக்கரமென்னும் பெயரையுடைய நகரத்தில்போனுள் என்றவாறு.*

ஈண்டு நல்குர வாற்பலி யேற்றுண்டு
மாண்ட செல்வ மகவிரு வோரையும்
ஆண்டு நன்சிறப் பால்வளர்த் தாக்கினுள்
பூண்ட வேதமுந் நூலும் புனைவித்தே. 29

இ - ள் : *ஏகசக்கரபுரத்துக்குப்போன (அந்தப் பிராமணப் பெண்ணுனவள்) பொருந்திய வறுமையினுல் அந்நகரத்தில் பிச்சை எடுத்துக்கொண்டு மாட்சிமை பொருந்திய செல்வம் அடையத்தக்க இரண்டுபிள்ளைகளையும் மிக்க சிறப்புடன் வளர்த்து உபநயன கல்யாணஞ் செய்வித்து விதிவிலக்குகளைச் சொல்லுந்தன்மையுள்ள வேதமும் ஓதுவித்தாள் எ-று.*

மக்க ளோரிரு வோரு மறையவர்
புக்கி ரேறுஞ்சென் றேற்றிடும் போனகந்
தக்க தாயுட னுண்டு சதுர்மறை
யொக்க வேதியர் தம்மொடு மோதினுர். 30

இ - ள்: அந்தப் பிள்ளைகள் இருவரும் பிராமணர்கள் வீடுகள் தோறுஞ் சென்று பிச்சை எடுத்துக்கொண்டு வருகின்ற அன்னத்தைக் கற்புள்ள தாயும் தாங்களும் உண்டு நான்கு வேதங்களையும் ஒருங்கே பிராமணப் பிள்ளைகளுடன் அத்தியயனஞ் செய்தார்கள் என்றவாறு.

நான்கு வேதங்களாவன:- இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பவைகளாம்.

அரிய வேதமு மங்கமும் விற்படைக்
குரிய கல்வி முதல வுலகினில்
விரியு மெண்ணெண் கலையின் விகற்பமும்
கரிய மாலும்பின் னோனு மெனக் கற்றார். 31

இ - ள்: அருமையாகிய வேதங்களும், ஆறங்கங்களும், வில்லாதியான ஆயுதப் பயிற்சிக்குரிய கல்வியும், இவை முதலாக உலகில் பிறந்த அறுபத்துநான்கு கலைகளின் விகற்பங்களும் இராம லக்குவர்போலக் கற்றார்கள் என்றவாறு.

வேதாங்கமாவன:- மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பவைகளாம்.

அறுபத்துநான்கு கலைகளாவன:- அட்சரலட்சணம், லிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிடசாத்திரம், தருமசாத்திரம், யோகசாத்திரம், மந்திரசாத்திரம், சகுனசாத்திரம், சிற்பசாத்திரம், வைத்தியசாத்திரம், உருவசாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடணம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், தாளம், அத்திரபரிட்சை, கனகபரிட்சை, இரதபரிட்சை, கசபரிட்சை, அசுவபரிட்சை, இரத்தினபரிட்சை, பூமிபரிட்சை, சங்கிராமவிலக்கணம், மல்லயுத்தம், ஆக்கிருஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், மதனசாத்திரம், மோகனம், வசிகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நஷ்டம், முஷ்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அத்ருசியம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினித்தம்பம், சலத்தம்பம், வாயுத்தம்பம், திடத்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம் என்பவைகளாம்.

வேறு

இவ்வாறு மைந்தர் வளர்கின்ற காலை
யிவரோடு மன்னை யுமைபோய்
மைவா ரணத்தி னுரியாளர் கோயில்
வழிபாடு செய்து வருநாட்.

சைவா கமத்தி னெறிநன் றுணர்ந்த
சாண்டில்லிய னென்னு முனிவன்
செவ்வாய் மலர்ந்து வுமையோடு வந்து
தெருளத் தெருட்டல் புரிவான். 32

இ-ள்: இவ்வாறு அந்த இரண்டு புதல்வர்களும் வளர்கின்ற காலத்தில் இவர்களுடன் தாயாகிய உமையென்பவள் கறுத்த யானைத் தோல் போர்த்த பரமசிவனுடைய ஆலயத்திற்குப்போய் வழிபாடுசெய்து வருகின்றநாளில் ஒருநாள் சைவாகமங்களைப் பழுதறவுணர்ந்த சாண்டில்லிய முனிவர் மகிழ்வுடன் உமையிடத்து வந்து அவளுக்குத் தெரியும்படித் திருவாய் மலர்ந்து கூறுகின்றார் என்றவாறு.

அந்தோ சிவன்றன் விளையாடல் யாவு மரியாதி தேவ ரறியார்
மைந்தோரி லிந்த விளையா னுனக்கு மகவாகி வந்த செயலை
நந்தா துரைக்க முடியாத தென்று நவிலாமு னங்கை பணியா
முந்தா வெனக்குண் மகிழத் தெரித்தி முறையாயென் மைந்தன் வரவே. 33

இ-ள்: அதிசயமும் இரக்கமும் உண்டாக முனிவர் சொல்லுகிறதாவது:- உமையென்பவளே! பரமசிவனுடைய திருவிளையாடலையெல்லாம் திருமால் முதலாய தேவர்களும் அறியமாட்டார்கள். புதல்வர்களில் இந்த இளையவன் உனக்குப் புதல்வனாகிவந்த செய்கையை விவரித்துச் சொல்ல முடியாதென்று சொல்வதற்குமுன், அவள் வணங்கிப் பெரியவரே! மனமகிழ்ச்சி உண்டாகும்படி இளையபுத்திரன் உற்பத்தியை முறைமையாக எனக்கு அருளிச் செய்யவேண்டுமென்றாள் என்றவாறு.

மைந்தர் என்னுஞ்சொல் ஈண்டு மைந்தோரென நின்றது.

வேறு

என்னு முமைக்கு மாமுனிவ னிசைத்தா னிந்த மாமதலை
தன்னை யீன்ற தாதைபெயர் சத்தியா தனனுந் தார்வேந்தன்
மன்னர் மன்னன் வைதர்ப்ப நாட னவன்போர் மருவலரால்
கன்னி யமரி னுயிரிழந்தான் மனைவி சதியுங் கானடைந்தாள் 34

இ-ள்: இளைய புதல்வன் தோற்றத்தைச் சொல்லவேண்டும் என்றுகேட்ட உமை என்பவளுக்குப் பெருமைபொருந்திய முனிவர் சொல்கின்றார், இந்தப் புதல்வனைப்பெற்ற தகப்பன் பெயர் சத்தியாதனன் என்பதாம். (அவன் என்ன சமயத்தானென்றால் மாலையணிந்திருக்கும் அரசனாகிய சத்திரிய வம்சத்தான்) அரசர்க்கெல்லாம் அரசனாகியிருப்பவன். வைதருப்ப தேசத்தையுடையவன். இத்தன்மையுள்ளவன் வலியபோர் செய்கின்ற

பகைவரால் அழிவில்லாத யுத்தகளத்தில் உயிர்விட்டிறந்தான். அதையறிந்த அவன் மனைவியாகிய சதியென்பவள் காட்டிற்குப் போய்விட்டாள் என்றவாறு.

அடைந்த வனத்தி னிம்மகவை யரிதி னீன்ற வருத்தத்தால்
குடைந்து நீருண் பதுவேட்டு வாவி யிடத்திற் குறுகுங்கால்
மிடைந்து வன்மீ னுயிர்கவர வீந்தாள் பாலன் றனித்தழுதான்
உடைந்த குரல்கேட் டுடன்மகவா யெடுத்து வளர்த்தா
யெனவுரைத்தான். 35

இ - ள்: அவ்வாருகச் சென்றகாட்டிலே சதியென்பவள் இப்புதல்வனை அரிதாகப்பெற்ற வருத்தத்தினால், உடம்பைச் சுத்தம்செய்துகொண்டு நீருண்ணவேண்டுமென்ற விருப்பத்தினால் ஒரு குளத்தினிடத்தில் போனபோது அதிலிருக்கும் முதலையானது வந்து பிடித்துக்கொண்டு விழுங்க உயிரிழந்தாள். பிறந்த புதல்வன் யாரும் ஆதரவில்லாமல் தனியாய் அழுதுகொண்டிருந்தான். அவன் அழுங்குரலைக்கேட்டுப் போய் எடுத்துவந்து உன்புதல்வனுகை வளர்த்தாயென்று சொன்னுர் என்றவாறு.

கேட்ட வுமையு மிறும்பூது கிளர விந்த மகவீன்றேன்
வாட்ட மிலனு யரசாட்சி வரும்போ கத்தை நுகர்போதில்
தோட்டு மமரு ளவனுவி யொன்னுர் தொலைக்கத் தொலைந்ததுவும்
காட்டி னடைந்து மிவனன்னை கராவா லிறந்த காரணமும். 36

இ - ள்: இளைய புதல்வன் தோற்றத்தைச் சாண்டில்லிய முனிவன் சொல்லக்கெட்ட உமையென்னும் பிராமணப் பெண்ணுனவள் மிக்க ஆச்சரியமடைந்து (அம்முனிவரைப் பார்த்து மேலுங்கேட்கிருள், ஐயரே!) இப்புதல்வனைப்பெற்ற அரசன் மனவாட்டமில்லாதவனுய் அரசாட்சியினுல் வருகின்ற போகங்களை அனுபவித்துக் கொண்டிருக்குங் காலத்தில் கூட்டமாகக்கூடிய போர்க்களத்தில் பகைவர்கள் யுத்தஞ்செய்து கொல்ல அவனுயிரிழந்த காரணமும் இப்புதல்வனுக்குத் தாயானவள் நம்முடைய கணவன் இல்லாத நகரத்தில் இருந்தால் ஏதாவது அபாயம்நேரிடுமென்று காட்டிற்சென்றும் முதலையால் உயிரிழந்த காரணமும் என்றவாறு.

இந்த மகவு மரசுரிமை யெய்துங் கால மென்றெனவும்
அந்த மறையின் சேய்வறுமை யகன்று வாழ்வ தென்றெனவும்
முந்தை வைகன் மறைமுனிவன் மொழியாற் றெளிந்து வளர்த்தேற்குச்
சிந்தை மகிழ வருந்தவனே செப்பு கென்ருள் செப்புவான். 37

இ - ள்: முன்னெருநாள் நான் காட்டிற்குப் போனபோது (இந்த இளையமகன் குழந்தையாய் அழுதுகொண்டிருக்கக் கண்டு இது யார்

பெற்றதோவென்று நான் ஐயுறும்போது) அவ்விடத்தில் வந்த ஒரு பிராமண முனிவர் சொல்லத்தெளிந்து எடுத்துவந்து இந்தக் குழந்தை தனக்குரிய அரசாட்சியை எக்காலம் அடையுமோ என்றும் அந்தப் பிராமணப்பிள்ளை தரித்திரம் நீங்கி எக்காலம் செல்வத்தையடைவானோ வென்றும் எண்ணிக்கொண்டு வளர்த்த எனக்கு மனமகிழ்ச்சி உண்டாகும் படி அரிய தவமுள்ள முனிவரே சொல்லுமென்ருள். அவருஞ் சொல்லு கின்ருர் என்றவாறு.

காளை யிவன்றன் ருதைமுனங் கழிந்த பவத்திற் கைதவர்கோன்
பாளை விரிந்து மணங்கமழு மதுரா புரிக்குப் பார்த்திபனய்
வாளை முனிந்து கடைசிவந்த வரிக்கண் மடவார் மாரனெனத்
தாளை வணங்கார் முடிவணங்கத் தருமச் செங்கோற் செலுத்தினன். 38

இ - ள் : உமையே! நீ கேட்ட இரண்டு காரணமும் சொல்லுகிறேன் கேள். இந்த இளையமகனுடைய தந்தையானவன் முன்பிறவியில் பாண்டிய மன்னன். பாளைகள் விரிந்து வாசனை வீசும்படியான (வளப்பத்தையுடைய) மதுராபுரிக்கு அரசனுகியும் வாளாயுதத்தைக் கோபித்துக் கடைசிவந்து செவ்வரிபரந்த கண்களையுடைய மாதர்களுக்கு மன்மதன்போல அழகுள்ள வனுகியும் பகைவர்கள் தங்கள் முடியினல் தன் பாதத்தை வணங்கத் தக்கதாகத் தருமநெறியில் வழுவாமல் செங்கோல் செலுத்திக்கொண் டிருந்தான் என்றவாறு.

ஈசனெண்ணெண் விளையாட்டு மியற்றி னேனங் கயற்கண்ணி
நேசன் றெண்டு பூண்டுசிவ நேச நிசியின் முகந்தோறும்
வாச வன்போல் வழிபட்டு வருபன் ஞளி னெருஞான்று
பேசு பதின்மூன் ருந்தினம்வந் தெதிர்ந்த தற்றைப் பிரதோடத்தின். 39

இ - ள் : அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்தருளினவரும் மீனுட்சி அம்மையின் மணவாளருமாகிய சோமசுந்தரக்கடவுளுக்கு அடிமை பூண்டு பரமசிவன் விருப்பமுறத்தக்க பிரதோடகாலந்தோறும் தேவேந் திரன் பூசை செய்ததுபோலப் பூசை செய்துகொண்டு வருகின்ற பல நாள் களில் ஒருநாள் திரயோதசி தினம் வந்தது. அந்தநாளில் பிரதோட காலத்தில் என்றவாறு.

ஆல வாயி னரன்றன்னை யரசன் வழிபட் டலர்தூவும்
வேலை வளவன் முதலபகை வேந்த ரமர்க்கு மேவினரென்
றோலை யோடு தூதர்வர வுவர்நீர்க் கடலி னெலியெழுந்து
ஞாலம் புகழுந் தமிழ்மதுரை நடுங்க வரச னுருத்தெழுந்தான். 40

இ - ள் : திருவாலவாயில் வீற்றிராநின்ற சோமசுந்தரக்கடவுளை இந்தப் பாண்டிய அரசன் வழிபட்டு மலரால் அருச்சிக்கும்போது சோழ

அரசன் முதலாகிய பலதேசத்து மன்னவர்கள் பகைகொண்டு போர்செய்ய வந்தார்களென்று தூதர்கள் ஓலைகொண்டுவர பருவகாலத்துக் கடல் ஓசைபோல ஒருபேரோசை உண்டாகிப் பூவுலகில் உள்ளவர்கள் புகழும் படியான தமிழ்நாட்டிலுள்ள மதுரையிலிருப்பவர்கள் எல்லோரும் பயந்து நடுங்கவே பாண்டியமன்னன்கோபித்து எழுந்தான் என்றவாறு.

வேறு

கொன்றையங் கண்ணிக் கடவுள் பூசனையு
முடித்தில மென்பது குறியான்
கன்றிய மனத்தன் சேனைகா வலரைக்
கதுமென வம்மின்க ளென்றுங்
குன்றுறழ் மணித்தேர் பண்ணுதி வலவ
கொணர்திநீ யென்றென்றுங் கூறிச்
சென்றனன் செழும்பொற் கோயில்வாய் கடந்து
வீதிவாய்ச் செல்கின்ற போது. 41

இ - ள்: கொன்றைப்பூ மாலையணிந்த பரமசிவனுடைய பூசனையை முடித்திலோம் என்பதையும் கருதாதவனாய்க் கொதிப்புள்ள மனத்துடன் சேனாதிபதிகளைப் பார்த்து, நீங்கள் சேனைகளைக் கூட்டிக்கொண்டு விரைவாக வாருங்கள் என்றும், தேர்ச்சாரதியைப் பார்த்து நீ தேரைப்பூட்டிக் கொண்டு வாவென்றும் சொல்லிப் புறப்பட்டுச் செழுமையுள்ள பொன்னாற் செய்யப்பட்ட தன் ஆசாரவாசல் கடந்து வீதியினிடத்திற் செல்லும்போது என்றவாறு.

மந்திரக் கிழவன் மாபெல வேந்தன்
வாதனைப் பூசனை புரிதல்
சிந்தையி னெண்ணி நாற்படை சூழச்
சேனைகா வலரொடுஞ் சென்று
தந்திர மிரியப் பொருதுசெம் பியனைத்
தருக்கறப் பிணித்தனன் கொணர்ந்து
செந்தமிழ் மாறன் றிருமுனம் விடலுஞ்
செழியர்கோன் வாளினுற் றடிந்தான். 42

இ - ள்: இவ்வரசன் சிவபூசையையும் நடுவில் நிறுத்திவிட்டு யுத்தஞ்செய்யப் புறப்பட்டது தெரியாமல் அவனுடைய மந்திரியானவன் பகைவர் போர்செய்ய வந்திருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டவுடன் இப்போது நம்முடைய அரசன் சிவபூசை செய்துகொண்டிருப்பதனால் இந்தச் சேதியை அவருக்குத் தெரிவித்தால் சிவபூசைக்கு இடையூறாகும். ஆதலால் நாமே போய்ப் போர்செய்து வெற்றிபெற்று வருவோமென்று

மனதிலெண்ணிக்கொண்டு நால்வகைப் படைகளும் சூழப் படைத்தலைவர்களோடும் போய் பகைவருடைய சேனைகளெல்லாம் ஓடும்படிப்போர்செய்து சோழ அரசனை இறுமாப்புக்கெடக் கட்டிக்கொண்டுவந்து செவ்விய தமிழை வளரச்செய்த பாண்டியன் எதிரில்விட, அவ்வரசனைத் தன் வாளினாற் கொன்ருன் என்றவாறு.

அடையலர்ச் செகுத்த செருக்கினாற் றென்ன
ஞலவா யரன்றிருப் பூசை
யிடையினிற் றணந்தே முடித்தில மென்ப
தெண்ணில னெல்லியி னயினி
மடைவளஞ் சுரப்ப வருந்திஞ னந்த
மடமையான் மறுமையிற் போகங்
கடைசெல வருந்தா திடையினி லொன்ஞர்
கருவியாற் களத்தினின் மடிந்தான். 43

இ - ள்: பகைவரைக்கொன்ற இறுமாப்பினுல் பாண்டியனனவன் திருவாலவாயில் வீற்றிருக்கும் சொக்கநாதர் வழிபாட்டை நடுவில் நீங்கி நிறைவேற்றவில்லையே என்பதை எண்ணுமல் இராப்பொழுதில் அறுவகைச் சுவையும் குறையாமல் வாய்க்கு இனிமையைத் தரத்தக்கதாக அன்னம் உண்டான். அந்த அறியாமையினுல் மறுபிறப்பில் நிறைந்த வயதுடனிருந்து போகங்களை அனுபவிக்காமல் நடுப்பாதியில் தானே பகைவரது ஆயுதத்தால் போர்க்களத்தில் இறந்தான் என்றவாறு.

அன்றுமிக் குமர னந்தவேல் வழுதிக்
கரும்பெறற் குமரஞ யுதித்துத்
தன்றிருத் தாதை செய்கைபோற் றுனுந்
தரியலர்ச் செகுத்தன மென்னும்
வென்றியிற் களித்துத் தாதையோ டயின்று
வினையெஞன் றுயில்கொடு கழித்தான்
றென்றுபட் டுளவாந் தீமையா லின்ன
வறுமையாந் துயர்க்கடல் குளித்தான். 44

இ - ள்: அந்தநாளிலும் இந்தப் புதல்வன் வேலாயுதத்தையுடைய அந்தப் பாண்டியனுக்குப் பெறுதற்கரிய புதல்வனுகப் பிறந்து சிறப்புள்ள தன் தந்தை செய்கைபோலத் தானும் பகைவரைக் கொன்றேமென்கிற வெற்றியால் மமதையடைந்து சொக்கநாதர் பூசை நிறைவேருமையால் தீவினைவந்து நேரும் என்பதை எண்ணுமல் தகப்பனுடன் உணவு உண்டு உறங்கி இராப்பொழுது கழித்தான். இவ்வாறு பழமையாய் வருகின்ற பாவத்தினுல் இத்தன்மையுள்ள தரித்திரமாகிய துக்கக்கடலில் முழுகினுன் என்றவாறு.

மற்றிவன் ருயு மந்தவாள் வழுதி மனைவியாய் வாழுமுற் பவத்தின்
வெற்றிவேன் மன்னன் பன்னிய ராய வேறுள மடவியர்க் கெல்லாம்
குற்றமே புரிந்து தீவிட மருந்திக் கொலைபுரி பாவமே யிவனைப்
பெற்றநா ளந்த முதலைவாய்ப் படுத்திப் பெய்வளை யுயிர்கவர்ந் ததுவே.

இ - ள் : இவ்வாறு துக்கக்கடலுள் அழுந்திய இவன் தாயான வளும் வாளாயுதமேந்திய அந்தப் பாண்டியன் மனைவியாய் வாழ்ந்துகொண் டிருந்த முன் பிறப்பில் வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய அவ் வரசன் மனைவியர்களாகிய மற்றுமுள்ள மாதர்களுக்கெல்லாம் குற்றங் களையே செய்து கொடியதாகிய விஷமிட்டுக் கொலைசெய்த பாவமானதே இவனைப் பெற்றநாளில் அந்த முதலைவாயில் அகப்படச்செய்து அவளு டைய உயிரினைக் கவர்ந்துவிட்டது என்றவாறு.

வேறு

ஆதியம் பரமனை யருளி னாழியை
காதலின் முற்பவம் வழி படர்க்கலா
வேதனை வறுமையான் மெலிந்து மிப்பவத்
தேதமோ டிடுபலி யெடுப்ப ரின்சொலாய். 46

இ - ள் : இனிய சொல்லையுடையவளே! ஆதியாகிய பரமசிவனை, கருணைக்கடலை முன்பிறப்பில் அன்புடன் பூசைமுற்றச் செய்யாமையால் சம்பவித்த வேதனையைத் தருகின்ற தரித்திரத்தால் வருந்தியும் இப்பிறப் பில் துன்பத்துடன் பிச்சையை எடுக்கின்றார்கள் என்றவாறு.

மல்கிய செல்வமும் வளனு மைந்தரும்
பல்கிய கிளைஞரும் பழுக்க வாழுநர்
நல்கிய கிரீசனை நாளும் நாடியே
யல்கலிற் பவந்தொறு மருச்சித் தேத்தினர். 47

இ - ள் : நிறைந்த செல்வமும் வளப்பமும் புத்திரர்களும் மிகுந்த சுற்றத்தாரும் செழித்திருக்கும்படி வாழ்கின்றவர்கள் மேற்சொல்லியவை களை எல்லாம் அருளிச்செய்கின்ற கயிலாயபதியை நாள்தோறும் மனதில் தியானஞ்செய்து குறைவில்லாத பிறவிகள்தோறும் அருச்சனைசெய்து துதிசெய்யப் பெற்றவர்களாயும் என்றவாறு.

வேறு

மறையு மங்கமு மாசில் புராணமும்
செறியு மாகம முந்நின்று செப்புமால்
பொறியு நல்வினை போக்கிமெய் வீட்டின்பம்
அறிய நல்கு மரனடி யென்னவே. 48

இ - ள் : அந்தச் சிவபூசையின் பலனானது ஐம்பொறிகளால் அனுப விக்கத்தக்க திவினையை நீக்கி உண்மையாகிய முத்தியின்பத்தை அறிந்து ஆனந்தம் அடையும்படிப் பரமசிவனுடைய திருவடியைத் தருமென்று வேதங்களும் குற்றமில்லாத பதினெண்புராணங்களும் பொருந்திய இருபத் தெட்டு ஆகமங்களும் ஒன்றுக்கொன்று மாறுபடாமல் நின்று சொல்லு கின்றன என்றவாறு.

சொன்ன விப்பிர தோடத்திற் கித்துணை
மன்னு மான்மியம் யாதெனின் மாதுகேள்
கன்னல் வேளை யெரித்தநங் கண்ணுதல்
இன்ன தாயர சனிமு கத்தினே. 49

இ - ள் : சொல்லிய இந்தப் பிரதோடத்துக்கு நிலைபெற்ற இவ்வளவு பெருமை உண்டானது என்னவென்றால் அந்தண மாதே! சொல்லு கிறேன் கேள். கரும்பு வில்லையுடைய மன்மதனை எரித்த நெற்றிக்கண்ணை யுடைய நம்முடைய பரமசிவன் இத்தன்மையுள்ளதாகிய பிரதோடகாலத் தில் என்றவாறு.

வேறு

விண்டல மளக்கும் வெள்ளிவே தண்டத்
தாதிதன் வியனெடுஞ் சிகரத்
தெண்டிசா முகமு மிருள்கெட விமைக்க
வெழுந்தபே ராலய மன்றின்
அண்ட நா யகிகண் டுவந்தெழி லரிமா
னாசனத் தினிதுவீற் றிருப்பக்
கொண்டலி னிறத்தோன் கொண்டலி னுருமிற்
குடமுழாக் குடங்கையின் முழக்க. 50

இ - ள் : ஆகாயத்தை அளக்கும்படியான கயிலாயகிரியின் விசால முள்ளதாய் உயர்ந்திருக்கும் சிகரங்களையுடைய அட்ட திக்குகளினிடத் திலும் இருள் கெடும்படி ஒளிமிக்கு ஓங்கிய விசாலமாகிய தம்முடைய ஆலயமாகிய அவையில் பார்வதிதேவியார் நோக்கி மகிழ்ந்து அழகுள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்கவும் திருமால் இடிமுழக்கம்போல் குடமுழா என்னும் வாத்தியத்தைத் தன்னுடைய உள்ளங்கையினால் முழக்கவும் என்றவாறு.

தும்புரு வோடு நாரதர் பாடப் புரந்தரன் சுதியினிற் கூட்ட
அம்புய மடந்தை தோரிய வனிதை யாகியே மகரயாழ் தடவ
வம்பணி முலையிற் கோடுறத் தழுவி மாடக மலர்க்கையான் முறுக்கி
யம்பவ ளத்தின் வாய்மலர் திறந்து நாமக ளமுதப்பாட் டயர. 51

இ-ள்: தும்புருநாரதர் இசைபாடவும் அதைத் தேவேந்திரன் சுதியில் கூட்டவும் திருமகளானவள் ஒத்துப்பாடுகின்ற மகளிர்போல மகர வீணை வாசிக்கவும் கலைமகள் கச்சணிந்த தங்கள் தனங்களினிடத்தில் வீணைத்தண்டு பொருந்தும்படி சாத்திக்கொண்டு செந்தாமரைமலர் போன்ற கையினுல் முறுக்காணியை முறுக்கி அழகிய பவளத்தையொத்த வாயைத்திறந்து அமுதம்போல மதுரமுள்ள இசைபாடவும் என்றவாறு.

அவனியை ஈன்ற விரிஞ்சரோர் பதின்மர்க்
காதியாஞ் சதுர்முக விரிஞ்சன்
புவனிவா னுலகஞ் செவிசெவி டெறியப்
பொற்கரத் தாளத்தைச் சதியிற்
சிவனட னத்துக் கிசையவே தாக்கத்
தேவர்க ளனைவரு மேத்தத்
தவளவெண் ணீற்ருே னளவில்பல் கோடி
தபனரி னுருவெடுத் தாடும். 52

இ-ள்: இப்பூவுலகைப் படைத்த பத்துப்பிரமர்களுள் ஆதியான சதுர்முகப்பிரமதேவன் பூலோகத்தில் உள்ளவர்கட்கும் தேவலோகத்தில் உள்ளவர்கட்கும் காதுகள் செவிடுபடும்படி அழகிய கைத்தாளத்தை தாளக்கிரமப்படி சிவனுடைய நடனத்துக்கு இசைவுபெறத் தாக்கவும் தேவர்களெல்லோரும் துதிசெய்யவும் வெண்மை நிறமுள்ள திருநீறணிந் திருக்கும் பரமசிவன் அளவில்லாத பலகோடி சூரியர்கள்போலத் திருவுரு வங்கொண்டு தாண்டவமாடும் என்றவாறு.

விண்டுவே முதலாத் தேவர்க ளெவரும்
விதுவுறை சடிலவா னவன்றன்
றண்டலி னிருத்தங் காணிய வேகுந்
தன்மையா ரன்னவ ரெல்லா
மண்டுநீ ருலக மாதியஞ் சுடரை
வழிபடு பூசனை தமதாய்க்
கொண்டுநின் றுவப்ப ரென்றுநான் மறையுங்
கூறுமா கமங்களுங் கூறும். 53

இ-ள்: திருமால் முதலாய தேவர்களெல்லோரும் சந்திரன் பொருந்திய சடைமுடியையுடைய பரமசிவனது சதானந்த நிருத்தத்தைத் தரிசிக்கச் செல்லுந்தன்மையால் அவர்களெல்லோரும் கடல் சூழ்ந்த இவ் வுலகத்தில் ஆதியாகிய பரமசிவனை வழிபாடுசெய்யும் பூசனை தங்களுடைய தாகக்கொண்டு எந்நாளும் மகிழ்ச்சி அடைவார்களென்று நான்கு வேதங் களும் சொல்லுகின்றன. அவ்வாறே இருபத்தெட்டு ஆகமங்களும் சொல்லு கின்றன என்றவாறு.

அன்றியு மடவாய் நின்வயி னுதித்த
வரும்பெறற் காளைவே தியன்றான்
சென்றிடு மும்மைப் பிறப்பின் வேதியருட்
செல்வமிக் குடையனு யிருந்துங்
கன்றிய வுலோபஞ் சிந்தையைக் கவற்றக்
கைவிரித் தெவரளித் தாலும்
நன்றென வேற்றவள நிதி யோடு
நாடொறும் பாவமு மீட்டி. 54

இ-ள்: இதுவுமல்லாமல் உன்னிடத்தில் பிறந்த இந்தப்பிராமணப் பிள்ளையானவன் முன்பிறப்பில் பிராமண குலத்தில் மிகுந்தசெல்வமுடைய வனுயிருந்தும் கொடிதான உலோபகுணமானது தன் மனதைப் பீடிப்ப தனுல் (தனக்குள்ளதை வைத்துக்கொண்டு உண்ணுமல்) எவர் கொடுத்தா லும் கைவிரித்துத் தானமாக வாங்கிக்கொள்ளும் பொருளுடனே பாவத் தையும் நாள்தோறும் சேர்த்து என்றவாறு.

புண்ணியவான்களுடைய சொத்தை வாங்கலாம். பாபிகளுடைய சொத்து வாங்கலாகாது.

வாழுநா ளகத்து ளொருபக லேனும்
வறியவர்க் கிட்டுணு தொழிந்த
பீழையால் வறுமைப் பிணிபிடித் திந்தப்
பிறப்பினி லின்னண முழன்றான்
போழிள மதிய முடித்தசே கரனைப்
பூசனை புரிவரேன் மைந்தர்க்
கூழுறு வறுமை பரிதிவா னவன்முன்
னுள்ளிருட் பிழம்பென வொழியும். 55

இ-ள்: இவ்வாறு வாழுநாளில் தன் வீட்டில் வருகின்ற யாசக ருக்கும் ஒருநாளாவது பிச்சையிட்டுண்ணுத குற்றத்தினுல் வறுமை நோய் அடைந்து இந்தப் பிறப்பில் இந்தவிதமாக வருத்தமடைந்தான். ஒரு கலை யாகிய இளஞ்சந்திரனை அணிந்த திருமுடியையுடைய பரமசிவனைச் சனிப் பிரதோடத்தில் பூசனைசெய்வார்களானுல் இந்தப் புத்திரர்கட்கு ஊழினுல் நேரிட்டிருக்கிற வறுமை நோயானது சூரியனைக்கண்ட மிகுந்த இருட்கூட் டம் நீங்குவதுபோல நீங்கிவிடும் என்றவாறு.

இவ்வண முரைத்த முனிவரன் மொழியை
யின்பொடு விருப்புறக் கேட்டாங்
கவ்வண மெல்லா மனக்கொடு மகிழ்வுற்
றன்னவள் பின்னரு மந்த

வெவ்வினை யறுத்த முனியுடன் கேட்ட
கதையெலாம் விளம்புவ னென்னுச்
செவ்வண வேணிச் சூதமா முனிவன்
றெருளுரை செப்பின னன்றே. 56

இ·ள்: இவ்வாறுகச் சொன்ன முனிவனுடைய உரையை மகிழ்வும் இன்பமும் உண்டாகக்கேட்டு அம்முறைமைகளை யெல்லாம் மனதில் அறிந்துகொண்டு மகிழ்ச்சியடைந்து அந்தப் பிராமணப் பெண்ணனவள் தீவினையொழிந்த அந்த முனிவனிடத்தில் மேலும்மேலும் கேட்ட கதை யெல்லாஞ் சொல்லுகிறேனென்று செம்மை நிறமுள்ள சடையையுடைய சூதமுனிவரானவர் நைமிசாரணிய முனிவர்கட்குத் தெளிவுண்டாகும்படிச் சொன்னர் என்றவாறு.

சத்தியாதனன் பூசைசெய்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 337

ஏழாவது

பிரதோட பூசை மகிமை

அத்தியாயம்

மன்னிய கற்பி னருந்ததி யனைய
மடவர லுமையவள் கேட்டுத்
தன்னிரு கரமு முச்சிமேற் குவியத்
தவமுனி மலரடி தாழ்ந்து
பன்னகா பரணன் பூசனை புரியும்
படியெலா மடியனே னறிய
நின்னருள் புரிந்து வாய்மலர் திறந்து
நிகழ்த்தென நெடுந்தவ னுரைத்தான். 1

இ-ள்: நிலைபெற்ற கற்பினையுடைய அருந்ததியை ஒத்த கற்பின் தன்மையை வரலாறாகவுடைய உமையென்னும் பெயருள்ள பிராமணப் பெண்ணானவள் முனிவர் கூறியதையெல்லாம் கேட்டுத் தன்னுடைய இரண்டு கைகளையும் உச்சியின்மேல் குவித்து வைத்துக்கொண்டு அந்த முனிவருடைய தாமரை மலர்கள்போன்ற திருவடிகளில் வணங்கிப் பரமசிவனுடைய பூசைசெய்யும் முறைமையெல்லாம் அடியேன் தெரிந்து கொள்ளும்படிக் கருணைசெய்து உம்முடைய திருவாய்மலர்ந்து சொல்லுமென்று கேட்டாள். உடனே முனிவர் சொல்லியருளினர் என்றவாறு.

வேறு

திங்க டோறுங் குறையாது திகழு மிரண்டு பக்கத்துக்
கங்குன் முகங்கள் பன்மூன்றுந் தினத்து வந்த காலமெலாம்
பொங்குந் தூய புனலாடிப் பகற்போ துண்டி பொருந்தாமல்
அங்கண் மாலைப் போதுவர வலர்கம் பலத்தில் விதானித்தே. 2

இ-ள்: மாதந்தோறும் குறையாமல் விளங்குகின்ற இரண்டு பட்சத்துப் பதின்மூன்றாந்திதியில் பிரதோடம் வருகிற காலமெல்லாம் மிக்க தூயதாகிய நீரில் நீராடிப் பகற்பொழுதில் உணவு கொள்ளாமல் அந்நாளில் மாலைப்பொழுது வருகிற காலத்தில் ஒளிவிடாநின்ற பலவித சித்திரங்கள் எழுதிய சிவப்புப் புடவையினால் மேல்விதானம்கட்டி என்றவாறு.

இரண்டு பட்சம் :- பூர்வபட்சம், அமரபட்சம் என்பனவாம். பந்தல் போட்டு அதற்குள் மேல்விதானம் கட்டுகிறது முறைமையாதலால் விதானித்து என்று சுருக்கிச்சொன்னார்.

புனித மணிமண் டபம்புகுந்து புரிநூற் கும்ப மண்டலங்கள்
முனிவில் விதான முறைபிறழா தியற்றிக் குரவன் மொழிபேணி
நனிசேர் சைவா கமவிதியும் புராண விதியு நான்மறையின்
இனிய விதியு மலைவுபடா தொன்றும் விதியி னியல்போர்ந்து. 3

இ - ள் : இவ்வாறாகப் பந்தல்போட்டு மேல் விதானங்கட்டின பரிசுத்தமான அழகிய மண்டபத்தில் புகுந்து கும்பங்களுக்கு நூல்சுற்றி மண்டலங்கள் குற்றமில்லாத சாத்திரமுறைக்கு மாறுபடாமல் ஏற்படுத்திக் குரு சொல்லிய உபதேசமொழியை விரும்பிச் சைவாகமவிதியும் புராண விதியும் இனியதாகிய வேதவிதியும் ஒன்றுக்கொன்று மாறுப்படாமல் சரியொத்திருக்கும் முறைமையை உணர்ந்து என்றவாறு.

ஐந்து புலனு மொருவழியே நிறுவி மனத்தி னழுக்ககற்றிச்
சிந்தை யாரப் பாவித்து வாயாற் றிருமந் திரஞ்செப்பி
முந்து கரத்தா லலர்முதல வழிபா டீரெண் முறைமுடித்துக்
கந்த மலரும் நாற்றமும்போ லபேத மாய கருத்தினனாய். 4

இ - ள் : ஐம்புலன்களை ஒரு வழிப்பட நிறுத்திக் காமவெகுளியை நீக்கிச் சித்தத்தில் பொருந்தப் பாவித்து வாயினால் திருவைந்தெழுத்தைச் சொல்லி முந்திய கைகளினால் மலர்கள் முதலாகிய சோடசோபசார பூசை செய்து பூவும் அதன் மணமும் பேதமில்லாமல் இருப்பதுபோலப் பேதப்படாத கருத்தையுடையவனாய் என்றவாறு.

வெற்புக் கரையன் றிருமயிலை மின்னிற் பொலியு மேனியளை
யற்ப மருங்கிற் கிடர்செய்யு மணிபூத் திருக்கு முலையாளை
கற்புக் கரசி தனைச்சந்திர கலையார் மேகக் கருங்குழலைப்
பொற்புக் கழகு தரும்வதனப் பொலம்பூங் கொம்பிற்
பொலிவாளை. 5

இ - ள் : மலையரையன் புதல்வியாய் மயில்போலச் சாயலையும், மின்னலைப்போல ஒளி விளங்குந் திருமேனியையும், சிறிய இடைக்குத் துன்பம் செய்யத்தக்கதாய் அழகுகொண்டிருக்குந் தனங்களையும், கற்பு நிலைக்கு அரசியென்று சொல்லத்தக்க தன்மையையும், சந்திரகலையென்கின்ற ஒருவித ஆபரணம்தங்கிய கரிய அளகத்தையும், அழகுக்கு அழகு தருவதாகிய திருமுகத்தையுமுடைய பொன்கொம்புபோல விளங்கும் பார்வதிதேவியாரை என்றவாறு.

வாம பாகத் தருச்சித்து வழிபட் டேத்தி மணித்தவிசில்
காம னுகை மடலைசெயக் கனலை வழங்குங் கட்கரும்பைப்
பூம னார்தஞ் சிரங்கமழும் புலவை யொழிப்பப் பொற்கொன்றைத்
தாம நாற்றந் திசைகமழு மணிமார் புடைய தனிப்பொருளை. 6

இ - ள்: இரத்தினங்கள் பதித்த ஆசனத்தில் பரமசிவனுடைய இடப்பாகத்தில் எழுந்தருளப்பண்ணி அருச்சனையுடன் வழிபாடுசெய்து மன்மதனுடைய உடலை நீறுசெய்த தீயைவழங்கிய நெற்றிக்கண்ணையுடையவராய் அடியார்களுக்குக் கரும்புபோலிருக்கும் கடவுளைப் பிரமதேவனுடைய தலையினின்றும் நாறுகின்ற புலால் நாற்றத்தை நீக்கப் பொன்னிறமுள்ள கொன்றைப்பூ மாலையின் வாசனையானது அட்டதிசைவரைக்கும் பரிமளிக்கும்படி அணிந்திருக்கும் அழகிய மார்பையுடைய ஒப்பற்ற பரம்பொருளை என்றவாறு.

வெள்ளி மலையின் மாணிக்க வெற்பு வருதல் போல்விளங்கும்
பள்ளி யுரக மால்விடையிற் பவனி போதும் பரஞ்சுடரைத்
துள்ளி மதியோ டிகலியலை துளும்பும் கங்கைச் சடையானைப்
புள்ளி யிளமான் கன்றுகளும் புண்டரீகக் கரத்தானை. 7

இ - ள்: வெள்ளி மலையின்மேல் மாணிக்கமலை வருவதுபோல் விளங்குகின்ற பாம்புப்பாயலில் பள்ளிகொள்ளும் திருமாலாகிய இடபவாகனத்தில் வலம்செல்லுகின்ற பரஞ்சுடரும் சந்திரனுடன் பகைத்துத் துள்ளி அலைகள் ததும்பிக்கொண்டிருக்கும் கங்கையை அணிந்த சடைமுடியையுடையவரும் இளமையாகிய புள்ளிமான்கன்று விளங்கிக்கொண்டிருக்கும் செந்தாமரை மலர்போன்ற திருக்கரங்களை உடையவரும் எ - று.

வாங்கு மலைநீர் வாரிதியு மலையு நிலனு மற்றெவையும்
தாங்கு புயங்க நூபுரத்தின் மறைநின் றிரைக்குந் தாளானை
வீங்கு புணரி யாலால விடமுண் டிருண்ட களத்தானை
ஓங்கு சிகைமுத் தீயென்ன வொளிருங் கழுமுட் படையானை. 8

இ - ள்: உலகத்தைச் சூழ்ந்திருக்கும் அலைநீரையுடைய கடலையும், மலைகளையும், பூமியையும் மற்றுமுள்ள எல்லாவற்றையும் தாங்குகின்ற ஆதிசேடனுடன் வேதமாகிய சிலம்புகள் ஒலித்துக்கொண்டிருக்கின்ற திருவடிகளையுடையவரும் நீர்மிகுந்த கடலில் உண்டாகிய ஆலகால விடத்தையுண்டு கறுத்த கண்டத்தையுடையவரும் ஓங்குகின்ற சிகையினையுடைய முத்தீப்போல ஒளிருகின்ற சூலாயுதத்தையுடையவருமாகிய பரமசிவனை என்றவாறு.

அன்பி னிருத்திச் சிவாகமத்தி னமைவிற் கருப்பூ ரத்தீபம்
இன்ப நிறைக்கு நறுந்தூப மியாவுங் குறையா தினிதமைத்து
நன்பொன் மலர்த்தார் முடித்தசடை நாதன் றுணைத்தாள் வழிபட்டால்
துன்ப மில்லை யார்மாட்டு மென்று சுருதி முறையிடுமே. 9

இ - ள் : அன்புடன் இருக்கையில் எழுந்தருளப்பண்ணிச் சிவாகமத்திற் சொல்லியிருக்கும் முறைமைப்படி கர்ப்பூரதீபமும் நல்ல மணத்தைத் தருகின்ற தூபமும் மற்ற எல்லா உபசாரமும் குறைவுபடாமல் இனிதாகச்செய்து நல்ல பொன்னிறமுள்ள கொன்றைப்பூ மாலையை அணிந்த சடையையுடைய பரமசிவன் இரண்டு திருவடிகளையும் வணங்கினால் யாவரிடத்திலும் துன்பமில்லை என்று வேதங்கள் முறையிடுகின்றன என்றவாறு.

வேறு

இத்திற மிருவரு மியற்று வாரெனில்
தொத்திண ரிதழியான் றெண்டு பூண்டிடும்
பத்தியின் முன்னவன் வறுமை பாழ்படும்
சத்திரத் திளவலுந் தரணி காக்குமே. 10

இ - ள் : இவ்வாறாக இந்த இரண்டுபேரும் பிரதோடகாலத்தில் பூசைசெய்வார்களானால் கொத்தாகிய கொன்றைப்பூமாலையணிந்த கயிலாசபதியின் அடிமைத்திறம் பொருந்திய பத்தியினாலே மூத்தவனுடைய தரித்திரமானது பாழ்பட்டுப் போம். இளையவன் அரசனாகி ஒரு குடையின் கீழிருந்து பூலோகத்தைக் காப்பான் என்றவாறு.

என்ன முன்ன மெழுந்தி றைஞ்சினர்
முன்ன முன்னிய வோகை முற்றுற
அன்ன நின்னடி யேம ருந்துயர்
உன்ன லேகெட வுய்ந்து வாழ்ந்தனம். 11

இ - ள் : இவ்வாறு முனிவர் கூறுவதற்குமுன் அவர்கள் எழுந்து வணங்கினவர்களாய் எங்களுக்குத் தாயையொத்த முனிபுங்கவரே உம்மால் நாங்கள் முன்னாலே கருதிய மகிழ்ச்சி பொருந்தவும் அடியேங்களுடைய நீக்கற்கரிய துயரம் ஒழிந்துபோகவும் தீவினையினின்றும் பிழைத்து வாழ்வை அடைந்தோம் என்றவாறு.

என்று ரன்பி னிரங்கி மாமுனி
நன்று கென்று நயந்து மைந்தர்பால்
தன்று ணைஞ்சுக ணுச்சி சாத்தியே
குன்று மந்திர மூலங் கூறினன். 12

இ - ள் : அன்புடனே இவ்வாறு கூறினர்கள். அதைக்கேட்ட முனிவரானவர் கருணைவைத்து, உங்களுக்கு நன்மையுண்டாகக் கடவதென்று வாழ்த்தி, அந்தப் புதல்வர்களுடைய தலையிலும் கண்களிலும் இதயத்திலும் தம்முடைய அடிகளை வைத்து, அழிவுபடாத மூலமந்திரத்தை உபதேசித்தார் என்றவாறு.

கேட்டார் வல்வினை வேரோ டேகெட
ஊட்டா நல்வினை மேலு மோங்கிடச்
சேட்டார் மைந்தர்க டேசி கன்பதஞ்
சூட்டா நின்றனர் பின்னுஞ் சொல்லுவான். 13

இ - ள் : அவ்வாறு முனிவர் உபதேசித்த மந்திரத்தை வலிய தீவினைகள் ஆணவமலத்துடன் கெடவும், ஆகாமியமேறச் செய்யாத நல்வினை மேன்மேலும் பெருகவும் கேட்டுக்கொண்டு இளமைப்பருவத்தையுடைய அந்தப்பிள்ளைகள் ஆசாரியராகிய முனிவருடைய திருவடிகளைத் தொழுதார்கள். அவர்கள் தொழுதவுடன் முனிவர் பின்னும் சொல்லுகின்றார் என்றவாறு.

வேறு

வல்ல மறையோன் மதலைசுசி விரத னெனவு மணிவயிரக்
கல்லிற் றிரடோ ளரசிளங்கோக் காளை தரும குத்தனென்றும்
சொல்லக் கடவ துலகமெனச் சொல்லி முகமன் பலவியம்பிச்
செல்ல றவிர்த்து மகிழ்வோடுங் குமரர் தம்மைச் செல்கென்றான். 14

இ - ள் : வல்லமையுடைய பிராமண குமரனைச் சுசிவிரதனெனவும், அழகிய வயிரக் கல்லைப்போலப் பலமுள்ளதாய்த் திரண்டதோளையும் இளமைப் பருவத்தையுமுடைய அரசகுமரனைத் தருமகுத்தனெனவும் உலகத்தார் சொல்லக்கடவரென்று பெயர்கூறியதன்றியும், உபசார மொழிகள் பலவாகச் சொல்லித் துன்பத்தைநீக்கி மகிழ்ச்சியுடன் அவ்விரண்டு புதல்வர்களையும் போங்களென்று உத்தரவு கொடுத்தார் என்றவாறு.

தருமகுத்தன் என்பதற்குத் தருமத்தைப் பாதுகாப்பவன் எனப் பொருள்கொள்க.

வேத முனிவன் விடைகொடுப்ப விளங்கு குமர ரிருவோரும்
போத முறுதந் தாயருடன் மனையிற் புகுந்து புரமெரித்த
நாதன் றன்னை நிசிமுகத்தி னுளும் நாளும் விசேடிதமாய்ப்
பாத கமலந் தொழுதேத்தி வழிபா டனைத்தும் பண்ணியே. 15

இ - ள் : வேதங்களுணர்ந்த முனிவரானவர் உத்தரவு கொடுப்ப விளங்குகின்ற இரண்டு புதல்வர்களும் தெளிவுபெற்ற தாயாருடன் வீட்டில்

வந்து திரிபுரதகனஞ்செய்த பரமசிவனைப் பிரதோடகாலத்தில் நாளுக்கு நாள் விசேடமாய்ச் சோடசோபசாரத்துடன் பூசைசெய்து பரமசிவனுடைய திருவடித் தாமரைகளை வணங்கி என்றவாறு.

திங்க ளொருநான் கிவ்வாறு செல்லச் செல்வ ரிருவோரில்
பொங்கு புரிநூற் சுசிவிரதன் புனித நதியிற் புனலாட
அங்க ணொருசா ரேகுதலுந் தெண்ணீர் பொருத வகன்கரைவாய்க்
கொங்கைக் குவமை சான்றதொரு குடத்தி னிதியங் கண்ணுற்ருன். 16

இ - ள்: இவ்வாறு நாலுமாதஞ்செல்ல அந்தப் புதல்வர்கள் இருவரில் பூணநூல் விளங்கும் மார்பினையுடைய சுசிவிரதன் அவ்விடத்தில் ஒருபுறத்திலுள்ள தூய்மையான ஆற்றில் நீராடச்சென்ருன். அவ்வாறு செல்லவும் தெளிந்த அலைநீர் மோதுகின்ற கரையினிடத்தில் மாதர்கள் கொங்கைக்கு ஒப்புள்ளதான ஒரு குடத்தில் பொன்கள் இருக்கக்கண்டான் என்றவாறு.

ஓகை யொடுநான் மறைவல்லோ னுருத பொருள்கண் ணுற்றிடலும்
பாகை விரவு மொழியுமையாள் பங்கன் பூசைப் பயனென்றே
தோகை பாகன் புகழ்பாடித் தோளிற் சுமக்குங் குடநிறைந்த
ஈகை யோடு மனையகத்தி னெய்தித் தாயர்க் கிதுசொன்னன். 17

இ - ள்: தான் கண்டறியாத பொன்னைக் கண்ட அளவில் பிராமணப் பிள்ளையானவன் மகிழ்வுடன் வெல்லப்பாகினை ஒத்த மதுரமொழியுள்ள பார்வதிதேவியாரை இடப்பாகத்திலுடைய பரமசிவனைப் பூசித்ததால் கிடைத்த பலனிதுவென்று அவருடைய புகழை எடுத்துப் பாடித் துதிசெய்து பொன்நிறைந்த அக்குடத்தையெடுத்துத் தோளில் வைத்துக் கொண்டு வீட்டில்வந்து தாயாருக்கு இந்த உரையைக் கூறினன் எ - று.

அன்பர்க் கெளியன் வெள்ளிமலை யமர்ந்த முதல்வ னருள்பேணி
இன்புற் றியற்றும் பூசனையி னெய்து பயன்கா ணிதுவென்னத்
துன்பக் கடலி னழுந்துமுமை தூய புதல்வன் சொற்கேளா
என்புற் றுருகி யகங்குளிர்ந்தங் கிளையான் முகம்பார்த்
[திதுசொல்வாள். 18

இ - ள்: அன்பர்க்கு எளியவரும் வெள்ளிமலையில் வீற்றிருப்பவருமாகிய பரமசிவனுடைய திருவருளை விரும்பி இன்பம் பொருந்திச் செய்யும் பூசனையினல் அடையும் பலன் இதுவென்று பரிசுத்தனகிய தன் புதல்வன் சொல்லிய வார்த்தையைக்கேட்டு முன் துயரக்கடலுள் முழுகிய உமையென்னும் பெயரையுடைய தாயானவள் எலும்பு நெக்குவிட்டுருகி மனமகிழ்வடைந்து அந்த இளையமகன் முகத்தைப்பார்த்து இந்த உரை கூறுவாள் என்றவாறு.

மைந்தர் நீங்க ளிருவீரு மாழை பகிர்ந்து கொண்மினென
கந்துங் கழையும் பொருங்களிற்றுக் கழற்கால் வேந்தன் றிருப்புதல்வன்
அந்தி வண்ண னளித்ததீ தவற்கே யெமக்கு மவனளிக்கும்
புந்தி யவல மொழிகென்னுத் தாயர் தொழுது புகன்றனே. 19

இ - ள் : புதல்வர்களே! நீங்கள் இருவரும் இந்தப் பொன்னைப் பங்கிட்டுக் கொள்ளுங்களென்று சொல்ல கட்டுத்தறியையும் குத்துக் கோலையும் முறிக்கத்தக்க யானைகளையுடைய வீரகண்டைகட்டிய காலினனாகிய அரசகுமாரன் சொல்லுகிறான். தாயே! இது பரமசிவன் என் தமையனுக்கு அருளிச்செய்ததாகையால் அவருக்கே உரியதாம். எனக்கும் அக்கடவுள் கருணைசெய்வார். உன் மனதிலிருக்கும் துயரத்தை நீங்கென்று தாயை வணங்கிச் சொன்னான் என்றவாறு.

வேறு

மற்றவன் கூறிய வண்ண மைந்தரும்
செற்றமி லன்னையுஞ் செல்வ மோங்கவே
உற்றநல் குரவனை யொழிந்து வைகுநாள்
கொற்றவன் காதலன் கொள்கை கூறுவாம். 20

இ - ள் : அரசகுமாரன் சொல்லியவண்ணமே குற்றமில்லாத தாயும் புதல்வர்களும் நெடுநாளாகப் பொருந்திய தரித்திரத்தை ஒழித்துச் செல்வம் அதிகரிக்க வாழும்நாளில் அந்த அரசகுமாரனது செய்கையைச் சொல்லுகிறோம் என்றவாறு.

ஐம்புல னொருவழி யடக்கி யாறணி
பைம்பொனு ரிதழியம் படலை வேணியான்
வம்பறு மலரடி வணங்கி யேத்தலும்
இம்பரிற் றிங்களா றிரண்டு செல்லவே. 21

இ - ள் : பஞ்சேந்திரியங்களையும் ஒருவழியில் அடக்கிக் கங்காநதியையும் மாற்றுயர்ந்த பொன்னிறமுள்ள கொன்றைப்பூ மாலையையும் அணிந்த சடையினையுடைய பரமசிவனது வாசனை நீங்காத திருவடித் தாமரையை இவ்வுலகில் வணங்கித் துதிசெய்துகொண்டு வருகையில் பன்னிரண்டு மாதஞ்சென்றன என்றவாறு.

அன்னது நிகழவோ ராழி மேயதேர்
மன்னவன் வடதிசை வழிக்கொண் டேகுநாள்
கன்னலஞ் சிலைமதன் விழவு காணிய
இன்னிள வேனில்வந் திறுத்த தென்பவே. 22

இ - ள்: அத்தன்மையாகப் பன்னிரண்டு மாதம் அவன் பூசை செய்துகொண்டிருக்க ஒரு வண்டில்பூண்ட தேரையுடைய சூரியன் வட திசையை நோக்கிச் செல்லுநாளாகிய உத்தராயணத்தில் கரும்புவில்லை யுடைய மன்மதனுக்குரிய திருவிழாவைக்காண இனியதாகிய இளவேனிற் காலம் வந்தடைந்தது என்று பெரியோர்கள் சொல்லுவார்கள் எ - று.

இளவேனிற்காலம் :- சித்திரை வைகாசி மாதம்.

நறுமலர்ப் பாடலந் துணர்த்த நர்கங்கள்
குறுமுகை வெண்மலர் கொழுத்த கோங்கினம்
துறுமலர் பொதுளிப்பொன் னணிந்து தோன்றின
வெறிமலர்க் காஞ்சிப்பூ பசந்த விறினே. 23

இ - ள்: இளவேனிற்காலம் வந்தபோது மணம் பொருந்திய மலர் களையுடைய பாதிரிமரங்கள் கொத்துக் கொத்துக்களாகப் பூத்தன. புன்னை மரங்கள் சிறிய அரும்புகளுடன் வெண்மலர்களைப்பூத்தன. கோங்கமரங்கள் நெருங்கிய மலர்களைப் பொருந்திப் பொன்னை அணிந்துகொண்டதுபோலத் தோன்றின. மணம் பொருந்திய காஞ்சிமலர்கள் செழுமையுடன் பசலைநிற முளதாயிருந்தன என்றவாறு.

பாசிலை யுதிர்த்தன பழுவப் பாதவம்
வீசிய பணைதொறுந் தளிரின் வேய்ந்தன
காசறு பசும்படா மொருவிக் காய்கதிர்
பூசுறு செம்படாம் போர்த்த போலுமே. 24

இ - ள்: ஆலமரங்கள் பச்சை இலைகளையெல்லாம் உதிர்த்தன. (அவ்வாறு உதிர்த்த பின்பு) நீண்ட கொம்புகள்தோறும் துளிர்களைவிட்டு அலங்கரிக்கப்பட்டன போலிருந்தன. (இவ்வாறு பச்சிலைகள் உதிர்ந்து செந்தளிர் துளிர்த்தன எப்படியிருக்கின்றன என்றால்,) குற்றம் நீங்கிய பச்சைப்போர்வையை நீக்கிவிட்டுச் செந்தளிர் மிகுந்த சிவப்புப் போர்வை யைப் போர்த்துக்கொண்டன போலிருந்தன என்றவாறு.

கொடியவு மிளந்தளிர் குழைத்த கோட்டவும்
கடிமலர் குடைவன கள்ளுண் வண்டினம்
பெடையொடு குயிலினம் பிறங்கு தண்முறி
யிடையிடை கோதுவ கான மெங்குமே. 25

இ - ள்: இவைகளுமின்றி அந்த வனமெங்கும் மதுவையுண்கிற வண்டினங்கள் கொடிகளில் உள்ளனவும் இளந்தளிர்கள் துளிர்த்த கொம்புகளில் உள்ளனவுமாகிய மணம்பொருந்திய மலர்களைக் குடைவன வாம். மாமரங்களினிடந்தோறும் ஆண்குயில்களும் பெண்குயில்களும் ஒளி

விடாநின்ற குளிர்ச்சி பொருந்திய துளிர்களை மூக்கினல் கோதுவனவாம் என்றவாறு.

கலைமகள் வடிவினை மராங் கவர்ந்தன
மலைமக ளெழிலினைப் பூவை வாங்கின
கொலைமகள் கவினை நீ டிலவங் கொண்டன
அலைமக ளழகினை யசோக ணிந்தவே. 26

இ-ள்: சரசுவதியின் உடல் நிறத்தை வெண்கடப்ப மலர்கள் கவர்ந்துகொண்டன. பார்வதிதேவியாருடைய திருமேனி நிறத்தைக் காயா மலர்கள் கவர்ந்துகொண்டன. துர்க்கையின் திருமேனி நிறத்தினை இலவ மலர் கவர்ந்துகொண்டன. திருமகள் நிறத்தினை அசோகமலர்கள் கவர்ந்து கொண்டன என்றவாறு.

கடம்பம்பூ வெள்ளைநிறமென்றும், காயாம்பூ கறுப்புநிறமென்றும், இலவம்பூ சிவப்புநிறம் என்றும், அசோகம்பூ பொன்னிறம் என்றும் கொள்ளப்படும்.

கிளிகளும் குயில்களும் கேச ரங்களும்
அளிபடு தாதினு டளைந்த தென்றலும்
துளிபடு சினைதொறுந் துவன்றி மேவலால்
களிமதன் பாசறை போன்ற காவெலாம். 27

இ-ள்: கிளிப்பிள்ளைகளும் குயில்களும் வண்டுகளும் வண்டுகள் பொருந்திய பூந்தாதுகளைப் பூசிய தென்றற் காற்றும் தேன்துளி பொருந்திய கிளைகள்தோறும் நெருங்கியிருப்பதினல் அவ்வனமெல்லாம் களிப்பினை யுடைய மன்மதனது பாசறையென்னும் படைவீடுபோலிருந்தது எ-று.

மன்மதனுக்கு கிளி குதிரை, குயில் எக்காளமென்ற ஊதப்பட்ட வாத்தியம், வண்டுகள் வில்லிற்பூட்டும் நாண், தென்றற்காற்று தேர். இக்காரணம்பற்றிப் படை வீடென்றார்.

இதனை,

ஆலைக் கரும்புசிலை யைங்கணைபூ நாண்சுரும்பு
மாலைக் கிளிபுரவி மாருதந்தேர் — வேலைக்
கடிமுரசங் கங்குல் களிறுகுயில் காளங்
கொடிமகரந் திங்கள் குடை.

என்னும் இரத்தினச் சுருக்க வெண்பாவாலும் அறியலாம்.

அந்தர வகடுபோழ்ந் தகன்ற தண்டலைப்
பைந்தருத் தொறுங்கொடி படர்ந்து பற்றின
சுந்தர மிழந்துமூப் படைந்த தொன்மையோர்
மைந்துட னரம்புயர் வன்மை போன்றவே. 28

இ - ள் : ஆகாயத்தின் நடுவைப் பிளக்கும்படியான உயரமுள்ள தாய்ப் பரந்த சோலையிலிருக்கும் பசிய மரங்கள்தோறும் கொடிகள்படர்ந்து பற்றிக்கொண்டிருக்கும் தன்மை எவ்வாறுளது என்றால், அழகினையிழந்து முதுமைப் பருவத்தையடைந்த கிழவர்கள் அவயவத்தின் வலிமையுடன் நரம்புகள் மேலிட்டிருப்பன போலிருந்தன என்றவாறு.

தேசுறு கிளியின மொழுங்கிற் சேண்வழி
வீசிய சிறையவாய்ப் பறத்தல் வேனில்வேந்
தாசைசூ ழுலகங்கொண் டதற்குக் கட்டிய
பாசிலைத் தோரணப் பான்மை போன்றவே. 29

இ - ள் : பச்சென்ற ஒளியினையுடைய கிளியினங்கள் விண்வழியில் சிறைகளை வீசிக்கொண்டு ஒழுங்காகப் பறந்துசெல்லுதல் வசந்தகாலத்து அரசனாகிய மன்மதனானவன் வந்து எட்டுத்திக்கிலும் சூழப்பட்ட இவ்வுலகத்தைத் தன் வசப்படுத்திக் கொண்டதற்காகப் பச்சிலைத் தோரணங் கட்டிய தன்மைபோலிருந்தன என்றவாறு.

அரும்பவிழ் நறுமலர்ச் சுழல வாயிடைச்
சுரும்பினந் தருமுத லனைத்துஞ் சூழ்ந்தன
மரங்கிழம் படுதலின் வழாத மைந்துற
இரும்பினல் பூண்பிடித் திட்ட தொத்தவே. 30

இ - ள் : அரும்புகள் விரிந்த நறியமலர்களிடத்துச் சுழன்று தேனுண்ணுவதற்கு வண்டுகள் அவ்விடத்திலிருக்கும் மரங்கள் முதலானவைகளிடத்தில் சூழ்ந்துகொண்டிருத்தல் எத்தன்மையதாக இருக்கின்ற தென்றால் மரங்கள் கிழத்தன்மை அடைந்தபடியினால் இனி ஒடிந்துபோமெனக் கருதி ஒடியாமல் இருக்கும்வண்ணம் இரும்பினால் பூண்செய்து அமைத்ததுபோலிருந்தன என்றவாறு.

அலங்கல்வெண் கவிகைவே லரச ரீட்டமும்
இலங்கிழை மகளிரோ டினைரு ரீட்டமும்
பொலங்கொடி மாளிகை நீங்கிப் போந்தளி
துலங்குபூங் காவகந் துன்னிச் சேர்ந்தவே. 31

இ - ள் : வெற்றிமாலையினையும் வெள்ளைக்குடையினையும் வேலாயுதத்தையுமுடைய அரசர் கூட்டமும், ஒளிவிடாநின்ற ஆபரணங்கள்

அணிந்திருக்கும் மாதர் கூட்டமும் காளையர் கூட்டமும் பொன்னால் செய்யப்பட்ட கொடிகள் கட்டிய மாளிகைகளை விட்டுச்சென்று வண்டுகள் விளங்கிக்கொண்டிருக்கும் மலர்களையுடைய சோலையினிடத்தில் நெருங்கிச் சூழ்ந்தன என்றவாறு.

சோலையானது துளிர்விட்டுத் தழைத்து அரும்புகள் மலர்ந்து அதிக குளிர்ச்சியாயிருத்தலால் நீர் விளையாடியும் போதுகொய்தும் இன்பம் அனுபவித்தலின்பொருட்டுச் சென்றதெனக்கொள்க.

இருநில மன்னர்மார் பிலகு மாரம்போல்
அருவரை நெற்றிதா ழருவி யாடியும்
முருகயர் புலமென மகளிர் முண்டக
மருவிரி வாவியங் கரையின் வைகியும். 32

இ - ள் : பெரிய இவ்வுலகத்தை ஆளுகின்ற அரசர்கள் மார்பில் ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் முத்துமாலைபோலப் பெரிய மலையின் உச்சியிலிருந்து விழுகின்ற அருவிநீரில் விளையாடியும், வாசனை வீசச்செய்கின்ற நந்தனவனத்தில் பொருந்துவதுபோல மாதர்கள் தாமரைமலர்கள் வாசனையுடன் மலருகின்ற அழகிய தடாகக்கரையில் பொருந்தியும் என்றவாறு.

சிலம்பெதிர் கூவியுஞ் சிற்றில் கோலியும்
உலம்பொரு குவவுத்தோ ளுழுத கொங்கைமேல்
கலம்பல திருத்தியுங் கலவை யாடியும்
நலம்பல துய்த்தனர் நதியின் பாங்கரே. 33

இ - ள் : மலைகளுக்கெதிரில் கூவியும், நதியின் கரையில் சிறு வீடு கட்டி விளையாடியும், தத்தம் கணவர்களுடைய திரண்ட வயிரக்கல்லை ஒத்துத் திரட்சியாகிய புயங்களில் படிந்த தனங்களின்மேல் பலவித ஆபரணங்களை அணிந்தும், வாசனைப் பொருள்கள் சேர்த்த சந்தனக் குழம்பு பூசியும் இவ்வாறு பலஇன்பங்களை அனுபவித்தார்கள் என்றவாறு.

மலைகட்கெதிரில் கூவினால் அதனிடத்தில் கூவுகின்றவர்கள் ஓசை போலவாவது அவர்கள் சொற்கள் போலவாவது ஒலி உண்டாகும். ஆதலால் அதுவும் ஓர் விநோதமாகக் கூவினர் எனக்கொள்ளுதல் ஒரு வகை. அவ்வாறன்றித் தங்கள் கணவர்களுடன் ஊடினவர்களுக்கு மகிழ்ச்சியின்மையால் மற்றொரு விநோதத்தில் மனம் செல்லாமல் பேச்சுத் துணைக்காக மலையுடன் கூவினார்களெனக் கொள்ளுதல் ஒருவகை. கிள்ளை குயில் இவைகளுடன் பேசலாகாதோ எனின் அவைகளின் ஓசை விரகத்துக் கேதுவானது என்றவாறு.

இத்தலை யின்னண நிகழ வெண்ணில்சீர்ச்
சத்தியா தனன்றரு தரும குத்தனும்
மெய்த்தவத் தோழனை நீங்கி வேறொரு
பத்திரம் பொதுளிய பழுவ மெய்தினன். 34

இ - ள்: இவ்விடத்தில் இவ்வாறு நிகழ்ந்துகொண்டிருக்க, அளவில்லாத சீரினையுடைய சத்தியாதனன் ஈன்ற தருமகுத்தனென்பவன் உண்மையாகிய தவத்தினையுடைய தன் தோழனைவிட்டுநீங்கி, இலை முதலானவைகள் நிறைந்துள்ள வேறொரு காட்டிற்குச் சென்றான் என்றவாறு.

வேறு

மஞ்சுசூழ் குடுமி வெள்ளிவே தண்ட
மழுவலான் செவிக்கிசை நிறைக்கும்
விஞ்சையர் பெருமான் றிருமக ளாய
வெள்வளைத் தோளியாங் கொருத்தி
வஞ்சிநுண் ணிடையார் பண்ணையு ளாடும்
வனப்பினைக் காண்டலு மயங்கிக்
குஞ்சர நுகர்ந்த வெள்ளில்போன் மாழ்கிக்
குழைந்துதன் னுளந்தனிற் குணித்தான். 35

இ - ள்: அவ்வாறு சென்ற தருமகுத்தனனவன் மேகங்களால் சூழப்பட்ட சிகரங்களையுடைய கயிலாசகிரியில் வீற்றிருக்கும் பரமசிவனது திருச்செவிகளில் பொருந்த இசைபாடுகின்ற வித்தியாதர மன்னவன் புதல்வியாகிய சங்குவளை அணிந்த கையினையுடைய ஒரு மாதானவள் அவ்விடத்தில் பூங்கொடிபோல் நுண்ணிய இடையினையுடைய தோழிமார் கூட்டத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் அழகைக் கண்டமாத்திரத்தில் மனமயங்கி வேழமுண்ட விளங்கனிபோலச் சோர்வுடன் மெலிந்து தன் மனதில் இவ்வாறு நினைத்தான் என்றவாறு.

வேழமுண்ட விளங்கனி எப்படி இருக்குமென்றால் தேரைமோந்த தேங்காய் போலிருக்கும். வேழமென்பது விளங்கனிக்கு உரியதோர் நோய் என்றும் அது தேங்காய்க்குத் தேரையென்றொரு நோயிருப்பதுபோலென்றும் நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணியில் ஒரு செய்யுளுரையில் குறிப்பிட்டுள்ளார். சில உரைகாரர் யானையுண்ட விளங்கனியென்பர்.

பூவுறை திருவோ நாகர்தங் கொடியோ பொருப்புறை குமுதவாய் மயிலோ
தேவர்த முலகி னின்றிழிந் தருளுஞ் செய்யவாய் மடமொழிக் கிளியோ
யாவளிங் கிருந்த வேந்திழை யென்ன விறைமக னெண்ணமுற் றிரங்கக்
கோவிளங் குமரன் வனப்பினை நோக்கிக் கொடியிடை மடந்தையுங்
குறித்தாள். 36

இ - ள் : இங்கிருக்கின்ற பெண்ணனவள் செந்தாமரைப்பூவில் வீற்றிருக்கும் திருமகளோ, நாகலோகத்தில் வாசஞ்செய்யும் நாககன்னிகையோ, மலையில்வாழும் செவ்வல்லிமலர்போன்ற வாயினையுடைய வரையரமகளோ, தேவருலகத்திலிருந்துவந்த சிவந்த வாயையும் மழலைச்சொல்லையுமுடைய கிள்ளையொத்த அரம்பையோ இன்னரென்று தெரியவில்லையென்று அந்த அரசகுமரன் எண்ணங்கொண்டு காமவிகாரத்தினல் விகாரமுடையவனுயிருக்க, அவனுடைய அழகைப்பார்த்துக்கொடிபோன்ற நுண்ணிய இடையையுடைய அந்தப்பெண்ணும் இச்சைகொண்டாள் என்றவாறு.

பண்ணுறு கான விஞ்சைய ருலகில் பாகசா தனன்றிரு நாட்டின்
மண்ணக வரைப்பி னிளமையி னலத்தின் வடிவினி லிவன்றனக் கிணையார்
கண்மணி குளிர்ப்ப வடிவுகொண் டிறந்த காமனே வந்தன னென்ன
வுண்ணிறை யழிய வுலையிடு மெழுகொத் தொருமொழி தோழியர்க்
குரைத்தாள். 37

இ - ள் : இசைபொருந்திய கானம் பாடுகின்ற வித்தியாதரர் உலகத்திலாவது தேவேந்திரனுடைய உலகத்திலாவது பூலோகத்தினிடத்திலாவது இளமைப்பருவத்திலும் அழகிலும் உருவத்திலும் இவனுக்கொப்பானவர்கள் யாரிருக்கிருர்கள் முன்னிறந்த மன்மதன் பார்க்கின்றவர்களுடைய கண்கள் மகிழ்ச்சியடையும்படி உருவங்கொண்டு வந்தானே வென்று உள்ளத்திலிருக்கும் கற்பு முதலானவை அழியத்தக்கதாகக் கருமானுடைய உலைக்களத்தில் இட்டமெழுகைப்போல மனமுருகித்தோழிகளைப்பார்த்து ஒருசொல் கூறினுள் என்றவாறு.

மங்கைமீர் நீவி ரனைவரு மிந்த வனத்தினுக் கப்புறம் போகி
பொங்கரிற் புகுந்து நறுமலர் கொய்து போதுமி னென்றவர்ப் பணியா
அங்கவர் யாருந் தணந்தபி னிந்த வணங்கொரு தமியளா யெதிர்ந்து
பங்கய முகத்துக் குமரன்மாட் டணுகிப் பரிவுட னினையன பகர்ந்தாள். 38

இ - ள் : தோழிகளே நீங்களெல்லோரும் இக்காட்டிற்கப்பாற்போய்ச் சோலையிற்சேர்ந்து மணம்பொருந்திய மலர் பறித்துக்கொண்டு வாருங்களென்று அவர்கட்கு உத்தரவுசெய்து அவர்களெல்லோரும் நீங்கிப்போனபின்பு இந்தப்பெண்ணனவள் தானெருத்தியுந் தனிமையாகப் போய்த் தாமரைமலர்போன்ற முகத்தினையுடைய அரசகுமாரன் அண்மையில் அடுத்து விருப்பத்துடன் இவ்வுரையைக் கூறலானுள் என்றவாறு.

கன்னலஞ் சிலைவே ளுருவுகொண் டனைய காளையீண் டடைந்தகா ரணமும்
நின்னுடை நாடு நின்றிரு மரபு நின்றிருப் பெயரும்யா வென்னப்
பொன்னிள முலையாள் வினவலுங் கேட்டுப் புந்தியி னவள்குறிப் புணர்ந்து
மின்னணி மவுலி வேந்தர்கோ னளித்த விடலையு மனமகிழ்ந் துரைத்தான்.

இ - ள் : கரும்புவில்லையுடைய மன்மதனானவன் முன்போல உருவு கொண்டதுபோன்ற வாலிபனே! நீ இவ்விடத்திற்கு வந்த காரணமும் உன்னுடைய நாடும் உன்னுடைய விசேட குலமும் உன்னுடைய பெயர்ச்சிறப்பும் யாவையென்று பொன்னிறமுள்ள தேமல் பரந்த இளமை பொருந்திய தனங்களையுடையவள் வினவவும் அதைக்கேட்டுத் தன் மனதில் அவள் குறிப்பை அறிந்துகொண்டு ஒருபொருந்திய மகுடம் அணிந்த மன்னவனின்ற அரசகுமரன் மனமகிழ்ந்து சொல்லுகின்றான் என்றவாறு.

விரைமலர் நாற்றம் யோசனை கமழும் விதர்ப்பதே சாதிபன் விரிந்த
கரையெலா நிழற்று முழுமதிக் கவிகைச் சத்தியா தனன்றனக் கமைந்த
மரைமலர்த் திருவே யனையவள் சதியா மடவரல் திருவயிற் றுதித்தேன்
நிரைவளைக் கரத்தா யெந்தைபோர்ப் பகைஞர் நெடும்படைக் களத்திடை
மடிந்தான். 40

இ - ள் : மலர்களின் மணமானது ஒரு யோசனை தூரம் வரையில் மணம்வீசும்படியான சோலைகளால் சூழப்பட்ட விதர்ப்பநாட்டுக்கு அரசனாகிப் பரந்த உலகத்திலிருக்கும் உயிர்கட்கெல்லாம் நிழலைச்செய்துகொண்டிருப்பதாய்ப் பூரண சந்திரனையொத்த வெள்ளைக் குடையினையுடையவனாய் அரசாண்ட சத்தியாதன மன்னனுக்கு அமைந்த மனைவியாகிய மணந்தங்கிய தாமரைப்பூவில் வீற்றிருக்குந் திருமகளையொத்த அழகும் செல்வமுமுள்ள சதியென்னும் பெயரையுடையாள் வயிற்றில் பிறந்தேன். வரிசையாக வளையலணிந்த கையையுடைய மாதே! என்பிதாவானவர் போர்செய்யவந்த பகைவருடைய பெரிய யுத்தகளத்தில் எதிர்த்துப் போர்செய்து மடிந்தார் என்றவாறு.

அரசன் குடையின் கீழிருந்து நீதியுடன் அரசுசெய்ய உயிர்கள் நலமுற்றிருப்பதால் உயிர்கட்கு நிழலைச்செய்யுங் குடை என்றது. அரசன் குடைச்சிறப்பு இதனால் கூறப்பட்டது.

ஈன்றவெம் மாயு நீருணுங் கயத்தி னிடங்கர்வாய்ப் பட்டனண் மடியத்
தோன்றிய வுமையாம் பார்ப்பனி யெனைத்தன் றோன்றலுக் கிளவலாய் வளர்த்
சான்றுசான் முனிவ னெனக்குறு நாமந் தருமகுத் தனெனச் சாற்றி [தாள்
யான்றவெந் துயரி னழிவுறு வண்ண மரனடிக் கென்னையாட் கொடுத்தான்.

இ - ள் : எனது தந்தை இறந்துபோகவே என் தாயானவள் நகரத்தைவிட்டுத் தனியே காட்டிற்போய் அவ்விடத்தில் என்னைப்பெற்று ஒரு குளத்தில் நீருண்ணப்போய் அதிலிருக்கும் முதலைவாயில் அகப்பட்டுக்கொண்டு இறந்துபோனாள். அப்படி என் தாயானவள் இறந்து போகவே நான் குழந்தையாய் அழுதுகொண்டிருக்குந் தருணத்தில்

அங்கே வந்த உமையென்னும் ஒரு பிராமணப்பெண் என்னை யெடுத்துக் கொண்டுபோய்த் தன் புதல்வனுக்கு இளையவளாக வளர்த்தாள். அப்படி நான் வளரும் நாளில் மேன்மைமிக்க சாண்டில்லியர் என்னும் ஒரு முனிவர் வந்து எனக்குத் தருமகுத்தன் எனப் பொருத்தமுள்ள தான பேர் கூறி மிக்க கொடிதான பிறவித்துன்பத்தில் வருந்தாத வகையாகப் பரமசிவனுடைய திருவடிகட்கு என்னை அடிமையாகக் கொடுத்தார் என்றவாறு.

உமையவ டலைவன் றனைவழிப் பட்ட உறுதியா லொருவரு மொவ்வாக்
கமையினாய் நின்னை யெதிர்ந்தன னல்லோர் காட்சியா லெய்துதல் சிறிதே
எமையளித் திறந்தோ னிழந்தவான் றிருவு மிகுநிலக் கிழமையு மடைந்தேன்
அமையிளந் தோளாய் மரபு நின்பதியு மறைகுதி பெயரொடு மென்றான். 42

இ - ள்: உமை நாயகனாகிய பரமசிவனைப் பூசித்த உறுதியினாலே ஒருவரும் ஒப்பில்லாத கற்புக்குரிய பொறுமையினை யுடையவளே! உன்னை எதிர்ப்பட்டேன் நல்லவர்கள் தரிசனத்தினால் அடையும் பேறு சிறிதோ என்னைப் பெற்று இறந்த பிதாவானவர் பகைவராலிழந்த சிறப்புள்ள செல்வமும் பெருமைபொருந்திய அரசபாரமும் அடைந்தேன். பசிய மூங்கிலையொத்ததோளையுடைய மாதே! உன்குலமும் உன்னூரும் உன்பெயரும் சொல்லுதியென்றான் என்றவாறு.

அயிலெயிற் றுழுவை யதளசைத் தாடு மரனிரந் தரமினி துறையும்
கயிலையிற் றென்பாற் சேடியுள் வாழுங் கந்தர்ப்பர் தொழுங்கழற் குரிசில்
புயலுறழ் தடக்கைத் திரமிட னென்னப் பொறித்திடு திருப்பெய ரவற்குக்
குயின்மொழித் துவர்வாய்த் தாரணி வயிற்றிற் றோன்றினே னென்றவள்
கூறி. 43

இ - ள்: கூரிய பற்களையுடைய புலியின் தோலையுடுத்து நடனஞ் செய்யும் பரமசிவன் மகிழ்ச்சியுடன் நிரந்தரமாகவிருக்கும் கயிலாயகிரிக்குத் தென்புறத்தில் இராநின்ற சேடியென்னும் நகரத்தில் வாழ்கின்ற கந்தருவர்கள் தொழும்படியான அரசனாகிய மேகத்தையொத்த பெரிய கையை யுடைய திரமிடனென்று சொல்லப்பட்ட அழகிய பெயருள்ளவனுக்கு அவன் மனைவியாகிய குயிலோசைபோன்ற இனிய சொல்லையும் பவளம் போன்ற வாயையுமுடைய தாரணியென்பவள் வயிற்றில் பிறந்தேனென்று அவள் சொல்லி என்றவாறு.

என்பெய ரஞ்சு மதியென வுரைப்பர்
யானுமென் றோழிய ருடனே
நன்புய றழுவும் பொதும்பரின் பொழில்வாய்
நறுமலர் கொய்குவான் புகுந்தேன்

அன்புடை யாயம் போக்கிநிற் காணு
மவாவினிற் றமியளா யடைந்தேன்
நின்படி வமுமெய் யழகையுங் கண்டே
னினைதொறு நிறையழிந் தயர்ந்தேன். 44

இ - ள்: என்பெயர் அஞ்சுமதியென்று சொல்லுவார்கள். நீருண்ட மேகம் தவழும்படியான இவ்வனத்திலுள்ள இனிய சோலையினிடத்தில் வாசனைபொருந்திய மலர்கள் கொய்யவந்தேன். அவ்வாறு வந்த நான் உன்னைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையினால் என்னிடத்தில் அன்பினை யுடைய தோழிகளை அப்புறம் அனுப்பிவிட்டுத் தனியளாய் வந்தேன். வந்து உன் வடிவத்தையும் அழகையுங்கண்டு நினைக்குந்தோறும் கற்புநிலை மாறிச் சோர்வினை அடைந்தேன் என்றவாறு.

வானவர் வியப்ப மகரயாழ் நீவி
வரிநரம் பணிமிட றென்னக்
கானநன் குணர்ந்தோ ராயினு முணராக்
கானவிஞ் சைகண்முழு துணர்ந்தேன்
ஞானநன் னிலையால் யாவர்தங் கருத்தும்
நசையையுங் குறிப்பினி லறிவேன்
வேனில்வே ளனையா யென்னுழை நினக்கு
வேட்கையுண் டென்பதுங் குறித்தேன். 45

இ - ள்: தேவர்களும் வியப்படையும்படி மகரவீணை வாசித்துக் கட்டுப்பட்டிருக்கிற தந்திரிகள் ஓசையிதுவென்றும் கண்டத்தினோசை இதுவென்றும் நன்றாகக் கானம் பாடுதலை உணர்ந்தவர்களே ஆனாலும் அறியப்படாமல் பாடும்படியான கானவித்தைகள் முழுவதும் தெரிந்திருக்கிறேன். இதுவுமன்றி நல்ல ஞானநிலையாலே எல்லோருடைய கருத்தையும் அவர்கள் இச்சையையும் குறிப்பாக அறிந்துகொள்வேன். வசந்த காலத்துக்குரியமன்மதனை ஒத்தவனே! இப்போது என்னிடத்தில் உனக்கு ஆசை உண்டென்பதையும் அறிந்துகொண்டேன் என்றவாறு.

இன்னன பன்னி யெமக்கியல் பாய தியாழினே ரருமண மதுதான்
கன்னவி றேளா யெண்வகை மணத்திற் கந்தர்ப்ப மணமெனு மறைநூல்
அன்னதா லெனது கைக்கிளை யாகா தண்ணலு மன்பினை யாதன்
முன்னையூழ் வினையின் முடிந்ததென் றந்த மொய்குழ லுரைத்திது செய்தாள்.

இ - ள்: இவ்விதமான உரைகளைக் கூறிப் பின்னும் கூறுகிறாள். மலைக்கொப்பாகச் சொல்லுகின்ற தோள்களையுடைய அரசகுமாரனே! அருமையாகிய காந்தருவமணம் எங்களுக்கு இயல்பாயிருப்பது. அந்த விவாகமாவது எண்வகை மணத்தில் ஒன்றென்று வேதசாத்திரங்கள்

சொல்லுகின்றன. வேதசாத்திரங்கள் அப்படிச் சொல்லுகின்றபடியினலே ஒருதலைக்காமத்தின்மாட்டாகாமல் நீயும் என்னிடத்தில் மோகங்கொண்டவனவது பழைய ஊழ்வினையால் நேரிட்டதென்று நெருங்கிய அளகத்தையுடைய அந்த மாது சொல்லி அதற்குமேல் இந்தக் காரியத்தைச்செய்தாள். அது என்னவென்ருல் என்றவாறு.

எண்வகை மணமாவது:- பிர்மம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், கந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பவைகளாம்.

பிரமமணம்:- பிரமசாரிக்குக் கன்னியைத் தீமுன்னர்க்கொடுப்பது.

பிரசாபத்தியம் :- தலைமகனினத்தோர் வேண்டத் தலைமகளினத்தார் உட்பட்டு அவளைத் தீமுன்னர்க் கொடுப்பது.

ஆரிடம் :- ஒன்றிரண்டு பசுவும் எருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது.

தெய்வமணம் :- வேள்வியால் வந்த கன்னியைத் தீமுன்னர்க் கொடுப்பது.

கந்தருவமணம் :- கொடுப்பாரும் கேட்பாருமின்றி இருவரும் தனியிடத்து எதிர்ப்பட்டுத் தாமே கூடுவது.

அசுரம் :- பெண்ணுக்குப் பொன் சூட்டிச் சுற்றத்தாருக்குப் பொன் வேண்டுவன கொடுத்து கொள்வது.

இராக்கதம் :- பெண்ணும் பெண்ணினத்தாரும் உடன்படாமல் வலிதிற்கொள்வது.

பைசாசம் :- துயின்ருளைச் சென்று கூடுவது.

கொங்கையங் குவட்டிற் றரளமா லிகையைக் கொழுஞ்சுடர்க் குருமணி யாழி
யங்கையி னேந்தி மணிச்சிலம் பரற்ற வன்னங்க ளலமர நடந்து
சிங்கவே றனையா னுலம்பொரு தடந்தோட் சேர்த்தினள் சேர்த்தலு மரச
புங்கவன் சிறுவ னுவகைபூத் தந்தப் பொலங்கொடிக் கினையன புகன்ருன். 47

இ - ள் : பொன்மலையை ஒத்த தனங்களினிடத்தில் அணிந்திருக்கும் முத்துமாலையைச் செழுமையுள்ள ஒளியினையும் நிறத்தினையுமுடைய இரத்தினங்கள் பதித்த மோதிரம் அணிந்த கையினல் கழற்றி ஏந்திக்கொண்டு மணிகள் பதித்த சிலம்பு ஒலிக்கவும் அன்னப்பறவைகள் மயங்கவும் நடந்து ஆண் சிங்கம்போன்ற அரசகுமாரனுடைய திரண்ட கல்லை ஒத்த புயங்களில் அணிந்தாள். அவ்வாறு அணிந்தமாத்திரத்தில் அரசசிரேட்டனகிய சத்தியாதன மன்னனுடைய புதல்வன் மகிழ்ச்சியடைந்து

பொற்கொடியை ஒத்த அப்பெண்ணைப் பார்த்துப் பின்வருமாறு கூறினன் என்றவாறு.

அரசிழந் தந்தோ வறுமைபூண் டுழல்வ னணியநின் னாரமா லிகையைத்
திரமிட னெனுமுன் றுதைநே ராது சேர்த்தனை யஃதுள நந்தேரிற்
பரவருங் கற்பிற் பைந்தொடி முறையின் பகுதியன் றேயெனப் பகர
மருமலர்க் குழலாள் குறுநகை கோட்டி வணங்கிவாய் புதைத்துநின்
றுரைத்தாள். 48

இ-ள்: அரசாட்சியை இழந்து தரித்திரமுள்ளவனாய் உழன்று கொண்டிருக்கிற யான் அணிந்துகொள்ளும்படி உனது முத்துமாலையைத் திரமிடனென்கிற உனது தந்தையின் உடன்பாடில்லாமல் என் புயத்தில் தரித்தாய். இந்தச் செய்கையை மனதில் ஆலோசிக்குமிடத்தில் புகழ்தற்கரிய கற்பினையுடையவளே! நீதியின்பால் பட்டதல்லவே என்று அவன் சொல்ல மணம்தங்கிய பூமாலையணிந்த அளகத்தையுடைய அந்தக் கந்தருவப் பெண்ணானவள் புன்னகைசெய்து வணங்கி ஒருகையால் வாயைப் பொத்திக்கொண்டு நின்று கூறுகிறாள் என்றவாறு.

மன்னவன் சிறுவ கேட்டி நீ யுரைத்த வாசக மழகிதே யடிச்சி
நின்னுடைக் கருத்தி னெண்ணிய முறையே நிரப்புவ னாளையு மீள
இன்னெடு வனத்தி னெய்துதியென்னா வேந்திழை யாயமோ டேகத்
தன்னிக ரில்லான் றுணைவனுக் கிதனைச் சாற்றினன் றன்னக ரடைந்து. 49

இ-ள்: அரசகுமாரனே! நான் கூறுவதைக் கேள். நீ கூறிய வார்த்தை அழகுள்ளதாயிருக்கின்றது. அடிச்சியாகிய நான் உன்னுடைய மனதில் எண்ணியவைகளை முறைமைப்படி நிறைவேற்றுகிறேன். மறுபடி நாளையதினமும் நெடிதாகிய இவ்வனத்தில் வாவென்று சொல்லி அந்தக் கந்தருவப் பெண்ணானவள் தன் தோழிகளுடனேபோகத் தனக்கு ஒப்பில்லாதவனாகிய அரசகுமரன் இந்தச் சொல்லினைத் தன் தமையனாயிருப்பவனுடன் கூறித் தன் பதியைச்சேர்ந்து என்றவாறு.

உமையெனு மன்னைக் கெதிர்ந்தன வரய வுவகையை யப்படி யுரைத்துச்
சுமையுடைத் திங்கட் சடிலவா னவனைத் தொழுதுவந் தனைத்தொழி லியற்றி
யெமையளித்தருணீ யென்றுகொண் டந்த வேந்திழை யுரைத்திடும் வழிநாள்
அமைநிரைந் தோங்கும் வனந்தனிற் புகுந்தியா ழரசனோ டரிவையைக்
[கண்டான். 50

இ-ள்: தன் ஊரிற்போன அரசகுமரன் உமையென்னும் பெயரையுடைய தன் தாயைக்கண்டு தனக்கு நேரிட்ட மகிழ்வான செய்தியை நடந்தவாறுகூறி இளந் திங்களை யணிந்திருக்கும் சடாபாரத்தையுடைய பரமசிவனைத் தொழுது ஆராதித்து அடியேங்களைக் காத்தருளுமென்று

வேண்டிக்கொண்டு அக்கந்தருவப்பெண் வரக்கூறியமறுநாள் மூங்கில்கள் வரிசை வரிசையாய் ஓங்கி வளர்ந்திராநின்ற அந்தக் காட்டில்போய் கந்தருவ அரசனையும் அந்தப் பெண்ணையுங் கண்டான் என்றவாறு.

கண்டவர் தம்மைக் கண்டியாழ் விஞ்சைக் கதிர்முடி யரசுவப் போடு
வண்டிமிர் தெரிய லரசிளங் களிறே வருகென வாங்குபு தழுவி
அண்டரி னொருவ னனவே தியனை யடுத்தனன் புல்லியாங் கிருத்தித்
துண்டவெண் பிறையான் கூறிய மாற்றஞ் சுடர்முடி யரசகே ளென்றான். 51

இ - ள்: ஒளிபொருந்திய முடியினை அணிந்திருக்கும் வித்தியாதர மன்னவன் தன்னைக் கண்டவர்களைத் தானும்பார்த்து மகிழ்வுடன் வண்டுகள் இசைபாடிக்கொண்டு இருக்கும்படியான பூமாலையை அணிந்த யானையையொத்த வலியுடைய அரசனே! வாவென்று அணிமையில் வரவழைத்துத் தழுவிக்கொண்டு தேவர்களில் ஒருவனை அந்தணனையும் அடுத்துத் தழுவி அவ்விடத்தில் தன்னுடன் இருக்கும்படி வைத்துக் கொண்டு வெள்ளிய இளந்திங்களை அணிந்த பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கினை ஒளிமிக்க மகுடத்தையுடைய அரசனே கேளென்று சொன்னான் என்றவாறு.

விண்ணக டணவும் வெள்ளியங் கிரியின்
விளங்குமா மணிசெய் மண்டபத்தில்
பண்ணவர் பெருமா னிணையடிக் கமலம்
பணியயா னென்னலி னடைந்தேன்
கண்ணுத லடியர்க் கெளியவ னமலன்
கருணைவா ரிதியெனை நோக்கி
உண்ணிறை யுவகை புறம்பொழிந் தோங்க
வகமகிழ்ந் தின்னவா றுரைத்தான். 52

இ - ள்: அண்டமுகட்டைப் பொருந்திய அழகிய வெள்ளிமலையாகிய கயிலாயகிரியில் ஒளிசெய்துகொண்டிராநின்ற மாணிக்க முதலிய மணிகளால் செய்யப்பட்ட மண்டபத்தில் எழுந்தருளியிருந்த தேவர்களுக்கெல்லாம் இறைவனாகிய பரமசிவனுடைய இரண்டு திருவடித் தாமரைகளையும் வணங்க நான் நேற்றுப்போனேன். போனவிடத்தில் நெற்றிக் கண்ணையுடையவரும் அடியார்க்கெளியவரும் நிருமலமானவரும் கருணைக் கடலானவருமாகிய கயிலாசபதியானவர் அடியேனைப் பார்த்து உள்ளே நிறைந்த மகிழ்வானது புறத்தில் பெருகி ஓங்கத்தக்கதாகத் திருவுளம் மகிழ்ந்து, இவ்வாறு கூறியருளினார் என்றவாறு.

ஆசில்சீர்க் குமர நினதுநற் றுயு மத்தனு மிறந்தது மதன்பின்
மாசிலா ளொருத்தி பார்ப்பனி வளர்க்க வறுமையங் கடலினுழ்ந் ததுவும்
தேசிக முனியுன் பிறப்பெலாந் தெருட்டிச் சிவனையே பூசியென் றதுவும்
ஈசன தடியி னன்பினுன் மலர்பெய் தேத்திநீ பூசைபண் ணியதும். 53

இ-ள்: குற்றமில்லாத புகழினையுடைய அரசகுமாரனே! உன்னுடைய நல்ல தாயும் தகப்பனும் இறந்துபோனதும் அதன்பின் உத்தமியாகிய ஒரு பிராமணப் பெண்ணானவள் உன்னை வளர்க்க, வளரும் நாளில் நீங்கள் வறுமையாகிய கடலில் மூழ்கியிருந்ததும், ஒரு முனிவனாகிய ஆசிரியன் வந்து உன்பிறவியின் விவரத்தைத் தெரிவித்து நீ சிவனையே பூசித்துக் கொண்டிரு என்று சொல்லியதும், அவர் சொல்லியபடி நீ பரமசிவனது திருவடியில் அன்புடன் மலர்களால் அர்ச்சித்துத் துதிசெய்து பூசை செய்ததும் என்றவாறு.

வறுமையம் கடல் - இடையிலுள்ள அம்சாரியையாகும்.

அன்னதா லுன்மாட் டன்புமிக் குடையே மென்பது மறிகென வுரைத்துப்
பின்னரு நினது தாதையை மாய்த்துப் பெரும்பதி வளனெலாங் கவர்ந்த
மன்னரை வீட்டிக் கடற்படை துணித்து வாகைகொண் டரசிளங் குமரன்
தன்னருட் கவிகை யுலகெலா நிழற்றத் தருக்கொடு துணைசெய்வா
யென்றான். 54

இ-ள்: அந்த முனிவர் சொற்படி பூசைசெய்த தன்மையினால் அவனிடத்தில் மிக்க கருணைவைத்திருக்கிறோம் என்பதும் அறியக்கடவையென்று சொல்லிப் பின்னும் அவன் தகப்பனைக்கொன்று பெரிய நகரம் முதலாகிய வளப்பங்களையெல்லாம் அபகரித்துக்கொண்ட அரசர்களைக் கொன்று அவர்களுடைய கடல்போன்ற அளவற்ற சேனைகளையுங்கொன்று வெற்றியடைந்து அந்த அரசபுதல்வன் (அரச முடிசூடிக் கொண்டு) உயிர்கட்கெல்லாம் கருணை செய்யத்தக்க தன் குடையானது நிழல்செய்யும்படி தருக்கொடு துணைசெய்யென்று எனக்குக் கட்டளையிட்டார் என்று கூறினான் என்றவாறு.

அரசகுமரன் முனிவர் கூறியபடி நம்மைப் பூசித்ததினால் தன் பகைவரை வென்று அரசாட்சிசெய்வான். அக்காலத்தில் அவனுக்கு உதவி செய்யென்று பரமசிவன் தனக்குக் கட்டளையிட்டதாக வித்தியாதரன் சொன்னான் என்பது கருத்தாகும்.

முத்தலைச் சூலஞ் சுவன்மிசை யிருத்து முழுமுத லுரைதலை மேற்கொண்(டு)
அத்தலை நின்று நகரின்வந் தணைவேற் கணங்கிவ ளரனுரைப் படியே
கைத்தல நெல்லிக் கனியினின் மரபுங் கவினும்வந் துரைத்திடக் கேளா
இத்தலை வந்தேன் சிவனருள் பெற்றார்க் கெய்திடாப் பொருளுமொன்
றுளதோ. 55

இ-ள்: மூன்று பிரிவாகிய தலையினையுடைய சூலாயுதத்தைத் தமது பிடரியினிடத்து வைக்கும் பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கினை தலையின்மேல் ஏற்றுக்கொண்டு அவ்விடத்திலிருந்து என் நகரத்தில்வந்து

சேர்ந்த எனக்கு, என் புதல்வியாகிய இக்கன்னிகையானவள் வந்து பரம சிவன் அருளிச்செய்த திருவாக்கின்படி கையினிடத்திற் பொருந்திய நெல் லிக்கனிபோல உனது மரபினையும் அழகினையும் கூறக்கேட்டு (உன்னைக் காணும்பொருட்டு) இவ்விடத்தில் வந்தேன். பரமசிவனது கருணையைப் பெற்றவர்கட்குக் கிடையாத ஒருபொருளும் இருக்கின்றதோ என்றவாறு.

உலகத்தோற்றத்துக்கு முன் உள்ளவரும் அவை இறுதி அடைந்த பின் இருப்பவரும் எல்லாவற்றுக்கும் காரணராய் உள்ளவருமாதலால் பரமசிவனை முழுமுதலென்றது. "இதனை ஆதியும் அந்தமும்" என்ற மணிவாசகத்தானும் அறிக.

ஆதலா லஞ்சு மதியிவ ளினக்கே யடிப்பணி செய்கென வளித்தேன்
காதலா யெனப்பொற் கரகநீ ரவன்றன் கரத்தினில் விடுத்தபின் கமல
மாதுநேர் மகளிர் நவமணி கனக மால்கரித் தேர்பரி பதாதி
மோதுபோர்க் கணியங் கவசம்விற் றூணி மூரிவேல் வாளிவை
கொடுத்தான். 56

இ - ள் : இந்த முறைமையினால் அஞ்சுமதியென்னும் பெயரை யுடைய என் புதல்வியாகிய இப்பெண் உனக்குப் பணிவிடைசெய்யக்கடவ ளென்று விருப்புடன் கொடுத்தேனென்று பொற்கரகத்திலிருக்கும் நீரை அவன் கையில் விட்டபின்பு திருமகளையொத்த (அழகுள்ள) தோழிகள், நவமணிகள், பொன், பெரிய யானைகள், தேர்கள், குதிரைகள், பதாதிகள், தாக்கும்படியான மழுவாயுதம், கவசம், தனுசு, அம்பறாத்தூணி, பலம் பொருந்திய வேலாயுதம், வாளாயுதம் முதலியவைகளையும் கொடுத்தான் என்றவாறு.

வேறு

முனிவரன் புதல்வ னுய முழுமழு விராமன் போல
அனிகமோ டெய்தித் தெவ்வ ரருங்கிளை யறுத்துச் செங்கோ
லினிதினேச் சியபின் மைந்தற் கிறைமையீ ந்தெம்பா லெய்தித்
தனிமுதல் பதத்திற் சேர்தி தையலோ டரச வென்னு. 57

இ - ள் : இவைகளைக்கொடுத்த வித்தியாதரன் பின்னும் சொல்லு கிறான்: அரசகுமாரனே! நீ இச்சேனைகளுடன் சென்று சமதக்கினியென் னும் முனிவரனுடைய புதல்வனாகிய மழுங்காத பரசாயுதத்தையுடைய பரசுராமன் பகைவரை வென்றதுபோல வெல்லுதற்கரிய பகைவரைச் சுற்றத்தாருடன் கொன்று உயிர்களுக்கெல்லாம் இன்பம் உண்டாகும்படி செங்கோல் செலுத்திப் (புதல்வர் முதலாய எட்டு செல்வங்களையும்பெற்று வாழ்ந்துகொண்டிருந்து) அதன் பின்பு உன் புதல்வனுக்கு அரசாட்சி

கொடுத்து உன் மனைவியுடன் எப்பிடத்தில் வந்து ஒப்பற்ற பரமசிவன் திருவடியில் சேரக்கடவை என்று கூறி என்றவாறு.

பரசு - கோடரி.

எடுத்துற முயங்கி நின்ற வேந்திழைக் கினிது கூறி
அடுத்தநற் சேனை முற்று மவன்றுணை யாகத் தூண்டி
மடுத்தொலி முரச மார்ப்ப வாழ்த்தினன் மருமான் றன்னை
விடுத்தயன் விமான மூர்ந்து வெள்ளிவே தண்டஞ் சேர்ந்தான். 58

இ - ள்: தன் புதல்வியை எடுத்து முகத்தோடு முகமுறத் தழுவிக் கொண்டு அந்தப் பெண்ணுக்கு இனிய உபசாரமொழிகள் கூறிப் பொருந்தியசேனைகளையெல்லாம் அரசகுமாரனுக்குத் துணையாகச் செல்லும்படி அனுப்பி ஒலி மிக்க பேரிகை வாத்தியம் முழங்கத்தக்கதாக வாழ்த்துதல் செய்து மருமகனுக்கு விடைகொடுத்து (அதற்குமேல் அந்த வித்தியாதரன்) பிரமலோகத்து விமானத்தில் ஏறிக்கொண்டுபோய் வெள்ளிமலையில் சேர்ந்தான் என்றவாறு.

குங்குமக் குவடு போலக் குவிந்தெழு வயிரத் தோளான்
மங்கையர்க் கரசி யஞ்சு மதியெனு ந் திருவி னேடும்
பங்கயத் தண்டார் முன்னேன் புடைவரப் பதாதி சூழத்
தங்குலக் குரிமை யான விதர்ப்பதே சத்தைச் சார்ந்தான். 59

இ - ள்: வித்தியாதரன் போனபின்பு குங்கும மலைபோலத் திரண்டு உயர்ந்த திண்ணிய தோள்களையுடைய அரசகுமாரனனவன் அழகு முதலியவைகளால் மாதர்களுக்கு அரசியாகிய அஞ்சுமதியென்னும் தன் மனைவியுடன் குளிர்ச்சிதங்கிய தாமரைமலரால் தொடுக்கப்பட்ட மாலையணிந்த பிராமணனுகிய தமையன் தன் அருகில் வரவும் சேனைகள் சூழவும் சென்று தன் குலத்தாருக்கு உரியதாகிய விதர்ப்பநாட்டை அடைந்தான் எ - று.

நெடும்படைப் பகைவ ரெல்லா நேர்ந்துபோர் தருக வன்றேல்
அடும்படைத் தொழில்கை விட்டெம் மடிப்பணி செய்க தத்த
மிடும்பினைத் தடிய வந்தேம் யாமென விறைமை சாற்றி
முடங்கலிற் பொறித்துத் தூதிற் போக்கினன் முழவுத் தோளான். 60

இ - ள்: இவ்வாருக விதர்ப்பநாட்டைச் சேர்ந்த மத்தளம்போலத் திரண்ட தோள்களையுடைய தருமகுத்தனென்னும் அரசகுமாரனனவன் மிக்க சேனைகளையுடைய பகைவர்களாகிய மன்னவர்களே! நீங்களெல்லோரும் வந்து சண்டை செய்யுங்கள். இல்லாவிட்டால் போர்த்தொழிலைவிட்டு நம்முடைய பாதத்தை வணங்கிக் குற்றேவல் செய்யக்கடவீர்கள். உங்களுடைய அகங்காரங்களை அடக்க நாம் வந்தோமென்று அரச வீரத்தை ஓலையில் எழுதித் தூதர்கள்கையில் கொடுத்தனுப்பினன் எ - று.

கேட்டமன் னவர்க ளெல்லாங் கிரித்திண்டோள் குலுங்க நக்காங்
கூட்டரக் கனைய செங்கண் சிவந்திவ ஞெருவ னேவெம்
வாட்டிறற் கெதிர்வ னென்று வந்துவெங் களத்த ரானர்
கோட்டமில் குணத்துத் தன்ம குத்தனும் போரி னேற்றான். 61

இ - ள் : இவ்வாறு அனுப்பிய ஓலையை வாசிக்கக்கேட்ட அரசர்கள் எல்லோரும் மலைபோன்ற தம்புயங்கள் குலுங்கும்படி நகைத்துச் செந்தாமரை மலர்போன்ற கண்கள் செம்மைநிற மேற்றிய அரக்குப்போலச் சிவக்கத்தக்கதாகக் கோபங்கொண்டு இச்சிறுவன் ஒருவனே எங்கள் வாள்வலிக்கு அஞ்சாமல் எதிர்க்கத்தக்கவனென்று அவமதிப்பாகப்பேசித் தங்கள் தங்கள் சேனைகளுடன் வெவ்விதாகிய யுத்தகளத்தில் வந்து சேர்ந்தார்கள். மாறுபடுதலில்லாத நற்குணத்தையுடைய தருமகுத்தனும் போர்க்களத்தில் எதிர்த்தான் என்றவாறு.

நக்காங்கு: ஆங்கு - அசைநிலை.

ஏற்றெதிர் மலைய வேந்த ரெறிபடை வடிவே லேந்திக்
கூற்றென வுடன்று சாபங் குழைத்தடு பகழி தூர்த்தார்
வேற்றடந் தானை வீரர் வெருவந்தூ றஞ்சி யாங்கே
ஆற்றல ரானா ரன்ன தரசிளங் குமரன் கண்டான். 62

இ - ள் : இவ்வாறு எதிரிட்டு யுத்தஞ்செய்யப் பகைமன்னவர்கள் எதிர்ந்து கொல்லத்தக்க ஆயுதங்களையும் வடித்தவேலையும் ஏந்திக்கொண்டு நமன்போலக் கோபமுள்ளவர்களாய் வில்லைவளைத்துப் பாணங்களைப் பிரயோகஞ்செய்தார்கள். அப்பாணங்கள்பட்டுத் தேர்ப்பாகர் முதலானவர்கள் தலைமுதலாய அவயவங்கள் அறுபடுவதைக் கண்டு பயந்து தன படைவீரர்கள் எதிர்நின்று போர்செய்ய மாட்டாதவர்களாய்ப் பின்னிட்டு ஓடினார்கள். அதைத்தருமகுத்தன் என்னும் அரசகுமரன் கண்டான் எ-று.

வரிசிலை குழைய வாங்கி வடிக்கணை தொடுத்து மாற்றார்
விரிபிணக் குவையின் குப்பை வெற்பென மலிய வீட்டிப்
புரையறு வடிவே லேந்தித் தாதையை முன்னம் போரில்
தரையினிற் செற்றான் செம்பொற் றலையறத் தடிந்திட் டானே. 63

இ - ள் : நீண்டவில்லை நன்றாகவளைத்துக் கூர்மையுள்ள பாணங்களை விடுத்துப் பகைவரது பிணக்குப்பைகள் எங்கும் பரந்து மலைகள்போலக் குவியும்படிக் கொன்று முன்புவேலாயுதத்தையுடையவனாய் வந்து போர்க்களத்தில் தன் பிதாவின் தலையானது பூமியில் விழும்படிக் கொன்றவனுடைய பொன்னாலாகிய மகுடமணிந்த தலையையறுத்துத் தள்ளினான் என்றவாறு.

படைமலே வொழிக வென்னுப் பணேமுர சறைவித் தம்பொற்
குடைபுவி நிழற்ற மன்னர் குரைகழற் ருளின் வீழ
இடையிடை யமைச்சர் பாதத் தேத்துபு வணங்கி நிற்பத்
தொடையணி மார்பன் றங்க டொன்னக ரடைந்து பின்னுள். 64

இ - ள்: தருமகுத்தனென்கிற அரசகுமரன் தன் பகைவனுடைய தலேயை அறுத்துத்தள்ளினவுடன் இனிப் போர்செய்வதையொழியுங்கள் என்று பெரிய பேரிகை சாற்றும்படி உத்தரவு செய்து அழகிய பொன் மயமாகிய வெற்றிக்குடையானது பூமிக்கெல்லாம் நிழல்செய்யவும் போர் செய்யவந்த ஏனேய அரசர்கள் ஒலிக்காநின்ற வீரகண்டையணிந்த தன்னுடைய திருவடியில் விழுந்து பணியவும் செல்லுமிடந்தோறும் வரிசை வரிசையாக நின்று மந்திரிமார்களும் தன் திருவடியைத் துதிசெய்து வணங்கி நிற்கவும் வெற்றிமாலேயணிந்த மார்பையுடையவனுய்ப் பழைமையாகிய தங்கள் நகரத்திற்போய்ச் சேர்ந்து, மறுநாள் என்றவாறு.

மந்திரக் கிழவர் சூழ வணங்கலர் வணங்கி வாழ்த்தத்
தந்திரத் தலேவர் போற்றத் தமனிய மகுடஞ் சூடி
ஐந்தருக் கொடைகண் டேத்த வவனியை முழுதுங் காத்தான்
கந்திரைத் தழன்று பாயுங் கடாமுகக் களிற்றி னுனே. 65

இ - ள்: மந்திரிகள் சூழ்ந்திருப்பவும், பகை மன்னவர்களாய் இருந்தவர்கள் எல்லோரும் வணங்கி வாழ்த்தவும், சேனுதிபதிகள் போற்றி செய்யவும், பொன்னினுல் செய்யப்பட்ட முடி அணிந்துகொண்டு தேவலோகத்திலிருக்கும் பஞ்சதருக்களும் தான் கொடுக்கும் தியாகத்தைக் கண்டு புகழவும், கோபங்கொண்டு ஆரவாரித்துக் கட்டுத்தறியைப் பாய்கின்ற மதசலம் பெருகும்படியான சுவடுதங்கிய முகமுள்ள யானேகளேயுடைய தருமகுத்த அரசனுனவன் பூமி முழுவதையும் காத்தான் எ - று.

பஞ்சதருக்கள் :- அரிச்சந்தம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம். இவை ஐந்தும் கேட்ட பொருளேக் கொடுப்பவைகளாம்.

வேறு

மையணி கண்டன் றனேயருச் சித்து வரும்பிர தோடத்தின் பலத்தால்
செய்யகோ றிசைகண் மீச்செல மாலேத் திங்கள்வெண் குடைபுவி கவிப்ப
ஐயநின் னடிமை யாமெனத் தெவ்வ ரடிதொழப் புவிமுழு தாண்டு
துய்யபோ கங்க ளுகர்ந்துபின் னிறந்து துணேவியோ டரன்பத
மடைந்தான். 66

இ - ள்: கருமைநிறந்தங்கிய கண்டத்தையுடைய பரமசிவனேச் சனிப் பிரதோடகாலத்தில் அருச்சனே செய்துவந்த பலத்தால் செங்கோலானது

எட்டுத் திக்குவரை செல்லவும், பருவதினத்தின் சாயுங்காலத்தில் உதயமாகாநின்ற பூரண சந்திரனையொத்த வெள்ளைக்குடை பூமி முழுவதையும் கவித்துக்கொள்ளவும் பகைவராகிய அரசர்கள், இறைவனே! நாங்கள் உன்னுடைய அடிமையென்று திருவடியை வணங்கவும் பூமி முழுவதையும் ஆண்டு நல்ல போகங்களை அனுபவித்துப் பின்பு இவ்வுடலினைவிட்டுத் தன் மனைவியுடன் சிவபதம் சேர்ந்தான் என்றவாறு.

இன்னதே யருளு மிப்பிர தோட மென்னயாம் வழுத்துதற் கெளிதோ
அன்னவா கனனுங் கலுழவா கனனு மறிவதன் றதனுடைப் பெருமை
பன்னகா பரணன் பூசையி னிதுபோற் பலந்தரும் பூசையின் றென்று
முன்னைநூன் முழுது முணர்ந்தவன் மொழிந்தான் முனிவர ரனைவரு
மகிழ்ந்தார். 67

இ - ள்: சனிப்பிரதோடத்தின் பலனனது இத்தன்மையுள்ள இம்மை மறுமை இன்பங்களைத் தருமென்று நாம் விவரித்துச் சொல்லுவதற்கு எளிதல்ல. அதனுடைய பெருமை பிரமனுலும், திருமாலாலும் அறியத்தக்கதுமல்ல. நாகாபரணங்களை அணிந்திருக்கும் பரமசிவனுக்கு உரிய பூசைகளில் இப்பூசையைப்போலப் பலனைத்தரும் பூசை வேறென்றுமில்லை என்று வேதாகம சாத்திரங்களையெல்லாம் உணர்ந்த சூதமுனிவர் கூறினர். அதுகேட்டு நைமிசாரணிய முனிவர்கள் மனம் மகிழ்ந்தார்கள் என்றவாறு.

பிரதோட பூசைமகிமை முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 404

எட்டாவது

சோமவாரவிரத மான்மிய

அத்தியாயம்

சீதமதிப் பிள்ளைவெள்ளை யமுதங் காலுஞ்
செஞ்சடைமைக் கருமிடற்றுப் பசிய சாயன்
மாதுவள ரொருபுறத்து நீறு பூத்த
மாணிக்க மலையனைய வருண மேனி
நாதனது சரித்திரத்தின் மேன்மை யின்னு
நவில்வனெனத் தவமுனிவ ரெவருங் கேட்பச்
சூதனெனும் புராணமுனி மறைக ணான்குஞ்
சொன்னமுனி யடிதொழுது பின்னுஞ் சொன்னான். 1

இ - ள் : குளிர்ச்சிபொருந்திய இளந்திங்கள் வெண்மை நிறமுள்ள அமுதகிரணத்தைப் பொழிந்துகொண்டிருக்கும்படியான சிவந்த சடைமுடியினையும் மேகம்போன்ற காளகண்டத்தினையும் பச்சை நிறமுள்ள பார்வதி தேவியார் அமர்ந்த இடப்பாகத்தினையும், நீறுபூத்த மாணிக்கமலையை ஒத்த செம்மை நிறமுள்ள திருமேனியையுமுடைய பரசிவனது வரலாற்றின் மேன்மையை இன்னும் சொல்லுகிறேனென்று நைமிசாரணியத்தில் தவஞ் செய்யும் முனிவர்கள் எல்லோரும் கேட்கும்படி சூதரென்கின்ற புராண முனிவரானவர் நான்கு வேதங்களும் சொன்ன வியாசமுனிவர் திருவடிகளை மனதில் எண்ணி வணங்கிப் பின்னும் கூறுகின்றார் என்றவாறு.

நித்தியமா யானந்த வுருவ மாகி
நிறைவுபடும் பொருளாகிக் குறைப டாது
சத்தியமா யனைத்துயிர்க்கு முள்ளீ டாகிச்
சங்கற்ப விகற்பங்கட் கயல தாகி
வைத்தசிவ தத்துவத்தி னியல்பு தன்னை
வருகுரவ னருளினினி துணர்ந்து வாழும்
அத்தகையர் பிறப்பாதி யிடைநின் றேறி
யழியாத சிவகதியி னடைவ ரன்றே. 2

இ - ள் : நித்தியப்பொருளாகியும் ஆனந்தமே திருமேனியாகக் கொண்ட பொருளாகியும் குறைபடாமல் எங்கும் நிறைந்த பொருளாகியும்

சத்தியமான பொருளாகியும் எல்லாவுயிர்க்குள்ளும் உயிராகியும் சங்கற்ப விகற்பங்கட்கு அன்னியமாகியும் பொருந்திய சிவதத்துவத்தின் இயற்கையைக் கருணையால் எழுந்தருளிய ஆசாரியர் அனுக்கிரகித்த முறைமையினால் உணர்ந்து வாழ்கின்ற தன்மையுடையவர்கள் பிறவிக்கடலினின்றும் கரையேறி அழியாத சிவகதியை அடைவார்கள் என்றவாறு.

சங்கற்பம் என்பது மனவியாபாரம்.

வாங்குதிரைக் கடலுடுத்த ஞால மீதில்
மண்ணாசை பொன்னாசை மகளி ராசை
தீங்குதரு மெனக்கருதித் துறந்து தங்கள்
சிந்தனையைப் புலனெறியிற் செலுத்தா ராகிப்
பூங்கனக வரைச்சிலைகொண் டவுணர் மாயப்
புரமெரித்த கயிலைமலைப் புனிதன் றாளின்
ஓங்குமறை நெறியின்வழி பாடு செய்வோ
ருதரவழி வருங்கவலை யொழிப்பர் மாதோ. 3

இ - ள்: அலைகளையுடைய கடல்சூழ்ந்த பூலோகத்தினிடத்தில் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசைஎன்னும் இம்மூன்றாசையும் பொல்லாங்கினைத் தருமென்று கருதித் துறந்து தங்கள் மனதையும் புலன் வழியிற் செலுத்தாதவர்களாய்ப் பொலிவுள்ள மகமேருவாகிய வில்லினால் அவுணர்கள் எல்லோரும் மாயும்படித் திரிபுரங்களை எரித்த கயிலாசபதியாகிய பரமசிவனுடைய திருவடிகளில் ஓங்கிய வேதவிதிப்படி பூசைசெய்கின்றவர்கள் தாய்வயிற்றில் தங்கிப் பிறக்கும்படியான துன்பத்தை நீங்குவார்கள் என்றவாறு.

எண்ணாரிய விடயங்க ளுடனே கூடி
யிடைவிடா தொழுகிடினும் யாவ ரேனும்
கண்ணுதல்வா னவனடியை மறவா ராகிக்
கருத்தினின்வைத் துறுங்காலங் கழிக்கு மாந்தர்
மண்ணகநீள் வரைப்பின்வரு போக மெல்லாம்
வைகறொறு நுகர்ந்துடல மாய மேலை
விண்ணகநா டதனிடைச்சென் றடையுங் காலை
விடயத்தான் வருந்துயர மீள்வ ரன்றே. 4

இ - ள்: எண்ணுதற்கரிய விடயங்களுடனே கூடி இடைவிடாமல் காலங்கழித்தாலும் எவர்களேயானாலும் நெற்றிக்கண்ணையுடைய பரமசிவன் திருவடிகளை மறவாதவர்களாய்த் தங்கள் இருதயத்தில் வைத்துப் பொருந்திய காலங்கழிக்கும் மாந்தர்கள் இப்பெரிய உலகத்தில் வரும் போகங்களையெல்லாம் நாள்தோறும் அனுபவித்து இவ்வுடலை நீங்கி மேல்

உலகமாகிய தேவலோகத்தில் செல்லுங்காலத்தில் முன் அனுபவித்த விடயங்களால் நேரிடத்தக்க துயரங்களை அனுபவிக்கமாட்டார்கள் எ-று.

நீடுபெரும் போகநுகர் வேட்கை யெல்லா
நீத்தறியா வொருவனிரு வினையி னீங்கி
வீடுபெறக் கருதியருந் தவங்கள் செய்தும்
வேறுசம யத்தடைந்து மாவ துண்டோ
கோடுயரு நெடுங்கயிலை மலையின் மன்னுங்
கொடும்பவள மணிவரையி னருண பாதத்
தேடவிழு மலரின்வழி படுவா னுயி
னிரும்போக நுகர்ந்துயர்வீ டெய்து வானே. 5

இ-ள்: மிகுதியான போகங்களை அனுபவிக்க வேண்டுமென்கிற ஆசைகளை நீக்கியறியாத ஒருவன் நல்வினை தீவினையென்னும் இருவினையினின்றும் நீங்கி, முத்தியை அடையவேண்டுமென்கிற எண்ணங்கொண்டு அரிய தவங்கள் செய்தும் மற்றொரு சமயத்தில் சென்றும் கிடைப்பதுண்டோ? சிகரங்கள் உயர்ந்த கயிலாயமலையில் வீற்றிருக்கும் செழுமையான பவளமலைபோன்ற பரமசிவனுடைய சிவந்த திருவடிகளில் இதழ்கள் விரிந்த மலர்களால் வழிபடுவானாகில் இம்மை மறுமையின்பங்களை அனுபவித்து அதற்குமேல் பதவிகட்கெல்லாம் மேலாகிய மோட்சத்தை அடைவான் என்றவாறு.

பிறையினொடு நறையிதழித் தொடையும் வானிற்
பெருகிவருஞ் சுரநதியு முடித்த வேணிக்
கறையணியு மணிமிடற்று முக்கட் செய்ய
களிற்றுரிவை யந்தணன்றாள் பணியு மாந்தர்
மறைகளொரு நான்குமவற் றங்க மாய
மன்னுபுரா ணங்கள்பதி னெட்டு நாடி
அறையவரி தாயடிய ரெளிதிற் றேரு
மழிவில்பெருஞ் சிவகதியை யடைவர் தாமே. 6

இ-ள்: இளம்பிறைச் சந்திரனுடன் மணம் பொருந்திய கொன்றைப்பூ மாலையையும், விண்ணிடைப் பெருகிவருகின்ற கங்கையாற்றையும், முடித்திராநின்ற சடைமுடியையும், விடந்தங்கிய காளகண்டத்தையும், முக்கண்ணையும், யானைத்தோல் போர்வையையும் உடைய பரமசிவனது திருவடியைப் பணியும் மாந்தர்கள் நான்கு வேதங்களும் அவைகளுக்குரிய ஆறங்கங்களும் நிலைபெற்றதாகிய பதினெண்புராணங்களும் ஆராய்ந்தறிந்து சொல்வதற்கரியதாய் அடியவர்கள் எளிதில் உணரும்படியான அழிவில்லாத பெரிய சிவகதியை அடைவார்கள் என்றவாறு.

சொன்னவிவை யெவற்றினுக்கு மேல தாகிச்
சுருதிசிவா கமம்புகலுஞ் சோம வார
மன்னிவரும் பிரதோடந் தோறுஞ் செம்பொன்
மலேச்சிலேவா னவனேயுல கங்க ளீன்ற
கன்னியுட ஞகமத்தின் வழிதப் பாது
கடிமலரின் வழிபாடு புரியு மேலோர்
இன்னலெனும் பெருங்கடலின் கரைநின் றேறி
யிகபரத்தும் போகநுகர்ந் திடுவ ரன்றே. 7

இ-ள்: பரமசிவனேப் பூசிக்கும்படி இதுவரையில் சொல்லிவந்த பூசைகள் எல்லாவற்றிலும் உயர்ந்ததாய் வேதங்களிலும் சைவாகமங்களிலும் சொல்லப்படுகின்ற சோமவார தினங்களில் பொருந்திவருகிற பிரதோடந்தோறும் மகமேருவை வில்லாகவுடைய பரமசிவனே உலகத்து உயிர்களே ஈன்ற கன்னியாகிய பார்வதிதேவியாருடன் ஆகமவிதி தவருமல் மணம் பொருந்திய மலர்களால் வழிபாடுசெய்யும் பெரியோர்கள் துன்பமென்கிற பெரிய கடலின் கரையில்சென்றே இம்மை மறுமைப்பயனே அனுபவிப்பார்கள் என்றவாறு.

இல்லறத்தின் கிழமைதனேப் பூணு மாந்த
ரியல்புடனில் லறக்கிழமை பூண்ட மாந்தர்
தொல்லறத்தின் கொழுநருடன் வாழு மாதர்
துணேவர்தமை யிழந்துதுய ருழக்கு மாதர்
புல்றத்தை யொருவியரன் சோம வார
பூசனேயே புரிவரெனிற் புவன மீதின்
அல்லலறுத் தன்னவருண் ணினேந்த வெல்லா
மவர்நினேவின் படியேவந் தடையு மன்றே. 8

இ-ள்: இல்வாழ்க்கையின் உரிமையைப் பூணுதவர்களும் முறையாக இல்வாழ்க்கையைப் பூண்டவர்களும் பழமையாகிய அந்த இல்வாழ்க்கையில் தத்தம் கணவருடன் வாழும் மாதர்களும் கணவர்களேயிழந்து துயரம் அனுபவிக்கும் மாதர்களும் பொருந்திய அந்த இல்வாழ்க்கையை நீங்கிப் பரமசிவனது சோமவாரபூசையைச் செய்வார்களாளுல் இவ்வுலகத்தினிடத்தில் துன்பங்களேநீங்கி அவர்கள் மனதில் கருதிய பொருள்களெல்லாம் அவர்கள் கருத்தின்படி வந்து பொருந்தும் என்றவாறு.

என்றுபல தருமமெடுத் திசைத்தே மீட்டு
மிமயமலே யரையன்மடப் பாவை கேள்வன்
தொன்றுபடு மாகமங்க டோறு முண்மைச்
சுருதிதொறும் புகன்றருளுஞ் சோம வாரத்

தொன்றுபெருங் கதையனந்த மவற்றுண் மின்ன
ரொளியிழைசீ மந்தனியென் றுலகம் போற்றுங்
குன்றனைய பெருந்தவத்துக் கோதி னீதிக்
கொம்பனையா ளேற்றகதை கூறு வாமே. 9

இ - ள்: முனிவர்களே! இதுவரை பல சிவதருமங்களைக் கூறினோம். இன்னமும் பார்வதி கணவனாகிய பரமசிவன் பழமையாகிய ஆகமங்கள் தோறும் உண்மையாகிய வேதங்கள்தோறும் சொல்லியருளிய சோமவார பூசையைக் குறித்த வரலாறு பலவாம். அவைகளுக்குள் மின்னலையொத்த மாதர்களுக்கு ஆபரணம்போன்ற அழகுள்ள சீமந்தனி என்று உலகத்தார் கூறப்பட்ட மலைபோன்ற தவத்தினையும் குற்றமற்ற நீதியினையுமுடைய ஒரு மாது சோமவார விரதமிருந்த கதையைக் கூறுகிறோம் என்றவாறு.

வேறு

இளங்கதிர் நுழைகலா விருள்கொள் பூம்பொழில்
வளங்கெழு மாரிய வர்த்த நாட்டினன்
விளங்கொளி மணிமுடி மிலைந்த வேந்தர்கோன்
அளந்தறி வருங்கலைக் காழி யேயனான். 10

இ - ள்: சூரியனது இளங்கதிரும் நுழையக்கூடாத இருள்சூழ்ந்த பூஞ்சோலைகளும் வளப்பங்களும் பொருந்திய ஆரியவர்த்த நாட்டையுடையவன். விளங்குகிற மணிமகுடமணிந்த அரசர்களுக்கு அரசனாயிருப்பவன். அளந்தறிவதற்கரிய கல்வி உணர்ச்சியில் கடலையொத்தவன் என்றவாறு.

எண்டிசை முழுவது மெழுது வண்புகழ்
மண்டலி கர்க்கெலா மகுடம் போல்பவன்
புண்டரு கொழுநிணப் புலவு நாறுவேல்
திண்டிறற் சித்திர வருமனென்பவே. 11

இ - ள்: எட்டுத்திக்குகளிலும் எழுதிய வண்மைதங்கிய புகழுள்ள அரசர்கட்கெல்லாம் மகுடம் போன்றிருப்பவன். போர்முகத்தெதிர்க்கும் பகைவருடைய சரீரத்தில் பட்டுப் புண்ணிலுண்டான கொழுமையுள்ள நிணத்தின் புலால்நாற்றம் நாறுதற் கேதுவான வேலேந்திய திண்ணிய வெற்றியையுடைய சித்திரவருமன் என்னும் பெயருள்ளவன் என்று சொல்வார்கள் என்றவாறு.

ஆயவ னெண்ணிலா மகங்க ளாற்றியும்
தாயென வுயிரெலாம் தழையப் போற்றியும்
மீயுறு முகிலென வெறுக்கை மாமழை
தூயநன் மறையவர் சுமப்ப நல்கியும். 12

இ - ள் : அந்தச் சித்திரவர்மன் என்பவன் அளவற்ற யாகங்கள் செய்தும் தாயைப்போல உயிர்களெல்லாம் தழையும்படி ஆதரித்தும் ஆகாயத்தில் உலவும் மேகம்போலப் பொன்மழையைப் பரிசுத்தமுடைய பிராமணர்கள் சுமந்துகொண்டு போகும்படிக் கொடுத்தும் என்றவாறு.

மரகத வரையென வயங்கு மாதவன்
குரைகழல் வணங்கியும் குன்ற வில்லினல்
புரமெரி கொளுவிடப் பொருத வன்கழல்
இரவினும் பகலினும் அலர்பெய் தேத்தியும். 13

இ - ள் : மரகதமணிமலையையொத்த பச்சைநிறமுள்ள திருமாலின் ஒலிக்கும் வீரகண்டை யணிந்த திருவடிகளை வணங்கியும் மகமேரு வில்லினல் திரிபுரத்தில் தீப்பற்றப் பொருத பரமசிவனது திருவடிகளை மலரிட்டு அருச்சித்து இரவினும் பகலினும் துதிசெய்தும் என்றவாறு.

முழவொலி படுகடன் முத்த வெண்குடை
நிழலிடை யுலகெலா நெறியிற் காக்குநாள்
குழன்மொழி மனைவியர் வயிற்றிற் கொல்சின
மழவிடை யெனச்சில மகப்பெற் ருனரோ. 14

இ - ள் : முழவம்போல ஓசைபொருந்திய கடலினிடத்துண்டான முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளைக்குடை நிழலில் முறையாக உலகத்தைக் காக்கும்நாளில், வேய்ங்குழல்போல இனிய சொல்லையுடைய மனைவியர்கள் கருவினிடமாக இளவயதுள்ள இடபமென்று சொல்லத் தக்க சில புதல்வர்களைப் பெற்ருன் என்றவாறு.

பெற்றபி னிறைமகன் பெண்மகா ரெமக்
குற்றில ரென நினைந் தொன்ற லாதன
நற்றவ மிழைப்பவோர் மனைவி நாண்மலர்ப்
பொற்றொடி யெனவொரு திருவைப் பூத்தனள். 15

இ - ள் : புதல்வர்களைப் பெற்றபின் அவ்வரசன் பெண் குழந்தைகள் நமக்கு உண்டாகவில்லையே என்று கருதிப் பல பல நல்ல தவங்களைச் செய்ய, ஒரு மனைவியானவள் தாமரைப்பூவில் வீற்றிருக்கும் இலக்குமி போன்ற ஒரு புதல்வியைப் பெற்ருள் என்றவாறு.

வேறு

தாமந்திகழ் தருமொய்ம்பொடு தழைசித்திர வருமன்
சீமந்தனி யெனவேயருள் செல்விக்கக மகிழ்வால்
நாமந்தனை மறைநீதியி னன்னுளிடை நவிலா
வாமந்திக மூமையைத்தரு மிமவானின் மகிழ்ந்தான். 16

இ - ள்: வெற்றிமாலை ஒளிசெய்து கொண்டிருக்கும் புயங்கள் பூரிக்க மனப்பூரிப்பையுமுடைய சித்திரவருமன் தான்பெற்ற புதல்விக்கு மன மகிழ்ச்சியுடன் வேதவிதிப்படி நல்லநாளில் சீமந்தனி எனப் பெயர்கூறி அழகுள்ள உமையவளைத் தனக்குப் புதல்வியாகப் பெற்ற மலையரையன் போல மகிழ்ச்சி அடைந்தான் என்றவாறு.

மதவெங்களி விறல்யானையை மன்னன்றரு மேவற்
குதவுந்தன துழையோர்களை யுயர்சோதிட நூலின்
விதமொன்றிய மறைவாணரை யழைமின்னென விடுப்பக்
கதமொன்றிய காலிற்கடி தேகிக்கொடு வரவே. 17

இ - ள்: மதத்தினால் வெவ்விய மதங்கொண்டிருக்கிற வெற்றி மிக்க யானைப்படையுள்ள அவ்வரசன் தான் உத்தரவுசெய்யும் ஏவலருக்குத் தடையில்லாமல் உதவுகின்றவர்களாகிய ஏவலாளிகளை நோக்கி, உயர்ந்த சோதிடசாத்திர வகையெல்லாம் அறிந்த சாத்திரிகளை அழைத்துக் கொண்டுவாருங்களென்று அனுப்ப, அவர்கள் சண்டமாருதம்போல அதி விரைவாகச்சென்று அழைத்துக்கொண்டுவர என்றவாறு.

கண்ணுற்றன னவரைப்பல கணிதத்துறை வல்லீர்
பெண்ணிற்கணி யெனயானருள் பெண்ணின்றிற னெல்லாம்
மண்ணிற்கரு தொண்ணுநிலை வருசோதிட விதியால்
எண்ணித்துணி வுறுசாதக மிடுகென்றிறை சொன்னான். 18

இ - ள்: வந்த சோதிட சாத்திரிகளைப்பார்த்து பலவாகிய சோதிட சாத்திரம் உணர்ந்தவர்களே! பெண்களுக்கு ஆபரணம்போல நான் பெற்ற பெண்ணின் திசாபலன்களையெல்லாம் இவ்வுலகில் அறிதற்கரிய நிலைமை யினையுடைய சோதிட சாத்திரவிதியால் ஆராய்ந்து நிச்சயமான சாதகம் எழுதுங்கள் என்று அவ்வரசன் கூறினான் என்றவாறு.

என்னுமுன மொருவேதிய னவடன்னிரு வினையும்
உன்னுநிலை பெறுசாதக முற்றும்படி யெழுதிப்
பொன்னார்கழ லணிமன்னவ புவிமாமகள் புணரும்
மன்னவிவை கேண்மோவென வழுவாதுரை செய்தான். 19

இ - ள்: இவ்வாறு கூறுவதற்குமுன் ஒரு பிராமணன் அந்தப் பெண்ணினுடைய இருவினையையும் ஆராய்ந்து நிலைபெற்ற சாதகமுங் குறைவில்லாம லெழுதிப் பொன்னால்செய்யப்பட்ட வீரகண்டை அணிந்த மன்னவனே! பெருமைபொருந்திய பூமிதேவி சேரும்படியான மன்னவனே! இவை கேளென்று தவறாமல் சொன்னான் என்றவாறு.

வேறு

மணத்தினி னுமையாண் மகப்பெறற் கதிதி வடிவினி லுயர்தம யந்தி
குணத்தினிற் கமலை கற்பினிற் சனகி கொழுங்கலைக் கியன்மக ளென்னப்
பணத்துறை யுலக முழுவதும் புகழும் படிபதி னயிரம் பருவந்
தணப்பில ளாகக் கொழுநனே டுறையுந் தராபதி நின்மக ளென்றான். 20

இ-ள்: அரசனே! உமது புதல்வி, கலியாணத்தில் உமையவள் என்று சொல்லத்தக்கவள். புதல்வர்களைப் பெறுவதில் அதிதியென்று சொல்லத்தக்கவள். அழகில் உயர்ந்த தமயந்தி என்று சொல்லத்தக்கவள். நற்குணத்தில் திருமகள் எனத்தக்கவள். பதிவிரதா தருமத்தில் சீதை எனத்தக்கவள். செழுமையுள்ள கலைகளுக்குக் கலைமகள் என்று சொல்லத் தக்கவள் என்று சொல்லி ஆதிசேடன் முடியில் பொருந்திய இவ்வுலகம் முழுவதும் புகழும்படி பதினயிரம் ஆண்டு கணவனைவிட்டுப் பிரியாமல் வாழ்ந்துகொண்டிருப்பாள் என்றவாறு.

என்றவ னுரைத்த சாதகப் பொருளி
னியல்பெலாங் கேட்டுள மகிழ்ந்து
பொன்றழை திணிதோட் புரவல னவற்குப்
பொருணனி கொடுத்தன னிருப்பப்
பின்றையு மொருவ னேழிரண் டாண்டிற்
பிறைநுதன் மங்கல மிழக்கும்
வென்றிவே லிறைவ வென்றலு நிருபன்
வெய்துயிர்த் தணைமிசை விழுந்தான். 21

இ-ள்: இவ்வாறு அந்தப் பிராமணன் சொல்லிய சாதகப் பொருளினியல்பையெல்லாம் கேட்டு மனமகிழ்ந்து அழகு நிறைந்த திண்ணிய தோளையுடைய அரசன் அவனுக்கு மிகுந்த பொருள் கொடுத்து மகிழ்வுடன் இருக்க, மற்றொரு பிராமணன் சாதகம்பார்த்து வெற்றிமிக்க வேலாயுதத்தையுடைய அரசனே! இப்பெண்ணானவள் பதினன்காவது ஆண்டில் மங்கிலியம் இழப்பாளென்று சொன்னன். அவ்வாறு கூறவே அவ்வரசன் பெருமூச்சு விட்டுக்கொண்டு சோகத்தினல் இருக்கையில் விழுந்துவிட்டான் என்றவாறு.

பைவிரி யரவ மிடிவிழ வெருவும் பான்மைபோ லோரிரு கன்னல்
வெய்துயிர்த் திருந்து கணிதரைப் போக்கி விதிவலி யறிகுவ மென்ன
நெய்தவழ் வடிவேற் புரவல னுளத்தி னினைவுட னெழுகுமந் நாளின்
மைவிழிச் செவ்வாய் வெண்ணகை யவட்கு மங்கையம் பருவம்வந் ததுவே. 22

இ-ள்: படத்தை விரிக்காநின்ற பாம்பானது இடிவிழுந்தால் பயந்து சுருண்டு விழுந்தன்மைபோல இரண்டு நாழிகைவரைக்கும் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்து பின்பு ஒருவாறு தெளிந்து சோதிடர்களை

அனுப்பிவிட்டு ஊழ்வினையின் வன்மையை அறிவோமென்று பகைவரது உதிரத்தில் தவழும்படியான வடித்த வேலையுடைய அவ்வரசனானவன் மனதில் நினைவுடன் இருக்கும்நாளில் மையணிந்த கண்களையும், சிவந்த வாயினையும், வெண்மைநிறம் பொருந்திய தந்தங்களையுமுடைய அந்தக் கன்னிகைக்கு அழகிய மங்கைப்பருவம் வந்தது என்றவாறு.

மங்கையம் பருவம் வருதலு மவளை வழிபடு சேடியர் குறுகித்
திங்கள்வா ணுதனீ யேழிரண் டாண்டிற் றிருவிழந் திருக்குவை யென்ன
அங்கவள் வெருவி யாக்கிய வர்க்கி யாகிய முனிவரன் மனைவி
தங்கிய சாலை சென்றவட் டொழுது தன்னுறு துயர்நிலை சொன்னாள். 23

இ - ள்: மங்கைப்பருவம் வந்தமாத்திரத்தில் அவளைப் பூசிதை செய்துகொண்டிருக்கிற தோழிகள் வந்து, இளந்திங்கள்போல வளைவாகிய ஒளிதங்கிய நெற்றியினையுடையவளே! நீ பதினான்காமாண்டில் மங்கிலியம் இழந்துவிடுவையென்று சொல்ல, அதைக்கேட்டு அவள் பயந்து யாக்கியவர்க்கி முனிவர் பத்தினியாகிய மயித்திரை என்பவள் இருக்கும் பன்னசாலைக்குப் போய் அவளைத் தொழுது தனக்கு நேரிட்டிருக்கிற துயர்நிலையைக் கூறுவாள் என்றவாறு.

திரு என்பது ஈண்டு மாங்கலியத்திருவை.

அருந்ததி யனைய கற்புடை யன்னா யடியனே னுரைப்பதொன் றுளதால்
பெருந்திரு விழப்பன் யானெனக் கணிதர் பிதாவுடன் உரைத்தன ரதனால்
திருந்திய நின்னை வந்தடைந் தனனித் தீவினைப் பிணியகற் றுதற்கோர்
மருந்தருள் கென்றென் றடிதொழு திரப்ப வரமயித் திரையும்பின்
னுரைத்தாள். 24

இ - ள்: அருந்ததியை அனைய கற்பினையுடைய தாயே! அடியேன் சொல்லுவதோர் உரையுளது. அது என்னவெனில் நான் பதினான்காம் ஆண்டில் மங்கிலியம் இழப்பேனென்று சோதிடர்கள் என் பிதாவினிடம் சொன்னார்கள். அதனால் கற்பினால் மேன்மைபெற்ற உன்னைச் சரணென்றடைந்தேன். இந்தத் தீவினையாகிய நோயை நீக்குவதற்கு ஒரு மருந்தைச் சொல்லியருளுகவென்று திருவடியை வணங்கியிரப்பச் சிறப்புள்ள மயித்திரை பின்பு கூறுகிறாள் என்றவாறு.

புரிகுழ லணங்கே சோமவா ரத்திற் புனிதநீ ரினிதுட னாடிப்
பரிவுட னுணவு முதலிய துறந்து மோனமாய்ப் பவித்திரை யாகித்
தெரிமலர் கொணர்ந்து பரமனோ டுமையைச் சிவாகம விதிமுறை வழுவா
துரியபூ சனைசெய் தருமறை யவர்க்கு முவப்புட னன்னமு மளித்தே. 25

இ - ள் : கட்டுப்பட்ட அளகத்தையுடைய பெண்ணே! சோம வாரத்தில் பரிசுத்தமாகிய நீரில் நீராடி வெறுப்பின்றி உணவு முதலியவை களை நீக்கி, பேச்சின்றித் தூயளாய் மலர்களை ஆய்ந்து கொண்டுவந்து பரமசிவனுடன் பார்வதி தேவியாரையும் சைவாகமவிதி தவறுமல் உரிய பூசைசெய்து பிராமணர்கட்கு மகிழ்வுடன் உணவும் அளித்து என்றவாறு.

இன்னண மரனை யேத்தநீ வழிபட் டீசனே யென்னுறு துணையே
யுன்னுடை யருளே வேண்டுவ னென்ன வுரைத்துநல் விரதமு முடித்தால்
மன்னிய விரதந் தரும்பெரு நலத்தான் மாதுநின் கணவனுக் குரிய
தன்னுடை ஞால மல்லது வேண்டுந் தராதல மளவில வுளவாம். 26

இ - ள் : இவ்வாறு பரமசிவனை வழிபட்டுத் துதிசெய்து ஈசனே! எனக்குப் பொருந்திய துணையே! தேவரீருடைய திருவருளையே விரும்பு கிறேனென்று சொல்லி நீ நல்ல விரதத்தையும் நிறைவேற்றினுல் நிலை பெற்ற இவ்விரதந்தரும் பெரிய பலத்தினுல், மாதே! உன்னுடைய கணவ னுக்குரிய சொந்தநாடுமல்லாமல் அவன் விரும்பும் நாடு பல உண்டாகும் என்றவாறு.

விரதமுடித்தலாவது உத்தியாபனஞ் செய்தலாம்.

சந்தமு மலரு மரிசனத் துடனே சாத்தினுல் வளம்பல தழைக்கும்
நந்தலிற் றூப மளித்திடி னுடல நறுங்கடி கமழுமதல்லா
னந்தமி றீப மளிக்கினே ருளவா மவியளித் திடினுண வுளதாம்
பைந்தொடி பாகு வெள்ளிலை யளிக்கிற் பதுமமா ளிகைமயில் சேரும். 27

இ - ள் : சீமந்தனியே! மஞ்சளுடன் சந்தனமும் மலர்களும் சாத் தினுல் பல வளங்கள் உண்டாகும். கெடுதலில்லாத தூபங்கொடுத்தால் உடல் நல்ல வாசனை கமழ்ந்துகொண்டிருக்கும். இதுவுமல்லாமல் குறைவு படாத தீபங்கொடுத்தால் அழகு உண்டாகும். அன்னம் படைத்தால் ஆகாரம் உண்டாகும். பாக்கும் வெற்றிலையும் நிவேதித்தால் தாமரை மல ராகிய கோயிலில் வீற்றிருக்கும் திருமகள் கருணைகிடைக்கும் என்றவாறு.

அஞ்செழுத் தோதி னட்டமா யோக மடைந்திடு மாகுதி பண்ணின்
நெஞ்சினி னினைத்த கருமங்கள் யாவு நினைத்தவா றெளிதினிற் கூடும்
வஞ்சிநுண் ணிடையா யந்தணர்க் கடிசின் மகிழ்வுடன் வழங்கின்மற் றதனுல்
எஞ்சலிற் றகுதிக் கடவுள ரெவரு மிருங்களி யெய்துவ ரறிநீ. 28

இ - ள் : திருவைந்தெழுத்தைச் சபித்தால் அட்டாங்கயோகம் சித்தியாம். சிவயாகஞ்செய்தால் மனதில் எண்ணிய காரியங்களெல்லாம் நினைத்தபடி எளிதில் கைகூடும். பூங்கொடிபோல நுண்ணிய இடையை உடையவளே! மகிழ்ச்சியுடன் முனிவர்களுக்கு உணவுகொடுத்தால் அதனுல்

குறைவில்லாத மேம்பாட்டினையுடைய தேவர்களெல்லோரும் மிக்க களிப் படைவார்களென்று நீ அறிவாய் என்றவாறு.

என்னுரை வழாமல் யான்மொழிந் தருளு மிந்தவா றிளமதிக் கொழுந்து
மன்னுசெஞ் சடில வானவன் றன்னை மாதுடன் வழிபடத் துணிந்தால்
உன்னுடை யுளத்திற் கவலையுந் துயரு மொழிந்திடு முண்மையீ தென்னுப்
பன்னருஞ் சிறப்பிற் பார்ப்பனி யுரைத்துப் பைந்தொடி யேகெனப்
பணித்தாள். 29

இ-ள்: என் சொல்தவறாமல் நான் கூறியவாறு இளந்திங்கட் கொழுந்துபொருந்திய செஞ்சடையையுடைய சிவபெருமானைப் பார்வதியாருடன் வழிபாடுசெய்யத் துணிந்தால் உன்னுடைய மனவியாதியும் துயரும் நீங்கிவிடும்; இது உறுதியென்று சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய பிராமணப் பெண்ணாகிய மயித்திரை என்பவள் சொல்லிப் பசிய பொன்னாற் செய்யப்பட்ட வளையலணிந்த கையினையுடையவளாகிய மாதே! நீ செல்லென்று உத்தரவு செய்தாள் என்றவாறு.

தொழுகுலத் தணங்கு புகன்றவை கேட்டுச் சோமவா ரந்தொறுஞ் சிவனை
வழுவற வுமையோ டாகம விதியின் மடவரல் வழிபடு நாளின்
எழுவுறழ் திணிதோ ணளன்றரு குமர னிந்திர சேனன்மா மதலை
முழுவலி பெறுசந் திராங்கத னென்போன் முருகனிற் கட்டழ குடையோன்.

இ-ள்: பிராமணகுலப் பெண்ணாகிய மயித்திரை சொன்னவைகளைக்கேட்டுச் சீமந்தனியென்பவள் சோமவாரந்தோறும் குற்றமில்லாமல் ஆகமவிதிப்படி பார்வதிதேவியாருடன் பரமசிவனைப் பூசைசெய்யும் நாளில் எழுவாகிய தூணையொத்த பலம்பொருந்திய தோள்களையுடைய நளமகாராசன் பேரனும், இந்திரசேனனுடைய பெருமையுள்ள மகனுமாகிய மிக்க பராக்கிரமம் பொருந்திய சந்திராங்கதன் என்பவன் முருகக்கடவுளைப் போல மிக்க அழகுடையவன் என்றவாறு.

அன்னவன் றனக்குச் சித்திர வரும னரியமா தவத்தினி னீன்ற
தன்னுறு தநயை வனிதையர்க் கணங்காய்த் தயங்குசீ மந்தனி யென்னுங்
கன்னியை மகிழ்ந்து கொடுத்தலும் விதியிற் கடிமண முடித்துநன் னலங்கள்
இன்னமு தாகச் சிறிதுநா ணுகர்ந்தங் கிருந்தன னிருந்திடு நாளில். 31

இ-ள்: அத்தன்மையுள்ள சந்திராங்கதன் என்பவனுக்குச் சித்திர தருமனென்னும் அரசன் பெருமைபொருந்திய அரிய தவத்தினாற் பெற்ற தன்னுடைய புதல்வியாகிய மாதர்கட்கெல்லாம் தெய்வம்போல் விளங்கும் சீமந்தனியென்னும் கன்னிகையை மகிழ்ச்சியுடன் கொடுக்கவும், சாத்திர விதிப்படி மணஞ்செய்துகொண்டு சிலநாள் நல்ல இன்பங்களை இனிய

அமுதம்போல அனுபவித்துக் கொண்டிருந்தான். அவ்வாறு இருக்கும் நாளில் என்றவாறு.

வேறு

தருவென வழங்கு வண்கைச் சந்திராங் கதனு நண்பின்
மருவிய தோழர் தாமு மணிநிற யாணர் நன்னீர்
பெருகிய யமுனை யாற்றிற் பெயர்தரு தோணி மீது
வெருவில ராகி யன்னோ ரேறினர் விதியின் கோட்பால். 32

இ - ள்: கற்பகத்தருப்போலக் கொடுக்கத்தக்க வளப்பம்மிக்க கையினையுடைய சந்திராங்கதனும் நட்புடன் பொருந்திய தோழர்களுமாகிய இவர்கள் மணிநிறம் பொருந்திய அழகிய நல்ல நீர்பெருகுகின்ற யமுனை ஆற்றினிடத்தில் செல்லுகின்ற தோணியின்மேல் விதிவசத்தால் அச்ச முறுதவர்களாய் ஏறினர்கள் என்றவாறு.

திரையெடுத் தெறித லானுஞ் செலவிடு கடுப்பி னாலும்
நிரைநிரை மாந்தர் தொக்கு நெருங்குத லானும் நீருள்
விரைவொடு துவன்றிப் பாயும் வேகமிக் கிடுத லானுங்
கரைகடப் பரிதா யோடங் கவிழ்ந்தது கவிழ்த லோடும். 33

இ - ள்: அலைகளெடுத்து வீசுவதினாலும் செல்லும்படி விடுகிற விரைவினாலும் வரிசையாக மனிதர் சேர்ந்து நெருங்கியிருப்பதினாலும் நீரினிடத்து விரைவுடன் பொருந்திப்பாயும் வேகமிகுந்து தள்ளுதலினாலும் கரை கடப்பதற்கரிதாய்ப் படகானது கவிழ்ந்த மாத்திரத்தில் என்றவாறு.

சந்திராங் கதனுந் தோழர் தாங்களும் புனலி னாழ
வெந்திற லிடங்க ரந்தத் தோழரை விழுங்க வேந்தன்
முந்தைநல் வினையின் பான்மை முனைத்தெழ வுரகர் வாழும்
அந்தமில் பிலத்துப் புக்கோ ரருநதிக் கரையைச் சார்ந்தான். 34

இ - ள்: (அந்தத் தோணியிலிருந்த) சந்திராங்கதனும் தோழர்களும் நீரினுள் மூழ்கிவிட (அவ்வாறு மூழ்கியவர்களுள்) வெவ்விதான வலியுள்ள முதலைகள் அந்தத் தோழரை விழுங்கின. (சந்திராங்கதன் என்னும்) அரசனோவென்றால் முன்பிறவிகளில் செய்த அறமானது முன்வந்துதவ நாகங்கள்வாழும் முடிவில்லாத பிலத்துக்குட்போய் அவ்விடத்திருக்கும் அரிய ஆற்றின் கரையைச் சார்ந்தான் என்றவாறு.

நதியினி னாடுகின்ற நாகர்த மகளிர் நோக்கி
அதிசய மெய்தி யின்னோ னார்கொலென் றருகு சேர்ந்து
புதியவன் றன்னைத் தங்க டக்ககன் புரவு பூண்டு
வதிதருங் கோயி லாங்கண் வருகெனக் கொண்டு புக்கார். 35

இ - ள்: அந்த ஆற்றில்விளையாடுகின்ற நாககன்னியர்கள்பார்த்து ஆச்சரியமுற்று அவன் யாவனென்று அவனருகில்வந்து விருந்தினனாய் வந்தவனைத் தங்கள் அரசனாகிய தட்சகன் காவல்கொண்டு இருக்கிற அரண்மனையினிடத்திற்கு வாவென்று அழைத்துக்கொண்டு போனார்கள் என்றவாறு.

புக்கவ ரவனை வாயிற் புறத்தினி னிறுவிப் போகித்
தக்ககன் றிருமுன் காளை யடைந்தமை சாற்ற லோடும்
அக்கணத் தவனை நீவி ரழைமின்க ளென்ன மாதர்
மக்களிற் றிலக வீண்டு வருகென வேந்தர் வேந்தன். 36

இ - ள்: சந்திராங்கதனை அழைத்துக்கொண்டு போனவர்கள் அவனை வாயிலினிடத்து நிறுத்திவிட்டுத் தாங்கள்மட்டும் உள்ளேசென்று தட்சகன் சமூகத்தில் சந்திராங்கதன் வந்திருப்பதைச் சொல்லவும் அப்பொழுதே அழையுங்கள் என்று சொல்ல அந்தப் பெண்கள்போய் மனிதர்கட்குள் திலகம்போன்றவனே! இங்கு வாவென்று அழைத்துக்கொண்டு போக, போன அவ்வரசன் என்றவாறு.

ஆயிரந் தபனர் தொக்காங் கவிர்கதிர் சொரிவ தேய்ப்பப்
பாயொளி மவுலி தோறும் பருமணி யிமைக்க வைகும்
நாயகன் றன்னை நாக மடந்தையர் நடுவுட் டோன்றிச்
சேயுயர் விசும்பிற் றேவிற் பொலிதரு தேவைக் கண்டான். 37

இ - ள்: ஆயிரம் சூரியர்கள் ஒன்றாகச்சேர்ந்து விளங்குகின்ற கதிர்களைச் சொரிவதை ஒப்பாகப் பரவுகின்ற ஒளியையுடைய பணமகுடந்தோறும் பருத்த மாணிக்கம் ஒளிவிடும்படி வீற்றிராநின்ற தட்சகனென்னும் நாகராசனாகிய நாககன்னியர் கூட்டத்தினடுவில் தோன்றி மிகவும் உயர்ந்ததாகிய விண்ணுலகிலிருக்கும் இந்திரன்போல் விளங்குகின்ற தேவனைக்கண்டான் என்றவாறு.

கண்டடி தொழுது நின்ற காலையக் காளை தன்னைத்
திண்டிறல் வேலினாய் நின் றேயமுங் குலனு மற்றும்
ஒண்டிறற் றாதை பேரு முரைத்தியென் றுரைத்த லோடும்
முண்டக முகைபோற் செங்கை கூப்புபு மொழிய லுற்றான். 38

இ - ள்: கண்டு தன் பாதத்தை வணங்கி நின்றபோது தட்சகராசன் அந்த அரசகுமாரனைப் பார்த்துப் பலமும் வெற்றியுமுள்ள வேலாயுதத்தையுடையவனே! உன்னுடைய நாடும், குலமும், எங்கும் விளங்கும்படியான வெற்றியையுடைய உன் தகப்பன் பெயரும் சொல்லென்று சொன்னவுடன் தாமரை அரும்புபோல் கைகளைக் குவித்துக்கொண்டு சொல்லத் தொடங்கினான் என்றவாறு.

நெடுங்கடல் வளாக வைப்பி னிடதா டெனது நாடு
கடுங்கலிக் கிகலாய் வந்த மன்னவன் கருத லார்கள்
அடங்கிடப் பொருத வைவே லாற்றலா னறத்தின் மிக்கான்
நடுங்கலின் மனத்துச் செங்கோ னளனென வுளனோர் வேந்தன். 39

இ - ள்: நெடிய கடல்சூழ்ந்த உலகினில் நிடதநாடென்று கூறப்படுவது என்னுடைய நாடு. கொடியதாகிய பாவத்துக்குப் பகையாய் வந்த அரசனுக்குப் பகைவராயிருப்பவர்கள் அடங்கத்தக்கதாக யுத்தஞ்செய்து வென்ற கூர்மைதங்கிய வேலாயுதம் ஏந்தும் ஆற்றலுள்ளவனும், அறத்தில் மிகுந்தவனும், நடுங்குதல் இல்லாத மனத்தையுடையவனுமாகியசெங்கோல் என்னும் நீதிசெலுத்துகின்ற நளனென்ற பெயரையுடைய ஓர் அரசன் உளன் என்றவாறு.

கொடையினி னறிவின் மானக் குலத்தினிற் புகழி னேரின்
அடையலர்ச் செருக்கும் வைவே லாற்றலி னொருவ ரொவ்வான்
தொடையணிந் துடைய தேவி தொழத்தகு வடமீ னென்ன
நடையறி புலவ ரேத்தி நவில்தம யந்தி யென்பாள். 40

இ - ள்: அவ்வரசன் மேலும் எத்தகையவன் என்றால் ஈகையிலும் அறிவிலும் மானமுள்ள குலத்திலும் புகழிலும் அழகிலும் பகைவர்களைப் போர்செய்து கொல்லத்தக்க ஆற்றலிலும் தனக்கு ஒருவருமொவ்வாதவன். மாலைசூட்டிய இவ்வரசன் மனைவியானவள் எல்லோரும் வணங்கத்தக்க அருந்ததியென்று ஒழுக்கமாவது இத்தன்மையதென்று அறிந்து நடக்கும் அறிஞர்களாகிய பெரியோர்கள் புகழ்ந்து சொல்லத்தக்க தமயந்தி என்பவள் என்றவாறு.

அவடிரு வயிற்றின் வந்த வரும்பெறற் புதல்வ னயை
திவள்பரி நிருப னிந்திர சேனன்மற் றெனது தாதை
கவளமால் யானைச் சந்தி ராங்கதப் பெயரி னேன்யான்
தவளவாண் முறுவற் சீமந் தனியைவேட் டுறையு நாளில். 41

இ - ள்: அந்தத் தமயந்தியின் அழகிய கருவினின்றும் பிறந்த பெறற்கரிய புதல்வனாகிய இடக்குச்செய்யாமல் வீரவசப்பட்டுச் செல்லத்தக்க குதிரைப்படையையுடைய இந்திரசேன மன்னன் என்னுடைய பிதா. போர்முனையில் பெரிய யானையை ஒத்தவனாகிய சந்திராங்கதனென்னும் பெயரையுடைய நான் வெண்மை நிறந்தங்கிய ஒளியுள்ள பற்களையுடைய சீமந்தனியை மணம்செய்துகொண்டு வாழும் நாளில் என்றவாறு.

தோழரும் யானும் வாவு துணைபரி கடாவு மாபோல்
ஊழுறு வினையா லொன்று முணர்கிலா தோட மேறி
ஆழுநீர் யமுனை யாற்றுள் விடுதலு மம்பி தாழ்ந்து
காழுறு கழையுந் தள்ளிக் கவிழ்ந்தது கவிழ்ந்த வேலை. 42

இ - ள்: தோழர்களும் நானும் தாவுகின்ற விரைவினையுடைய குதிரையைச் செலுத்துவதுபோலப் பழைமையாகப் பொருந்திய வினையினால் ஒன்றும் எண்ணாமல் தோணியிலேறி ஆழ்ந்த நீரையுடைய யமுனை ஆற்றில் அதிவிரைவாகச் செல்லும்படி விடவும் அந்தத்தோணி தாழ்ந்து வயிரம்பொருந்திய மூங்கிற்கோலையுந் தள்ளிக்கொண்டு கவிழ்ந்துவிட்டது. அப்படிக் கவிழ்ந்தபோது என்றவாறு.

இறந்தனர் நண்ப ரெல்லாம் யானினை யெய்து மூழால்
துறந்துயிர் விடாது வந்து தொழுதன னென்று கூற
அறந்தரு சிந்தை யானு மதிசயித் தரசே நீங்கள்
திறந்தெரிந் தேத்துந் தேவன் யாரென்றான் செம்மல் சொன்னான். 43

இ - ள்: என்னுடைய தோழர்களெல்லோரும் இறந்துபோனார்கள். நான் உன்னை அடையும்படி ஊழினால் உயிர்துறந்துபோகாமல் வந்து பணிந்தேனென்று சொல்ல, அறந்தங்கிய மனத்தையுடைய நாகராசன் ஆச்சரியமுற்று, அரசனே! நீங்கள் உண்மையறிந்து துதிசெய்யும் கடவுள் யாவரென்றான். அதற்குப் பெருமையில் சிறந்தவனாகிய சந்திராங்கதன் கூறுகின்றான் என்றவாறு.

வேறு

யாவ னொருவ னெவ்வுயிரு மெல்லா வுலகங் களுமுடையான்
யாவ னொருவன் கடவுளருக் கெல்லா மிறைமை பூண்டுள்ளான்
யாவ னொருவன் றிரிபுரமு மெரியக் கனகச் சிலைகுனித்தான்
யாவ னொருவன் விடநுகர்ந்தா னவனே யெங்கட் கிறையோனே. 44

இ - ள்: எல்லா உயிரையும் எல்லா உலகங்களையுமுடைய ஒருவர் எவரோ, தேவர்களுக்கெல்லாம் தேவராயிருக்கும் ஒருவர் எவரோ, திரிபுரங்களும் எரியும்படிப் பொன்மலையை வில்லாக வளைத்த ஒருவர் எவரோ, நஞ்சுண்டவர் எவரோ அவரே எங்களுக்குக் கடவுள் என்றவாறு.

என்று மெவனி ராசதத்தி னயனை யீன்று படைப்பிப்பான்
என்று மெவன்சாத் துவிதத்தி னரியை யீன்று புரப்பிப்பான்
என்று மெவனே தாமதத்தி னரனை யீன்று துடைப்பிப்பான்
என்று மவனே யெங்குலத்தை யிணைத்தா ணீழ லளிக்குமால். 45

இ - ள் : எந்நாளும் இராசதகுணத்தினிடமாகப் பிரமதேவனை உண்டாக்கி இவ்வுலகங்களைப் படைக்கச் செய்கின்றவரெவரோ, எக்காலமும் சத்துவகுணத்தினிடமாகத் திருமாலை உண்டாக்கிக் காக்கச் செய்கின்றவரெவரோ, எக்காலமும் தாமதகுணத்தினிடமாக அரனையுண்டாக்கி உயிர்களை அழிக்கச் செய்கிறவரெவரோ அவரே எக்காலமும் எங்களைத் தங்களுடைய திருவடிநீழலில் வைத்துக்காப்பார் என்றவாறு.

வேறு

ஆரணந் தனக்கு முன்னை யாரண மாகி மன்னும்
காரணங் களுக்கு முன்னைக் காரண மாகித் தோன்றும்
பூரண வொளிகட் கெல்லாம் பூரண வொளியாய் நின்று
நாரண னுணர்கி லாத நாதன்யா முணரு நாதன். 46

இ - ள் : வேதங்கட்கெல்லாம் முதல் வேதமாகியும் நிலைபெற்ற காரணங்கட்கு முதற்காரணமாகியும் காணப்படுகிற பூரண ஒளிகளுக்கெல்லாம் பூரண ஒளியாயுமிருந்து திருமாலினாலும் அறியமுடியாத நாதன் நாங்கள் வழிபடும் நாதனவான் என்றவாறு.

வானமே முதலாம் பூத வகைதொறு முள்ளீ டாகித்
தானரு ளுயிர்கட் கெல்லாஞ் சான்றுமா யவற்றி னெல்லாம்
ஆனபற் றொன்று மின்றி யரியதன் விஞ்சை யாலே
ஊனமி லுலக மெல்லாந் தன்வயத் தொழுக நின்றும். 47

இ - ள் : விண்முதலாகிய ஐம்பூதங்கள்தோறும் அவைகட்குள்ளீடாகியும் தாம் அருளப்பட்ட உயிர்களுக்கெல்லாம் சாட்சியாகியும் அவைகளிலெல்லாமாகிய பற்றுக்களில் தமக்கொரு பற்றுமில்லாமல் அருமையாகிய தன் வல்லமையினால் கெடுதலில்லாத உலகமெல்லாம் தமது வசப்பட்டு நடக்க நின்றும் என்றவாறு.

ஐம்பூதங்களுக்குத் தனித்தனியே உள்ளீடாயிருப்பது:- நிலத்தில், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமாயும், நீரிடத்தில் நாற்றம் நீங்கலாக ஏனை நான்காயும், தேயுவில் சுவை, நாற்றம் நீங்கலாக மூன்றாயும், வாயுவில் ஓசை, ஊறாயும், ஆகாயத்தில் ஒலியாயுமிருப்பது.

ஒருவனாய் முதல்வ னாகி யுறுவரங் கொடுப்போ னாகி
மருவுமுக் குணங்க ணீத்து மனத்திடை நினைத்தற் கொண்ணாத்
திருவரு ளுடைய வுண்மைத் திகழொளி யாய தெய்வங்
குருபர னருளின் யாங்கள் வழிபடக் குழையுந் தேவே. 48

இ - ள் : தனக்கு மேலொரு கடவுளில்லாமல் தானொருவனே கடவுளாகியும் எல்லாவற்றிற்கும் காரணனாகியும் அன்பர்கட்கு மிக்க வரங்

கொடுப்பவனுகியும் பொருந்திய முக்குணங்களையும் நீக்கி மனதினிடத்தில் நினைத்தற்கரிய திருவருளையுடைய உண்மையாய் விளங்குகிற ஒளியாயும் இருக்குந்தெய்வமே குருபரனருளினுலே நாங்களாராதனை செய்யத் திருவுளமிரங்கும் தெய்வமாகும் என்றவாறு.

நினைவரும் பாத கங்க ளைந்தையு நீக்கி யின்பக்
கனைகட லுளையப் பண்ணுங் கண்ணுதல் கருத்தி லாது
தினையள வடியர் செய்த சிற்றியற் பூசை யேனும்
பனையள வாகக் கொள்ளும் பரமனெம் பரம னுவான். 49

இ-ள்: எண்ணுதற்கரிய பஞ்சமாபாதகங்களையும் அடியார்க்கு நீக்கிப் பேரின்பமாகிய கடலினிடத்துப் பொருந்தச்செய்யும் பரமசிவனும் எண்ணமில்லாமல் தினையளவாக அடியார்கள் செய்வது சிறிய இயல்பினையுடைய பூசையேயாயினும் பனையளவாகக் கொள்ளும் பரமனுமானவனே எங்கட்குக் கடவுளானவர் என்றவாறு.

கனை-ஒலி. சிற்றியற்பூசையாவது ஆகமவிதியின்றிச் செய்யும் பூசை.

கங்கையை முடியிற் சூட்டிக் கவுரியைப் பாகம் வைத்துப்
பொங்கர வங்க டம்மைப் புரிகுழை யணிந்து பாதச்
செங்கம லத்தை வேதச் சிரத்தினி திருத்தித் தேவர்
அங்கைகள் கூப்ப நின்ற வவனெம்மை யளிக்குந் தேவே. 50

இ-ள்: கங்கையைத் திருமுடியிலணிந்து பார்வதியையிடப்பாகத்தில்வைத்து விளங்குகின்ற பாம்புகளை விரும்புங் குண்டலமாகத் திருச்செவியில் தரித்துத் திருவடித்தாமரைகளை வேதமுடியில்வைத்துத் தேவர்களெல்லோரும் அழகிய கைகளைக்குவித்துத்தொழ இருக்கும் தேவனே எங்களைக் காக்குந் தேவனும் என்றவாறு.

அத்துவா வென்னுந் தூய வருமணித் தவிசி னங்க
ணுத்தம மூர்த்தி யாகி யுயர்குணங் கடந்து வைகும்
நித்தனே யெமக்கு நாத னீண்முடி வேந்தே யென்று
கொத்தலர் நறிய பைந்தார்க் கோமக னுரைத்த லோடும். 51

இ-ள்: ஆறத்துவாக்களாகிய தூயதாகிய அழகிய இருக்கையினிடத்தில் உத்தம மூர்த்தியாகிய உயர்ந்த குணங்களைக் கடந்து இராநின்ற அழிவற்றவனே எங்கட்குக் கடவுள். நீடிய மகுடமுள்ள நாகராசனே! என்று கொத்தாகிய மலர்களால் தொடுக்கப்பட்ட மணந்தங்கிய மாலையணிந்த அரசகுமரன் சொல்லவும் என்றவாறு.

ஆறத்துவாவாவன:- மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை.

சிறியனீ யாயு மென்முன் சிவனது தகுதி யெல்லாம்
அறிவுற மொழித லாலே யருங்களி யெய்து கின்றேன்
வெறிகமழ் தொடையாய் நின்பால் விளம்புவ தொன்றுண் டென்னப்
பொறிவரிப் பகுவாய் நாகர் புரவலன் புகல லுற்றான். 52

இ-ள்: மணங்கமழ்கின்ற பூமாலை அணிந்த அரசகுமரனே! நீ சிறியவனாயிருந்தும் பரமசிவனுடைய பெருமைப்பாட்டினையெல்லாம் என்னிடத்தில் தெரியும்படி சொன்னமையால் மிக்க களிப்பினையடைந்தேன். ஆதலால் உன்னிடத்தில் நான் கூறும் வார்த்தை ஒன்றுண்டென்று பொறிகளையும் வரிகளையும் பகுப்பாகிய வாயினையுமுடைய நாகராசன் கூறுகிறான் என்றவாறு.

இவ்வுல கனைத்துஞ் செய்ய வெரிமணி மயம தாகும்
அவ்விய மகன்ற நாக மகளிரு மரம்பை யன்னார்
துவ்விடு புனல்கள் யாவுஞ் சுரருணு மமுத மாகுந்
திவ்விய பொழில்க ளெல்லாஞ் செழுந்தரு வாகு மன்றே. 53

இ-ள்: இந்த உலகமெல்லாஞ் செவ்விதாகிய தீயையொத்த நிறமுள்ள மாணிக்கமயமாயிருக்கின்றன. பொறாமையாகிய குற்றம் நீங்கிய நாகமகளிரோவென்றால் அரம்பை மகளிரை ஒத்தவர்கள். உண்ணுகின்ற தண்ணீரெல்லாம் தேவருண்ணும் அமிழ்தமாயிருக்கின்றது. திவ்யமான சோலையெல்லாம் செழுமையுள்ள கற்பகச்சோலையாய் இருக்கின்றன எ-று.

நரைதிரை மருவா வெய்ய நமன்றமர் நணுகல் செய்யார்
உரைதரு குரிசி னீயிங் குறைகென வுரைத்த லோடும்
தரைபுக ழெந்தை யையா வெனையன்றித் தனைய ரில்லான்
திரைதரும் பவள வாயென் மனைவியுஞ் சிறிய ளென்றான். 54

இ-ள்: மேன்மைமிக்க அரசகுமரனே! இங்கிருப்பவர்களை நரையும் திரையும் பொருந்தா. யமதூதர்கள் இவ்விடத்துக்கு வரார்கள். ஆதலால் நீ இவ்விடத்திலேதானே தங்கியிருப்பாய் என்று சொன்னவுடன், ஐயா! பூவுலகில் புகழப்பட்ட என் பிதாவானவர் என்னையன்றி வேறு பிள்ளையில்லாதவர். கடலிலுண்டாகும் பவளம்போன்ற செவ்வாயையுடைய என் மனைவியும் சிறியளென்று சொன்னான் என்றவாறு.

அன்றியு மன்னோ ரம்பி கவிழயா றுற்று ளாழ்ந்து
பொன்றின னென்ன வன்றே பொன்றுதல் பொருந்தி னாரோ
கன்றிய காலஞ் செய்த கற்பனை யறிகி லேன்யான்
வென்றிவே லிறைவ வெம்மூர் மேவுவன் விடுத்தி யென்றான். 55

இ - ள் : இதுவுமல்லாமல் ஆற்றில் தோணிகவிழ நான் அதில் அமிழ்ந்து இறந்தேனென்று அப்போதே அவர்கள் இறந்துபோனார்களோ? வெவ்விய காலஞ்செய்த கற்பனை இன்னதென்று நானறிகிலேன். ஆதலால் வெற்றிபொருந்திய வேலையுடைய நாகராசனே! எங்களூருக்கு நான் போகிறேன். உத்தரவுகொடு என்று அரசகுமாரன் சொன்னான் என்றவாறு.

ஈதவ னுரைத்த லோடு மெழுந்தபே ருவகை பொங்கக்
கோதறு குணத்து நாகக் குரிசிலு முழையர்க் கூவி
மேதகு கலன்க ளாடை முதலிய வெறுக்கை மற்றும்
காதலிற் கொணர்தி ரென்று காவலற் களித்துப் பின்னும். 56

இ - ள் : அந்த அரசகுமரன் இந்த வார்த்தை கூறியபொழுது மனதிலுண்டாகிய மிக்க மகிழ்ச்சிபொங்க குற்றமற்ற குணத்தையுடைய நாகராசன் ஏவலாளிகளை அழைத்து மேன்மைமிக்க ஆபரணங்கள் ஆடைகள் முதலாகியவைகளும் பொன்னும் மற்றுமுள்ளவைகளும் ஆசையுடன் கொண்டுவாருங்கள் என்று உத்தரவுசெய்து, அவர்களால்கொண்டு வரப்பட்ட அந்தப் பொருள்களையெல்லாம் அவ்வரசனுக்குக் கொடுத்துப் பின்னும் என்றவாறு.

திரைக்கட லேழுஞ் சூழ்ந்து சேண்முக டளக்கு நேமி
வரைத்தலை தன்னை யொல்லை மண்டல மிட்டு மீளும்
உரைப்பரி தாய வேகத் தொருவயப் பரியு நல்கி
விரைக்களி கலவைச் சாந்தும் வேண்டுவ வெறுப்ப நல்கா. 57

இ - ள் : அலைகளையுடைய ஏழுகடலையும் ஒவ்வொன்றுகச் சூழ்ந்து வந்து அண்டமுகட்டை அளக்கநின்ற சக்கிரவாளகிரியின் சிகரத்தினிடத்தையும் அதிவிரைவாக மண்டலமிட்டு வரும்படியான சொல்லுதற்கரிய வேகத்தையுடைய பலமுள்ள ஒரு குதிரையும் கொடுத்து மணம்தங்கிய கூட்டுவர்க்கஞ்சேர்ந்த சந்தனக்குழம்பும் வெறுக்கும்படி கொடுத்து எ-று.

அளித்தவை சுமப்ப மற்றோ ரயிலெயிற் றரக்கன் றன்னை
விளித்துடன் விடுத்துப் பின்னும் வேறொரு புயங்க ராசன்
களிப்புறு குமரன் றன்னைக் காக்கெனப் பணித்த லோடும்
துளித்தலை முகிலன் னானுந் தொழுதனன் விரைவிற் போகி. 58

இ - ள் : கொடுத்த இப்பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு போவதற்காகக் கூர்மையான பற்களையுடைய ஒரு அசுரனை அழைத்து அவ்வரசனுடன் அனுப்பி, மேலும் வேறொரு நாகராசனை அழைத்துக் களிப்புப்பொருந்திய இந்த அரசகுமரனைப் பாதுகாத்துக் கொண்டுபோ என்று உத்தரவுசெய்தான். அவ்வாறு உத்தரவு செய்தவுடன் துளியாக

முதற்பெயலைச் சொரியும் மேகத்தையொத்த அரசகுமரனும் நாகராசனை வணங்கி விடைபெற்றுக்கொண்டு விரைவுடன் சென்று என்றவாறு.

குரைபுன லதனு ளாக குமரனு நிருதன் றானும்
புரையறு மனத்த ராகிப் புரிவுகொண் டருகிற் போத
விரைபரி யுகைத்து நீருள் வெய்யவன் எழுதன் மானத்
தரைபுகழ் குரிசி றேன்றி யமுனையங் கரையைச் சார்ந்தான். 59

இ - ள்: ஒலிக்கும் நீரையுடைய யமுனை ஆற்றினிடத்தில் நாக குமாரனும் அரக்கனும் குற்றமில்லாத மனத்தை உடையவர்களாய்ப் பாது காத்துக்கொண்டு தன்னருகில்வர விரைவுடன் செல்லுகின்ற குதிரையைச் செலுத்திக்கொண்டு கடலினிடத்துச் சூரியன் உதயமாவதுபோல் உலகம் புகழ்கின்ற அரசகுமரன் நீர்மேலெழுந்து அழகிய யமுனை ஆற்றங்கரை யைச் சார்ந்தான் என்றவாறு.

பாதலந் தன்னின் வீழ்ந்து படருழ வாது வந்த
தாதலர் நறிய மாலைத் தராபதி குமரன் செய்கை
ஓதின னிப்பா லன்னே னுற்றதற் குற்ற ருற்ற
தீதுறு துயர மெல்லாந் தெளிவுறச் செப்ப லுற்றேன். 60

இ - ள்: பாதாளத்தில் வீழ்ந்து துன்பமடையாமல் வந்த மகரந்தத் துடன் மலர்கின்ற மணந்தங்கிய மாலையணிந்த அரசகுமரன் செய்கையை இதுவரை கூறினேன். இனி அவன் ஆற்றில் வீழ்ந்ததற்காக அவனுடைய உறவினர் பொருந்திய கொடிய துயரங்களையெல்லாம் விரிவாகச் சொல்லு கின்றேன் என்றவாறு.

நெளிதிரை யமுனை யாற்றி னீர்விளை யாடல் செய்து
தளிதரு புயலி னல்குஞ் சந்திராங் கதனு மன்னன்
அளிபெறு தோழன்மாரு மம்பியிற் கவிழ்ந்து நீரின்
விளிதரு தன்மை யெல்லா மாதுலன் விரைவிற் கேட்டான். 61

இ - ள்: நெளிகின்ற அலையையுடைய யமுனையாற்றில் நீரில் விளை யாடித் துளியைத்தருகின்ற மேகம்போலத் தானங் கொடுக்கத்தக்கச் சந்திராங்கதனும், அவனுடைய தயையைப் பொருந்திய தோழர்களும் தோணியுடன் கவிழ்ந்து நீரில் இறந்துபோன தன்மையெல்லாம் அவன் மாமனான சித்திரவர்மன் அப்போதே கேளவிப்பட்டான் என்றவாறு.

கேட்டலு மெழுந்து யாற்றின் கிளர்கரை குறுகி வந்து
வாட்டிறற் குரிசி லேயென் மருகவோ மருக வோவென்
றீட்டிய துயர மீக்கொண் டெடுத்தெடுத் தழைத்தல் கேளாக்
கோட்டமில் மனத்து மன்னன் குமரரு மயங்கி வீழ்ந்தார். 62

இ - ள் : கேள்விப்பட்டமாத்திரத்தில் எழுந்து அந்த நதியின்கரையில் வந்துசேர்ந்து வாள்யுத்தஞ் செய்யத்தக்க வல்லமையுடைய அரசனே! என்மருமகனேயென்று நேரிட்ட துயரம் அதிகமாகக்கொண்டு எடுத்தெடுத்தழைத்தலைக்கேட்டு, மாறுபடுதல் இல்லாத மனத்தையுடைய அவ்வரசன் புதல்வர்களும் மயங்கிச் சோர்வடைந்தார்கள் என்றவாறு.

மற்றவன் மனைவி மாரு மனங்குழைந் தழுது நைந்தார்
செற்றமில் கமலை யன்ன தெரிவைசீ மந்த னிக்கும்
சொற்றன ரவளுங் கேட்டுச் சுடுதொழி லுருமு வீழப்
புற்றர வழுங்கு மாபோற் புரண்டனள் புலம்பு கின்றாள். 63

இ - ள் : அவனுடைய மனைவியர்களும் மனமுருகி அழுதுமெலிந்தார்கள். குற்றமில்லாத திருமகளையொத்த சீமந்தனியென்னும் மாதுக்கும் சொன்னார்கள். அவள் அவ்வுரையைக் கேட்டுச் சுடுகின்ற செய்கையையுடைய இடிவிழுந்தால் புற்றிலிருக்கும் பாம்புகள் வருந்துவதுபோலப் புரண்டு புரண்டு அழுகின்றாள் என்றவாறு.

வேறு

நீர்மலிந்த பொய்கை நிடதத்தார் மன்னவனே
தார்மலிந்த மார்பா தமியே னுயிர்த்துணையே
சீர்மலிந்த சொல்வாணர் தீயகலிக் கோடைதெறுங்
கார்மலிந்த வண்கைக் களிறே களிறேயோ. 64

இ - ள் : நீர் நிறைந்த வயல்களையுடைய நிடதநாட்டில் இருப்பவர்களுக்கு அரசனே! பூமாலை நிறைந்த மார்பையுடையவனே! தமியேனாகிய என் உயிர்த்துணையே! சீர்பொருந்திய பாவலர்களுடைய கொடியவறுமையாகிய கோடையைக் கெடுக்கத்தக்க மேகம்போன்ற வளப்பந்தங்கிய கையையுடைய மதகரியே! மதகரியே! என்றவாறு.

புன்னைச் செழுங்காவிற் பூவணையின் யாமுயங்கு
முன்னைப் பெரும்போகம் வேண்டாய் முனிந்துதான்
என்னைப் பிரிந்தாய்நீ யென்றாலும் யான்தமியேன்
உன்னைப் பிரிந்தாவி யுய்யேன்மற் றுய்யேனே. 65

இ - ள் : செழுமைதங்கிய புன்னைவனத்தில் மலர்மஞ்சமேல் நாம் இருவருஞ்சேருகின்ற மிகுந்ததாகிய முன் போகத்தை விரும்பாமல் வெறுத்து நீ என்னைப் பிரிந்துவிட்டாலும் நானுன்னைப்பிரிந்து தனியளாய் உயிர்பிழைத்திரேன், பிழைத்திரேன் என்றவாறு.

என்றென் றரற்றி யிலங்கிழைதன் கைமலரால்
குன்றென்று கொங்கை குழையும் படிபுடைத்து
நின்றென்றுஞ் சொல்லா ணெருப்பிடைபுக் கியான்விழுந்து
பொன்றும் பொழுதன்றிப் போமோ துயரென்றாள். 66

இ - ள்: சீமந்தனியானவள் இவ்வாறு கூறிக்கூறியழுது, செந்தாமரை மலர் போன்ற தன் கைகளால் மலையையொத்தத் தனங்கள் குழையும்படி அடித்துக்கொண்டு, நின்று யாதொரு பேச்சும் பேசாமல் நான்போய் நெருப்பினிடத்தில் விழுந்து இறந்த காலத்திலல்லது இந்தத் துக்கம் தீராதென்றாள் என்றவாறு.

இங்கிவடா னிவ்வண்ண நைய விகல்வேந்தன்
பொங்குதுயர் மாதவராற் போக்கி யுளந்தெளிந்து
திங்கடிரு வாண்முகத்துச் சீமந் தனியுறையும்
மங்குறூடு சென்னி மணிக்கோயில் வந்தடைந்தான். 67

இ - ள்: சீமந்தனியானவள் இவ்வாறு துயரப்பட்டுக்கொண்டிருக்க, பலமிக்க அரசனானவன் தனக்குண்டான துயரத்தை முனிவர்களால் நீங்கி மனம் தெளிந்து சந்திரனை ஒத்த அழகினையும் ஒளியினையும் பொருந்திய முகத்தினையுடைய சீமந்தனியிருக்கும் மேகம் அளாவுகின்ற கொடுமுடியையுடைய இரத்தினங்கள் பதித்த மாளிகையில் சேர்ந்தான் என்றவாறு.

தாதையைக்கண் டுள்ளந் தளரா வடிவீழ்ந்த
மாதினைத்தன் கையார வாங்கி யெடுத்தணைத்துப்
பூதலத்து யாவர் வினையைப் புறங்கண்டார்
காதலித்து மாதே கவலா தொழிகென்றான். 68

இ - ள்: வந்த பிதாவைக்கண்டு மனந்தளர்ந்து பாதத்தில் விழுந்த புதல்வியைத் தன் கைகள் பொருந்த வாரியெடுத்து அணைத்து, மகளே! பூலோகத்தில் இருப்பவர்களில் வினையைக் கடந்தவர்கள் யாருமில்லை. (ஆதலால்) கணவனிடத்தில் விருப்பம்வைத்துத் துயரப்படாதே என்றான் என்றவாறு.

என்னு முரையு மிகந்து படருழந்து
தன்னு ளயர்ந்து தலைவன் தனையடைவான்
வன்னி புகுவதன்றி வாழே னெனவரற்றும்
மின்னி னுணுகிடையை வேந்தன் விலக்கினான். 69

இ - ள்: இவ்வாறு தன் தகப்பன் சொன்ன சொல்லையுந் தவிர்த்துத் தனக்குள் துன்பமடைந்து சோகங்கொண்டு கணவனிடத்தில் போய்ச் சேர தீப்புகுவதே அல்லாமல் இனி உயிருடன் வாழேனென்று சொல்லி

அழுகிற, மின்னலைப்போல நுண்ணிதாகிய இடையையுடையவளாகிய தன் மகளைத் தீப்புகவொட்டாமல் அரசன் விலக்கினான் என்றவாறு.

தந்தை விலக்கத் தளிரியலாள் சாவொரீஇச்
சிந்தை நலியுந் துயரஞ் சிறிதகற்றிப்
புந்தி தெளியச் சிவனையே பூசைசெய்வேன்
எந்தை யறிவா யெனக்கயினி யாயினாள். 70

இ - ள் : தனது பிதா தடுத்ததினால் மாந்தளிர்போன்ற சாயலை யுடைய சீமந்தனியானவள் சாதலையொழிந்து மனம் வருந்தும்படியான துயரஞ் சிறிது நீங்கிப் புந்தி தெளிவடைந்ததினால் இனிப் பரமசிவனையே பூசைசெய்வேன், என்னையனே! நீ அறிவாயென்றுசொல்லி விதந்துவானாள் என்றவாறு.

எண்ணார் தொழவா ழிகலிந் திரசேனன்
தண்ணார் புனல்வீழ்ந்து தன்மதலை மாய்ந்ததுவும்
பெண்ணா ரணங்குகைமை பெற்றதுவுங் கேட்டரற்றிக்
கண்ணா ரவலப் புனலாற் கடல்செய்தான். 71

இ - ள் : பகைவரெல்லாம் வணங்கும்படி வாழ்கின்ற பலமுள்ள இந்திரசேனமன்னன் தனது புதல்வன் குளிர்ச்சிமிக்க யமுனையாற்றில் விழுந்து இறந்ததுவும் மருமகள் கைம்பெண் ஆனதுவும் கேள்விப்பட்டு அழுத கண்களிலிருந்து பெருகாநின்ற துக்கநீரினால் கடல் ஒன்றுண்டாக்கினான் என்றவாறு.

சுற்றமு நற்றாயு துயர்க்கடலின் மூழ்கினார்
மற்றும் நிடதத்தா ரெல்லா மனங்கவன்று
கொற்றவனே யெங்கொளித்தா யென்றுட் குழைந்தழுதார்
பற்றலருங் கேட்டார் பழம்பகைதீர்ந் தோமென்றார். 72

இ - ள் : சுற்றமாயுள்ளவர்களும் நல்ல தாயும் துயரக்கடலில் முழுகினார்கள். இவர்களுமன்றி நிடதநாட்டார் எல்லோரும் மனக்கவலையுற்று எங்களரசனே! எங்கே ஒளித்தாயோவென்று மனங்குழைந்து அழுதார்கள். பகைவர் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டுப் பழம்பகை தீர்ந்தோமென்றார் என்றவாறு.

காலமிஃ தென்னக் கலிமாவும் கைமாவும்
வேலிலகு தானையுடன் மேவார் சமர் வேட்டுக்
கோலியம ராடிநளன் கோமகனைத் தேவியுடன்
ஞாலமெலா நொந்து நடுங்கச் சிறைவைத்தார். 73

இ - ள் : அவ்வாறு கேள்விப்பட்ட பகைவர்கள் இந்திரசேனனை வெல்லுவதற்கு இதுதான் காலமென்று கனைக்காநின்ற குதிரைகளும் துதிக்கையையுடைய யானைகளும் வேலேந்திய பதாதிகளுடன் வரச்சென்று யுத்தஞ்செய்தலை விரும்பிச் சூழ்ந்து போர்செய்து நளச்சக்கரவர்த்தியினுடைய புதல்வனாகிய இந்திரசேனனை அவன் மனைவியுடன் கொண்டுபோய் நாடெல்லாம் நொந்து நடுங்கும்படிச் சிறையில் வைத்தார்கள் எ-று.

மல்கு நிதியும் வளநாடு மாநகருஞ்
செல்வ முழுதுஞ் செருநரே கைக்கொண்டு
பல்பகல்வந் தாளுநாட் பாதலத்தை விட்டெழுந்த
வில்கெழுதோண் மைந்தன் வினையம் விளம்புவாம். 74

இ - ள் : நிறைந்த நிதிகளையும் வளப்பம் பொருந்திய நாட்டினையும் பெருமைபொருந்திய நகரத்தையும் மற்றுமுள்ள செல்வம் எல்லாவற்றையும் பகைவர்கள் கைக்கொண்டு வந்திருந்து பலநாள் ஆண்டுகொண்டிருக்கும் நாளில் பாதாளத்தை விட்டுவந்த வில் பொருந்திய புஜத்தையுடைய சித்திராங்கதனுடைய செய்தியைச் சொல்லுகிறோம் என்றவாறு.

வேறு

நன்னதிக் கரையில் வந்து நளன்றரு மிந்திர சேனன்
இன்னருண் மதலை வாமா வியல்புட னேறு மேல்வை
அன்னவன் மனைவி யாயத் தவர்களோ டணுகித் தானும்
பொன்னிரு கரையுஞ் சிந்தும் பூம்புன லாட வந்தாள். 75

இ - ள் : நளச்சக்கரவர்த்தி பெற்ற புத்திரனாகிய இந்திரசேனனுடைய இனிதாகிய அருள்பெற்ற புத்திரனானவன் நல்ல யமுனையாற்றங்கரையில்வந்து தாவிச்செல்லும் குதிரையின்மேல் இயல்புடன் ஏறும்போது அவன் மனைவியாகிய சீமந்தனியானவள் தோழிக்கூட்டங்களுடன் சென்று இரண்டு கரையிலும் பொன் சிந்துகின்ற யமுனையாற்றில் நீராடவந்தாள் என்றவாறு.

ஐயிரு காதஞ் சந்தத் தருங்கடி கமழச் செம்பொன்
மெய்யணி திகழ நொய்ய வெண்டுகின் மருங்கிற் சாத்தித்
துய்யவ ரிருவர் காணத் துனைப்பரி யேறி யாடு
மையறு குமரற் கண்டு மனமறு குற்று நின்றாள். 76

இ - ள் : நீராடவந்தவள் பத்துக்காதம்வரையில் கிடைப்பதற்கரிய சந்தனவாசனை பரிமளிக்கவும் உடம்பில் அணிந்திருக்கும் ஆபரணங்கள் ஒளிசெய்யவும் நுண்ணியதாகிய வெள்ளிய ஆடை இடையில் அணிந்து

பரிசுத்தர்களான நாகராசனும் இராக்கதனுமாகிய இருவரும் பார்க்கும்படி, வேகமாகச் செல்லத்தக்க குதிரையில் ஏறிக்கொண்டு விளையாடுகின்ற, குற்றம்நீங்கிய அந்த அரசகுமாரனைக்கண்டு மனம் கலங்குகின்றாள் எ - று.

மங்கல மிழந்து மெய்யின் மணவணி துறந்து நின்ற
கொங்கலர் கோதை தன்னைக் குமரனுங் குறுகி நோக்கித்
திங்கள்வா ணுதனீ யார்கொ றிருமணம் புணர்ந்தான் யாவன்
இங்குநீ கைமையான காரண மென்கொ லென்றான். 77

இ - ள் : மங்கிலியசூத்திரம் இழந்து அங்கத்திலணியும் மங்களத்துக்குரிய ஆபரணங்களையும் இழந்துநின்ற சீமந்தனியைச் சந்திராங்கதன் சென்று கண்டு உன்னைச் சிறப்புடன் விவாகம் செய்துகொண்டவன் யாவன்; இப்போது நீ கைம்பெண்ணாயிருக்கும் காரணம் என்னவென்றான் என்றவாறு.

மணப்பொருள்கள் கைம்பெண்ணான காலத்தில் அணிவதில்லையாயினும் அளகத்துக்குள்ள இயல்பைக்குறித்துச் சொன்னதாகக் கொள்ளுதலொன்று. அன்றியும் கொங்கலர் கோதை என்பது அன்மொழித் தொகையாதலால் பதம் பிரித்துப் பொருளுரைக்க வேண்டுவதின்று.

அவனவை வினவ லோடு மரிவையு நாணி நிற்பக்
கவலுறு மவடன் றோழி யொருமகள் கழறு கின்றாள்
இவள்பிதாச் சித்திர வன்ம னிருநில முழுதுங் காக்குந்
தவலருங் கேள்விச் சந்திராங் கதனிவ டலைவ னவான். 78

இ - ள் : இவ்வாறு அவன் வினவினமாத்திரத்தில் சீமந்தனி நாணத்துடன் நிற்பதினால் கவலையடைந்திருக்கும் அவளுடைய தோழியர்களில் ஒருத்தி சொல்லுகின்றாள்: (அரசகுமரனே கேள்) இவளுடைய தகப்பன் சித்திரவன்மன்; இவள்கணவனோவென்றால் பெருமைபொருந்திய பூமிமுழுவதையுங் காக்கும் கெடுதலில்லாத நல்ல கேள்வியையுடைய சந்திராங்கதன் என்பவன் என்றவாறு.

கொடுவினை துரப்ப மற்றக் கோமகன் றனு முன்னாள்
தொடுபுனல் யமுனை யாற்றுட் டுஞ்சிடத் துயர மெய்தி
உடுபதி யிழந்து மாழ்கு முரோணியி னெளியை நீத்து
வடுவகல் கற்பின் னங்கை மங்கல மிழந்து நின்றாள். 79

இ - ள் : இவள் கைம்பெண்ணானதற்குக் காரணம் என்னவெனில் இவள் வாழ்ந்துகொண்டிருக்கும் நாளில் ஒருநாள் கொடிய வினையானது இழுத்துக்கொண்டுபோகப் போய் ஆழ்ந்த புனலையுடைய யமுனையாற்றில் இவள் கணவனாகிய அந்த அரசகுமரன் இறந்துபோனதினால் துயரம்

அடைந்து சந்திரனையிழந்து துயரப்படுகின்ற உரோகிணிநட்சத்திரம்போல ஒளியிழந்து குற்றமில்லாத கற்பினையுடைய இம்மாதானவள் மங்கலமிழந்திருக்கின்றாள் என்றவாறு.

அசுவினி முதலாகச் சொல்லப்பட்ட இருபத்தேழு நட்சத்திரங்களும் சந்திரன் மனைவியர்களென்றும் அவர்கட்குள் உரோகிணியினிடத்தில் சந்திரனுக்கு மிகுந்த பிரியமென்றுஞ் சொல்லப்படுவதினால் சந்திரனை யிழந்த உரோகணிபோலென்றார்.

மங்கல மிழந்து சென்ற வருடமூன் றுரு மையர்
திங்களங் கண்ணி வேய்ந்த சிவனது சோம வாரங்
கொங்கையங் கண்ணி நோற்பாள் குளிர்புன லாடல் வேண்டி
யிங்கெழி லாய மெல்லாஞ் சூழ்வர வெய்தி னாளே. 80

இ - ள்: அரசனே! மங்கிலியமிழந்து மூன்றுண்டாகிறது. அன்று முதல் இவள் சந்திரனாகிய அழகிய மாலையணிந்த பரமசிவனுக்குரிய சோம வாரவிரதம் அனுஷ்டிக்கின்றாள். அதன்பொருட்டு நீரில் நீராட விரும்பி அழகுள்ள தோழிமார் கூட்டஞ் சூழ்ந்துவர இவ்விடத்தில் வந்தாள் எ-று.

அன்றியு மிவடன் கேள்வ னரும்பெறற் றாதை தன்னைக்
கன்றிய தெவ்வர் பற்றிக் கடுஞ்சிறை வைத்து நீதி
யொன்றிய நாட்டை யெல்லா மொருங்குடன் புரவா நின்றார்
வென்றிவேற் குமர கேண்மோ வென்றவள் விளம்புங் காலை. 81

இ - ள்: இதுவுமல்லாமல் இவள் கணவனுடைய தகப்பனைப் பகைகொண்டு சத்துருக்கள் பிடித்துக்கொண்டுபோய்க் கொடிய சிறையில் வைத்து நீதிபொருந்திய நாட்டையெல்லாம் ஒருங்காக அரசுசெய்கிறார்கள். வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய அரசனே! கேளென்று அந்தத்தோழி சொன்னபோது என்றவாறு.

நாணொடு நின்ற நங்கை நாணிகந் தவிருஞ் செம்பொன்
பூணணி மார்ப னேநீ புதுமலர்ப் பகழி சேர்க்குந்
தூணியுஞ் சிலையு மில்லாத் தொடுகழன் மதனே வன்றிச்
சேணுயர் விசும்பிற் றேவ குமரனே செப்பு கென்றாள். 82

இ - ள்: நாணிநின்ற சீமந்தனியானவள் பின்பு நாணம்விட்டு ஒளிவிடாநின்ற செம்பொன்னாலாகிய ஆபரணங்களணிந்த மார்பையுடைய மன்னவனே! நீ புதிய மலர்க்கணைகள் வைக்குந் தூணியும் கரும்பு வில்லும் இல்லாத வீரகண்டையணிந்த மன்மதனோ அல்லது மிகவுமுயர்ந்த தேவ லோகத்தில் வாசஞ்செய்யுந் தேவகுமாரனோ சொல்லென்றாள் என்றவாறு.

என்றவள் மீட்டு மென்ற னின்னலே முதல வெல்லாம்
ஒன்றறப் புகலக் கேட்டா யெனையு நீ யுணர்தி கொல்லோ
கன்றிய மனத்தே னின்னைக் கனவிடைக் கண்டேன் போலு
நின்றநீ யாவ னின்னை நிகழ்த்துதி கரவா தென்ருள். 83

இ - ள்: அவளிவ்வாறு சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்ருள்: எனக்கு நேரிட்ட துன்பங்கள் முதலானவைகளை எல்லாம் ஒன்றும் வழுவாமற் கேட்டாய்; நீ என்னையறிவையோ? வருந்திய மனதையுடைய நான் உன்னைக் கனவில் கண்டேன். இங்கு நின்ற நீ யாவன்? ஒளிக்காமல் இப்பொழுதே சொல் என்ருள் என்றவாறு.

மற்றவ னுரைத்தான் யானோர் மானிட னல்ல னெண்ணில்
செற்றமில் குணத்து நங்காய் சித்திபெற் றுடைய தேவன்
அற்றமில் புவனமெங்கு மொல்லையி னடைந்து மீளக்
கற்றவ னுவ னென்று காந்தளஞ் செங்கை பற்ரு. 84

இ - ள்: அவள் இவ்வாறு வினவ, சந்திராங்கதன் கூறுகிருன்: குற்றமில்லாத குணத்தையுடைய மாதே! நான் மனிதர்களுக்குள் ஒருவனல்லன்; எண்ணில்லாத சித்திகள்பெற்றதேவரிலொருவன். பழுதில்லாத உலகங்களெங்கும் அதிவிரைவாகச் சென்றுவரக் கற்றவனென்று சொல்லி அவளுடைய செங்காந்தள் மலர்போன்ற கையைப்பிடித்துக் கொண்டு என்றவாறு.

அருகுற வழைப்ப மாத ரையுற வெய்திப் பின்னும்
பருகுவார் போல நோக்கிப் பனைமுலை புளகங் கொள்ள
வெருவினர் நிற்ப மன்னன் மின்னிடைச் செவியின் மெல்லென்
றொருமொழி யுறுதி யாக வுவப்புட னுரைப்ப தானுன். 85

இ - ள்: அருகில் வருமாறு அழைக்க, அதைக்கண்ட தோழியர்கள் ஐயமுற்றுப் பின்னும் அவ்வரசனை உண்ணுபவர்கள்போலப் பார்த்துப் பருத்த தனங்கள் புளகத்தையடைவதுமன்றிப் பயந்துநிற்கச் சந்திராங்கதன் சீமந்தனிகாதில் மெதுவாக ஒருசொல் உறுதியாக மகிழ்வுடன் சொல்லலானுன் என்றவாறு.

உன்னுறு துணைவன் வேருே ருலகத்தி னுள்ளான் மாதே
அன்னவன் றனக்கு யானு மாருயிர்த் தோழ னந்த
மன்னனு மிரண்டு நாளின் வந்துன தவல நீக்கும்
இன்னது புகல்வான் வந்தே னென்றன னெழிலின் மிக்கான். 86

இ - ள்: பெண்ணே! உன் கணவன் வேருேருலகத்திலிருக்கிருன்; அவனுக்கு நான் உயிர்போன்ற நட்பினன். அந்த மன்னவனும் இரண்டு

நாளையில் வந்து உன்னுடைய துக்கத்தை நீக்குவான். இந்தச்சேதி உனக்குச்சொல்ல நான் வந்தேனென்று அழகுமிக்க சந்திராங்கதன் கூறினன் என்றவாறு.

நெஞ்சினி னவல நீத்தி நெற்றியங் கண்ண னணை
வஞ்சிநுண் ணிடையாய் யன்னேன் வருவதே திண்ண மாகும்
தஞ்சமென் றிதனை யார்க்குஞ் சாற்றலை யென்று சாற்றிப்
பஞ்சின்மெல் லடியி னட்கு மீட்டிது பகர லுற்றான். 87

இ - ள் : சந்திராங்கதன் பின்னும் ஐயமறச் சொல்லுகின்றான்: பூங்கொடிபோன்ற நுண்ணிய இடையையுடையவளே! உன்மனதிலிருக்கும் துன்பத்தை நீக்கு; நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனாணைப்படி அவன் நிச்சயமாய் நான்கூறிய வார்த்தையை எளிதாகக்கருதி யாருடனுஞ் சொல்லாதே என்றுசொல்லிச் செம்பஞ்சினும் மெல்லிய பாதத்தையுடைய சீமந்தனிக்கு மீட்டும் இந்த வார்த்தை கூறுகிறான் என்றவாறு.

தெரிவைநின் கொழுநற் குற்ற திறனெலாந் தெரியச் சொன்னேன்
பரிவுறு மெனது தாதை தாயர்தம் பரிவு நீக்க
விரைவினி லெனது தேயத் தேகுவ னென்று வேக
குரகதந் தூண்டி வைவேற் குரிசிலுங் கடிதிற் போனான். 88

இ - ள் : மாதே! உன்கணவனுக்குப் பொருந்திய செய்கையெல்லாம் உனக்குத்தெரியும்படிக் கூறினேன். இனி என்னிடத்தில் விருப்பம் வைத்திருக்கும் என் தாய் தந்தையருடைய வருத்தத்தை நீக்க விரைவாக என் நாட்டுக்குச் செல்லுகிறேனென்று சொல்லிக் கூர்மைதங்கிய வேலாயுதத்தையுடைய சந்திராங்கதனானவன் வேகமாகச் செல்லத்தகுந்த குதிரையை நடத்திக்கொண்டு விரைவாகப் போனான் என்றவாறு.

சேயொளிக் குரிசில் போய பின்னரத் திருவி னல்லாள்
மாயமோ வன்றி நெஞ்சின் மயக்கமோ கனவு கொல்லோ
போயவ னுரைத்த வெல்லாம் பொய்கொலோ மெய்கொ லோவென்
றுயவ ளழுது தேம்பி யவலங்கொண் டினைய சொன்னாள். 89

இ - ள் : செவ்விதான ஒளியையுடைய சித்திராங்கதன் போய்விட்ட பின்பு திருமகளினுஞ் சிறந்த அழகுள்ள சீமந்தனியானவள் இப்போது போன இந்தத் தேவகுமாரன் சொன்னதெல்லாம் மாய்கையோ அல்லது நமது மனதிலிருக்கும் மயக்கமோ அல்லது சொப்பனமோ, பொய்யோ அல்லது மெய்யோவென்று அழுது தேம்பித் துன்பங்கொண்டு இவ்வுரை கூறினாள் என்றவாறு.

வேறு

என்னுறு சிந்தனை என்கண வன்பான்
மன்னுவ தல்லது மற்றொரு வன்மேல்
துன்னுவ தன்று வினை ந்தமை சொல்லின்
அன்னவ னேயெனை யாளு நலத்தோன். 90

இ - ள்: பொருந்திய என் மனமானது எனது கணவனிடத்தில் பொருந்துமே அல்லது மற்றொருவனிடத்தில் பொருந்துவதன்று. ஆதலால் இப்போது நடந்ததை ஆலோசிக்குமிடத்தில் இங்கு வந்துபோன மகாபுருஷன் என்னை ஆளத்தக்க தன்மையையுடைய என் கணவனே ஆகும் என்றவாறு.

யாக்கிய வர்க்கர்த மில்லுறை நல்லாள்
வாக்கிய நம்பி மழுப்படை வள்ளல்
ஆக்கினை யாலவ னுக்கருள் பூசைப்
பாக்கியம் வந்து பலித்தது கொல்லோ. 91

இ - ள்: யாக்கியவர்க்கரென்னும் முனிவருடைய மனைவியாகிய மபித்திரைகூறிய உரையைநம்பி மழுவாயுதமேந்திய பரமசிவனது ஆக்கினையாகிய சைவாகமவிதிப்படி அவனுக்குச்செய்த பூசைபாக்கியம் நமக்குவந்து பலித்ததுவோ என்றவாறு.

அன்றியு முன்னமோ ரந்தண னெந்தைக்
குன்றிரு வோர்பதி னுயிர கால
மன்றல்செய் தோனுடன் வாழ்குவ ளென்ற
நன்றறி சொன்னெறி நண்ணிய தேயோ. 92

இ - ள்: இதுவுமல்லாமல் முன்னமொரு பிராமணன் உன் குமாரத்தி பதினுயிரம் ஆண்டு கணவனுடன் வாழ்வாளென்று என் பிதாவுடன் சொன்ன நன்மையறிந்த சொல்லின் முறைமை பொருந்தியதோ எ - று.

நிரந்தர நற்சொ னிமித்தமு முண்டா
நரந்த நறுங்குழ னுயகி பாகன்
வரந்தரு பூசை மகிழ்ந்தெமை வாழ்வித்
தரந்தை கெடுப்பதை யாரறி கிற்பார். 93

இ - ள்: எப்பொழுதும் நல்ல வாக்கியங்களாகிய சகுனங்களும் உண்டாகின்றது. மயிர்ச்சாந்தணிந்த மணந்தங்கிய அளகத்தையுடைய பார்வதிதேவியாரை இடப்பாகத்திலுடைய பரமசிவன் கருணைசெய்யத் தக்கதாகிய நாம் செய்த பூசைக்கு மகிழ்ந்து நம்மை வாழ்வித்துத் துன்பங் கெடுப்பதை யார் அறிகின்றவர்கள் என்றவாறு.

பாவிய னேது பகுத்தறி வேனென்
ஆவிய னுடை யும்மிவ ணொன்றென்(று)
ஓவிய மாசுற லொத்தவள் வைகிக்
காவியி னேர்தரு கண்கள் கலுழ்ந்தாள். 94

இ-ள்: பாவியாகிய நான் என்னென்று பிரித்தறிவேன். என் உயிர்போன்ற கணவன் எந்நாள் இங்குவந்து சேர்வாரோவென்று சித்திரம் அழுக்குறுவதை ஒத்தவள் தனித்திருந்து நீலோற்பல மலர்போன்ற கண்களில் நீர் சோரும்படி அழுதுகொண்டிருந்தாள் என்றவாறு.

இருந்து புலம்பு மிளங்கிளி தன்னை
வருந்தல் வருந்தன் மடக்கொடி யென்றே
பொருந்திய தோழியர் பூம்புன லாட்ட
அருந்ததி கோயி லடைந்தன ளிப்பால். 95

இ-ள்: இவ்வாறு அழுகிற இளங்கிளிபோல்பவளைத் தாயே! வருந்தாதே வருந்தாதேயென்று தேறுதல் சொல்லித் தோழிமார் நீராடச் செய்ய அருந்ததியையொத்த கற்புள்ள சீமந்தனி என்பவள் தன் மாளிகையில் போய்ச்சேர்ந்தாள். அதற்குமேல் நடந்தது என்னவெனில் எ-று.

போரணி மாமிசை போகிய வேலோன்
நீரணி சூழ்நிட தத்திரு நாட்டில்
தோரண நீடிய தொன்னகர் முன்னர்க்
காரணி சோலை களிப்பொ டடைந்தான். 96

இ-ள்: போர்க்கோலமணிந்த குதிரைமேல் சென்ற வேலையுடைய அரசகுமரன் நீர்வளமிகுந்த அழகிய நிடதநாட்டில் தோரணங்கள் ஓங்கிய பழமையாகிய நகரத்துக்கு முன்னிருக்கும் மேகமண்டலமாகிய சோலையினிடத்தில் களிப்புடன் சேர்ந்தான் என்றவாறு.

சேண்வழி வந்திடு செல்ல லகற்றிப்
பூண்மலி கின்ற பொலந்திரு மார்பன்
நாண்மரு வுஞ்சிலை நாக குமாரன்
வாண்முக நோக்கியோர் மாற்ற முரைத்தான். 97

இ-ள்: நீண்ட தூரமாகிய வழியில்வந்த வருத்தத்தை நீக்கிக் கொண்டு ஆபரணங்கள் நிறைந்துள்ள பொன்னிறந்தங்கிய அழகிய மார்பையுடைய அந்த அரசகுமரன் நாண்பூட்டத் தக்க வில்லையுடைய நாக குமாரனது ஒளிபொருந்திய முகத்தைப்பார்த்து ஒரு சொல் கூறுகின்றான் என்றவாறு.

பாதல மேவிய தும்பணி நாதன்
மேதகு மெய்வர நல்கிய தும்மிப்
பூதல முற்றது மின்று பொருந்தார்க்
கோதுதி பின்னரு மோதுவ துண்டால். 98

இ-ள்: யமுனையாற்றில் வீழ்ந்த நான் பாதாளலோகத்தில் சென்றதையும் அங்கிருக்கும் நாகராசன் எனக்கு வரங்கொடுத்ததையும் அந்த வரம் பெற்றுக்கொண்டு பூலோகத்தில் வந்ததையும் இப்போது நீ போய் நம்முடைய பகைவருக்குச் சொல்லு. இதுவுமல்லாமல் இன்னமும் சொல்வதுண்டு. அது என்னவெனில் என்றவாறு.

எண்ணுறு தாதை யிருஞ்சிறை யோடெம்
கண்ணக னுடிது காலம் விடாரேல்
மண்ணுல காளு மதிப்பை யொழித்தே
விண்ணுல காள விடுக்குவ னென்பாய். 99

இ-ள்: யாவரும் மதிக்கத்தக்க என் பிதாவின் சிறையையும் எங்களுடைய இடமகன்ற நாட்டையும் இப்போது விடாராகில் மண்ணுலகத்தை ஆளும்படி அவர்க்குள்ள எண்ணத்தை ஒழித்து விண்ணுலகத்தை ஆளும்படி அனுப்புவேன் என்றும் சொல்லு என்றவாறு.

என்றவ னேவ லியைந்தன னேகிக்
குன்றென நீடிய கோபுர மூதூர்ச்
சென்று புகுந்தடு சேரலர் தம்பால்
கன்றிய நெஞ்சொடு கட்டுரை செய்வான். 100

இ-ள்: இவ்வண்ணம் சொல்லிய அரசகுமரன் ஏவலுக்கு நாககுமரன் சம்மதித்தவனாகிச் சென்று மலைபோல் உயர்ந்த கோபுரத்தை உடைய பழமையாகிய நகரத்தில்சேர்ந்து கொல்லுகின்ற பகைமன்னரைக் கண்டு கோபங்கொண்ட மனதுடன் உறுதியான உரை கூறுகின்றான் என்றவாறு.

இந்திர சேன னெனும்புகழ் மன்னன்
மைந்த னடுந்திறல் வாகுவ லத்தான்
தந்திர மேவிய தக்கக னல்க
அந்த மிலாத வரங்கொ டடைந்தான். 101

இ-ள்: இந்திரசேனனென்னும் புகழ்பெற்ற புகழுள்ள மன்னவனுடைய புத்திரனாகிய சத்துருக்களைப் போர்முகத்தில் கொல்லும்படியான புசபலத்தையுடையவன். நாகப்படைகளையுடைய தட்சகனென்னும் நாகராசன் கொடுக்க அளவில்லாத வரங்கள் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறான் என்றவாறு.

ஆதலி னுலவ னேடம ராடல்
பேதமை யென்றறி வீர்பிழை செய்தீர்
தாதையும் விட்டுயர் தண்ணடை யும்விட்
டேதமு ருவகை யேகுமி னென்ருன். 102

இ - ள்: *ஆகையால் அவனுடன் போர்செய்குதல் உங்களுக்கு அறிவில்லாமை என்றறியுங்கள். நீங்களோ மிகுந்த குற்றம் செய்திருக்கிறீர்கள். ஆகிலும் இப்பொழுது நீங்கள் நலமடையவேண்டும் என்கிற எண்ணமிருந்தால் அவன் தகப்பன் சிறையைநீக்கி அவன் நாட்டையும் விட்டுவிட்டு நீங்கள் போய்விடுங்கள் என்று சொன்னுன் என்றவாறு.*

இத்திற நாக குமார னியம்ப
மத்தக யானை மறப்படை மன்னர்
அத்தகை வேந்த னருஞ்சிறை நீக்கித்
தத்தம ரும்பதி போயினர் சார்ந்தார். 103

இ - ள்: *இவ்வாருக நாககுமரன் சொல்ல மத்தகத்தையுடைய யானை முதலாகிய வீரத்தன்மையுள்ள நால்வகைப் படையோடுங்கூடிய அம்மன்னவர்கள் மேன்மைபொருந்திய இந்திரசேனனைச் சிறைவிடுத்துத் தங்கள் தங்கள் நகரத்தில்போய்ச் சேர்ந்தார்கள் என்றவாறு.*

வீரர்கள் போர்செய்திறந்தால் வீரசுவர்க்கம் அடையலாம் என்னும் விருப்பங்கொண்டு போர்செய்கிறவர்கள். யானை அத்தகைய விருப்பமின்றியும் போர் செயவதாதலால் யானைப்படை சிறந்ததாகச் சொல்லப்பட்டது.

வேறு

மேவலாளர் போயபின்னர் வேந்தன்மா மகன்வர
வேவலாளர் கூறக்கேட்டு ளின்பமுற் றமைச்சரைக்
கூவியொல்லை யென்மகற் கொணர்மினீண் டெனுவவர்
பூவர்சோலை யுட்புகுந்து புண்ணியற் கொடுவந்தார். 104

இ - ள்: *பகைமன்னர் போய்விட்ட பின்பு இந்திரசேனன் என்னும் அரசன் தன்மகன் வந்திருப்பதை ஏவலாளர் சொல்லக்கேட்டு மனமகிழ்ச்சியடைந்து மந்திரிகளை அழைத்து என் புதல்வனை விரைவினில் இவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றுசொல்ல, அந்த மந்திரிகள் மலர்களையுடைய சோலையினிடத்துக்குப் போய்ப் புண்ணியவானுகிய அந்தக் குமரனை அழைத்துவந்தார்கள் என்றவாறு.*

வந்துதந்தை தாளில்வீழ்தன் மைந்தனைப்பொன் மார்புறத்
தந்தையும் பரிந்துதன் றடக்கையா லணைத்திடா
எந்தைதண் புனற்குள்வீழ்ந் திறந்தநீ பிழைத்ததென்
முந்தையோர்கள் செய்தவம் முடித்தநன்மை யாலென்ருன். 105

இ-ள்: புத்திரன் வந்து தகப்பனுகிய இந்திரசேனன் பாதத்தில் வணங்கினவுடன் அவனையெடுத்துத் தன்மார்பிற் பொருந்த நீண்ட கையினல் அணைத்துக்கொண்டு, என்னையனே! குளிர்ச்சியுள்ள ஆற்றில் விழுந்து இறந்தநீ பிழைத்தது என் பெரியோர்கள் செய்விதாகிய தவஞ் செய்து முடித்த நன்மையாலென்முன் என்றவாறு.

என்பதாய நன்கினி தியம்பமைந்த னும்மெழுந்
தன்புகூரு மன்னைதன் னடிவணங்க வன்னையுந்
துன்பவாரி விட்டகன்று சூழ்கரைக் கடந்ததோர்
இன்பவாரி யூடுபுக் கெழாதுமூழ்கி னளரோ. 106

இ-ள்: இவ்வண்ணஞ் சொல்லுவதாகிய நல்ல உரைகளை இனிதாகத் தகப்பன்சொல்ல (அதன்பின்பு) புத்திரனுவன் எழுந்து அன்பு மிகுந்த தன்தாயினுடைய பாதங்களைவணங்க அந்தத் தாயானவள் துயர்க் கடலைவிட்டு நீங்கிச் சூழ்ந்த கரைகடந்ததாகிய இன்பக்கடலுள் புகுந்து எழாதவண்ணம் முழுகினள் என்றவாறு.

ஏனைநற் கிளைஞரு மிரும்பதியுண் மாந்தரும்
போனவாவி பெற்றுடையர் போன்மகிழ்வு கூர்ந்தபின்
மானமன்னன் மைந்தவுற்ற வாறெலாங் கிளத்தெனத்
தேனெய்மாரி பெய்வதென்னச் செம்மல்யாவுஞ் செப்பவே. 107

இ-ள்: இவர்களுமல்லாமல் மற்றைச் சுற்றத்தாரும் பெருமை பொருந்திய நகரத்து மக்களும் தங்கள் உயிர் பெற்றவர்கள்போல் மகிழ் வடைந்த பின்பு பெருமைபெற்ற அரசனுனவன் புதல்வனைப் பார்த்து மைந்தனே! நீ ஆற்றில்விழுந்த பின்பு நடந்த செய்தியெல்லாம் சொல் லென்று வினவ, தேனும் நெய்யுமாகக் கலந்து மழை பொழிவதுபோல நடந்த செய்தியெல்லாம் அரசகுமரன் சொல்லி என்றவாறு.

தக்ககன் பரிந்தளித்த தாவில்பல் வளனெலாம்
மிக்கதாதை பாலளிப்ப வேந்தனுண் மகிழ்ந்துபின்
புக்கவாறு சித்திரவன்ம னுக்குரைத்திர் போதிரென்
றக்கணத்தி னேலைதூதி னன்புடன் விடுக்கவே. 108

இ-ள்: தட்சகன் பரிவுடன் கொடுத்த கெடுதலில்லாத பொருள் களையெல்லாம் அன்பு மிகுந்த தந்தையிடத்தில் கொடுக்க அந்த அரசன் பார்த்து மனமகிழ்ந்து அப்போதே ஓலை எழுதித் தூதர்கையில் கொடுத்து நீங்கள் சித்திரவன்ம அரசனிடத்திற்குப்போய் என் குமாரன் வந்த சேதி யைச் சொல்லுங்களென்று அனுப்பினன் என்றவாறு.

ஆரிய வருத்தநா டடைந்து தூத ரோலையை
வேரியார் நறுந்தெரியல் வேந்தனுக் களித்தலும்
சோரிவேலி னுனுமோலை சொற்பொரு ளுணர்ந்துடல்
பூரியா விருந்துதன் னமைச்சுடன் புகன்றனன். 109

இ - ள்: அவ்வாறு அனுப்பப்பட்ட தூதர்கள் ஆரியவருத்த நாட்டை அடைந்து தங்கள் இடத்திலிருக்கும் ஓலையைத் தேனிறைந்த மணந்தங்கிய மாலை அணிந்த சித்திரவன்மனிடம் கொடுக்கவும், பகைவர் உடல் உதிரம் தோய்வதற்கு ஏதுவான வேலாயுதத்தையுடைய அந்த அரசர் தூதர் கொடுத்த ஓலையில் எழுதியிருக்கும் சேதியைப் படித்து உணர்ந்தமாத்திரத்தில் உடல் பூரிப்படைந்திருந்து தன் அமைச்சனுடன் சொன்னுன் என்றவாறு.

சொன்னவாய்மை கேட்டவன் றுறக்கமேவி னுனென
மன்னர்மன்னன் வன்கழல் வழுத்திநிற்ப மன்னனும்
அன்னவாறு தன்மகட் குரைப்பவந்த வன்னமுந்
தன்னையீன்ற தாதைதாளின் வீழத்தாதை சாற்றுவான். 110

இ - ள்: இவ்வாறு அரசனது உரையைக்கேட்ட மந்திரியானவன் சுவர்க்கலோகத்து இன்பம் பெற்றவன்போல மகிழ்ச்சியடைந்து அரசனது திருவடிகளை வணங்கித் துதிசெய்திருப்பப் பின்னும் அந்த அரசன் ஓலை வந்த சேதியைத் தனது மகளாகிய சீமந்தனிக்குச் சொல்ல, அன்னநடை போன்ற நடையையுடைய சீமந்தனியானவள் மகிழ்வுகொண்டு தன்னைப் பெற்ற தந்தையின் திருவடியில் வணங்கிநிற்க அவ்வரசன் கூறுகிருன் என்றவாறு.

கங்கைதங்கு செஞ்சடைக் கணிச்சிவா னவற்குநீ
அங்கையா லருச்சனை புரிந்தடைந்த நன்மையான்
மங்கையுன்றன் மன்னனுய்ந்து வந்ததென்று கூறிடாப்
பொங்குதீய வெந்துயர்ப் புணரிநின்று மேறினுன். 111

இ - ள்: கங்கைபொருந்திய சடாமகுடத்தை உடையவராய் மழு வாயுதமேந்திய பரமசிவனுக்கு நீ உன் அழகிய கையினுல் அருச்சனை செய்துவந்த நன்மையினுலே, புத்திரியே! உன் கணவன் பிழைத்துவந்த தென்று சொல்லிப் பொங்குகின்ற தீயதாகிய வெவ்விய துயரக்கடலி னின்றுங் கரையேறினுன் என்றவாறு.

மாசுசூழ்கு மாமணி கழீஇயவாறு போலவே
பாசிழையைப் பைம்புனலி னுட்டிப்பாலி னுவியந்
தூசுடுத்தி யொண்மலர்ச் சுரிகுழல் வனைந்துபின்
பூசுசாந் தணிந்துசெய்ய பொற்கலன்கள் சேர்த்தினுர். 112

இ - ள் : அழுக்கடைந்த மாணிக்கத்தைக் கழுவியதுபோல் பசும் பொன்னிறற் செய்யப்பட்ட ஆபரணமணிந்துள்ளவளாகிய சீமந்தனிக்கு நல்ல நீரினல் நீராடல்செய்வித்துப் பாலின் புகைபோல அழகுள்ள ஆடையணிந்தும் மணமுள்ள மலர்களைக் கூந்தலிலணிந்தும் பின்பு சந்தனம்பூசிச் செவ்விதாகிய பொன்னுற் செய்யப்பட்ட ரத்னுபரணங்களுமணிந்தார்கள் என்றவாறு.

கோலமைக்கண் மாதைவாவு கொய்யுளைப் பரித்திண்டேர்
மேலிருத்திச் சேடியர் நெருங்கவெண்சங் கார்ப்பெழப்
பாலிழைத்த வேலையிற் பரந்துசேனை சூழ்வரக்
காலியற் கலினமா விவர்ந்துகா வலன்சென்றான். 113

இ - ள் : இவ்வாறு அலங்காரஞ் செய்தபின் அழகிய மையிட்ட கண்ணையுடைய சீமந்தனியைத் தாவிச்செல்லும் கத்தரித்த கழுத்து மயிரினையுடைய குதிரைகள் கட்டிய பலமிக்க தேர்மேலேற்றித் தோழிகள் சூழ்ந்திருக்கவும், தவளச்சங்கம் ஆரவாரிக்கவும், பானிறைந்த கடல்போலச் சேனைகள் சூழ்ந்துவரவும், காற்றைப்போல அதிவேகமாகச் செல்லுகிற கடிவாளம் பூட்டிய குதிரையின்மேல் அவ்வரசன் ஏறிக்கொண்டு சென்றான் என்றவாறு.

நீடுசெந் நெறிகடந்து நென்மலி நிடதமா
நாடுமேவி யிந்திரசேன னன்னகர்ப் புறத்தினேர்
ஏடவிழ்ந்த பூம்பொழி லிருந்துதூது போக்கியே
யாடல்வேந் தனுக்குத்தா னடைந்தவா றறிவித்தான். 114

இ - ள் : அவ்வாறுசென்ற அரசன் நெடியதாகிய வழியைக்கடந்து, நெற்கள் நிறைந்த பெருமைபொருந்திய நிடதநாட்டைச் சேர்ந்து, இந்திரசேனனுடைய நகரின்புறத்திலிருக்கும் இதழ்கள் விரிந்த மலர்களையுடைய ஒரு சோலையிடத்திருந்து, தூதரையனுப்பித் தான் வந்திருப்பதை இந்திரசேனமன்னனுக்குத் தெரிவித்தான் என்றவாறு.

வெங்கலி கெடத்துரந்த வேந்தர்வேந் தனுமுணர்ந்
தங்குநின் றெழுந்துதன் னமைச்சரோ டெதிர்கொளா
மங்குறங்கு கோயில்வாய் வருகெனக்கொண் டேகியே
பொங்குமோகை யோடவண் புதுவிருந்து நல்கினன். 115

இ - ள் : கொடிய பாவமானது கெடும்படி நீக்கிய மன்னர் மன்னவனுகிய இந்திரசேனன் சித்திரவன்மனென்னும் அரசன் வந்திருப்பதைத் தூதர்களால் அறிந்துகொண்டு தனது மந்திரிகளுடனே அவ்விடத்தி

லிருந்து புறப்பட்டு எதிர்கொண்டு மேகங்கள் பொருந்தும்படியான உயர்ந்த தனது அரண்மனைக்கு வாவென்று அழைத்துக்கொண்டுபோய் அவ்விடத்தில் மிக்க மகிழ்வுடன் புதுமையான விருந்து செய்வித்தான் எ - று.

சந்திராங் கதனும்வந்து தாழ்ந்துமா துலனடிக்
கந்தநாண் மலர்வணங்கக் கையிஞ லெடுத்தணைத்
திந்தமாதி ஞவியோடு மெங்களாவி யாவையும்
உய்ந்துவாழ வென்றுநீயு முய்ந்துவந்த தாமரோ. 116

இ - ள்: சித்திரவன்மனவன் விருந்துண்டிருக்கும்போது சந்திராங்கதன் வந்து தனது மாமனுருடைய திருவடித் தாமரை மலர்களை வணங்கினமாத்திரத்தில் மாமனுராகிய அரசன் தன்னை வணங்கின மருமகனைக் கையினுல் எடுத்தணைத்து மார்புடன் தழுவிக்கொண்டு இந்தச் சீமந்தனி உயிரும் எங்களுயிரும் பிழைத்து வாழும்படியாக நீயும் பிழைத்து வந்தது என்றவாறு.

என்றுகூறி யன்றுசந்தி ராங்கதற் கியைந்தநாள்
துன்றுசோதி டத்தர்சொல்ல வோரையிற் சுருதிநூல்
ஒன்றுநீதி யந்தண ருரைப்பவொள் ளழலின்முன்
மன்றனுறு கோதையை மறுமணம் புணர்த்தினன். 117

இ - ள்: இவ்வாறுகூறி அதன்பின்பு சந்திராங்கதனுக்குப் பொருந்திய நல்லநாள் இன்னநாளென்று அங்குவந்திருந்த சோதிடர்கள் சொல்ல அந்த லக்கினத்தில் வேதசாத்திரங்கள் உணர்ந்த நீதியாளர்களாகிய பிராமணர்கள் மந்திரங்கள் சொல்ல ஓமாக்கினியின் முன் சீமந்தனியை மறுமணஞ் செய்வித்தான் என்றவாறு.

மணஞ்செய்வித்த பின்னரன்பு மன்னுசித்திர வன்மன்வீ
றிணங்குநல் லமைச்சர்தா மிருபுறமுஞ் சூழ்வரக்
கணங்கொடானை யோடுதேர் கடாவியேகி யூர்புகுந்
தணங்கனர் நலத்தின்மூழ்கி யண்டர்கோனின் வைகினன். 118

இ - ள்: மறுமணம் செய்வித்த பிறகு அன்புள்ள சித்திரவன்மனவன் பெருமைமிக்க நல்ல மந்திரிகள் இருபுறத்திலும் வருமாறு கூட்டமாகிய சேனைகளுடன் புறப்பட்டுத் தேரைச் செலுத்திக்கொண்டுபோய்த் தனது நாட்டை அடைந்து தெய்வமகளிரை ஒத்த தனது உரிய மாதர்களுடனே இன்பம் அனுபவித்துக்கொண்டு தேவேந்திரனைப்போல் இருந்தான் என்றவாறு.

வேறு

பூமண் டலத்தைப் பொறுக்கும் புயங்கேச னீந்த
தாமந் துகில் பூணிறை சந்திவை யாவுநல்கிச்
சீமந் தனியைத் திருமேவருஞ் செம்பொன் மார்பன்
தூமங் கமழுஞ் செழுஞ் சேக்கையிற் ரேயுநாளின். 119

இ - ள் : இந்தப் பூமியைத் தாங்கும்படியான நாகராசன் கொடுத்த மாலை, ஆடை, ஆபரணம், நிறைந்த சந்தனம் என்னும் இவைகளைக் கொடுத்துத் திருமகள் மேவிய மார்பனாகிய சந்திராங்கதன் வாசனைப்புகை பரிமளித்துக்கொண்டிருக்கும் செழுமையுள்ள மலர்ச்சயனத்தில் சீமந்தனியுடன் கூடிக்குலாவி வாழும்நாளில் என்றவாறு.

நெய்வண்ண வேற்கை நிகராரு மிலேற றுற்குக்
கொய்வண்ண மாலைக் கொழும்பொன் முடிசூட்டி மன்னன்
பொய்வண்ண மாய வுடலான்வரு போக நீங்கி
மெய்வண்ண மேவத் துறவின்றலை மேவி னானே. 120

இ - ள் : பகைவருடலின் உதிரம் தோய்கின்ற அழகிய வேலேந்துங் கையையுடையவனாகிய ஒருவருமொப்பில்லாத இடபம்போன்ற நடையையுடைய தன்புதல்வனுக்குப் பொன்மகுடந்தரித்து அவன் தந்தையானவன் பொய்த்தன்மையுள்ள மாயாசம்பந்தப்பட்ட உடலினால் வரத்தக்க போகங்களை வெறுத்து நீங்கி உண்மைப் பொருளாகிய மோட்சமடையத் துறவினிடத்தில் சேர்ந்தான் எனறவாறு.

தன்றாதை போய்நற் றவஞ்செய்திடத் தாம வேலோன்
பொன்றாழ் குடைக்கீ ழகன்ஞாலம் புரக்கு மேல்வை
நன்றாயு மைந்த ரிருநால்வரை யீன்று நற்பொற்
குன்றார் முலைமங்கை யோர்கொம் பினையும் பயந்தான். 121

இ - ள் : இவ்வாறாகத் தன்தந்தை காட்டிற்போய் நல்லதவஞ்செய்துகொண்டிருக்க வெற்றிமாலையணிந்த வேலையுடைய சந்திராங்கதன் அழகு தங்கிய குடையின்கீழிருந்து அழகிய பூமியைக்காக்கும்நாளில் நன்னெறியை உணரத்தக்க எட்டுப்புதல்வர்களைப் பெற்றுப் பின்னும் நல்ல பொன்மலையொத்த தனத்தையுடைய பூங்கொம்பு போன்ற ஒரு பெண்ணையும் பெற்றான் என்றவாறு.

மாவண்கை மன்னன் மகட்பேற்றின் மனங்க ளித்துப்
பாவந் தவிர்ந்து பதினாயிர மாண்டு பாரில்
தாவின்றி யின்ப நுகர்ந்தான்றனி ஞான வாழ்வு
மேவுந் தவத்தீ ரெனச்சூதன் விளம்பி னானே. 122

இ-ள்: ஒப்பற்ற ஞானவாழ்வினையுடைய தவத்தலைவர்களாகிய நைமிசாரணிய முனிவர்களே! மிக்க வளப்பந்தங்கிய கையையுடைய சந்திராங்கதன் புதல்வர்கள் பிறந்து நல்வழியில் நடக்கத் தக்கவர்களாயிருப்பதினால் மனமகிழ்வடைந்து நீதியுடன் செங்கோல்செலுத்திப் பாவம் சேராத வண்ணம் நீக்கி இவ்வுலகத்தில் பதினாயிரம் ஆண்டு குறைவில்லாமல் இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்தானென்று சூதமுனிவர் கூறினார் என்றவாறு.

சோமவாரவிரத மான்மியம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 526

ஒன்பதாவது

சீமந்தனி பாவனைபெற்ற அத்தியாயம்

பின்னு மாதவர் விழைவுறப் பெருந்தவ வியாதன்
அன்ன சூதமா முனிவர னரனரு ளடியார்
மன்னு செய்கையுஞ் சோமவா ரத்தின்மான் மியமும்
இன்னு மோதுவ துண்டவை கேண்மினென் றிசைத்தான். 1

இ - ள்: நைமிசாரணிய முனிவர்கள் மேலும் மகிழ்வடையும்படி பெரிய தவத்தையுடைய வியாசரை ஒத்த சூதமுனிவர் பரமசிவன் அருள் பெற்ற அடியார்களுடைய நிலைபெற்ற செய்கையும் சோமவார விரத மகிமையும் இன்னமும் சொல்லத்தக்கதுண்டு. அவைகளைக் கேளுங்கள் என்று சொன்னார் என்றவாறு.

பொங்கு வெள்ளிமீன் புதையினுஞ் சகட்டினைப் போழ்ந்து
பங்கு வேறினும் படுமழைப் பருவம்பொய்த் தாலும்
திங்கண் மும்மழைத் திறம்பில வாய்வளஞ் சுரக்கும்
மங்கு லேய்பொழில் வைதர்ப்ப நாட்டில்வாழ் மறையோர். 2

இ - ள்: விளங்குகின்ற சுக்கிரன் என்னும் கிரகமானது மூடத்தில் விழுந்தாலும், உரோகிணி நட்சத்திரத்தைப் பேதித்துக்கொண்டு சனிக் கிரகம் வக்கரித்துச் சென்றாலும், நியதியாகப் பொருந்திய மழை காலந் தப்பினாலும் மாதந்தோறும் மும்மாரி மாறுபடாமல் வளப்பம் உண்டாகும் படியான மேகமண்டலம்வரையில் பொருந்திய சோலை சூழ்ந்த வைதருப்ப நாட்டில் வாழுகின்ற பிராமணர்கள் என்றவாறு.

இனிய நண்பொடு வேதமித் திரன்றவத் தீன்ற
புனித நான்மறை புகல்சுமே தாவுநற் புகழோன்
துனியி லாமதி யாலுயர் சார்ச்சுதன் றேன்றல்
தனிமெய்ஞ் ஞானநூற் சாமவா னெனுந்தக வோனும். 3

இ - ள்: வேதமித்திரனென்பவன் அன்புடன்செய்த தவத்தினால் பெற்ற புனிதமாகிய நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த சுமேதா என்பவனும், நல்ல புகழையுடையவனாய் துன்பமடையாத புத்தியினாலுயர்ந்த

சார்ச்சுதனென்பவனுடைய புத்திரனுகி ஒப்பற்ற மெய்ஞ்ஞானநூல் ஓதியுணர்ந்த மேன்மையுள்ள சாமவானென்பவனும் என்றவாறு.

அரிய நான்மறை முதலிய வங்கங்க ளாறுந்
தெரிவ ரும்பொருட் புராணமு மாகமத் தெளிவும்
விரியு மாறுள கலைகளுங் குரவனல் விளங்கிக்
கரிய காமனுஞ் சாமனு மெனக்கவி னமைந்தார். 4

இ-ள்: அருமையாகிய நான்கு வேதங்களும் ஆறங்கங்களும் தெரிதற்கரிய பொருளமைந்த பதினெண் புராணங்களும் ஆகமங்களிற்சொல்லுகின்ற உறுதிப்பொருளும் பரந்திராநின்ற மற்றுமுள்ள கலைகளும் நல்ல குருவால் கற்றுணர்ந்து மன்மதனும் அவன் தம்பியாகிய சாமனும்போல அழகமைந்தார்கள் என்றவாறு.

மைந்தர் கல்வியு மிளமையு மனத்தொடு மகிழ்ந்த
அந்த ணாளர்த மரும்பெறற் புதல்வரை நோக்கிச்
சிந்தை யோகையாற் சிறுவர்நீர் புவிக்கெலா மணியாம்
இந்த மாநில வைதர்ப்ப வேந்தன்மாட் டெய்தி. 5

இ-ள்: தங்கள் புதல்வர்களுடைய இளமையையும் அவர்கள் அந்தச் சிறுவயதில் கற்றுணர்ந்த கல்வியின் திறத்தையும் மனங்கொண்டு மகிழ்வடைந்து பிராமணர் இருவரும் பெறுதற்கரிய தங்கள் புதல்வர்களைப் பார்த்து உள்ளத்திலுண்டான மகிழ்வினல், சிறுவர்களே! நீங்கள் இவ்வுலகத்துக்கு ஆபரணம்போல் விளங்குகின்ற பெரிய இடத்தையுடைய இந்த வைதருப்பநாட்டு அரசனிடஞ்சென்று என்றவாறு.

கற்ற கல்வியாற் காவலன் சிந்தையைக் கனிவித்(து)
உற்ற மாநிதிப் பரிசிலாங் குவகையி னேற்றுப்
பெற்ற செம்பொனற் கன்னியர் கடிமணம் பேணி
முற்று மில்லறம் புரிவதே மேற்கொண்டு முயல்வீர். 6

இ-ள்: நீங்கள் கற்ற கல்வியால் அரசன் மனங்கனியச்செய்து அவன் பரிசிலாகக் கொடுக்கும் மிக்க பொருளை மகிழ்வுடன் வாங்கிக்கொண்டுவந்து நீங்கள்பெற்றுக்கொண்ட அந்தப்பொருளினல் பெண்களை மணஞ்செய்துகொண்டு குறைவில்லாத இல்லறம் நடத்துவதை மேற்கொண்டு நன்மைவரத்தக்க முயற்சியைச் செய்யுங்கள் என்றவாறு.

என்று கூறலு மிருவரு மிசைந்தன ரேகிக்
குன்று போலுயர் கோயிலிற் கொற்றவற் குறுகி
நின்று தங்குல விஞ்சைக ளிகழ்த்தலு நிருபன்
நன்று நன்றுநீர் வேட்டவை பெறுகென நவின்ருன். 7

இ-ள்: இவ்வாறு அவ்விருவர் தந்தைகளுஞ் சொல்ல, அதற்கு உடன்பட்டுச் சென்று மலையொத்துயர்ந்த அவ்வரசன் மாளிகையிற் சேர்ந்து கண்டு தாங்கள் கற்றிருக்கும்கல்விகளை விவரித்துச்சொன்னார்கள். அரசன் அதைக்கேட்டு உங்கள்பேச்சும் கல்வியும் நன்றாயுளது. ஆகையால் உங்கட்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்களென்றான் எ-று.

மாலை வண்குடை மன்னவர் மன்னமற் றிதுகேள்
சேலை வென்றகட் டிருந்திழை யார்மண முடிப்பான்
ஏல வந்தன மிருநிதி தந்தரு ளென்னக்
கோல வெள்ளெயி றிலங்கிட நகைத்திது கூறும். 8

இ-ள்: முத்துச் சரங்களால் அலங்கரித்திருக்கும் வெள்ளைக் குடையையுடைய மன்னர் மன்னனே! நாங்கள் சொல்வதைக் கேள்: கயல் மீனைவென்ற அழகிய பார்வையையுடைய கன்னியரை விவாகஞ் செய்து கொள்ள மனதிலுத்தேசித்து உன்னிடம் வந்தோம். அதற்குத் தகுதியாக மிக்கபொருள்கள் எங்கட்குக்கொடுவென்று சொன்னார்கள். அதைக்கேட்ட அரசன் அழகிய வெள்ளிய பற்கள் விளங்கும்படி நகைத்துப் பின்வருமாறு கூறுகின்றான் என்றவாறு.

மண்டு தீம்புன னிடதத்தர் கோமகன் மனையாள்
கொண்ட கற்புடைக் கோதைசீ மந்தனிக் கொம்பர்
துண்ட வெண்பிறை வேணியான் சோமவா ரத்தின்
அண்ட ருங்கண்டு வியப்புற அருச்சனை புரிந்தே. 9

இ-ள்: மதுரமுள்ள நீர்வளம் நிறைந்த நிடதநாட்டரசன் மனைவியாகிய சீமந்தனியென்பவள் இளந்திங்களணிந்த சடையையுடைய பரமசிவனைச் சோமவாரநாளில் தேவர்களும் கண்டு ஆச்சரியப்படும்படி அருச்சனைசெய்து என்றவாறு.

அந்த வேலையி னான்மறை முனிவரை யடங்கச்
சந்த மென்முலை தையலா ரொடுவரச் சாற்றி
யிந்து சேகர னுமையென வவர்களை யெண்ணிப்
புந்தி யான்மகிழ்ந் தருச்சனை வழிபடல் புரியா. 10

இ-ள்: அந்தச் சோமவாரகாலத்தில் பிராமணர்களையெல்லாம் அவரவர் மனைவிமார்களுடன் வருமாறு சொல்லியனுப்பி வந்தவர்களைப் பார்வதி பரமேசுவரர்களாக மனதினில் பாவித்து மகிழ்ந்து அருச்சனை செய்து என்றவாறு.

சந்தனக்குழம்பணிந்த மிருதுவாகிய தனங்களுள்ள மாதர்களுடன் எனப் பொருள்கொள்க.

வேண்டு நன்கலன் வெறுக்கைகண் மிகவவர்க் களிக்கும்
ஆண்டு நீவிர்க ளிருவரி னொருவனாண் டகையாய்ப்
பூண்ட கோலத்தின் மனைவியா யொருவனைப் புனைந்து
காண்ட குஞ்சிறப் பிறைமகள் பாற்சென்று கடிதின். 11

இ - ள் : அவர்கள் வேண்டிய நல்ல ஆபரணங்களும் பொன்னும் மிகுதியாகக் கொடுக்கிறாள். ஆதலால் நீங்கள் இருவரில் ஒருவன் ஆண் மகனேயாகி ஒருவனைப் பூண்ட் கோலத்தையுடைய அவன் மனைவியாக அலங்கரித்து அரசகுமாரத்தியாகிய சீமந்தனியிடத்தில் விரைவில்போய் என்றவாறு.

கைதவத்தினா லவடரும் வெறுக்கைகள் கவர்ந்து
மைதழைத்தகண் மடவியர் கடிமண மருவி
யுய்தி யென்னுரை மறுத்திரேற் றண்டமுண் டென்னக்
கொய்து ணர்த்தொடை வேந்துரைத் தலுமுளங் குலைந்தார். 12

இ - ள் : இத்தகைய வஞ்சகத்தினால் அவள் கொடுத்த பொருள்களை அபகரித்துக்கொண்டுபோய்க் கன்னியர்களை விவாகஞ்செய்துகொண்டு வாழுங்கள். என் சொல்லைத் தடுப்பீர்களானால் உங்களுக்குத் தண்டனை கிடைக்குமென்று அரசன் சொல்லவும் அவர்கள் மனம் வருந்தினார்கள் என்றவாறு.

வேறு

அந்தோ வந்தோ வெங்கட மக்கீ தழகிற்றோ
கொந்தார் மாலைக் கொற்றவ கோயில் குறுகுற்றால்
நந்தா நின்ற வஞ்சனை வேட நணுகுற்றால்
எந்தா யெந்தை தங்குல முதலோ டிறுவாரே. 13

இ - ள் : (இவ்வாறு அந்த அரசன் கூறியதைக்கேட்ட பிராமணச் சிறுவர்கள் அவனை நோக்கி) ஐயையோ வேதமுதலாகிய சாத்திரங்களை எல்லாம் கற்றிருக்கும் எங்களுக்கு இந்தக் காரியம் நன்மையுடையதோ அரசனே! உன் ஆசாரவாசலுக்குள் வந்த நாங்கள் வஞ்சனையான வேடத்தைப் பொருந்தினால் எங்கள் தாய் தந்தையர்கள் குலமுதலுடன் அழிந்து போவார்களே என்றவாறு.

இம்மை தனக்கு மறுமை தனக்கு மெழுமைக்கும்
வெம்மைசெய் கேடு நரகும் விளைக்கும் விறல்வேந்தே
செம்மைய கற்பித் தாயெனி லின்றே செய்வேமென்
றம்மறை யோர்நின் றஞ்சி யுரைப்ப வடல்வேந்தன். 14

இ - ள் : இவ்வாறு செய்யும் செய்கையானது இம்மை மறுமை என்று இரண்டிலுமில்லாமல் எழுபிறப்பிலும் துன்பம் செய்யும்படியான கெடுதியையும் நரகினையும் உண்டாக்கும். வெற்றியுள்ள அரசனே! நல்ல மார்க்கத்தைக் கற்பித்தாயானால் இப்போதே செய்கிறோமென்று அந்தப் பிராமணர்கள் எதிரில்நின்று பயந்து சொல்ல, அதைக்கேட்ட வலியுள்ள அவ்வரசன் என்றவாறு.

வெஞ்சின மூளக் கண்கள் சிவக்க வெடிசொல்லாற்
செஞ்சொ லுரைக்குந் தேசிகர் தேவர் திறல்வேந்தர்
தஞ்சொ னவின்று லம்மொழி கேளாத் தகவில்லோர்
அஞ்சி நடுங்கத் தண்ட மிழைப்ப தறமென்னு. 15

இ - ள் : வெவ்விய கோபமூண்டு கண்கள் சிவக்க வெடித்த சொல்லால் சொல்லுகிறான். நல்ல உரையைக் கூறும் குருதேவர்கள் வெற்றியுள்ள அரசர்கள் என்னும் இவர்கள் ஏதாவதொரு சொல் சொன்னால் அவர்கள் உரையைக் கேளாத தகுதியில்லாதவர்கள் பயந்து நடுங்கும்படி தண்டனைசெய்வது தருமமென்று கூறினான் என்றவாறு.

என்னுரை கேளீ ராமெனி னுங்களை யிப்போதே
அன்னிய கீழ்மைக் குலராய் வேதிய ராகாது
கொன்னுறு தண்டஞ் செய்குவ னென்றென் றிறைகூற
முன்னுற நிற்கும் வேதியர் வெருவா மொழிகுற்றார். 16

இ - ள் : இவ்வாறு கூறிய அரசன் எனது உரையை நீங்கள் கேளாவிட்டால் உங்களை இப்பொழுதே பிராமணரென்கிற யோக்கியதை இல்லாமல் நான்கு வருணத்துக்கும் அந்நியமான தாழ்ந்த சாதியாகப் போகத்தக்க கொடிய தண்டனை செய்விப்பேன் என்று பின்னும் சொல்ல எதிரிலிருக்கும் பிராமணர்கள் பயந்து சொல்லுகிறார்கள் என்றவாறு.

சீறலை மன்ன சீறலை யுன்றன் றிருவுள்ளப்
பேறல துண்டோ நின்குடை வாழப் பெற்றோர்க்குத்
தாறலை பூகத் தொடுகனி தேமாத் தலைசாய
ஆறலை மோது நிடதத் திருநா டணைவோமே. 17

இ - ள் : மன்னவனே! கோபஞ்செய்யாதே, கோபஞ்செய்யாதே; உன் குடைநிழலில் வாழப்பெற்றவர்கட்கு உன் திருவுள்ளப்பேறன்றி வேறொன்றுண்டோ. (இல்லை ஆதலால்) குலைகள் அசைந்துகொண்டிருக்கும்படியான கமுகமரமும் பழங்களையுடைய தேமாமரங்களும் தலைசாயும் வண்ணம் ஆறானது அலையினால்மோதத்தக்க நிடதநாட்டுக்குப்போகிறோம் என்றவாறு.

என்றவர் கூறச் சிந்தை யுவந்தே யிகல்வேந்தன்
ஒன்றிய சாம வான்மட மாத ருருவென்னப்
பொன்றணி பெண்மைக் கேயும் வனப்புப் புனைகென்னத்
துன்றி யணிந்தார் கைபுனை வண்ணத் தொழில்வல்லோர். 18

இ - ள்: இவ்வாறு அவர்கள் கூறவும் சிறந்த வலிவுள்ள அவ்வரசன் மனமகிழ்ந்து அலங்காரஞ்செய்விக்கும் நல்லதொழில்வல்லவர்களை அழைப்பித்து இந்தச் சாம்வானுக்குப் பெண்ணுருவாகும்படி அழகுமிகுந்த பெண்மைக்குப் பொருந்திய அலங்காரஞ் செய்யுங்களென்று சொல்ல, அவ்வாறு செய்ய ஒத்துக்கொண்டு போனார்கள் என்றவாறு.

மங்கையர் போலக் கொங்கைகள் வேறே வனைவித்துக்
குங்கும சந்தத் தேய்வைகள் கோட்டிக் குளிர்முத்தத்
தொங்கல் வனைந்திட் டினமலர் பெய்த சுருளோதி
பொங்கிரு ளுணச் சிகழிகை யாகப் பொறப்பித்தார். 19

இ - ள்: மாதர்கட்கு இருப்பதுபோலிருக்கும்படி வேறே தனங்கள் நூதனமாக அதற்குத்தக்க ஒரு பொருளால் ஏற்படுத்திக் குங்குமப்பூ முதலிய வாசனைப்பொருள் சேர்ந்த சந்தனக்குழம்பு பூசி குளிர்ச்சிதங்கிய முத்துமாலைகள் அணிந்து பூமாலை சூட்டிய அளகபாரத்தை இருளும் நாணும்படிக் கொண்டையாக அலங்கரித்தார்கள் என்றவாறு.

கோல விழிக்குக் கருமை சிறக்குங் கோறீட்டி
யால நெடும்பொற் குண்டலமுங்கா தணிசெய்து
பால நுதற்குப் புண்டர மிட்டுப் படர்வேலை
ஞாலமும் விற்குந் தூசு மமைத்தார் நவையற்றார். 20

இ - ள்: அழகிய கண்களுக்குக் கறுத்த மையைச் சிறக்குந் தூரியக் கோலாலெழுதி அசையும்படி இரண்டு காதிலும் பொற்குண்டலங்கள் தரித்து நெற்றியினிடத்தில் திரிபுண்டரமாகத் திருநீறணிந்து பறந்தகடல் சூழ்ந்த உலகத்தையெல்லாம் விலைக்காக விற்றுக்கொடுக்கத்தக்க மதிப்புள்ள ஆடையுமணிந்தார்கள். அலங்காரஞ்செய்யுந் தொழிலில் குற்றமற்றவர்களாகிய வண்ணமாதர்கள் என்றவாறு.

வேறு

இருடிகண் மயங்கத் தாருகா வனத்தி னெதிர்ந்த நாண் மாயனார் மாயம்
புரிதரு பெண்மை மோகினி ரூபம் பொருவுறப் பொற்பலங் கரித்து
நரபதி தனக்குக் காட்டலு மகிழ்ந்து நன்றென வவன்விடை கொடுப்பத்
தெரிவைய ரோடும் புகுந்தரு மறையோர் குழாத்தொடு மிவர்களுஞ் சென்றார்.

இ - ள் : இருடிகள் மயங்கும்படி தாருகாவனத்தில் சென்ற திருமாலானவர் மாயத்தினால் ஏற்படுத்திக்கொண்ட மோகினியென்னும் பெண் உருவை ஒப்பாக அழகுடன் அலங்கரித்து அரசனுக்குக் காட்டினவுடன் அவன் மகிழ்ந்து நன்ருக இருக்கிறதெனச் சொல்லி உத்தரவு கொடுக்கப் பெற்றுக்கொண்டு சிமந்தனியிடத்துக்குத் தங்கள் தங்கள் மனைவிமார் களுடன் செல்லுகிற பிராமணக் கூட்டத்துடனே இவர்களும் போனார்கள் என்றவாறு.

குடங்கையி னடங்கா நெடுங்கண ளிருந்த கோயிலிற் குமரனுங் கோல
வடந்தரு முலையா ளாயுரு வெடுத்த மைந்தனும் வருதலும் மகிழா
நடந்தெதிர் சென்ருங் கருக்கிய முதல நவையறு பூசனை புரிந்தாங்
கடைந்தமா தவரோ டிருக்கென விவர்க்கு மகமகிழ்ந் தாசன மளித்தாள். 22

இ - ள் : உள்ளங்கையின் அளவில் அடங்காத நெடிய கண்களை யுடைய சிமந்தனியிருக்கும் கோயிலில் சுமேதா என்பவனும் அழகிய மணி வடமணிந்த தனங்களையுடைய பெண்ணுரு அமைந்த சாமவானென்பவனும் செல்லுதலும், சிமந்தனி அவர்களைக் கண்டு மனமகிழ்ந்து எதிர் கொண்டுபோய் அருக்கிய முதலான குற்றமற்ற பூசைசெய்து அவ்விடத்தி லிருக்கும் பிராமணர்களுடன் மகிழ்ந்திருங்கள் என்று இவர்களுக்கும் ஆசனம் கொடுத்தாள் என்றவாறு.

சுழிபடு கங்கைச் சடிலவா னவன்றன் சோமவா ரத்தினிற் றெக்க
பழிபடு தீமை முனிந்தவே தியரைப் பன்னிய ரோடுபன் முறையால்
வழிபடு மமையத் திவர்முக நோக்கி மைந்தரிங் கிவரென மதித்துப்
பொழியருட் கண்ணு ணகைமுகங் கோட்டிப் பொருக்கென மறைத்திது
செய்தாள். 23

இ - ள் : சுழிகள் பொருந்திய கங்கையை அணிந்த சடைமுடியை யுடைய பரமசிவனுக்குரிய சோமவார தினத்தில் தன்னிடத்தில் வந்திருக் கும் பிராமணர்களை அவரவர்கள் மனைவியருடன் பலமுறையோடு பூசை செய்யுங்காலத்தில் இவர்கள் முகத்தைப் பார்த்து இவர்கள் இருவரும் ஆண்மக்களென்று தனக்குள் அறிந்துகொண்டு அருளைப் பொழிகின்ற கண்ணையுடையவள் வெறுப்பினால் பொலிவுள்ள முகத்தைச் சற்று வளைத் துக்கொண்டு பிறகு விரைவுடன் அதை மறைத்து இக்காரியம் செய்தாள் என்றவாறு.

எத்திறத் தானு மடைந்தவ ரெல்லா மீசனு முமையுமே யென்ன
அத்திர விழியாள் வேதநூன் முறையு மாகம முறையுமா யடுத்துப்
பத்திசெய் பூசை விதிமுறை புரிந்து பால்பழந் தேன்கழைத் தீம்பால்
சித்திரக் கனக வள்ளத்தி னேந்திச் சிற்றுண்டி யடிசிலோ டளித்தாள். 24

இ - ள் : எந்த வேடத்தினுலாவது சோமவாரநாளில் வந்தவர்கள் எல்லோரும் பரமசிவனும் பார்வதியுமேயென்று (தனக்குள் பாவித்து) பாணமொத்த கண்களையுடையவள் வேதமுறையையும் ஆகம முறையினை யும் தழுவிப் பத்தி விளையத்தக்க பூசையை விதிதவருமல் செய்து பால், பழம், தேன், மதுரமுள்ள கருப்பஞ்சாறு என்னும் இவைகளைச் சித்திரம் அமைந்த பொற்கிண்ணத்தில் ஏந்திச் சிற்றுண்டியைச் சோற்றுடன் கொடுத்தாள் என்றவாறு.

நறுமலர் மாலை சந்தனத் தேய்வை நவையறு மாடையா பரணம்
பிறையென வொளிருங் கருப்புர நறிய பிளவுவெள் ளிலையிவை யுதவி
மறையவர் தம்மை வரதனே டுமையை வழுத்துவ போலநின் றேத்தி
நெறியிடைப் படர்தி ரெனவருள் செய்தா ணிடததே சாதிபன் மனையாள். 25

இ - ள் : மணந்தங்கிய பூமாலை, சந்தனக்குழம்பு, நல்ல ஆடை ஆபரணம், பிறைபோல் விளங்கும் பச்சைக்கருப்பூரம், மணமுள்ள பாக்குப் பிளவு வெற்றிலையென்னும் இவைகளைக் கொடுத்துப் பிராமணர்களைப் பரமசிவனையும் பார்வதி தேவியாரையும் தோத்திரஞ்செய்தல்போல அவர் கள் எதிரில்நின்று துதிசெய்து நீங்கள் நல்வழியில் செல்லுங்களென்று உத்தரவு கொடுத்தருளினுள் நிடதநாட்டரசன் மனைவி என்றவாறு.

அன்னவ ளுமையு மீசனுமென்ன வருச்சனை புரிந்தபா வனையால்
தன்னிக ரிலாத சாமவா னெடுத்த கோலம்போற் றளிரிய ருனய்
முன்னை நாண் மைந்த னென்பது மறந்து மொய்குழ லாமென முயங்கத்
தன்னெடு நெறியிற் போதருஞ் சுமேதாத் தனைமுக நோக்கிநின் றுரைக்கும்.

இ - ள் : அத்தன்மையுள்ள சீமந்தனியானவள் பார்வதியும் பரம சிவனுமாகப் பாவனைசெய்து பூசித்த நன்மையினுலே, கல்வியால் தனக்கு ஒப்பில்லாத சாமவானென்பவன் தான்கொண்ட கோலம்போலவே பெண் உருவம் அமைந்து முன்னம் தான் ஆண்மகன் என்பதையும் மறந்து மாதர் போலவே புணரவிரும்பித் தன்னுடன் மார்க்கத்தில் வருகிற சுமேதா என்பவன் முகத்தைப் பார்த்துச் சொல்லுகிருன் என்றவாறு.

துணைவ நீ போத லொழிந்திந்த வனத்திற்
றுணர்க்கொடி குலாய மண்டபத்தென்
பணைமுலை நினது மணிப்புயத் தழுந்தப்
பவளவாய் இதழ்முறை பருகி
யணைகுதி யலது மறுத்தியே லின்னே
யாருயிர் முடிக்குவ னன்றிக்
கணைபுரை கண்ணூர் விரும்பிட மறுத்தல்
காளையர்க் கறனல கண்டாய். 27

இ - ள் : துணைவனே! நீ போவதைவிட்டு இந்தக் காட்டில் பூங் கொத்துக்களையுடைய கொடிகள் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் மண்டபத் தில் என்னுடைய பருத்த தனங்கள் உன்னுடைய அழகிய புயங்களில் அழுந்தும்படி பவளம்போன்ற வாயதரத்தை முறையாகப் பருகிப் புணர்ச்சி செய் அல்லது தடுப்பையேயானால் இப்பொழுதே நான் இறந்துபோவேன்; இதுவுமல்லாமல் பாணமொத்த கண்களையுடைய மாதர்கள் விரும்பினால் சம்மதியாமல் தடுப்பது ஆடவர்க்குத் தர்மமல்ல என்றவாறு.

என்றிவை மொழிந்து காமநோய் தலைக்கொண் டிரத்தலு மேகிடுஞ் சுமேதா
தன்றுணைத் தோழன் விஞ்ஞைதவாய் மையினல் சாற்றிய திதுவென வெண்ணி
ஒன்றெடுத் துரையான் வழிச்செலக் கண்ட வுற்பல விழியினள் மீட்டும்
பொன்றிணி தோளா யெனையணை ந் தன்றிப் போகலை யெனச்சென்று
தடுத்தாள். 28

இ - ள் : இந்தப்பெண்ணானவள் இவ்வாறு தொடர்ந்து காமநோய் அதிகரித்து இரந்து சொல்லுதலும் செல்லுகின்ற சுமேதாவானவன் அந்த வார்த்தையைக் கேட்டுத் தன் நட்பினன் விஞ்ஞை வார்த்தையினால் இப்படிச் சொல்லுகிறானென்று நினைத்துப் பிரதியுத்தரம், வேறொன்றுஞ் சொல்லாமல் நடக்கக்கண்ட நீலோற்பலம் போன்ற கண்களையுடைய அந்த மாது மறுபடியும், அழகு நிறைந்த தோளனே! என்னை அணைந்தல்லது நீ போகக்கூடாதென்று சொல்லித் தடுத்தாள் என்றவாறு.

வனப்புறு பெண்மை மருவிய தறியா மறையவ னடுத்தவள் வதனந்
தனைப்பிரியாத தோழனென் றெண்ணித் தருக்கொடு பொருக்கென நோக்கித்
தினைத்துணை யேனு மாண்வடி வின்றிச் செயற்கைசெய் வடிவமுங் கரந்து
கனத்தடி பரந்த முலையிளங் கொடியாய் நிற்றலுங் கண்டதி சயித்தான். 29

இ - ள் : பெண்ணுருவமைந்த சாமவானிவ்வாறு தடுக்கவே தன் தோழன் அழகுள்ள பெண்ணுருவமானதை அறியாத சுமேதாவென்னும் பிராமணன் இவன் நம் தோழன்றானே; இப்போதிவ்வண்ணஞ் சொல்லு கிறானே! இதென்ன காரணமென்று தன் மனதிலெண்ணித் தருக்குடன் விரைவாக அண்மையிற்போய் அவன் முகத்தைப் பார்த்துத் தினையளவும் ஆண்வடிவம் என்பதில்லாமல் கோலஞ்செய்யும் அவயவங்களும் மறைந்து கனமுள்ளதாய் அடிபரந்த தனங்களையுடைய இளங்கொடிபோன்ற பெண் உருவுக்குள்ள அடையாளத்துடனிருக்கவே, அதனைப் பார்த்து அதிசயித் தான் என்றவாறு.

குங்கும மெழுதிக் கதிர்த்தடி பரந்த குலவிளங் கொங்கையோ மலர்சூழ்
கங்குலிற் சிறந்தே நெறித்துநெய்த் திருண்ட கருங்குழற் கற்றையோ கலை
திங்களிற் பொலிந்த திருமுகத் தழகோ திங்களிற் கிடந்தசே லென்னப் [சேர்
பங்கய மலருங் காவியுங் கடந்த படைநெடுந் துணைவிழி வடுவோ. 30

இ - ள் : அவ்வாறு அதிசயித்தவன் குங்குமப்பூக் குழம்பினால் ரேகைகள் எழுதப்பட்டுப் பூரித்து அடிபரந்து மேலே குவிந்திருக்கும் தனங்களின் அழகினையோ, இருளைப்போலக் கருமை நிறஞ்செறிந்து நெறிப் பாகி நெய்த்துக்கறுத்த அளகபாரத்தின் அழகினையோ, பதினாறு கலை களும் நிறைந்துள்ள பூரண சந்திரன்போல ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் முகத்தின் அழகினையோ, சந்திரனிடத்தில் இரண்டு சேல்கெண்டை இருக் கிறதென்று சொல்லும்படி (முகத்தினிடத்திருக்கும்) செந்தாமரை மலரை யும் நீலோற்பல மலரையும் வென்ற வாட்படைபோல நெடிதாகிய இரண்டு கண்ணின் அழகினையோ என்றவாறு.

மாந்தளி ரனைய மேனியின் வனப்போ வரிவளை முன்கையிற் கவினோ
காந்தளஞ் செங்கை மெல்விர லணியோ கதிர்மணி மேகலை யொளியோ
ஏந்தெழி லல்குற் செவ்வியோ விவற்று ளேதையான் புகழ்ந்தெடுத் துரைக்
பூந்தவி சுறையுந் திருமக ளன்றிப் புவியில் வேருரிவள் போல்வார். [கேன்

இ - ள் : மாந்தளிரை ஒத்த மேனியின் அழகினையோ, வரிவளை அணிந்த முன்கை அழகினையோ, செங்காந்தள் மலர்போன்ற மெல்லிய கைவிரல் அழகினையோ, ஒளிபொருந்திய மணிவடமாகிய மேகலாபரணத் தின் ஒளியினையோ, அழகு பொருந்திய அல்குலின் அழகினையோ இவை களுக்குள் எதனைப் பெரிதென்று நான் தனித்தனியாகப் புகழ்ந்து சொல் லுவேன். செந்தாமரை மலராகிய இருக்கையில் வீற்றிருக்கும் திருமகளே அல்லது இவ்வுலகத்திலிருக்கும் மாதர்களில் இவளுக்கு ஒப்பானவர்கள் யாரிருக்கிருர்கள் என்றவாறு.

எனமனத் தெண்ணி மடந்தையே நானென் ருேழனோ டிவ்வன மடைந்தேன்
அனையவன் றன்னைக் காண்கிலே னின்னை யருகுகண் டதிசய முற்றேன்
புனைமலர்த் திருவே யாரை நீ யிங்குப் புகுந்தவா றென்புக லென்னச்
சுனைமலர்க்குழலாண் முறுவலித் தெனது துணைவகே ளென்றிதுசொன்னாள்.

இ - ள் : இவ்வாருக மனதிலெண்ணி, மாதே! கேள். நான் என் நட்பினனுடன் இவ்வனத்திலடைந்தேன்; இப்போது அவனைக் காணேன். அருகில் உன்னைக்கண்டு அதிசயமடைந்தேன். அலங்கரித்துச் சொல்லத் தக்கசெந்தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகள்போல்பவளே! நீ யாவள்? இவ்விடத்தில் வந்த காரணம் யாது? சொல்லென்னவே, சுனைப்பூவணிந்த அளகத்தையுடைய அந்தப் பெண்ணானவள் நகைத்து, என் துணைவனே! என்னுரையைக் கேளென்று கூறுகிருள் என்றவாறு.

முன்னை நின் றுணைவன் சாமவான் சாம வதியெனு மொய்குழ லாகி
நின்னுடை மனையாய் நின்னையே புணரு நேயத்தால் நினைத்துதி செய்தேன்
பொன்னவிர் சுணங்கென் முலையுரு வண்ணம் புணருதி பொருபடை மாரன்
கன்னலான் மெலிந்தே னென்றவ ளிரப்பக் காளைவே தியனிஃ துரைத்தான்.

இ - ள் : முன்னம் நான் உன் துணைவனுகிய சாமவானென்பவனே; இப்போது சாமவதி என்னும் பெண்ணுனேன். உன் மனையவளாய் உன்னைப் புணரவேண்டுமென்கிற இச்சையினுல் நினைந்து உன்னைத் தடுத்தேன். பொன்போல் விளங்கும் தேமல் என் தனங்களில் பொருந்தாவண்ணம் புணர்வாயாக. பொருபடையையுடைய மன்மதன் கரும்புவில்லில் பூட்டி எய்யும் பாணங்களால் வருந்தினேன் என்றவள் இரந்துகூற, வாலிபனுகிய அந்த வேதியன் இவ்வுரையைக் கூறுகிருன் என்றவாறு.

தீங்குரை செய்தாய் பாவி நீ பொல்லாய் தெருண்டசா ரச்சுதன் பயந்தே
ஓங்கிய மரபு நின்றிருக் குலமு முயர்தவப் பெருமையு மறந்து
பூங்கணி கையர்போற் றியுரை நவின்று பொற்புமத் திறத்தவாய் வேதந்
தாங்கிய நீதி நூலிவை யெல்லா ந் தணக்கவென் சமைந்தவா றென்ருன். 34

இ - ள் : பாவியே! கொடிய உரைகூறினுய்; நீ பொல்லாதவள். வேத முதலானவைகளை ஓதியுணர்ந்த சாரச்சுதனுற் பெறப்பட்ட நீ மேலான உன் மரபினையும் சிறந்த குலத்தினையும் உயர்ந்த தவப்பெருமை யினையும் மறந்து, அழகுள்ள வேசையர்போல் கொடியவார்த்தை சொல்லிக் குணமும் அதற்குத்தக்கதாய் வேதத்திற் கூறப்பட்ட நீதிசாத்திரமுறைகள் இவையெல்லாம் நீங்கும்படி இவ்வாருன காரணம் யாதோ என்ருன் எ-று.

விரிகட லுலகின் மாதருக் கெல்லாம் வேண்டுவ கலவியே யன்றே
புரியுநூன் மார்ப வென்றுணைக் கொழுந புந்தியி னையமின் றெழிக
அரிவையே யான்மற் றுணலே னென்ப தமர்ந்துநின் றிருக்கணுற் காணென்
றெரிபசும் பூணு ளவயவ மனைத்து மேந்தன்முன் புலப்படுத் தினளால். 35

இ - ள் : பரந்த கடலால் சூழப்பட்ட உலகில் வாழும் பெண்களுக் கெல்லாம் வேண்டிய பொருள் கலவியல்லவோ? முறுக்கிய முப்புரிநூல் அணிந்த மார்பனே! எனது துணைக்கணவனே! உனது மனதிலிருக்கும் ஐயத்தை இப்போது ஒழியக்கடவை. நான் பெண்மகளே அல்லது ஆண் மகனல்லேன் என்பதை உனது கண்ணுல் துரிதப்படாமல் பாரென்று விளங்குகிற பூணணிந்திருப்பவள் தன் அவயவங்களையெல்லாம் அந்தப் பிராமணனுக்கெதிரில் தெரியும்படிச்செய்தாள் என்றவாறு.

கண்டனன் மகிழா வதிசயித் திந்தக் காரிகை தன்னவ யவம்போல்
மண்டுநீர் சுலாய வையகத் தெந்த மடந்தைய ரவயவ முடையார்
அண்டர்நா யகன்றன் சோமவா ரத்தி னமர்ந்தசீ மந்தனி யகத்தில்
கொண்டபா வனையில் விளைந்தவா றென்னக் குழைந்தன னுரைமறந்
திருந்தான். 36

இ - ள் : அவள் தனது அவயவத்தைக் காட்டவே கண்டு மகிழ்ந்து அதிசயமுற்று இம்மாதினுடைய அவயவம்போல அவயவம் உடையவர்கள்

இவ்வுலகத்திலிருக்கும் மாதர்களில் யாருமில்லை. பரமசிவனுடைய சோம வாரதினத்தில் வருகிற பிராமணர்களையும் அவர்கள் பத்தினிமார்களையும் சீமந்தனி மனதில் சத்தி சிவ வடிவமாகப் பாவனைசெய்யும் தன்மையினால் இவ்வாறு விளைந்ததென்றெண்ணி மனங்குழைந்து உரையாடுவதுமின்றித் தன்னை மறந்திருந்தான் என்றவாறு.

காளைவே தியநீ யவயவமுற்றுங் கண்டனை யையமுங் கடிந்தாய்
தோளையே விரும்பி யணைகென விரந்தேன் றுயர்விடாய் கெடவணை கென்ன
வாளைநேர் விழியா ளுரைத்தலுங் கேட்ட மறைவலான் மனத்துய ரெய்திப்
பாளைசேர் கமுகின் கழுத்தினாய் கேட்டி யெனவவன் பற்பல மொழிந்தான். 37

இ-ள் : கட்டிளமையுடைய பிராமணனே! எனது அவயவமெல்லாம் கண்டனை; ஐயமும் நீங்கினை. இனி எனது தோளை விருப்பங்கொண்டு புணரென்று இரக்கின்றேன். ஆதலால் தடைசொல்லாமல் துயரமுள்ள காம விடாய் கெடும்படி அணையென்று வாளையொத்த கண்களையுடையவள் சொல்லலும், அவ்வுரையைக்கேட்ட பிராமணன் மனதில் துயரமுற்றுப் பாளைகள் பொருந்திய கமுகமரத்தின் கழுத்தினைப்போலப் பசிய நிறமும் திரட்சியுமுள்ள கண்டத்தை உடையவளே! கேளென்று பல மொழிகள் கூறினான் என்றவாறு.

வேறு

வேத மும்பல மேதகு நூல்களும்
ஓதி நன்கலை முற்று முணர்ந்தேஞ்
சாதி யுந்தரு மத்தையும் விட்டிப்
பாத கந்தரு பண்பை யிழைத்தேம். 38

இ-ள் : வேதங்களும் மேன்மைபொருந்திய பல சாத்திரங்களும் கூறுகின்ற நல்ல கலைகள் முழுவதையும் உணர்ந்தோம். (இப்படிப்பட்ட தன்மையுள்ள நாம் இப்போது) குல ஒழுக்கத்தையும் தரும நெறியையும் விட்டுப் பாவத்தைத் தரும்படியான இந்தச் செய்கையைச் செய்தோம் என்றவாறு.

உற்ற தாதைய ரோடு முணர்த்தோம்
வெற்றி வேலிறை வஞ்சம் விளைப்பான்
சொற்ற கைதவஞ் சூழ்ந்தன மாகி
நற்ற வக்கொடி பானணு குற்றேம். 39

இ-ள் : நாம் அரசனிடத்துக்குப்போனபோது அவன் சொன்னதை நம்முடைய தந்தையரிடம் கூருமற்போனோம். கெடுதி நேரிடும்படி அரசன் சொன்ன வஞ்சனைக்கு உடன்பட்டவர்களாய் நல்ல தவமுள்ள சீமந்தனியிடத்துக்குப் போனோம் என்றவாறு.

கைத வத்தை யறிந்துமக் கற்பினள்
செய்த வத்திற் சிவனே டுமையென
ஐய மற்றங் கருச்சனை செய்தலின்
தைய லித்துயர் தன்னெடு சார்ந்தனம். 40

இ-ள்: கற்பினையுடைய அந்தச் சீமந்தனி நம்முடைய வஞ்சகத்தை அறிந்துகொண்டும் அவள் தவத்தினல் பார்வதியும் பரமசிவனுமாக நம்மைப்பாவித்து உண்மையாகப் பூசித்ததினல், பெண்ணே! இத்துயரம் அடைந்துவந்தோம் என்றவாறு.

புன்மை நெஞ்சிற் பொறியறு பாதக
வன்மை வஞ்சர் வருவதெண் ணுமலே
நன்மை யோர்க்கு நவைக ளியற்றிடு ந்
தன்மை தங்களுக் கேவந்து சாருமால். 41

இ-ள்: சாத்திர அறிவில்லாமல் பாதகங்களைச் செய்யும்படியான விவேகமற்ற வலிய மனதுள்ள வஞ்சகர்கள் மேல்வருவதை எண்ணுமல் பெரியோர்கட்குச் செய்யுங் குற்றமானது தங்கட்கே வந்துசாரும் எ-று.

ஆதலா லிவ் விடரை யருந்தவ
மாத வத்தினின் மாற்றுவ மாற்றிடாப்
போது நின்னைப் புணர்வது திண்ணமென்
ரேதினன் மறுத்தாள் பின்னு மோதினன். 42

இ-ள்: ஆகையால், இப்போது நமக்கு நேரிட்ட இத்துன்பத்தை அரிய தவத்தினல் நீக்கிக்கொள்ளுவோம்; அங்ஙனம் மாற்றக்கூடாத போது நிச்சயமாக உன்னைப் புணருகிறேனென்று சொன்னன். அதனைக் கேட்ட அவள் விகாரத்தாற்றடுக்கவும் பின்னும் கூறுகிருன் என்றவாறு.

வேழ மென்பிடி போலு விளங்கிழா
யாழி னேர்மண நங்குலக் கேற்பதோ
சூழி யானைய மன்னர் தொழிலென்ருன்
மாழை மான்விழி மாது மிதுசெய்தாள். 43

இ-ள்: பிடியானையின் நடைபோன்ற நடையையுடைய பெண்ணே! காந்தருவமணம் நமது குலத்துக்கேற்றதோ? அது முகபடாமணிந்த யானைகளையுடைய அரசர்க்குரிய தொழிலாமென்ருன். (அவனவ்வாறு) சொல்லியும் அவள் இவ்வாறு செய்தாள்; என்னவெனின் என்றவாறு.

காம பாணங் கலக்கக் கருத்தழிந்
தாம தல்ல விதென்ப தறிவுருள்
வாம முன்கை வலிவினிற் பற்றியே
தாம மென்குழ ரேய்ந்திடர் நீங்கினள். 44

இ - ள் : காமபாணமானது கலக்குவதினாலே இந்தக் காரியஞ் செய்யலாமென்றும் செய்யலாகாதென்றும் எண்ணாமல் அவனது அழகிய முன்கையைப் பற்றியிழுத்து வலுவில் புணர்ந்து துன்பம் நீங்கினாள் எ-று.

தூமமென்குழல் - அகிற்புகையூட்டிய குழல்.

வன்பி லன்னவள் புல்லவு மைந்தனும்
இன்ப முற்றில னின்னலுற் றேதுவான்
முன்ப யந்தநந் தாதையர் முன்சென்று
துன்ப முற்ற தொடர்பை யுணர்த்துவான். 45

இ - ள் : அவள் இவ்வாறு பலவந்தமாகப் புணர்ச்சி செய்யவே அவன் இன்பமுறாமல் துன்பங்கொண்டு சொல்லுகிறான்: முன்னம் நம்மிருவரையும் பெற்ற பிதாக்களிடத்தில் போய்த் துன்பமடைந்த இந்த நிகழ்ச்சியைச் சொல்லுதற்கு என்றவாறு.

வருதி யென்னொடு மென்று வழிக்கொளா
அரிதி னீளிடை நீங்கி யகனகர்
பரிதி யன்னதன் றாதைதன் பான்மரீஇச்
சுருதி நூல்வல்ல தோன்றல் சொன்னரோ. 46

இ - ள் : பெண்ணே! என்னுடன் வாவென்று நடந்து அரிய வழியைக் கடந்துபோய் விசாலமுள்ள நகரத்திற் சேர்ந்து சூரியன்போன்ற தன் தகப்பனிடத்தில் சேர்ந்து அந்தப் பிராமணன் சொல்லுகிறான் எ-று.

சுருதி நூல்வல்லதோன்றல் - வேதங்களுணர்ந்த பிள்ளை.

நஞ்சை யொத்த விதர்ப்பத் திறைநவில்
வஞ்ச கத்துரு வஞ்சம ரீயதும்
பஞ்சி னிற்றிகழ் சீறடிப் பாவைகண்
டஞ்ச லித்தலி லாயிழை யானதும். 47

இ - ள் : நஞ்சினை ஒத்த விதர்ப்பநாட்டரசன் கூறிய வஞ்சகத்தினால் வஞ்சக வேடங்கொண்டு தாங்கள் சென்றதையும் சீமந்தனி தங்களைக் கண்டு பூசை செய்தலினால் தனது துணைவன் பெண்ணானதும் எ - று.

பஞ்சினிற்றிகழ் சீறடிப்பாவை : செம்பஞ்சுக் குழம்புடன் விளங்கும் பாதத்தையுடைய சீமந்தனி.

அழுது கூறின னன்னவை யாவையும்
பழுதி லாதவன் றாதையப் பாவையாந்
தொழுகு லத்தவன் றாதைக்குச் சொல்லலும்
முழுதுங் கேட்டவன் மொய்ம்பொடு சீறியே. 48

இ - ள் : அழுதுகொண்டு சொன்னான். அவன் கூறியதெல்லாம் குற்றமற்ற தந்தை கேட்டுப் பெண்ணுருவாகிய பிராமணனுடைய தந்தை யிடத்தில் போய்ச் சொன்னான். அச்செய்தியையெல்லாம் கேட்ட அவன் மிக்க கோபங்கொண்டு என்றவாறு.

காய்ந்த வெஞ்சின மோடு கனன்றெழா
ஆய்ந்த சிந்தைய னல்லவை செய்திடும்
வேந்தன் முன்னர் விரைந்துசென் றேமைந்தன்
போந்த வாறும் புகுந்தது மோதியே. 49

இ - ள் : வெதும்பிய வெஞ்சினத்துடன் மனம் கொதித்தெழுந்து அந்தப் பிராமணன் தகாத காரியத்தைச் செய்த அரசனிடத்துக்கு அதி விரைவாகச்சென்று தனது புதல்வன் சிமந்தனியிடத்துக்குப் போன முறையையும் அதன்பிறகு நேரிட்ட முறைமையினையும் சொல்லி எ - று.

ஆய்ந்த சிந்தையன் வேதங்களை ஆராய்ந்த மனத்தினன்.

வேறு

ஆதுல ரரும்பொருள் விரும்பின ரடைந்தால்
ஈதலது வன்றிநிதி யில்லையகல் வீரென்
றோதலிவை யன்றியுறு லோபகப டத்தான்
மாதுய ருழப்பவிடன் மன்னவ வழக்கோ. 50

இ - ள் : அரசனே! இரப்பவர்கள் பொருளை விரும்பிவந்தால் கொடுக்கவேண்டும்; அப்படி இல்லாவிட்டால் என்னிடத்தில் பொருள் இல்லையென்று சொல்லவேண்டும். இவ்விரண்டு செய்கையும் இல்லாமல் உலோபத்தன்மையுள்ள கபடத்தினால் இரப்பவர்கள் மிக்க துயரத்தை அடையவிடுதல் மன்னவர்கள் முறைமையோ என்றவாறு.

ஈசன்விர தத்தினை யியற்றுமவ டன்பா
னீசர்புரி தீமைசெயு நீதுய ருறுமே
மாசின்மறை யோதிய மகற்கிது விளைத்தாய்
சீசிநினை மன்னவர் சிரிக்கவசை கொண்டாய். 51

இ - ள் : சிவவிரதம் இருப்பவர்களிடத்தில் நீசர் செய்கிற பாபச் செய்கையைச் செய்த நீ துன்பமடையாமல் குற்றமில்லாத வேதங்களை ஓதி உணர்ந்த எனது புதல்வனுக்கு இத்தகைய தீமையை உண்டாக்கினாய். சீ! சீ! உன்னை அரசர்கள் நகைக்கும்படி வசை தேடிக்கொண்டாய் எ - று.

புத்திரனில் லாதவர்கள் பொன்னுலகெய் தாரென்
றித்தகைய புத்திரனை யீன்றினி நமக்கே
யுத்தம வரும்பதமு முண்டென மதித்தேன்
சித்தமு மழித்துநர கச்சிறையி லிட்டாய். 52

இ-ள்: புத்திரன் இல்லாதவர்கள் சுவர்க்கலோகத்தை அடையார்கள். கல்வி கேள்விகளால் பெருமையுடைய இப்புத்திரனை நாம் பெற்றமையால் இனி நமக்கே அரியதாகிய நல்ல பதம் உண்டென்று மதித்துக் கொண்டிருந்த எனது எண்ணத்தைக்கெடுத்து நரகமாகிய சிறையினில் அடைத்திட்டனையே என்றவாறு.

மைந்தன்மண நல்லணிகள் கண்டுமகிழ் வெய்தும்
இந்தவிழி யாலிவன திவ்வுருவு காண
முந்தைவினை யோவிது முடித்ததுகொ லென்னுச்
சிந்தையல மந்தலறி மீட்டுமுரை செய்தான். 53

இ-ள்: புதல்வனுடைய நல்ல மணக்கோலத்தைக்கண்டு மகிழ்ச்சி அடையத்தக்க கண்களால் இவனுடைய இந்தப் பெண்ணுருவைக் காணுதற்குப் பழவினை நேரிட்டதோ அல்லது இப்பிறப்பில்செய்த விதிதான் இப்படி முடிந்ததோவென்று மனமானது சுழலும்படி அழுது மீண்டும் சொல்லுகிறன் என்றவாறு.

இவ்வுரு வெடுத்திவ னிருப்பவினி யானும்
அவ்வையு மனத்துயர் பொறுத்தலரி தம்மா
கவ்வையுட லத்திலுயி ரித்தலை கழிப்பேம்
பவ்வவுல கத்தவர் பழிக்கவுனை யென்றான். 54

இ-ள்: இந்தப் பெண்ணுருவெடுத்து இவனிருப்பதினால் இனி நானும் இவனுடைய தாயுமாகிய நாங்களிருவரும் மன வியாகூலத்தைச் சகிப்பதரிது; ஆகையால் கடல்சூழ்ந்த இந்த உலகத்தில் உள்ளவர்கள் உன்னைப் பழிக்கும்படி துன்பத்துக்கு இடமாகிய உடம்பிலிருக்கும் உயிரை உனக்கு எதிரிலே ஒழித்துவிடுகிறோமென்று சொன்னான்.

சொல்லிய மொழிக்கனல் செவித்துளை வெதுப்ப
நல்லுரை கொடுக்கவறி யானடு நடுங்கிச்
சல்லிய முதைப்பமரு மங்கிழி தரச்சாய்
வல்லிய மெனப்புவியின் மன்னவன் விழுந்தான். 55

இ-ள்: இவ்வாறு அந்தப் பிராமணன் சொல்லிய சொல்லாகிய தீயானது தனது காதின் துளையைச் சுடுதலினால் பிராமணனுக்கு நல்ல

வார்த்தை சொல்லத் தெரியாதவனாய் நடுக்கங்கொண்டு முள்ளம்பன்றி கிழிக்க மார்பு பிளந்து விழுகிற புலியைப்போல் அந்த அரசன் மண்ணில் விழுந்தான் என்றவாறு.

வீழ்ந்தவன் மனத்தையிது வெய்யசுடர் வேற்போல்
போழ்ந்திட வெருக்கொடு பொருக்கென வெழுந்தாங்
காழ்ந்தவிர தத்திருவி னற்புதம் வழுத்தாத்
தாழ்ந்தனன் முனித்தலைவர் தம்மொடிது சொன்னான். 56

இ-ள்: அப்படி விழுந்தவனது மனதைப் பிராமணன் சொன்ன வார்த்தையானது கொடியசுடர்வேல் போலப் பிளப்பதினால் அச்சங் கொண்டு விரைவில் எழுந்து முதிர்ந்த விரதத்தையுடைய சீமந்தனியின் அற்புதமான செய்கையைப் புகழ்ந்து வணங்கி முனிவர்களில் சிறந்தவர் களாகிய முனிவர்களுடன் இந்தச்செய்தியைக் கூறுகிறான் என்றவாறு.

கேட்டய லிருந்தமுனி வீரிஃது கேண்மி
னாட்டமொரு மூன்றுடைய நம்பனை வழுத்தும்
வாட்டமி றவத்தினண் மதித்தபடி மாதாய்க்
காட்டியது பாவமொரு கட்டுரையு முண்டோ. 57

இ-ள்: வந்த பிராமணன் சொல்லியதைக் கேட்டுக்கொண்டு என் அருகிலிருக்கும் முனிவர்களே! நான் சொல்லும் இந்தமொழியைக் கேளுங் கள்: முக்கண்களையுடைய பரமசிவனைத் துதிசெய்கிற தவறுதலில்லாத தவநெறியையுடைய சீமந்தனி தனது மனதில் நினைத்தபடி இப்பிராமணன் மகன் பெண்ணுருவமானது எனது பாவமல்லது வேறு சொல்ல ஒரு கட்டுரையுமுண்டோ என்றவாறு.

வந்தமறை மாணிபெறு வல்லுரு வொழிப்பான்
எந்தவழி மாதவ மியற்றிடுவன் யானீர்
அந்தவகை யோதுகென வாங்கர சுரைப்பப்
பந்தமில் பரத்துவச மாமுனி பகர்ந்தான். 58

இ-ள்: வேதங்கள் உணர்ந்து பிரமசாரியாகிய பிராமணனுடைய புத்திரன் அடைந்த (எளிதில் ஒழித்தற்கரிய) பெண்ணுருவத்தை ஒழிக்க நான் எந்த முறைமையினால் பெரிய தவத்தைச் செய்குவேன். நீங்கள் அந்தவகையைச் சொல்லுங்களென்று அரசன்சொல்லப் பாசங்களை ஒழித்த பாரத்துவாசமுனிவர் சொல்லுகிறார் என்றவாறு.

கண்ணுதல் கழற்றுணை கருத்துற வழுத்தும்
புண்ணியர் தருக்கும்விர தத்தினது பொற்பும்
விண்ணுல கினிற்பழ விரிஞ்சன்முத றேருன்
மண்ணுல கினிற்சிறிய மானிடர்கொ றேர்வார். 59

இ - ள் : பரமசிவனுடைய இருதிருவடிகளும் மனத்தில் பொருந்தும்படித் துதிசெய்யத்தக்கதாய்ப் புண்ணியவான்கள் களிப்புக்கொள்ளும் விரதத்தின் பெருமையைப் பழமையான பிரமன் முதலாகிய தேவர்களும் அறியமாட்டார்கள் என்றால் இம்மண்ணுலகில் இருக்கும் மானிடர்களோ அறியத்தக்கவர்கள் என்றவாறு.

வேறு

எப்பாதகஞ் செய்துபி னெப்பரி சுற்று ளோருஞ்
செப்பாரிளங் கொங்கை மனோன்மணி ஈசன் றேவி
துப்பார்மலர்ச் சேவடி போற்றித் துதிப்ப ராயின்
தப்பாமலெய் துங்கதி தீமை தணந்து போமால். 60

இ - ள் : எவ்விதமான பாதகங்களைச்செய்து பின்பு எத்தன்மையை அடைந்தவர்களும் மனோன்மணியாய்ப் பரமசிவன் தேவியாகிய பார்வதியின் திருவடிகளைத் துதிசெய்வார்களானால் தவறுபடாமல் நல்லகதிகிடைக்கும்; தீமையானது நீங்கிவிடும் என்றவாறு.

செப்பா ரிளங்கொங்கை: பொற்செப்பினையொத்த இளங்கொங்கை எனவும், துப்பார்மலர் சேவடி: செம்மை நிறந்தங்கிய தாமரைமலர்போன்ற திருவடிகள் எனவும் பொருள்கொள்க.

வெங்காரிருள் பானு விளங்க வொதுங்கு மாபோல்
கொங்கார்குழற் பார்வதி யேமூல குங்கொ டுத்தாண்
மங்காதவன் பின்வழி பட்டவர் தங்கண் மாட்டுத்
தங்காதுதீ மையிதற் கேமறை சான்று வேந்தே. 61

இ - ள் : சூரியன் உதயமானால் மிக்க கருமைநிறமுள்ள இருள் நீங்கிவிடுதல்போலப் பதினான்கு உலகங்களையும் ஈன்ற இயல்பான மணமுள்ள அளகத்தையுடைய பார்வதிதேவியாரைக் கெடுதலில்லாத அன்புடன் பூசை செய்தவர்களிடத்தில் யாதொரு பொல்லாங்கும் தங்காது. அரசனே! இதற்கே வேதம் சான்றாக இருக்கிறது என்றவாறு.

ஆனாத துன்ப மனக்கோட்ட மகற்றி ஞானக்
கானார்குழ லம்மையை நாடிக் கருத்தின் வைத்துப்
பானாளி ரவினிம் மந்திரம் பற்றி யோதி
நானாவித மாம்வழி பாடு நயந்து செய்வாம். 62

இ - ள் : அரசனே! தேவிபூசை (இத்தன்மை உடையதாதலால்) நீங்காத துன்பமுள்ள மனதில் பற்றியிருக்கும் காமமுதலாகிய குற்றங்களை நீக்கி ஞானமாகிய மணந்தங்கிய அளகபாரத்தையுடைய உமையம்மையைப்

பாவனைசெய்து மனத்தில்வைத்து, நடு இரவுப்பொழுதில் இந்த மந்திரத்தை இடைவிடாது உச்சரித்துப் பலவிதமான பூசையும் அன்புடன் செய்வாயாக என்றவாறு.

என்று முனிவ னுமைமந்திர மீதென் றீந்து
நன்று யகிதன் றிருக்கோயிலி னுளும் வைகிப்
பொன்னுரை மார்ப புரிபூசனை யென்ன லோடுங்
கொன்றுரும் வேலா னிமவான்மகள் கோயில் புக்கான். 63

இ-ள்: பாரத்துவாசமுனிவர் இவ்வாறு சொல்லி உமையம்மை மந்திரத்தை உபதேசித்துப் பொன்னாரம் அணிந்த மார்பனே! பார்வதி தேவியாரின் ஆலயத்தில் போயிருந்து நாள்தோறும் பூசைசெய் என்று சொல்லவும், அவ்வரசன் பார்வதியார் கோயிலில் போனான் என்றவாறு.

கொன்றுரும் வேலான்: பகைவர்க்கு அச்சத்தைத் தருதற்கு ஏதுவாகப் பொருந்தியவேல் என்று பொருள்கொள்க.

பொறியைந்து மாற்றிப் புலனும் மவையோடு போக்கி
நெறிநின்ற சிந்தை நிருபனருட் டொண்டு பூண்டு
மறியொன்று செங்கை வரதன்றிருத் தேவி பூசை
பிரிதன்றிக் கங்கு லொருமூன்றவண் பேண லோடும். 64

இ-ள்: ஐம்பொறிகளை மாற்றி அவற்றுடன் ஐம்புலன்களையும் ஒழித்து நல்ல நெறியில் நின்ற சிந்தையையுடைய அரசன் வரம்பெறுதற்கேதுவான அடிமைத்திறம் பூண்டு மான்பொருந்திய திருக்கரமுள்ள பரமசிவனுடைய சிறந்த தேவியாராகிய உமாதேவி பூசை யாதொரு குறைவும் இல்லாமல் அந்த ஆலயத்தில் மூன்றுநாள் செய்யவும் என்றவாறு.

அற்றைப்படு கங்குலி னம்மையு முண்ம கிழ்ந்து
கொற்றச்சுடர்வே லிறைவன் முனங் கோடி கோடி
கற்றைக்கதிர் வெண்மதி போனிழன் மேனி காட்டப்
பொற்றைத்திருக் கோயிலு ணின்றும் புறம்பு வந்தாள். 65

இ-ள்: அந்த மூன்றும்நாள் இரவில் பார்வதியார் திருவுள்ள மகிழ்ந்து அவ்வரசனுக்கு எதிரில் நிறைந்த வெண்கதிரையுடைய அநந்த கோடி சந்திரர்கள்போல ஒளிவிளங்கும் திருமேனி காட்சிகொடுக்கப் பொன் மலைபோன்ற திருக்கோயில் புறத்துவந்தாள் என்றவாறு.

வந்தாளை வணங்கி வழுத்திய மன்னர் மன்னன்
முந்தாகுலந் தீர்ந்தன மென்றுள முன்னி நின்றுன்
நந்தா விளக்கே யன்பர்க ணயந்த பொன்னே
சிந்தா மணியே சிறியேன்றுயர் தீர்த்தி யென்றுன். 66

இ - ள் : அந்த அரசன் தனக்குக் காட்சிகொடுத்த பார்வதிதேவி யைத் தொழுது நமது துயரந்தீர்ந்தோம் என்பதாக எண்ணங்கொண்டு நின்று கெடாத ரத்தின தீபமே! பரமசிவனின் இடப்பாகத்தை விரும்பிய தாயே! அடியார்க்குச் சிந்தாமணி போன்றவளே! எளியேனுடைய துயரத் தைத் தீர்த்தருளென்ருன் என்றவாறு.

அன்புற் றிரக்கு மரசேயினி யஞ்ச னெஞ்சி
னின்புற்ற தேது புகலாயென் றிறைவி கேட்பத்
துன்புற் றவிந்த மறையோன்சிறு தோன்றல் வேட
முன்பிற் றிகழ வருளென்றனன் மூரி வேலோன். 67

இ - ள் : இவ்வாறு வரங்கேட்பவனை நோக்கி அன்புடையவனுய்த் துதிசெய்கிற அரசனே! இனிப் பயப்படாதே; உனது மனதிலுண்டான விருப்பம் யாதென்று உமையம்மையார் கேட்கத் துன்பம் அடைந்திருக்கும் இந்தப் பிராமணப் பிள்ளையானவன் முன்போல் ஆணுருவம் அடையும்படி தாயே! அருள்செய் என்று விண்ணப்பம் செய்தான் என்றவாறு.

பருவத் தொருகோடி தவத்துளம் பற்றி னலும்
நிருபற் கிறைகே ளெனதன்பர் நினைந்த பான்மை
யொருவர்க்குமெம் மீசர் தமக்கு மொழிக்க லாமோ
தருகுற்றனம் வேறுள கேளெனத் தையல் சொன்னள். 68

இ - ள் : அரசனே! கேள்; ஒருகோடி ஆண்டு தவத்தில் மனத்தை வைத்தாலும் என் அன்பர்கள் நினைத்ததன்மையை எம்மிறைவருக்கும் மற்ற யாவருக்கும் ஒழிக்கக்கூடாது. ஆதலால் வேறே வரம்கேள் தரு கிறேமென்று பார்வதிதேவியார் சொன்னாள் என்றவாறு.

நல்லாயிவன் மைந்தனை யின்றி நவையு றுமல்
இல்லாள்வயிற் றின்னுமோர் மைந்தனை யீதி யென்று
சொல்லாமுனந் தந்தன மென்றுரை சொல்லிக் கோல
வில்லார்நுத லாளிது மீட்டும் விளம்ப லுற்றாள். 69

இ - ள் : தாயே! இவன் புதல்வரின்றித் துன்பப்படாமல் இவன் மனைவி வயிற்றினிடமாக இன்னுமொரு புதல்வனை அருள்செய் என்று அரசன் விண்ணப்பம் செய்வதற்குமுன் அப்படியே கருணை செய்கிறே மென்றுகூறி அழகிய வில்லையொத்த நெற்றியையுடைய பார்வதிதேவியார் மீட்டும் இவ்வுரை கூறலானாள் என்றவாறு.

மயிலொத்த சாமவதி தன்னையிம் மைந்த னுக்கே
பயில்வுற்ற வேதவிதி யேமணம் பண்ணு விப்பாய்
வெயிலொத்த வேலாயெனச் சொல்லி விரைவி னேகிக்
குயிலொத்த மென்சொல் லுமையாடிருக் கோயில் புக்காள். 70

26

இ - ள் : அரசனே! மயிலையொத்த சாயலையுடைய சாமவதியென்னும் இம்மாதினை வழங்கப்படுகின்ற வேத விதிப்படி இந்தப் பிராமணன் பிள்ளைக்கே மணம் செய்விக்கக் கடவையென்று சொல்லி உடனே பார்வதி தேவியார் திருக்கோயிலுக்கு எழுந்தருளினாள் என்றவாறு.

வெங்கோப யானைவிறன் மன்னவன் வியந்து சாலப்
பொங்கோத வேலைப்புவி போற்றவிப் பூவை தன்னை
சங்கோத விம்ம மறைமாணி தனக்கு நல்கிக்
கொங்கோதி யோடுமனை வாழ்க்கை குறித்து வாழ்ந்தான். 71

இ - ள் : இவ்வாறு கூறிய உமையம்மையாருடைய திருவாக்கைக் கேட்ட அவ்வரசன் மிகவும் மகிழ்ந்து இவ்வுலகத்தில் உள்ளவர்கள் வாழ்த்தவும், சங்கநாதம் பொங்கவும், சாமவதி என்பவளைப் பிரமசாரியாகிய பிராமணனுக்குத் திருமணம் செய்வித்துத் தனது மனைவியுடன் இல்லறம் வழுவாமல் வாழ்ந்தான் என்றவாறு.

துயருற்ற தாதை மனையாளொடு சோக நீங்கி
மயர்வற்ற கேள்வி மகப்பெற்றினி தூழி வாழ்ந்தான்
அயர்வுற்ற மன்னன் மகிழ்வோங்கி யனந்த காலம்
உயர்வுற்ற செங்கோ லினிதோச்சி யுலகை யாண்டான். 72

இ - ள் : அதன்பின்பு தனது மகனைக் குறித்துத் துன்பமடைந்த தகப்பனாகிய பிராமணனும் அவன் மனைவியும் துயரம்நீங்கி மயக்கமில்லாத கேள்வியையுடைய புதல்வனைப்பெற்று நெடுங்காலம் இனிதாக வாழ்ந்தார்கள். சோர்வுற்ற அரசன் மிக்க மகிழ்வுகொண்டு மேன்மைதங்கிய செங்கோல் இனிதாகச் செலுத்தி அநந்தகாலம் உலகத்தை ஆண்டான் என்றவாறு.

மாயாத ஞான வரதனடி வாழ்த்து மன்பர்க்
கேயா தனவு முளவோவென் றியம்பி யேத்தித்
தேயாத சைவ நெறிச்சூதன் றெறிந்து கூற
ஓயாது வாழ்த்தி முனிவோர்நெஞ் சுவகை பூத்தார். 73

இ - ள் : நிலைபெற்ற ஞானவடிவினராகிய பரமசிவனுடைய திருவடிகளைத் துதிசெய்யும் அடியார்களுக்குக் கிடையாத பொருள்களுமுண்டோ? என்று சொல்லித் துதித்து அழிவுபடாத சைவ சமயநெறியையுடைய சூத முனிவர் தெரிந்துகூற அதைக்கேட்ட நைமிசாரணிய முனிவர்கள் இடைவிடாமல் வாழ்த்தி மனமகிழ்ந்தார்கள் என்றவாறு.

சீமந்தனி பாவனைபெற்ற அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 599

பத்தாவது

சிவயோகி மகிமையுரைத்த அத்தியாயம்

சீர்பெறு சித்திர வேள்வி முனித்தவர் தீவினை யற்றிடநீள்
கார்விட முற்றணி யான களத்திறை காலன் வெருக்கொளவே
பாரி னுதைத்தவர் தாளை வழுத்திய பான்மையர் பெற்றவெலாஞ்
சோர்வற வுத்தம கூறு கெனக்கதை சூத னுரைத்தனனே. 1

இ - ள் : சீர்மிக்க சிறந்த யாகஞ்செய்யும் தவசிகளாகிய முனிவர்கள் (சூதமுனிவரை வணங்கி) உத்தமரே! எங்கள் தீவினைகளெல்லாம் நீங்கும்படி மிக்க கருமைநிறந்தங்கிய அழகுள்ளதான கண்டத்தையுடைய இறையவரும் யமன் பயங்கொண்டு பூமியில் விழும்படி உதைத்தவருமாகிய பரமசிவனுடைய திருவடிகளைத் துதிசெய்த அன்பினையுடையவர்கள் அடைந்த பேறுகளையெல்லாம் சோர்வில்லாமல் அருளிச்செய்ய வேண்டுமென்ன அந்தச் சிவசரித்திரத்தைச் சூதமுனிவர் சொல்லுகின்ருர் என்றவாறு.

நாத னுருத்திர னுதியி னித்திறன் ஞாலம் விதித்ததுவும்
மேதினி யிற்சிறு மானிடர் முத்தியின் மேவ மறைப்பொருணூல்
ஓதிய தத்துவ நீதி விகற்பமு மோகைகொள் பத்தர்கள்பால்
ஏதமில் சித்திர லீலை விளைத்ததும் யாவ ருரைக்கவலார். 2

இ - ள் : நாதனுகிய ருத்திரமூர்த்தியானவர் ஆதியிலே இந்தச் சிறந்த உலகத்தைச் சிருட்டித்ததுவும், இந்த உலகத்திலிருக்கும் சிறிய மானிடர்கள் மோட்சத்தில் பொருந்த வேதப்பொருளாகிய சாம்பவமூர்த்தி வேதநூல்களில் சொல்லிய தத்துவநீதியின் விகற்பமும், மகிழ்ச்சிகொள் அன்பர்களிடத்தில் குற்றமில்லாத விநோதமான திருவிளையாடல் செய்ததுவும் யாவர் தெரிந்து சொல்லத்தக்கவர்கள் என்றவாறு.

ஆயினு மெற்கு வியாத னுரைத்தமை யாதர வத்துடனே
மேய முனித்தலை வோர்கள் செவிப்புலன் மேவ வுரைக்குவனல்
தூயன விக்கதை பாவ வனத்திரள் சூறை படச்சுடவே
காய வனற்சிகை போல்வன வற்புத காரண முற்றிடுமால். 3

இ - ள் : முனிவரில் சிறந்தவர்களே! சிவசரித்திரம் அருமையுள்ளதாயிருந்தாலும் வியாதமுனிவர் எனக்குச் சொல்லியவைகளை உங்கள்

காதுகளில் பொருந்தும்படிச் சொல்லுகிறேன். தூயவைகளாகிய இந்தச் சிவசரித்திரம் விருப்பம் உள்ளவர்களுடைய பாவமாகிய காடுகள் அழியும்படிச் சுட்டுக் காயும் தீச்சிகை போல்பவைகளாகிய அற்புதமுள்ள காரணம் பொருந்தியவைகள் என்றவாறு.

மந்தி யினஞ்செறி பொங்கர வந்தியின் மந்தர னென்றொருபேர்
அந்தணன் முன்புளன் வண்கன கங்க ளனந்த மிகுந்தமையால்
சந்தியும் வந்தனை யுஞ்சப முங்குல தந்திர மும்பிறவுஞ்
சிந்தை மறந்திழி யுங்குல மங்கையர் கொங்கை தினம்புணர்வான். 4

இ - ள் : வானரக்கூட்டம் மிகுந்துள்ள சோலைசூழ்ந்த அவந்தி தேசத்தில் மந்தரனென்கிற பெயருள்ள ஒருபிராமணன் முன்னமிருந்தான்; (அவனுக்கு) வளப்பம் பொருந்திய திரவியங்கள் அனந்தமாக மிகுதியானதினால் சந்தியாவந்தனத்தையும் சிவார்ச்சனையையும் ஜபத்தையும் தனது குலத்துக்குரிய கருமங்களையும் மற்றுமுள்ளவைகளையும் மனதிலும் நினையாமல் மறந்து இழிவான சாதியிலுள்ள குலமாதரைத் தினந்தோறும் புணருவான் என்றவாறு.

எக்குல மங்கைய ரெத்தொழி னின்ற விழிப்பின ரென்றுணரான்
மைக்கண் மடந்தைய ருற்றன ரென்ற மகிழ்ச்சியி னங்கவர்பால்
துய்க்கு மரும்பத மட்டி னறுந்தசை தொப்பிகள் கண்டவெலா
மொக்க விருந்து களிப்பி னருந்தி யுளத்தின் மகிழ்ந்திடுவான். 5

இ - ள் : இவர்கள் எந்தச்சாதி மாதரோ, எவ்விதத்தொழில் செய்கின்ற இழிவுள்ளவர்களோ என்று ஆராய்ந்து பாராதவனாய் மையணிந்த கண்களையுடைய மாதர்கள் கிடைத்தார்களென்கிற மகிழ்ச்சியினால் அவர்களிடத்தில் உண்ணுகின்ற அரிய சாதமும் மாமிசமும் பலவகையாக அருந்தி மகிழ்ந்திடுவான் என்றவாறு.

மங்கை யிளங்கொடி பிங்கலை யென்ற மடந்தை யுடன்புணரா
வங்கவள் குங்கும கொங்கை முயங்கி யழிந்தவ சம்பெறலால்
இங்கிது நன்செய லன்றிது புன்செய லென்ப துளங்கருதான்
கங்குலு நண்பக லுங்களி கொண்டு கலந்து மயங்குறுவான். 6

இ - ள் : மங்கைப்பருவமுள்ளவளாய் இளங்கொடிபோன்ற பிங்கலை என்கிற பெயரையுடைய மாதுடன்சேர்ந்து அவளுடைய குங்குமம் அணிந்துள்ள கொங்கையிற்புணர்ந்து அந்த இன்பத்தினால் அறிவழிந்து பரவசப்படுவதினால் இது நல்ல செய்கையென்றும், இது கெட்ட செய்கையென்றும், மனதில் அறியாமல் இரவும் பகலும் களிப்புள்ளவனாய்ச் சேர்ந்து மயங்கிக்கொண்டிருப்பான் என்றவாறு.

வேறு

கலைவெண்டிரை வருநஞ்சணி களகந்தர னருளே
புனையுஞ்சிவ தவமொன்றிய புனிதன்பவ மறவே
நினைவொன்றிய துரியந்தனி னிமிருந்தனி மதியால்
வினையொன்றற நிலைநின்றிடு விரதன்பெயர் விடபன். 7

இ - ள் : *ஒலிக்குங்கடலிலுண்டான விடந்தங்கிய காளகண்டத்தை யுடைய பரமசிவனது கருணையைப்பெற்ற சிவதலம் பொருந்திய பரிசுத்த னும், பிறவி நீங்கும்படி அறிவடங்கிய துரியாவத்தை போக சாக்கிராவத் தையில் பொருந்திய மதியினல் தற்செயல் என்பதொன்றும் இல்லாமல் நீங்கத் தக்கதாக நிலைதவருமல் இருக்கின்ற விடபனென்னும் பெயருள்ள வனுமாகிய ஒரு சிவயோகியானவர் என்றவாறு.*

துரியாவத்தையில் ஆன்மா தங்கினபோது ஒன்றும் தோன்ருமல் இருப்பதுபோல சாக்கிராவத்தையிலும் தத்துவ வியாபகமின்றிச் சிவத் துடன் கலந்திருத்தலால் வினையொன்றற நிலைநின்றிடு விரதன் எனக் கூறினர்.

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என அவத்தை ஐந்தாம்.

வந்தானிவ ருறையுந்திரு மனைமுன்றிலின் வரலுங்
கொந்தார்குழ லவளோடுமிம் மறையோனெதிர் குறுகி
முந்தாவுப சாரங்களு முறையின்படி யுதவிச்
சந்தார்துகண் மலரொன்றிய சயனத்திடை வையா. 8

இ - ள் : *மேற்சொல்லிய பிராமணனும் அவனுடைய மனைவியும் வாழும் வீட்டின் முற்றத்தில் வந்தார். அவ்வாறு வரலும் கொத்தாகிய மலர்கள் அணிந்த அளகபாரத்தையுடைய தனது மனைவியுடன் இந்தப் பிராமணன் சிவயோகிக்கு எதிர்சென்று முறையின்படி உபசாரங்கள் செய்து அழகுபொருந்திய மகரந்தம் நிறைந்த மலர்பரப்பிய ஆசனத்தில் இருக்கச்செய்து என்றவாறு.*

உபசாரங்களும் உதவியென்றது அருக்கியம் பாத்தியம் ஆசனம் கொடுத்தீ எனக்கொள்க.

சேதாவி னறும்பாலொடு தேமாங்கனி பழனும்
நாதாநுக ருதியென்றவர் நனிநீரொடு நல்கிப்
போதார்மலர் தூவிக்குளிர் சந்தம்புனை வித்தங்
கோதாமுக மனகூறிவெள் ளிலைபாக்குட னுதவி. 9

இ - ள் : அவர்கள் நல்ல பசுவின்பாலும் மதுரமுள்ள மாம்பழமும் நாதனே! உண்ணென்று கொடுத்தபின்பு குளிர்ச்சி தங்கிய நன்னீருங் கொடுத்து மலரால் அர்ச்சித்துச் சீதளமுள்ள சந்தனம் அணிந்து கொள்ளும்படி வேண்டி நல்ல உபசாரவார்த்தைகளுஞ் சொல்லிப் பின்பு தாம்பூலமும் கொடுத்து என்றவாறு.

அற்றைப்படு கங்குற்பொழு தகலுந்துணை யளவுங்
கற்றைக்குழன் மடவாளொடு கலைமாமறை யவனும்
பற்றற்ற முனித்தேவிரு பாதத்துணை வருடச்
சிற்றச்சிறு காலேமுனி சென்றனிவர் நின்றார். 10

இ - ள் : அன்று இரவு முதல் விடியற்காலம் வரையில் அந்தப் பிராமணனும் அவன் மனைவியும் தம்முடைய இரண்டு பாதங்களையும் வருடிக்கொண்டிருக்கும்படி (படுத்துக்கொண்டிருந்த) இருவகைப்பற்றும் நீங்கினவராகிய அம்முனிவர் உதயகாலத்துக்கு முன்னமே எழுந்து போய் விட்டார். அவர்களிருவருந் தங்களிடத்திலேதானே இருந்தார்கள் எ - று.

இருவகைப் பற்றுவது உட்பற்று, புறப்பற்று. கற்றைக் குழல் மடவாள்: கற்றையாகிய அளகத்தையுடையவள். கலைமாமறையவன்: சாத்திரங்களுடன் வேதமுணரத்தக்க பிராமணகுலத்தவன்.

பின்னும்மறை யவனுஞ்சிறு பிறைவாணுத லவளும்
மன்னுங்கழை மதனுந்துணை வியுமென்ன மணந்தே
துன்னுஞ்சில நாள்சென்றன தொடரும்பழ வினையான்
முன்னும்பினு மாயங்கவ ரிருவோரு முடிந்தார். 11

இ - ள் : பின்னும் அவர்களிருவரும் மன்மதனும் ரதியும்போல இன்பம் அனுபவித்துக்கொண்டிருந்து சிலநாள் சென்றபின்பு பழவினைத் தொடர்ச்சியினால் முன்னும் பின்னுமாக அந்த இருவரும் இறந்து போனார்கள் என்றவாறு.

வேறு

முடிந்த வேதியன் றருமமு நீதியு முறைமையும் பிறழாது
தடிந்து மாமுகில் பொழிதர வளம்படு தசானனம் தனியாளும்
கடிந்த தீவினை வச்சிர வாகுவின் காதலி யுதரத்தின்
அடைந்து நல்லுருத் தங்கிய கருப்பமா யமர்ந்திடு மமையத்தில். 12

இ - ள் : இவ்வாறு இறந்த பிராமணன் தருமமும், நீதியும், முறைமையும் மாறுபடாமல் மேகங்கள் மின்னி மழைபொழியும்படி வளப்பமுள்ள தசானனநாட்டை ஆளுகின்ற வச்சிரவாகுவென்னும் அரசனின் மனைவியின்

கருவினை அடைந்து நல்லுருவம்தங்கிய கருப்பமாய்ப் பொருந்திய காலத்தில் என்றவாறு.

கருப்ப முற்றவள் பின்வருந் தேவிய ரனைவருங் கனன்றீண்டி
விருப்ப மாயவள் கட்டுரை குழவியை விளிவுசெய் குவமென்ன
உருப்ப வல்விட முணவினை டளித்தன ருண்டன ளுதரத்தின்
நெருப்பை யொத்துநின் றெரிதந்து கரிந்தது நிகரிலா ளுருவம்மா. 13

இ - ள் : கருப்பம் அடைந்தவளுக்குப் பின்வந்த தேவிமார்கள் (மனப் பொருமையினல்) கோபங்கொண்டு எல்லோரும் ஒன்ருகச்சேர்ந்து மூத்தவள் வயிற்றில் பொருந்திய சிசுவைக் கொன்றுபோடுவோமென்று (ஆலோசனைசெய்து) அவளுக்கு விருப்பமான உணவைக் கொடுப்பவர்கள் போல நஞ்சைக்கலந்து கொடுத்தார்கள். அவள் அதனை அறியாமலே உண்டாள். அந்த நஞ்சானது அவள் வயிற்றில் போனவுடன் நெருப்பை ஒத்து எரிந்தது. அதனல் அவள் உருவம் கரிந்தது என்றவாறு.

உண்ட வல்விட வெம்மையாற் பிணிபல வுதரத்து முடன்முற்றுங்
கொண்டு மூழ்வினைப் பகுதியான் முடிந்திலள் குழவியும் விளியாமல்
அண்டர் நாயக னருளின லீன்றன ளீன்றலு மழிநோயின்
புண்டனு னலிந் தரற்றினர் சுமதியும் புதல்வனும் பொருதந்தோ. 14

இ - ள் : உண்ட நஞ்சின் கொடுமையினல் வயிற்றிலும் உடல் முழுவதும் பலவகையாகிய வியாதிகொண்டும் ஊழ்வினைப் பிரிவினல் இறந்திலளாய்ப் பரமசிவனுடைய கருணையினல் இறவாமலிருந்த குழந்தையைப் பெற்ருள். பெற்ற பின்பு சுமதியென்னும் தாயும் அவள் புதல்வனும் அழிநோயுள்ள புண்ணினல் வருந்திச் சகிக்கமாட்டாமல் அழுதார்கள் என்றவாறு.

அந்தோ - இரக்கச்சொல்.

இடைவி டாதிவ ரரற்றிடு மோதைகேட் டிறையவ னயர்வெய்தி
அடையும் வாகடர் தங்களை யிப்பிணி யகற்றுதி ரெனலோடும்
மிடையு மாயுணூற் கல்வியான் வழிக்குல விஞ்சையான் வினையத்தால்
உடைய நன்மருந் தளப்பில செய்தலு முறுபிணி தணியாதால். 15

இ - ள் : இவ்வண்ணம் இவர்கள் இடைவிடாமல் அழுகிற ஓசையை வச்சிரவாகுவென்னும் அரசன் கேட்டுத் துயரமடைந்து வருகின்ற வயித்தியர்களை நோக்கி இந்த வியாதியை நீக்குங்களென்று சொல்லத் தாங்கள் ஆராய்ச்சி செய்திருக்கின்ற வயித்திய சாத்திரப் பயிற்சியின் திறத்தினலும் தங்கள் முன்னேர்கள் கற்பித்திருக்கும் கல்வியினலும் உத்தியினலும் செய்யப்பட்டிருக்கும் நல்ல மருந்துகள் பலபலவாகச் செய்து கொடுத்தும் தங்கிய பிணி தீர்ந்ததில்லை என்றவாறு.

வாகட முனிவரால் செய்யப்பட்ட வயித்திய நூலுக்கு வாகடம் என்றுபெயர். வயித்தியர்கள் அதனுல் வாகடர் எனப்படுவர்.

பிணிமு திர்ந்திட வாகட ரெங்களாற் பெயர்க்கரி தரிதென்ன
மணிபு னைந்ததார் மன்னவர்க் குரைத்தலு மன்னவன் மனக்கொள்வான்
அணிகொண் மேகலை மடவர லழுகையு மரும்பெறற் புதல்வன்றன்
தணிவி லாதரற் றோதையுங் கேட்டியார் தனிவிழி துயில்கிற்பார். 16

இ - ள்: வயித்தியர்கள் தங்களாற் கூடியமட்டும் பார்த்தும் பிணி தீராமல் அதிகரித்ததினுல் ரத்தினமாலை தரித்திருக்கும் அரசனைநோக்கி இந்த நோயைத் தீர்க்க எங்களாலாகாதென்று சொல்ல, அதைக்கேட்ட அவ்வரசன் நம்முடைய புதல்வன் ஓயாமல் அழுகிற ஓசையையும் அதைக் குறித்து நம்முடைய மனைவியானவள் அழுகிற ஓசையையும் கேட்டு யார்தான் உறங்குவார்கள் என்று எண்ணி என்றவாறு.

நோவி னுலுயி ரிறப்பரோ விறக்கில ரன்றியிந் நோய்நீங்கி
மேவு நல்லுருப் பெறுவரோ பெறுகிலர் வினையையார் விலக்கிற்பார்
பாவ காரியர் இவர்நம னுலயப் பழநர காற்றுது
நாவி னலெடுத் தோதொணு நரகுற நானிலந் தனில்வந்தார். 17

இ - ள்: நோயினுல் உயிரிறப்பார்களோ என்றால் இறப்பதும் இல்லை. அல்லது இந்த நோய்நீங்கி நல்ல உருவத்தை அடைவார்களோ என்றால் அடைவதுமில்லை. அடையக்கூடாத வினையை எவர்கள் நீக்கிக் கொள்ளத்தக்கவர்கள்; இவர்கள் மகாபாவிகள். நமனுடைய ஆலயத்தில் இருக்கும் பழமையான நரகத்தில் வைத்தால் அதுவும் சகிக்கமாட்டாது; ஆகையால் நாவினுல் எடுத்துச் சொல்லவொண்ணுத கொடிய நரகம் ஒன்றுண்டாகி அதில் விழும்படி இவ்வுலகத்தில் வந்தார்கள் என்றவாறு.

என்று சிந்தையி னவர்களை யிகழந்துமற் றிளையரா மனையார்மாட்
டொன்று மன்பின ளுகிமற் றவர்நல னுண்டுவா ழிகல்வேந்தன்
கன்று நெஞ்சினன் சூதனைக் கூவியிக் கயத்தியை மகவோடும்
இன்று தேர்மிசைக் கொண்டுபோய்க் காட்டகத் திடைவிட்டு மீள்கென்றான்.

இ - ள்: இவ்வாறு மனதிலெண்ணி இளையமனைவியர்களிடத்தில் ஆசைபொருந்தி அவர்களுடைய இன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கும் அவ்வரசன் மூத்த மனைவியையும் மகனையும் வெறுத்து வெம்பிய மனம் உடையவனுய்த் தேர்ப்பாகனை அழைத்து இந்தப் பாவியையும் இவளது மகனையும் இன்றே தேரில் ஏற்றிக்கொண்டுபோய்க் காட்டில் விட்டுவிட்டு வா என்று சொன்னுன் என்றவாறு.

விட்டு மீளியென் றுரைத்தலும் வலவனும் வேந்தர்வேந் துரைபேணிக்
கட்டு வாம்பரிக் கொடிநெடுந் தேர்மிசைக் கன்னியை மகவோடும்
இட்டு நன்னெறி நீந்திமுட் கானகத் திறக்கிவிட் டனன்மீண்டு
வட்ட வாழிசூழ் புவனிகா வலவன்முன் வந்தடி யிணைவீழ்ந்தான். 19

இ-ள்: இவர்களைக் காட்டில் விட்டுவா என்று அரசன்கூறிய உரையைத் தேர்ப்பாகன் ஏற்றுக்கொண்டு அவர்களிருவரையும் தேரின் மேல் ஏற்றிக்கொண்டு போய் நல்ல வழியைக் கடந்து முள்ளுகளையுடைய காட்டில் இறக்கிவிட்டுவந்து அவ்வரசன் திருவடியில் வணங்கினன் எ-று.

அப்பு றத்துவெங் கானிடைத் தமியளாய் அரும்பெறன் மகவோடும்
வெப்பு றத்துநோய் முதிர்வின விளங்கதிர் வெதுப்பலா லிடரெய்தி
யெப்பு றத்தினு மலகையு முழுவையு மேனமு மிடர்செய்யச்
செப்பெ னத்திரண் முலையின ளோரிடை செல்லவும் வழிகாணள். 20

இ-ள்: தேர்ப்பாகன் போய்விட்டபின் அரசகுலமகளானவள் அந்த வெளிக்காட்டில் தனித்தவளாய் வருத்தப்படுத்துகின்ற நோயின் மிகுதியினலும் சூரியகிரண வெப்பத்தினலும் தானும் தன் புதல்வனும் துன்பமடைந்து நாலுபுறத்திலும் பேய்களும் புலிகளும் பன்றிகளும் துன்பப்படுத்த ஒரு இடத்துக்குப் போகவும் வழிகாணமல் என்றவாறு.

அரிய தாகிய விதியினை வெறுக்குநொந் தயர்வுறு மழுதேங்கும்
உரிய காதலன் கொடுமையை நினைந்துகண் ணுறுபுன லிடைதோயும்
விரியு நோய்பொறு தரற்றிய குழவிவாய் மென்முலை யணைத்தூட்டும்
எரியி னின்றுதன் னுடல்சுடு பசியின லிடருழந் திதுசெய்தாள். 21

இ-ள்: அரிதாகிய விதியைவெறுப்பாள்; நொந்துசோர்வுறுவாள்; தனக்குரிய கணவனுடைய கொடுமையை நினைந்து கண்கள் பொழிகின்ற நீரில் தோய்வாள்; மிகுந்த நோயைப் பொறுக்கமாட்டாமல் அழுகிற தன் பிள்ளையின்வாயில் முலையை வைத்துப் பாலூட்டுவாள்; தீயையொத்து இடைவிடாமலிருந்து தன் உடலைச் சுடுகின்ற பசியினல் துன்பங்கொண்டு ஒரு காரியஞ் செய்தாள் என்றவாறு.

வெஞ்சி னக்கொலை மாப்பயில் கானகம் விலங்கியோர் புடையேகிப்
பஞ்சின் மெல்லடி குருதிகான் றிடத்தனிப் பயப்பயச் செல்லுங்கால்
அஞ்சி லோதியோர் அணிநகர் கண்டத னிடைப்புகுந் தனளந்த
இஞ்சி மாநகர் தனக்கிறை யாகிய வெறுழ்வலி வணிகேசன். 22

இ-ள்: கொடிய கோபங்கொண்டு கொல்லுந் தொழிலையுடைய மிருகங்கள் வாழுகின்ற காட்டைவிட்டுநீங்கி ஒருபுறத்திற்சென்று பஞ்சினு மெல்லியதாகிய தன் திருவடியில் உதிரம்பெருகும்படி மிருதுவாக நடந்து

போம்போது அந்த அரசமகளானவள் அழகுள்ளதாகிய ஒரு நகரத்தைக் கண்டு அதனிடத்திற்போனாள். (அப்போது மதில்சூழ்ந்த அந்த நகரத்திற்குத் தலைவனாகிய) சிறப்புள்ள வணிகன் என்றவாறு.

எறுழ்வலி - மிக்கபலம்.

மல்கு மாநிதி யுடைப்பது மாகரன் மனையினி லொருகோடிப்
பல்கி யேவல்செய் சிலதியர் தம்மினோர் பாவைமற் றவட்கண்டு
செல்வ மைந்தனுந் திருமக ளீயுமித் தெருவினு துலர்போல
ஒல்கி யொல்கிவந் தடைந்தவா றேதெனக் குணர்த்திநீ யெனச்
சொன்னாள். 23

இ - ள் : மிக்க செல்வத்தையுடைய பதுமாகரன் என்னும் பெயரையுடைய அந்த வணிகன் இல்லத்தில் தோழியானவள் அந்த அரசகுலப் பெண்ணைப் பார்த்து, நீ அரசமகள் போலிருக்கின்றனை! அவ்வாறிருக்க நீயும் இந்த மகனும் ஏழைகள்போலச் சோர்வடைந்து இந்தத் தெருவில் வந்ததற்குக் காரணம் எனக்குச் சொல்லென்றாள் என்றவாறு.

விம்மி விம்மிநெஞ் சழிந்துவாய் புலர்ந்திட விழிவழி நீர்சோர
அம்ம அம்மவோ வூழ்வினை விளைந்தமை யார்க்குரைக் குவனென்று
வெம்மை நெஞ்சுடைத் தலைமக னிழைத்தது மேதிலார் வினையிட்ட
இம்மை யிவ்விட ருற்றிவண் புகுந்தது மிற்றெென வுரைசெய்தாள். 24

இ - ள் : அவ்வாறு தோழி கேட்டவுடன் மனம் அழிந்து அழுதுகொண்டு கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகவும், வாயுலரவும், தாயே! ஊழ்வினை நேரிட்டதை எவர்கட்குச் சொல்லுவேனென்று இரக்கமற்ற தன் கணவன் செய்கையையும், அயலவர்களாகிய சக்களத்திமார்கள் செய்கையையும் பொறாமல் இப்பிறவியில்தானே இத்தகைய கொடிய துன்பமடைந்து இங்கு வந்ததாகும் என்றாள் என்றவாறு.

துன்பத்துள் கொடிய துன்பம் சக்களத்தி துன்பம் என்று கூறுகின்றாள்.

கேட்டு வல்விரைந் தோடினள் சென்றனள் கெழுமுசீர் வணிகேசன்
றாட்டு ணைத்தொழு தையநங் கடிநகர் சார்ந்தொரு குலத்தையல்
வாட்ட டங்கணு ளேந்திய மகவினள் வருந்திய முதுநோயாள்
காட்டின் மன்னவன் விடுத்திட வந்துநங் கடையடைந் தனளென்றாள். 25

இ - ள் : அந்த அரசகுலப் பெண் கூறியதைக்கேட்டு அதிவிரைவாக ஓடிச்சென்று வணிகனுடைய இரண்டு திருவடிகளையும் தொழுது, ஐயனே! ஒரு அரசமகளானவள் நம் நகரத்தையடைந்து ஒருகுழந்தையை

ஏந்திக்கொண்டு வருந்திய மிகுந்த நோயையுடையவளாய் அவள் கணவனாகிய அரசன் காட்டில் அனுப்பிவிட வந்து நம்முடைய வீட்டுக் கடைத்தலை சார்ந்திருக்கிறாளென்று கூறினாள் என்றவாறு.

தரும சிந்தையி னீதியிற் கொடையினிற் றயவினி னிகரில்லான்
கரும மங்கது கேட்டலுங் குழைவுறுங் கருத்தினன் புறம்போந்தாங்
கரும ருந்தன மகவையுந் தாயையுங் கண்டதி சயித்திங்கண்
வருதி ரென்றொரு வேதியன் மனையினின் மற்றவர் தமைவைத்தே. 26

இ-ள்: தருமசிந்தையிலும் தியாகத்திலும் நீதியிலும் தயையிலும் தனக்கு ஒப்பில்லாதவனாகிய அந்த வணிகேசன் அவள் சொன்ன காரியத்தைக் கேட்டநிலையில் வருந்துகின்ற மனதையுடையவனாய் வெளியில்வந்து அவ்விடத்திலிருக்கும் அருமருந்தை ஒத்த குழந்தையையும் தாயையும் பார்த்து அதிசயித்து, இங்கே வாருங்களென்று அழைத்துக்கொண்டு போய் ஒரு பிராமணன் வீட்டில் அவர்களை வைத்து என்றவாறு.

உற்ற வாயுள்வே தியரெலாம் வருகவென் றுறுநிதி மழைசிந்தி
முற்றும் வல்விட நோயினை மருந்தினான் முறித்திர்மற் றிவளென்னைப்
பெற்ற தாயிவண் மகவுமென் பெருந்துணை யென்றவன் பலபேசக்
கற்ற நூல்புகன் மருந்தெலா மருத்தவுங் கனன்றது முதுநோயே. 27

இ-ள்: அந்த இடங்களில் இருக்கும் வயித்தியர்களையெல்லாம் வரவழைத்து மிகுந்த செல்வம் கொடுத்து இவ்வரசமகள் என்னைப்பெற்ற தாய்; இவள் குழந்தை என்னுடைய சகோதரன். ஆதலால் இவர்களுக்குப் பொருந்திய கொடிய விடநோயை மருந்துகளால் முறித்து விடுங்களென்று அவர்களுக்குச் சொல்ல, அதைக்கேட்ட வயித்தியர்கள் தாங்கள் கற்றுணர்ந்த வயித்திய நூலில் சொல்லும் மருந்துகளையெல்லாம் இன்னதனால் தீருமென்று வகை அறிந்து கொடுத்தார்கள். அவ்வாறு அவர்கள் கொடுக்கப் பழமையாகிய வியாதியானது கொடுமையுடன் அதிகரித்தது என்றவாறு.

இழுது பெய்குட மெரிதலுங் கனற்சிகை யெழுவபோ லெண்ணில்லாப்
பழுதி னன்மருந் திடுதொறு முதிர்ந்துநோய் படர்செயப் பலகாலும்
அழுது மாழ்கிய பாலக னிறத்தலு மளவிலாத் துயர்பொங்கப்
புழுதி நீணிலத் துருண்டன ளுருமுவீழ் புற்றுறை யரவென்ன. 28

இ-ள்: நெய்நிறைந்த குடத்தை எறிந்தமட்டில் தீயானது சிகை விட்டெழும் தன்மைபோல அளவற்ற நல்ல மருந்துகளைக் கொடுக்குந்தோறும் அந்த வியாதி மேலிட்டுத் துன்பஞ்செய்தலினால் இடைவிடாமல் அழுதுசோர்ந்த புதல்வன் இறந்தனன். அவன் இறக்கவே, அளவில்லாத

துயரம் உண்டாகப் புற்றிலிருக்கும் பாம்பானது இடிவிழுந்தால் பூமியில் துடிப்பதுபோலப் பூமியில் விழுந்து புரண்டாள் என்றவாறு.

வீழு மெய்பதைத் தெழுமழும் வெதும்பிடும் விம்மும்வெந் துயருள்ளித்
தாழுங் கைகளான் முலைமுகட் டெற்றிடுந் தளர்வொடு நனிசோரும்
போழு மம்புபாய் மயிலென மாழ்குறும் பொருமும்புத் திரசோபத்
தாழு நின்றுநின் றுருகும்வெய் துயிர்த்திடு மலக்கணுற் றிடுமன்னோ. 29

இ - ள் : பூமியில் விழுவாள்; உடல் பதைத்து எழுந்திருப்பாள்; அழுவாள்; வெதும்புவாள்; விம்முவாள்; தனக்கு நேரிட்ட துன்பத்தை எண்ணிச் சோர்வாள்; இரண்டு கைகளாலும் முலைமுகட்டில் மோதிக் கொள்வாள்; மிக்க மெலிவோடு சோர்வாள்; அம்புபாய்ந்த மயிலைப்போலச் சோர்வாள்; தேம்புவாள்; புத்திரசோகத்தில் அமிழ்ந்துவாள்; நின்று நின்றுஉருகுவாள்; பெருமூச்சுவிடுவாள்; துன்பம் அடைவாள் எ - று.

வேறு

அய லகத்துறை யந்தண மாதரும்
மய லகத்து வணிக மகளிரும்
கயலை யொத்தகட் காரிகை பாலெய்திச்
செய லுணர்த்தித் தெருட்டவுந் தேறலாள். 30

இ - ள் : இவ்வாறு துயரப்படுகிறவளைப் பார்த்து அயல் வீட்டில் இருக்கும் பிராமணப் பெண்களும் இவள் துயரத்தைக் கண்டு மயங்கிய வைசியமாதர்களும் சேல்மீனையொத்த கண்களையுடைய அந்த அரசமகள் இடத்திற்சென்று இவ்வுடல் அனித்தியமே அல்லாமல் நித்தியமல்ல என்று அனேக எடுத்துக்காட்டுக்களைச் சொல்லித் தெளிவிக்கவும் அவள் துக்கம் நீங்கிலளாய் என்றவாறு.

ஐய னேநம் மரசன் விடுத்தலிற்
கைய றத்தளர் வேனை நீ கைவிடும்
வெய்ய கேண்மை வெதுப்ப மெலிந்துளேன்
உய்ய லேனினி யுன்னை விடுத்துமே. 31

இ - ள் : அப்பனே! நம்முடைய அரசன் நீக்கிவிட்டபடியால் ஆதரவில்லாமல் தளருகின்ற என்னை நீயுங்கைவிட்ட கொடிய தன்மையானது வருத்துவதினால் மெலிவடைந்தேன். உன்னைப்பிரிந்தும் இனிப்பிழைத்திருக்கமாட்டேன் என்றவாறு.

என்று பன்னி யிரங்குஞ் சுமதிதான்
சென்று நாயகன் றெருட்டவுந் தேறலாள்
கன்றி மாழ்குறுங் காலையி லாங்கணே
தொன்று தேர்விட பன்வந்து தோன்றினன். 32

இ - ள் : இவ்வாறு கூறிக்கூறி அழுகின்ற சுமதியென்பவள் தன்னையாதரிக்கும் வணிகன் வந்து தேற்றரவான சொல்லினைச் சொல்லித் தேற்றவும் தேருமல் மனம்வருந்திச் சோர்வுறும்போது முன்நடந்தவைகளை அறியத்தக்க விடபன் என்னும் ஒரு சிவயோகி அவ்விடத்தில் வந்தார் என்றவாறு.

வந்த யோகி மலரடி தாழ்ந்தெழுந்
தெந்தை நீயிவ ளித்துயர் தீர்த்தியென்
றந்த நாயக னுரைப்ப வருந்தவன்
கொந்து லாங்குழ லிக்கிவை கூறினன். 33

இ - ள் : வந்த சிவயோகியை அந்த வணிகன் கண்டு திருவடிகளில் வணங்கி, என்னையனே! இந்த அரியமகளின்மிக்க துயரத்தை தீருமென்று கூற, அவனைப்பார்த்துச் சிவயோகி பின்வருமாறு கூறுகிருர் என்றவாறு.

என்னை மாழ்கி யிரங்குவ தேழை நீ
பொன்னு மாவி பொருந்திய காயமு
மின்னு மொக்குளும் போனனி வீந்திடும்
அன்ன துள்ளி யறிஞ ரழிவுருர். 34

இ-ள்: தாயே! நீயிரங்கித் துயரப்படுவதில் என்னபயன்? பொருளும் உயிர் பொருந்திய இவ்வுடலமும் மின்னலைப்போலவும் நீர்க்குமிழியைப் போலவும் விரைவில் அழிந்துபோய்விடும். (ஆகையால்) அறிவுள்ளவர்கள் அதைக்கருதி வருந்தார்கள் என்றவாறு.

கூறு சாத்திகங் கூடிடிற் றேவராம்
மாறி ராசதஞ் சேர்ந்திடின் மாந்தராம்
வேறு தாமத மேவில் விலங்கதாம்
ஊறு தோற்றங்கண் முக்குணத் துற்றிடும். 35

இ-ள்: சொல்லுகின்ற சத்துவகுணம் கூடுமானல் தேவர்களாவார்கள். அக்குணத்துக்கு மாருகிய இராசதகுணம்கூடினுல் மனிதராவார்கள். அதிலும் வேருகிய தாமதகுணம் கூடினுல் மிருகமாவார்கள். இவ்வாறு முக்குணத்தினுல் பிறப்புண்டாகும் என்றவாறு.

முக்கு ணத்தின் முயற்சியி லோரொன்று
தொக்க வாறு துவன்றுங் குறியினல்
மக்க டேவர் விலங்கென வந்தவை
துய்க்கும் போகந் தொலையத் தொலையுமே. 36

இ - ள் : மூன்றுவித குணத்தின் முயற்சியில் ஒவ்வொரு குணம் சேர்ந்த முறைமைப்படி உண்டாகும் குறியினல் மனிதர்கள் என்றும்

தேவர்கள் என்றும் மிருகங்கள் என்றும் வந்து பிறந்து அவைகள் அனுபவிக்கவேண்டிய போகங்களை அனுபவித்துத் தொலைந்தபின் உடலும் அழிந்துபோம் என்றவாறு.

பண்டை வாசனை தொக்க பயிற்சியால்
கொண்ட காய நிலையெனக் கொள்வரோ
அண்ட ரேனும் பிறப்புள தாமெனின்
விண்டு காய மிறப்பது மெய்யரோ. 37

இ - ள்: பழைய வினைசேர்ந்த பயிற்சியினால் உண்டான உடம்பை நிலைமையென்று எண்ணுவார்களோ? தேவர்களேயானாலும் மறு பிறப்பு உண்டென்றால் உயிரானது உடம்பைவிட்டு நீங்கிப்போவது உண்மையாகும் என்றவாறு.

அங்க மொன்றி னருந்தி யவற்றினால்
தங்கு தீமல நாளுந் தணந்திடும்
மங்கை நீயதற் கித்துயர் வைத்திலை
இங்கு மாண்ட மலத்துக்கெ னேங்குவாய். 38

இ - ள்: ஒரு உடம்பிலுண்டான புசிப்பினால் பொருந்திய தீய மலமானது நாள்தோறும் நீங்கிவிடும். தாயே! நீ அதைக்குறித்து உனது மனதில் இத்தகைய துயரத்தை வைக்காதே. இப்போது நீங்கிய மலத்தைக் குறித்து என் ஏங்குகிறாய் என்றவாறு.

சாவ தும்பிறப் பும்மெனும் தன்மையைத்
தேவ ருங்கட வாரிது திண்ணமே
பாவை நீதுயர் பட்டிடிற் றீருமோ
யாவர் முன்னழு தின்னுயிர் மீட்டுளார். 39

இ - ள்: இறப்பதும் பிறப்பதுமாகிய தன்மையைத் தேவர்களும் கடக்கமாட்டார்கள். இது உறுதியாம். தாயே! நீ துயரப்படுவதினால் வந்த துயர்நீங்குமோ? முன்னிருந்தவர்களில் போன உயிரை அழுது மீட்டுக்கொண்டவர்கள் யாராவது உண்டோ என்றவாறு.

படர்கி ரித்தலைப் பான்மதி போற்கரிப்
பிடர்நி ழற்று கவிகையிற் போந்தவர்
கடனி லத்திற் கவிழ்ந்தன ரன்றிமற்
றுடலெ டுத்தெவர் சாவை யொருவினர். 40

இ - ள்: பெரிய மலையின் உச்சியில் சந்திரோதயமானதுபோல யானையுடைய பிடரிமேல் ஏறிக்கொண்டு நிழலைச்செய்கிற குடையின்கீழாக

வலம்வந்த அரசர்களும் கடல்சூழ்ந்த உலகத்தில் விழுந்து இறந்துபோனார்களேயல்லது உடலையெடுத்து எவர்கள் இறப்பை நீங்கினவர்கள் எ - று.

உற்று நும்விருப் பானுதித் தானலன்
மற்று நும்வெறுப் பான்மடிந் தானலன்
சுற்றுங் கட்சி யொழியத் துறந்துவா
னுற்ற புள்ளி னுடல்விட் டொளித்துளான். 41

இ - ள்: இறந்துபோன புதல்வன் பொருந்திய உங்கள் விருப்பத்தினால் பிறந்தவனல்லன். மேலும் உங்கள் வெறுப்பினால் மடிந்தவனுமல்லன். பின்னப்பட்ட கூட்டைவிட்டு நீங்கி ஆகாயத்தில் பறந்துபோகிற பறவையைப்போல உடலைவிட்டு மறைந்துபோனான் என்றவாறு.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

என்னும் குறளை இதனுடன் ஒப்புநோக்குக.

தாயர் தந்தைய ரின்பத் தருக்கினால்
ஆய சுக்கில சோணித மங்கொரு
காய மாகக் கருக்கொளு முன்னமே
மாயு மங்கவர் நொந்து வருந்தவே. 42

இ - ள்: தாய் தந்தையர்களது இன்பச் செருக்கினால் உண்டாகிய சுக்கில சோணிதமானது தாய் வயிற்றில் ஒரு கருவாகத் தரிப்பதற்கு முன்னமே அவர்கள் நொந்து வருந்தும்படி மாய்ந்துபோம் என்றவாறு.

அங்கு மாய்ந்ததின் றென்னி னவயவந்
தங்கி யையிரு திங்க ணடந்தபின்
வங்க வாரிசூழ் மண்ணிடைத் தோன்றியே
பொங்கு நற்கிளை கண்டழப் பொன்றுமே. 43

இ - ள்: கருவில் தானே இறக்காவிட்டாலும் உறுப்புகளெல்லாம் பொருந்திப் பத்துத் திங்களும் ஆனபின்பு இவ்வுலகில் பிறந்து உறவுமுறைகள் கண்டு அழும்படி இறந்துபோம் என்றவாறு.

பொன்ற றீர்ந்திடிற் பொற்பிறை போல்வளர்ந்
தொன்று கேள்வி யுணர வமையுநாள்
துன்று பூங்குழ லுஞ்சினுந் துஞ்சுமற்
றன்று வீத லொழிந்தெழி லாகியே. 44

இ - ள்: மலரை அணிந்த கூந்தலையுடையவளே! பிறந்தவுடன் இறவாமலிருந்தால் அழகிய பிறைபோல் வளர்ந்து சொன்ன கல்விகளைப்

பகுத்தறிந்து கொள்ளும்படியான பருவத்தில் இறந்தாலும் இறக்கும் அல்லது அப்போது இறத்தலின்றி அழகுடன் வளர்ந்து என்றவாறு.

காம னேயெனக் கண்டவர் கண்கவர்
வாம நல்லுரு வோடு மரீஇயபின்
சேம நல்விடை போன்மணஞ் செய்வுழித்
தூம வார்குழ றுஞ்சினுந் துஞ்சுமே. 45

இ - ள் : அகிற்புகையூட்டத்தக்க அளகத்தையுடையவளே! மன்மதனைப்போலக் கண்டவர்கள் பார்வையைக் கொள்ளும்படியான அழகு மிக்க உருவத்துடன் வளர்ந்த பின்பு இன்பமுள்ள நல்ல இடபம்போலக் காளைப்பருவம் பொருந்திய மணஞ்செய்யும் காலத்தில் இறந்தாலும் இறந்துவிடும் என்றவாறு.

கல்வி மைந்தர் களிப்புந் திருவொடு
செல்வ வூக்கமுந் துய்த்துச் செழிக்குநாள்
பல்கு பாவப் பயப்புலி பற்றலும்
ஒல்கி வாவு முழையென் மாயுமே. 46

இ - ள் : கல்விமிக்க இளைஞர்கள் மகிழ்வையும் செல்வச் செருக்கையும் அனுபவித்துச் செழுமையாக வளமையாக வாழும்நாளில் மிக்க பாவமாகிய அஞ்சத்தக்க புலிபற்றிய மாத்திரத்தில் சோர்ந்து மானிறப்பது போல இறந்துவிடுவார்கள் என்றவாறு.

கூனி மூத்த குரங்கெனக் கோல்பிடித்
தேனை யோரு மிகழ விருமலந்
தானை யோடு சரிந்திடச் சாவது
மானி னேக்கி னல்லாயொரு வண்ணமே. 47

இ - ள் : மான் பார்வைபோல் மருண்ட பார்வையுடையவளே! கிழக் குரங்குபோல உடல் வளைந்து கையில் கோலைப்பிடித்து ஊன்றிக்கொண்டு மற்ற யாவரும் இகழும்படி மலசலங்கள் வத்திரத்திலேதானே சுழலும்படி ஒன்றும் தெரியாமலிருந்து இறந்துபோவதும் ஒருவிதமாகும் எ - று.

கால மென்பர் சிலர்சிலர் கன்மமே
மூல மென்பர் சிலர்முக் குணமென்பர்
ஞால மென்புன லாதிய நல்லுடல்
ஏலு மூன்றிற்கு மேற்றதென் பார்சிலர். 48

இ - ள் : இறப்பதற்குக் காலந்தான் காரணமென்று சிலர் சொல்லுவார்கள். அவனுடைய கன்மந்தான் காரணமென்று சிலர் சொல்லுவார்கள். முக்குணம் காரணமென்பார் சிலர். பிருதிவி, அப்பு முதலாகிய

பஞ்சபூத சம்பந்தமான இவ்வுடல் மேற்சொல்லிய மூன்றுக்கும் ஏற்ற தென்று சிலர் சொல்லுவார்கள் என்றவாறு.

ஆத லானித் திறமுடை யாக்கையைப்
போத முற்றவர் பொய்யெனக் கொண்டுபின்
சாத லுக்கும் பிறத்தற்கும் தம்மனத்
தேத மோடுவப் பின்றி யிருப்பரே. 49

இ - ள் : ஆகையினுலே இத்தகைய உடம்பை ஞானமுள்ளவர்கள் பொய்யென எண்ணிச் சாவதற்கும் பிறப்பதற்கும் துக்கமும் மகிழ்வும் இல்லாமல் இருப்பார்கள் என்றவாறு.

எவ்வி கற்பத்த வெவ்வுட லங்களும்
அவ்வி யத்தத்திற் ரேன்றி யடங்கிடும்
பவ்வ முற்றிய பாரினெ ழுந்துகள்
கொவ்வை வாய்க்கொடி மீண்டதிற் கூடல்போல். 50

இ - ள் : கோவைக் கனியையொத்த வாயையுடைய கொடி போன்றவளே! பூமியில் எழுகின்ற துகள் மறுபடியும் அப்பூமியிலே தானே கூடுவதுபோல எவ்விதமாகிய விகற்பங்களையுடைய எவ்வித உடல்களும் மாயையில் தோன்றி அதிலேதானே ஒடுங்கும் என்றவாறு.

உன்னை யீன்றவ ருன்ன லுதித்தவர்
மன்னு முற்பவந் தோறு மணந்தவர்
அன்ன மேதிரை யாழியி னுண்மணல்
தன்னை யெண்ணினு மெண்ணுந் தரத்தரோ. 51

இ - ள் : அன்னம் போல்பவளே! பொருந்திய முன் பிறவியில் உன்னைப்பெற்றவர்களும் உன்னுற் பெறப்பட்டவர்களும் உன்னை மணஞ் செய்து கொண்டவர்களும் அலைகளையுடைய கடலின் சிறிய மணலை எண்ணினுலும் எண்ணும் அளவையுடையவர்களோ என்றவாறு.

பாகெ னுஞ்சொலி னய்படர் காலமா
நாக வாயினி னிலந் தன்னில்வாழ்
போக மானிடத் தேரை பொருந்தியும்
ஓகை யுஞ்சிறி துற்றிடு மோசொலாய். 52

இ - ள் : பாகுபோன்ற இனிய சொல்லையுடையவளே! காலமாகிய பாம்பின் வாயில் அகப்பட்டுக்கொண்டிருக்கிற மனிதர்களாகிய தேரை கட்கு மகிழ்ச்சி சிறிதும் உண்டாகுமோ சொல்லு என்றவாறு.

இவ்வுலகத்தில் போகங்களை அனுபவித்துக்கொண்டு வாழ்கின்ற மனிதர்களாகிய தேரையெனக் கூட்டுக.

முந்தை நான்முகன் முன்னம் படைத்துடல்
தந்த நாளிற் றனுகர ணங்களும்
புந்தி சேர்புவ னத்தொடு போகமும்
பந்த மாமிடை வேறென்று பற்றுமோ. 53

இ-ள்: பழமையாகிய பிரமதேவன் ஆதியில் இந்த உடலைப் படைத்துத்தந்த நாளில் தனுகரணங்களும் நினைக்கும்படியாகிய புவன போகங்களும் தொடர்ச்சியாய் இருக்கின்றமையால் நடுவில் புதிதாய் ஒன்றும் வராது என்றவாறு.

தோலு மென்பு நரம்பு மிறைச்சியும்
மேலு மீரலும் பித்து மிரத்தமும்
சீழு மிட்ட குழிசில் சிதைந்தது
போலு நீயிதற் கென்கொல் புலம்பலே. 54

இ-ள்: தோலும் எலும்பும் நரம்பும் மாமிசமும் பொருந்திய ஈரலும் பித்தநீரும் சீழும் நிறைத்துவைத்த கடம் உடைந்துபோய்விட்டது. இதற்காக நீ புலம்புவது என்னகாரணம் என்றவாறு.

போலும் - முன்னிலையசை.

முக்க ணயகன் முப்புரந் தீயெழ
நக்க நாயக னுண்மலர்த் தாடொழு
மக்க ளன்றி மறலியை வென்றிடத்
தக்க தன்மையர் யாரெனச் சாற்றினன். 55

இ-ள்: உடல் இத்தன்மைத்தாய் இருப்பதனுல் முக்கண்களை உடையவரும் திரிபுரங்களில் தீபற்ற நகைத்தவருமாகிய பரமசிவனுடைய பாதங்களைவணங்கும் அன்பர்கள் நமனை வெல்லலாமேயல்லது மற்றவர்கள் யார் வெல்லத்தக்கவர்களென்று சிவயோகிசொன்னர் என்றவாறு.

வேறு

கேட்டா ளெழுந்தாள் கிளியென்ன மிழற்று சொல்லாள்
வாட்டாரைக் காந்தண் மலர்கொண்டெதிர் நீவு மாபோல்
தீட்டாத மைக்கண் பொழியாலி சிறந்த சங்கம்
பூட்டாத கையாற் றுடைத்தின்ன புகல்வ தானுள். 56

இ-ள்: கிளிபோல் கூறும் சொல்லையுடைய அரசமகளானவள் சிவயோகி கூறியதையெல்லாம் கேட்டு, உடனே எழுந்து வானிலுண்டாகும் நீர்த்தாரையைக் காந்தண்மலரான் துடைப்பதுபோல மைதீட்டாத கண் பொழிகின்ற நீர்த்துளியை வளையணியாமலிருக்கின்ற கையால் துடைத்து இந்த வார்த்தை கூறுகிருள் என்றவாறு.

காட்டில் வந்துவிட்டமையால் மைதீட்டாத கண்ணென்றும் சங்கம் பூட்டாத கையென்றும் கூறினர்.

கள்ளாரு மாலை முடிவேந்து கனன்று நீக்க
உள்ளாவி வாட்டு முதுநோயி னுணங்கு வேற்குத்
தள்ளா விழுச்சீர்ப் புதல்வன்றெடு சாதருனே
விள்ளாத துன்பத் துழலாத விரத மென்ன. 57

இ - ள்: தேனிறைந்த பூமாலையணிந்த மகுடந்தரிந்த அரசன் கோபங்கொண்டு நீக்கிவிட்டதனுல் உள்ளுயிரை வருத்தும் காமநோயினுல் மெலிகின்ற எனக்கு இறந்துபோன என் புதல்வனுடன் நானும் இறந்துபோவதே நீங்காத துன்பத்தில் விழாத விரதமென்று கூறி எ - று.

அளிகொண்ட சிந்தை யறத்தோய்நின் னருட்க ணோக்கம்
விளிகின்ற காலத் தெதிர்ந்தேன்வினை வெம்மை தீர்ந்தேன்
முளிகொண்ட பைங்கூழ்த் தெறுகோடை முதிர்ச்சி தீரத்
தளிகொண்டல் சிந்திப் புரந்தாற்றிடு தன்மை போலும். 58

இ - ள்: தீயுந்தன்மை கொண்ட பசிய பயிரை வாட்டுகின்ற கோடைவெப்பந் திரும்படி மேகங்கள் நீர்த்துளியைச் சிந்தி வெப்பத்தை ஆற்றுந்தன்மைபோலக் கருணைபொருந்திய மனதையுடைய முனிவரே! தேவரீர் வந்தருளிய கருணை நோக்கத்தை நான் இறக்குஞ் சமயத்தில் பெற்றுக்கொண்டு தீவினைக் கொடுமையை நீங்கினேன் என்றவாறு.

என்னுவிவள் காதற் கியைந்துள மெய்ம்மை யுள்ள
முன்னுமுரணு வழிபாடு புரிந்தது முற்ப வத்தில்
பொன்னுர மார்பின் மகவென்பதுந் தேர்ந்து பூவை
தன்னுர்வ மைந்தன் உயிர்மீட்குந் தகைமை செய்தான். 59

இ - ள்: இவ்வாறு சொல்லி அந்த அரசமகள் இறப்பதற்குத் துணிந்த நிச்சயத்தை அறிந்து இந்தப் புதல்வன் முற்பிறப்பில் தனக்கு உபசாரம் செய்தவன் என்பதையும் எண்ணி, அவளுடைய ஆசைப் புதல்வனின் உயிரை மீட்கும்வகையை அம்முனிவர் செய்தார் என்றவாறு.

பாலொத் திலகுந் திருநீறு பரிந்தெ டுத்து
வாலப் பிறைபோல் பவனெற்றி வயங்கச் சாத்தி
ஆலத் திருண்ட களத்தான்பொன் னடியை யேத்தி
மூலத் திருமந் திரங்காதின் மொழிய லோடும். 60

இ - ள்: பால்போன்ற வெண்மைநிறங்கொண்டு விளங்காநின்ற திருநீற்றினைப் பரிவுடன் எடுத்து, இளஞ்சந்திரன் போல்பவனுகிய அந்தப்

புதல்வனுடைய நெற்றியில் ஒளி விளங்கும்படி அணிந்து, விடத்தினால் கறுத்த கண்டத்தனாகிய பரமசிவனுடைய திருவடிகளைத் துதிசெய்து திருவைந்தெழுத்தைக் காதில் உபதேசித்த அளவில் என்றவாறு.

பைந்தாட் கமலங் கண்மலர்ந்தெனப் பாலன் செங்க
ணந்தா துவிழித் திடநற்றுயி னீங்கி னன்போன்
முந்தா வெழுந்தே முலையுண்ண முயலும் வேலை
செந்தா மரைமேற் றிருவன்னவள் சேர்ந்து புல்லி. 61

இ - ள்: பசிய தாளையுடைய தாமரைமலர்கள் மலர்ந்ததுபோல இறந்திருக்கும் மகன் கண்களைத் திறந்து, உறக்கம் நீங்கினவன்போல் எழுந்து, முந்தி முலையுண்ணத் தாவினபோது திருமகளை ஒத்த அந்த அரச மகள் தன் புதல்வனைக் கட்டி அணைத்துக்கொண்டு என்றவாறு.

பொல்லா வறுமைத் துயர்பூண்ட பொறியி லாள
னில்லா தசெம்பொன் கிடைத்தாங்க ணிழந்து மீள
நல்லா தரவத் தொடுபெற்றென நங்கை யோகை
நில்லா துபொங்கக் களியெய்தின ணின்ற காலை. 62

இ - ள்: கொடிய வறுமைத் துயரத்தைக்கொண்டிருந்த அங்கப் பழுதுள்ளவனாகிய ஒருவன் தனக்கில்லாத பொருளைப் பெற்றவுடனே இழந்து மறுபடியும் அப்பொருளை மிக்க ஆசையுடன் பெற்றுக்கொண் டதுபோல, அந்த அரசமகளானவள் மகிழ்ச்சிக்கு உள்ளடங்காமல் பெரு மகிழ்வை அடைந்து நின்றபோது என்றவாறு.

மீட்டுங் கருணைக் கடல்போல விளங்கும் யோகி
தோட்டங் கமலத் துகட்டாது சொரிவ தேபோல்
வாட்டங் குகையான் மகன்மேலு மனைவி மேலுங்
காட்டுந் தளிர்ச்செங் கையினீறு கவின விட்டான். 63

இ - ள்: கருணைக்கடல்போல் விளங்குகின்ற அந்தச் சிவயோகி யானவர் இதழ்களையுடைய தாமரை மலரானது மகரந்தப்பொடியைச் சிந்துவதுபோலத் தம்முடைய கையினால் திருநீற்றை அரசகுமாரன் மேலும் அரசன் மனைவிமேலும் அணிந்தான் என்றவாறு.

வெண்ணீ றவனன் பொடுசாத்தலும் வெற்றி ரும்பு
தெண்ணீ ரிரதத் துளிகுத்தச் செழும்பொ னாகி
மண்ணீர் மைபெற்று லெனமற்றவர் மேனி நோயின்
புண்ணீர் மை நீங்கிப் பசும்பொன்னுரு வெய்தி நின்றார். 64

இ - ள்: அவர் திருநீறு அணிந்தமட்டில் வெறுவிய இரும்பில் தெளிவான தன்மையுள்ள ரசத்துளியைக் குத்தினவுடன் அந்த இரும்பு

நல்ல பொன்னாகி அலங்காரமுள்ள தன்மையைப் பெற்றதுபோல நோயினு லுண்டாகிய புண்தன்மை நீங்கி அவர்கள் உடல் பொன்னிறம் பொருந்தி னார்கள் என்றவாறு.

கங்கா தரனன் புறுதொண்டன் கழிந்த வாவி
மங்கா தூமீட்க வுயிர்வந்தபின் மைந்த னோடு
கொங்கார் குழலா டிருமேனியிற் கொண்ட புண்ணோய்
தங்கா துநீங்கத் திருநீறவன் சாற்ற லோடும். 65

இ - ள் : இறந்துபோன உயிர் அப்படியே போகாமல் பரமசிவ னிடத்தில் அன்புள்ள தொண்டராகிய சிவயோகியானவர் மீட்க, உயிர் பெற்ற மகனுடைய உடலிலும் தாயின் உடலிலும் பொருந்திய புண்ணனது கொஞ்சமுமிராமல் நீங்கும்படி திருநீறணிந்த அளவில் எ-று.

தண்டா தவேள்வி மறையோர்குலத் தைய லாரும்
வண்டா தரிக்குந் தொடைநாய்கன் மடந்தை மாரும்
கண்டார் மகிழ்ந்தார் வியந்தார்களித் தார்க டன்னஞ்
சுண்டான் றிருத்தா டொழுதேத்தெடுத் தோதி நின்றார். 66

இ - ள் : எப்போதும் யாகம் செய்துகொண்டிருக்கும் பிராமணகுல மாதர்களும், அந்த வர்த்தகனுடைய வீட்டு மாதர்களும் பார்த்து மகிழ்ந்து அதிசயமடைந்து களிப்புற்றுப் பரமசிவனுடைய திருவடிகளைத் தொழுது துதிசெய்தார்கள் என்றவாறு.

வாவுந் திரையார் கலிசூழும் வளாகம் காக்குங்
கோவின் பெருந்தே வியுமைந்தனுங் கோதி லாத
தேவின் கழற்றாள் பணியோகிதன் செய்ய பொற்றா
ளாவின் புறவாழ்த் திவணங்கி நவில லுற்றார். 67

இ - ள் : தாவி மேலெழுகின்ற அலையையுடைய கடல்சூழ்ந்த பூமி யைக்காக்கும் அரசன் மனைவியும், புத்திரனும் பரமசிவனுடைய திருவடி யைப் பணிகின்ற சிவயோகியின் திருவடிகளை நாவினால் துதிசெய்து பணிந்து சொல்லுகின்றார்கள் என்றவாறு.

துஞ்சுஞ் சிறுவ னுயிரீந்துந் தொடர்ந்த நோயால்
அஞ்சுந் துயரங் களைக்காத்து மளியை நின்றாய்
வஞ்சம் புணர்மா னிடரேதுகைம் மாறு செய்வேந்
தஞ்சம் திருத்தா ளெனயோகிதன் றாளில் வீழ்ந்தார். 68

இ - ள் : இறந்த புதல்வனுடைய பிராணனைக் கொடுத்தும், எங்க ளுக்கு நேரிட்ட நோயினால் அஞ்சுகின்ற துயரந்தீர்த்தும் கருணையுள்ளவரா யிருக்கின்ற தேவரீருக்குச் சிறிய மானிடர்களாகிய நாங்கள் என்ன பிறிது

உபகாரஞ்செய்வோம். எங்களுக்கு உம்முடைய திருவடியே ஆதரவென்று சிவயோகியின் பாதத்தை வணங்கினார்கள் என்றவாறு.

வேறு

இறைஞ்சி வீழ்ந்திடு மிருவர் தம்மையும்
சிறந்த கைகளா லெடுத்துச் சீரியோன்
நிறைந்த வோகையா னிகழ்த்து மாசிகள்
அறைந்து நாமமு மறியக் கூறினான். 69

இ - ள்: இவ்வாறு கூறி வணங்கிய அந்த இருவரையும் சிவயோகியானவர் தம்முடைய திருக்கைகளால் எடுத்து நிறைந்த மகிழ்வுடன் கூடிய ஆசிர்வாதம்செய்து அந்தப் புதல்வனுக்குப் பெயரும் கொடுத்தார் எ - று.

பத்தி ராயுவிப் பால னுமமென்
றெத்த லங்களு மிசைக்க நின்மகன்
மைத்த டங்கணாய் வளருங் காறுமில்
லுய்த்து நீணிதி வணிக னோம்பவே. 70

இ - ள்: இந்தப் புதல்வன் பெயர் பத்திராயு என்று எவ்விடத்தும் எல்லோரும் சொல்லக்கடவர். மைதிட்டும் கண்களையுடையவளே! உனது புதல்வன் வளர்கிறவரைக்கும் தனதுவீட்டில் இந்த வர்த்தகன் ஆதரிக்கக் கடவன் என்றவாறு.

இங்கு வைகுநின் னெழில்கொள் பாலகன்
பொங்கு நற்கலைப் புணரி நீந்தினன்
மங்கில் செல்வமு மாசி லாட்சியும்
எங்க ளையக னருளி னெய்தியே. 71

இ - ள்: இவ்விடத்திலிருக்கும் உனது புதல்வன் சாத்திரங்களை எல்லாம் ஓதி உணர்ந்து எமது இறைவன் கருணையால் கெடாத செல்வமும் நல்ல அரசாட்சியும் அடையக்கடவன் என்றவாறு.

வனைந்த நீண்முடி மன்ன னாகியே
அனந்த காலமு மவனி காத்திடும்
இனைந்த மூப்புநோ யிகந்த தேவர்போல்
கனைந்து வண்டுலாங் கண்ணி மைந்தனே. 72

இ - ள்: வண்டுகள் இசை பாடிக்கொண்டு இருக்கும்படியான பூமாலை அணிந்த உனது மகன் முடிசூடிக்கொண்டு மன்னவனாகி வருந்துகின்ற மூப்புப்பருவமும் நோயுமின்றியிருக்கிற தேவர்களைப்போல இந்த உலகைக் காத்துக்கொண்டு நீண்டநாளிருப்பான் என்றவாறு.

என்று பாலனுக் கெதிர்ப யாவையும்
மன்றல் வார்குழற் கியம்பி மாதவன்
சென்ற னன்னெனுத் தெளியக் கூறினன்
தொன்று மாக்கதை சூத னென்பவே. 73

இ - ள்: இவ்வாறு கூறியதுமன்றி அந்த மகனுக்கு மேல்வரத் தக்கவைகளையும் அவன் தாயுடன் சொல்லிச் சிவயோகி போய்விட்டா ரென்று சூதமுனிவரானவர் பெருமைமிக்க பழமையான இந்த வரலாற்றை நைமிசாரணிய முனிவர்களுக்குத் தெளியும்படிச் சொன்னர் என்றவாறு.

சிவயோகி மகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 672

பதினொன்ருவது

பத்திராயுவுக்கு அரசியலளித்த அத்தியாயம்

ஐந்து முகத்தா னடியார் செயல்கேட்டிங்
குய்ந்தனம்யா மென்னு முனிவோ ருளங்களிக்க
மைந்துடலம் பெற்ருர்க்கு முத்தி வழிகாட்டும்
பந்தமற்ற ஞானமுனி மீட்டும் பகர்ந்தனனே. 1

இ-ள்: ஐந்து திருமுகங்களுள்ள பரமசிவனுடைய அடியார் செய்கையைக்கேட்டு நாங்கள் உய்ந்தோமென்று சொல்லிய நைமிசாரணிய முனிவர்கள் மனம் மகிழ வன்மையுடன் உடல் பெற்றவர்களுக்கு முத்தி வழியைக் காட்டுகின்ற ஞானவானுகிய சூதமுனிவர் மீட்டும் சொல்லுகிருர் என்றவாறு.

ஐந்து முகங்களாவன: ஈசானம், தற்புருஷம், வாமம், அகோரம், சத்தியோசாதம் என்பவைகளாம்.

ஈசானம்: படிகநிறமுள்ளதாக மேல்நோக்கிய பார்வையாயிருக்கும்.

தற்புருஷம்: பொன்னிறமுள்ளதாய்க் கிழக்குத் திசைநோக்கி யிருக்கும்.

அகோரமுகம்: தெற்குநோக்கி நீலநிறமுள்ளதாயிருக்கும்.

வாமம்: பொன்னிறமுடன் வடக்குநோக்கியிருக்கும்.

சத்தியோசாதம்: வெண்மை நிறமுள்ளதாய் மேற்குநோக்கி யிருக்கும்.

சிவாலயங்களில் தீபாராதனை செய்யும்போது நாலு தீபத்தட்டு நாலு திக்கிலும், அந்நாலின் நடுவில் ஒருதட்டுமாக அஞ்சுதட்டு வைத்துத் தீபாராதனை செய்வது பரமசிவனுடைய ஐந்து திருமுகங்களுக்கும் தீபாராதனை செய்கின்ற பாவனையாம்.

நடுவில் வைத்திருக்கிற ஈசானமுகத்தட்டு முதலிலும், பின்பு தற்புருடமுகத்தட்டு முதல் நான்குதட்டும் மேற்சொல்லிய கிரமப்படி எடுத்துத் தீபாராதனை செய்வது.

சிவபெருமான் மேற்கு நோக்கிய சந்நிதியாயிருந்தால் அந்தத் திக்கு நோக்கிய திருமுகமே தற்புருஷமுகமாக தற்புருஷத்தட்டு வைத்துத் தீபாராதனை செய்யும்படி ஆகமவிதியாம். தெற்கு வடக்குநோக்கிய சந்நிதியாயிருந்தால் அந்தந்தத்திசையே தற்புருஷமாகக் கொள்ளவேண்டும். ஏனைய ஆகமங்களில் காண்க.

பிங்கலையென் றேதும் பெருங்கணிகை யோரிராத்
துங்கமிகு தவத்துத் தொல்லோன் விடபனுக்குச்
செங்கமலத் தாள்வருடிச் செய்தவழி பாட்டினல்
அங்கவளு ஞாலத் தலர்மடந்தை போலவே. 2

இ - ள் : பிங்கலையென்று சொல்லப்படுகிற ஒரு கன்னிகைப் பெண்ணனவள் விடபனென்னும் சிவயோகிக்கு ஒருநாளிரவு திருவடி வருடிச் செய்த பணிவிடையினல் அப்பிங்கலையானவள் இவ்வுலகத்தில் திருமகள் வந்து பிறந்ததுபோல என்றவாறு.

போர்கெழுவேல் வேந்தன் புகழ்ச்சந்தி ராங்கதற்குச்
சீர்கெழுமு தாரமாஞ் சீமந்தனி வயிற்றின்
வார்பெய்முலைக் கீர்த்தி மாலினியென் னுமமொடுந்
தார்புனைமெல் லோதித் தளிரியலாய்த் தோன்றினள். 3

இ - ள் : போர்செய்வதற்கு ஏதுவாகப்பொருந்திய வேலாயுதத்தையுடையவனைப் புகழ்பெற்ற சந்திராங்கதனென்னும் அரசனுக்குக் கற்புள்ள மனைவியாகிய சிமந்தனி வயிற்றில் பெண்ணுகப் பிறந்து கீர்த்திமாலினி என்னும் பேர்பெற்றுள் என்றவாறு.

வானமிரு ளற வளருமதிப் பிள்ளையைப்போல்
தேனமருந் தார்வேந்தன் செல்வக் குலமோங்கக்
கானமருங் கூந்தற் கனிவாய்க் கழைமென்றோள்
பானல்விழி யாள்வளர்நாள் உற்றசெயல் பன்னுவாம். 4

இ - ள் : விண்ணில் இருள்நீங்க வளர்கின்ற இளஞ்சந்திரனைப் போலச் சந்திராங்கதனுடைய குலமானது ஓங்கும்படி கீர்த்திமாலினியென்னும் பெண்ணனவள் வளருகிறநாளில் பொருந்திய செய்கையைச் சொல்லுகிறோம் என்றவாறு.

வாசனைதங்கிய கூந்தலும், கோவைக் கனியொத்த வாயும், மூங்கிலை ஒத்த தோளும், நீலோற்பலம்போன்ற கண்களுமுள்ள பெண்.

விஞ்சையரி னல்யாழ் விதம்பயின்று வேதமுதல்
வஞ்சமிலா வாறங்க நீதிமனு வாராய்ந்து
தொஞ்சு கரிபரிதே ரூர்ந்து கொலைப்படைகள்
நெஞ்சங் களிக்க நிகரில்லார் கறறுணாநதாா. 5

இ - ள் : தங்களுக்கு ஒப்பில்லாத பத்திராயு சுனையன் என்பவர்கள் வித்தியாதரரைப்போல வீணையின் வகைகளைக்கற்றும் வேதம் முதலாக ஆறங்கங்களும், மனுவிக்கியானமென்னும் நீதி சாஸ்திரமும், கற்றுணர்ந்தும், மெதுவாக அடிபெயர்த்து வைத்து நடக்கும் யானை, குதிரை, தேர் ஏற்றம் இவைகளெல்லாம் கற்றுணர்ந்தும், வில்முதலிய ஆயுதப்பயிற்சியும் மனம் களிக்கக் கற்றுணர்ந்தார்கள் என்றவாறு.

மற்ற நிருபன் மகன்பத்தி ராயுவெனுஞ்
சிற்றஞ் சிறுகுடுமிச் செவ்வாய் மழகளிறுஞ்
சொற்ற வணிகன் றநயன் சுனையனுமா
யுற்று மருவி யுடலுயிர்போல் வைகினர். 6

இ - ள் : அரசகுமாரனாகிய பத்திராயு என்பவனும் இவர்களை ஆதரிக்கும் வணிகனுடைய குமரனாகிய சுனையன் என்பவனும் ஒருவனை விட்டு ஒருவன் பிரியாமல் உடலும் உயிரும்போல இருந்தார்கள் எ - று.

தக்க மறையோர் தழன்மாட் டவிசொரிந்து
மிக்க சடங்கியற்ற நாய்கன் விழைவோடும்
தொக்க விரவலர்பாற் சொன்ன மழைபொழிய
வொக்க விருவோரு முந்நூ லுவந்தளித்தார். 7

இ - ள் : தகுதியுள்ள பிராமணர்கள் ஓமாக்கினியிடத்தில் அவிர்ப்பாகங்கொடுத்துச் சடங்குகள்செய்ய அந்த வணிகன் வந்திருக்கிற இரவலர்களுக்கு மழை பொழிவதுபோலத் திரவியம் கொடுக்கவும் அந்த இரண்டு புதல்வர்களும் ஏககாலத்தில் உபநயனம் செய்துகொண்டார்கள் எ - று.

ஞானநூ லாதிபல விஞ்சை நயந்தளித்த
வானவர்தந் தேசிகனே போல்வான் மனமகிழ
ஊனமில்சீ ரொண்மணியும் பொன்னு முவந்தளித்துத்
தேனமர்தார் மைந்தர் திருவயதீ ரெட்டடைந்தார். 8

இ - ள் : ஞானசாத்திரம் முதலாகிய பல கலைகளை விருப்பத்துடன் அருள்செய்த தேவகுருவை ஒத்த ஆசாரியர் மகிழும்படி காணிக்கையாக ரத்தினங்களும் பொன்னும் மகிழ்ந்து கொடுத்துப் பதினாறு வயதுள்ளவர்களானார்கள் என்றவாறு.

மண்டு புருவச் சிலைகுனித்து வாட்கண்ணே
கொண்ட கொடுங்கணையா யெய்வான் குழூஉக்கொண்டு
கண்ட மகளிர் கடற்பார் முழுதாளுந்
திண்டிறல் வேற்காளை திருமார்பத் தெய்யுநாள். 9

இ - ள் : கண்ட மாதர்கள் கூட்டங்கொண்டு நெருங்கிய புருவ மாகிய வில்லை வளைத்து வாள்போன்ற கண்களே கொடிய பாணமாக எய்யக் குறித்து அரசமகனுடைய மார்பகத்தில் ஏவும்படியான பருவம் அடைந்தநாளில் என்றவாறு.

கட்கணையை எய்தலாவது, காண்டல் என்னும் பொருளது.

தீர்ந்த வுயிர்முன் னளித்த சிவயோகி
வார்ந்த சடிலஞ் சுவற்புரள வந்தெய்த
நேர்ந்து சுமதியெனு நேரிழையு நெஞ்சமருள்
கூர்ந்த குமரனுமக் கோதிலான் றடொழுதார். 10

இ - ள் : நீங்கிய உயிரை முன்னம் கொடுத்த சிவயோகியானவர் நீண்ட சடையானது பிடரியினிடத்துப் புரண்டு அசையும்படிவர நேரில் கண்டு அந்த அரசியும் மனதில் மிக்க கருணையுள்ள அவள் புதல்வனும் பரிசுத்தரான அந்தச் சிவயோகியின் அடியில் வணங்கினர்கள் எ - று.

சுவல் - தோள்.

மாண்ட பெருந்தவத்தோன் சிந்தை மகிழ்வெய்தப்
பூண்ட பரிவினராய்ப் பொன்னுண் மலர்தூவிக்
காண்டகு பால்செந்தேன் கனிபொற் கலத்தேந்தி
யாண்டு மிகுபூசை வழிபாட் டுடனளித்தார். 11

இ - ள் : மாட்சிமைதங்கிய சிவயோகி மனமகிழ்ச்சி அடையத் தக்கதாக அன்புள்ளவர்களாய் நல்ல மலர்கள்தூவிப் பார்வைக்குமினிய மதுரமுள்ள பால் தேன் பழங்கள் பொற்கலத்தில் வைத்து ஆராதனை செய்து அமுதுகொள்ளச் செய்தார்கள் என்றவாறு.

கோடும் பவளக் குறுஞ்சடில மாவிரதி
வாடுஞ் சிறுமருங்குற் செல்வியையு மைந்தனையும்
நாடுங் கருணை புரிந்து நகைமுகத்தால்
தேடும் பொருளனையீர் தீதிலவே யென்றுரையா. 12

இ - ள் : வளைவாகத் தொங்குகின்ற சடையையுடைய சிவயோகி யானவர் தம்மை வணங்கிய அவ்விருவருக்கும் வாழ்த்துச்சொல்லிச் சுகமா யிருக்கிறீர்களா என்று வினவினர் என்றவாறு.

வாவுபரித் தேர்வேந்தன் மைந்தன் முகநோக்கி
மேவுகலை யுள்ள விகற்பமெல்லாங் கற்றனையோ
தேவனெனத் தேசிகனைச் சிந்தைமகிழ் வித்தனையோ
ஏவுசுடர் வேலோ யெமையு நினைப்பாயோ. 13

இ-ள்: தாவிச் செல்லுகின்ற குதிரைகட்டிய தேரினையுடைய அரசகுமரன் முகத்தைப்பார்த்து யாவரும் விரும்புகிற அறுபத்துநான்கு கலைகளும் கற்றுக்கொண்டனையா? ஆசாரியரைக் கடவுளாகப் பாவனை செய்து அவர் மனம் மகிழும்படிச் செய்தனையா? பகைவர்மேல் செலுத்தும்படியான வேலையுடைய குமரனே! எம்மையும் எப்போதாவது நினைத்திருப்பாயா என்றவாறு.

சொல்லா யெனமுனிவன் சொல்லு முரைகேட்டு
நல்லா ளடிதொழுது நானிலத்து மாய்ந்தவர்போல்
புல்லார் புறங்காட்டிற் போடா துயிரளித்த
வல்லாய் நினையு மறந்திருக்க வல்லோமோ. 14

இ-ள்: சொல்லென்று சிவயோகி சொல்லிய வார்த்தையை அரசமகள் கேட்டு அவர் அடியை வணங்கி சுவாமி இவ்வுலகில் இறந்தவர்களைக் கொண்டுபோய்ப் போடுவதுபோல முன்னிறந்திருந்த புதல்வனைப் புற்கள்நிறைந்த சுடலையில் போட்டுவிடாதபடிக்கு உயிரைக்கொடுத்த வல்லவரே! உம்மையும் நாங்கள் மறந்திருக்கவல்லமா? என்றவாறு.

நீணிலமேல் வீந்தவுயிர் நீயளிக்கப் பெற்றேனை
மாணவக னாக மறைமுனியே கொண்டருளிக்
காணரிய செய்யகோற் காவலவர் நீதிபுகன்
றாணவ நீடாத வறிவுமளிப் பாயென்றாள். 15

இ-ள்: சிவயோகியே! இந்தப் பெரிய உலகில் இறந்த உயிரை தேவரீர் கொடுக்கப் பிழைத்திருக்கும் என் புதல்வனைச் சீடனாகக்கொண்டு இத்தன்மையதென்று எளிதில் அறியக்கூடாத செங்கோல் செலுத்தும் அரசர்களுக்குரிய நீதிகளைக்கூறி ஆணவம் மேலிடாதவண்ணம் ஞானமும் அருள்செய்யுமென்று கூறினாள் என்றவாறு.

மாணவகன் - மாணாக்கன்.

இத்தகைய மாற்ற மிவளுரைப்பக் கேட்டமுனி
சித்த முவந்து சிறுவன் முகநோக்கிக்
கொத்தவிழும் பைந்தார்க் குமர நீ கேட்டியென
உத்தமநன் னீதி மனுநூ லுணர்த்தினான். 16

இ-ள்: இத்தன்மையுள்ள உரைகளை அரசமகள் கூறக் கேட்ட சிவயோகியானவர் மனமகிழ்ந்து புத்திரன் முகத்தைப்பார்த்துப் பூங்கொத்துக்கள் மலர்ந்திருக்கும் மாலை அணிந்த குமரனே! நீ கேளென்று நல்ல நீதிகளைக்கூறும் மனுநூலை அருளிச்செய்தார் என்றவாறு.

ஆழி யுலகத்தி லந்தணரே யாதியாய்
வாழு மொருநான்கு வருணத்தோர் தம்மையெல்லாம்
ஊழி முதல்வ னுருவெடுத்துச் செங்கோலால்
சூழி மதயானைத் தொல்வேந்தாய்க் காக்குமே. 17

இ - ள்: கடல்சூழ்ந்த இவ்வுலகினில் வாழுகின்ற பிராமணர் முதலாகிய நான்கு வருணத்தவரையெல்லாம் ஊழி முதல்வனுகிய பரமசிவன் நெற்றிப் பட்டங்கட்டிய மத்த யானையையுடைய பழமையாகிய அரசர்களாகத் திருமேனிகொண்டு நீதியினுல் காப்பான் என்றவாறு.

வேந்தன் முறைதிறம்பின் வேத விதிதிறம்பும்
ஏந்திழையார் தங்கற்பு மில்லறமு நில்லாவாம்
மாந்தர் பசியா லுணங்க மழைவறந்து
பாந்தண் முடிகிடந்த பாரின்விளை வஃகுமால். 18

இ - ள்: அரசன் நீதிதவறினுல் வேதவிதிகள் தவறும், மாதர்களுடைய கற்பும் இல்லறமும் மாறிப்போம், மக்கள் பசியால் வருந்தும்படி மழைபெய்யாமல் ஆதிசேடன் முடியிலிருக்கும் பூமியினிடத்தில் பயிர் விளைவும் குன்றிவிடும் என்றவாறு.

தீயூட்டித் தாமுண் ணுஞ் செய்தவத்தோ ரானினங்க
ணோயூட்டு காய மிகழ்ந்தியற்று நோன்பினேர்
வேயூட்டு தோளார் விருத்தர்சிறு பாலர்தமைத்
தாயூட்டிப் போற்றல்போல் தார்வேந்தன் காக்குமால். 19

இ - ள்: அக்கினி தேவனுக்கு அவிப்பாகங் கொடுத்துத் தாங்கள் உணவு உண்ணுகின்ற பிராமணர்கள், பசுக்கள், நோயைத்தருகின்ற உடலை வெறுத்துத் தவஞ்செய்கின்ற முனிவர்கள், பசிய மூங்கிலையொத்த தோளையுடைய பெண்கள், முதியோர்கள், சிறுவர்கள் இவர்களைத் தாயானவள் பாலூட்டி வளர்ப்பதுபோல வெற்றிமாலை அணிந்த அரசன் காப்பான் என்றவாறு.

தேவர் நிலைகடவார் மேலோர் திறம்பிழையார்
நாவி னிரண்டுரையார் நன்கல் லவைபுரியார்
காவன் முறைதிறம்பார் காமச் செயல்பெருக்கார்
பூவலயங் காவல் புரியும் புரவலரே. 20

இ - ள்: இவ்வுலகத்தைக் காக்கும் அரசரானவர் தேவர்கள் நிலைமையைக் கடவார்கள். பெரியோரிடத்துக் குற்றம்செய்யார்கள். நாவினுலிரண்டு சொல்லார்கள். நன்றல்லாத காரியத்தைச் செய்யார்கள். காவலின் முறைமை மாருர்கள். காமச்செய்கையை அதிகப்படுத்தார்கள் என்றவாறு.

உற்றவூ றஞ்சாப் படையு முயர்குடியும்
முற்றுலவாப் பைங்கூழு முன்வருதல் சேமிக்கும்
பெற்றி யமைச்சு முதவும் பெருந்துணையும்
கொற்ற வரணு முடையானே கோமகனே. 21

இ - ள்: ஆயுதங்களால் தங்கள் உடலில் பொருந்திய காயங்களுக்குப் பயப்படாத சேனையும், உயர்வான குடியும், முழுவதும் கெடாத பசியபயிரும், மேல்வருவதை அறிந்து முன்னதாகக் காத்துக்கொள்ளுகிற தன்மையுள்ள அமைச்சர்களும், உதவி செய்யத்தக்க பெருந்துணையும், வெற்றி பொருந்திய மதில் அரண் முதலிய நால்வகை அரணுமுள்ளவனே அரசனவான் என்றவாறு.

நால்வகை அரண்: மதில், அகழி, காடு, மலை என்பவைகளாம்.

ஏடவிழ் பைந்தாரோ யிமையோர் பதம்பெறினும்
நாடு நடுங்க நன்கல் லனபுரியார்
வேடர் பரிவேட்டஞ் செய்யார் வினைதருஞ்சூ
தாட நினையார்மட் டுண்ணா ரரசரே. 22

இ - ள்: இதழ்விரிந்த மாலை அணியும் அரசகுமாரனே! அரசர்கள் தேவர் பதவி பெற்றாலும் நாட்டிலுள்ளவர் நடுங்கும்படி நன்மையல்லாத காரியங்களைச் செய்யார்கள். வேடர்களைப்போல வேட்டைத்தொழில் செய்யார்கள். பாபத்தைத் தருகின்ற சூதாடலை நினையார்கள். மதுபானம் செய்யார்கள் என்றவாறு.

குரவர்தமைக் காப்பர் செய்ந்நன்றி கொல்லார்
கரவடரைக் காய்வர் பழிகண்ணோட் டஞ்செய்யார்
இரவலருக் கீவ ரெதிர்த்தோர் முனையின்
விரவு தமதுயிரு மெண்ணார்கள் வேந்தரே. 23

இ - ள்: அரசர்கள் பெரியோரைக் காப்பார்கள். ஒருவர் செய்த உதவியை மறவார்கள். திருடரைக் கோபிப்பார்கள். பழி செய்யார்கள். தாட்சணியம் பாரார்கள். இரப்பவர்களுக்குக் கொடுப்பார்கள். பகைவர் நேரிட்ட சண்டையில் தங்களுயிரைப் பெரிதாக எண்ணார்கள் என்றவாறு.

வழக்கு முன்னிலையில் வந்தவர்களிலாவது, குற்றவாளிகளாய் வந்தவர்களிலாவது தங்களுக்கு நட்பினராயிருந்தாலும், பகைவராயிருந்தாலும், இவ்விரண்டும் அல்லாதவர்களாயிருந்தாலும் தாட்சணியம் இல்லாமல் நீதிப்படி விசாரிப்பார்கள்.

வேறு

வைகறை எழுந்து புனிதநீ ராடி வரன்முறை ஈசனை வணங்கி
தெய்வவே தியருக் கான்குல நிதியந் தெளிபுனற் பழனமோ டுதவி
மைதவழ் கண்ட னடியவர் பகவ ரதிதியர் மருவின ரெவர்க்குங்
கைகவி நறுநெய் தீம்பய ருன்பால் கன்னன்முப் பழத்தொடுங் கலந்து. 24

இ - ள்: வைகறையில் நித்திரைவிட்டெழுந்து, தூயநீரில் நீராடி, ஆகம விதிப்படி பரமசிவனைப் பணிந்து, தெய்வத்தன்மையுள்ள பிராமணர்களுக்குப் பசுக்களும் பொன்னும் தெளிவாகிய நீர் நிறைந்த விளைநிலங்களும் தானமாகக்கொடுத்து, பரமசிவனுடைய அடியார்களுக்கும் முனிவர்களுக்கும் அதிதிகட்கும் கையில் பற்றிக் கொள்ளத்தக்க மணமுள்ள நெய் மதுரமுள்ள பருப்பு பசுவின் பால் வெல்லக்கட்டி முப்பழங்கள் இவைகளுடன் சேர்த்து என்றவாறு.

வைகறை - விடியற்காலம். பகவர் - முனிவர்.

வாசநன் கருனை யடிசிலு மருத்தி மருவிய விருந்தொடுந் துய்த்துப்
பாசிலைப் பிளவு கருப்புர மருந்திப் பரிமளக் கலவைதண் சந்தம்
யோசனை கமழ வணிந்துநல் லணிக ளொளிமுடி யாதிய புனைந்து
கீசகத் தடைக்கு மாவியந் தானை கிளரொளி மருங்குறச் சாத்தி. 25

இ - ள்: வாசனைதங்கிய உணவு உண்பித்தும், வந்துள்ள விருந்துடன் தாமும் உண்டும், பச்சைக்கருப்பூரமுதலிய வாசனையுடன் தாம்பூலம் தரித்துக்கொண்டும், வாசனையுள்ள கூட்டுவர்க்கஞ்சேர்ந்த சந்தனக்குழம்பு யோசனைதூரம் மணக்கும்படி பூசிக்கொண்டும், மகுடம்முதலிய நல்ல ஆபரணங்கள் அணிந்துகொண்டும், மூங்கில் குழையில் அடைக்கத் தக்கதாகப் பாலின் புகையை ஒத்த அதிக மெல்லிய உடையை இடையில் உடுத்திக்கொண்டும் என்றவாறு.

கருனை - பொரிக்கறி. கீசகம் - மூங்கிற்குழை.

அண்டர்கள் சூழப் புரந்தர னிருந்த வவையென வருமணி குயின்ற
திண்டிறன் மடங்கற் றவிசின்வீற் றிருந்து வேந்தர்வந் திடுந்திறை யளப்பக்
கொண்டலின் முரச முன்றிலின் முழங்க வரசிளங் குமரருங் கதிர்வேன்
மண்டலா திபருஞ் சேனைகா வலரு மந்திரத் தலைவரும் வணங்க. 26

இ - ள்: தேவர்கள் தன்னைச் சூழ்ந்துகொண்டிருக்கும்படி தேவேந்திரன் வீற்றிருக்கும் அவையைப்போல், கிடைப்பதற்கரிய ரத்தினங்கள் பதித்த மிக பலமுள்ள சிம்மாசனத்தில் வீற்றிருந்து, பகையரசர்கள் வந்து தாங்கள் கட்டுகிற திறையை அளந்து கொடுக்கவும், அரண்மனை முகப்பில் மேகம்போல பேரிகை முழங்கவும் அரசகுமரர்களும் ஒளிதங்கிய வேலையுடைய மண்டலாதிபரும் சேனாதிபதிகளும் மந்திரிமார்களும் வணங்கவும் என்றவாறு.

நீதியு மொற்று நிகரிலாக் கண்ணு நீணிலத் தல்லவை யொழித்தும்
வேதியர் தேவர் மெலிந்துளோர் வறிஞர் மெலிவறக் குறைத்திறம் வினுயும்
ஓதருங் குடியு முலப்பிலா நிதியு முயர்ந்திட வனுதினங் காத்தும்
சூதினிற் பகைவர் திருவினைக் கவருஞ் சூட்சியும் வினையமும் சூழ்ந்து. 27

இ-ள்: நீதியும் தூதர்களுமே தமக்குக் கண்களாக இவ்வுலகில் பாவத்தை ஒழித்தும், பிராமணர்கள் தேவர்கள் மெலிவடைந்தவர்கள் வறுமையாளர் இவர்கள் வருத்தம் நீங்கும்படி குறைபாட்டை வினவியும், சொல்லுதற்கரிய குடிகளும் அழியாத நீதியும் அதிகரிக்கும்படி நாள்தோறுங்காத்தும், சூதினுலே பகைவரின் செல்வத்தை அபகரிக்கும்படியான தந்திரத்தையும் அதற்கேற்ற முயற்சியையும் ஆலோசித்தும் என்றவாறு.

தருமநூ லாய்ந்து மடைந்தவர்ப் புரந்துந் தடுப்பருங் காலங்க ளுணர்ந்தும்
எரிபசும் பூணர் நடத்தொழில் கண்டு மியாழினே ரின்னிசை கேட்டும்
விரியிருண் மாலைப் பொழுதெலா மனங்கன் விழாவணி நடத்துதல் போலப்
புரிகுழன் மடவார் கலவியிற் றிளைத்தும் போக்குவர் புரவலர் பொழுதே. 28

இ-ள்: பகற்பொழுதில் தரும சாத்திரங்களை ஆராய்ந்தும், தம்மை அடைந்தவர்களைக் காப்பாற்றியும், தடுப்பதற்கரிய காலங்களை அறிந்தும், ஒளிவிடும் பொன்னுபரணம் அணிந்த நடனப்பெண்கள் ஆடும் நாடகத்தைப் பார்த்தும், வீணை வாசிப்பவர்கள் இனிய இசையைக்கேட்டும், இராப்பொழுதில் மன்மதனுக்குத் திருவிழாச் செய்வதுபோல் தங்களுக்கு உரிய மனைவியரிடத்தில் கலவித்தொழில் புரிந்தும் அரசர்கள் பொழுது போக்குவார்கள் என்றவாறு.

இத்திற மவனி புரந்தவே லிறைவ ரெண்ணில ரெண்ணில காலஞ்
சத்திர மொன்றிற் றரைமுழு தாண்டு தமனிய நெடும்பதி யாள
உத்தம வேள்விக் கனற்றுறை முடித்திவ் வுருவொழித் தும்பராய் வான்மேற்
சித்திர விமானத் தரம்பைய ரோடும் வைகுநர் சிறுவகே ளின்னும். 29

இ-ள்: இத்தன்மையாகப் பூமியைக்காத்த அனேகம் அரசர்கள் அனேகங்காலம் ஒரு குடையின்கீழ் உலகம் முழுவதையும் ஆண்டு பொன் உலகமாகிய சுவர்க்கத்தை ஆள்வதற்காக யாகங்கள் செய்து நிறைவேற்றி இவ்வுருவத்தை ஒழித்துத் தேவர்களாய் வானுலகத்தில் சித்திரவிமானம் ஏறிச்சென்று அரம்பைப் பெண்களுடன் இருக்கின்றார்கள். புதல்வனே. இன்னமும் கூறுகின்றேன் கேள் என்றவாறு.

அவ்வண நீயுங் கடைப்பிடித் தொழுகி யரனடிக் கமலமே யரணுப்
பவ்வநீ ருலக முழுவதுந் தனிவெண் பனிமதிக் கவிகையிற் புரப்பாய்
வெவ்வினை யகற்றுஞ் சிவகவ சமும்யான் விளம்புகே னுனக்கது விரவாத்
தெவ்வினை யொறுக்குஞ் சயந்தரும் பாவ மறுத்திடு மென்றுசெப் பினனால். 30

இ - ள்: அந்தத் தன்மையை நீயும் மனங்கொண்டு நடந்து திருவடித் தாமரையே துணையாகக் கடல்சூழ்ந்த பூலோகம் முழுவதையும் ஒப்பில்லாத தாய்க் குளிர்ச்சிதங்கிய சந்திரவட்டக் குடையின்கீழ் ஆளுவாயாக. அன்றியும் கொடிய வினைகளை நீக்கத்தக்கதான சிவகவசமும் உனக்கு நான் சொல்லுகிறேன். அந்தச் சிவகவசமானது உன்னைக் கூடியிராத பகைகளை அறுக்கும்; வெற்றியைக் கொடுக்கும்; பாவங்களை நீக்கிவிடும் என்று சிவயோகி சொன்னார் என்றவாறு.

கவசம்போன்று காத்தலையுடைமையால் கவசமென்று பெயர் பெற்றது.

சிவயோகி பத்திராயுவுக்கு அரசியலளித்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 702

திருச்சிற்றம்பலம் :- ஞானத்தினால் அறியத்தக்கதான அதிபரம ரகசியமாயிருப்பதினால் சிற்றம்பலமென்று சொல்லப்படுகின்றது. இதனைச் சிதம்பரபுராணத்தில் கண்டுகொள்க.

பன்னிரண்டாவது

சிவகவசமுரைத்த அத்தியாயம்

பங்கயத் தவிசின் மேவி யிருந்துடற் பற்று நீங்கி
அங்குநற் பூத சுத்தி யடைவுடன் செய்த பின்னர்க்
கங்கையைத் தரித்த சென்னிக் கற்பகத் தருவைச் செம்பொற்
கொங்கைவெற் பனைய பச்சைக் கொடியொடு முளத்தின் வைத்தே. 1

இ - ள் : பத்மாசனத்திலிருந்து உடற்பற்றினை ஒழித்து பூதசுத்தி கிரமப்படி செய்த பிறகு கங்கையைத்தரித்த திருமுடியையுடைய கற்பகத் தருபோன்ற பரமசிவத்தையும் பொன்மலை போன்ற தனங்களையுடைய பச்சைக்கொடியொத்த பார்வதிதேவியாரையும் மனதில் வணங்கி எ - று.

பரமசிவன் அடியவர்கள் வேண்டும் வரங்களைக் கொடுத்தலால் கற்பகத்தரு என்றார். பத்மாசனமாவது இரண்டு தொடைமேலும் இரண்டு உள்ளங்காலையும் மாறித் தோன்றவைத்தல்.

அகிலநா யகனாய் ஞான வானந்த ரூபி யாகித்
துகடரு மணுவாய் வெற்பின் றோற்றமா யுயிரை யெல்லாந்
தகவுட னவனி யாகித் தரிப்பவ னெம்மை யிந்த
மகிதல மதனிற் றீமை மருவிடா தருளிக் காக்க. 2

இ - ள் : எல்லாவற்றிற்கும் தலைவனாகியும் ஞானானந்த வடிவினராகியும் துகளாகிய அணுத்தன்மையாகியும் மலைபோலப் பெரியதாகியும் பூமியுமாகித் தகுதியுடன் ஆன்மகோடிகளைத் தாங்குகின்ற கடவுள் இந்த உலகத்தில் தீங்கு நேரிடாவண்ணம் அருள்செய்து என்னைக் காக்கக்கடவர் என்றவாறு.

குரைபுன லுருவங் கொண்டு கூழ்தொறும் பயன்க ணல்கித்
தரையிடை யுயிர்கள் யாவுந் தளர்ந்திடா வண்ணம் காப்போன்
நிரைநிரை முகில்க ளீண்டி நெடுவரை முகட்டிற் பெய்ய
விரைபுன லதனுள் வீழ்ந்து விளிந்திடா தெம்மைக் காக்க. 3

இ - ள் : ஒலிக்கின்ற நீருருவங்கொண்டு பயிர்கள்தோறும் பயன் கொடுத்து இவ்வுலகத்திலிருக்கும் உயிர்களெல்லாம் தளர்வடையாதபடி காப்பவனாகிய கடவுள் வரிசை வரிசையாய் வருகின்ற மேகங்கள் சேர்ந்து

பெரிய மலைகளில் மழை பொழியப் பெருக்கெடுத்தோடும் தண்ணீரில் விழுந்து இறவாதவண்ணம் எங்களைக் காக்கக்கடவர் என்றவாறு.

கடையுகந் தன்னி லெல்லா வுலகமுங் கடவுட் டீயால்
அடலைசெய் தமலை தாள மறைதர நடிக்கு மீசன்
இடைநெறி வளைதா பத்தி லெறிதரு சூறைக் காற்றில்
தடைபடா தெம்மை யிந்தத் தடங்கட லுலகிற் காக்க. 4

இ - ள்: யுகத்தின் இறுதியில் எல்லா உலகத்தையும் தெய்வத் தன்மையுள்ள தீயினால் சாம்பலாகச்செய்து, பார்வதி தேவியார் தாளம் போட நடனமாடும் பரமசிவன் வழியின் நடுவில் வளைந்துகொள்ளும் தீ வெப்பத்துடன் வீசுகின்ற சூறைக்காற்றினால் தடைபடாமல் பெரிய கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் எம்மைக் காக்கக்கடவர் என்றவாறு.

அடலை - சாம்பர். தாபம் - அக்கினி.

தூயகண் மூன்றி னோடு சுடரும்பொன் வதன நான்கும்
பாயுமான் மழுவி னோடும் பகர்வர தாப யங்கண்
மேயதிண் புயங்க ளூன்கு மிளிருமின் னனைய தேசு
மாயதற் புருட னெம்மைக் குணதிசை யதனிற் காக்க. 5

இ - ள்: பரிசுத்தமுள்ள முக்கண்களும் ஒளிவிடாநின்ற பொன்னிறமுள்ள நான்கு திருமுகங்களும் பாய்கின்ற மான் மழுவினுடன் சொல்லுகின்ற வரதமும் அபயமும் பொருந்திய திண்ணிய நான்கு புயங்களும் விளங்குகின்ற மின்னலையொத்த திருமேனி ஒளியுமுள்ள தற்புருட மூர்த்தியானவர் கிழக்குத்திசையில் எம்மைக் காக்கக்கடவர் என்றவாறு.

வரதம் - வரங்கள் கொடுக்கிறது. அபயம் - அச்சமின்மை.

மான்மழு சூலந் தோட்டி வணைதரு நயன மாலை
கூன்மலி யங்கு சந்தீத் தமருகங் கொண்ட செங்கை
நான்முக முக்க ணீல நள்ளிருள் வருணங் கொண்டே
யான்வரு மகோர மூர்த்தி தென்றிசை யதனிற் காக்க. 6

இ - ள்: மான், மழு, சூலம், அங்குசம் புனையப்பட்ட உருத்திராக்க மாலை வளைவாகிய அங்குசம் தீ தமருகம் என்னும் இவைகளைத் தாங்கிய செங்கைகளும் நான்கு திருமுகங்களும் முக்கண்களும் நீலம்போலச் செறிந்த இருள்நிறமுங்கொண்டு இடபத்திலேறி வருகின்ற அகோரமூர்த்தியானவர் தெற்குத்திசையில் எம்மைக் காக்கக்கடவர் என்றவாறு.

தோட்டி - கோடரி. நயனமாலை - உருத்திராக்கமாலை. தமருகம் - உடுக்கை என்னும் வாச்சியம்.

திவண்மறி யக்க மாலே செங்கையோ ரிரண்டுந் தாங்க
அவிர்தரு மிரண்டு செங்கை வரதத்தோ டபயந் தாங்கக்
கவினிறை வதன நான்குங் கண்ணொரு மூன்றுங் காட்டுந்
தவளமா மேனிச் சத்தியோ சாதன்மேற் றிசையிற் காக்க. 7

இ - ள் : தாவுகின்ற மானையும் உருத்திராக்க மாலையினையும் இரண்டு திருக்கைகள் தாங்கவும், ஒளிவிடாநின்ற இரண்டு திருக்கைகள் அபயவரதம் தாங்கவும், அழகுநிறைந்த நான்கு முகங்களும் மூன்று கண்களும் விளங்குகிற வெண்மை நிறமுமுள்ள சத்தியோசாத மூர்த்தியானவர் மேற்குத்திசையில் எம்மைக் காக்கக்கடவர் என்றவாறு.

மறி - மான்.

கறைகெழு மழுவு மானு மபயமும் கண்ணி ஞமை
மறைதருந் தொடையுஞ் செய்ய வங்கைக ணான்கு மேந்திப்
பொறைகொணன் முகத்து முக்கட் பொன்னிற மேனி யோடு
மறைபுகழ் வாம தேவன் வடதிசை யதனிற் காக்க. 8

இ - ள் : உதிரம் தோயும்படியான மழுவாயுதத்தையும் மானையும் அபய வரதங்களையும் உருத்திராக்க மாலையினையும் சிவந்த நான்கு திருக்கைகளிலும் தாங்கிச் சாந்தமுடைய நான்கு திருமுகங்களிலும் மும்மூன்று கண்களும் பொன்னிற மேனியுமுள்ள வேதங்களால் புகழத்தக்க வாம தேவமூர்த்தி வடக்குத்திசையில் காக்கக்கடவர் என்றவாறு.

அபயம் - வலக்கரம். வரதம் - இடக்கரம்.

அங்குசங் கபாலஞ் சூல மணிவர தாப யங்கள்
சங்குமான் பாச மக்கந் தமருகங் கரங்க ளேந்தித்
திங்களிற் றவள மேனித் திருமுக மைந்தும் பெற்ற
வெங்களீ சான தேவ னிருவிசும் பெங்குங் காக்க. 9

இ - ள் : அங்குசம் கபாலம் சூலம் அழகிய வரதாபயங்கள் சங்கம் மான் பாசம் உருத்திராக்கம் தமருகம் என்னும் இவைகளைப் பத்துக் கைகளிலும் ஏந்திச் சந்திரனைப்போல வெண்மை நிறங்கொண்ட திருமேனியும் ஐந்து திருமுகங்களும் பெற்றுள்ள எங்கள் ஈசான மூர்த்தியானவர் பெரிய ஆகாயமெங்கும் காக்கக்கடவர் என்றவாறு.

சந்திர மவுலி சென்னி தனிநுதற் கண்ண னெற்றி
மைந்துறு பகன்கண் டொட்டோன் வரிவிழி யகில நாதன்
கொந்துணர் நாசி வேதங் கூறுவோன் செவிக பாலி
அந்தில்செங் கபோலந் தூய வைம்முகன் வதன முற்றும். 10

இ - ள் : சந்திரசேகரமூர்த்தியானவர் எங்கள் தலையினையும், ஒப்பற்ற நெற்றிக்கண்ணை உடையவரான பாலலோசன மூர்த்தியானவர் நெற்றியினையும், வலிமிக்க பகன் என்னும் சூரியனுடைய கண்ணைப் பறித்த மூர்த்தியானவர் நீண்ட கண்களையும், விசுவநாதரானவர் பூங்கொத்தின் மணத்தை அறியத்தக்க மூக்கினையும், வேதமருளிச்செய்த மூர்த்தியானவர் காதுகளையும், கபாலியென்பவர் செவ்விதாகிய கபோலத்தையும், பரிசுத்தமுள்ள பஞ்சானனமூர்த்தியானவர் முகத்தையும் என்றவாறு.

பன்னிரண்டு சூரியரில் பகன் ஒரு சூரியன். இச்சூரியன் கண் தக்கன் யாகத்தில் பறிக்கப்பட்டது.

வளமறை பயிலு நாவ னுமணி நீல கண்டன்
கடுமடு பினுக பாணி கையினை தருப வாகு
கிளர்புயம் தக்கன் யாகங் கெடுத்தவன் மார்பு தூய
வொளிதரு மேரு வில்லி யுதரமன் மதனைக் காய்ந்தோன். 11

இ-ள் : வளப்பமுள்ள வேதங்களைப் பயில்கின்ற நாவுள்ள மூர்த்தியானவர் நாவினையும், நீலகண்ட மூர்த்தியானவர் கழுத்தினையும், போர் செய்யத்தக்க பினுகம் என்னும் வில்லேந்திய பினுகபாணியானவர் கைகளையும், தர்மவாகுவென்பவர் விளங்குகின்ற புயங்களையும், தக்கன் யாகத்தை அழித்த மூர்த்தியானவர் மார்பினையும், நல்ல ஒளியைத் தருகின்ற மேரு வில்லி என்னும் மூர்த்தியானவர் வயிற்றினையும், காமதகனமூர்த்தியானவர் என்றவாறு.

இடையிப முகத்தோன் ருதை யுந்திநம் மீசன் மன்னும்
புடைவள ரரைகு பேர மித்திரன் பொருவில் வாமம்
படர்சக தீசன் சானு பாய்தரு மிடப கேது
விடைநெறி கணைக்கா லேய்ந்த விமலன்செம் பாதங் காக்க. 12

இ - ள் : இடையினையும், கணபதி பிதாவாகிய மூர்த்தியானவர் நாபியினையும், நம்முடைய ஈசுவரனானவர் புடை பரந்த அரையினையும், குபேரன் தோழனாகிய மூர்த்தியானவர் ஒப்பில்லாத தொடையினையும், பரந்த சகதீசன் முழங்காலையும், பாய்கின்ற ரிஷபகேதுவானவர் ரிஷபமுசிப்பொத்த கணைக்காலையும் பொருந்திய விமலமூர்த்தியானவர் செவ்விய பாதத்தையும் தனித்தனி காக்கக்கடவர்கள் என்றவாறு.

வருபவன் முதல்யா மத்து மகேசன்பின் னிரண்டாம் யாமம்
பொருவரு வாம தேவன் புகன்றிடு மூன்றும் யாமஞ்
செருமலி மழுவா ளங்கைத் திரியம்பக னுலாம் யாமம்
பெருவலி யிடப வூர்தி பிணியற வினிது காக்க. 13

இ - ள் : *வேதங்களில் வழங்கப்படுகிற பகவன் என்னும் திருப்பெயருள்ள மூர்த்தியானவர் முதற்சாமத்திலும், மகேசுவரன் பின் இரண்டாஞ்சாமத்தும், ஒப்பில்லாத வாமதேவர் மூன்றுஞ் சாமத்தும், போருக்கேற்ற மழுவாயுதம் ஏந்திய திருக்கரத்தையுடைய திரியம்பகர் நாலாஞ் சாமத்தும், மிக்க சரீரவன்மையைப் பிணியால் சோர்வுருதபடி ரிஷபவாகன மூர்த்தியுமாகத் தனித்தனி காக்கக்கடவர்கள் என்றவாறு.*

கங்குலின் முதல்யா மத்துக் கலைமதி முடித்தோன் காக்க
தங்கிய விரண்டா மியாமஞ் சானவி தரித்தோன் காக்க
பொங்கிய மூன்றும் யாமம் புரிசடை யண்ணல் காக்க
பங்கமி லைாம் யாமங் கவுரிதன் பதியே காக்க. 14

இ - ள் : *இரவின் முதற்சாமத்தில் கலாதரமூர்த்தி காக்கக்கடவர். இரண்டாஞ்சாமத்தில் கங்காதரமூர்த்தி காக்கக்கடவர். மூன்றுஞ்சாமத்தில் சடாமகுடமூர்த்தியானவர் காக்கக்கடவர். கெடுதலில்லாத நாலாஞ்சாமத்தில் உமாபதி காக்கக்கடவர் என்றவாறு.*

அனைத்துள கால மெல்லா மந்தகற் கடிந்தோ னுள்ளும்
தனிப்பெரு முதலா யுள்ள சங்கரன் புரமுந் தாணு
வனப்புறு நடுவுந் தூய பசுபதி மற்று மெங்கும்
நினைத்திடற் கரிய நோன்மை சதாசிவ நிமலன் காக்க. 15

இ - ள் : *எல்லாக் காலங்களிலும் காலசங்காரமூர்த்தியும், உட்புறத்தில் ஒப்பற்ற முதற்காரண கர்த்தாவாகிய சங்கரமூர்த்தியும், வெளிப்புறத்துத் தாணுமூர்த்தியும், நடுப்புறத்துத் தூய பசுபதியும், மற்றவிடம் எங்கும் நினைப்பதற்கரிய சதாசிவமூர்த்தியுமாகத் தனித்தனி காக்கக் கடவர்கள் என்றவாறு.*

நிற்புழி புவன நாத னேகுழி னிமலன் மேனி
பொற்புறு மாதி நாத னிருப்புழி பொருவி லாத
வற்புத வேத வேத்தி யனுந்துயில் கொள்ளு மாங்கண்
டற்பர சிவன் விழிக்கிற் சாமள ருத்திரன் காக்க. 16

இ - ள் : *நிற்குமிடத்துப் புவனநாதரும், நடக்குமிடத்து நிர்மல மூர்த்தியும், உடலழகினை ஆதிமூர்த்தியும், இருக்குமிடத்து ஒப்பில்லாத அற்புத மூர்த்தியாகிய வேத வேத்தியனும், நித்திரை செய்யுமிடத்துத் தற்பரசிவனும், விழிக்கும்போது சாமள ருத்திரனுமாகத் தனித்தனி காக்கக் கடவர்கள் என்றவாறு.*

மலைமுதற் றுருக்கந் தன்னிற் புராரிகாத் திடுக மன்னுஞ்
சிலைமலி வேட ரூபன் செறிந்தகா னகத்திற் காக்க
கொலையமர் கற்பத் தண்ட கோடிகள் குலுங்க நக்குப்
பலபட நடிக்கும் வீர பத்திரன் முழுதுங் காக்க. 17

இ - ள்: மலை முதலாகிய துருக்கங்களில் புராரி காக்கக்கடவர், காட்டினில் வில்லேந்திய வேடவடிவ மூர்த்தியானவர் நீங்காமலிருந்து காக்கக்கடவர், சர்வசங்காரம் உண்டாகுங் கற்பகாலத்தில் அண்டகோடிகள் எல்லாம் நடுங்கும்படி நடனஞ்செய்கின்ற வீரபத்திரரானவர் முழுவதுங் காக்கக்கடவர் என்றவாறு.

பல்லுளைப் புரவித் திண்டேர் படுமதக் களிறு பாய்மா
வில்லுடைப் பதாதி தொக்கு மிடைந்திடு மெண்ணில் கோடி
கொல்லியன் மாலை வைவேற் குறுகலர் குறுகுங் காலை
வல்லியோர் பாகன் செங்கை மழுப்படை துணித்து மாய்க்க. 18

இ - ள்: கழுத்து மயிரினையுடைய குதிரைகள்கட்டிய பலதேர்கள், மதநீர் ஒழுகும் யானைகள், தாவிச்செல்லுங் குதிரைகள், வில்லேந்திய பதாதியென்னுமிவைகள் சேர்ந்து நெருங்கிய அளவில்லாதவர்களாய்ப் போரில் வெற்றிமாலையணிந்த கூர்மையான கொலைவேலுள்ள பகைவர்கள் போருக்குவந்த காலத்தில் அவர்களைப் பார்வதிபாகன் திருக்கரத்தில் இருக்கும் மழுவாயுதம் துணித்துக் காக்கக்கடவது என்றவாறு.

தத்துநீர்ப் புணரி யாடைத் தரணியைச் சுமந்து மானப்
பைத்தலை நெடிய பாந்தள் பஃறலை யனைத்துந் தேய்ந்து
முத்தலை படைத்த தொக்கு மூரிவெங் கனற்கொள் சூலம்
பொய்த்தொழிற் கள்வர் தம்மைப் பொருதழித் தினிது காக்க. 19

இ - ள்: படமாகிய தலையையுடைய பெரிய ஆதிசேடன் தாவுகின்ற நீரையுடைய கடலாகிய ஆடை உடுத்த பூமியைத் தாங்கிய பல தலைகள் தேய்ந்து மூன்றுதலை படைத்ததையொக்கும் பலமும் வெவ்விய தீயையுங் கொண்ட சூலமானது பொய்த்தொழிலையுடைய கள்வர்களைப் போர்புரிந்து அழித்து இனிதாகக் காக்கக்கடவது என்றவாறு.

முடங்குளை முதலாய் நின்ற முழுவலிக் கொடிய மாக்க
ளடங்கலும் பிநாகங் கொல்க வென்றிவை யனைத்து முள்ள ந்
திடம்பட நினைந்து பாவந் தெறுஞ்சிவ கவசந் தன்னை
யுடன்படத் தரிப்பை யானு லுலம்பொரு குவவுத் தோளாய். 20

இ - ள்: திரண்ட கல்லையொத்துக் குவிந்த தோளையுடையவனே! சிங்கம் ஆதியாயிருக்கும் மிக்க பலமுள்ள கொடிய மிருகங்களையெல்லாம் பிநாகம் என்கிற வில்லானது கொல்லக்கடவது என்றிவ்வாறு எல்லாவற்றையும் இருதயத்தில் உறுதிகொள்ளத் தியானித்துப் பாவங்களை வெல்லும் சிவகவசத்தை அணிந்து கொள்வையானால் என்றவாறு.

சிவகவசம் - திருநீறு.

வேறு

பஞ்சபா தகங்கள்போம் பகைகண் மாய்ந்திடும்
அஞ்சலின் மறலியு மஞ்சி யாட்செயும்
வஞ்சநோ யொழிந்திடும் வறுமை தீர்ந்திடும்
தஞ்சமென் றிதனை நீ தரித்தல் வேண்டுமால். 21

இ - ள்: பஞ்சமா பாதகங்கள் நீங்கும், பகைகள் கெட்டுப்போம், ஒருவருக்கும் பயப்படாத யமனும் உனக்குப் பயந்து பணிவிடைசெய்குவன், கொடிய வியாதிகளுந் தீர்ந்துவிடும், தரித்திரம் தொலையும். ஆதலால் இதுவே நமக்காதாரம் என்று நீ அணிந்துகொள்ள வேண்டும் எ - று.

என்றிறை கவசத்தி னியல்பி யம்பிந
னன்றறி மாதவ னயந்து பின்னரும்
வன்றிறல் புரிவடி வாளுந் தெவ்வரை
வென்றிகொள் சங்கமும் விருப்பி னல்கியே. 22

இ - ள்: இவ்வாறு சிவகவசத்தின் தன்மையைக் கூறி நல்வழி யுணர்ந்த அந்தச் சிவயோகியானவர் பின்னும் அரசகுமரனிடத்தில்கருணை வைத்து யுத்த முகத்தில் மிக்க பராக்கிரமஞ் செய்யத்தக்க வடிவாளும், பகைவரை வெற்றிக்கொள்ளுகிற சங்கமும் விருப்பத்துடன் கொடுத்து என்றவாறு.

கடவுணீ றவனுடல் கவினச் சாத்தியே
யடுகரி பன்னிரண் டாயி ரத்துடை
நெடுவலி யளித்துநீ நீடு வாழ்கென
வடுவற வாழ்த்தியே வழிக்கொண் டானரோ. 23

இ - ள்: தெய்வத்தன்மையுள்ள திருநீறை அவனுடலில் அழகு பெற அணிந்து பன்னீராயிரம் யானை பலமுங் கொடுத்து நீ நீண்டகாலம் நிறையாயுளுடன் வாழக்கடவையென்று நன்றாக வாழ்த்திப் போய்விட்டார் என்றவாறு.

சிவகவசமுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம் — 725

பதின்மூன்ருவது

பத்திராயுவின்கதை உரைத்த அத்தியாயம்

ஈது வீறுயர் சிவகவ சத்தியல் பென்ன
வேத வேள்விசெய் முனிவரர் யாவர்க்கும் விளம்பிக்
காது வென்றிவேற் பத்திரா யுவின்கதை தன்னில்
சூத மாமுனி பின்னரு மொருகதை சொன்னுன். 1

இ-ள்: சிவகவசத்தின் தன்மை இத்தகையதென்று வேதவிதிப்படி யாகஞ்செய்கின்ற முனிவர்கட்குச் சொல்லிப் பின்னும் பகைவரைக் கொல்லத்தக்க வெற்றிவேலையுடைய பத்திராயுவின் வரலாறுகளில் ஒரு வரலாற்றைச் சூதமுனிவர் கூறுகின்ருர் என்றவாறு.

வணிக மைந்தனு மன்னவன் சிறுவனும் வளர்நாட்
பிணியி னண்பொரீஇ மனேயொடு மதலையைப் பிரித்த
வணிகொள் வச்சிர வாகுவின் குலப்பகை யான
திணித டம்புய னளப்பருஞ் செறிகடற் படையோன். 2

இ-ள்: வணிகனுடைய குமரனும் அரசகுமரனும் வளரும் நாளில் தன்மனைவிக்கும் புதல்வனுக்கும் கண்டிருந்த வியாதியினுல் அவர்களிடத்தில் விருப்பம் நீங்கிக் காட்டுக்கு அனுப்பிவிட்ட வச்சிரவாகு வென்னும் அரசனுக்குக் குலப்பகையாகிய மிக்க தோள்வலியுள்ளவனும் அளவிடற்கரிய சேனைக்கடலை உடையவனுமானவன் என்றவாறு.

ஏமத் தேரினு னெனும்பெயர் மகதர்கோ னெழுந்து
சேமத் தேர்பதி னுயிரஞ் சூழ்வரச் சென்று
வாமத் திண்சிலை வச்சிர வாகுவென் றுரைக்கும்
தாமத் தோளினுன் றசானனங் கொள்வது சமைந்தான். 3

இ-ள்: பதினுயிரம் சேமத்தேர்கள் சூழ்ந்து வரும்படி புறப்பட்டுப் போய் அழகும் பலமுமுள்ள வில்லேந்திய ஏமத்தேரினன் என்னும் பெயருள்ள மகதநாட்டரசன் மாலையணிந்த தோளையுடைய வச்சிரவாகுவினது தசானனமென்னும் பதியை கைப்பற்றிக்கொள்ள எண்ணங் கொண்டான் என்றவாறு.

வதிக டோறுநின் ருறலைப் படுத்தியும் வாவிக்
குதிகொள் கன்றினந் துயருற வானிரை கொண்டும்
பதிக டோறும்வெங் கனலெரி பரப்பியும் பணிவான்
மதியு லாவரு புரிசையை வளைந்தனன் மறவோன். 4

இ - ள் : அவ்வாறு எண்ணங்கொண்ட மகதநாட்டரசன் இடங்கள்தோறுமிருந்து வழிநடக்கும் அந்நாட்டாரை அடித்துப் பறித்தும் தாவிக்குதித்துச் செல்லும் கன்றுகள் துன்புறும்படியாகப் பசுமந்தைகளை அபகரித்தும் ஊர்களையெல்லாந் தீயினல் கொளுத்திவிட்டும் குளிர்ச்சியும் வெண்மைநிறமுமுள்ள சந்திரமண்டலத்தை அளாவுகின்ற மதிலைவளைத்துக்கொண்டான் என்றவாறு.

வேறு

மாறுசெய் மன்னவன் வந்து வளைந்தான் மதிலென்னச்
சீறிய மன்னன் வச்சிர வாகு செருவேட்டு
வீறுடு மன்னுந் தோளிணை யுண்டாம் விறலுண்டாம்
பாறுக டுன்னுங் கூரயி லுண்டாம் பகையுண்டோ. 5

இ - ள் : பகைகொண்ட மகதநாட்டான் வந்து மதிலை வளைத்துக்கொண்டானென்று சொல்லக்கேட்ட வச்சிரவாகுவென்னும் அரசன் கோபத்தோடு யுத்தஞ்செய்ய விருப்பங்கொண்டு வீறுப்புடன் பொருந்தும் நம்முடைய இரண்டு தோள்களும் துணையாயிருக்கின்றன. வலிமையும் உண்டாயிருக்கின்றது. பருந்துகள் கண்டுவந்து மேலே சூழத்தக்க கூர்மையுள்ள வேலாயுதம் உண்டாயிருக்கின்றது. நமக்குப் பகைவரும் உண்டோ என்றவாறு.

என்ன வுரைத்தாங் கேறின னற்றே ரேருமுன்
றுன்னின கொற்றஞ் சேர்படை வெற்றந் தொலையாத
மன்ன ரெதிர்த்தஞ் சாரணி முற்றும் படிவெய்த
வந்நிலை மைக்கண் டேவர் வியக்கு மமர் செய்தான். 6

இ - ள் : இவ்வாறு கூறி நல்ல தேரிலேறினுன். அவ்வாறு ஏறுவதற்கு முன்னே வெற்றியுள்ள படைகளும் வந்து சூழ்ந்தன. அழியாத வெற்றியையுடைய அரசர்களாகிய எதிர்த்த பகைவருடைய சேனை வகுப்பெல்லாம் மடியும்படி தேவர்களுங்கண்டு வியப்புற யுத்தஞ்செய்தான் என்றவாறு.

திண்டிறல் வேலான் செய்த கொடும்போர்த் திறமெல்லாம்
கண்டு பொருதே நின்றிரு கண்ணுங் கனல்பொங்க
வண்டமர் தாரோ னேம ரதன்போர் வயவேந்தன்
புண்டரு வேலான் செங்கள மஞ்சப் போர்செய்தான். 7

இ - ள்: மிக்க பலம்பொருந்திய வேலாயுதத்தையுடைய வச்சிர வாகு செய்த கொடிதான சண்டைத் திறத்தையெல்லாம் கண்டு மனம் பொறுமல் தன்னிரு கண்களிலும் தீப்பொறிபொங்க வண்டுகள் பொருந்திய மாலை அணிந்திருக்கும் எமரதன் என்னும் வெற்றியுள்ள அரசனுனவன் பகைவருடைய உடலில் புண் செய்யத்தக்க வேலையுடைய வச்சிரவாகுவின் போர்க்களம் அஞ்சும்படி யுத்தஞ்செய்தான் என்றவாறு.

மாறெடு மன்ன ரோரிரு வோரு மறமொன்றிச்
சீறினர் தீயின் கண்கள் சிவந்தார் சிலைநாண்மே
னூறெடு நூறு மம்பு தொடுத்தார் நொடியிற்று
மேறிய திண்டேர் முட்ட விடுத்தா ரிகல்செய்தார். 8

இ - ள்: பெருமைபெற்ற அவ்விரு மன்னரும் பகையுடன் கோபங்கொண்டு சீறிக் கண்கள் தீப்போலச் சிவந்து வில்லின் நாணில் வைத்து ஒவ்வொரு தரத்துக்கு நூறுநூறுகப் பாணங்களை அமோகமாக விட்டு நொடிப்பொழுதில் தாங்கள் ஏறிக்கொண்டிருக்கின்ற தேர்களை ஒன்றுடன் ஒன்று முட்டவிட்டுப் போர் செய்தார்கள். என்றவாறு.

ஆயிர மம்போ ரொருவன் விடுக்க வவையெல்லா
மாயிர மம்பா லோரொரு மன்ன னறவெய்யு
மாயிரு ஞாலத் திருவரு மெய்யும் வலிகண்டே
சேயிரு வானத் தேவரு நன்றே செருவென்றார். 9

இ - ள்: ஒருவன் ஆயிரம் பாணங்கள் விட்டபின் அவைகளையெல்லாம் ஆயிரம் அம்புகளால் மற்றொரு அரசன் அறுத்துத் தள்ளுவான். இவ்வாறு பெரிய இவ்வுலகத்தில் இவ்விருவரும் அம்புகள் விடுக்குந் திறங்கண்டு அதிதூரத்திலிருக்கும் தேவர்கள் இவர்கள் செய்யும் போரானது அதிசயிக்கத்தக்க தென்றார்கள் என்றவாறு.

இத்திறம் வெம்போர் மன்ன ரியற்றிடு மேல்வைக்கண்
கொத்தலர் பைந்தா ரேம ரதன்றன் குலமைந்தர்
முத்தணி மார்பன் வச்சிர வாகு படைமுற்று
மத்திர மேவிக் கொன்று குவித்து மமையாராய். 10

இ - ள்: இவ்வகையாக அவர்கள் கொடியபோர் செய்யும்போது கொத்தாகிய பூமாலையணிந்த ஏமரத புத்திரர்கள் முத்துமாலையணிந்த மார்பையுடைய வச்சிரவாகுவின் சேனைகளையெல்லாம் அம்புகளேவிக் கொன்று பிணமலையாகக் குவித்துங் கோபந்தணியாதவர்களாய் எ-று.

வேறு

சேர்த்தார் கலினமான் திண்டேர்த் தசானனனை
யார்த்தார்தந் தாதை யதிர்மணித்தேர்த் தட்டிலிட்டார்
தீர்த்தா மொருநாளுந் தீராப் பகையென்றார்
பார்த்தார் திண்டோளைப் பணைமுரசஞ் சாற்றுகென்றார். 11

இ-ள்: கடிவாளம் பூட்டிய குதிரை கட்டிய பலமுள்ள தேரை யுடைய தசானனன் என்னும் அரசனைக் கட்டித் தன்தகப்பன் தேர்த் தட்டில்போட்டு ஒருநாளுந்தீராதிருந்த பகையை யின்றொழித்தோமென்று தங்கள் தோள்வலியை வியந்து வெற்றி முரசம் கொட்டச்சொன்னார்கள் என்றவாறு.

மாதங்கந் திண்டேர் வயமாத் தொகைகவர்ந்தார்
காதம் பலதோன்றுங் கன்னி யெயின்மடித்தார்
சீதஞ்செய் சோலைநகர் செந்தீக் குணவளித்தார்
கோதம் புரிமனத்தார் கோயில்வளங் கூட்டுண்டார். 12

இ-ள்: யானைகள், தேர்கள், குதிரைகள் என்னும் சேனைத் தொகையைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டு பலகாதவரையில் தோன்று கின்ற உயரமுள்ள அழியாத மதிலை இடித்தார்கள். குளிர்ச்சி தருகின்ற சோலையையும் நகரத்தையும் தீக்கு உணவாகக் கொடுத்துப் பின்னுங் குரோதங்கொண்ட மனத்தர்களாய் அரசன் அரண்மனையில் உள்ள பொருள்களையெல்லாம் கொள்ளையிட்டார்கள் என்றவாறு.

காடு கரந்தார் கடற்படைகை விட்டாரென்
றோடுநெடுந் தேர்மகதற் கோகையெல்லாங் கூறியே
வீடு பெறநண்ணும் விழைவினர்போற் றங்கடிரு
நாடணையுங் காவலர்க்கு நண்ணியது கூறுவாம். 13

இ-ள்: எதிர்த்த சேனையிலுள்ளார் கையிலிருந்த ஆயுதங்களை யெல்லாம் போட்டுவிட்டுக் காட்டிலோடிப்போய் ஒளிந்து கொண்டார்கள் என்று செல்லுகிற பெரிய தேரையுடைய மகதநாட்டரசனுக்கு மகிழ்வான செய்திகளெல்லாஞ் சொல்லி முத்திவீட்டினை அடைவதற்கு விருப்பமுள்ள ஞானவான்களைப்போல அதிகமகிழ்வை உடையவர்களாய்த் தங்கள் சிறப் புள்ள நாட்டுக்குச் செல்லும் அந்த அரசர்கட்கு நேரிட்டதைக் கூறுகின் றோம் என்றவாறு.

தாமமணித் தோள்விடபன் றந்த சுடர்வாளு
மேமமுறு வெண்சங்கு மேந்திநெடு வீதியின்வாய்
காமனுரு வாய்ந்தனைய காளையிளந் தோழனெடுங்
கோமகனு நின்றான் பதிகரிது கூறுவார். 14

இ - ள் : விடபன் என்னும் சிவயோகி கொடுத்த ஒளியுள்ள வாளாயுதத்தையும், இன்பந்தரத்தக்க வெற்றிச் சங்கத்தையும், பூமாலை யணிந்த தோளில் தாங்கிக்கொண்டு மன்மதன் உருவம் பெற்றதுபோல அழகுள்ள காளையாகிய இளமைப் பருவமுள்ள தன்தோழனுடன் அரச குமரன் நெடிய வீதியினிடத்து நின்ருன். அவ்வமயம் வழிநடப்பவர்கள் இவ்வுரையைக் கூறுகின்ருர்கள் என்றவாறு.

மாவியலுந் திண்டேர் மகதர்கோன் வாளமரிற்
கோவியலு மாற்றிக் கொடிநகருந் தீக்கொளுவி
யேவியலுந் திண்சிலையான் வச்சிரவா கென்னுமொரு
சேவகனைச் சேர்த்துக் கொடுபதியிற் செல்கின்ருன். 15

இ - ள் : குதிரைகட்டிய திண்ணிய தேரையுடைய மகததேசத்து அரசன் கொலைசெய்யும் போரில் அரசாட்சியை மாற்றிக் கொடிகட்டிய பட்டணத்தைக் கொளுத்திவிட்டுப் பாணங்கள் தொடுக்கும்படியான வில்லையுடைய வச்சிரவாகுவென்னும் ஒரு அரசனைக் கட்டிக்கொண்டு தன் நகரத்துக்குப் போகின்ருன் என்றவாறு.

மன்ன னழூதரற்றல் கேட்டு மதிமயங்கி
யின்னலொடும் போகின்ருே மென்ரு ரெனுங்கடுஞ்சொற்
கன்னமுற நாராசங் காய்ச்சிச் சொருகியபோற்
பொன்னமருந் தோள்விடலை கேட்டுப் புகைந்துசொன்னுன். 16

இ - ள் : அந்த அரசன் அழுவதைக் கேட்டு மதிமயங்கித் துன்பத் துடன் போகின்ருேம் என்று கூறினுர்கள். அவ்வாறு அவர்கள் கூறிய கொடுஞ்சொல் நாராசத்தைக் காய்ச்சிக் காதில்சொருகினதுபோலக்கேட்டு வீரலட்சுமி குடிகொண்ட தோளையுடைய பத்திராயு கோபங்கொண்டு சொல்லுகிருன் என்றவாறு.

எங்கள் குலவேந்துக் கிடுதிறையிட் டேவல்செய்த
மங்குல் பொதியிஞ்சி மகதன்வலி பெற்றனனுற்
சிங்க வடலோயச் சிறுமுயலும் வெல்லுமினிப்
பொங்கொளியோன் மங்கப் புதையிருளுங் காயுமே. 17

இ - ள் : எங்கள் குலத்து அரசனுக்குத் திறைகொண்டுவந்து கொடுத்து ஏவற்பணி செய்கின்ற மேகமண்டலத்தை யளாவிய மதில் சூழ்ந்த மகதநாட்டான் இப்போது பலம்பெற்ருன் இனிச்சிங்கத்தின் வலி கெடச் சிறியமுயலும் வெல்லும். சூரியன் மழுங்கத்தக்கதாக உலகத்தை மூடும் இருளும் காயும் என்றவாறு.

ஆனாத செங்கோ லடன்மகதன் சேனையெல்லாம்
வானாடு கொள்ளவின்று வாளாற் றுணித்திலனேற்
பானாறு தேன்மொழியா ளேத்தப் பதஞ்சலிக்காத்
தானாடு வானடியார் தம்மடியா னல்லேனே. 18

இ - ள் : நீங்காத செங்கோல் நடத்தும் வலியுள்ள மகதனுடைய சேனைகளையெல்லாம் வீரசுவர்க்கத்தில் சேரும்படி இப்போது என்வாளால் துண்டஞ் செய்யாவிட்டால் பால்போல் இனிக்குந் திருமொழியினையுடைய பார்வதிதேவியார் துதிசெய்யும்படி பதஞ்சலி முனிவருக்காக நடனஞ் செய்யும் பரமசிவனுடைய அடியார்க் கடியனல்லனாகக் கடவேன். எ - று.

பதஞ்சலிக்காக நடனஞ்செய்தது சிதம்பரத்தில் ஆதிசேடன் பதஞ் சலியாகத் திருவவதாரஞ் செய்தது.

என்றான் கடிதி னெழுந்தான் றுணைவனொடுஞ்
சென்றான் வெகுண்டான் றிறல்வா ளுறைகழித்தான்
குன்றாத தங்குலத்தின் கொற்றம் பழிபடுத்த
தன்றாதை யின்ன றவிர்க்குந் தகவோனே. 19

இ - ள் : குன்றாத தங்கள்குலத்தின் வெற்றிக்குப் பழியுண்டாக்கிய தன் தந்தையின் துன்பத்தை நீக்குந் தகுதியுள்ள பத்திராயு இவ்வாறு சொல்லி விரைவாக எழுந்து தன்தோழனோடு சென்று சேனையைப் பார்த்துக் கோபங்கொண்டு வாளை உறையினின்றும் நீக்கினான் எ - று.

இந்தனஞ்சேர் கானகத்தை நுங்கு மெரிபோலச்
சந்தமுடை மார்பன் றடக்கையுடை வாளினான்
மந்தரம்போ னீடுகலி மான்றேர் மதவேழம்
பந்தியணி வாம்புரவி பாரின்விழ நூறினான். 20

இ - ள் : விறகுகள் சேர்ந்திருக்குங் காட்டினை அக்கினிதேவன் பற்றியெரிப்பதுபோல அழகுள்ள மார்பனாகிய பத்திராயு உறையினின்றும் நீக்கிய தன் பெரிய வாளினால் ஒலிக்குங் குதிரைகட்டியதாய் மந்தரமலை போல் உயர்ந்த தேர்களும் மதயானைகளும் வரிசை வரிசையாய்க் குதிரை களும் பூமியில் விழும்படி வெட்டித் தள்ளினான் என்றவாறு.

வந்தவந்த வீரர் மணித்தோள் படையோடுஞ்
சிந்திவிழக் கொய்துஞ் சினம்பெருகத் தீராதா
னுந்துதடந் தேரோ னொருவன் றனைமுருக்கி
அந்தநெடுந் தேரேறி யண்டமுற நின்றுருத்தான். 21

இ - ள் : எதிரிட்டுவந்த வீரர்களின் அழகிய தோள்கள் பிடித்த ஆயுதங்களுடன் துண்டித்து விழும்படி அறுத்தும், கோபம் அடங்காமல்

மேலும் மேலும் மூளப் பெரிய தேரில் ஏறிக்கொண்டு போர்செய்யும் ஒரு வீரனைக் கொன்று அந்தத் தேரிலே ஏறிக்கொண்டு விண்ணில் பொருந்த ஆரவாரித்தான் என்றவாறு.

காகம் பொருந்துங் களப்போர் கடந்துதந்தை
சோகந் தவிர்க்குஞ் சுடர்மணித்தேர் வாள்வேந்த
னாகங் குருதி யணிதோழன் சூதனை
மாகந் துறந்த மழகதிர்போற் றோன்றினன். 22

இ - ள் : காக்கைக் கூட்டம் வந்து நிறைந்திருக்கும் போர்க்களத்தைக்கடந்து தன் தந்தையின் சோகத்தைநீக்கும் பத்திராயுவானவன் தன் உடம்பில் உதிரம் பொருந்திய தோழனைத் தேர்ப்பாகனை அமைத்துக் கொண்டு ஒளிதங்கிய தேரிலேறி விண்ணைவிட்டுவந்த இளஞ்சூரியனைப் போலத் தோன்றினன் என்றவாறு.

பாறுதாழ் செவ்வேற் படைப்பத் திராயுவினன்
மாறிலா வெம்போர் மகதர்கோன் வாட்டானை
சீறியோர் கானி லடுஞ்சிங்கந் தெறவெருவி
யாறலா வாறுபட ரான்குலம்போ லாயினவே. 23

இ - ள் : இவ்வாறு தேரிலேறிய பருந்துகள் வந்து வட்டமிடும் வேலையுடைய பத்திராயுவினல் மாறுபடாத வெம்போர் செய்யும் மகதர்கோன் சேனையெல்லாம் விலங்குகளைக் கொன்று காட்டினில் நடமாடும் ஒருசிங்கம் வந்து கொல்லப் பயந்து வழியில்லாதவழியில் ஓடிப்போகிற பசுக்கூட்டம்போல் ஆயின என்றவாறு.

கண்டான் படையுடைத லேமரதன் கண்டுபயங்
கொண்டா னிவனுமொரு கூற்றமோ வென்றுரையாத்
திண்டேர் திரித்துப் புறங்கொடுப்பத் தேர்ந்திடலும்
வண்டா மரைமுகத்தான் வண்சங்கம் வாய்வைத்தான். 24

இ - ள் : தன்சேனைகள் தோற்று ஓடிப்போனதை ஏமரதன் என்னும் அரசன் பார்த்தான். அவ்வாறு பார்த்தவன் பயங்கொண்டு இவனும் ஒரு யமனே என்றுசொல்லித் தன்னுடைய தேரைத்திருப்பி முதுகுகாட்டி ஓட எத்தனித்த அளவில் அதனையறிந்த நல்ல செந்தாமரை போன்ற முகத்தையுடைய பத்திராயுவானவன் தன் சங்கத்தை வாயினிடமாகவைத்து ஒலியுண்டாக்கினன் என்றவாறு.

முற்று மிடிமுழக்கங் கேட்டு முழையொடுங்கிப்
புற்றரவ மஞ்சிப் புரளுந் தகைமைபோல்
வெற்றியுறு வேல்வேந்தன் வெண்சங்க வோசையினற்
கொற்றமுறுஞ் சேனையொடு கோவேந்தன் வீழ்ந்தயர்ந்தான். 25

இ - ள்: மிக்க இடிமுழக்கத்தைக் கேட்டுப் பாம்புகள் பயந்து புற்றுகளில் ஒடுங்கிப் புரளுந்தன்மைபோல் வெற்றிதங்கிய வேல்வேந்தனாகிய பத்திராயு ஒலிசெய்த வெற்றிச்சங்கோசையால் மகதநாட்டான் கீழே விழுந்து மூர்ச்சையடைந்தான். அவன் சேனையிலுள்ளவர்களும் அவ்வாறே மூர்ச்சையடைந்தார்கள் என்றவாறு.

கோதைபுனை வேன்மகதர் கோமானையுமவன்றன்
காதலுறு மைந்தரையுங் காவற் றளைப்படுத்தித்
தாதைசிறை நீக்கியவன் றுடொழுது தங்குலத்துக்
கோதுபழி தீர்த்தான் உயர்வெண் குடையோனே. 26

இ - ள்: வெற்றிமாலை யணிந்த வேலையுடைய மகதநாட்டானையும் அவனுடைய ஆசைபொருந்திய புதல்வர்களையும் காவலாகிய விலங்கு போட்டு பிதாவின் சிறையை நீக்கி அவன்பாதத்தில் வணங்கித் தங்கள் குலத்துக்கு நேரிட்ட பழியைத் தீர்த்தான் உயர்ந்த வெண்குடையோனாகிய பத்திராயு என்றவாறு.

தந்நிகரில் சேனு பதிக டமைவிடுத்து
மன்னுடனே நீவிர் வளநகரத் தெய்துகெனச்
சொன்னமொழி கேட்டுத் துயர்தீர் தசானனர்கோன்
அந்நிலையே யார்வநிறைந் தாங்கவனைப் பார்த்துரைத்தான். 27

இ - ள்: தங்கட்கு ஒப்பில்லாத சேனாதிபதிகளையும் விடுவித்து நம்முடைய அரசனுடன் வளப்பம் பொருந்திய நகரத்துக்குச் செல்லுங்கள் என்று பத்திராயு கூறிய உரையைக்கேட்டுத் துயரம் நீங்கிய தசானன தேசத்தரசன் மிக்க அன்புள்ளவனாய் அப்பொழுதே பத்திராயுவைப் பார்த்துக் கூறுகின்றான் என்றவாறு.

எங்கள் குலவேந்தர் தவப்பயன்போ லிங்கெதிர்ந்து
பங்கமு மென்னேயும் பழியுந் தவிர்த்தோனே
சிங்கமனை யாய்நினக்குச் செய்யுங்கைம் மாறுண்டேல்
மங்குலுக்குக் கைம்மாறு மன்னுயிருஞ் செய்திடுமே. 28

இ - ள்: எங்கள் குலத்தரசர் செய்த தவப்பயன் வந்து உதவியது போல வந்து எனக்கு நேரிட்ட பங்கத்தையும் துயரத்தையும் இழிவையும் நீக்கிய புண்ணியவானே சிங்கத்தை ஒத்தவனே நான் உனக்குச் செய்யத்தக்க பிரதி உபகாரமுண்டாயிருக்குமானால் மழை பெய்துகாக்கும் மேகத்துக்கு இவ்வுலகத்தில் நிலைபெற்றிருக்கும் உயிர்களும் கைம்மாறு செய்யும் என்றவாறு.

நின்றமர்யார் நிற்பயந்தார் யாவர்நின தூரேது
வன்றிறலாய் நின்பெயரென் வந்தவர வேதுரையா
யொன்றொழிபத் தக்குரோணி சேனை யொருங்கவிய
வென்றுருத்து வொள்வாள் விதிர்த்த விறலோனே. 29

இ - ள்: மிக்க பலமுள்ளவனே உன்னுடைய உறவினர் யார், உன்னைப் பெற்றவர்கள் யார், உன்னுடைய ஊர் எது, உன் பெயரென்ன, நீயிங்கே வந்ததற்குக் காரணமென்ன மகதனுடைய ஒன்பதக்குரோணி சேனையெல்லாம் ஒழிந்துபோம்படி வென்று சினந்து ஒள்ளியவாளை விதிர்த்த வீரனே என்றவாறு.

வில்லா யெனதுபெயர் வீறுபத்தி ராயுமற்ற
வெல்லா முணர வியம்புகேன் மேலென்று
சொல்லாவென் றோழன் சுனத னிவன்றந்தை
நல்லா தரவணிக னன்கியற்ற வாழ்கின்றோம். 30

இ - ள்: வில்லையுடைய அரசனே என்பெயர் பத்திராயு மற்றவை யெல்லாம் உனக்குத் தெரியும்படி பின்னாலே கூறுகின்றேனென்று சொல்லி இந்தச் சுனதன் என்பவன் என்துணைவன் இவன் தந்தையாகிய மிக்க அன்புள்ள வணிகேசனெனன்பவர் எங்களை ஆதரிக்க வாழ்ந்துகொண் டிருக்கிறோம் என்றவாறு.

என்று விறைஞ்சி யிகல்வேந்தன் வெஞ்சிறையை
மன்னு விடேல்யான் வருந்துணையு மென்றுரைத்துத்
தன்னொடு தோழனொடுஞ் சார்ந்தானற் றாயடைந்து
பொன்னார மார்பீர் புகுந்ததுரை யீரென்றாள். 31

இ - ள்: என்றிவ்வாறு கூறிப்பணிந்து அரசே இந்தப்பகை மன்னவன் சிறையை மறுபடி நான்வருகிற வரையில் விடாதேயென்று கூறித் தோழனைக் கூட்டிக்கொண்டு தன்னூட்டிற் போய்ச்சேர்ந்தான். தாயானவள் அவர்களைக் கண்டு பொன்னாரமணிந்த மார்பை உடையவர்களே நடந்தவை என்னவென்று கூறுங்கள் என்றாள் என்றவாறு.

மாறுபடும் போரின் மகதர்கோன் வாகைகொண்டு
சாறயரு மூதூர்த் தசானனமுத் தீமடுத்து
நீறுசெய்து மெந்தை நெடுஞ்சிறையிற் கொண்டேகச்
சீறியமர் வென்று சிறைவிடுத்தோ மென்றுரைத்தான். 32

இ - ள்: பகைகொண்ட யுத்தமுகத்தில் மகதநாட்டான் வெற்றி யடைந்து விழாக்கள் நடந்துகொண்டிருக்கும் பழமையான தசானனமென்னும் ஊரைக்கொளுத்தி நீறுக்கி என்தந்தையை விடாது காவற்படுத்திக்

கொண்டுபோனான். அதையறிந்து சிறி நாங்கள் போர்செய்து வென்று சிறையை மீட்டோமென்று சொன்னான் என்றவாறு.

வேறு

கேட்டா ளரசன்பெருந் தேவிதன் கேள்வ னின்னல்
வாட்டாரைக் கண்ணீர் முலைமுன்றில் வரக்க லுழ்ந்தாள்
கோட்டானை வீரர் குலையச்செருச் செய்து மைந்தன்
மீட்டா னெனலுங் குளிர்ந்தாளறன் வேண்ட நின்றாள். 33

இ - ள் : அவர்கள் சொல்ல அந்த அரசன் மனைவி தன் கணவனுக்கு நேரிட்ட துன்பத்தைக் கேட்டு வாளையொத்த கண்ணீர் முலைகளின் மேல் விழும்படி அழுதாள்; வலிதங்கிய பகைவராகிய சேனைவீரர் அணி குலைந்து ஓடும்படி உன்மகன் போர்செய்து உன் கணவனை மீட்டானென்று கூறிய அளவில் மகிழ்வுடையவளானாள் தருமதேவதை வேண்டும்படி நிற்பவள் என்றவாறு.

தருமம் நமக்கு வேண்டியதென்று அவள்விரும்பாமல் அவளிடத்தி லிருக்கத் தருமம் வேண்டுமென்பது கருத்து. "மாதரார் கற்பினின்றன அறங்கள்" என்பதனாலும் உணர்க.

துணிவுற்ற வேந்தின் சிறைதீர்த்தனன் றேன்ற லென்னத்
தணிவுற்ற தொல்சீர் வணிகேசனுந் தக்க தென்றான்
மணிபொய்த்த மாலைப் புயன்வச்சிர வாகு வொன்னார்
பணியத்திரு நாடடைந் தேபகை யின்றி வாழ்ந்தான். 34

இ - ள் : துணிவுபொருந்திய வச்சிரவாகு வென்னும் அரசனைப் பத்திராயு சிறைமீட்டானென்று பழமையாக மிக்கசெல்வமுள்ள வணிகன் கேள்விப்பட்டு இது புத்திரன் செய்யத்தக்க நன்மையான காரியந்தான் என்றான். ரத்தினமாலையணிந்த புயங்களையுடைய வச்சிரவாகுவானவன் பகைவர் வந்து தன்னைவணங்கும்படி தன்னாட்டிற் சேர்ந்து பகையில்லாமல் வாழ்ந்துகொண்டிருந்தான் என்றவாறு.

வேதப் பொருளி னடிபேணும் விடப னென்னுஞ்
சீதப் புயலற்றை யிராவினிற் சிந்தை யெண்ணி
நீதிப் பயிருக் கறநீர்பெய் நிடத ராசன்
கோதற்ற கேள்விக் குலபூபதி கோயில் சார்ந்தான். 35

இ - ள் : பரமசிவனுடைய திருவடியையே விரும்பிக்கொண்டிருக்கும் குளிர்ச்சியுள்ள மேகம்போன்ற விடபன் என்னும் சிவயோகியானவர் அன்று இரவு தமது மனதில் எண்ணி அறமாகிய பயிருக்கு நீதியாகிய நீர்பாய்ச்சும் குற்றமற்ற கேள்விகளையுடைய நிடதநாட்டு அரசனுடைய அரண்மனைக்குப் போனார் என்றவாறு. சீதப்புயல் - கருணையைப் பொழியும் புயல்.

வந்த முனிக்கு மகிழ்சீமந் தனியும் வேந்துஞ்
சிந்தை குளிர்ந்து வழிபாடுகள் செய்து போற்றி
யந்தந் தருமா ரணந்தேரு மடிகள் பாத
நொந்து சிவப்ப வருமாறு நுவறி யென்றான். 36

இ - ள் : அவ்வாறு வந்த விடபன் என்னும் சிவயோகிக்கு சீமந்தனியும் அவள் கணவனும் மனமகிழ்ந்து வழிபாடுசெய்து துதித்து வேதங்கள் உணர்ந்த சுவாமிகளுடைய திருவடிகள் வருந்திச் சிவக்கும்படி நடந்துவந்தருளியதற்குக் காரணங் கட்டளையிட வேண்டுமென்றான் எ-று.

வந்தா மிறைவ மகட்பேச வயற்கண் வாளை
நந்தோ லிடப்பாயுந் தசானன நாட்டின் மன்னன்
கந்தார் களிற்ற னவன்காதலி மைந்த னேடுஞ்
சிந்தா குலத்தாற் கடுங்கானகஞ் செல்ல நீத்தான். 37

இ - ள் : அரசனே பெண்பேசவந்தோம் சங்குகள் ஒலிக்கும்படி வயல்களில் வாளைமீன்கள் பாயும்படியான நீர்வளப்பத்தை உடைய தசானன நாட்டிற்கு அரசனாகிய யானைப்படைகளுடன் வச்சிரவாகு என்னும் அரசன் தன்மனைவியைப் புத்திரனுடன் வியாகுலங்கொண்டு காட்டுக்குப் போகும்படி நீக்கிவிட்டான் என்றவாறு.

கந்தார்களிறு - கட்டுத்தறியில் கட்டப்படும் யானை.

பொம்மன் முலையாள் கடுங்கானிற் புகுந்து வேறோர்
மைம்மன்னு சோலை நகர்வைகிட மாது காத
லம்மைந் தனையா மளித்தோமவ னன்பு பூண்டு
தெம்மன்னர் தாதைக் கிடர்செய்யச் செகுத்து மீட்டான். 38

இ - ள் : பொலிவுள்ள தனத்தையுடைய அந்த அரசமகள் கொடிய காட்டிற்போய் மேகங்கள் வந்து தவழ்கின்ற சோலை சூழ்ந்த ஒரு நகரை அடைந்திருந்தாள். அவ்விடத்தில் அவள் புதல்வன் இறந்து போனான். அவனை நாம் பிழைப்பித்து வாளாயுதம் முதலானவை கொடுத்துக்காத்தோம். அவ்வாறிருக்க வேறுநாட்டரசன் யுத்தஞ்செய்து வென்று அவன் தந்தையைத் தேரிற்கட்டிக்கொண்டுபோவதை அம்மகன் கேள்விப்பட்டு தந்தையென்கிற அன்புகொண்டு போய்ப் போர்செய்து பகைவனை வென்று தந்தையை மீட்டுவிட்டான் என்றவாறு.

வேறு

அன்ன வன்றனக் கருள வேண்டுநின்
கன்னி கீர்த்திமா லினியைக் கற்புடைப்
பொன்னை யென்றவன் புகழ்ந்து கூறலு
மன்னன் சந்திராங் கதன்வ ழங்குவான். 39

இ-ள்: அந்தப் புத்திரனுக்குக் குமாரத்தியாகிய கற்புள்ள கீர்த்திமாலினியைக் கொடுக்கவேண்டுமென்று சிவயோகி புகழ்ந்து கூறினார். அதற்குச் சந்திராங்கதன் என்னும் அரசன் மகிழ்ந்து கூறுகிறான் எ-று.

கோசி கன்னென வுலகங் கூறிடுந்
தேசி காவினிச் செப்ப வேண்டுமோ
காசு லாமுலைக் காமர் கன்னியை
மாசி லானுக்கே வழங்கு கேனெனு. 40

இ-ள்: கோசிகனே யென்று பெரியோர்கள் சொல்லத்தக்க தேசிகனே நான் வேறே சொல்லவேண்டுமோ ரத்தின வடம்பொருந்திய கொங்கைகளையுடைய என் மகளைக் குற்றமில்லாத அந்த அரசகுமாரனுக்கே கொடுக்கிறேனென்று கூறி என்றவாறு. காமர் - அழகு.

முனிவ னன்புற முகமன் கூறியே
புனித வேகெனு விடுத்துப் பூபதி
யனிக வீரர்போ யரசன் மைந்தனை
யினிது கொண்டிவண் வருதி ரென்றனன். 41

இ-ள்: சிவயோகி அன்புற இவ்வாறு உபசாரத்துடன் கூறி சுவாமிகளே ஆசிரமத்துக்கு எழுந்தருளலாமென்று அனுப்பிவிட்டுச் சந்திராங்கதன் தன் தளகர்த்தரை அனுப்பி அந்த அரசகுமாரனை இவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுவாருங்கள் என்றான் என்றவாறு.

தத்து வாம்பரித் தானை காவலர்
பத்தி ராயுவைப் பணிந்து காளைநீ
யுய்த்து ணர்கென வெவையு மோதினர்
மத்த யானையான் மகிழ்ச்சி மேயினன். 42

இ-ள்: தாவிச்செல்லும் குதிரைகளையுடைய சேனாதிபதிகள் போய்ப் பத்திராயுவைக்கண்டு பணிந்து அரசனே நீ இதனைக்கேளென்று நடந்தவைகளைக்கூறினார்கள். அதைக்கேட்டு மதயானைகளையுடைய அந்தப் புதல்வன் மகிழ்வடைந்தான் என்றவாறு.

தாயு மின்னலேய் தவிர்த்த நாய்கனற்
சேயு முன்செலச் சேனை சூழ்வரப்
போய்ம ணம்புணர் பதிபு குந்தனன்
பாயும் வாம்பரிப் பத்தி ராயுவே. 43

இ-ள்: தன்தாயும் தங்கள் துன்பத்தை நீக்கி ஆதரவுதந்த வணிகேசனும் அவன் மகனும் முன்னே செல்லும்படி தான் அவர்கள்

பின்னே சேனைகள் சூழ்ந்துவரப் புறப்பட்டுப்போய் மணம் செய்துகொள்ளும் பட்டணத்தைச் சேர்ந்தான் பாய்ந்துசெல்லும் குதிரைகளையுடைய பத்திராயு என்றவாறு.

சார்ந்த போழ்தினே சந்தி ராங்கத
ஞர்ந்த நண்புகூர்ந் தளவ ளாவியே
பூந்தண் வார்குழற் பொருவில் கன்னியை
யீந்த னன்மகிழ்ந் திளவற் கென்பவே. 44

இ - ள்: இவ்வாறு பத்திராயு வந்தபோது சந்திராங்கதன் மிக்க அன்புகொண்டு அளவளாவிப் பூமாலையணிந்து குளிர்ச்சிதங்கி நீண்ட அளகத்தையுடைய ஒப்பற்ற பெண்ணை மணஞ்செய்து கொடுத்தான் என்றவாறு.

பைய ராவணைப் பச்சை மேகமுஞ்
செய்ய தாமரைத் திருவும் போலவே
யைய நுண்ணிடை யணங்கு மண்ணலுந்
துய்ய பூவணைத் துறக்க மேவினர். 45

இ - ள்: படமுள்ள பாம்பணையில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலும் செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளும் போல் உண்டோ இல்லையோ வென்று ஐயுறும் இடையினையுடைய கீர்த்திமாலினியும் பத்திராயுவும் சுவர்க்க உலகம்போன்ற தூய்மையுள்ள மலரணையிற் பொருந்தினர்கள் என்றவாறு.

குங்குமஞ் செறி குலவுக் கொங்கைமேற்
றங்கி யின்பமார் சலதி மூழ்கினன்
அங்க வன்புயத் தடங்கி மாதரும்
பொங்கு காதலம் புணரி மூழ்கினள். 46

இ - ள்: பத்திராயு குங்குமப்பூ சேர்ந்த சந்தனக் குழம்பணிந்த தாய்க் குவிவாயிருக்கும் தன்மனைவிகொங்கையிடத்தில் பொருந்தி இன்பக் கடலிலாழ்ந்தான். கீர்த்திமாலினி அவன்தோளிலடங்கி ஆசைவெள்ளத்திலாழ்ந்தாள் என்றவாறு.

இடைய ருமலே யெழில்கொண் மைந்தனு
மடமை மாதரு மருவி வைகுநா
ளடைய லாருயி ரருந்துங் காலவே
னிடத ராசனு னிகழ்ந்த கூறுவாம். 47

இ - ள்: அழகு பொருந்திய பத்திராயுவும், இளமைதங்கிய கீர்த்திமாலினியும் இவ்வாறு பிரியாமல் வாழுநாளில் பகைவர்களுடைய

உயிரை வாங்கத்தக்க வேலையுடைய நிடதமன்னனால் நடந்தவைகளைக் கூறுகின்றோம் என்றவாறு.

மன்னர் மன்னனும் வச்சி ரப்புய
னென்னும் வேந்தனை யீண்ட ழைத்தவன்
பன்னி தன்னையும் பாலன் றன்னையும்
துன்னு விப்பதே சூழ்ச்சி யாமென. 48

இ - ள்: அரசர்க்கரசனாகிய வச்சிரவாகு என்னும் அரசனை இவ்விடத்துக்கு வரவழைத்து அவன் மனைவியையும் புதல்வனையும் அவனுடன் கூட்டி அனுப்புவதே யோசனையென்று துணிந்து என்றவாறு.

மடங்க லன்னவோர் மன்னற் காணவே
யிடங்கொள் சிந்தைமீ தெழுந்த வார்வத்தேன்
கடங்க ணீங்கியே காண வம்மென
முடங்கல் போக்கினான் முழவுத் தோளினான். 49

இ - ள்: சிங்கம்போன்ற ஒப்பற்ற வச்சிரவாகு மன்னனே உம்மைக் காணவேண்டுமென்று என் மனது விரும்புகின்றமையால் உம்முடைய நாட்டைவிட்டுப் புறப்பட்டு வழிகளைக்கடந்து நான் காணும்படி வரவேண்டுமென்று ஓலை எழுதி அனுப்பினான். மத்தளம் போன்ற திரண்ட தோளையுடைய நிடதமன்னன் என்றவாறு.

வேறு

தன்னிகரி னிடதர்பிரான் றருந்தூதர் தசானனர்கோன் றன்மாட் டெய்திப்
பொன்னியலுங் கனைகழலான் வரவிடுத்த வோலையெனப் புகன்று காட்ட
மின்னியலுங் கதிர்வேலான் குறிப்புணர்ந்து வேறொருவன் விரைந்துவாங்கிப்
பன்னுவனோ வெனக்கேட்டாங் கிறைபணிப்பப் பாசுரத்தைப் பகரலுற்றான்.

இ - ள்: தனக்கொப்பில்லாதவனாகிய நிடதநாட்டரசன் இவ்வாறு ஓலை எழுதிக்கொடுத்து அனுப்பிய தூதர்கள் தசானனதேசத்து அரசனிடத்திற்போய் பொன்னாற் செய்யப்பட்டு ஒலிக்காநின்ற வீரகண்டை அணிந்த காலையுடைய நிடதநாட்டரசன் வரவிடுத்த ஓலைகொண்டுவந்தோமென்றுசொல்லி அதைக்காண்பித்த அளவில் அங்கிருந்த ஒரு கணக்கன் அரசன் குறிப்பறிந்து காண்பித்த ஓலையைத் தன் கையில் வாங்கிப் படிக்கும்படி கட்டளையிடவேண்டுமென்று கேட்டு அரசன் உத்தரவு கொடுக்கப் பெற்றுக்கொண்டு அவ்வோலையைப் படிக்கின்றான் என்றவாறு.

பேராண்மை நிலவேந்தர் முடியுழுது சிவந்தபொற்றாட் புகழோய் காண்க
நீராரு நிடதத்தோன் வரவிடுத்த வோலையென்று நின்னைக் காணும்
பேராசை மிகவுடையே னாதலினா னின்னகரம் பெயர்ந்து வந்தேன்
சீராரு நகரடைந்து பின்னினது திருநகர்நீ சேறல் வேண்டும். 51

இ - ள் : மிக்க ஆற்றலுள்ள வேறுநாட்டரசர்கள் முடிகள்பட்டுச் சிவந்த வீரகண்டையணிந்த காலையுடைய வச்சிரவாகு மன்னனே நிடத நாட்டரசனாகிய நாம் உமக்கு எழுதியனுப்பிய ஓலையைப்படித்துக் காண் பீராக என்னவெனில் உம்மைக் காணவேண்டுமென்று நான் அதிக விருப் பம் கொண்டிருக்கிறேனாதலால் உம்முடைய நகரம் விட்டுப் புறப்பட்டு வந்து சிறப்புள்ள என் னாட்டிற் சேர்ந்திருந்து பின்பு உம்முடைய நகரத் துக்குப் போகவேண்டும் என்றவாறு.

என்றரசன் வரவிடுத்த ஓலையிற்பா சுரமுழுதும் இயம்பக் கேட்டுக்
குன்றென வான் முகடணவுங் குடுமிநெடுங் குருமணித்தேர் கொணர்கென்
மின்றிகழும் படைவேந்தர் தற்சூழ முரசதிர வெண்சங் கார்ப்பத் [றேறி
தொன்றுவரும் படைநடுங்க வெழுந்தனன்மன் னவனோடுந் தொடர்பு
[கொள்வான். 52

இ - ள் : இவ்வண்ணம் எழுதி நிடதராசன் அனுப்பிய ஓலையிலிருந்த வாக்கியங்களைச் சொல்லக் கேட்டு அவ்வரசனுடன் நட்புக்கொள்ள மேரு மலைபோல் வான்முகட்டையளாவுஞ் சிகரத்தையுடைய நிறமுள்ளரத்தினங் கள் பதித்த தேரைக் கொண்டுவரச்சொல்லி அதிலேறிக்கொண்டு ஒளி விளங்கும் ஆயுதங்களையுடைய அரசர்கள் தன்னைச் சூழ்ந்துவரவும் பேரிகை ஒலிக்கவும் தவளச்சங்கம் ஒலிக்கவும் பழமையால் வருகின்ற எதிரிகள்படை நடுங்கவும் புறப்பட்டான் என்றவாறு.

மாறிலாப் பெருங்குணத்தான் வருகின்றா னெனக்கேட்ட மன்னர் மன்ன
னாறியோ சனையளவா யணிபரப்பி எதிர்ந்தவனை யன்பிற் புல்லி
வீறினா லுயர்ந்தபெருந் தன்பதியி னமைவித்து வியப்பி னோடுந்
தாறினா னெடும்பூகந் தலைவணங்குந் தசானனர்க்குத் தக்க செய்தான். 53

இ - ள் : எக்காலத்திலும் மாறுபடாத பெருங்குணத்தையுடைய வச்சிரவாகு மனனன் வருகின்றானெனக் கேள்வியுற்ற நிடதநாட்டரசன் ஆறுயோசனை தூர அளவில் தன்சேனைகள் பரந்திருக்கும்படி அனுப்பித் தானும் புறப்பட்டுப்போய் அந்த அரசனைக்கண்டு அன்புடன் அளவளாவி எல்லாச் செல்வத்தினாலும் உயர்ந்ததான தன்னகரத்துக்கு அழைத்துக் கொண்டுபோய்ச் சேர்த்து மகிழ்வுடன் குலைகளின்மிகுதியால் கமுகமரங்கள் தலை வளைந்திருக்கும்படியான தசானனதேசத்து அரசனுக்குத் தக்கபடி உபசாரஞ்செய்தான் என்றவாறு.

காவலவன் றனக்களித்த சிறப்பெவையுங் கண்டுநெடுங் கதிர்வேன் மன்னன்
பூவலயந் தனினிவன்போ னட்பினர்வே றிலரென்னப் புகழ்ந்து வேலை
மாவலவன் பலகலையும் பயில்பத்தி ராயுவெனு மைந்த னெய்தி
யாவலுடன் றிருத்தாதை யடிபணிந்து வாய்புதைத்தங் கருகு நின்றான். 54

இ - ள் : நிடதநாட்டரசன் தனக்குச் செய்த உபசாரங்களையெல்லாம் மிகுந்த ஒளியுள்ள வேலையுடைய வச்சிரவாகு என்னும் அரசன் பார்த்து மகிழ்ந்து பூவுலகில் இவனைப்போல் நம்மிடத்தில் நட்புள்ளவர்கள் வேறொருவருமில்லையென்று புகழ்ச்சி செய்யும்போது குதிரையேறிப் பொருந்துவதில் வல்லவனும் பலசாத்திரங்களை உணர்ந்தவனுமாகிய பத்திராயு வந்து அன்புடன் தன் தந்தை திருவடியிற்பணிந்து அவனருகில் நின்றான் என்றவாறு.

கண்டவுடன் வச்சிரவா கென்னுமடல் வேந்தனகங் களித்து நோக்கித்
திண்டிறலாய் வடிவாட்கைச் சேவகனே யிவண்வருக வருக வென்று
வண்டமர்தார் நிடதர்பிரான் றனைமுகம்பார்த் திவன்கொடிய மகதன் றன்னை
யொண்டிறலும் படைச்செருக்கு மழித்தெனைக்காத் துயிரளித்த வுரவோ
[னென்றான். 55

இ - ள் : அவனைப் பார்த்தவுடன் வச்சிரவாகுவென்கிற பராக்கிரமமுள்ள மன்னன் மனக்களிப்புடனே நோக்கி மிகுந்த பலமுள்ளவனே வடிவாளேந்திய கையையுடைய வீரனே வா என்னருகில் வாவென்றுசொல்லி வண்டுகள் பொருந்திய மாலையணிந்த நிடதமன்னன் முகத்தைப்பார்த்து இந்தப்பிள்ளை கொடியவனாகிய மகதமன்னன் பலத்தையும் அவன் சேனையின் இறுமாப்பையும் அழித்து என்னைக்காத்து உயிர் கொடுத்த புண்ணியவானென்று சொன்னான் என்றவாறு.

பின்னுமிஃ துரைக்கின்ற னிவனையருந் தவப்பயன்போற் பெற்றோன் யாவன்
மன்னுமிவன் பதியேது மரபேதெற் குதவிசெய வந்த தேது
பொன்னமரும் புயத்தோய்நின் மருகனிலை யெனக்கடைவே புகறி யென்னப்
பன்னினனங் கதுகேட்ட நிடதர்பிரான் முறுவலித்துப் பகர லுற்றான். 56

இ - ள் : மேலுங் கூறுகிறான் இம்மகனை அரிய தவப்பயன்போலப் பெற்றவன்யாவன் இவனிருக்கும் பதியெது மரபென்ன எனக்குதவி செய்யும்படி வந்தகாரணமென்ன வீரஇலக்குமி தங்கியிருக்கும் புயத்தை யுடைய அரசனே உன்மருமகனுடைய வரலாறெல்லாம் எனக்கு விவரமாகக் கூறவேண்டுமென்றான். அதைக்கேட்ட நிடதநாட்டு மன்னன் நகைத்துச் சொல்கிறான் என்றவாறு.

திங்களெனப் பொலிதாம வெண்குடையோ யொருகதையான் செப்பக்கேட்டு
மங்குல்வள மருததொரு திருநாடுண் டதுபுரக்கு மன்னர் மன்ன
னங்கவன்றன் மனைவியையும் பாலனையும் பழிகருதா தகற்றி விட்டான்
சங்கணிவார் குழைப்பரம னருளினொரு வணிகனவர் தம்மைக் காத்தான். 57

இ - ள் : சந்திரனைப்போல விளங்கும் முத்துமாலை அலங்கரித்த வெண்குடையையுடைய அரசனே நான் ஒருகதை கூறுகிறேன் அதைநீ

கேள் மேகங்கள் காலந்தவருமல் மழை பொழிகின்ற வளப்பந்தங்கிய ஒரு நகரமுண்டு. அதை ஆளுகின்ற அரசன் ஒருவனுண்டு. அவன் பழியை எண்ணுமல் தன்மனேவியையும் புதல்வனேயும் நீக்கிவிட்டான். சங்கக்குழை அணிந்த பரமசிவனுடைய கருணையிஞல் ஒருவணிகன் அவர்களைக் காப்பாற்றிஞன் என்றவாறு.

குலநாய்கன் ருன்கருதிப் புரந்தளிக்கு நாளினந்தக் குமரன் மாய்ந்தான்
சிலைமானு ந் திருப்புருவத் தேவியழக் கண்டெதிர்ந்த தெய்வ யோகி
யலையாம லின்னுயிர்பெற் றெழுகவென வெழுந்தவனுக் கறமுங் கூறித்
தொலையாத வலியுமொரு சங்கமும்வா ளுங்கொடுத்துத் துயரந் தீர்த்தான்.

இ - ள்: உத்தம குலத்தாஞகிய அந்த வணிகன் ஆதரிக்கும் நாளில் புத்திரன் இறந்துவிட்டான். அந்தத்துயரிஞல் வில்லையொத்த புருவத்தையுடைய அரசி அழுது கொண்டிருந்தாள். அப்போது அந்த இடத்தில் வந்த ஒரு சிவயோகி அவள் அழுவதைக் கண்டு மனமிரங்கி வருந்தாமலிருக்கும்படி இறந்தவன் உயிரைக் கொடுத்து எழுப்பி அதன் பின்பு அந்தப் புத்திரனுக்கு அரசநீதி போதித்து மாருத மிகுந்த பலமும் வாளுஞ் சங்கமுங் கொடுத்துத் துயரத்தை நீக்கிஞன் என்றவாறு.

நற்றவத்தோன் றிருவருளா லிறைமகனு
மெறும்பெருக நாளு நாளுங்
கற்றிரளிற் பொலிதிணிதோட் காளையா
யிளமையெழில் கனியு நாளிற்
பற்றலர்தன் ருதையைவென் றிருந்தளையிட்
டுடன்கொடுபோம் படிகேட் டெய்திச்
செற்றவரைத் தளைப்படுத்தித் தாதைசிறை
மீட்டனன்போர்ச் சிங்கமன்னன். 59

இ - ள்: இவ்வாறு சிவயோகி அருளிஞல் அரசகுமரன் நாளுக்கு நாள் பலம் அதிகரிக்கத் திரண்ட கல்லைப்போலப் பருத்த தோளையுடைய காளைப்பருவமா யிளமையும் அழகும் மிகுதியாகுங் காலத்தில் பகைவர் வந்துபோர் செய்து வெற்றி பெற்றுத் தன் தகப்பனேச் சிறைப்படுத்திக் கொண்டுபோகக் கேள்விப்பட்டு அழகிய சிங்கத்தையொத்த அந்தப்புதல்வன் அவ்விடத்திற்போய் அவர்களை வென்று சிறைப்படுத்தித் தன் தகப்பன் சிறையை நீக்கிவிட்டான் என்றவாறு.

இக்கதைபோ லொருகதைமுன் கேட்டதுண்டே லியம்புகென வியம்பி வீறு
தக்கபெரும் புகழுரவோ யுரைத்தகதைக் குரியரையுஞ் சாற்றக் கேட்டி
செக்கமலச் செங்கனிவாய்ச் சேயுமிவன் ருதையுநீ சிறந்த கற்பான்
மிக்குலகத் தேவியுநின் மனேயென்ருன் மதிமயங்கி வேந்தன் வீழ்ந்தான். 60

இ - ள் : இந்தக் கதைபோல நீ ஒரு கதை கேள்விப்பட்டதுண்டா யிருந்தால் சொல்லென்று சொல்லி விளங்குகின்ற தகுதியுள்ள பெரும் புகழ்பெற்ற அரசனே! இப்போது நான் கூறிய கதைக்கு உரியவர்களையும் சொல்லக்கேட்பாயாக செந்தாமரைமலர் போன்ற செவ்வாயையுடைய அந்த மகனும் இந்த மகன்றான். தகப்பன் நீ தான். கற்பினுல் சிறந்த தாயானவள் உன் மனைவிதான் என்று கூறினன். அதைக் கேட்ட அரசன் அறிவு மயங்கிக் கீழேவிழுந்துவிட்டான் என்றவாறு.

வீழ்ந்தமன்னன் றனையெடுத்து வியர்புலர முகம்விளக்கி வேந்தே யெம்மை
யாழ்ந்தவிதி செய்ததுயர் யாமுழந்தோ நீயதனு லழுங்க வேண்டாந்
தாழ்ந்தமனந் தனைத்தெளிவித் தெழுகவெனத் தான்புரிந்த தவறு நெஞ்சைப்
போழ்ந்துணர்வை யழிக்கவிருந் தயர்வுயிர்த்து மகனையுறப் புல்லிச்
[சொன்னுன். 61

இ - ள் : அவ்வாறு விழுந்த அரசனையெடுத்து வியர்வைமாற்றி முகந்துடைத்து மூர்ச்சைநீக்கி என்னையனே எங்களைப் பற்றிய வினைசெய்த துன்பத்தை நாங்கள் அனுபவித்தோம். அதற்காக நீ வருந்தவேண்டிய தில்லையென்று மனதைத்தெளிவித்து எழுந்திருவென்று சொல்ல எழுந்து அவ்வரசன் தான் செய்த குற்றம் தன் மனதைப் பிளந்து அறிவைக் கலக்கிவிட ஒன்றுந்தோன்ருமலிருந்து பின்பு தேறி மகனை அணைத்துக் கொண்டு சொல்லுகிருன் என்றவாறு.

கடுங்கானத் திடைதனியே நுமைவிடுத்து வரப்பணித்த கடிய னெஞ்சக்
கொடும்பாவி தனைமகதன் கொல்லாம லுயிரளித்த குமரா வீண்டு
நடுங்காம லுயிர்பொருந்தப் புல்லவு நீ கருணைசெய்தாய் ஞால மென்னை
யடுங்கால னென்பதலா லரசனெனச் சொலத்தகுமோ வந்தோ வந்தோ. 62

இ - ள் : கடுமையாகிய காட்டில் உங்களை விட்டுவரும்படி உத்தர விட்டவலிய நெஞ்சினையுடைய கொடும்பாவியாகிய என்னை மகத நாட்டான் கொல்லாமல் உயிர் கொடுத்தமகனே! இப்போது நான் அஞ்சாமல் உயிரோடு உயிர் பொருந்தும்படி புல்லிக்கொள்ளவும் கருணைசெய்தாய். இதை அறிந்த உலகத்தார் என்னை நமனென்று சொல்வார்களே யல்லது அரசனென்று சொல்லமாட்டார்கள் அந்தோ! என்றவாறு.

அறத்தினெறி கருதாம லரிவையையும் புதல்வனையும் அகன்ற காட்டின்
மறத்தின்வழி விடுத்தேனு மன்னவனே நீசர்தொழின் மருவி நின்றேன்
இறப்பதுவே தருமமெனத் துணிந்ததசா னனர்கோனின் சூட்சி நூலோர்
நிறக்கதிர்வே னிடதர்பிரான் றெருட்டவருந் துயர்சிறிது நீங்கிச்சின்னுள்.

இ - ள் : அறநெறியை எண்ணுமல் மனேவியையும் மகனேயும் காட்டினிடத்தில் அனுப்பிவிட்ட நானும் அரசனு, புலேயர் செய்யுந் தொழிலுள்ளவனுயிருந்தேனே ஆதலால் இனி இவ்வாழ்க்கை நீங்கி விடுவதே தருமமென்று துணிவுகொண்டு எழுந்த தசானன தேசத்து அரசன் அங்கிருந்த அமைச்சர்களும் ஒளிமிக்க வேலாயுதத்தையுடைய நிடதநாட்டு மன்னனும் சமாதானங் கூறியதால் துன்பஞ் சற்று நீங்கிச் சிறிது நாள் செல்ல என்றவாறு.

வேறு

சந்தி ராங்கதன் அன்பு கூரவே தங்கி நீங்கருந் தொடர்பு கொண்டுபின்
சிந்து ரானனச் சுமதி தன்னெடுஞ் செம்பொ னீள்கொடித் தேரி லேறியே
மைந்தன் வீரவேற் பத்தி ராயுவு மருகி கீர்த்திமா லினியும் பின்வரக்
கொந்து லாமலர்க் கானு மாறுநீள் குன்று நீந்தியே நகரங் கூடினுன். 64

இ - ள் : நிடதநாட்டு மன்னனுகிய சந்திராங்கதன் அன்புடன் வைத்துக்கொண்டிருக்கவிருந்து அவ்வரசன் நட்பு மிகுதியாகப் பெற்றுக் கொண்டு பின்பு சிந்தூரப்பொட்டணிந்த முகத்தையுடைய தன் மனேவியுடன் செம்பொன்மயமாய்ப் பெரிய கொடி கட்டப்பட்ட தேரில் அமர்ந்து தன் மகனுகிய பத்திராயுவும் மருமகளாகிய கீர்த்திமாலினியும் பின்னே வரக் கொத்தாகிய மலரையுடைய காடும் நதிகளும் உயர்ந்த மலேகளும் நீங்கித் தனது நகரம்போய்ச் சேர்ந்தான் என்றவாறு.

நகரின் வாழுநர் கண்டு மைந்தனே நறிய மாமலர் சிதறி யேத்துவார்
புகர்செய் யானேயாய் யூழி காறுநீ பூமி காத்தெமைப் புரத்தியா லென்பர்
தகர வார்குழல் வனிதை செல்விசா ரங்க பாணியே யிவனென் ரேுதுவார்
நிகரின் மைந்தனுக் காவ தாகயா நெடிது வாழுநா ளென நி கழ்த்துவார்.65

இ - ள் : அந்த நகரத்தில் வாழ்கின்றவர்கள் பத்திராயுவைப் பார்த்து வாசனே தங்கிய மலர்கள் தூவித் துதிசெய்வார்கள். சிலர் புகர்முக யானேப்படையையுடைய அரசனே! ஊழிக்காலவரையில் இவ்வுலகைக் காத்து எம்மைக் காக்கக்கடவை என்று சொல்வார்கள். சிலர் பத்திராயு மகாவிஷ்ணுவே, மயிர்ச்சாந்தணிந்த நீண்ட குழலேயுடைய இவன் மனேவி மகாலட்சுமியே என்பார்கள். சிலர் நாம் வாழுநாளாகிய நம்முடைய ஆயுள் இந்த மகனுக்கே ஆகக்கடவதென்று வாழ்த்துவார்கள் என்றவாறு.

பகைவ ரஞ்சவே பொருது தந்தைதன்
படர்க லேந்ததோள் பார்த்திலீ ரென்பார்
புகைசெய் வேலினு னிறைமை பூண்டிவண்
புகுத மெய்த்தவம் புரிந்துளோ மென்பார்

மகத ராசன்ருன் வல்லி யிற்பட
வாகை கொண்டகூர் வாளிதோ வென்பார்
சகர நீர்சுலாம் புவியி வன்றிருத்
தாணி ழற்கணே தங்குமா லென்பார். 66

இ-ள்: பகைவர்கள் அஞ்சத்தக்கதாகப் போர்செய்து தந்தைக்கு நேரிட்ட மனத்துயரத்தை நீக்கிய புயத்தைப் பாருங்கள் என்பார்கள் சிலர். பகையைத் தருவதாகிய வேலாயுதத்தையுடைய இவன் அரசாட்சி பெற்றுக்கொண்டு இவ்விடத்தில்வர நாம் உண்மையான தவஞ்செய்தோம் என்பார்கள் சிலர். மகதநாட்டரசன் விலங்கில் அகப்பட்டுக்கொள்ளும்படி வெற்றிகொண்ட கூரியவாள் இதுதான் பாருங்கள் என்பார்கள் சிலர். கடல்சூழ்ந்த உலகமெல்லாம் இவன் காலின் கீழ்த்தங்குமென்பார்கள் சிலர் என்றவாறு.

என்று கூறிய மாந்த ரின்புற
வேந்த லோடும்போ யெழில்கொண் மன்னவன்
குன்று போலுயர் கோயில் வைகியோர்
குடைநி ழற்புவி காத்த னந்தநாட்
சென்ற பின்னரே மகதன் றன்ஊயுந்
திரைய ளக்கெனச் செப்பி விட்டபின்
பொன்றி வானுல காடன் மேயினன்
புதல்வன் பூதலம் புரப்ப தாயினன். 67

இ-ள்: என்று கூறிய நகரமக்கள் இன்பம் பொருந்தத்தக்கதாகத் தன் மகனுடன்போன வச்சிரவாகு மன்னன் மகமேருவையொத்த தன் அரண்மனையிலிருந்து ஒரு குடை நீழலில் பூமியைக்காத்து நெடிதுநாள் சென்ற பின்பு மகதராசனைச் சிறைநீக்கி இனி நீ திரை கட்டிக்கொண்டிருவென்று சொல்லி அனுப்பிவிட்டபின் இந்த உடலைவிட்டு நீங்கிச் சுவர்க்க உலகம் அடைந்தான். பத்திராயு அரசு செய்துகொண்டிருந்தான் என்றவாறு.

பத்திராயுவின் கதையுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 792

பதினன்காவது

பத்திராயு முத்திபெற்ற அத்தியாயம்

திருந்தலர் வணங்க நீடு நிதியல்கச் செங்கோ லோச்சிப்
புரந்தன னுலக மெல்லாம் பொதுவற வென்று சூத
னிருந்தவ முனிவர்க் கெல்லா மியல்பினி னியம்பி மீட்டு
மருந்தவ னனைய பத்தி ராயுவின் சரிதஞ் சொன்னன். 1

இ - ள்: சத்துருக்கள் வந்து பணியவும் மிகுந்த நிதிகள் வந்து சேரவும் செங்கோல் செலுத்திப் பொதுவில்லாமல் உலகத்தைக் காத்து அரசுசெய்து கொண்டிருந்தானென்று சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்குச் சொல்லிப் பின்னும் அம்முனிவர் பத்திராயுவின் சரித்திரத்தைச் சொல்லுகிருர் என்றவாறு.

கன்னவி றிரடோண் முத்தக் கதிர்மணிக் கவிகைச் செங்கோன்
மன்னவ னமைச்ச ரோடு மலிகடற் ருனை யோடும்
பொன்னணித் திகிரி மன்னும் புரவியந் தேர்மேற் கொண்டு
மின்னிடைத் துணைவி யோடு விரைமலர்க் கானம் புக்கான். 2

இ - ள்: மலைக்கொப்பாகச் சொல்லுகின்ற திரண்ட வடிவாயிருக்குந் தோள்களையும் முத்துக்களால் அலங்கரித்த குடையினையும் உடையவனுயச் செங்கோல் நடத்தும் பத்திராயு என்னும் அரசன் மந்திரிகளும் மிகுதியாயுள்ள சேனையுஞ் சூழ்ந்துவரப் பொன்னல் செய்யப்பட்ட உருளை பூண்ட தேரில் தானும் தன் மனைவியுமாக ஏறிக்கொண்டு மணமுள்ள காட்டினிடத்தில் சென்ருன் என்றவாறு.

சண்பகம் பனசம் பூகஞ் சந்தனந் தமாலந் தேமா
விண்பக நிமிரும் கோங்கு வெள்ளிமந் தாரந் துற்றுக்
கண்புக வரிதாய் வாசங் காவதங் கமழுஞ் சோலை
பண்பயில் வண்டுந் தேனுங் கிள்ளையும் படிவ தம்மா. 3

இ - ள்: அந்தச் சோலையிலிருக்கும் சண்பகம், பலா, கமுகு, சந்தனம், தேமா, பச்சிலை, அண்டமுகடு பிளக்கும்படி உயர்ந்திருக்கும் கோங்கு, விளா, மந்தாரம், என்னும் மரங்களால் பார்ப்பவர்கள் பார்வை

நுழைவதற்கு இடமில்லாமல் நெருங்கப்பட்டு ஒருகாத தூரமட்டும் வாசனை வீசும் சோலையானது இசைபாடும் வண்டும் தேனென்கிற வண்டுகளும் கிள்ளைகளும் தங்கி இருக்கத்தக்கது என்றவாறு.

மவ்வலங் குழலாள் கீர்த்தி மாலினி யணங்கி னோடு
மவ்வனந் தன்னின் மன்ன னயர்வுயிர்த் திருந்த காலை
கொவ்வையங் கனிவாய்க் கற்பிற் கொடியொடோ ரந்த ணாளன்
கவ்வையான் முறையிட் டெய்திக் காவலற் கிதனைச் சொன்னான். 4

இ - ள்: இத்தன்மையுள்ள காட்டில் பத்திராயு என்னும் அரசன் கீர்த்திமாலினி என்னும் மனைவியுடன் வழிவந்த இளைப்பு நீங்கியிருக்கும் போது ஒரு பிராமணன் தன் மனைவியாகிய கோவைப்பழத்தை ஒத்த செவ் வாயினையுடைய மாதுவுடன் துயரமுள்ளவனாய் முறையிட்டுக்கொண்டு வந்து அரசனுக்குப் பின்வருமாறு கூறலானான் என்றவாறு.

அறத்தினி லுலகங் காக்கு மரசனே யரச ரேறே
மறப்புலி தொடர்ந்து கொல்வான் வருகின்ற ததனை நீயுன்
றிறப்படை யேவி யாங்கே செகுத்துயிர் கவர்ந்து யாங்கள்
இறப்பது தவிர்த்து ளாவி யீந்தெமைப் புரப்பா யென்றான். 5

இ - ள்: அறத்துடன் உலகினைக்காக்கும் அரசனே! அரசர்க ளாகிய யானைகளுக்குச் சிங்கம்போலிருப்பவனே! கொடிதான ஒரு புலி எங்க ளைக் கொல்லத் தொடர்ந்து வருகிறது. அதனை உனது கையிலிருக்கும் வலிய பாணத்தை ஏவி அவ்விடத்திலேயே விழுந்து சாவும்படி கொன்று நாங்கள் இறப்பதை நீக்கி எங்கள் பிராணனைக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னான் என்றவாறு.

வேறு

மறையவ னோதிய வாசகம் வந்தே
யறைகழன் மன்னவ னஞ்செவி யெய்தப்
பிறைநிகர் வார்சிலை வாளி பிடித்துக்
கறுவுகொள் வெம்புலி யைக்கடி தெய்வான். 6

இ - ள்: இவ்வாறு பிராமணன் கூறிய உரையானது வந்து ஒலிக் கும் வீரகண்டை காலிற்கட்டிய அரசன் காதில் கேட்டவுடன் பிறைபோல் வளைந்த பெரிய வில்லையும் பாணத்தையும் கையிலேந்தி கோபங்கொண்டு வருகிற வெய்ய புலியை விரைவினில் கொல்வதற்கு என்றவாறு.

உற்றன னுற்றவ னென்றுதன் முன்னம்
பற்றிய வெம்புலி பார்ப்பனி தன்னை
யெற்றி யணைந்து பிடித்தலு மேங்கு
முற்றிழை யாளர சன்முக நோக்கி. 7

இ - ள் : எத்தனப்பட்டான் அப்படி எத்தனித்தவன் வருவதற்கு முன் தொடர்ந்துவந்த புலியானது அந்தப் பிராமணத்தியை அடித்துப் பிடித்துக்கொள்ளவே அழுகிற அந்தப் பிராமணப்பெண்ணனவள் அரசன் முகத்தைப்பார்த்து என்றவாறு.

மன்னவ னேபுலி வாயிடை யுற்றே
னென்னுயிர் நின்பர மென்றிது கூறி
மின்னவிர் செஞ்சடை மெய்ப்பொரு ளுமம்
பன்னி னளாவி நடந்தது பாவம். 8

இ - ள் : அரசனே! நான் புலிவாயில் அகப்பட்டுக்கொண்டேன். என் உயிரைக்காப்பது உனது பாரம் என்று சொல்லி மின்னலைப்போல விளங்கும் செஞ்சடையையுடைய உண்மைப் பொருளாகிய சிவநாமத்தை உச்சரித்தாள் பிராணன் நீங்கிவிட்டது. இது பாவமானகாரியம் எ - று.

வேதியன் மாது விளம்பிய சொல்லான்
மாதுய ரெய்திய மன்னன் வெகுண்டே
காத விடுத்த கடுங்கணை சென்றே
போதென வீழ்ந்தது புண்டரி கத்தின். 9

இ - ள் : அந்தப் பிராமணன் சொல்லிய சொல்லால் மகத்தாகிய துயரங்கொண்ட அவ்வரசன் கோபமுள்ளவனாய்க் கொல்லும்படி விடுத்த பாணமானது போய்ப் புலியின்மேல் பூவைப்போல விழுந்தது என்றவாறு.

கண்டு பொருமை கருத்தை வெதுப்பத்
திண்டிறல் வேலவ னின்று திகைத்தான்
புண்டரி கந்தெறு பூவையை யுங்கொண்
டுண்டிட வெம்முழை தேடி யொதுங்க. 10

இ - ள் : தன்னுடைய பாணம் பூவைப்போல விழுந்ததைக்கண்டு உண்டான பொருமையானது மனத்தை வருத்த மிக்க பலமுள்ள வேலேந்தும் அவ்வரசனுக்கு ஒன்றும் தோன்ருமல் திகைத்து நின்றுவிட்டான். புலியானது தன்னுல் கொல்லப்பட்டவளை உண்ணக் கவ்விக்கொண்டு மலைக்குகையை நாடிச்சென்றது என்றவாறு.

அச்ச முருத வரும்புலி போக
வச்சிர வாகு மகன்றுய ருற்ருன்
விச்சை யுணர்ந்தறி வேதியன் மாதை
யிச்சக மீதி லிழந்தன னென்ருன். 11

இ - ள் : எவ்வளவும் பயமில்லாமல் அந்தப் பெரும்புலியானது போய்விடவே வச்சிரவாகு மகனுகிய பத்திராயு என்பவன் துயரம் அடைந்தான். வேத சாத்திரங்கள் உணர்ந்த பிராமணனுனவன் என மனைவியை இவ்வுலகத்தில் இழந்துவிட்டேனே என்று சொல்லி என்றவாறு.

வேறு

அருந்ததியு மொவ்வாத கற்புடைய மனையவளே யந்தோ வந்தோ
பெரும்புலியின் பகுவாயின் உயிரிழக்க முற்பவத்திற் பிழைத்த துண்டோ
குரும்பைமுலைத் தரள நகைக் கொடியிடையாய் நீவிளிந்த கொடுமை கண்டும்
இரும்பனைய கொடுமனங்கொண் டின்னமுநா னிறவாம லிருக்கின் றேனே.

இ - ள் : கற்பினில் அருந்ததியும் நிகராகாத மனைவியே! அந்தோ பெரும்புலியின் பிளப்பாகிய வாயில் அகப்பட்டுக்கொள்ளும்படி முன்பிறவியில் செய்த வினையுண்டோ தென்னங்குரும்பையை ஒத்த தனங்களும் முத்துக்களை ஒத்த பற்களும் பூங்கொடியை ஒத்த இடையையும் உடையவளே! நீ இறந்த கொடுமையைக்கண்டும் இரும்பையொத்த வன்னெஞ்சங் கொண்டு இன்னமும் நான் இறவாமல் இருக்கின்றேனே என்றவாறு.

என்றென்று பற்பலவும் பன்னியெடுத் தழைத்துமன மிடரின் மூழ்கிக்
கன்றென்று தனையிழந்த கறவைபோ னெடிதுயிர்த்துக் கவன்று மாழ்கி
யின்றென்று துணிகுவன்யா னிங்கென்ன நினைந்துகடி தெழுந்து நின்று
குன்றென்று திரள்புயத்துக் கோமகன்மேல் வெகுண்டினைய கூறி னனே. 13

இ - ள் : என்றென்று பலபலவாகத் தனது மனைவியின் குணுதிசயங்களை எடுத்து அழைத்துச்சொல்லி துன்பத்தில் மனது அழுந்திடக் கன்றினையிழந்த பசுவைப்போலப் பெருமூச்சுவிட்டுக் கவலையுடன் சோர்ந்து இப்போது ஒரு காரியஞ்செய்யத் துணிகுவனென்று தனது மனதில் நிச்சயித்துக்கொண்டு எழுந்துநின்று மலையை ஒத்த திரண்ட புயத்தையுடைய பத்திராயுவாகிய அரசன்மேல் கோபித்துக்கொண்டு இந்த உரைகளைச் சொல்லுகிறுன் என்றவாறு.

மறையவருக் கிறுதிவந்தா லவருயிருக் குதவிசெய்யா மன்ன ரேறே
கறையிருக்குந் தீவாய்வெங் கனற்றறுகட் கொடுவரிநின் கண்முன் னுகப்
பிறைநுதற்குப் படரியற்றி யுயிர்கவர்ந்து பிலம்புகுதப் பிடித்த வில்லோ
டுறைகழித்த கணையேந்தி நின்றனைநின் னரசியலுக் குவமை யுண்டோ. 14

இ - ள் : பிராமணர்களுக்குத் துன்பம் நேரிட்டவிடத்தில் உதவி செய்யாத மன்னவர்கள் சிங்கமே! உதிரம் பொருந்தியிருக்கும் பொல்லாத வாயும் வெவ்விய தீப்பொறியைக் கக்கும் கண்களுமுள்ள ஒரு புலியானது

உன் கண்ணுக்கு எதிராக என் மனைவிக்கு வருத்தத்தைச்செய்து உயிரை வாங்கிக் குகையிற்போகவும் பிடித்த வில்லும் தூணியிலிருந்தெடுத்த அம்பும் ஏந்திக்கொண்டு நின்றாய். ஆதலால் உன் அரசியலுக்கு ஒப்பான அரசியல் வேறொன்றுமில்லை என்றவாறு.

ஆறிரட்டி யாயிரம்வெங் களியானை
பலமுனக்குண் டதனை வேந்தே
பாறிரட்டுங் கதிர்வடிவேற் பகைவரிடத்
தீந்தவராற் பயங்கொண் டாயோ
தூறிரட்டித் தெழுந்தமரக் கானகத்தி
லென்றுணையைத் தொடர்ந்து நெய்த்தோர்ச்
சேறிரட்டித் திரும்பிலவாய்ப் புலிகவர
மீட்டிலைநீ செய்த தென்னே. 15

இ - ள்: பன்னீராயிரம் யானைபலம் உனக்கு உள்ளது. அரசனே! அந்தப் பலத்தினைப் பருந்துகளைக் கூட்டமாய்ச் சேர்க்கும் ஒளிதங்கிய வடிவேலையுடைய பகைமன்னரிடத்தில் கொடுத்துவிட்டுப் பயம்பெற்றுக் கொண்டனையோ? சிறுசெடிகளால் நெருங்கப்பட்டு மரங்கள் மேலோங்கி யிருக்கும் இந்தப் பெரியகாட்டில் உதிரம் சேறுபடும்படி பிலம்போன்ற வாயையுடைய புலியானது தொடர்ந்து என் மனையாளைப் பிடித்துக் கொண்டு போய்விட்டதே! அதனைத் தடுக்காமல் என்னசெய்தாய் எ - று.

கடுங்கானிற் புலியெனது கனங்குழையைக்
குருதியுண்ணக் கருதி நின்மு
னடுங்காலத் ததனையுயி ரழித்திலைநின்
னுயிர்ப்புறங்காத் தஞ்சி நின்றாய்
கொடுங்காலத் தூதரடு களத்தினிற்பப்
பகைவர்வந்து கொடும்போர் செய்யின்
நடுங்காது பகைதுரந்துன் னரசுநிலை
நிறுத்துவையோ நாம வேலோய். 16

இ - ள்: பகைவர் அஞ்சத்தக்க வேலாயுதமேந்திய அரசனே! கொடுமையுள்ள இந்தக் காட்டில் உனக்கெதிரில் உதிரமுண்ணப் புலியானது என் மனையவளைக் கொல்லும்போது அந்தப் புலியைக் கொல்லாமல் உன்னுயிரைக் காத்துக்கொள்ளும்பொருட்டு பயந்து நின்றனை. கொடுமையுள்ள யமதூதர் வந்து போர்க்களத்தில் இருக்கும்படி உன் எதிரிகள்வந்து வெவ்வியதான யுத்தஞ்செய்தால் அந்தச் சமயத்தில் நடுங்காமல் பகைவரைத் துரத்தி உன்னரசாட்சியை நிலை நிறுத்துவையோ என்றவாறு.

பெண்ணுகி யந்தணர்தம் பேதையுமாய்
நினக்கபயம் பேசி ஞளை
யெண்ணுது கொலும்வேங்கைக் குணவளித்து
னுயிர்காத்த வேழை வேந்தே
மண்ணுள வெண்ணுதியோ வின்னமுமா
ருயிர்சுமந்து வலியிற் ருழ்ந்து
நண்ணூர்த மிழிபுரைக்கு நாணுயோ
வென்றுபல நடுங்கச் சொன்னுன். 17

இ - ள் : பெண்பிறப்பாகியும் அந்தப் பிறப்பிலும் பிராமணத்தியாகியும் உனக்கு அபயமென்று முறையிட்டவளைக் காக்கவேண்டுமென்று உன்மனதில் எண்ணுமல் கொல்லும் புலிக்கு உணவாகக் கொடுத்துவிட்டு, உன்னுயிரைக் காத்துக்கொண்ட ஏழ்மையுள்ள அரசனே! பலத்தினிற் குறைந்தும் இன்னமும் பிராணனை வைத்துக்கொண்டு ஊராள எண்ணுகிருயோ? பகைவர்கள் இழிவாகப் பேசுவார்களே, அதற்கும் நாணமுருயோ என்றிவ்வாறு பல அவதூருன சொற்களை அவன் நடுங்கும்படிக் கூறினுன் என்றவாறு.

என்னலுமே மதிமயங்கி வடிவேல்கொண்
டகன்மார்பத் தெரிந்த தென்னக்
கன்னியைவெம் புலிகவர்ந்த கொடும்பழியு
நான்மறையோன் கடிய சொல்லு
மன்னிலையே யகம்வெதுப்ப வருந்துயரக்
கடலிடையாழ்ந் தழுங்குந் தோறு
மன்னர்பிரான் அரசியலுஞ் செல்வமுநீத்
திறப்பனெனு மனத்த ஞனன். 18

இ - ள் : இவ்வாறு அந்தப் பிராமணன் கூறவே, அரசன் அறிவு மயங்கி வடிவேலைப் பரந்த மார்பில் எறிந்ததுபோலப் பிராமணப்பெண்ணை, புலிகொன்ற கொடும்பழியும் பிராமணன் கூறும் கடுமையான உரையும் அப்போதே மனதை வெதுப்ப நீங்குதற்கரிய துயரக்கடலில் அழுந்த வருந்துந்தோறும் அவ்வரசன் இவ்வரசாட்சியையும் செல்வத்தையும் ஒழித்துவிட்டு இறக்கவேண்டுமென்கிற எண்ணமுள்ளவனுனன் என்றவாறு.

வேதியருக் கிடர்களையா வேந்தனெரு விலங்கெனவே வேதங் கூற
வாதியினிற் கேட்டிருந்து மவர்க்கிறுதி வந்தவிடத் தஞ்சி நின்றேன்
போதுமினி யுயிர்சுமத்தல் சுமந்தாலும் பழியலது புகழு முண்டோ
தீதுதரும் வாழ்க்கையினுஞ் சீர்த்தியுறப் பொன்றுவதே சீரி தென்ன. 19

இ - ள் : பிராமணர்கட்கு நேரிட்ட இடரை நீக்காத அரசன் ஒரு மிருகமேயல்லது அரசனுகான் என்று வேதங்கூறுவதை ஆதியில் கேட்டறிந்தும் இப்போது பிராமணனுக்கு நேரிட்டவிடத்தில் பயந்துகின்றேன். உயிரைத் தாங்கிக் கொண்டிருப்பது இந்தமட்டிற் போதும் அல்லது உயிரைச் சுமந்துகொண்டிருந்தாலும் பழி வருமேயல்லது புகழ் உண்டாவதில்லை. ஆதலால் தீங்கைத்தருகிற இந்த வாழ்விலிருப்பதைப் பார்க்கிலும் புகழுண்டாக உயிரைவிடுவதே நன்மையுமாகும், சிறப்புமுண்டாகும்.

மடமாதைப் புலிக்குணவா வழங்கிநெடுந் துயருழக்கு மறையோன் ருளிற்
றடமார்பு மணிமுடியு நிலம்படிய வீழ்ந்துதுயர் தவிர்தி யென்று
மிடலான தொன்றுமிலாத் தமியேன்றீ நரகத்தின் வீழ்கின் றேனென்
னுடைநாடு மென்குலமு நிதியமுநின் வயத்தவென்ரு னுரவுத் தோளான். 20

இ - ள் : என்றிவ்வாறெண்ணித் தன் மனைவியைப் புலிக்கு உணவாகக் கொடுத்துவிட்டுத் துயரப்பட்டுக்கொண்டிருக்கிற பிராமணனுடைய திருவடியில் அகன்றமார்பும் ரத்தினங்கள் பதித்த மகுடமும் பூமியில் படுமாறு பத்திராயுவென்னும் அரசன் பணிந்து, பிராமணரே! துன்பப்பட வேண்டாமென்று சொல்லப் பலமென்பதொன்றுமில்லாத தமியேன் தீ நரகத்தில் விழுகின்றேன். என்னுடைய நாடுங்குலமும் பொருளும் தேவரீர் வசமாக ஒப்புவித்தேன் என்று சொன்ஞன் என்றவாறு.

மாறிலாத் திறல்வேந்தன் வாய்மொழிகேட்
டருமறையோன் வழங்குங் கண்ணின்
வீறிலான் விறலிழந்தான் பலியெடுத்தான்
சுகமிழந்தான் வினையின் மூங்கைப்
பேறுளா னூலிழந்தான் மனையிழந்தான்
உரிமைதரும் பேறு நீத்தா
ஞறிஞ னுரைப்பதென்னே வரசனெனக்
கூறியிஃதை யறைய லுற்ருன். 21

இ - ள் : மாறுத வெற்றியையுடைய அரசன் சொன்ன உரையைக் கேட்டு அந்தப் பிராமணன் கூறுகிருன்: கண்ணிெளி யிழந்தவனும், வன்மையிழந்தவனும், பிச்சையெடுப்பவனும், சுகமிழந்தவனும், பாவத்திஞல் ஊமைத்தன்மை உடையவனும், பூணனூலிழந்தவனும், மனைவியை யிழந்தவனும், இம்மைப்பயன் இழந்தவனுமாயிருப்பவன் துயரம் நீங்கிச் சொல்லத்தக்க தொன்றுளது. அரசனே! என்று சொல்லிப் பின்னும் அப்பிராமணன் இவ்வுரைகூறத் தொடங்கினன் என்றவாறு.

என்னுடைய துயரமுந்தீர்ந் தாவியுங்கொண்
டிருந்தவங்க ளியற்ற வேண்டி
உன்னுடைய குலவனிதை கீர்த்திமா
லினியையெனக் குதவல் வேண்டு
மன்னவவென் றலுங்கொடிய வடுவுரைவேல்
போலரசன் மருமத் தூன்ற
நன்னெறிதீ ரிழிபுரைநீ யிங்குரைத்தாய்
யிவ்வுரையை நவிலற் பாற்ருே. 22

இ-ள்: அரசனே! என்னுடைய துயரம் நீங்கிப் பிராணனை வைத்துக்கொண்டு நான் தவங்கள் செய்யவேண்டுமென்கிற எண்ணம் உனக்கிருக்குமாஞல் உன்னுடைய கற்புடைய மனைவியாகிய கீர்த்திமாலினியை எனக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்ஞன். அவ்வாறு கூறியவுடன் அந்தக் கொடிய உரையானது அரசனது மார்பில் வேல் தைத்ததுபோல் இருந்ததனல், பிராமணரே! அறத்துக்கு மாருன இழிவுள்ள உரையைக் கூறினீர்; இவ்வுரை கூறலாமோவென்று அரசன் கூறிப் பின்னும் கூறுகிருன் என்றவாறு.

கனைகுரற்றெண் கடலுடுத்த காசினியின்
மறைவல்லோய் கலைவல் லோர்க்கு
முனையிடத்தி னுயிர்கொடுப்பர் முழுநிதியத்
தொகைகொடுப்பர் முகமன் சொல்வர்
துனைபரித்தேர் கொடுப்பர்கரி கொடுப்பர்பரி
கொடுப்பர்அன்றித் துணையா யுள்ள
மனைகொடுத்துப் புகழ்படைத்த மன்னருண்டே
லுரையென்ருன் மன்னர் கோமான். 23

இ-ள்: பிராமணரே! ஒலிக்கின்ற தெளிவுள்ள கடல்சூழ்ந்த இவ்வுலகில் அரசர்களா யிருப்பவர்கள் பிராமணர்கள் பொருட்டுத் தங்கள் உயிரைக் கொடுப்பார்கள், மிக்க பொருள் கொடுப்பார்கள், உபசாரமொழி கூறுவார்கள், விரைவாகச் செல்லும் குதிரைகட்டிய தேர் கொடுப்பார்கள். இவ்வளவேயல்லது இல்லறத்துக்குத் தக்க துணையாகிய மனைவியைக் கொடுத்துப் புகழ்படைத்த அரசர்களுண்டாயிருந்தால் கூறுமென்ருன் பத்திராயு என்னும் அரசன் என்றவாறு.

செங்கோன்மை யரசர்பிரான் செப்பியசொல்
செவிபுகுதச் சிவந்து நோக்கி
வெங்கோன்மை யரசியற்றும் விறல்வேந்தே
பழியிதனுன் மேவி னுலுந்

தங்காத வகையியற்றுஞ் சாந்தியடு
வேனணங்கைத் தருதி யின்றே
னுங்காருந் தழனரகம் புகுதியெனச்
சபிப்பனினி நுவறி யென்றான். 24

இ - ள் : செங்கோல் மாறாத அரசன் இவ்வாறு கூறிய உரையானது காதிற்பட்ட மாத்திரத்தில் பிராமணன் கோபத்துடன் பார்த்துக் கொடுங்கோல் செலுத்தி அரசாட்சிசெய்யும் அரசனே! இதனாலேயெனக்குப் பாவம் நேருவதாய் இருந்தாலும் அது தொடராத வண்ணம் கழுவாய் தேடிக்கொள்ள என்னாலாகும். ஆதலால் உன் மனையாளைக்கண்டு கொடாவிட்டால் பாவிகளையுண்ணத்தக்க தீ நரகில் விழும்படி உனக்குச் சாபங் கொடுப்பேன்; இனி என்னசொல்கிறாய் சொல்லென்றான் எ - று.

வேறு

ஆழ்ந்த கேள்வி மறையோ னறையுஞ் சுடுசொல் வாளாற்
போழ்ந்த நெஞ்சங் கருகப் பொருமிப் பொருமிப் புவிமேல்
வீழ்ந்து வீழ்ந்தாங் கெழுந்து விழிநீர்க் கடலுள் ளழியா
தாழ்ந்த நெஞ்சங் கூர்ந்து தகைவேந் திவைக ணினையும். 25

இ - ள் : வேதசாத்திரப் பயிற்சி நிறைந்துள்ள அந்தப் பிராமணன் சொல்லுஞ் சுடுசொல்லாகிய வாளினால் பிளக்கப்பட்ட மனம் வெதும்பி அழுதழுது பூமியில் விழுந்துவிழுந்து பின்னுமெழுந்து கண்ணீர்த்துளி கடல்போல் பெருக அதிலாழ்ந்தழிந்து ஒன்றுந் தோன்றாத மனமுள்ளவனாய்ப் பெருமைப்பாடுள்ள அரசனிவைகளை யெண்ணுகிறான் என்றவாறு.

மாறாக் கற்பி னிவளை மறையோர்க் களிக்கின் வசையாம்
வேறாய் மறுத்தின் றுரைத்தால் வினையே புரியு மறையோன்
கூறாய் வளரும் பிறையுங் கொன்றைத் துணருஞ் செருகி
யாறு தரிக்குஞ் சடையோ னருளே தெனவு மறியேன். 26

இ - ள் : அழியாத கற்புநிலையுள்ள இவளைப் பிராமணனுக்குக் கொடுத்தால் வசைவந்துநேரிடும். அல்லது மறுத்து வேறாகச் சொன்னால் பிராமணன் சாபங்கொடுப்பான். ஒரு கலையுடனிருக்கும் பிறையினையும் கொன்றைமாலையினையும் அணிந்துகொண்டு ஆத்திமாலையினையும் அணிய விரும்பும் சடைமுடியையுடைய பரமசிவனின் திருவருள் எவ்வாறிருக்கின்றதோ தெரிந்திலன் என்றவாறு.

பொல்லா நரகத் திடையே புகுமா றுயிருக் கெளிதோ
நல்லா டனையு மிங்ங னயந்த மறையோற் குதவி
வில்லார் மணிப்பூண் வேந்தர் வினையங் கேட்டு வியப்பக்
கல்லா மாந்த ரிழப்பக் கனல்வாய்ப் புகுவே னென்ன. 27

இ - ள் : பொல்லாத நரகத்தில் உயிர்விழுகிறதென்றால் அது எளிதானதல்லவே. ஆதலால் மனையவளை விரும்பிக் கேட்கிற பிராமணனுக்குக் கொடுத்து ஒளியுள்ள மணிகள் அணிந்த மன்னவர்கள் இதனைக் கேள்விப்பட்டு மகிழவும் கல்வியுணராத மாந்தர்கள் இழிவு கூறவும் தீயில் விழுவேனென்று துணிந்து என்றவாறு.

இருந்த மறையோய் நினக்கே யீந்தே னிவளை யீந்தேன்
பொருந்தும் பதியிற் கொடுநீ போவா யென்றே புகலாத்
திருந்து மனையா டன்னைத் தாயே செல்கென் றேத்தி
யருந்து மமிர்தம் போல்வா னனலைக் கடிதி னமைத்தே. 28

இ - ள் : தனக்குள் எண்ணிக்கொண்டு, கோபங்கொண்டிருக்கும் வேதப்பிராமணரே! இவளை உமக்குக் கொடுத்தேன்! கொடுத்தேன்! நீர் இருக்கும் நகரத்துக்குக் கொண்டுபோமென்று சொல்லிக் கற்புள்ள மனைவியைப் பார்த்து, தாயே! இந்தப் பிராமணனுடன் போவென்று சொல்லித் துதித்து உண்ணும் அமிர்தம்போன்ற அரசன் விரைவாகத் தீ வளர்த்து என்றவாறு. பிராமணருக்கு மனைவியாகக் கொடுக்க இசைந்தபின் அவள் பரதாரமானாளாதலால், தன் மனைவியைத் 'தாயே' என்று விளித்தான்.

கண்ணீர் கலுழ்தன் மாற்றிக் கருத்து மொருபா னிறுவித்
தெண்ணீர் மூழ்கி யெழுந்து சிவமந் திரமுட் கருதி
விண்ணா டுலவுங் கதிரும் வெதும்பச் சிகைகொள் கனல்வா
யுண்ணீர் மையினன் வீழ்வா னெருப்பட் டுலவுங் காலை. 29

இ - ள் : கண்ணிலிருந்து நீர்வருதலை மாற்றி மனத்தை ஒருவழிப் படுத்தித் தெளிவுள்ள நீரில் நீராடிவந்து திருவைந்தெழுத்தை உள்ளே உச்சரித்துக்கொண்டு ஆகாயத்தில் செல்லும் சூரியனும் வெப்பங்கொள்ள சிகைவிட்டு எழுகின்ற தீயில் அன்புடன்விழ ஒருமைப்பட்டுத் தீக்குண்டத்தை வலம்வரும்போது என்றவாறு.

ஐந்து முகமு மொளிர வவிர்செஞ் சடையின் மீதே
யிந்து மொளிகொண் டிலக விடையே யிடையே யிதழிக்
கொந்தின் றுணர்நின் றசையக் கொக்கின் சிறகு மறுகுஞ்
சிந்தும் பனிநுண் டிவலைச் செழுநீர் மகளுந் திகழ. 30

இ - ள் : ஐந்து திருமுகங்களும் ஒளிவிடவும், விளங்குகின்ற செஞ்சடையில் இளந்திங்கள் ஒளியுடன் விளங்கவும், அதன் நடுவில் கொன்றைப் பூங்கொத்துகளிருந்து அசையவும், கொக்கினிறகும் அறுகும் சிந்துகின்ற குளிர்ச்சியுள்ள துளியையுடைய கங்காதேவியும் ஒளிவிடவும் எ - று.

மூன்று கண்ணுஞ் சுடர முரலுஞ் சங்கக் கடல்வாய்
கான்ற விடமுண் டிருண்ட கண்ட மணியிற் கனிய
வான்ற வீரே ழுலகு மல்லாப் புவனத் தடுக்கு
மீன்றுங் கன்னி யென்ன விருந்தாள் வாமத் திலக. 31

இ-ள்: மூன்று கண்களும் ஒளிவிடவும், ஒலிக்குஞ் சங்கந்தவழுங் கடலினிடத்து வாசுகிகக்கிய விடத்தையுண்டு கறுத்த காலகண்டம் நீல மணிபோலவிளங்கவும், நிறைந்துள்ள பதினுன்கு உலகங்களும் அவைகளே யன்றி மற்றப் புவன கோடிகளையெல்லாம் பெற்றும் கன்னியாயிருக்கும் உமையவள் இடப்பாகத்தில் விளங்கவும் என்றவாறு.

பவள வரையிற் ரூழ்ந்து படியு நீலப் புயல்போற்
கவள யானை யுரியைக் கவின ருருவம் போர்ப்பத்
திவளும் புலியி னதளைச் சேர்த்திப் புயங்க நீவி
துவள நீற்றின் றவளச் சுடர்ப்புண் டரமுந் தோற்ற. 32

இ-ள்: பவளமலையில் கருமேகம் படிந்திருப்பதுபோல யானைத் தோல் போர்வை உடம்பில் போர்ப்பவும் விளங்குகின்ற புலித்தோலை உடுத்தி அதன்மேல் சர்ப்பக் கச்சணியப்பட்டுத் தொங்கி அசையவும் துல் லியமான திருநீற்றுத் திரிபுண்டரங்களும் ஒளிவிடவும் என்றவாறு.

தெய்வ மகளிர் நடிக்கச் சிறந்த முழவங் கறங்க
வைய மனுங்க நடிக்கு மழவெள் விடையி னேறிக்
கொய்யு மலர்கொண் டடியிற் குளிரப் புனைவார்க் கெளிதிற்
கைவல் லியநின் றருளுங் கருணைக் கடல்வந் தெதிர்ந்தான். 33

இ-ள்: தேவமகளிர் நடனஞ்செய்யவும் சிறந்ததாகிய குடமுழா ஒலிக்கவும் திரிபுரதகனஞ் செய்யும்போது அமைந்த தேரினச்சு முறியக் கண்டு எதிரில்வந்து நடித்ததாகிய இளமையும் வெண்மை நிறமுமுள்ள திருமாலாகிய இடபவாகனத்தின்மேல் ஆரோகணித்துக்கொண்டு கொய்த திருப்பள்ளித் தாமங்கொண்டு குளிரும்படி திருவடியில் அருச்சிப்பவர்கட்கு எளிதாக முத்தியை அருளும் கருணைக்கடலாகிய பரமசிவன் காட்சி கொடுத்தார் என்றவாறு. 'வையம் நுங்க நடிக்கும்' என்று பாடமாயின் இவ்வுலகத்தை உண்ண நடித்த மால்விடை எனப் பொருள் உரைத்துக் கொள்க. வையம் - தேர், பூமி.

கண்ணு மனமுங் குளிரக் கண்டா னரசர்க் கரசன்
திண்ணம் பிறவிப் பகையைச் செற்றே மென்று கருதி
யுண்ணு மமிர்த முண்டா னொருவ னென்னக் களித்து
விண்ணு மண்ணும் பிறவு மானோ னடியில் வீழ்ந்தான். 34

இ - ள் : அரசனானவன் தன் கண்களும் மனமுங் குளிரும்படி தரிசித்து நிச்சயமாகப் பிறவிப் பகையாயுள்ள நம்முடைய வினையை ஒழித்தோமென்று எண்ணித் தேவர்களுண்ணும் அமிர்தம் உண்ட ஒருவன் களிப்பதுபோல் களித்து ஆகாயமும் பூமியும் மற்றவைகளுமாய் நிறைந்துள்ள பரமசிவனின் திருவடியில் பணிந்தான் என்றவாறு.

வேறு

தேவாதி தேவனைச் சிற்குணனை யற்புதனைய்
மூவா முதலாய் முழுப்பொருளாய் நின்றானை
காவாய் பிறவிக் கடனீந்திக் கையிளைத்தே
னாவா யெனவேநின் னுண்மலர்த்தாள் பெற்றேனே. 35

இ - ள் : தேவர்கட்கெல்லாம் முதலாகிய தேவனாகியும் சிற்குணனாகியும் அற்புதனாகியும் மூவா முதலாகியும் கடவுள் தன்மை நிறைந்த பொருளாகியும் வீற்றிருக்குங் கடவுளே! அடியேனைக் காத்தருளவேண்டும். பிறவிக்கடலை நீந்திக் கரையேறமாட்டாமல் கையிளைத்தேன். அந்தக்கடலை நீந்துவதற்குக் கப்பலைப்போல உன்னுடைய திருவடித் தாமரைமலரை இப்போது பெற்றுக்கொண்டேன் என்றவாறு.

மூவாமுதல் என்பது சிலகாலம் இளமையும் அதற்குமேல் கிழத்தன்மையும் அடையாமலிருத்தல். முழுப்பொருள் என்றதனால் சில தேவர்களுக்குக் கடவுள்தன்மை குறைந்திருக்கும் என்பதாகக்கொள்க.

உண்ணா நறையா யுவட்டாத தெள்ளமுதாய்
மண்ணா மணியாய் மறைப்பொருளாய் நின்றானை
யெண்ணா லளவு படாத்துன்பத் திடருழந்தேன்
கண்ணா லுறநோக்கிக் கையாற் றொழுகின்றேன். 36

இ - ள் : உண்ணப்படாத தேனாகியும் தெவிட்டாத மதுரமுள்ள அமிர்தமாகியும் கழுவப்படாத மாணிக்க மணியாகியும் வேதப்பொருளாகியுமிருக்குங் கடவுளே! உன்னை இலக்கத்தினால் அளவுபடாத துன்பத்தினால் வருத்தங்கொண்ட அடியேன் கண்ணினால் தரிசித்துக் கைகளால் தொழுகின்றேன் என்றவாறு. மண்ணாமணி - எக்காலத்தும் ஒளிமாறாமணி.

அன்புக்கோ ரன்பா யறத்துக்கு நல்லறமாய்
வன்புக்கு வன்பாய் வடிவொருவி நின்றானை
முன்புக் குணர்விலனாய் மூங்கைத் தொழில்புரிந்தே
னென்புக் குருக வெளிதிற் பணிகின்றேன். 37

இ - ள் : அன்புக்கு அன்பாகியும் அறத்துக்கு அறமாகியும் கடினத்துக்குக் கடினமாகியும் உருவமின்றி நின்ற உன்னை முன்பு சேரத்தக்க

ஞானமில்லாதவனாய் ஊமைத்தன்மை உள்ளவன்போலிருந்தேன். இப்போது எலும்புகள் நெக்குவிட்டுருகும்படி எளிதில் பணிகின்றேன் எ-று.

என்றே யரசன் களிபெருகி யேத்தெடுப்பக்
குன்றா விமயக் குலக்கொழுந்தின் கோமானும்
பின்றாத காட்சிப் பெரியோ யெழுகவெனத்
தன்றாளில் வீழ்ந்தானைத் தன்றிருக்கை யாலெடுத்தான். 38

இ-ள்: பத்திராயு மன்னன் இவ்வாறுகூறி ஆனந்தமிக்கவனாய்த் தோத்திரஞ்செய்ய குன்றுதலில்லாத மலையரையன் புதல்வியாகிய உமையவள்கணவர் மாறாத அன்பு முதிர்ந்தவனே! யெழுந்திருவென்று தன் திருவடியில் பணிந்தவனைத் தன்கைகளால் எடுத்தருளினார் என்றவாறு.

எந்நிலையுந் தானா மிறைவ னெடுத்துனது
மன்னுநிலை தேர்வான் மறையவனாய் வந்ததுநாம்
பொன்னவிர்மா மேனிப் பொருப்பரையன் றன்மகள்காண்
தன்னிகரில் பார்ப்பனியாய்ச் சார்ந்த தளிரியலே. 39

இ-ள்: எப்பொருளுந்தானாகிய இறைவன் எடுத்தருளி அன்பனே! உனது பத்திநிலையை எல்லோரும் அறியத்தக்கதாக நாமே பிராமணனாக வந்தோம். தனக்கு நிகரில்லாத பிராமணப்பெண்ணாக வந்தது பொன்மயமான மேனியையுடைய மலையரசன் மகளாகிய பார்வதிதேவியாம் எ-று.

வந்து மறஞ்செய்த மறப்புலியு மாயைகாண்
சிந்தை கவலா தொழிநீயுன் தேவியுமா
யிந்த வுமையுடனே யெம்மையும்பூ சித்ததனாற்
புந்தி மகிழ்ந்தேம் பொருந்துவரங் கேளென்றான். 40

இ-ள்: இங்கேவந்து பிராமணப்பெண்ணை அடித்துத் தூக்கிக் கொண்டுபோன வீரமுள்ள புலியோவென்றால் மாயையாகும். நீயுன் மனதிற் கவலைப்படவேண்டுவதில்லை. நீயும் உன் மனைவியும் எம்மையும் உமையவளையும் பூசித்ததனால் உளத்தில் மகிழ்ந்தேன். உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் என்றார் என்றவாறு.

வேந்தர் பிரானு மதுகேட்டு மெய்பனிப்ப
வேந்து முலைமென்றோ ளிமயத்திற் றேவியொடும்
போந்த பரிசெளிதோ வேறோர் பொருளுமுண்டோ
நீந்து துயர்க்கடலை நீந்தினேற் கென்றுரைத்தான். 41

இ-ள்: பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கைக்கேட்ட பத்திராயு உடல் கம்பிதங்கொண்டு உயர்ந்த தனங்களும் மென்மையான தோள்களுமுடைய பார்வதிதேவியாருடன் சுவாமிகள் எழுந்தருளியது எளிதானதோ!

துயரக்கடலை நீந்திய அடியேற்குக் கேட்கவேண்டிய வரமும் வேறேயிருக்கிறதோ என்றவாறு.

நீதி வரம்பிகந்து நின்றேனு மென்மனையுந்
தாதையுமென் யாயுந் தமியேம் படருழந்த
ஏதமறக் காத்த விளங்கோவு மைந்தனுநின்
பாதமலர் சேரப் பணிப்பா யெனலோடும். 42

இ - ள் : நீதிவரம்பைக் கடந்துநின்ற அடியேனும் என் மனைவியும் அடியேன் தாயும் தகப்பனும் எங்களைக் காத்த வணிகேசனும் அவன் மகனும் தேவரீருடைய திருவடிமலரைச் சேரும்படி அருள் செய்யவேண்டுமென்ற அளவில் என்றவாறு.

காவலவன் றேவியுமெங் காரணனே யெற்பயந்த
மாவலவன் வண்புகழான் மன்னுசந்தி ராங்கதனு
மேவலருங் கண்ணு ளிலங்கிழைசீ மந்தனியாம்
பூவையுநின் பாதம் புகுதப் பணியென்றாள். 43

இ - ள் : அந்த அரசன் தேவியானவள் சுவாமியை நோக்கி எங்கள் ஆண்டவனே! அடியாளைப் பெற்ற குதிரைச் சேவகத்தில் வல்லவனும் புகழுள்ளவனுமான சந்திராங்கதனும் பாணங்களையொத்த பார்வையையுடைய கண்ணுள்ளான சீமந்தனியும் தேவரீர் திருவடிகளை அடையும்படி அருள் செய்யவேண்டும் என்றவாறு.

இயாவையுந் தானா னிறையோன் றனதுதிருத்
தேவியொடு மாங்கவர்கள் செப்பும்வர மீந்தகன்றான்
மாவியலுந் தேர்தூண்டி மானவேன் மன்னவனுங்
காவிநெடுங் கண்ணியொடுங் காமர் பதிபுகுந்தான். 44

இ - ள் : எல்லாப் பொருளும் தாமாயிருக்கும் கயிலாயபதியானவர் அவர்கள் சொல்லியவரம் அருளிச்செய்து பார்வதிதேவியாருடன் மறைந்தருளினார். பத்திராயு நீலோற்பலமலர் போன்ற கண்களையுடைய தன் மனைவியுடன் தேரிலேறிக்கொண்டு தன் அழகிய நகரிற் சேர்ந்தான் எ-று.

வையம் பொதுநீங்க மன்னர் திறையளப்பச்
செய்ய தனியாணை செல்லவொரு கோலோச்சிப்
பொய்யில் பதினா யிரம்பருவம் பூதலங்காத்
தெய்யும் வரிசிலையா னேந்தற்கரசளித்தான். 45

இ - ள் : தன்பதியடைந்த அவ்வரசன் இவ்வுலகம் பொதுவின்றி தன் ஒருவனுடையதே ஆகவும் வேற்றுநாட்டரசர்கள் திறைகொண்டு

வந்து அளக்கவும் நன்மையுள்ள தன் ஆணைச்சக்கரம் நிகரின்றி நடக்கும் செங்கோல் செலுத்திச் சரியாகப் பதினாயிரம் ஆண்டு பூமியைக் காத்து அரசுசெய்து தன் மகனுக்கு அரசாட்சியைக் கொடுத்துவிட்டு எ - று.

வேயனைய மென்றோள் விளங்கிழையி னோடெதிர்ந்த
பாயும் விடையோன் வரமளித்த பான்மையினான்
மாயனு நான்முகனுந் தேரா மறைமுடியின்
சேயபதந் தேவியொடு தேர்வேந்தன் சேர்ந்தானே. 46

இ - ள் : பாயாநின்ற இடபவாகனமுடைய சாம்பசிவமூர்த்தியானவர் முன்னம் பசிய மூங்கிலையொத்த தோள்களையுடைய பார்வதிதேவியாருடன் எழுந்தருளிவந்து வரம் அருளிச்செய்த தன்மையினால் பத்திராயுவென்னும் அரசன் தன்மனையாளுடன் திருமாலும் பிரமதேவனுங்காணாத வேதாந்தப் பொருளாகிய முத்தியை அடைந்தான் எ-று.

மன்னர் பரவ வருஞ்சந்தி ராங்கதனுந்
தன்னிகரி றேவியொடுஞ் சார்ந்தான் சிவலோக
மென்னமுனி சூத னியம்பவது கேளாமு
னன்னெறிசேர் மாமுனிவர் நாதனிசை பாடினார். 47

இ - ள் : அரசர்களெல்லோரும் புகழும்படி அரசாட்சி செலுத்திய சந்திராங்கத மன்னன் தன்மனைவியுடன் சிவலோகமடைந்தானென்று சூதமுனிவர்கூற நல்லொழுக்கமுள்ள நைமிசாரணிய முனிவர்கள் அந்த வரலாறு கேட்டவுடன் பரமசிவன் அருளின் பெருமையைப் புகழ்ந்து பாடினார்கள் என்றவாறு.

பத்திராயு முத்திபெற்ற அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 839

பதினைந்தாவது

விபூதிமகிமை உரைத்த

அத்தியாயம்

மற்று மோர்கதை விளம்பென வருந்தவர் வழங்கச்
செற்ற மில்குண வாமதே வன்புரி செயலுங்
கற்றை யஞ்சடைக் கடவுள்வெண் ணீற்றின்மாக் கதையுஞ்
சொற்ற தன்மைநூற் சூதமா முனிவரன் சொன்னான். 1

இ - ள்: இன்னமும் சிவன் வரலாறு கூறவேண்டுமென்று நைமிசாரணிய முனிவர்கள் கேட்க, நற்குணங்களையுடைய வாமதேவன் என்னும் ஒருமுனிவன் செய்தசெய்கையும் செஞ்சடையையுடைய கயிலாயபதியின் பரிசுத்தமான நிறமுள்ளதாய்ப் பெருமைதங்கிய விபூதி மான்மியமும் சொல்லுகின்ற தன்மையுடைய வேதமுதலான சாத்திரங்களுணர்ந்த சூத முனிவர் கூறுகின்றார் என்றவாறு.

கொலை பெருக்கிய கொடுந்தொழில் வாழ்க்கைய ரேனும்
தலைமை பெற்றவிக் கதையினைக் கேட்டதன் மையினோர்
நிலைமை பற்றிய பவத்தொடு மும்மல நீங்கி
அலைவறப் பர சிவபத முத்தியே யடைவர். 2

இ - ள்: எப்போதும் உயிர்க்கொலை செய்கின்ற கொடிய தொழிலையுடைய பாதகரேயானாலும் முதன்மையாகிய இந்தச் சரிதத்தைக்கேட்கும் தன்மையர்கள் தொடர்ந்து வருகின்ற பிறவியும் மும்மலமும் நீங்கி அலைவற்றிருக்கும்படி சிவபதமாகிய முத்தியை அடைவார்கள் எ - று.

காம தேவனை முருக்கிய கடவுளைக் கடுக்கைத்
தாம தேவனை வழிபடு தகுதியன் றவத்தாற்
றூம தேவனும் புனிதநற் றுறவினர் துதிக்கும்
வாம தேவனென் றுளனொரு மாசிலாக் குணத்தோன். 3

இ - ள்: மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்தவரும் கொன்றைப் பூமாலை அணிந்தவருமாகிய பரமசிவனை வழிபாடுசெய்யும் அன்புடையவனும், தவத்தினால் அக்கினிதேவனும் முனிவர்களும் புகழும்படியாகிய தூய்மையான குணமுள்ளவனுமாகிய வாமதேவன் என்னும் ஒரு முனிவன் உளன் என்றவாறு.

கருத்து கேவலத் துற்றவன் புறத்துறை கருமத்
தருத்தி யில்லவ னீற்றிஞல் விளங்குமெய் யணியன்
விரித்த வேணிய சீரையன் விளங்குவெண் கபாலந்
தரித்த செங்கைய னையமேற் குனரெனச் சமையா. 4

இ - ள் : முத்தியடைவதில் கருத்தை வைத்திருப்பவன், உலகியல் பற்றிய செயல்களில் பற்றில்லாதவன், திருநீறே ஆபரணமாக அணிந்து கொண்டுவிளங்கும் திருமேனியையுடையவன், பரந்த உடையினை உடையவன், அரையில் மரவுரி அணிந்திருப்பவன், விளங்குகின்ற வெள்ளிய மண்டையோடு பற்றியகையையுடையவன் இவ்வண்ணம் இரந்து வாங்குகின்றவர்கள் போன்று வேடங்கொண்டு என்றவாறு.

புவனி மாந்தருக் கின்னருள் சுரந்திடும் பொறையால்
கவன மோடுல கெங்கணுந் திரிந்திடு கழலான்
சிவனை நேர்பவன் செய்தொழி லிகந்தவ னொருஞான்
றவனி யோர்புக ழன்றிலப் பெருவன மடைந்தான். 5

இ - ள் : இவ்வுலகத்தில் இருப்பவர்கட்கு இனிய அருள்பொழியும் அரிய குணத்திஞல் விரைவாக உலகமெங்கும் உலாவும் திருவடிகளை உடையவன், சிவனுக்கொப்பானவன், செய்யுந்தொழிலை நீங்கினவன் ஒரு நாள் இவ்வுலகத்தார் புகழும் அன்றில் காட்டை அடைந்தான் எ-று.

அரிய மாமுனி யடைதலு மயிலெயிற் றகல்வாய்
கரிய மாசுணக் கச்சின னுரககங் கணத்தான்
எரியு நீள்கடற் றிரையென நெளிபுரு வத்தான்
பெரிய மால்வரை முழையென விரிந்தபேழ் வாயான். 6

இ - ள் : அருமையாகிய தவமுள்ள வாமதேவமுனிவர் அந்தக் காட்டினை அடைந்த அளவில் வேலையொத்தப் பற்களும் அகன்ற வாயுமுள்ளவனும் கருநாகமாகிய அரைக்கச்சு அணிந்தவனும், பாம்பாகிய கங்கணத்தையுடையவனும், நீண்ட கடலின் அலைபோல் மேலேறிட்ட புருவமுடையவனும், பெரியமலையின் குகைபோலிருக்கும் ஆழ்ந்த வாயினையுடையவனும் என்றவாறு.

நெட்டை வெண்பிறை யிரண்டென நிணப்புலால் கமழுந்
தட்ட மென்றுமென் றரக்கிய வதரத்தன் றழலாய்
வட்ட மிட்டுழல் கண்ணினன் வடவையஞ் சிகைபோல்
விட்டெ ழுந்தசெங் குஞ்சியன் வெடிகுர னகையான். 7

இ - ள் : நீண்ட வெண்மையாகிய இரண்டு பிறையை வைத்திருப்பதுபோன்று நிணங்கள் நாறிக்கொண்டிருக்கும் பற்களால் மென்று

மென்று அரக்கிக்கொண்டிருக்கும் உதட்டினையுடையவனும், அக்கினிமயமாய் வட்டமிட்டுச் சுழன்றுகொண்டிருக்கும் கண்களையுடையவனும், வடவாமுகாக்கினியின் சிகைபோலக் கொழுந்துவிட்டு மேலெழுந்த செம்மயிரினை உடையவனும், இடிபோல ஒலிக்கும் குரலோசையுடன் நகைசெய்கின்றவனுமாய் என்றவாறு.

அஞ்ச னக்கிரி தாள்கொடு நடந்தென வடைந்து
வஞ்ச கத்துவல் லரக்கன்மா முனிவனை வதைப்பான்
நெஞ்சு ருத்துநீ போகலை நிற்றியென் றுரையா
வெஞ்சி னத்தொடு தழீஇயதன் கரங்களால் விசித்தான். 8

இ - ள் : வஞ்சகத்தையுடைய வலிய ஒரு அரக்கன் நீலமலையானது கால் பெற்றுக்கொண்டு நடந்துவருவதுபோல வந்து பெருமைபொருந்திய வாமதேவமுனிவனைக் கொல்ல மனதிற் கோபங்கொண்டு அம்முனிவனைப் பார்த்து, நீ போகாதே நில்லு நில்லு என்று சொல்லிக் கொடியதான கோபத்துடன் பிடித்துக்கொண்ட தன் கைகளால் இறுக்கினான் எ - று.

நீள்ப னைக்கையாற் றழுவின னிறுக்கவந் நிமலன்
றோள்க ளிற்றிரு நீறுமெய் படுதலாற் றொடலான்
வாள ரக்கன்வல் லுருவமும் பாவமு மாய
வேளெ னத்திக ழுருவொடு நின்றனன் விளங்க. 9

இ - ள் : பனைமரம்போலிராநின்ற நீண்ட கைகளால் தழுவியிறுக்கவும் தூயவனாகிய அம்முனிவனுடைய தோள்களில் பூசியிருக்கும் திருநீறானது தன் உடம்பிற் பட்டதனாலும், அம்முனிவன் திருமேனியைத் தீண்டியதனாலும் கொலைசெய்யும் அந்த அசுரனுடைய கோர உருவமும் பாவமும் தொலையவே, மன்மதன்போல ஒளிவிடாநின்ற அழகுள்ள உடலுடன் விளங்கும்படி நின்றான் என்றவாறு.

எரிசிகைத் தழற் கடவுளை யடைந்தவை யாவும்
விரியு நல்லழ லுருவமாய் விளங்குமா றென்னக்
கரிய வல்லுரு வொழியவல் லரக்கனக் கணத்தி
னுருவப் பைம்பொனி னொளியவிர் மேனிபெற் றுயர்ந்தான். 10

இ - ள் : எரிகின்ற சிகையையுடைய அக்கினிதேவனை அடைந்த பொருள்கள் எல்லாம் பரந்த நல்ல அக்கினிமயமாய் விளங்குவதுபோலக் கருமைநிறமுள்ள வலிய உருவம் ஒழிந்த மாத்திரத்தில் அப்பொழுதே அவ்வரக்கன் மாற்றுயர்ந்த பொன்போல விளங்கும் மேனிபெற்று உயர்ந்தான் என்றவாறு.

தன்னு ருக்கரந் தொழிந்திடத் தாகமும் பசியும்
துன்னு தீக்குணந் தொலைந்தது பாவங்கள் தொலைய
மன்னு முற்பவத் தியற்றிய தோன்றலு மனத்தான்
முன்னி மாதவ கேட்டியென் றிறைஞ்சினன் மொழிந்தான். 11

இ-ள்: தன்னுருவம் மறைந்து நீங்கவே, அந்த அசுரனுக்குத் தாகமும் பசியும் மாறுமலிருந்த தீயகுணமும் தொலைந்தன. இப்போது பாவங்கள் தொலையும்படி முன்பிறவியில் சிறிது புண்ணியம் செய்த அந்த அசுரனுயிருந்தவன் மனதினுல் தன் உண்மை நிலையை அறிந்து வாமதேவ முனிவனை வணங்கி, மகாதபசியாகிய முனிவரே! கேளுமென்று கூறுகிருன் என்றவாறு.

வெப்பி னுலுறு பசியினுன் வனத்திடை மெலிந்தே
னெப்பி லாத்தவ முனிவநின் னூறுபெற் றதனு
லப்பு லாலுட லரும்பசி கொலைத்தொழி லகலச்
செப்ப லாயதன் னுயதோர் திருவுரு வமைந்தேன். 12

இ-ள்: வெப்பத்துடன் எப்போதும் மாருமலிருக்கும் பசியினுல் இக்காட்டினில் வருந்தினேன். ஒப்பில்லாத தவமுனிவரே! உம்முடைய பரிசத்தை அடியேன் பெற்றதினுல் அந்த அசுரவடிவமும் அடக்கக் கூடாத பசியும் கொலைத்தொழிலும் நீங்கிச் சொல்லக்கூடாததாகிய நல்ல உருவத்தை அடைந்தேன் என்றவாறு.

உற்று நின்றிருக் கண்களா லொருகண நோக்கப்
பெற்ற நாயடி யேனுழல் பிறவிநோ யகற்றப்
பற்ற றுங்குணப் பரமன்வாழ் பரகதி யடைய
முற்று மென்னைநீ புரப்பது கடனென மொழிந்தான். 13

இ-ள்: ஒருகணப்போது உம்முடைய கண்களால் என்னைப் பார்க்கும்படி பேறுபெற்ற நாயடியேன் இயல்பாகவே பற்றற்ற குணத்தை யுடைய பரமசிவன் வாழ்கின்ற பதியைப் பெறவும், இன்னமும் இவ்வுலகத்தில் உழலுகின்ற பிறவிப்பிணி நீங்கவும் என்னைக் காப்பது தேவரீர் கடமையேயாமென்று கூறினுன் என்றவாறு.

கேட்ட மாமுனி யுவகையுங் கருணையுங் கெழுமிக்
காட்ட கந்தொறுந் திரிதரு கடுந்தொழி லரக்க
நாட்டு நீயெவ னிங்குவந் தமையெது நவையா
லீட்டு தீயுரு வெடுக்கவென் னியற்றினை யென்ருன். 14

இ-ள்: நல்லுருவம் பெற்றவன் இவ்வாறு கூறியதைக் கேட்ட வாமமுனிவர் மகிழ்வும் கருணையும் பொருந்தி அவனைப் பார்த்துக் காட்டில்

எங்கும் அலைகின்ற கொடுமையான செய்கையையுடைய அரக்கனே! இவ்வண்ணம் பேசுகின்ற நீ யாவன், இவ்விடத்தில் வந்த காரணமென்ன, பாவத்தினால் வரக்கூடிய அசுரஉருவம் எடுக்கும்படி என்னபிழை செய்தனை என வினவினர் என்றவாறு.

அந்த வாசகங் கேட்டலு மகமகிழ்ந் தரக்க
னெந்தை நின்னருட் பேற்றினு லெழுமையு முணர்ந்தேன்
வந்த வாறெலா மோதுகேன் கேளென வணங்கி
முந்தை யுற்றதும் புகுந்ததும் சோர்வற மொழிந்தான். 15

இ - ள் : அசுரனனவன் அந்த உரையைக் கேட்டவுடன் மனம் மகிழ்ந்து வணங்கி, என்னையனே! உன்னுடைய கருணையைப் பெற்றதினல் எழுபிறப்பும் அறிந்தேன். நான் வந்த வரலாறுகளை எல்லாம் கூறுகிறேன் கேளென்று முன்னே தனக்கு நேர்ந்ததையும், காட்டில் வந்ததையும் ஒழிவில்லாமல் கூறினன் என்றவாறு.

வேறு

ஐயனே கேட்டி யிந்தப் பிறவிக்கை யைந்தா ந் தோற்றம்
வையகம் புகழ வாழ்துச் சயனென்னும் மன்ன னென்ன
வெய்யபா தகங்கள் செய்யு மிலேச்சர்க்கு வேந்த னுகிச்
செய்தொழி னன்கெண் ணுது சிறுதொழி லியற்றி நின்றேன். 16

இ - ள் : ஐயாவே! கேள்: இந்தப் பிறவிக்குமுன் இருபத்தைந்தாம் பிறவியில் இவ்வுலகம் புகழும்படி வாழ்கின்ற துச்சயனென்னும் அரசனய்க் கொடுமையான பாவங்கள் செய்யும் மிலேச்சர்களுக்கு இறைவனுக நல்ல தொழிலைச் செய்ய எண்ணுமல் இழிதொழிலைச் செய்துகொண்டிருந்தேன் என்றவாறு.

வாழுநா ளுலகுக் கெல்லாம் வருந்திடக் கொடுங்கோல் செய்தேன்
வீழிவாய் மயிலன் னுர்கள் வேண்டுநர் தமைவ ருத்துஞ்
சூழிமா லியானை யென்ன வொருபகற் றேய்ந்து காத்துப்
பாழியஞ் சிறையி லெண்ணில் பாவையர்க் கலக்கண் செய்தேன். 17

இ - ள் : அவ்வாறு வாழும்நாளில் உலகுக்கெல்லாம் வருத்தம் உண்டாகும்படிக் கொடுங்கோல் செலுத்தினேன். வீழிக்கனி போன்ற வாயும் மயில் போன்ற சாயலுமுடைய பெண்களில் எனக்கு விருப்பமானவர்களையெல்லாம் மணம் செய்துகொண்டும் வருத்துகின்ற யானைபோல ஒருநாள் அவர்களைப் புணர்ந்து அதன் பின்பு பலமான சிறையினிடத்து காவற்படுத்தி அனேக பெண்கட்குத் துன்பத்தைச் செய்தேன் எ - று.

பின்னரோர் போழ்துந் தோயேன் பீடுசா ரெழுகு லத்திற்
கன்னிமா ரரசர் மாதர் வணிகர்தங் கற்பின் மிக்கோர்
தொன்னெறி வேளான் செல்வத் தோகைய ராதியாக
அன்னிய வருணத் துள்ள மகளிர்க ளனந்தங் கோடி. 18

இ - ள் : மணம்செய்துகொண்ட நாளில் கூடுவதேயன்றி மறுபடி ஒருநாளாவது அப்பெண்களைக் கூடேன். பெருமைமிக்க பிராமணகுலப் பெண்கள், அரசகுலப் பெண்கள், வைசியகுலப் பெண்கள், பழமையான முறைமையையுடைய வேளாளகுலப் பெண்கள் முதலாக அன்னியகுலப் பெண்கள் பலராவார் என்றவாறு.

கம்மிய மகளிர் சூன மடந்தையர் கழிகா ரோடக்
கொம்மைவெம் முலையார் குன்றக் கொடிச்சியர் குனுங்கர் மாதர்
தம்மியற் குலால மாதர் மஞ்சிகத் தைய னல்லார்
சும்மையம் பரத மாதர் சுடுதொழிற் புலைய மாதர். 19

இ - ள் : கம்மாளகுலப் பெண்களும், ஊன்விற்கும் பெண்களும், காரோடர் குலத்திற் பிறந்த இளமையுள்ளதாய் விருப்பத்தைத் தரும் தனமுள்ளபெண்களும், மலையில்வாழும் குறப்பெண்களும், தோல்வினைஞர் பெண்களும், தம்மியற்கைமாருத குயவர்குலப் பெண்களும், வண்ணாரகுலப் பெண்களும், நுளையர்குலப் பெண்களும், நீசகுலப் பெண்களும் எ - று.

பங்கயன் படைத்த விந்த வருணத்தின் பகுதி தம்மை
இங்கியான் கணித்துக் கூறற் கெளியவன் றவற்றி லுள்ள
மங்கையர் குலங்க டோறு மனந்தமாய் வரைந்த தன்றித்
தங்கிய காதல் தீரப் பெற்றிலேன் காமந் தன்னால். 20

இ - ள் : பிரமதேவன் படைத்த இந்தப் பகுப்புள்ள சாதிகளை நான் அளவிட்டுச் சொல்ல எளிதல்ல. அந்தந்தச் சாதிகள்தோறும் அனந்தம் பெண்களை மணம்செய்ததேயல்லது காமமிகுதியால் எனக்குண்டாகிய ஆசை நீங்கினேன் இல்லை என்றவாறு.

பிறிதொரு செயலுஞ் செய்யேன் காமநோய் பிணித்த நெஞ்சி
னறிவொரு சிறிதும் வையே னமைச்சர்த மொழியுங் கொள்ளேன்
சிறுதொழின் மருவி நின்றே னரசியல் சிறிதுந் தேரே
னெறில்பரிப் புதல்வர் தாமு மிகழ்ந்திட நோயின் மாய்ந்தேன். 21

இ - ள் : வேறொரு தொழிலுஞ் செய்யாது காமமாகிய நோய்மிக்க நெஞ்சில் சிறிதேனும் அறிவை வைப்பதில்லை. அமைச்சர்கள் உரையையும் ஏற்றுக்கொள்ளேன். ஈனத்தொழிலைப் பொருந்தியிருந்தேன். அரசாட்சியின் தன்மை இத்தன்மையானதென்று சிறிதும் கேட்டறியேன். வேகமாகச்

செல்லும் வெற்றிபொருந்திய குதிரையேறிச் செலுத்தும் புத்திரர்களும் இகழத்தக்க நோய்கொண்டு இருந்தேன் என்றவாறு.

இறந்தபின் கால தூதர் பாசத்தா லார்த்து வீக்கி
நிறைந்தொளிர் பரப்பி ரும்புத் தூண்டிலென் குறியி னேரே
யறைந்தனர் பற்றி யீர்த்தங் கந்தகன் றிருமுன் காட்டச்
சிறந்தொளி பரந்த பூணுன் சிலதரை நோக்கிச் சொன்னுன். 22

இ - ள்: இவ்வாருக இறந்தபின்பு காலதூதர்கள் பாசத்தினுல் இறுக்கிக் கட்டி ஒளிநிறைந்து பரந்த இரும்பினுலாகிய தூண்டின்முள்ளை என்னுடைய கோசத்தில் நோக அடித்து அதைப்பிடித்து இழுத்துக் கொண்டுபோய் யமன் திருமுன்னே காட்டச் சிறந்த ஒளிமிக்க ஆபரணம் அணிந்த யமன் ஏவலரைப் பார்த்துக் கூறினன் என்றவாறு.

ஆவியந் துகின்மின் ஞரை யணைகலான் சிறையிற் செய்த
பாவியை யென்றுந் தீராப் படிற்றெழுக் கத்தி ஞனைக்
கோவிய லழியத் தாது குழம்புசேர் கும்பி தன்னுள்
மேவநீர் விடுதி ரென்ன வெடிபட விளம்பி ஞனே. 23

இ - ள்: பாலின் புகைபோல வெண்மையும் மிருதுவும் உள்ள அழகிய ஆடையணிந்த தன் மனைவியைப் புணராமல் சிறையில் வைத்த பாவியும், ஒருக்காலும் தீராத பொய்யொழுக்கம் உள்ளவனுமாகிய இவனைப் பெருமைப்பாடு கெடும்படி இந்திரியக் குழம்புநிறைந்த நரகத்தில் பொருந்த நீங்கள் விடுங்களென்று மிக்க குரலுடன் கூறினன் என்றவாறு.

கடலிலும் பெரிய வாய நரகிடைக் கடிதி னுய்ப்ப
முடைகொளிந் திரியந் தன்னின் மூழ்கியு நீந்தி நீந்திக்
குடவயி றகல்வி லாவு நிறைதரக் குடித்து மிவ்வா
றடைவுறு வருட மையா ருயிர மலக்க ணுற்றேன். 24

இ - ள்: கடலைக்காட்டிலும் பெரிதாகிய நரகத்தில் விரைவாகக் கொண்டுபோய்ச் சேர்க்க நாறுகின்ற இந்திரியத்தில் முழுகியும் நீந்தியும் குடம்போல வயிறும், பரந்த விலாப்புறமும் நிறையும்படி குடித்தும் இவ்வாறு அடைகின்ற முப்பதினுயிரமாண்டு துன்புற்றேன் எ - று.

அழிமுடை நரக நீங்கி யாண்குறி கோடி தூங்கும்
பழியுறு முடலங் கொண்ட பசாசுரு வெடுத்துக் கானிற்
கழிவுருத் தெய்வ யாண்டு நூறவண் கழித்து மாய்ந்து
விழியழல் பொழியுஞ் சீற்ற வெங்கொலை யுழுவை யானேன். 25

இ - ள்: கெட்ட நாற்றத்தையுடைய நரகத்தைவிட்டு நீங்கி ஒரு கோடி ஆண்குறிபொருந்திய பழிபாவந்தங்கிய பேயுருவங்கொண்டு காட்டில்

நீங்காமல் நூறு தேவயாண்டு அவ்விடத்திலிருந்து பின்பு இறந்து கண்களில் தீப்பொறியைச் சொரிகின்ற கொலைத் தொழிலையுடைய புலியாகப் பிறந்தேன் என்றவாறு.

படுமலை முழையின் வைகும் பாம்பதாய்த் தோன்றி னேன்பின்
சடைமயிர்ச் செந்நா யாகத் தரணியி லுதித்து மாய்ந்தேன்
கடைமல மருந்தும் பன்றி யாயினேன் காம ரூபி
உடையதீ யுருவைப் பெற்றேன் ஞமலியா யுதித்து நின்றேன். 26

இ - ள் : பின்பு மலைக்குகையிலிருக்கும் பாம்பாகப் பிறந்தேன். பின் இவ்வுலகத்தில் சடையாகிய மயிரையுடைய செந்நாயாகப் பிறந்திருந்து மாண்டேன். அதன்பின்பு மலத்தையுண்ணும் கடைப்பட்ட பன்றியாகப் பிறந்தேன். பச்சோந்தியினுடைய உருவத்தைப் பெற்றேன். நாயாய்ப் பிறந்திருந்தேன் என்றவாறு.

வீழ்முக நரியாய் வந்தேன் விளிந்துபின் முயலாய் வந்தேன்
தாழ்வுறு மானு யானேன் றத்துவா னரமு மானேன்
காழ்சிறைக் கங்க மானேன் கடுநடை நகுல மானேன்
ஊழ்வினை துரப்பக் காகத் துருவெடுத் துழன்று வீழ்ந்தேன். 27

இ - ள் : நீண்டமுகமுள்ள நரியாய்ப்பிறந்தேன். இறந்தபின்பு முயலாய்ப்பிறந்தேன். பின்பு தாழ்ச்சியுற்ற மானாய்ப்பிறந்தேன். அதன் பின்பு தத்துகின்ற குரங்காயும் பிறந்தேன். பின்பு உறுதியான சிறகுள்ள பருந்தாய்ப்பிறந்தேன். கடுநடையுள்ள கீரியுமானேன். ஊழ்வினை துரப்பக் காக்கையாய்ப் பிறந்துழன்று இறந்தேன் என்றவாறு.

வல்லுகி ரெண்கு மானேன் வருபுவ னத்து வாழும்
பல்பொறிக் கோழி யானேன் பாதகக் கரமு மானேன்
இல்லுறை பூசை யானே னெறி குரற் றவளை யானேன்
கல்லிநீ ருண்ணுங் கூவக் கயத்துறை கமட மானேன். 28

இ - ள் : வலிய நகத்தையுடைய கரடியாயும் பிறந்தேன். இந்தப் பூமியில்வாழும்பல புள்ளிகளையுடைய கோழியானேன். பாவமுள்ளகழுதையுமானேன். வீடுகளில் வாழும் பூனையானேன். கத்துகிற குரலையுடைய தவளையானேன். கல்லி நீருண்கின்ற குளத்தில் ஆமையாய்ப் பிறந்தேன் எ - று.

வரியுடை மீனு மானேன் மாய்ந்துமூ டிகமு மானேன்
பரியபைங் கழல வுண்கட் படர்சிறைக் கூகை யானேன்
சொரிமதத் தருவி தூங்குந் துளைக்கைமா லியானை யானேன்
இருபதோ டைந்தாந் தோற்ற மிவ்வனத் தரக்க னானேன். 29

இ - ள் : வரிபொருந்திய உடலையுடைய மீனானேன். இறந்து பெருச்சாளியுமானேன். பருத்தகாலும் தீப்பொறிகக்கும் கண்களும் பரந்த சிறகுமுள்ள கோட்டானானேன். அருவிபோல மதநீர் சொரியுந் துதிக்கையுள்ள யானையுமானேன். இருபத்தைந்தாம் பிறப்பில் இக்காட்டில் அசுரனானேன் என்றவாறு.

பரந்தவெங் கானந் தன்னிற் பறவைபல் விலங்கு மக்கள்
நிரந்தரந் தொடர்ந்து பற்றிக் கொலைசெய்து நிணங்க டுய்த்தும்
அரந்தைவெம் பசிதீ ராம லயர்வுற்றே னமுத வாரி
சொரிந்திடும் புயலை யொப்பாய் நினைக்கண்டேன் துயரங் காணேன். 30

இ - ள் : விசாலமாகிய இக்காட்டில் பல பறவை, விலங்கு, மனிதர்களைத் தேடிப்பிடித்துக் கொன்று இறைச்சிகளைத்தின்றும் வருத்தத்தைத் தரும் பசியடங்காமல் துன்பங் கொண்டிருந்தேன். இவ்வாறிருக்கையில் அமுதமழைபொழியும் மேகம்போலக் கருணைபொழியும் உம்மைக்கண்டேன். கண்டவுடன் முன்னிருந்தத் துயரத்தைக் காணேன் என்றவாறு.

படியினா லெடுத்த காயம் பற்பல வவற்றி னெல்லாம்
கொடியவெம் பாவ மன்றித் தருமத்தைக் குறிக்கொண் டில்லேன்
அடியனே னின்னைக் கண்டின் றமரனா னதற்கென் செய்தே
னடியென வரக்கன் சொல்லத் தவமுனி நுவல்வ தானான். 31

இ - ள் : இவ்வுலகில் நானெடுத்த பிறவிபலவாம். அப்பிறவிகள் தோறும் கொடிய பாவத்தைச் செய்ததல்லது புண்ணியமென்பதை நினைத்ததுமில்லை. அடியேன் இப்போது தேவரீரைக்கண்டு தேவனானேன். இப்படியாவதற்கு என்ன புண்ணியம் செய்துள்ளேன் சொல்லும் ஐயா என்று அரசன் கேட்கத் தவமுனி கூறுகிறார் என்றவாறு.

முட்டெறு கானத் தென்னை முடுகிநின் கைக ளாரக்
கட்டிய காலை யென்மேற் கவினிய திருவெண் ணீறு
பட்டது நின்மே லந்தப் பான்மையாற் பாவ நீங்கி
விட்டதவ் வளவோ முன்னைப் பிறவியும் விளங்க மேலோய். 32

இ - ள் : முள்கள்தைக்கும் இந்தக்காட்டில் ஓடிவந்து என்னை உன் கைகளாற் கட்டிப்பிடித்தபோது என் உடலில் அழகுள்ளதாயிருந்த திருநீறானது உன்மேற்பட்டது. அதனால் உன்பாவம் நீங்கிவிட்டது. அவ்வளவுதான் முன்பிறப்புகள் தெரியும்படி மேலவனே என்றவாறு.

நோயிலா தியன்ற யாக்கைத் தேவனாய் நொய்தி னின்றாய்
வேயுலாந் தோளி பங்கன் விபூதியின் பெருமை முற்றுந்
தூயநான் முகனு மாலுந் துணிகலாத் தகைமைத் தென்றால்
காயமா றுடிச் செல்லு மனிதரே கருதற் பாலார். 33

இ - ள் : எளிதாகப் பிணியென்ப தில்லாமல் பொருந்திய சிறந்த உடலையுடைய தேவனாய் நின்றனை, மூங்கிலையொத்த தோள்களையுடைய உமையொருகூறனாகிய இறைவனுடைய திருநீற்றின் பெருமை முழுவதும் தூயோனான பிரமதேவனும் திருமாலும் நிச்சயித்து அறியக்கூடாத தன்மையை உடையதென்றால் வேறுவேறு உடலெடுத்துப் பிறந்து உழலுகிற மனிதர்களோ அறியக்கூடியவர்கள் என்றவாறு.

என்னினுந் திருநீற் றுண்மை யியம்புவன் சிறிது கேட்டி
தென்னவன் தமிழ்நாட் டங்கோர் தீத்தொழின் மடைவல் லாளன்
பன்னெடுங் காலம் பாரிற் பாவமும் பழியு மீட்டி
யந்நிலை நெறியு நீங்கி யந்தணர் திறனும் விட்டான். 34

இ - ள் : மனிதர்கட்கு அரிதென்றாலும் திருநீற்றின் பெருமையைச் சிறிது கூறுகிறேன் கேள். பாண்டியனது தமிழ்நாட்டிடத்தில் கொடிய செய்கையையுடைய ஒரு பிராமணன் இவ்வுலகத்தில் பாவமும் பழியும் தேடி அதற்குச் சரியாக ஒழுக்கத்திலும் மாறுபட்டுப் பிராமணத்தன்மையும் விட்டான் என்றவாறு.

பொய்க்கவ றுடலானும் புன்றொழிற் களவி னானுங்
கைக்கொள்வான் பொருள்க ளெல்லாங் கணிகையர் திறத்தி லீந்து
மைக்கணார் வயத்த னாகிக் காமநோய் மலிய மேன்மேல்
இக்குவேள் கணைகள் பாய நிறையழிந் திடையு நாளில். 35

இ - ள் : பொய்கூறத்தக்க சூதாடலாலும், இழிவாகிய திருட்டாலும் தேடிய பொருள்களை எல்லாம் வேசையர்கட்குக் கொடுத்து மை அணிந்த கண்களையுடைய அவ்வேசையர் வசப்பட்டவனாகிக் காமநோய் வருத்துதலினாலும் காமசரம் பாய்தலினாலும் நிறையழிந்து இளைக்கும் நாளில் என்றவாறு.

ஒருபெருங் கங்குற் போழ்தி னூன்விழை புலைய னில்லின்
மருவிய மனைவி தன்னைக் கரவினின் மணக்குங் காலைத்
திருகுவெஞ் சினத்தி னீசன் செங்கைவா ளுறையி னீக்கி
வெருவரத் தோன்றி யார்த்து வீசினன் விளிந்து வீழ்ந்தான். 36

இ - ள் : ஒருநாள் நடுஇரவில் ஊனையே விரும்புகின்ற ஒரு நீசன் வீட்டிலிருக்கும் மனையாளைச் சோரத்தனமாகப் புணரும்போது அந்தநீசன் கண்டு மிகுந்த கோபமுள்ளவனாய்க் கைவாளை உறையினின்றுங் கழற்றி அக்கொடியன் பயப்படும்படி ஆரவாரித்து வீசினான். அவனிறந்தான் எ-று.

பட்டபின் ருளைப் பற்றிப் புலைமகன் படர்ந்த சேரிக்
கிட்டமுள் வேலிக் கப்பா லெறிந்திடும் பிணத்தின் மீதச்
சுட்டவெண் சாம்ப ரேய்காற் சுணங்கன்வெம் பசியா லேறித்
தட்டவாய் கொண்டு கவ்வித் தசைபறித் தருந்துங் காலை. 37

இ - ள்: அந்தச் சோரன் இறந்த பின்பு நீசனானவன் பிணத்தின் காலைப்பற்றிச் சேரிக்கு இட்டிருக்கிற முள்வேலிக்கு அப்பால் எறிந்து விட்டான். அந்தப் பிணத்தின்மேல் வேறொரு பிணத்தைச் சுட்ட வெண் சாம்பலிற் படிந்த காலையுடைய நாயானது ஏறித் தனக்குள்ள பசியினால் பற்களையுடைய வாயைக்கொண்டு கவ்வி மாமிசத்தைப் பிடுங்கித்தின்னும் போது என்றவாறு.

திண்டிறற் கால தூதர் தேர்ந்தவன் காலைப் பற்றிக்
கொண்டன ரேகித் தீவாய் கும்பியின் வீழ்த்து மாங்கண்
கண்டன ருமையாள் பங்கன் கணங்களைக் கணத்தி னெய்தித்
தண்டஞ்செய் கால தூதர் தங்களைத் தண்டஞ் செய்யா. 38

இ - ள்: மிக்க பலமுள்ள யமதூதர்கள்வந்து இறந்தவனைப் பற்றிக் கொண்டுபோய்த் தீ நரகில் தள்ளும்போது பரமசிவனுடைய கணங்கள் கண்டு இறந்தவனைத் தண்டிக்கிற காலதூதர்களைத் தண்டித்து எ-று.

கும்பியின் வீழ்வோன் றன்னைக் குருமணி விமானத் தேற்றி
உம்பரி னேகு வார்முன் கரியகோட் டெருமை யூர்ந்து
வெம்பிய மறலி யெய்தி விழுத்தக வொன்றில் லானை
யம்பிகை பாகன் றன்பால் விடுவதற் கடுத்த தென்னே. 39

இ - ள்: நரகில் விழுகின்றவனை நிறமுள்ள ரத்தினங்கள் பதித்த விமானத்தில் ஏற்றி விண்ணிடைச் செல்கின்றவர்கள் எதிரில் மனக் கொதிப்புள்ள யமன் கரிய கொம்பினையுடைய எருமைக்கடாவில் ஏறிக் கொண்டுவந்து மேலான தகுதி எவ்வளவு மில்லாதவனைப் பார்வதிபாகன் இடத்தில் விடுப்பதற் குண்டான நிமித்தமென்ன என்றவாறு.

சொல்லுதி ரெனலு மீசன் றூதுவர் சொல்வ ரின்னோன்
புல்லிய பிரேத வங்கம் பூதியிற் பொலித லாலே
வல்லியத் துரிவை யார்த்த மறைமுதல் மறையோன் றன்பாற்
செல்லுதிர் கொணர்தி ரென்ன விடைதர யாங்கள் சேர்ந்தோம். 40

இ - ள் : சொல்லுங்களென்ன சிவதூதர்கள் சொல்லுகிறார்கள். இவனுடைய பிரேத உடல் தீயிற்படிதலினாலே புலித்தோலுடை தரித்தருளிய பரமசிவன் நீங்கள் போய் அந்த உயிரை நம்மிடத்து இட்டுக்கொண்டு வாருங்கள் என்று கட்டளையிட்டதினால் நாங்கள் வந்தோம் என்றவாறு.

பொன்னவிர் சடையி னான்ற னேவலிற் புகுந்து நின்றே
மின்னவிர் பூணி னாய்நீ விலக்குதற் கெளிய மல்லே
மென்னவோர் மாற்றங் கூறி யெறிமணி விமானத் தோடு
மன்னவன் றன்னைக் கொண்டாங் கரனுல கடைந்தா ரன்றே. 41

இ - ள் : பொன்னிறமுள்ள சடை முடியையுடைய இறைவனது கட்டளையால் நாங்கள் வந்தோம். ஒளிவிளங்கும் ஆபரணம் அணிந்தவனே! நாங்கள் உன்னால் விலக்கத்தக்க எளியர்களல்லோம் என்று ஒரு சொல் கூறிவிட்டு ரத்தின விமானத்துடன் அவனைச் சிவலோகங்கொண்டுபோய்ச் சேர்த்தார்கள் என்றவாறு.

ஆதலி னிருத வண்ண லணிதிரு நீற்றின் றன்மை
யோதுதற் கெளிதோ பொல்லா வுருவெடுத் துலகிற் றீராப்
பேதுறு முணர்வின் பாலப் பிணியின ரேனுந் தொட்ட
போதினே புனிதராகிப் பொன்னுல கடைவ ரன்றே. 42

இ - ள் : ஆதலால் அசுர அண்ணலே! திருநீற்றின் பெருமை சொல்லுதற்கு எளிதானதல்ல. பொல்லாத உருவமெடுத்து உலகில் நீங்காத துன்பமடைகின்ற புத்தி பூர்வமான பாவிகளேயானாலும் திருநீற்றைத் தொட்டமாத்திரத்தில் புனிதர்களாய் பொன்னுலகடைவார்கள் என்றவாறு.

அந்த வெண் ணீற்றை யானு மரன்றிரு வடியார் போல
விந்தமெய் முழுதும் பால்போ லிலங்கிட வணிந்து நின்றேன்
மந்தரச் சிகரி போலு மணிப்புயத் தரக்க வென்று
சிந்தையி லளிய வாம தேவன்றான் செப்பி னானே. 43

இ - ள் : மந்தரமலையின் உச்சியை ஒத்திருக்கின்ற அழகிய புயமுள்ள அரக்கனே! அந்தத் திருநீற்றை நானும் சிவனடியார் அணிந்துகொண்டிருப்பது போல இந்த உடல் முழுவதும் பால்நிகராய் விளங்கும்படி அணிந்துகொண்டிருக்கின்றேன் என்று மனதில் கருணையுள்ள வாமதேவ முனி கூறினார் என்றவாறு.

ஐயனே போற்றி போற்றி அமலனே போற்றி போற்றி
துய்யநீ றளித்தென் பாவத் தொடர்பறித் திட்டாய் போற்றி
யுய்யுமா றடியே னின்னை யெதிர்தர வுய்த்த நன்மை
மையறு குணத்தா யுன்றன் திருவருள் வளத்தாற் சொல்வேன். 44

இ - ள்: ஐயனே போற்றி! நிர்மலனே போற்றி! போற்றி! தூயதாய திருநீறு கொடுத்து அடியேன் பாவத்தொடர்ச்சியை அறுத்தவனே போற்றி! அடியேன் கடைத்தேறும்படி தேவரீரைத் தரிசிக்கக் ட்டியகூ நன்மை குற்றமற்ற குணத்தை உடையவரே, உம்முடைய அருளின் பெருமையென்று கூறுவேன் என்றவாறு.

முடங்குளைத் தவிசி னேறி முந்தைமுற் பிறப்பி னுயே
னடுந்தொழின் மிலேச்சர் தேசத் தரசிய னடாத்துங் காலைத்
தொடங்கிய மறையோன் றன்பாற் றூயநீர்ப் பழன மொன்றைக்
குடங்கையிற் றெண்ணீ ரேந்திக் கோடியென் றுதகஞ் செய்தேன். 45

இ - ள்: நாயேன் முற்பிறவியில் சிங்காசனத்திலிருந்து மிலேச்ச நாட்டில் அரசாட்சி செய்யும்போது வேதமோதிய ஒரு பிராமணனிடத்தில் என்னுள்ளங்கையில் நீர் வார்த்துக்கொண்டு இந்த விளைபூமியை நீ தானம் வாங்கிக்கொள் என்று தத்தஞ்செய்து கொடுத்தேன் என்றவாறு.

பருமரத் துடவை யோடும் பருவங்கள் பலன்பொய் யாகத்
திருமலி கழனி யொன்றை யளித்தருள் செய்த நன்கா
லிருபதோ டைந்தாந் தோற்றத் திருந்தவ யோகி யைக்கண்
டருவினை தொலைப்பா யென்ன மறலியு மன்று சொன்னன். 46

இ - ள்: பருத்த மரங்களுள்ள சோலையுடன் காலந்தோறும் பலன் தப்பாமல் கொடுக்கும் வளமிக்க ஒரு விளைநிலத்தைத் தானஞ்செய்த நன்மையால் இருபத்தைந்தாம் பிறவியில் ஒரு சிவயோகியைத் தரிசித்துப் பாவம் நீங்குவாயென்று யமதர்மராசனும் அந்நாளில் கூறினன் எ - று.

அன்னதே விளைந்த நன்கா லடியனே னின்னைக் கண்டு
துன்னிய பாவ நீங்கித் தூயநல் லுருவ மெய்தி
நன்னிலை யுணர்வும் பெற்றே னவையிலா யின்னு மொன்று
பன்னுவ துண்டு கேட்டி யென்றடி பணிந்து சொன்னன். 47

இ - ள்: அத்தன்மையாகவே இப்போது விளைந்த நன்மையால் அடியேன் தேவரீரை வழிபட்டு என்னைப்பற்றிய பாவம் நீங்கிப் பரிசுத்த மான தேவ வடிவம் பெற்று நல்ல நிலைமையுள்ள உணர்ச்சியும் பெற்றேன்.

குற்றமில்லாதவரே! இன்னமொன்று கூறுவதுண்டு. அதையும் கேளும் என்று அவர் திருவடியைப் பணிந்து கூறுகிறுன் என்றவாறு.

வெள்ளைவெண் ணீறு தன்னை மேனியி லணியு மாறுந்
தொல்லைவெம் பிறவி நீக்கு மந்திரந் துதிக்கு மாறும்
பிள்ளைவெண் பிறையா னீறு பிடித்திடுங் காலந் தானும்
கொள்ளைவெவ் வினைக டீர்த்தாய் கூறென மேலோன் கூறும். 48

இ-ள்: வெண்மை நிறமுள்ள திருநீற்றை உடலில் அணிந்து கொள்ளுகிற முறைமையும் கொடியதாகிய பழைய பிறவியைக் கெடுக்கத் தக்க திருமந்திரஞ் செபிக்கிறமுறையும் இளம்பிறை அணிந்த பரமசிவன் திருநீறை உண்டாக்குங்காலமும் கொடுமையுள்ள என் வினை தீர்த்தவரே! சொல்லுமென்ன, முனிவர் சொல்லுகிருர் என்றவாறு.

விபூதி மகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 887

பதினாறாவது

திரிபுண்டரமுரைத்த அத்தியாயம்

அந்த ரத்தக டணாவிய சிகரத்து மகன்ற
கந்த ரத்தினும் விஞ்சையர் கடிமண மயரும்
சுந்த ரத்துணர் கற்பகப் பொங்கர்சூழ் சாரன்
மந்த ரக்கிரி யெனப்பெய ருடையமால் வரையின். 1

இ-ள்: ஆகாயமுகட்டையளாவிய சிகரத்திலும் விசாலமாகிய குகைகளிலும் வித்தியாதரர்கள் திருமணஞ்செய்துகொள்ளத்தக்க சுந்தரமான பூங்கொத்துக்களையுடைய கற்பகச்சோலை சூழ்ந்த சாரலுள்ள மந்தரகிரியெனப் பெயர்பெற்ற பெரியமலையில் என்றவாறு.

தேங்கு கங்கையுந் திங்களுந் திருமுடிக் கணியா
வோங்கல் போல்வரு முருத்திர ருலப்பில்பல் கோடி
தாங்கு மால்விடைப் பரிநின்று மிழிந்தடி தாழ்ந்து
வீங்கு தோளினர் மான்மழுக் கரத்தினர் மிடைய. 2

இ-ள்: நிறைந்த நீர்வடிவாகிய கங்கையையும் சந்திரனையும் அணிந்து மலைபோல் வருகின்ற பலகோடி உருத்திரர்கள் தாங்குகின்ற பெரிய இடபவாகனத்தினின்றும் இழிந்து பரமசிவனுடைய திருவடியில் வணங்கிப் பருத்த தோளினையுடையவர்களும் மானும் மழுவும் ஏந்திய கையை உடையவர்களுமாய் நெருங்கவும் என்றவாறு.

ஆழி யேமுத லைம்படை யங்கையி னேந்தி
வாழி நாரண ரெண்ணிலர் வழுத்துபு நிற்ப
ஊழி நாண்முத லுலகுயிர் யாவையும் படைக்கும்
பாழி யம்புய நான்முக ரளப்பிலர் பணிய. 3

இ-ள்: சக்கரம் முதலாகிய பஞ்சாயுதங்களை அழகிய கைகளில் தாங்கிக் கொண்டு அளவில்லாத திருமால்கள் துதி செய்து கொண்டு நிற்கவும் ஊழிக்காலமுதல் உலகத்துயிரையெல்லாம் படைக்கும் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் நான்கு முகங்களையுடைய அளவற்ற பிரமாக்கள் பணியவும் என்றவாறு.

பஞ்சாயுதம் :- சக்கரம், சங்கு, கோதண்டம், வாள், தண்டம்.

இந்தி ராதியர் வானவர் விஞ்சைய ரியக்கர்
சந்தி ராதித்தர் கின்னரர் வானவ ரரக்கர்
சிந்து ரானன வனமுலைத் தெரிவைய ரெழுவர்
விந்தை யீன்றருள் ஐங்கரன் வேலிளங் குமரன். 4

இ - ள் : தேவேந்திரன் முதலான தேவர்கள் வித்தியாதரர்கள் இயக்கர்கள் சந்திர சூரியர்கள் கின்னரர்கள் தானவர்கள் அரக்கர்கள் சிந்தூரப்பொட்டணிந்த முகத்தையும் அழகிய தனங்களையுமுடைய சப்த மாதர்கள் பார்வதிதேவியார் பெற்றருளிய விநாயகர் வேலாயுதமேந்திய சுப்பிரமணியக்கடவுள் என்றவாறு.

ஏழு மாதர்கள் : அபிராமி, மகேஸ்வரி, கவுமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி.

நாக மன்னவர் நாரத ராதியர் நவிலும்
போக மேவிய பொன்னுல கத்துமா முனிவர்
யாக நூனெறி வசிட்டனு மிருந்தவன் முதலாச்
சோக மோகமின் மறைமுனித் தலைவர்கள் சூழ. 5

இ - ள் : நாகராசர்கள் நாரதர் முதலாகக் கூறப்பட்ட போகம் பொருந்திய தேவலோகத்து முனிவர்கள் யாகங்கள் செய்யும் வேதசாத்திர முறைமை தெரிந்த வசிட்டர் முதலாகிய காமாதிகளை நீக்கிய பிராமண முனிசிரேட்டர்கள் சூழவும் என்றவாறு.

கருப்பு விற்றுணை யெனப்பொலி கரிய நீள் புருவ
வுருப்ப சித்திரு முதலிய வரம்பைய ரோடும்
பொருப்பி னிற்பிறந் திழிதரு புனித நீர்க் கங்கைத்
திருத்த மாதிய நதிக்குல வனிதையர் செறிய. 6

இ - ள் : இரண்டு கரும்பு வில்லை வளைத்து வைத்ததுபோலிருக்கும் கரியநிறமுள்ள நீண்ட புருவமுடைய உருப்பசி முதலாகிய ரம்பை முதலிய பெண்களும் இமயமலையில் உற்பத்தியாகி வருகிற கங்கைநதி முதலான நல்ல நதிக்குலமாதர்களும் சூழவும் என்றவாறு.

எண்டொ கைப்படும் வசுக்களு மருத்துவ ரெவரு
மண்டர் வர்க்கத்தில் பிதிர்க்களு மாடிநின் றேத்தக்
கொண்ட லொத்துநின் றிரைத்திடு வயிரவக் குழாமு
மண்டு வேள்விசெய் தக்கனு முறைமுறை வழுத்த. 7

இ - ள் : எட்டுவசுக்களும் மருத்துவர்களும் தேவர்களும் தேவ வருக்கத்தைச் சேர்ந்த பிதிரர்களும் ஆனந்தக்கூத்தாடிக்கொண்டு துதிக்கவும் மேகம்போல ஒலிக்கும் வயிரவக் கூட்டமும் யாகஞ் செய்த தக்கனும் முறைமுறையாக நின்று துதிக்கவும் என்றவாறு.

அனலன், அனிலன், ஆபச்சன், சைவன், சோமன், தாந்துருவன், பிரத்யூசன், பிரபாசன் இவர்களே எண்வகை வசுக்களாவார்.

தமர நூபுர நெட்டைவே தாளவா கனத்துக்
குமர னாகிய வீரன்வெம் படையொடுங் குறுக
வமரில் வந்தெதிர்த் தணிமுறிந் தவுணர்கெட் டோடச்
சமரில் வாரணப் பிடர்வரு சாத்தனுந் தழுவ. 8

இ - ள்: ஒலியுள்ள சிலம்பணிந்த நெடிய வேதாள வாகனத்தை யுடைய வீரபத்திரர் படையுடன் வரவும், அவுணர்போரில் வந்தெதிர்த்துப் படைமுறிந்து கெட்டோடும்படி யுத்தகளத்தில் யானையின் பிடரியில் ஏறிவரும் அரிகரபுத்திரன் வரவும் என்றவாறு.

ஊது லைக்கனற் புகையென வுயிர்ப்புலாந் துண்டக்
கோதி னெட்டெயிற் றகல்பில வாய்க்குறுங் கூளிப்
பூத முற்றிய கணங்களும் பொருவில்வெண் சங்க
நாத நற்றொழிற் பானுகம் பனும்வந்து நண்ண. 9

இ - ள்: உலைக்களத்தில் ஊதுகின்ற தீப்புகைபோல பெருமூச்சு உண்டாகும் மூக்கினையும் பழுதில்லாமல் நீண்ட பற்களையும் அகன்ற பிலத் துவாரம் போன்ற வாயையுமுடைய குட்டையாகிய பூதகணங்களும் ஒப்பில் லாத தவளச் சங்கநாதத் தொழில்செய்யும் பானுகம்பனும் வந்து பொருந் தவும் என்றவாறு.

சங்க கன்னனற் றனிமணிக் கரத்தினன் றயவின்
மங்குல் போலருள் மாணிபத் திரன்மகோ தரன்சொற்
பிங்கி ரீடிவி ருகோதரப் பெருந்தகைப் பெரும்பூண்
பொங்கு நீளொளி விகடன்குண் டோதரன் பொருந்த. 10

இ - ள்: சங்குகன்னனும் ஒப்பற்ற மணிக்கன்னனும் தயையில் மேகத்தையொத்து அருளும் மாணிபத்திரனும் மகோதரனும் சொல்லு கின்ற பிருங்கிமுனியும் மேலான தகுதியையுடைய விருகோதரனும் பெரிய ஆபரணங்களணிந்து மிகுதியான ஒளியையுடைய விகடனும் குண்டோதர னும் பொருந்தவும் என்றவாறு.

மாலை யம்புய மகாகாளர் புலிவத னத்தோர்
ஆலும் வாரண முகத்தின ராளிமா முகத்தோர்
வால வெள்ளெயிற் றரவமு மடங்கன்மா வேறும்
போலு நீள்வத னத்தின ரெண்ணிலர் பொருந்த. 11

இ - ள்: மாலையணிந்த தோளையுடைய மகாகாளரும் புலி முகத்தரும் அசைகின்ற யானை முகத்தரும் ஆளி முகத்தரும் வெண்மையாகிய தந்தங்

கலையுடைய அரவமுகத்தரும் சிங்கமுகத்தரும் ஆன கணத்தர் அளவில்லாதவர்களாய் வந்து பொருந்தவும் என்றவாறு.

முகடு போழ்ந்திட நீண்டவர் மொழிவதற் கரிதாம்
விகட மாகிய வேறுவே றுருவத்தர் விளங்கும்
பகடு போலுமோர் கரத்தினர் பலபல கரத்தர்
தகடு வேய்பொலன் கழலின ரெண்ணிலர் தழுவ. 12

இ-ள்: அண்டமுகடு பிளக்கும்படி உயர்ந்த வடிவமுள்ளவர்களும் சொல்லுதற்கரிய விகடமான பலபல உருவத்தையுடையவர்களும் விளங்குகின்ற யானைபோல ஒரு கையுடையவர்களும் பலவாகிய கைகளையுடையவர்களும் தகட்டுப் பொன்னாற்செய்யப்பட்ட வீரகண்டையுடையவர்களுமாக எண்ணற்றவர்கள் பொருந்தவும் என்றவாறு.

படர்ந்த நீணிலஞ் சுமந்தசே டனதுபஃ றலைபோன்
மிடைந்தெ ழுந்ததிண் டோட்களி லார்த்தவார் விசித்துக்
குடங்கை யாயிர மெடுத்துவா ணசுரன் கொண்ட
லடங்கு மாமுழ வாயிர முகத்தினு மறைய. 13

இ-ள்: பரந்து நீண்ட பூமியைத் தாங்குகிற ஆதிசேடனுடைய ஆயிரந்தலைபோல நெருங்கி உயர்ந்திருக்கும் திண்ணிய தோள்களில் கட்டிய வாரை விசித்துக்கொண்டு தன் ஆயிரமாகிய உள்ளங்கைகளை எடுத்து வாணசுரன் மேகத்தினிடியோசையும் மறையும்படி பெரிய குடமுழாவின் ஆயிரமுகத்தினும் அறையவும் என்றவாறு.

முருகு விண்டதார் தேவரை முறைமுறை நிறுவித்
திருகு வெஞ்சினத் தவுணரை யொருபுடை சேர்த்தி
யுருகு பொன்னிறக் கணங்களை யொருவழி செறித்துப்
பெருகு வான்புகழ் நந்திகைப் பிரம்பெடுத் துலவ. 14

இ-ள்: மணத்துடன் மலர்ந்த மாலையணிந்த தேவர்களை வரிசை வரிசையாக நிற்கச்செய்து மாறுபடுகின்ற கோபமுள்ள அசுரர்களை ஒரு புறத்தில் வரிசையாக நிறுத்தி உருகிய பொன்னிறமுள்ள கணங்களை ஒரு புறத்தில் நிறுத்தி மிக்க சிறப்புள்ள நந்திதேவர் கையில் பிரம்பேந்திக் கொண்டு உலாவவும் என்றவாறு.

இலகு நல்லவை நடுவணே யெழிலரி சுமந்த
வலகி லாநவ மணிகளு மொளிகெட வவிருங்
குலவு மாணிக்கங் குயிற்றிய கொழுந்தவி சேறி
யுலக மூன்றுக்கு மொருபொரு ளெம்மையா ளுடையான். 15

இ - ள் : ஒளிவிடும் நல்ல அவையினடுவில் அழகுள்ள சிங்கங்கள் தாங்கும் அளவற்ற நவமணிகளும் ஒளிமழுங்கும்படி ஒளி செய்யும் மாணிக்கங்கள் பதித்த செழுமையுள்ள இருக்கையில் வீற்றிருந்து மூன்று உலகங்களுக்கும் ஒரு பொருளாகிய எம்மை அடிமையாக உடைய பரமசிவன் என்றவாறு. அரி சுமந்த தவிசு எனமுடிக்க.

கோடி செங்கதி ராதபர் கோடிவெண் மதியங்
கோடி யூழியின் வடவன லோரிடங் குழுமி
நீடு மோருரு வெடுத்தன நிரயத்தி னிருளு
மோடி யெங்கணு நிலையற வலோகத்தி லொதுங்க. 16

இ - ள் : கோடி சூரியர்களும், கோடி சந்திரர்களும், கோடி வடவாமுகாக்கினியும் ஓரிடத்தில் கூடி பெரிய உருவம் எடுத்தது போன்றதாய் நரகத்தின் இருளும் ஓடி எவ்விடத்தும் நிலைபெருமல் அவலோகத்தில் ஒதுங்கத் தக்கதாக என்றவாறு. ஆதபர் - சூரியர். அவலோகம் - இல்லாலோகம்; எனவே வெளி என்றபடி.

வேலை யேழையு மொருகணை வேலையி னுகருங்
கால வூழிவெங் கனலெனச் செஞ்சடை கவினப்
பால லோசனந் துணைவிழி முச்சுடர் பகைப்பச்
சூல மாதிய படையொடுந் தோள்பல துளங்க. 17

இ - ள் : ஏழு கடலையும் ஒரு கணப்பொழுதில் உண்ணத்தக்கதாக ஊழிக்காலத்திலுண்டாகும் கொடிய ஊழித்தீப்போல் செய்ய சடைகள் பொலியவும் நெற்றிக்கண்ணும் ஏனைய இரண்டு கண்களுமாகிய சோம சூரியாக்கினிகளுடன் பகைக்கும் சூலாயுதம் முதலிய ஆயுதங்களோடு பல தோள்கள் விளங்கவும் என்றவாறு.

அனந்தன் வாசுகி தக்ககன் முதலிய வரவம்
புனைந்த பல்கல னெனவடி முடிமுதல் புனைந்து
கனைந்து வண்டுணு மிதழிவா சிகையிடை கவின
வனைந்த விந்துவுங் கங்கையு மமுதலை வழங்க. 18

இ - ள் : ஆதிசேடன் வாசுகிதட்சகன் முதலாய நாகங்களை ஆபரணங்களாகத் திருவடிதிருமுடி முதலான இடங்களில் அணிந்துகொண்டு இசை பாடும் வண்டுகள் தேனுண்ணும் கொன்றைப்பூமாலை அழகுடன் நடுவில் விளங்கத் திருமுடியில் அணிந்த சந்திரன் அமுதத்தை வழங்கவும் கங்கை அலை வீசவும் என்றவாறு. வாசிகை - தொடுத்தமாலை.

காய்சி னக்கொடு வரியுரி கலையினிற் பொலியப்
பூச லிட்டடு புழைக்கைமா வுரிவைமெய் போர்ப்பத்
தேசு பெற்றிடு முத்தரீ யத்தொளி திகழ
மாச றுத்தொளிர் மின்னென மார்பினூல் வயங்க. 19

இ - ள் : காய்கின்ற கோபத்தையுடைய புலியின்றோல் ஆடையாகத் திருவரையில் விளங்கவும் போர்செய்துகொல்லுந் தன்மையையுடைய யானையின்தோல் போர்வையாகத் திருமேனியில் போர்ப்பவும் ஒளிபொருந்திய உத்தரீயத்தின் ஒளி விளங்கவும் மாசுநீக்கி ஒளிர்கின்ற மின்போல பூணநூல் திருமார்பில் விளங்கவும் என்றவாறு.

தொல்லை யம்பழ மறையெலா மிறுதியிற் சொல்லு
மெல்லை கண்டவ ரல்லது காண்கிலா விறைவன்
அல்லி யந்துணர்த் தேறன்மொண் டிலகுதா தள்ளிச்
செல்லு மன்றலந் தென்றல்வந் துலவவீற் றிருந்தான். 20

இ - ள் : பழமையாகிய வேதங்களெல்லாம் முடிவிற்சொல்லும் அளவைக்கண்டவர்கள் காணலாமேயன்றி மற்றவர்கள் காணக்கூடாத பரமசிவன் அகவிதழினையுடைய பூங்கொத்துக்களிலிருக்கும் தேனை மொண்டு மகரந்தங்களை அள்ளிக்கொண்டுவரும் இளந்தென்றற்காற்று வந்து உலவ வீற்றிருந்தான் என்றவாறு.

அந்த வேலையி லாதிநான் முகனுளத் தறிவில்
வந்து தோன்றிய மவுனஞா னத்தினின் வதிந்தோன்
பந்த மற்றிடு சனற்குமா ரன்பணிந் தேத்தி
முந்து நல்லிசை பணிதொறும் பணிதொறு மொழிந்தே. 21

இ - ள் : அக்காலத்தில் ஆதியாகிய பிரமதேவன் உள்ளத்தில் ஞானத்துடன் வந்தவதரித்த மவுனஞான நிலையிற்பொருந்தியவராய்ப் பாசபந்தம் நீங்கிய சனற்குமாரமுனிவர் பணிந்து துதித்துப் பணியுந்தோறும் பரமசிவனுடைய முதன்மையான நல்ல புகழைக்கூறி என்றவாறு.

ஐய கேட்டிநீ யகலிடத் தரியதாந் தரும
முய்யு மாறெனக் குரையென வொளிநிலா முறுவற்
செய்ய வாய்மலர் திறந்துதேன் றுளிக்குமா போல
வைய மேழுடை நாயகன் மகிழ்வுற வுரைத்தான். 22

இ-ள் : எங்கள் ஐயனே! நின் திருவுள்ளத்தில் அடியேன் விண்ணப்பத்தைக் கொண்டருள்; அதாவது இவ்வுலகத்தில் அரிய அறத்தை அடியேன் உய்யுமாறு கட்டளையிட்டருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ள ஒளியுள்ள நிலாவையொத்த நகையுடன் திருவாய் மலர்ந்து தேனைத்துளிப்பதுபோல ஏழுலகத்தையுமுடைய பரமசிவன் மகிழ்வுண்டாக அருள் செய்கின்றார் என்றவாறு.

கேட்ட ஞானநூ லனைத்தையுங் கிளத்தினை புவியி
லீட்டு கன்மத்தி லிருவினை யியற்றிய முறையே
யூட்ட வுண்ணுமா னிடர்களு முத்தியை யுறுவா
னட்டு நற்சிவ தருமமாய் நாடுதற் கெளிதாய். 23

இ - ள் : அடியேன் விண்ணப்பம் செய்து கொண்டபடி ஞான சாத்திரமெல்லாம் அருளினை உலகத்திற் செய்கின்ற கருமத்தினல் நல்வினை தீவினைகள் முறைமைப்படி ஊட்ட உண்ணுகின்ற மானிடர்களும் முத்தியடைய நாட்டுகின்ற நல்லசிவதருமமாகியும் நாடுவதற்கெளிதாகியும் என்றவாறு.

வருத்த மில்லதா யிருவினை யகற்றுநன் மருந்தா
யருத்தி யோடிறைப் போதினி லறிவுறு மதுவாய்க்
கருத்தில் வேட்டவை யிம்மையி லுதவுகற் பகமாய்
விரித்த வேதநூற் றருமமொன் றுரையென விளம்பி. 24

இ - ள் : வருத்தமில்லாததாகியும் இருவினையை நீக்குகின்ற நல்ல மருந்தாகியும் ஒருகணப்பொழுதில் அன்புடன் ஞானம் கொடுப்பதாகியும் மனதில் விரும்பிய பொருளை இம்மையிலே கொடுக்கும் கற்பகத்தருபோன்றதாகியும் விதிக்கப்பட்ட வேதத்திற் சொல்லுவதாகியுமிருக்கின்ற அறமொன்று கட்டளையிட வேண்டுமென்றுகூறி என்றவாறு.

அஞ்ச லித்தடி யிணைமிசை யலர்மழை தூவி
வஞ்ச மொன்றிலா மறைமுனி கேட்டற்கு மகிழ்ந்து
நஞ்ச முண்டகா லாக்கினி ருத்திர நாதன்
செஞ்ச வேயவ னுளங்கொண்டு தெருளுறச் செப்பும். 25

இ - ள் : கைகுவித்து வணங்கித் திருவடிகளில் மலர்களால் அருச்சித்து உண்மைநெறியுள்ள அந்த சனற்குமார முனிவர் விண்ணப்பம் செய்து கொண்டதற்கு விடபானஞ் செய்த காலாக்கினி ருத்திரமூர்த்தியானவர் களிகூர்ந்து அம்முனிவர் உள்ளத்தில் செவ்வையாகத் தரித்து அறிந்துகொள்ளும்படி உபதேசிக்கிறார் என்றவாறு.

அங்க மாறுடை வேதமு மாகம முகமு
மெங்கு மோதிடு முபநிட தத்தின தியலுஞ்
சங்கு போலும்வெண் ணீற்றினுற் றயங்குபுண் டரத்தைத்
துங்க நெற்றியி லணிவதே தருமமாச் சொல்லும். 26

இ - ள் : ஆறங்கங்களையுடைய வேதங்களும் ஆகமத்தின் முதலும் எங்கும் மோதுகின்ற உபநிடதத்தின் உண்மையும் சங்குபோல் விளங்கும் வெண்ணீற்றினல் ஒளிவிடும் திரிபுண்டரத்தைப் பரிசுத்தமான நெற்றியில் அணிவதே அறமாகக் கூறும் என்றவாறு.

திரிபுண்டரமாவது மூன்று ரேகையாக அணிவது. மும்மலத்தையும் போக்குமென்கிற காரணம் தோன்ற அவ்வாறு அணிவதாம்.

வேறு

என்னப் பரமன் கூறுதல்கேட் டெழுந்த வுவகைச் சனற்குமரன்
முன்னைப் பொருளே யடியோடு முடியு மில்லா முழுமுதலே
உன்னிப் புகன்ற திருநீறே துரைத்த திரிபுண் டரமேது
பின்னர்த் தரிக்கு மிடனேது பேசுந் திருமந் திரமேதோ. 27

இ - ள்: இவ்வாறு பரமசிவன் அருளிக் கூறியதைக் கேட்டு மகிழ்வுண்டாகிய சனற்குமாரமுனிவர் ஆதியானபொருளே! ஆதியந்தமில்லாத முதலே! கருதிச் சொல்லியருளிய திருநீறு என்பது யாது? சொல்லிய திரிபுண்டரம் என்பது யாது? மற்றும் அதை எங்கெந்த இடத்தில் அணிவது? சொல்லும் திருமந்திரம் யாது? என்றவாறு.

கால மேதோ வளவேதோ கருதப் படுந்தெய் வதமேதோ
சீல மேதோ திரவியமற் றேதோ தரிக்கிற் பலனேதோ
மூல முளையாய் நெடுந்தருவாய் வித்தி னடங்கு முறைபோல
ஞால மெல்லா மாயையின்பா லுதிப்பித் தொடுக்கு நம்பரனே. 28

இ - ள்: அணியும் காலம் எது? அளவு யாது? தியானிக்கப்படும் தேவதை யாது? ஒழுக்கம் யாது? அதற்குரிய திரவியம் யாது? தரித்தால் வரும் பலன் யாது? வேரும் முளையுமாய் நெடியதருவாய் விதையிலடங்கும் முறைமைபோல் உலகமெல்லாம் மாயையினிடத்து உதித்து ஒடுங்கச் செய்யும் எங்கள் இறைவனே! என்றவாறு.

என்று வினவு முனிக்கீச னியம்பு முரைத்த திருநீறு
துன்று தீம்பாற் கோமயத்தைச் சுட்ட வடலை யாகுங்கா
ணின்ற திரிபுண் டரமதுதான் சென்னி நெற்றி களநிமிர்தோ
ளொன்று மார்பு நாபிபுற முருவ முத்லுத் தூளணமாய். 29

இ - ள்: என்று வினவிய முனிவருக்குப் பரமசிவன் அருளிச் செய்கின்றார். வேதாகமத்திற் கூறப்பட்ட திருநீறானது பொருந்திய மதுரமுள்ள பால் கறக்கும் பசுவின் சாணத்தை ஓமாக்கினியிலே பாகமாகும்படி வைத்த திருநீறும். திரிபுண்டரமாவது தலை நெற்றி கழுத்து தோள் பொருந்து மார்பு தொப்புள் பின்புறம் இவ்விடங்களில் முதலில் உத்தூளணமாய் என்றவாறு.

குழைத்துத் தைவந் ததற்பின்னர்க் குழைத்த நீற்றை வெண்ணிலவி
லிழைத்த தென்னச் சொன்னவிடத் தியற்றும் போழ்தி னெற்றியின்கண்
டழைத்த விரலி னடுநீக்கி யத்தற் சனியா லனுமிகையாற்
பிழைத்த லறவே தரித்தெதிராப் பெரிய விரலா னடுவணிந்தால். 30

இ - ள் : குழைத்துத் தடவி அதன் பின்பு முன்பு குழைத்த அந்தத் திருநீற்றை வெண்மையான நிலவிளுல் செய்ததுபோல் மேற்கூறிய இடங்களில் அணியும்போது நெற்றியினிடத்தில் செழுமையுள்ள விரல்களில் நடுவிரலைவிட்டு மோதிரமணியத்தக்க விரலாலும் சுட்டுவிரலாலும் குற்றமற அணிந்து பின்பு பெரியவிரலால் நடுவே எதிராக அணிந்தால் என்றவாறு.

தற்சனி - சுட்டுவிரல். அநாமிகை - ஆழிவிரல்.

அதுவே திரிபுண் டரமுரைத்த வங்க மவையே யிடமாகும்
பதியா லுரைத்த மந்திரங்கள் பஞ்சப் பிரம முபநிடதம்
விதியால் வேதத் தெடுத்துரைத்த வியன்மந் திரங்க ளென்றறிவாய்
புதிதாய் நின்ற காலங்கண் முப்போ துகளெப் போதினுமாம். 31

இ - ள் : அவ்வாறு அணியப்படுவதே திரிபுண்டரமாம். முன்கூறிய அங்கங்களே திரிபுண்டரமணியும் இடமாம். பரமசிவனால் சொல்லப்பட்ட மந்திரங்கள் பஞ்சப்பிரம உபநிடதம் வேதத்தில் முறையாக எடுத்துரைத்த மேன்மை பொருந்திய மந்திரங்கள் என்று அறிவாய். அதற்காக நவமாக நின்றகாலங்கள் முப்போதுமாகும்; அன்றியும் எப்போதுமாம் என்றவாறு.

நீளம் புருவத் தளவாகு மிடையி னீக்க மொருவிரலா
மாளுந் தெய்வ முருத்திரனோ டரிய மகேசன் சதாசிவனா
நாளுஞ் சீலங் கடைப்பிடியாய் நான்கா யீட்டுந் திரவியங்க
டூளந் தருபால் வெண்ணீறு முலகுக் குயிராந் தோயமுமே. 32

இ - ள் : நெற்றியில் அணிகின்ற நீளம் புருவத்தின் அளவாம். திரிபுண்டரமாகிய மூன்று கீற்றுக்குள் நடுவுள் ஒருவிரல் அளவு இடம் விட்டிருக்க வேண்டுவது. அதற்குரிய தேவதைகள் உருத்திரன் மகேசன் சதாசிவன் என்னும் கடவுள்களாம். இந்த ஒழுக்கத்தை ஒருநாளும் மறவாமல் இருப்பாயாக. நன்மையுடன் சேர்க்கும் திரவியங்கள் தூளாய்ப் பால் நிறமுள்ள திருநீறும் உலகுக்குயிராகிய நீருமாம் என்றவாறு.

பலத்தின் பெருமை மாமுனியே பகரி லேவர் தாமறிவார்
நிலத்தின் மீது மானிடர்க்கு முத்திக் கிதுபோ னெறியுண்டோ
சொலற்குத் தகுநால் வருணத்தோர் வருணச் சிரமத் தொழில்புரிவோர்
கலத்திற் கியையா விழிகுலத்தோர் கலன்பூண் மகளிர் கைமையுற்றோர். 33

இ - ள் : பெருமையுள்ள முனிவனே! திருநீற்றைத் திரிபுண்டரமாக அணிவதால் அடையும் நன்மையைக் கூறுமிடத்தில் யாவர் அறியத்தக்கவர்கள். இவ்வுலகிடைப் பிறந்த மக்கட்கு முத்திதர இதைப்போல் கூறலாமென்றால் வேறுபொருளில்லை. நான்கு வருணத்தார் நான்கு ஆசிரமத்தார் அபாத்திரராகிய இழிகுலத்தோர் மாங்கலியமுடைய பெண்கள் எ-று.

இயாவ ரேனு மித்தரும மியன்ற காலத் தியற்றுவரேற்
பாவ மாயத் தளையறுத்துப் பாரிற் பிறவிக் கடனீந்தித்
தேவர் போகம் பொன்னுலகிற் சென்று துய்த்துச் சிவனருளை
நாவி னுலும் வழுத்தரிய முத்தி யின்பம் நண்ணுவரால். 34

இ-ள்: இப்போது கூறிய இவர்களில் எவரானுலும் இந்தத் திரிபுண்டரம் அணிவதாகிய அறஞ்செய்வார்களேயானல் பாவமாகிய பந்தத்தை அறுத்துப் பூமியில் பிறக்கும் பிறவிக்கடலை நீந்திச் சுவர்க்க லோகத்தில் தேவபோகத்தை அனுபவித்துப் பின்பு இறைவனுடைய திருவருளினல் நாவைக்கொண்டு சொல்வதற்கரிய முத்தியின்பம் அடைவார்கள் என்றவாறு.

கோறல் களவு கள்ளுண்டல் குருவைப் பிழைத்தல் கூட்டென்னத்
தேறும் பஞ்ச பாதகத்தை யொழியா தியற்றுஞ் சிறியோரும்
ஆறி லொன்று தாங்கொள்ளா தநீதி யியற்றி யறமிகந்த
பாறு படிவேன் மன்னவரும் பயந்தோர்க் கொன்ற பாதகரும். 35

இ-ள்: கொலைசெய்தல் திருடுதல் மதுபானஞ்செய்தல் குருவுக்கு தீங்குசெய்தல் காமம் என்று கூறப்படுகிற பஞ்சமாபாதகத்தை எப்போதும் செய்கின்ற கீழோர்களும் ஆறிலொரு பாகம் வாங்கிக்கொள்ளாமல் அநீதி புரிந்து அறத்தையொழித்த பருந்து சூழும்படியான வேலேந்திய மன்னவர்களும் தாய் தந்தையரைக் கொன்ற பாதகரும் என்றவாறு.

செய்த நன்றி மறந்தோருந் தீவைத் தில்லஞ் சிதைத்தோருங்
கொய்து பசுவைத் தின்ருேருங் கொண்டோர்ப் பிழைத்துத் திரிந்தோரும்
நொய்திற் கரிபொய்த் துரைத்தோரு நோன்பை யிகழ்ந்து நொடித்தோரும்
வைது பழித்துப் பொய்யென்று முன்னூ லிகழ்ந்த வஞ்சகரும். 36

இ-ள்: செய்த நன்றி மறந்தவர்களும் வீட்டில் நெருப்பு வைத்துக் கொளுத்தி விட்டவர்களும் பசுவையறுத்துத் தின்றவர்களும் கொண்ட கணவனுக்குத் துரோகம்செய்து சோரம்போகிற பெண்களும் எளிதாகப் பொய்ச்சாட்சி கூறியவர்களும் விரதங்களையிகழ்ந்து சொன்னவர்களும் சாத்திரங்களைப் பழித்துப் பொய்யென்று இகழ்ச்சிசெய்யும் பாதகரும் என்றவாறு. நொடித்தல் - பேசல்.

கருப்பம் வீழ்த்தித் திரிந்தோருங் கலவா தவரைக் கலந்தோரும்
பரித்த வொருதே வினைவழுத்திப் பலதே வரையும் பழித்தோரு
மருத்தி விடத்தாற் கொன்ருேரு மற்ருர்க் கருது வதிந்தோரும்
விருத்தர் பாலர் மடவார்க ணடுங்க வினைகள் செய்தோரும். 37

இ - ள் : கருவை அழித்துத் திரிகின்றவர்களும் சேரத்தகாதவர்களுடன் சேர்ந்தவர்களும் தம்முடைய உள்ளத்திற்கொண்ட ஒரு தெய்வத்தைத் துதித்து மற்றக் கடவுளைப் பழித்தவர்களும் விடங்கொடுத்துக் கொன்றவர்களும் வறுமையுற்றவர்கட்கு அதனைத் தீர்க்காமலிருப்பவர்களும் கிழவர்கள் பாலர்கள் பெண்கள் என்னுமிவர்கள் அஞ்சும்படி கொடிய செய்கைகள் செய்தவர்களும் என்றவாறு.

அடைந்தோர்க் கருளா திருந்தோரு மமரி லரசன் படைவெருவி
மிடைந்து வெரிநிட் டோடினரும் வெறிய குறளை பகர்ந்தோரு
மிடைந்த வறியோர்க் கீயாம னிதிய மீட்டி யிருந்தோருங்
குடைந்து நீருண் கூவல்குளங் குட்டஞ் சிதைத்த கொடியோரும். 38

இ - ள் : தங்களை அடைக்கலமாக அடைந்தவர்கட்கு உதவி செய்யாதவர்களும் அரசன் படையிற்போய்ச் சண்டை நேரிட்டவிடத்தில் பயந்து முதுகுகாட்டி ஓடினவர்களும் பலனற்ற கோள் கூறினவர்களும் வருந்தியிருக்கும் வறுமையுள்ளவர்கட்குக் கொடாமல் பொருள் ஈட்டி வைத்திருப்பவர்களும் முழுகி நீருண்ணும்படியான கிணறு குளம் குட்டை இவைகளை அழித்த பாவிகளும் என்றவாறு. வெரிந் - முதுகு.

ஆரா மங்க ளழித்தோரு மதிதி வருந்த வயின்ரோருந்
தீரா விடும்பை பகைவருக்குந் தவசீ லருக்குஞ் செய்தோருஞ்
சேரா நிலையைச் சேர்ந்தொழுகித் தீவேட் டுண்ணு ந் திறந்திறம்பிப்
பாரா வாரங் கலத்தேறி நிதிவேட் டுழன்ற பார்ப்பாரும். 39

இ - ள் : பூஞ்சோலையை அழித்தவர்களும் வந்த விருந்தினர் பசியால் வருந்த அவர்களை அழையாமல் உண்பவர்களும் பகைவராயிருப்பவர்களுக்கும் தவசிலர்களாகிய முனிவர்களுக்கும் ஒழியாத துன்பத்தைச் செய்கின்றவர்களும் சேரத்தகாத தன்மையைப் பொருந்தி அந்த வழியில் நடந்து நித்தியாகுதி செய்து பின்பு உணவுகொள்ளும் தன்மை மாறிப் பொருளை விரும்பிக் கப்பலேறிக் கடலிற்சென்று உழலுகின்ற பிராமணர்களும் என்றவாறு.

இன்னுங் கொடும்பா தகம்புரிந்தோர் இயாவ ரேனு மவரெல்லாம்
பின்னுஞ் சடில மாமுனியே திருநீ றணியப் பெறிலிவர்பான்
மன்னும் பிறவி முதலவினை முழுது மாயும் வயங்கொளியோன்
மின்னுங் கனக வுதயவரை மேவ விருள்வீந் திடுவதுபோல். 40

இ - ள் : பின்னலாகிய சடையையுடைய முனிவனே! இப்போது கூறிவந்த பாதகங்களல்லாமல் மற்றுமுள்ள பாவங்கள் செய்தவர்களேயானலும் அவர்கள் அனைவரும் திருநீறு அணியப் பெறுவார்களேயானல்

அவர்களிடத்தில் நிலையாகிய பிறவி முதலாய வினைகளெல்லாம் சூரியன் பொன்மயமான உதயகிரியில் தோன்றிய அளவில் இருளொழிவதுபோல நீங்கிவிடும் என்றவாறு.

எள்ளப் படுகீழ் மக்களெனு மிழிந்த குலத்தோ ரென்றாலும்
வள்ளற் பரமன் திருநீறு மணியு மணிந்த மாண்பினரை
உள்ளத் துள்ளே யிருபொழுது முணர்ந்து தெருண்டு சிவனெனவே
கொள்ளத் தகைய வறிவினரே பிறவிக் கடலிற் குளியாதார். 41

இ - ள்: இகழப்படும் கீழ்மக்களென்கிற இழிகுலத்தோர்களே யானாலும் பரமசிவனது திருநீறும் உருத்திராக்கமும் அணிந்த பெருமையாளரை இரவும் பகலும் மனத்திடை வழிபட்டுச் சிவமெனக் கொள்ளத் தக்க அறிவாளர்களே பிறவிக்கடலில் முழுகாதவர்கள் என்றவாறு.

பரமசிவன் அனைவருக்கும் அருள் வழங்கும் தன்மையுடையவர் ஆதலால் வள்ளற்பரமன் என்றார்.

நாடி மூன்று காலமெண்ணா னம்பன் றிருப்பே ரிசைநவிலான்
ஆடி விளங்கும் பாவையென வறிவொன் றில்லா னானாலும்
நேடி வெண்ணீ றினிதள்ளி நெற்றி விளங்கத் தரிப்பானேற்
கோடி பிதிர்கள் கும்பியிடை குளியா தரன்பாற் கூட்டுவனால். 42

இ - ள்: பலனுண்டென்று எண்ணி முக்காலங்களிலும் வழிபடாதவனும், பரமசிவனின் திருப்பெயரின் பெருமையை நாவினால் துதியாதவனுமாய்க் கண்ணாடியில் எழுதப்பட்ட சித்திரம்போல அறிவில்லாதவனே யானாலும் திருநீற்றைத் தேடி இனிதாக அள்ளி நெற்றியில் விளங்கும்படி அணிவானானால் தன்னுடைய அனந்தம் பிதிரர்களை நரகத்தில் முழுக வொட்டாமல் சாம்பசிவனிடத்தில் சேரச்செய்வான் என்றவாறு.

ஏழு கோடி மந்திரமு மெண்ணி றவமு மிருநிலத்தில்
ஆழ முடைய கங்கைமுத லனந்த நதியு மமரேசன்
வீழுந் துரக மீரும்வ் வேள்வி யனைத்தும் விளம்புங்காற்
றாழுஞ் சடையான் றிருநீறு தரும்பே றொன்றுந் தாராவே. 43

இ - ள்: ஏழுகோடி மகா மந்திரங்களும் அளவற்ற தலங்களும் இப்பெரிய உலகிடையிருக்கும் ஆழமுடைய கங்கை முதலாய ஆறுகளும் தேவேந்திரன் விரும்பும் அசுவமேதம் ஈறாகிய வேள்விகளுமாகிய இவைகள் தாழ்ந்த சடையையுடைய பரமசிவன் திருநீறுதரும் பேறுகளுள் ஒருபேற்றினையும் தரமாட்டாவாம் என்றவாறு.

பத்தி யால்வெண் ணீறணிந்தோர் பாரைப் பொதுநீங் கிடப்புரந்து
துய்த்த போகத் திறுதியினிற் சோதி விமானத் தினிலேறி
மைத்த குழலா ரொடுமருவி மகவான் பதத்தில் வாழ்ந்துபின்னர்ச்
சத்தா யசத்தை யொருவுசிவ சாயுச் சியமே சார்வாரால். 44

இ-ள்: பத்தியுடன் திருநீறு அணிந்துகொள்கிறவர்கள் பொதுக் கடிந்து இவ்வுலகை ஆண்டு போகங்களை அனுபவித்து இறுதியில் சோதி மிக்க தேவவிமானம் ஏறிச்சென்று அளகத்தையுடைய தேவமாதர்களுடன் தேவருலகில் வாழ்ந்து பின்பு சீவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை பெற்றுச் சிவசாயுச்சியம் அடைவார்கள் என்றவாறு.

இந்த விபூதி மான்மியத்தை வேதம் பலவு மியம்புமதைச்
சிந்தைக் கெளிதாய் மிகச்சுருக்கிச் செப்பி ேனமென் றருள்புரியா
வந்தத் துடனே முதலுமில்லா வாதி பரம னகன்றிடலுஞ்
சந்தக் குலநான் மறைவிரிஞ்ச னுலகத் தடைந்தான் சனற்குமரன். 45

இ-ள்: இந்தத் திருநீற்றின் பெருமையை வேதங்கள் யாவும் விரிவாகக் கூறுகின்றன. உன் மனதுக்கெளிதாகத் தெரியுமாறு மிகச்சுருக்கிச் சொன்னேமென்றருள் செய்து ஆதியந்தமற்ற முதற்கடவுளாகிய கயிலாசபதியானவர் கூறியெழுந்தருளவும் சனற்குமார முனிவர் சந்தமுள்ள கூட்டமாகிய நான்குவேதமுணர்ந்த பிரமன் உலகை அடைந்தார் என்றவாறு.

இன்ன தாய வெண்ணீற்றின் றகைமை யெம்மாற் புகலவற்றோ
வுன்னை நலியும் பசிதீர்த்தற் கொருப்பட் டெமைநீ யுறப்பற்றி
மன்னு திருநீ றுனதுடல மலியப் பரிசித் ததனனீ
யன்ன காலை நிருதவடி வகற்றித் தேவா யினையென்ன. 46

இ-ள்: இத்தன்மையுள்ள திருநீற்றின் பெருமை எம்மாற் புகழத் தக்கதோ உன்னை வருத்திய பசிதீர எம்மை உண்ணவேண்டுமென்று பிடித்து நிலைபெற்ற திருநீறு உன் உடலில் பொருந்தப் பரிசித்ததனால் முன் உள்ள அசுர உருவம் நீங்கித் தேவ உருவம் பெற்றாய் என்று எ-று.

அன்பி னுணர்த்தி வெண்ணீற்றை யள்ளி யரக்கன் றனக்களியா
வின்ப மருளு மந்திரமு மியம்பி முறைநீ றிடுவித்துத்
துன்ப மொழிந்தாய் பொன்னுலகிற் போகந் துய்த்துத் தொலைந்தபின்னர்
வன்ப ரறியாச் சிவபதத்தை மருவி வாழ்தி யெனவிடுப்ப. 47

இ-ள்: அன்புடன் கூறித் திருநீற்றை அள்ளி அரக்கனுக்குக் கொடுத்துப் பேரின்பம் அருளும் மந்திரோபதேசமுஞ்செய்து முறையாகத் திருநீற்றை அணிந்துகொள்ளும்படி தெரிவித்துத் துன்பம் நீங்கினவனே!

சுவர்க்கபோக இன்பம் அனுபவித்து நீங்கிய பின்பு அன்பில்லாதவர்கள் அறியாத சிவபதத்தைப் பொருந்தி வாழ்ந்துகொண்டிருவென்று விடை கொடுத்தனுப்ப என்றவாறு.

பழைய முனிவ னடியிணைமேற் பணிந்தாங் கெழுந்து விடைபெற்றுக்
குழையு மனத்தி னுவகையொடும் பொன்னாட் டெல்லை குறுகுதலும்
பிழையில் பொருளின் பதந்தெரியும் வாம தேவப் பெருந்தகையுந்
தழையு மிதழிச் சடாதரன்போற் சார்ந்தா னென்று சாற்றினன். 48

இ - ள் : அரக்கன் பழமையாகிய வாமதேவமுனிவர் திருவடியினிடத்தில் பணிந்தெழுந்து விடைபெற்றுக்கொண்டு குழையுமனத்தினனாய் மகிழ்வுடன் தேவலோகத்திற் செல்லுதலும் பிழையில்லாத பொருளின் தன்மையுணர்ந்த அம்முனிவர் தழைந்த கொன்றைமாலையணிந்த முடியையுடைய பரமசிவன்போலிருந்த தாம் போக வேண்டிய இடத்திற்குப் போனாரென்று சூதமுனிவர் கூறினர்.

திரிபுண்டரமுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 935

பதினேழாவது

வேடன் சிவபூசை கடைப்பிடித்த அத்தியாயம்

இவ்வண்ணம் வியந்து சூத னிறுத்தலு மதனைக் கேளா
மைவ்வண்ணக் காள கண்டன் வால்வண்ணப் பூதி நல்கு
மெய்வ்வண்ணப் பலத்தின் பெற்றி விழைந்தன மென்ன வேத்திப்
பொய்வ்வண்ணம் புகுதா வுள்ளத் தருந்தவர் புகல்வ தானுர். 1

இ - ள்: சூதமுனிவர் மகிழ்ந்து சொல்லுதலும் இதனைக் கேட்டு மையின் நிறமுள்ள காளகண்டமூர்த்தியின் வெண்மை நிறமுள்ள திருநீறு அணிகின்ற மாருத பலத்தின் தன்மையைக் கேட்டு மகிழ்வடைந்தோமென்று துதிசெய்து உண்மைநெறி பொருந்திய உள்ளத்தையுடைய நைமிசாரணிய முனிவர்கள் கூறுகின்றுர்கள் என்றவாறு. இறுத்தல் - கூறல். வால் - வெண்மை.

முற்றுநான் மறைகள் கூறு முடிபொருட் டுணிபை யோர்ந்து
கற்றவர் குரவ ராயிற் பேறுமக் கணத்தி னெய்துஞ்
சிற்றியற் குரவர் தம்பான் மானிடர் சிவமெய்ஞ் ஞானம்
பெற்றிடி லவரெவ் வாறு பிஞ்ஞகன் பதத்தைச் சேர்வார். 2

இ - ள்: நான்கு வேதமுழுவதுஞ் சொல்லத்தக்க முடிவான பொருளின் நிச்சயம் அறிந்து கற்றவர்கள் ஆசாரியரானுல் சிவபதம் அப்பொழுதே கிடைக்கும். அவ்வாறு கற்றுணராத ஆசாரியனிடத்தில் மானிடர் சேர்ந்து மெய்ஞ்ஞானம் பெறுவார்களானுல் சிவபதத்தை அவர்கள் எவ்வணஞ் சேர்வார்கள் என்றுர் என்றவாறு.

அருந்தவ முனியே யிந்த வினுவுக்கு விடையா தன்பு
புரிந்தெமக் குரைத்தி யென்று புராதன முனிவர் கூற
விரிந்தநற் கலைகள் வல்ல வியாதனை மனத்தி னேத்தித்
திருந்திய தவத்துச் சூத முனிவரன் செப்பி னுனே. 3

இ - ள்: அரியதவமுள்ள சூதமுனிவரே! இந்த வினுவுக்கு விடை ஆராய்ந்து அன்பு கூர்ந்து எமக்கு அருள்செய்ய முயன்று புராதனர்களாகிய நைமிசாரணிய முனிவர்கள் சொல்ல விரிவாகிய பல கலைகளிலும்

வல்லவராகிய வியாசரை இருதயத்தில் சிந்தித்துத் துதித்து நல்ல தவசியாகிய சூதமுனிவர் சொல்லுகின்ருர் என்றவாறு.

பரவைசூ ழுலகில் வாழு மானிடப் பசுக்கட் கெல்லாம்
அரனது தருமத் தோங்குங் கிரியையி லவாவொன் றுண்டேல்
குரவன தறிவின் கீழ்மை மேன்மைதான் குறிப்ப தென்னே
திரமுறு மன்பி ஞனே சிவகதி சேர லாமே. 4

இ-ள்: கடல் சூழ்ந்த இவ்வுலகில் மனித உயிர்கட்கெல்லாம் சிவ தருமமாக மேன்மைதங்கிய கிரியாபாதத்தில் விருப்பமென்பதொன்று உண்டாயிருக்குமாளுல் ஆசாரியரின் அறிவின் கீழ்மையையும் பெருமையையும் நாம் குறிக்க வேண்டியதில்லை. உறுதியாகிய அன்பிஞலேயே சிவகதி அடையலாம் என்றவாறு.

உடைத்தெறிந் திட்ட கல்லிற் பசுமண்ணின் மரத்தி ேனட்டின்
கிடைத்தவற் றென்று தன்னை யரனெனக் கிரியை பேணிக்
கடைப்பிடித் துறுதி கூறு மவாவொடு கனிவ ஞயின்
விடைக்கொடி யுயர்த்த தோன்றல் கருமத்தான் முத்தி மேவும். 5

இ-ள்: உடைத்து எறிந்துவிட்ட கல்லில், ஈரமுள்ள மண்ணில், ஓட்டில் இவைகளுமல்லாமல் வேறே எவை கிடைத்தாலும் அவைகளில் ஒன்றைப் பரமஞகப் பாவித்துக் கிரியைவிரும்பி மறவாமல் பற்றி உறுதி மிக்க அன்புடன் ஒருவன் மனம் கனிவாஞனல் அவனுக்கு இடபக்கொடியுள்ள பரமசிவனது கருணையால் முத்தி கிடைக்கும்என்றவாறு.

காட்டிருங் குரவன் ருனுங் கயவனுந் தகைய னேனு
மீட்டுமந் திரமும் வாளா வசனமா மியல்பிற் றேனும்
கேட்டமா ணுக்கன் ருனு மறிவிற்கீழ் மகனு மேனும்
நாட்டிய வவாவொன் றுண்டேற் சிவபத நண்ணு வானே. 6

இ-ள்: அறிவிக்கிற குருவும் சாத்திர அறிவு இல்லாதவரேயாஞலும் உச்சரிக்கிற மந்திரமும் பயனில்லாத உரைத் தன்மையுள்ளதேயாஞலும் உபதேசம்பெற்ற சீடன் விவேகமற்ற கீழ்மகனே ஆஞலும் சொல்லிய அன்பென்பது உண்டாயிருக்குமாஞல் சிவபதத்தையடைவான் என்றவாறு.

ஆரண நான்கு மோதி யறிந்துபே ரறிஞ னேனுங்
காரண வேள்வி நூறுங் கருத்தினின் முடித்தா னேனும்
வாரண முறித்த வள்ளன் மலரடி தன்னின் வைத்த
பூரண வேட்கை யில்லான் பொருந்திடான் முத்தி யன்றே. 7

இ - ள் : நான்கு வேதங்களும் ஓதி உணர்ந்த ஞானவானுனாலும் சுவர்க்கபதத்துக்குக் காரணமாகி நூறு வேள்வி விரைவாகச் செய்து நிறைவேற்றினவனேயானாலும் யானையை உரித்த நம் இறைவன் திருவடி மலரில் வைத்த பூரணமாகிய அன்பில்லாதவன் முத்தியடையான் எ - று.

ஆதலாற் கருமம் யாவு மையத்தோ டியற்றி நின்ற
பேதமை யுளத்தாற் பெற்ற பேறில்லை பண்டோர் வேடன்
போதமி லரசன் சொன்ன வினோதநற் பொருளென் றெண்ணி
வேதநா யகனைப் பூசித் துய்ந்தமை விளம்பு வாமே. 8

இ - ள் : ஆகையினால் கிரியைகளெல்லாம் ஐயத்துடன் செய் திருக்கும் அறிவில்லாதவர்கள் அடைந்த பேறு ஒன்றுமில்லை. பண்டு ஒரு வேடன் ஞானமில்லாத ஒரு அரசன் சொல்லிய வினோத வார்த்தையை நல்ல பொருளென்று நம்பிப் பரமசிவனைப் பூசித்து உய்ந்த வரலாற்றைக் கூறுகின்றோம் என்றவாறு.

பண்டுபாஞ் சால தேசப் பார்த்திபக் குமரன் மிக்க
திண்டிறற் சிங்க கேது வெனும்பெயர்ச் செங்கோல் வேந்தன்
கொண்டலொத் துதவு கையான் கோதிலான் குணத்தின் மிக்கான்
தண்டுத லின்றி வேட்ட மாடுவான் சமைந்து போனான். 9

இ - ள் : பண்டு பாஞ்சால தேசத்து அரசகுமரன் மிக்க வலிமை யுள்ள சிங்ககேதுவென்னும் பெயர் பெற்றுச் செங்கோல் செலுத்தும் மன்னன்; மேகம்போற் கொடுக்குங்கையான், குற்றமில்லாதவன், நற்குணத் திற் சிறந்தவன். இத்தகுதியுள்ள அவன் ஒருநாள் நீங்குதலில்லாமல் வேட்டையாட உத்தேசித்துப் போனான் என்றவாறு.

தடிமிசை வலைவார் காவித் தடந்தொறும் வருவார் கோடி
துடியொடு மிரலை பொங்கத் தொண்டகந் துவைப்பார் கோடி
மடிசெவி ஞமலி பற்றி வருபவர் கோடி கோடி
கடிதரு தொகையோர் சூழக் காட்டகம் வேட்டை செய்தான். 10

இ - ள் : தடிகளின்மேல் வலைகளும் வார்களும் போட்டுச் சுமந்து கொண்டு மார்க்கந்தோறுஞ் செல்லுகின்ற வேடர்கள் கோடிபேர். துடி யுடன் சிருங்கநாத முழக்கக் குறிஞ்சிப் பறைகள் கொட்டுகிற வேடர் கோடி பேர். வளைந்த காதுகளையுடைய நாய்கள் பற்றிக்கொண்டு வருகின்றவர்கள் கோடிகோடிபேர். இவ்வாறு கணக்கில்லாத வேடர் கூட்டஞ் சூழ்ந்துவரச் சென்று காட்டினிடத்தில் வேட்டையாடினான் என்றவாறு. காவுதல் - சுமத்தல்.

அப்பெரு வனத்திற் சண்ட னெனும்பெயர் வேட னெஞ்சி
யெப்பெரு நெறியு நேடி விலங்கினை யெறிய வெண்ணி
யொப்பருஞ் சிலையி னேடுங் கணைபிடித் துருத்துச் செல்வான்
திப்பிய மொழிந்து நந்தி யிடிந்தவா லயத்தைச் சேர்ந்தான். 11

இ - ள் : அந்தப் பெரிய காட்டில் சண்டன் என்கிற ஒரு வேடன் தனித்து எல்லா வழிகளையும் தேடி விலங்குகளைக்கொல்ல நினைத்து ஒப்பில்லாத வில்லையும் பாணத்தையும் பிடித்துக் கோபத்துடன் கூறுகின்றவன் பொலிவு மாறி இடிந்து பாழாயிருக்கும் ஒரு ஆலயத்திற் சேர்ந்தான் என்றவாறு. திப்பியம் - திவ்வியம். நந்தி - பொலிவு கெட்டு.

சிதைந்துரு வழிந்து வீழ்ந்து கிடந்ததோர் சிவலிங் கத்தைக்
குதைந்தவார் பகழி வேடன் கண்டனன் குறித்த நெஞ்சிற்
புதைந்தபே ரன்பி னாலே போற்றின னெடுத்துப் போந்து
ததைந்தபூந் தெரியல் வேய்ந்த தராபதி திருமுன் காட்டி. 12

இ - ள் : சிதைவுபட்டு உருவம் அழிந்து விழுந்திருக்கிற சிவலிங்கத்தைக் கண்டு குதையுள்ள நீண்ட கணைகளையுடைய அந்த வேடன் அதைக் குறித்த மனதில் நிறைந்த பெரிதான அன்புடன் துதித்து எடுத்துக்கொண்டுவந்து நெருங்கிய பூமாலையணிந்த அரசன்முன் காட்டி என்றவாறு.

அரும்புவி முழுது மாளு மரசனே யரச ரேறே
விரும்பிய வடியேன் கையின் மேவிய சிவலிங் கத்தைப்
பெரும்பயன் றெரிந்து போற்றிப் பூசிக்கும் பெற்றி யெல்லாந்
தரம்பெற வுரைத்தி யென்னச் சாற்றினன் சாற்ற லோடும். 13

இ - ள் : அருமையான பூமி முழுவதையுங் காக்கும் அரசனே! மன்னவர் சிங்கமே! விருப்பங்கொண்ட அடியேன் கையில் பொருந்திய சிவலிங்கத்தை மிகுந்த பயனை அறிந்து துதித்துப் பூசிக்கிற முறைமையெல்லாம் கிரமமாகச் சொல்லவேண்டுமென்றான்; அவ்வாறு கூறிய அளவில் என்றவாறு.

மடமையி னன்றோ விந்த வனசர னுரைத்த மாற்றம்
புடையமர்ந் தீர்கள் கேண்மி னென்றுகை புடைத்து நக்குப்
படையுலாந் தடக்கை வேட நினக்கது பணிப்ப னென்னுக்
கடலுல காளும் வேந்த னசதியாற் கட்டு ரைத்தான். 14

இ - ள் : இந்த வேடன் கூறியவுரை அறியாமையினாலல்லவா? என் அருகிலிருப்பவர்களே! கேளுங்களென்று கைதட்டி நகைத்து ஆயுதம்

ஏந்தும் பெரியகையுள்ள வேடனே! பூசை செய்கிற முறையைக் கூறுகிறேன் கேளென்று கடல் சூழ்ந்த உலகாளும் அரசன் ஏளனமாகக் கூறுகிருன் என்றவாறு.

ஏந்திய சிவலிங் கத்தை யியல்பின்மஞ் சனநீ ராட்டிப்
பூந்துணர் கந்தஞ் சாற்றிப் புகையொடு தீப நல்கி
மாந்தரைச் சுட்ட சாம்பர் கொணர்ந்துமுன் வைத்துப் போற்றி
யாய்ந்துநீ துய்க்குந் தீம்பா லடிசிலோ டவையு நல்கி. 15

இ - ள் : ஏந்திய சிவலிங்கத்துக்கு விதிப்படி திருமஞ்சன நீரால் அபிஷேகம் செய்து சந்தனம் மலர்கள் அணிந்து தூபதீபங்கள் கொடுத்து இறந்த மனிதரைச் சுட்ட சுடலைச்சாம்பலைக் கொண்டுவந்து எதிரில் வைத்துப் போற்றிசெய்து பதம் அறிந்து நீ உண்ணுகின்ற மதுரமுள்ள பால் அன்னம் இன்னுமுள்ளவைகளையும் நிவேதித்து என்றவாறு.

நேயமோ டிறைஞ்சி யேத்தி நிருத்தங்கள் புரிந்து நின்று
வாயினு லமுத கானம் பாடியும் வணக்கஞ் செய்துந்
தூயநற் பூசை செய்வா யென்றிறை சொன்னுன் முற்றுங்
காயும்வெஞ் சிலைக்கை வேடன் மெய்ம்மையாற் கருத்திற் கொண்டான்.

இ - ள் : அன்புடன் பணிந்து துதித்து நடனங்கள் செய்தும் வாயினுல் மதுரமுள்ள கீதங்கள் பாடியும் பவுத்திரமான நல்ல பூசைசெய் என்று அரசன் கூறினுன். பகைவரைக் கொல்லத்தக்க வேடன் அதையெல்லாம் உண்மையாக மனதில் எண்ணிக்கொண்டான் என்றவாறு.

நெஞ்சினில் வேட்கை கூரக் கடைப்பிடி நிகழ்த லாலே
வஞ்சமுற் றரசன் சொன்ன விதிமுறை வழுவா தெண்ணி
அஞ்சலித் தமலன் பூசை யனுதின மொருநாள் போல
விஞ்சவே புரியுங் காலத் தொருபகல் விரத வேடன். 17

இ - ள் : விரதங்கொண்டிருக்கும் வேடன் மனதில் அன்பு மிகுதியாக அரசன் கூறியதையெல்லாம் மறவாததன்மை உண்டானதினுல் அவ்வரசன் கபடங்கொண்டு சொல்லிய முறைமையில் ஒன்றும் தவருமல் நினைவில் வைத்துக்கொண்டு வணங்கிச் சிவபூசை முதல்நாள்போலவே ஒவ்வொரு நாளும் செய்யுங்காலத்தில் ஒருநாள் என்றவாறு.

மற்றைய வெல்லாங் கொண்டு வரதனைப் பூசை செய்வா
னுற்றன னடலை நீறு கண்டில னெல்லை யேகிச்
சுற்றிய வனங்க ளெங்குந் துருவின னேடிக் காணுன்
கற்றையங் குழலா ளோடு கருத்தழிந் திஃது சொன்னுன். 18

இ - ள் : சிவபூசைக்கு வேண்டிய பொருள்களெல்லாம் சேகரித்துக் கொண்டு பூசை செய்ய ஆரம்பித்துச் சேகரித்த பொருள்கள் சரியாக இருக்கின்றனவாவென்று பார்க்கையில் சுடலைச் சாம்பலில்லாமையினால் விரைவுடன் சுடலைகளையெல்லாம் தேடிப்பார்த்து அகப்படாமல் மனம் வருந்தித் தன் மனைவியுடன் கூறுகிறான் என்றவாறு.

குன்றியந் தாம நான்ற குவிமுலைக் கொடிச்சி கேட்டி
யன்றுநங் குரவ னன வரசர்கோன் பணித்த வாறே
யின்றள வீசன் பூசை யியற்றினேன் குறைபா டின்றி
யொன்றவற் றிலதே லண்ணல் பூசையின் றொழியுங் கண்டாய். 19

இ - ள் : குன்றிமணிமாலை தொங்கி அசையும்படியான குவிந்த தனமுள்ள குறமாதாகிய என் மனைவியே! கேள். நம்முடைய குருவாகிய அரசன் அன்றுகூறிய முறைப்படி இன்றுவரையில் சிவபூசை குறைபாடு இல்லாமல் செய்தேன். அந்தப் பூசைப் பொருள்களிலே இப்போது ஒரு பொருளில்லாவிடில் சிவபூசைக் கிரமம் தவறிப்போம் என்றவாறு.

பூசனை வழுவு மாயிற் புலாலுட றன்னைப் போற்றிச்
சீசியா லிருக்க லாற்றே னிறப்பதே திண்ண மென்றான்
மாசிலா வுள்ளத் தாளுங் குறையாது வந்த தென்றாள்
தூசுலா மல்கு லாய்கேள் சுடலையி னடலை யென்றான். 20

இ - ள் : சிவபூசை தவறுமானால், சீச்சீ! இந்த நாற்ற உடலை வைத்துக்கொண்டிருக்க மாட்டேன்; இறந்துபோவதே நிச்சயமென்றான். குற்றமில்லாத மனமுடைய அந்தக் குறமாது இப்போது நேரிட்ட குறை பாடென்னவென்றாள். ஆடையணிந்த அல்குலையுடைய பெண்ணே! கேள்: சுடலைச் சாம்பல் குறைபாடு என்றான் என்றவாறு.

உரைத்தவற் றுள்ளே யொன்றின் றாயினு முவகை கூர்ந்து
பரித்திடார் தொண்டர் பூசை யென்றுநீ பகர்ந்த யாவுங்
கருத்தினி லுணர்ந்தே னின்று கண்ணுதற் பரமன் றன்னை
யருத்தியால் வழிபட் டேத்த வறைகுவ னடிய னென்றாள். 21

இ - ள் : சொல்லிய திரவியங்களில் ஒன்றில்லாவிட்டாலும் அடியார்கள் மகிழ்வுடன் பூசையைத் தொடார்களென்று நீ கூறியவெல்லாம் மனதில் அறிந்தேன். இப்போது சிவபூசை அன்புடன் செய்து துதிக்க அடியேன் ஒன்று கூறுகிறேன் என்றாள் என்றவாறு.

ஈமத்தி னடலை யொன்று குறைந்ததென் றிரங்க வேண்டா
சேமித்த நந்த மில்லிற் செந்தழல் கொளுவி முத்தி
காமித்து நான்வீழ்ந் தந்தக் கனல்புகுந் தவிவே னின்னே
பூமொய்த்த மார்ப வெந்த சாம்பராற் பூசை செய்வாய். 22

இ - ள் : சுடலைச்சாம்பலொன்று குறைந்ததென்று துயரப்பட வேண்டியதில்லை. காவலாகக்கட்டிய நம்முடைய குறிச்சியில் தீ வைத்துக் கொளுத்திவிட்டு நான் முத்தியை விரும்பி அந்தத் தீயில்விழுந்து இறந்து போகிறேன். பூமாலை அணிந்திருக்கும் மார்பையுடைய நாயகனே! அந்தச் சாம்பலைக்கொண்டு இப்பொழுதே சிவபூசை செய் என்றவாறு. ஈமம் - சுடலை.

என்றவள் சொல்லக் கேட்ட வெயினனு மினைந்து சொல்வான்
மன்றலங் குழலாய் கேட்டி யில்லறம் வளர நின்றான்
தன்றனி மனைவி யாலே தருமமே முதல நான்கு
மொன்றிட வேண்டு மென்னு முலகமென் றுரைத்துப் பின்னும். 23

இ - ள் : என்றவள் கூறியதைக் கேட்ட வேடன் மனமிரங்கிக் கூறுகிறான். மணமுள்ள கூந்தலையுடைய பெண்ணே! நான் கூறுவதைக் கேள். இல்லறம் வளரும்படி இருக்குமொருவன் தன் மனைவியினால் அறம் முதலாய நான்கும் பொருந்தவேண்டுமென்று பெரியோர்கள் கூறுவார்கள் என்று கூறி மேலுங் கூறுகிறான் என்றவாறு. எயினன் - வேடன்.

பொங்கிள முலையாய் கேண்மோ புதல்வரைப் பெற்று யல்லை
மங்கையின் பருவத் தின்ப மாதுநீ மன்னுங் காமந்
தங்கிய காதன் மேன்மேற் றழைத்திடு மிளமை தன்னி
லங்கியில் வீழ்ந்து சாதற் கடுக்குமோ வடாது கண்டாய். 24

இ - ள் : இளமைமிக்க தனமுள்ளவளே கேள்! நீ இதுவரையில் புதல்வர்ப்பேறு அடையவில்லை. நீயோ பதின்மூன்று வயதாகிய மங்கைப் பருவமுள்ளவள். காமம்பொருந்தி ஆசைமேன்மேல் தழைக்கும் இளமையில் தீயில் விழுந்து சாதல் அடுப்பதோ? அடுப்பதல்ல என்றவாறு. மங்கைப்பருவம் - பதின்மூன்று வயதுள்ள காலம்.

மின்குல மனைய வாளி வேட்டுவர்க் கரசாய்த் தோன்று
நின்குல மைந்த னில்லா நிரயம்புக் காழ்ந்து போன
வென்குலத் தவரை யெல்லா நரகினின் றேற்றி மேலென்
புன்குலந் தன்னை யோம்பிப் புரப்பவர் யாவ ரென்றான். 25

இ - ள் : மின்னற் கூட்டமொத்த பாணமேந்திய வேடர் குலத்துக்கு அரசனாகப் பிறக்கும் உன்னுடைய வமிசபுத்திரரில்லாமல் நரகத்தில் மூழ்கிப்போன என் குலத்தாரை எல்லாம் நரகத்தில் நின்றுங் கரையேற்றி இனி என் புல்லிய குலத்தை ஆதரித்துக் காப்பவர்கள் யாரென்று கூறினான் என்றவாறு.

கருங்கயல் விழியாள் கேட்டுக் கூறினள் கருப்ப மென்னு
மருங்கயற் கடலு ளாழ்ந்தங் கழிவுறு மறிவி லாரிற்
பெருங்கய முரித்தோன் றொண்டு பேணியே மாயப் பெற்றாற்
பொருங்கய மனையாய் பின்னும் விழைவதோர் பொருளு முண்டோ. 26

இ - ள் : கரிய சேல்மீன் போன்ற கண்ணையுடையவள் தன் கணவன் கூறியதைக் கேட்டுச் சொல்லுகிறாள். யானையையொத்த பலமுள்ள கணவனே! அறிவில்லாதவர்கள் பிறவியாகிய கடலில் மூழ்கி யிறந்து போகிறதுபோலப் பெரிய யானையை உரித்த பரமசிவனுடைய அடிமைத்திறத்தை ஆதரித்து இறந்துபோகப் பெற்றால் அதற்குமேலும் விரும்பத்தக்க பொருளொன்றுள்ளதோ என்றவாறு.

புரவல மருதி யீசன் பூசனை முடிக்க வேண்டி
விரவனல் குளித்திப் போது வீவன்யா னென்ன லோடு
மரவெனத் திகழு மல்கு லாயிழை துணிவை யோர்ந்து
பரவருங் கற்பி னாளை யெரிபுகப் பணித்த லோடும். 27

இ - ள் : இறையவனே! தடுக்காதே; சிவபூசை நிறைவேற்றவேண்டி இப்போது பொருந்திய தீயில் விழுந்து நானிறந்து போகிறேனென்று சொன்ன அளவில் பாம்பின்படம் போல் விளங்குகின்ற அல்குலையுடைய தன் மனைவியின் துணிவையறிந்து யாவரும் துதிக்கத்தக்க கற்புள்ளவளைத் தீயில் விழும்படி உத்தரவு அளித்த நிலையில் என்றவாறு.

வானயா றிழிந்த தென்ன வரையினின் றிழிந்து பாயுங்
கானயா றருவி யாடிக் கலன்பல வணிந்து சுண்ண
நானஞ்செய் வாசம் பூசி நறுமலர் மாலை சூடிப்
பானுரை வெண்பட் டார்த்துக் கணவனைப் பணிந்து வாழ்த்தி. 28

இ - ள் : ஆகாயகங்கை இழிவதுபோல மலையினின்றிழிந்து பாயுங் கானாறாகிய அருவியில்நீராடிப் பலவித ஆபரணங்கள் அணிந்துகொண்டும் சுண்ணப்பொடி கத்தூரி இவைகள் சேர்ந்த சந்தனக்குழம்பு பூசிக்கொண்டும் வாசனையுள்ள பூமாலை அணிந்துகொண்டும் பாலின் நுரையையொத்த பட்டுடை அணிந்துகொண்டும் தனது கணவனை வணங்கித் துதித்து என்றவாறு.

மனையின்மீ தங்கி சேர்த்தி வலங்கொண்டு வணங்கி யேத்திப்
புனைமதிக் கண்ணி யான்றன் பொலன்கழ றெழுது போற்றித்
தினையெனு ந் துணையு நீங்கா தன்பொடு சிந்திப் போர்கள்
வினைவிலங் கறுக்கு மையா விண்ணப்பங் கேளா யென்றே. 29

இ - ள் : வீட்டின்மேல் நெருப்பைப் போட்டு வலம்வந்து சந்திரனை யணிந்த திருமுடியையுடைய பரமசிவனது பொன்னிறமுள்ள திருவடிகளை

வணங்கித் துதிசெய்து இனையளவும் நீங்காமல் தியானித்திருப்பவர்கள் வினையாகிய விலங்கைத் தறித்துவிடும் ஐயனே! அடியேனுடைய விண்ணப்பத்தைக் கேள் என்றவாறு.

இந்திரி யங்க ளைந்து மலராக வெனது காயங்
கந்தமார் புகையிற் காட்டு மகிலாகக் கருத்து நீடுஞ்
சுந்தரத் தீப மாகப் பிராணன்றுய்ப் பனவே யாக
வந்தநாற் கரண முற்று மருக்கிய மாகக் கொண்டே. 30

இ - ள் : ஐந்து இந்திரியங்கள் மலராகவும் என்னுடைய உடலானது மணம் தங்கிய அகிற்புகையாகவும் என் இதயமானது அழகுள்ள விளக்காகவும் உயிரானது நிவேதனமாகவும் அந்தக்கரண முழுவதும் அருக்கியமாகவுங் கொண்டு என்றவாறு.

அடியனேன் சீவன் பூசா பலத்தினை யடைதல் வேண்டுங்
கொடியன்யா னமரர் வாழ்வுங் குறிக்கிலேன் பிறவி தோறுந்
தடையறத் தோன்றி னுலு மாயையைத் தணந்து வெள்ளை
விடையநின் கழற்கீ ழன்பு வேண்டுவ னென்று வேண்டி. 31

இ - ள் : அடியேன் சீவன் பூசைப்பலனை அடையவேண்டுமென்று கொடியேனுகிய நான் தேவர்கள் வாழ்வையுங் குறிக்கின்றிலேன். தடையில்லாமல் எண்பத்துநான்கு இலட்சம் யோனிகள்தோறும் பிறந்தாலும் மாயையினை நீங்கி வெள்ளை இடபவாகனத்தில் ஆரோகணித்துக்கொண்டு எழுந்தருளுகின்ற நின் திருவடியின்கீழ் அன்புபொருந்த விரும்புகின்றேன் என்று வேண்டி என்றவாறு.

செங்கய லனைய கண்ணுள் செழுந்தழற் பிழம்பு தன்னுட்
பங்கய மலரிற் செல்லுந் திருவெனப் பாய்ந்து மாயப்
பொங்கிய சாம்ப ராகக் கண்டனன் புளக மோங்கி
யங்கையி னடலை யேந்தி யீசனை யருச்சித் தானே. 32

இ - ள் : செவ்விய சேற்கெண்டையையொத்த கண்ணுள் செழுமையான தீப்பிழம்பில் தாமரை மலரிற் செல்லும் திருமகள்போல விழுந்து பரிசுத்தமான சாம்பலாகக்கண்டு புளகங்கொண்டு அந்தச் சாம்பலைத் தன் உள்ளங்கையில் எடுத்துக்கொண்டு பரமசிவனை அருச்சித்தான் எ - று.

இறையவன் பூசை முற்றி யிறுதியிற் கழித்த வெல்லாம்
பிறைநுத லென்று மேற்கும் பெற்றிபோ லற்றைப் போது
மறைமுதல் பூசைச் சேடம் வாங்குவான் வந்து தோன்றி
நிறையுட னின்றுள் கண்டு நெடுந்தகை நினைவிற் றேர்வான். 33

இ - ள் : சிவபூசை இவ்வாறு நிறைவேற்றி அந்தப் பூசையின் முடிவில் கழித்துவிட்டதையெல்லாம் அவன்மனைவி நாள்தோறும் ஏற்றுக் கொள்வதுபோல அன்றைய தினமும் பரமசிவனுடைய பூசை நிருமாலியத்தை வாங்கிக்கொள்ளவந்து வணக்கமுடன் நின்றாள். அதை வேடன் கண்டு தன் மனதில் எண்ணத்தொடங்கினன் என்றவாறு.

மனைபடு தீயில் வீழ்ந்து மாண்டது மாய்ந்தாள் வெந்த
புனிதவெண் சாம்ப ராலும் பூசனை முடித்த வாறுங்
கனவுகொ னனவு தான்கொல் கழிந்தவள் வந்து நின்றாள்
வினையினால் வெந்த வில்லும் பண்டுபோல் விளங்கிற் றென்னே. 34

இ - ள் : வீட்டில் பற்றிக்கொண்ட தீயில் நம்முடைய மனைவி இறந்ததும் இறந்தவள் வெந்த புனித வெண்சாம்பலால் நாம் பூசைசெய்து நிறைவேற்றிய முறையுஞ் சொப்பனமோ? அல்லது நினைவுதானோ? இறந்தவளோ முன்போலவே வந்து நிற்கின்றாள். வினையினால் வெந்தவீடு முன்போல் விளங்கிக்கொண்டிருக்கிறது. இது என்ன காரணம் எ - று.

உளத்தினி னினையுந் தோறு மதிசயித் துவகை தோன்றத்
துளக்கற நின்ற வந்தத் துணைவிதன் முகத்தை நோக்கி
வளர்த்தசெந் தழலில் வீழ்ந்தாய் மாய்ந்திலை வந்த வாறுங்
கிளத்துதி வெந்து நீறுங் கிளர்மனை தழைத்த தோடும். 35

இ - ள் : மனதில் இவ்வாறு எண்ணுந்தோறும் வியப்படைந்து மகிழ்வுண்டாக நடுக்கமில்லாமலிருக்கிற தன் மனைவி முகத்தைப் பார்த்துப் பெண்ணே! வளர்ந்த தீயில் விழுந்த நீ இறவாமல் வந்தவாறும் வெந்து நீறான வீடு முன்னிலும் செழுமையாய் இருக்கும் முறைமையுஞ் சொல் என்றவாறு.

வேறு

என்னு மொழிந்தா னதுகேட்டலு மீது சொன்னாள்
மின்னார் தழலில் வைத்தாங்கதில் வீழ்ந்த தன்றிப்
பின்னான் விளைந்த படியீதெனப் பேச வற்றோ
பொன்னார மார்ப துயினீங்கினர் போல வந்தேன். 36

இ - ள் : என்று கூறலும் அதைக் கேட்ட வேடன் மனைவியானவள் பொன்மாலையணிந்த மார்பையுடைய என் உயிர்க்கணவனே! வீட்டில் ஒளி நிறைந்த நெருப்பை வைத்து அதில் விழுந்தது எனக்குத் தெரியுமேயல்லாமல் பின்பு விளைந்தது இவ்வாறென்று நான் கூறத்தக்கதோ உறக்கம் நீங்கினவர்கள்போல வந்தேன் என்றவாறு.

கனையா ரழனுங் கவெரிந்து கரிந்து வீழ்ந்த
மனையா னழியா வளனேடு வயங்கல் கண்டே
னெனையா ளுடையா யெனமங்கை யிறுத்த லோடு
நினையா மகிழ்வெய் தினனீது நிகழ்ந்த காலை. 37

இ - ள் : நிறைந்த தீயானது உண்ணக் கரிந்துபோன நம்முடைய வீடு அழியாத வளப்பத்துடன் ஒளிவிட்டுக்கொண்டிருப்பதைக் கண்டேன். என்னுடைய கணவனே! என்று தன்மனைவி கூறிய அளவில் நடந்த இந்த அதிசயத்தை மனதிலெண்ணி மகிழ்ச்சியடைந்தான். இதுநடந்தகாலத்தில் என்றவாறு.

வேறு

கோடி செங்கதிர் குழுமிய தெனவொளி கொழிப்ப
வாட கத்தினு மணியினு மமைத்ததோர் விமான
மூட றுத்துவான் முகட்டிழி தரவதி லுறையுங்
கேடில் சீர்க்கண நாதர்வந் தினையன கிளந்தார். 38

இ - ள் : ஒருகோடி சூரியர்கள் ஒன்றாய்க் கூடினதுபோல ஒளி தழைக்கப் பொன்னினலும் இரத்தினங்களினலும் அமைக்கப்பட்டதாகிய ஒரு தேவ விமானம் ஆகாயமுகட்டைப் பிளந்துகொண்டு இழிந்துவர அதில் வீற்றிருக்கும் அழிவில்லாத சிறப்புள்ள கணநாதர்கள் வந்து இந்த உரை கூறுகின்றார்கள் என்றவாறு.

செங்கை வார்சிலைக் கிராதநின் றேவியி னேடும்
பொங்கு பேரொளி விமானத்திற் பொருக்கென வேற்றி
யெங்க ளையக னேழினே டேழுல கீன்றாள்
பங்க னுங்குனைக் கொடுவரு கென்னவே பணித்தான். 39

இ - ள் : சிவந்த கையில் வில்லேந்தும் வேடனே! உன்னையும் உன் மனையாளையும் அதிகரிக்கும் பெரிய ஒளியுள்ள இவ்விமானத்தில் ஏற்றிக் கொண்டு எங்களிறைவனும் பதினன்கு உலகையும் ஈன்றருளிய பார்வதி தேவியார் பாகனுமாகிய பரமசிவன் தம்முடைய உலகத்துக்கு விரைவுடன் கொண்டுவருமாறு எங்களுக்குக் கட்டளையிட்டார் என்றவாறு.

அண்ண லேவலி னடைந்தன மிக்கணத் தயிலார்
கண்ணி ஞளொடும் வருகநீ யென்றனர் கழறி
விண்ணி னேர்புகழ் விளங்கொளி விமானத்தி னேற்றி
மண்ணி னேர்தொழச் சென்றனர் மங்குல்வா னெறியே. 40

இ - ள் : பரமசிவனுடைய கட்டளையினால் நாங்கள் வந்தோம். (ஆதலால்) வேலொத்த கண்களையுடைய உன் மனைவியுடன் வாவென்று கூறித் தேவர்கள் புகழும்படியான விளங்கும் ஒளியையுடைய விமானத்தில் ஏற்றிக்கொண்டு பூலோகத்தார் எல்லோரும் தொழ ஆகாயமார்க்கம் சென்றார்கள் என்றவாறு.

பாயும் வெம்பரி வேள்விக ளனைத்தையும் பரித்த
தூய ராயினு மணுகொணாச் சிவதுறக் கத்தி
லாய வேடனோ டரிவையைப் புகுத்தின ரன்னோர்
மாய நீங்கிய பேரின்ப வாழ்வினின் மகிழ்ந்தார். 41

இ - ள் : நூறு அசுவமேத வேள்விகளைச் செய்தவர்களேயானாலும் சேரக்கூடா சிவசுவர்க்கத்தில் அந்த வேடனையும் அவன் மனைவியையும் சேர்த்தார்கள். அவ்விருவரும் மாயை நீங்கிய பேரின்பவாழ்வில் மகிழ்ந்து இருந்தார்கள் என்றவாறு.

ஆத லாலரன் பூசனைக் குரியதை யறியிற்
காத லாலுறுங் கடைப்பிடி யன்றிவே றில்லை
மாது பாகனை வழிபடற் கிதுமறைப் பொருளென்
றோதி னான்றொல்லை நூலுணர் சூதனு முரவோன். 42

இ - ள் : ஆகையால் சிவபூசைக்குரியதை ஆராயுமிடத்தில் அன்பினாலுண்டாகும் உறுதிப்பாடேயன்றி வேறொன்றுமில்லை. பார்வதி பாகனை பூசைசெய்வதற்கு இதுதான் வேதத்திற் கூறும் உண்மைப் பொருளுமென்று வேதசாத்திர புராணங்கள் அறிந்த சூதமுனிவர் கூறினார் என்றவாறு.

வேடன் சிவபூசை கடைப்பிடித்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 977

பதினெட்டாவது

உமாமகேசுவரபூசை மகிமை

உரைத்த அத்தியாயம்

காதலா லொருவர் கருதுவ யாவுங் கருதிய வண்ணமே தருவ
தோதுமா கமங்க டெரிந்தெடுத் துரைத்த துமாமகேச் சுரமெனப் பகருந்
தீதிலா விரத மெவற்றினு மேலாந் திறத்ததென் றுளதென வியந்து
சூதன்மா தவத்திர் யாவருங் கேண்மி னென்றதன் வரன்முறை சொன்னான்.

இ - ள்: *ஆசையுடன் ஒருவர் நினைக்கும் பொருளையெல்லாம் அவர்கள் நினைத்தபடிதருவதும் சொல்லும் ஆகமங்களில் ஆராய்ந்தெடுத்துச் சொல்வதுமாகிய உமாமகேசுவர விரதமென்று கூறத்தக்க பழுதில்லாத விரதங்கட்கெல்லாம் மேலாந்தன்மையுள்ளதாக ஒன்றிருக்கின்றது. முனிவர்களே! அந்த விரதத்தை மகிழ்வுடன் கேளுங்களென்று அதன் முறைமைகளைச் சூதமுனிவர் கூறத் தொடங்கினார் என்றவாறு.*

கனைகட லுடுத்த புவிக்கெலா மணியாய்க் கவின்பெறு மானந்த நாட்டின்
மனைவியும் பொறைகூர் மைந்தரும் வாழ வாழ்பவன் மனையறங் காக்கும்
வினைவலான் வேத விரதனென் றுளனோர் வேதியன் றனருள் கூறுந்
தனையையுண் டொருத்தி யின்கனித் துவர்வாய்த் தார்க்குழற் சாரதை
[யென்பாள். 2

இ - ள்: *ஒலிக்காநின்ற கடல்சூழ்ந்த இவ்வுலகுக்கெல்லாம் அணிபோல்வதாய் அழகுமிக்க ஆனந்தமென்னும் நாட்டில் மனையாளும் சாந்தகுணமுள்ள மக்களும் வாழும்படி வாழ்கின்றவனும் இல்லறம் வழுவாமல் காக்கும் செய்கையில் வல்லவனுமாகிய வேதவிரதன் என்கிற பெயருள்ள ஒரு பிராமணனிருந்தான். அவன் மிகுந்த அன்பு வைத்திருக்கும் புதல்வியாகிய இனிய கோவைக்கனியை ஒத்த செவ்வாயும் தாழ்ந்த அளகபாரமும் உடையவளாய்ச் சாரதை என்னும் பெயர்பெற்ற ஒருத்தியுண்டு எ - று.*

மின்னிகர் மருங்குற் பிறைநுதற் கனிவாய் வெண்ணகைக் கருங்குழ லவடான்
பன்னிரு பருவ மடைந்துபைங் கோங்கின் பனிமுகை யெனமுலை முகிழ்த்தாள்
அன்னகா லையிலத் திருநக ராளு மரசர்கோ னின்னுயிர்த் தோழன்
நன்னெறி வழாத கருணைமால் பதும நாபனென் றுரைக்குமா மறையோன்.

இ - ள் : மின்னலை ஒத்த இடையும், பிறையை ஒத்த நெற்றியும், கோவைக்கனிபோன்ற செவ்வாயும், வெண்ணகையும், கருமை நிறமுள்ள அளகமுமுடைய அந்தப் பெண்ணானவள் பன்னிரண்டு வயதுள்ளவளாய்ப் பசுமையுள்ள கோங்கினரும்புபோலத் தனங்களுண்டாக மங்கைப் பருவம் பெற்றாள். அப்போது அந்த நகரத்தை ஆளுகின்ற அரசனுடைய இனிய உயிர்போன்ற தோழனாகிய நல்லொழுக்கம் தவறாத கருணை மிகுந்த திருமாலை ஒத்தவனாய்ப் பதுமநாபனென்னும் பெயருள்ள ஒரு பிராமணன் என்றவாறு.

உளமலி காதற் கிழத்திபல் கால முறுநல நுகர்ந்துபின் னிறப்ப
விளமைபோ யடைந்த மூப்புட னிருந்து மிருநிதி மல்கிய களிப்பாற்
றவளவாண் முறுவற் றாழ்குழற் கனிவாய்ச் சாரதை யிளநலம் வேட்டு
வளநிதித் தொகுதி முலைவிலை கொடுத்து மணவினை நொடிகென விடுத்தான்.

இ - ள் : உள்ளத்தில் மிகுந்த அன்புடைய அவன் மனைவி நெடுநாள் இன்பம் அனுபவித்துக்கொண்டிருந்து இறந்துபோனாள். அவனுக்கு இளமைப்பருவம் நீங்கிக் கிழத்தன்மை வந்திருக்கவும் மிக்க திரவியம் இருக்கிற களிப்பினால் முல்லை அரும்புபோன்ற வெண்ணகையும் தாழ்ந்த குழலும் கனிவாயுமுள்ளவளாகிய சாரதை என்பவளை விரும்பி வளப்பம் பொருந்திய மிக்க பொருள்களைப் பரியமாகக் கொடுத்து மணத்தொழில் பேசும்படி சில முதியோரை அனுப்பினான் என்றவாறு.

ஆங்கவர்க் குறுதி மொழிதலுங் கேட்ட வவிரிழைப் பொலங்கொடித் தாதை
யீங்கியா மெளிய மகட்கொடை நேரா யின்னுரை மறுத்தன மாயிற்
றேங்குநீ ருலக மொருகுடை நிழற்றுஞ் செய்யகோ லிறைவலி யானங்
கோங்கிள முலையாண் மணவினை முடிப்பன் கொடியனென் றுணர்ந்தன
[னோர்ந்தான். 5

இ - ள் : அந்த முதியோர்கள் போய்த் தாங்கள் வந்த காரியத்தைக்கூறலும், ஒளிவிடும் ஆபரணங்கள் அணிந்த பொற்கொடிபோன்ற சாரதை என்பவளுடைய தகப்பன் கேட்டு நாம் இப்போது ஏழையாயிருக்கின்றோம். ஆதலால் வந்தவர்களுக்கு இனிய வார்த்தை சொல்லாமல் கன்னிகையைக் கொடுக்கிறதில்லை என்று மறுத்துச் சொல்வோமேயானால் அந்தப் பிராமணன் துட்டன். மேலும் கடல்சூழ்ந்த இவ்வுலகத்துக்கெல்லாம் தன்னொரு குடைநிழலைச் செய்யும் செங்கோலுள்ள அரசனுடைய வலிமையினால் பலாத்காரமாக மணஞ்செய்துகொள்வானென்று யோசித்துப் பெண் கொடுக்கச் சம்மதித்தான் என்றவாறு.

கொய்யுளை மான்றேர்ப் பரிதிவான் முகட்டிற் குறுகிய நண்பகற் காலைச்
செய்தவக் கிழமை யந்தணர்க் கெல்லாம் செழுநிதிப் புனலொடும் வழங்கி
நெய்சொரி வேள்விக் கனலிசான் ருக நிரைவளைச் செங்கரம் பற்றி
மொய்குழற் கனிவாய் முகிழ்முலை யணங்கை முறையினின் மறையவன்
[வேட்டான். 6

இ-ள்: கத்தரித்த கழுத்து மயிரையுடைய பச்சைக் குதிரைகட்டிய தேரில் வரும் சூரியன் விண்ணின் உச்சியிற்சேர்ந்த நடுப்பகல் காலத்தில் செவ்வையாகிய தவத்தினுக்குரிய பிராமணருக்கெல்லாம் மிக்க பொருள்கள் நீருடன் தானமாகக் கொடுத்து, நெய் சொரியப்படும் வேள்வித்தீ சான்ருக ஒழுங்குபட வளையலணிந்த கையைபபற்றி, மொய்த்த அளகமும் கனிவாயும் தாமரை அரும்பை ஒத்த தனமுமுள்ள சாரதை என்பவளைப் பதுமநாபன் என்னும் பிராமணன் மணம்செய்துகொண்டான் என்றவாறு.

வாம்பரித் தடந்தேர்ப் பரிதிவா னவன்போய் மறிதிரைக் குடகடல் குளிப்ப
வாம்பல்வா யவிழு மாலையங் காலத் தந்திவந் தனைத்தொழின் முடித்துத்
தீம்புனற் றுறைநின் றகன்றுவல் லிருளிற் றிரும்பலுந் தீவிட மொழுகுந்
தூம்புடை யெயிற்று வாளராத் தீண்டச் சோர்ந்துயிர் துறந்தனன்
[மறையோன். 7

இ-ள்: தாவிச்செல்லும் பச்சைப் புரவிகட்டிய தேரையுடைய சூரியன் போய் மறித்துவரும் அலைகளையுடைய மேற்றிசைக்கடலில் மறைய அல்லிமலர்கள் முகமலரும் அந்திப்பொழுதில் மணக்கோலமுள்ள பிராமணன் சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு இனிய நீர்த்துறையினின்று நீங்கி இருட்பொழுதில் தன் வீட்டுக்குவரத் திரும்பின அளவில் தீயொத்த விடம் ஒழுகும்படியான துவாரத்தோடுகூடிய பற்களையுடைய அரவம் தீண்டுதலினல் அந்தப் பிராமணன் சோர்வுடன் இறந்தான் என்றவாறு.

தொடிமலர்ச் செங்கை பற்றுபு மணந்தோன் சூழ்வினை யுருத்தொரு ஞான்றும்
வடிமலர்க் கோதை நன்னலம் பருகான் மாய்ந்தன னென்பது கேளாக்
கொடியவெந் துயருற் றன்னவன் கிளைஞர் குழுமியாங் கவலமுற் றரற்றிக்
கடன்முறை கழிப்பான் பழமறை விதியாற் கதழெரி படுத்தினர் மீண்டார். 8

இ-ள்: மனைவியின் வளையலணிந்த செந்தாமரை மலர்போன்ற கையைப்பற்றி மணஞ்செய்துகொண்டவன் சூழ்ந்த வினையினல் சிறப்பட்டு சீவிப் பின்னிப் பூவணிந்த அளகத்தையுடைய அம்மனைவியினின்பம் ஒரு நாளும் அனுபவியாமல் இறந்துபோனன் என்பதைக் கேட்டுக் கொடியதாகிய துயரமடைந்து அவன் உறவினர் அவலங்கொண்டு அழுது இறுதிக் கடன் செய்து முடிக்க வேதவிதிப்படி வேகமாகப் பற்றி எரியும் தீயில் சவத்தை வைத்து வந்துவிட்டார்கள் என்றவாறு.

மலர்தலை யுலகு பரவுசா ரதையை மணம்புணர் காதலன் கலவி
நலனறக் கனிந்த மூப்பின னாகி நாளுலந் திறத்தலி னாலே
யலர்கருங் குவளை மதர்விழி பனிப்ப வருந்துயர் நனியுழந் திலளாய்க்
கலனணி யொருவிக் கைமையாய்த் தந்தை கடிமனை யிருந்தன ளன்றே. 9

இ - ள்: பரந்த இடத்தையுடைய பூவுலகத்தவர் துதிசெய்யத் தக்க கற்புள்ள சாரதை என்பவள் தன் கணவனானவன் கலவியின்பம் அனுபவிக்கும் தன்மை நீங்கும்படி முதிர்ந்த மூப்பையுடையவனாய் வாழும் நாள் முடிந்து இறந்தமையால் மலர்ந்த நீலோற்பல மலர்போன்ற கண்களில் நீர் பெருக மிக்க துயரம் அடையாதவளாய் மங்கிலியத்தை நீக்கிவிட்டுத் தன் தந்தையின் இல்லிலிருந்தாள் என்றவாறு.

இன்னணந் திங்கள் சிலகழிந் திடலு மெல்லையில் பருவங்கள் கடந்தோன்
முன்னை நான் மறையு மாகம நூலு முழுதுணர் சாந்தனு முரவோன்
நன்னெறி வழாத வருந்தவக் கிழமை நயித்துவ னென்னுமா முனிவன்
றன்னடி தொழுமோர் வேதியன் விடுப்பச் சாரதை மனையின்வந் திறுத்தான்.

இ - ள்: இவ்வாறு சில திங்கள் செல்லுமளவில் அளவற்ற ஆண்டுகள் நீங்கினவரும் பழமையாகிய நான்கு வேதங்களும் ஆகமங்களும் சாத்திரங்களுமாகிய இவைகள் முழுவதையுந்தேர்ந்து சாந்தகுணம் உள்ளவருமாகிய நல்லொழுக்கத்தில் மாறுபடாத தவத்திற்குரிய நயித்துரு என்னும் முனிவர் தமது திருவடியைத் தொழும்படியான ஒரு முனிவரை அனுப்ப அவர் சாரதை வீட்டிற்கு வந்தார் என்றவாறு.

வருதலு மவடன் தந்தைதாய் கிளைஞர் மற்றொரு வினையம்வேட் டவணின்
றொருசிறை யகலத் தமியளாய் மனையி னுறைபவ ணங்குலத் தேவ [றேத்திக்
னரிதின்வந் தடைந்தா னெனமகிழ்ந் தெதிர்கொண் டடிமல ரிறைஞ்சிநின்
கரதலங் கூப்பி யான்செயும் பணியென் கடவுளே யருள்கெனப் பின்னும். 11

இ - ள்: அந்த முனிவர் வந்தபோது அவள் தகப்பன் தாய் சுற்றத்தார்கள் முதலியோர் ஏதோ ஒரு காரியத்தைக் குறித்துத் தங்கள் வீட்டினின்றும் புறப்பட்டு ஓரிடத்துக்குப் போயிருப்பதனால் தனியாயிருக்கும் அந்தச் சாரதையானவள் கண்டு நம்முடைய குலதெய்வமே முனிவர் வடிவங்கொண்டு எழுந்தருளியது என்று மகிழ்வடைந்து எதிர்கொண்டு அவர் திருவடிமலரை வணங்கித் துதிசெய்து கைகளைக் குவித்துக்கொண்டு நின்று சுவாமிகளே! அடியேன் செய்யும் பணி யாதோ கட்டளையிடவேண்டுமென்று கூறிப் பின்னும் என்றவாறு.

வெறிகமழ் கமலச் சேவடி விளக்கி வியரெலாம் புலர்ந்திட வீசி
நறுமலர் வாசப் புழுகுநெய் தேய்த்து நனிபனி நீர்சொரிந் தாற்றிச்
சிறுமதிக் கண்ணி யண்ணல்பூ சனையின் செவ்வியிற் றவிசினி லிருத்தி
முறிமிடை படலைச் செழுமலர் சூட்டி முருகுலாஞ் சந்தமும் புனைந்தே. 12

இ - ள் : மணங்கமழுஞ் செந்தாமரை மலர்போன்ற திருவடிகளை நீரினல் கழுவி உடம்பிலுண்டாயிருக்கும் வியர்வையெல்லாம் நீங்க விசிறி நல்ல மலரும் மணமுமுள்ள புழுகும்சேர்ந்த எண்ணெய் தேய்த்து மிகுதியாகப் பனிநீர்சொரிந்து நீராடச்செய்து இளந்திங்களை மாலைபோல் அணிந்திருக்கும் பரமசிவனைப் பூசிக்கு முறைமைபோல இருக்கையில் வீற்றிருக்கச் செய்து துளிர்களுஞ்சேர்ந்த மாலைசூட்டி வாசனை மிகுந்த சந்தனமும் பூசி என்றவாறு.

காரகில் கமழுந் தூபத்தட் டேந்திக் காதலிற் பூசனை புரியா
வார்வமோ டினிய வறுசுவை யடிசி லருத்தின ளருந்தின ளுகி
வார்சடை முனிவன் பெருகிய வுவகை மலிதொறு மனங்களி சிறப்பத்
தார்மணங் கமழாப் புரிகுழற் கின்பந் தழைத்திட வாசிகள் சொன்னன். 13

இ - ள் : கருமை நிறமுள்ள அகில்கட்டை முதலிய பொருள் சேர்ந்த தூப தீபாராதனை செய்து அன்புடன் இனிய அறுசுவையுள்ள அன்னமும் உண்ணும்படி வேண்டினள். நீண்ட சடையையுடைய அந்த முனிவர் உணவும் உண்டு (அவர் செய்யும் பத்தியினல்) பெருகாநின்ற மகிழ்வு நிறையுந்தோறும் நிறையுந்தோறும் மனதில் களிப்பு மேலிடப் பூமாலையின் மணம்கமழாத அளகத்தையுடைய சாரதை என்பவளுக்கு இன்பம் பெருகத் தக்கதாக வாழ்த்துரை கூறினர் என்றவாறு.

பண்கனி தீஞ்சொற் றெரிவையே யமரா வதியினர் செல்வமே போலக்
கொண்கனு நீயு மளப்பருங் காலங் கோதிலா நன்னல னுகர்ந்து
திண்கட லுலகில் பலகலை தேருஞ் சிறுவனைப் பயந்து நிக் கெல்லாம்
வண்புகழ் நிறைந்தோர் தெய்வதங் காப்ப வாழ்திரென் றகமகிழ்ந்
[துரைத்தான். 14

இ - ள் : இசைபோல முதிர்ந்த இனிய உரையுள்ள மாதே! தேவர்கள் செல்வம்போல உன் கணவனும் நீயும் பலகாலம் வரையில் குறைவில்லாத இன்பம் அனுபவித்துத் தெளிந்த கடல்சூழ்ந்த இவ்வுலகில் பல சாத்திரங்களும் ஆராயத்தக்க புதல்வனை ஈன்று எட்டுத் திக்குகளிலும் புகழ்நிறைந்த ஒப்பற்ற கடவுள் காக்கத்தக்கதாக வாழக்கடவீர்கள் என்று மனமகிழ்ந்து கூறினர் என்றவாறு.

மடவர லதுகேட் டதிசயித் தந்தோ மறைவலாய் நினதுமெய் வரங்கள்
கடிமணக் கலநீத் தெவ்வமோ டிருக்கும் கைமையேற் கன்னவை தாரா
தடுதொழின் ஞமலிக் கும்பரா ரமுதம் அருந்துதல் போலவு மொழிந்து
படுபசுங் கூழிற் பொழிமழை போன்றும் பயனில வாயிறந் ததுவே. 15

இ - ள் : சாரதை என்பவள் அந்த முனிவர் கூறியதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அந்தோ முனிவரே உம்முடைய உண்மையுள்ள வரங்கள்

மங்கிலியமிழந்து துன்பத்துடனிருக்கும் கைம்பெண்ணாகிய எனக்கு இன்பங்களைத் தராமல் கொலைத்தொழிலையுடைய நாய்க்குக் கிடைப்பதற்கரிய தேவ அமிழ்தத்தை உண்பதுபோலவும் உலர்ந்து பட்டுப்போன பயிரில் பொழிகின்ற மழைபோலவும் பயனின்றி வீணாகிவிட்டதே என்றவாறு.

கோட்டமில் குணத்தாய் தமியனேன் கயினி கோதிலா விளமைவீ ணிறப்ப
வீட்டுதீ வினையின் பயனுழக் கின்றே னினியுன தாசியின் பயனை [றுரைப்பக்
வேட்டவை பெறுதற் கெந்தவா றுரியேன் வினையினின் னடிச்சியென்
கேட்டமா த்வத்தோன் வருந்தலை யிது நீ கேட்டியென் றின்னன புகன்றான்.

இ-ள்: மாறுபடுதலில்லாத நற்குணமுள்ள முனிவரே! தமியேனாகிய யான் கைம்பெண். பழுதில்லாத இளமைப்பருவம் வீணிற் கழிந்துவிட முன் பிறவியில் தேடிக்கொண்ட வினைப்பயனை அனுபவிக்கிறேன். இனி உம்முடைய ஆசீர்வாதப் பயனாகிய இன்பங்களை விரும்பிப் பெறுவதற்கு எவ்வாறுரியேன். தேவரீருடைய அடிச்சி என்று கூறினாள். அது கேட்ட முனிவர் சாரதையைப் பார்த்து, நீ வருந்தாதே நான் கூறுகின்ற உரையைக் கேளென்று இந்த உரைகள் கூறுகிறார் என்றவாறு.

கருவிழி மறைந்தே னளித்தநல் வார்த்தை
கயற்கணாய் மெய்ம்மையாக் குவனென்
னுரைமனக் கோடி யுமாமகேச் சுரமென்
றொருதவ விரதமொன் றதனைப்
புரிவையே லுள்ளங் கருதிய வெல்லாப்
பொருளும்வந் துறுமெனப் புகலச்
சுரிகுழ லணங்கு கேட்டது புரியுந்
தொன்முறை பகரெனச் சொன்னான். 17

இ-ள்: சேற்கெண்டையை ஒத்த கண்களையுடையவளே! கண் தெரியாதவன் சொன்ன இந்த உரை உண்மையாகும்படி செய்கிறேன். என்னுரையை உன் மனதில் உறுதியாக நம்பு. என்னென்றால் உமா மகேச்சுரம் என்பதாக ஒரு தவவிரதமுண்டு. நீ அந்த விரதத்தை மேற்கொண்டால் மனத்தில் எண்ணிய பொருளெல்லாம் வந்து சித்திக்குமென்றுகூற அதைக்கேட்ட சாரதை அந்த விரதமிருக்கும் பழமையான முறைமையைக் கூறுமென்று வினவ முனிவர் சொன்னார் என்றவாறு.

வளமலி வேனிற் சித்திரை பனிகூர்
மார்கழி யிவற்றிலோர் மதியி
னிளமதிக் கலையால் வளர்முதற் பக்கத்
தியைந்தநற் றினத்தினிவ் விரத

முளமலி யன்பாற் ருெடங்கியெட் டீரே
  ழுறுதிதி பூரணை யுவாவென்
றளவுசேர் திதியோர் நான்கினுந் தெண்ணீ
  ராடியோர் மண்டப மமைத்தே. 18

இ - ள்: வளப்பங்கள் நிறைந்த வசந்தகாலமாகிய சித்திரைமாதம் பனி மிகுந்த மார்கழிமாதம் என்னும் இந்த இரண்டுக்குள் ஒரு மாதத்தில் இளந்திங்கள் கலையினுல் வளருகின்ற பூர்வபட்சத்தில் பொருந்திய நல்ல நாளில் இவ்விரதத்தை அன்புடன் தொடங்கி அட்டமி சதுர்த்தசி பருவம் என்று சொல்லப்படுகின்ற நான்கு திதியிலும் நீராடி ஒரு மண்டபம் அமைத்து என்றவாறு.

மஞ்சரி நறுந்தண் கோதைக ணாற்றி
  வயங்குபட் டாடைகம் பலமாய்
விஞ்சுபே ரொளிய நவமணிக் கோவை
  விதானஞ்செய் கனகமண் டபத்திற்
செஞ்சுடர்ப் பசும்பொ னேட்டறுத் ததனுற்
  றிருவுரு வமைந்தநா தனையு
மஞ்சிறைக் களிவண் டிமிர்பொழி லிமயத்
  தணங்கையுந் தாபிதஞ் செய்தே. 19

இ - ள்: பூங்கொத்துக்களாலாகிய வாசனையும் குளிர்ச்சியும் உள்ள மாலைகள் தொங்கக்கட்டி விளங்குகின்ற பட்டாடை கம்பலமாய் மிகுந்த ஒளியுள்ளதான நவரத்தின மாலைகளுடன் மேல்விதானம் கட்டிய பொன் மயமான மண்டபத்தில் ஒளியுள்ளதாய் மாற்றுயர்ந்த பசும் பொன்னினுல் திருவுருவம் அமைத்த பரசிவத்தையும் அழகிய சிறகுள்ளதாய்க் களிப் பினையுடைய வண்டுகள் இசை பாடிக்கொண்டிருக்கும்படியான சோலை சூழ்ந்த இமயமலையினிடத்தில் திருவவதாரஞ்செய்த பார்வதி தேவியாரை யும் தாபிதம்செய்து என்றவாறு.

சதுமறை புகழும் பஞ்சகவ் வியத்தாற் றகவொடு புனிதமாக் கியபின்
புதுமலர்த் தேனுங் கன்னலு மிரதம் பொழியுமுக் கனியொடுங் கலந்து
விதிமுறை சாத்தி அஞ்செழுத் தாகி விளங்குமந் திரத்தினே டீசன்
கதிதரு மேகா தசவுருத் திரத்தாற் கடிகமழ் பூம்புன லாட்டி. 20

இ - ள்: நான்கு வேதங்களாலும் புகழத்தக்க பஞ்சகவ்வியத்தால் தகுதியுடன் பிம்பசுத்தி செய்தபின் புதுமலர்த் தேனும் கருப்பஞ் சாறும் முப்பழச்சாறுங் கலந்து விதிப்படி சாத்தி பஞ்சாட்சரஞ்சொல்லி அம்மந் திரத்துடன் சிவபெருமான் பதவியைத் தரத்தக்க ஏகாதச உருத்திர மந்தி ரத்தினுல் வாசனை கமழும் திருமஞ்சனநீர் அபிஷேகஞ்செய்து என்றவாறு.

விரிகதிர்ப் பசும்பொற் பீடமேல் வைத்து வேறொரு தவிசினைப் பொருந்தி
யருமறை யாதி மந்திர மோதி யங்குலி நாசியி லமையா
வொருவழி யுள்ள நிறுவியஞ் சலிசெய் துறுபவத் தீவினை தொலைய
விருமைநற் பயனுஞ் செல்வமும் வீடும் எமக்கருள் புரிகவென் றுணர்வால்.

இ - ள் : பரந்த ஒளியுள்ள பொன்னினாற் செய்யப்பட்ட ஆசனத்தில் எழுந்தருளப்பண்ணி தான் வேறொரு ஆசனத்திலிருந்துகொண்டு அரிய வேதத்துக்கு முதலாகிய பிரணவமந்திரம் சொல்லி விரலை மூக்கினிடத்து வைத்து மனத்தை ஒருவழியில் நிறுத்தி வந்தனைசெய்து மிக்க பிறவித் துயரம் திரும்படி இம்மை மறுமையென்னும் இகபர சவுக்கியமும் முத்தியும் எனக்குக் கருணைசெய்ய வேண்டுமென்று ஞானத்தினால் எ - று.

குளிர்கலை கெழுமி யளவில்வெண் டிங்கள் குழுமிவீற் றிருந்தன வெண்ணீ
றொளிர்திரு மேனி யிள நிலவெறிப்ப வுவர்படு தடங்கடற் றோன்றி
வளரிளம் பரிதி கோடியோர் வடிவாய் வாளொளி பரப்புவ தேய்ப்ப
வளிமுரல் கடுக்கை புனைசடா மகுடத் தஞ்சுடர் முதுவெயில் கொழிப்ப. 22

இ - ள் : குளிர்ச்சி தங்கிய கலைகளைப் பொருந்திய அளவற்ற சந்திரர்கள் கூட்டமாய் வீற்றிருப்பதற்கொப்பாக வெண்மை நிறமுள்ள திருநீறானது பிரகாசியாநின்ற திருமேனியானது இளநிலவின் ஒளியை வீசவும் உப்புள்ள பெரிய கடலில் உதயமாகி வளருகின்ற கோடியிளஞ் சூரியர்கள் ஒரு வடிவமாகி மிகுந்த ஒளியைப் பரப்புவதை ஒப்பாக வண்டுகள் இசைபாடிக் கொண்டிருக்கும்படியான கொன்றை மாலை அணிந்த சடாமகுடத்து அழகிய ஒளியானது முதிர்ந்த வெயிலைப் பரப்பவும் எ - று.

செங்கதிர் விரிக்கு முடிமிசை யொருபாற் சிறுமதிக் கலைநிலாத் தவிழக்
கங்கையம் பெயரா றெறிதிரை யொருபாற் கடுக்கையஞ் செழுந்துணர்
குங்குமக் குவடு பொருவுதிண் புயத்துக் கூரெயிற் றரவணி மிளிர[கொழிப்பக்
வங்கைக ளபய வரதமோ டிளமா னணிதிகழ் மழுப்படை தழைய. 23

இ - ள் : செம்மை நிறமுள்ள ஒளியை விரிக்காநின்ற திருமுடியின் ஒருபுறத்தில் இளம்பிறையின் ஒளியானது விரியவும் ஒருபுறத்தில் கங்கை என்னும் பெயருள்ள நதி வீசுகின்ற அலைகள் செழுமையான கொன்றைப் பூங்கொத்துக்களைக் கொழிக்கவும் குங்குமமலையை ஒத்த திண்ணிய புயங்களில் கூர்மையான பற்களையுடைய அரவாபரணங்கள் ஒளிவிடவும் அழகிய திருக்கரங்கள் நான்கில் ஒன்று அபயகரமும் ஒன்று வரதகரமும் ஏனை இரண்டில் மானும் அழகுடன் ஒளிவிடுகிற மழுப்படையும் விளங்கவும் என்றவாறு.

அடுகொலே மதன னெரிபடச் சிவந்த வனல்விழி திருநுதன் முகிழ்ப்பத்
தொடுகடற் றிரைவாய்ப் படுவிட மிடற்றி சுடரெறித் திருணிறங் கொழிப்பக்
கொடுவரி யதளி னுடைபிணி விசித்த கோளரா மருங்கினிற் ருழ
வுடல்சின வுருமிற் பிளிறுமால் யானை யுரிவைபொன் மேனியைப் போர்ப்ப.

இ-ள்: காமுகரை வருத்துகின்ற மன்மதன் எரிந்துபோம்படி சிவந்த அக்கினிக் கண்ணனது திருநெற்றியில் முகிழ்த்தவண்ணமாயிருக்கவும் வளைந்த அலைகடலிலுண்டான விடமானது திருக்கண்டத்தில் ஒளிவிட்டுக்கொண்டு கருநிறம் பொழியவும் புலித்தோலாடை பிணிப்புறக் கச்சாகக் கட்டிய வலியுள்ள அரவானது திரு அரையில் பொருந்தவும் கோபமே உருவங்கொண்டது போன்று இடிபோல் ஆரவாரிக்கும் பெரிய யானைத்தோற்போர்வையானது பொன்னிறமுள்ள திருமேனியில் போர்க்கப்பட்டிருக்கவும் என்றவாறு.

தினகர னொளியில் விஞ்சொளி பரப்புஞ் செஞ்சுடர்ப் பருமணி யிமைக்குங்
கனகமா மடங்கற் றவிசின்வீற் றிருக்குங் கருணையங் கடலைமெய் யடியார்
நினைதொறு மின்பந் தருஞ்செழுந் தேனை நிறைமலர்க் கற்பகக் கனியை
யனகனை யாதித் தனிப்பெருஞ் சுடரை யமலனை நினைந்துபி னன்பால். 25

இ-ள்: சூரியனுடைய ஒளியினும் அதிகமான ஒளியைப் பரப்புகின்ற செஞ்சுடரையுடைய பெரிய இரத்தினங்கள் பிரகாசியாநின்ற பொன்மயமான சிங்காசனத்தில் வீற்றிருக்கும் அழகிய கருணைக்கடலை உண்மையான அடியார்கள் சிந்திக்குந்தோறும் இன்பம் அருளும் செழுந்தேனை மலர்நிறைந்த கற்பகம் தருகனியை விமலனை ஒப்பற்ற ஆதியாகிய பெரிய சோதியை நிருமலனை மனத்தில் தியானித்துப் பின் அன்பினுல் எ-று.

வளைகடற் றிறைவா யிருளறத் துரந்து வருபதி னயிரம் பரிதிக்
கிளையொரு வடிவு கொண்டெனச் சோதி கிளர்திரு மேனிநின் றெளிர
விளையளா யபய வரதமோ டன்ப ரேத்துபா சாங்குச மேந்தித்
தளையவிழ் முளரிச் செங்கைநான் கிலங்கத் தாழ்குழல் புயலை வீறழிப்ப. 26

இ-ள்: இருள் நீங்கும்படி துரத்திப் பூமியைச் சூழ்ந்த அலைகளையுடைய கடலினிடத்தில் உதயமாகி வருகின்ற பதினயிரம் சூரியக்கூட்டம் ஒரு வடிவங்கொண்டது போலச் சோதி விளங்கும் திருமேனி ஒளிவிடவும் பாலையாய் அபய வரதமுடன் அன்பர்கள் துதிசெய்கின்ற பாசாங்குச மேந்திய முறுக்குகள் விரியுந் தாமரைமலர் போன்ற நான்கு திருக்கரங்களும் ஒளிவிடவும் தாழ்ந்த அளகபாரம் மேகத்தின் பெருமையை அழிக்கவும் என்றவாறு.

துண்டவெண் பிறையு மதியமும் போலச் சோதிவா ணுதலொடு வதன
மண்டலங் கவின மல்லிகை மாலை வார்குழற் சூழிய நதழைப்பத்
தண்டளிர் பிண்டி புன்னைசண் பகப்பூந் தாரிரு செவிப்புறந் தாழக்
குண்டல மலம்பிப் பசுங்கழைத் தோளிற் குருமணி யிளவெயில் கொழிப்ப.

இ-ள்: துண்டமாகிய வெண்பிறைபோல் திருநெற்றியும் பூரண சந்திரன்போலத் திருமுக மண்டலமும் அழகைச்செய்யும் மல்லிகைப் பூமாலையணிந்த அளகத்தில் சூழியக் கொண்டையும் விளங்கவும் குளிர்ச்சி பொருந்திய துளிர்களையுடைய அசோகு புன்னை சண்பகம் இவற்றின் மலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகள் இரண்டு காதுகளின் புறத்தில் தொங்கவும் ரத்தின குண்டலங்கள் பொருந்தி அசையும் பச்சை மூங்கிலை யொத்த தோளில் நிறந்தங்கிய மாணிக்கம் இளவெயிலைப் பரப்பவும் எ-று.

அஞ்சுட ரெறிக்கு மணிசெய்பொன் னுரை மலர்முலை யாகத்து மிளிரச்
செஞ்சுடர் விரிக்கும் பொலந்தொடி பசிய செழுங்கழைத் தோளினி னிலவ
வஞ்சிநுண் மருங்குல் கவினிய கோவை வாமமே கலையொளி தழைப்ப
பஞ்சின்மெல் லடியிற் பருமணி யிமைக்கும் பரிபுரஞ் சேயொளி பரப்ப. 28

இ-ள்: அழகிய ஒளியை வீசுகின்ற மணிகள் பதித்த பொன் மாலைகள் அடிபரந்த தனமுள்ள மார்பில் விளங்கவும் ஒளியை விரிக்கும் பொன்னுலாகிய செழுமையுள்ள ரத்தினங்கள் பதித்த தோளணி பச்சை மூங்கிலையொத்த தோள்களில் விளங்கவும் பூங்கொடிபோன்ற நுண்ணிய இடையில் அழகிய மணிவடமாகிய மேகலாபரணத்தின் ஒளி தழையவும் செம்பஞ்சினும் மெல்லியவாகிய திருவடிகளில் பெரிய ரத்தினங்கள் பதித்த நூபுரங்கள் செவ்விய ஒளியைப் பரப்பவும் என்றவாறு.

எரிமணிக் கலாப மிலங்குபட் டாடை
யெழில்பெறப் புனைந்துசெஞ் சாந்தும்
விரைமலர்ச் செய்ய தொடையலு மணிந்து
மின்னெனப் பொலிந்தபூங் கொம்பை
யரிமதர் மழைக்கட் கருணைநோக் கடியார்க்
கருள்செயு மணங்கையா மளையை
வரையர சளித்த பச்சைமா மணியை
வனமுலை யமலையை நினைந்தே. 29

இ-ள்: தீ நிறமுள்ள மாணிக்கங்கள் சேர்ந்த அரைப்பட்டிகையை மேலேசேர்த்த பட்டாடையை அழகுபொருந்தத் தரித்துச் செஞ்சந்தனமும் மணம்தங்கிய பூமாலையுமணிந்து மின்னலைப்போல விளங்கும் பூங்கொம்பை, செவ்வரி பரந்த களிப்புற்ற மேகம்போற் கருமையுள்ள திருக்கண்களால்

கருணை நோக்கம் அடியார்க்கருளும் தேவமாதை, யாமளையை, மலையரையன் பெற்ற மரகதமணியை, அழகிய தனங்களையுடைய அமலையை நினைந்து என்றவாறு.

உளக்கம லத்தி னின்னணந் தியானித் துவகைகூர்ந் தகமகிழ் சிறந்து
களித்தபின் பசும்பொன் விம்பமே லன்பு கனியவா வாகனம் புரியா [து
வளித்திடு முறையா லருக்கிய முதல வளித்துநன் மணங்கொள்சாந் தணிந்
துளித்திளந் தேறல் வழிதொடை சூட்டித் துணரிணை லருச்சனை புரிந்தே. 30

இ - ள் : இருதயதாமரையில் இவ்வாறு தியானித்து மனதிலே மகிழ்ச்சி கொண்டு களிப்புற்றபின் பசும்பொன்னாலாகிய விம்பத்தினிடத்தில் அன்புமுதிர ஆவாகனஞ் செய்து கொடுக்காநின்ற முறைமைப்படி அருக்கிய முதலானவை கொடுத்து நல்ல மணமுள்ள சந்தனம் அணிந்து தேன் துளித்துப் பெருகுகின்ற பூமாலையணிந்து மலர்களால் அருச்சனையும் செய்து என்றவாறு.

முகையிள முல்லை யனையபா லடிசின் முதலவா முணவினி தளியா
வகமகிழ் வெய்தக் கனலிவாய் நூற்றெட் டாகுதி நறுநெய்யாற் புரிந்து
புகைகமழ் தூப தீபத்தட் டேந்திப் பொருவினீ ராஞ்சன முதவி
நகைமதிக் கண்ணி பண்ணலோ டுமையை நண்பினுத் தியாபனஞ் செய்தே.

இ - ள் : முல்லை அரும்பினையொத்த பாலன்னம் முதலியவைகளை இனிதாகப் படைத்து மனமகிழ்ச்சியடைய ஓமத்தீயினிடத்தில் நெய்யினால் நூற்றெட்டாகுதி செய்து வாசனைப்புகை பரிமளிக்கும் தூபத்தட்டும் தீபத்தட்டும் ஏந்தி ஒப்பில்லாத நீராஞ்சனஞ் செய்து ஒளிவிடுஞ் சந்திரனை மாலைபோல அணிந்திருக்கும் பரமசிவனையும் பார்வதிதேவியாரையும் அன்புடன் உத்தியாபனஞ்செய்து என்றவாறு.

மறையவ னொருவன் மனைவியோ டிங்கு வருகவென் றழைத்தவர் தம்மைப்
பிறையணி வேணி யண்ணலோ டிமையப் பெண்ணமு தாகவுட் கருதி
நறைமலர் தூவி யறுசுவை யடிசி னல்கிவெங் கதிர்படு காலை
குறையறு பூசை முடித்தனல் வேள்விக் கோதிலாச் சேடமாங் கயின்றே. 32

இ - ள் : ஒரு பிராமணனை அவன் மனைவியுடன் வரவழைத்து அவர்களைப் பிறையணிந்த சடையையுடைய பரமசிவனும் பார்வதியுமாகப் பாவனை செய்து வாசனையுள்ள மலர்களால் அருச்சித்தும் அறுசுவையுள்ள உணவு அளித்தும் சூரியன் மறையும்போது குறைவில்லாத பூசையை நிறைவேற்றிக் குற்றமில்லாத யாகசேடத்தைப் புசித்து என்றவாறு.

வருமதி தோறும் பக்கமோ ரிரண்டில் வான்றரு நற்றிதி நான்கி
லருமறை யேத்து மாகம விதியா லன்பொடு பூசனை யியற்றிப் [த
பருவமொன் றிறந்த பின்னர்நாண் மதியும் பைந்துணர்க் கொன்றையு மிலைந்
வொருதனி முதலோ டிமயமீன் றெடுத்த வுமையையுட் களிகொள நினைந்தே.

இ - ள் : மாதந்தோறும் வருகிற இரண்டுபட்சத்திலும் சிறந்த தாகிய நல்ல திதிகள் நான்கிலும் அரிய வேதாகம விதிப்படி அன்புடன் பூசைசெய்து ஒரு ஆண்டு சென்றபின்பு இளம்பிறையும் கொன்றைமாலையு மணிந்த ஒப்பற்ற முதலாகிய பரமசிவனையும் மலையரையன் தவத்திற் பெற்ற பார்வதிதேவியாரையும் உளத்தாமரையில் தியானித்து என்றவாறு.

நூனெறி நாடி யுருத்திர சமக நுவன்றெடுத் தோதிவண் டிமிர்பூந்
தேனெடு தீம்பா றெங்கின்முப் புடைக்காய்த் தெண்புன னதியொடு வாச
நானநீ ராட்டி நறியசாந் தணிந்து நாண்மலர்ச் செழுந்தொடை சாத்திப்
போனகம் பாலித் தேத்தெடுத் திறைஞ்சிப் பூசனை வரன்முறை முடித்தே. 34

இ - ள் : வேதாகமவிதிப்படி ருத்திரமானியாச மந்திரஞ் சொல்லி வண்டுகளிசைபாடிக்கொண்டிருக்கும் நல்ல தேன் சுவையுள்ளபால் இளநீர் தயிர் வாசனையுள்ள கத்தூரி கலந்தநீர் இவைகளால் அபிஷேகஞ்செய்து நல்ல சந்தனம் அணிந்து பூமாலை சாத்தி அன்னம் நிவேதித்து அதன் பின் துதிசெய்து அட்டாங்கமாகப் பணிந்து இவ்வாறு பூசையை முடித்து என்றவாறு.

தூசொடு பைம்பொன் விம்பமு மிலகுஞ் சுடர்மணிக் கும்பமு மகிழ்ந்து
தேசிகற் கருளி யந்தணர்க் கெல்லா ந் தீஞ்சுவைப் போனகம் வழங்கிக்
காசொடு கனகம் வேண்டுவ நல்கிக் காதலாற் றமருட னயின்று
மாசறு விரத முடிப்பதா கமத்தின் வரன்முறை மதிநுத லணங்கே. 35

இ - ள் : ஆடையாபரணங்களும் பிம்பமும் சோதியையுடைய ரத்தினகும்பமும் மகிழ்வுடன் ஆசாரியருக்குக் கொடுத்துப் பிராமண சந்தர்ப்பணையுஞ்செய்து ரத்தினங்கள் பொன்கள் இன்னமும் வேண்டிய பொருள்களும் கொடுத்து ஆசையுடன் பந்துக்களை வைத்துக்கொண்டு போசனஞ்செய்து இவ்வாறு குற்றமற்ற விரதமுடிப்பது ஆகமவிதியாம் பிறைபோன்ற நெற்றியையுடையமாதே! என்றவாறு.

இயாவரே யெனினு மிவ்விர தத்தை யிந்தவா றியற்றின ரவர்த
மூவெழு முறைமைத் தமரெலா ந் தெய்வ முருகுலாங் கற்பக நாட்டின்
மேவரச் சேர்த்தி யெல்லையில் காலம் விழைந்தநற் போகங்க ளுகர்ந்து
பூவல யத்தி னினிதுவாழ்ந் ததன்பின் பொருவறு சிவபத மடைவார். 36

இ - ள் : எவர்களேயானாலும் இந்த உமாமகேசுவர விரதத்தை மேற்சொல்லிய முறைமைப்படி செய்கின்றவர்கள் தங்களுடைய இருபத்தொரு தலைமுறையாகிய சுற்றத்தாரையெல்லாம் வாசனை வீசுகின்ற கற்பகச்சோலையுள்ள தேவலோகத்தில் போகும்படி சேர்த்து அளவில்லாத இன்பம் அனுபவித்துக்கொண்டு இருந்து அதற்குமேல் ஒப்பற்ற சிவபதம் பெறுவார்கள் என்றவாறு.

ஏழு தலைமுறைவரையில் ஞாதிகள், அதற்கு மேற்பட்ட ஏழு தலைமுறைவரையில் சாபிண்டர்கள், அதற்கு மேற்பட்ட ஏழு தலைமுறைவரையில் சமானோதர்கள். இவ்வாறு மூவேழு இருபத்தொரு தலைமுறையெனச் சொல்லப்படுகின்றது.

ஆதலா லணங்கே நீயுமிவ் விரத மகந்தெளிந் தியற்றுதி யென்றுங்
காதலால் விழைந்த பொருளெலா நினக்குக் கடிதினி லடையுமென் றமல
னேதுவா சகங்கேட் டன்னது தேறி யுளமகிழ் காலையி லவடன்
றுதையுந் தாயுந் தமரும்வந் தீண்டித் தவமுனி தாளிணை தொழுதார். 37

இ - ள் : ஆகையினால் பெண்ணே! நீயும் இந்த விரதத்தை மனதில் ஐயமில்லாமல் நாள்தோறும் அனுஷ்டித்தால் ஆசையுடன் விரும்பிய பொருள்கள் எல்லாம் விரைவில் கைகூடுமென்று அம்முனிவர் சொல்லக் கேட்டு அத்தன்மையுள்ள விரதத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்று தன் மனதில் நிச்சயித்துக்கொண்டாள். அப்போது அவள் தகப்பனும் தாயும் சுற்றமும் வந்து அவர் திருவடியில் வணங்கினார்கள் என்றவாறு.

தொழுதனர் நின்று நனைபிணி யவிழ்ந்த துணர்நறும் போதுக டுவி
வழிபடு முறையா லருச்சனை புரிந்து மாதவ னடைந்தஞான் றெதிர்கொண்
டெழில்பெறு மணங்கு புரிபணி விடையு மிருந்தவ னீந்தமெய் வரமு
முழுதுமாங் குரைப்பக் கேட்டக மகிழ்ந்து முனிவனை நோக்கியீ துரைத்தார்.

இ - ள் : அவ்வாறு வணங்கி நின்று அரும்புகளின் முறுக்குகள் விரிந்த கொத்தாகிய மலரால் ஆராதனை செய்யுமுறைப்படி அருச்சித்து அழகுள்ள தங்கள் பெண்ணானவள் அம்முனிவர் வந்த நாளில் எதிர்கொண்டு செய்த பணிவிடையும் அவர் கொடுத்தருளிய உண்மையான வரமும் வழுவாமல் கூறக்கேட்டு மனமகிழ்ந்து முனிவரைப் பார்த்து இவ்வுரை கூறுகின்றார்கள் என்றவாறு.

எத்தவஞ் செய்தே மித்தலை யடிக ளெய்துதற் கெங்கணு யகனே
யத்தனே நின்ற லடியமின் றுய்ந்தே மணங்கனுள் கைமைநோய் தீரப்
பத்தினே டிரண்டு திங்களு மிந்தப் பதியிடை யிருந்துநீ பணித்த
மெய்த்தவ விரத மியற்றுவித் தேகல் வேண்டுமென் றடிதொழு திரந்தார்.

இ - ள் : எங்கள் இறையாம் அய்யனே! சுவாமிகள் இவ் விடத்துக்கெழுந்தருளும்படி என்ன தவஞ் செய்தோமோ! தேவரீரால் அடியேங்கள் எல்லோரும் ஈடேறினோம். எங்கள் பெண்ணுக்கு நேரிட்ட கைமைத்தன்மையாகிய பிணி தீர்க்கும்படி பன்னிரண்டு மாதமும் இந்தப் பதியிலிருந்து தேவரீர் கட்டளையிட்ட உண்மையான விரதத்தை அனுஷ்டிப்பித்து அதன்பின்பு போகவேண்டுமென்று அவர் திருவடியில் வணங்கி இரந்து கேட்டுக்கொண்டார்கள் என்றவாறு.

அன்னதே புரிவன் துயரொழி வீரென் றவனொரு சாலைசென் றடைந்து
பொன்னவிர் கடுக்கை வேணிவா னவன்றன் பூசனை புரிந்தன னிருப்பத்
தன்னிக ரில்லாச் சாரதை தானுந் தவமுனி யாகம விதியாற்
சொன்னவா றிந்த வீறுயர் விரதந் தொடங்கியாங் கியற்றின ளன்றே. 40

இ - ள் : அவ்வாறே செய்கிறேன். நீங்கள் துயரம் நீங்கியிருங்கள் என்று கூறி அவரொரு பன்னசாலையிலே போய்ப் பொன்போல ஒளிவிடும் கொன்றைமாலை அணிந்த சடைமுடியையுடைய பரமசிவனைப் பூசித்துக் கொண்டிருந்தார். தனக்கு ஒப்பில்லாத சாரதையானவள் தவமுனிவர் ஆகமவிதியில் கூறியபடி மகத்துவமுள்ள அந்த விரதத்தைத் தொடங்கிச் செய்தாள் என்றவாறு.

என்றுமா முனிவர்க் கின்னணஞ் சூத னியம்பிடுங் காதையைக் கேட்டு
நன்றுநன் றென்ன வுவகைகூர் மனத்தர் நாளுமச் சாரதை மடவாள்
ஒன்றிமே லிழைத்துப் பெற்றவா றெல்லா முரைத்தரு ளெனவவ ருரைப்பத்
துன்றிய தவத்து மடவரல் பெற்ற திற்றெனத் தொகுத்தனன் சொன்னான்.

இ - ள் : இவ்வாறு சூதமுனிவர் கூறிய உமாமகேசுவர விரத வரலாற்றைக் கேள்விப்பட்ட நைமிசாரணிய முனிவர் இது மிகவும் நன்மையுள்ளதென்று மகிழ்வுகொண்ட மனமுள்ளவர்களாய்ச் சூதமுனிவரைப் பார்த்து, அந்தச் சாரதையானவள் மனமொருமித்து இவ்விரதத்தை அனுஷ்டித்துப் பெற்ற முறைமையெல்லாம் எங்களுக்குச் சொல்லியருள வேண்டுமென்று அவர்கள் கேட்க அந்த விரதத்தை அனுஷ்டித்தவள் பெற்றுக்கொண்ட வரம் இன்னதென்று தொகுத்துக் கூறினார் எ - று.

உமாமகேசுவரபூசை மகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1018

பத்தொன்பதாவது

உமாமகேசுவர பூசாபலமுரைத்த அத்தியாயம்

இந்துவாண் முகத்தாள் பன்னிரு மதியு மியற்றிய விரதத்தை முடியா
வந்தணர்க் கயினி யருத்தியஞ் சுடர்ப்பொன் னருளியன் றருந்தில ளாகித்
தந்தைதாய் பாதத் துணைமல ரிறைஞ்சிச் சதுர்மறை முனிவரன் புகன்ற
மந்திர முணர்ந்தாங் கிருந்தன ளந்தி மாலைவந் திறுத்தது மன்னோ. 1

இ - ள்: *சந்திரனை ஒத்த முகத்தையுடைய சாரதையானவள் பன்னிரண்டு மாதமும் அனுஷ்டித்த விரதத்தை நிறைவேற்றிப் பிராமண சந்தர்ப்பணையும் அழகிய ஒளியுள்ள சுவர்ணதானமுஞ்செய்து தான் அன்று உணவுண்ணுமல் தாய்தந்தையருடைய இரண்டு திருவடிமலரையும் தொழுது நான்கு வேதங்களுமுணர்ந்த முனிவர் உபதேசித்த மந்திரத்தைச் செபித்துக்கொண்டிருந்தாள் (அப்படி இருக்கும்போது) அந்திப்பொழுது வந்தது என்றவாறு.*

கள்ளவிழ் கடுக்கை வேணிவா னவனைக் காதலாற் பூசனை புரிந்து
நள்ளிருட் கங்குல் விழித்தன ளிருந்து நாவினு லவன்புகழ் நவிற்றத்
தெள்ளிதிற் பரம சிவாகம முழுதுந் தெளிந்தநான் மறைமுனி வரனும்
வெள்ளிலை நெடுவேற் கருங்கண்மா துமைதன் விளங்கிசை பாடின
[னுணர்ந்தே. 2

இ - ள்: *தேனுடன் மலர்ந்த கொன்றைமாலை அணிந்த சடாமகுடமுடைய பரமசிவனை அன்புடன் பூசைசெய்து இருள் மிகுந்த அன்று இரவு முழுவதும் உறங்காமல் நாவினுல் பரமசிவனது தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டிருந்தாள். சிவாகமம் முழுவதையும் தெளிவுடன் ஆராய்ந்துணர்ந்த அம்முனிவரும் ஒளியுள்ளதாகிய நீண்ட வேல்போன்ற திரிநேத்திரங்களையுடைய பார்வதியின் விளங்காநின்ற புகழைத் துதிசெய்துகொண்டிருந்தார் என்றவாறு.*

வேறு

இன்னகைத் துவர்வாய்க் கிள்ளை யியற்றிய விரதத் தாலும்
தன்னிக ரில்லாத் தூயோன் றகைமைசா றவத்தி னுலும்
பொன்னவிர் சுணங்கு வாய்ந்த புணர்முலை பொறுக்க லாற்ரு
மின்னிடை யிமயம் பூத்த விளங்கிழை வெளிப்பட் டாளே. 3

இ - ள் : இனியதாகிய நகையினையும் பவளம்போன்ற அதரத்தையும் உடையவளாய்க் கிளிமொழிபோல் பேசாநின்ற சாரதையானவள் அனுட்டித்த விரதத்தினாலும் ஒப்பில்லாத முனிவருடைய மேன்மைதங்கிய தவத்தினாலும் பொன்போல விளங்கும் தேமல் பொருந்திய தம்மிலொத்த தனபாரத்தினைத் தாங்கமாட்டாத (மெல்லிய) மின்னலையொத்த இடையை உடையவராய் இமயமலையில் திருவவதாரம் செய்தருளிய விளங்கும் அணிகளணிந்த பார்வதிதேவியார் தோன்றலானார் என்றவாறு.

வெளிவர மறைந்த செங்கண் விளங்கிய முனியு முள்ளக்
களியுடை யணங்கு மன்னைக் கமலத்தா ளிறைஞ்சி வீழ
வொளிவிரி பசும்பொற் கொங்கை யுமையிரு வரையு மாங்க
ணளியினா லெடுத்து நோக்கி யமுதன முகமன் சொன்னாள். 4

இ - ள் : அவ்வாறு தரிசனந்தந்த அளவில் முன் தெரியாத பார்வை தெரிந்த முனிவரும் மனக் களிப்பினையுடைய சாரதையும் நம்முடைய தாயாகிய பார்வதிதேவியாரின் திருவடித்தாமரைமலரில் விழுந்து பணிந்தார்கள். அவ்வாறு பணிந்தபோது ஒளிமிகுந்த பசும்பொன்னிறம் பொருந்திய தனங்களையுடைய உமாதேவியார் கருணையுடன் அவ்விருவரையும் எடுத்து பார்த்து அமிர்தம் ஊட்டுவதுபோல உபசார வார்த்தை கூறி என்றவாறு.

கற்றுணர் முனியே கன்னிக் கற்புடை யணங்கே நும்பாற்
பெற்றன மகிழ்ச்சி யாரும் பெறலரும் வரங்க ளென்ன
சொற்றது தருவ நீவிர் சொல்லுமி னென்று கூற
நற்றவக் கிழவன் கேளா நயந்திது புகல்வ தானான். 5

இ - ள் : வேதமுதலான சாத்திரங்கள் ஓதியுணர்ந்த முனிவனே! அழிவில்லாத பதிவிரதா தருமமுடைய மாதே! உங்களிடத்தில் நாம் மகிழ்வடைந்தோம். எவ்வித வரங்கள் வேண்டுமானாலும் தருகிறோம். நீங்கள் கூறுங்கள் என்று பார்வதிதேவியார் மொழிந்தருள; முனிவர் அந்தத் திருவாக்கினைக் கேட்டு விருப்பத்துடன் இந்த வார்த்தை கூறுகிறார் என்றவாறு.

கண்மணி யிழந்தேன் மங்கை கயினியா யிருத்தல் காணே
னுண்மலி யுவகையாலே யுறுதுணை யிழந்தா டன்னை
வெண்மதி நுதலாய் காமம் வெறுக்குநாள் காறு நின்கேள்
வண்மல ராகந் தோய்ந்து வாழ்தியென் றுசி சொற்றேன். 6

இ - ள் : அடியேன் பார்வையிழந்த அந்தகனாயிருந்ததனால் இந்த மாது கைம்பெண்ணாயிருப்பது தெரியாமல் அடியேனுக்குச் செய்த உபசாரத்தினால் மகிழ்ந்து கணவனை இழந்திருக்கும் இவளைநோக்கி வெண்மை

நிறந்தங்கிய இளம்பிறைபோன்ற நெற்றியையுடையவளே! நீ காமத்தை வெறுக்கும் நாளளவும் உன் கணவனுடைய அழகு பொருந்திய மாலை அணிந்த மார்பில் தோய்ந்து வாழ்ந்துகொண்டிருக்கக் கடவை என்று ஆசீர்வாதஞ் சொன்னேன் என்றவாறு.

பூசுரர் குலத்திற் ரேன்றும் பொலன்கொடிக் கடியன் சொன்ன
ஆசியின் பயன்குன் ருமலருள்கவென் றிறைஞ்சி யேத்தி
வாசநாண் மலரோ னன்ன மறைமுனி பகர லோடும்
பாசிழைப் பணைமென் கொங்கைப் பனிவரை மாது சொன்னுள். 7

இ - ள் : பிராமணகுலத்தில் பிறந்த பொற்கொடிபோன்ற இந்தப் பெண்ணுக்கு அடியேன் கூறிய ஆசீர்வாதத்தின் பலன் கெடாதவண்ணம் அருள்செய்ய வேண்டுமென்று பணிந்து துதித்து மணம் பொருந்திய தாமரைப் பூவிலிருக்கும் பிரமனையொத்த முனிவர் விண்ணப்பம் செய்த அளவில் பொன்னுலாகிய ஆபரணமணிந்த பருத்த தனங்களையுடைய இமயமலையில் தோன்றிய பார்வதிதேவியார் கூறுகின்ருர் எ - று.

சிந்தைசால் புடைய நோன்மைச் செய்தவக் கிழமை யோனே
முந்தைநற் பிறப்பி லிந்த மொய்குழற் றமிழ்நன் ஞட்டோ
ரந்தணன் முன்னர் வேட்ட வணங்கின்பின் மணஞ்செய் காதற்
பைந்தொடி பண்டை நாமம் பத்மினி யென்ப தாமே. 8

இ - ள் : மனதில் தூய்மையுள்ள விரதத்தையுடைய முனிவனே! முற்பிறப்பில் இந்தச் சாரதை என்பவளைத் தமிழ்நாட்டில் ஒரு பிராமணன் தான் முன் விவாகஞ் செய்துகொண்ட மூத்த மனைவியிருக்க இரண்டாவது மணம்செய்து கொண்டான். அப்பிறப்பில் இவளுக்குப் பத்மினி என்று பெயர் என்றவாறு.

வேறு

மாந்தளிர் மேனி வனப்பிறைற் பிணியு மருந்துமா மதர்விழி நோக்காற்
சாந்திள முலையு மகலமு மொன்ருய்த் தழுவுறக் களியுநன் னலத்தாற்
காந்தளஞ் செங்கை பற்றிய காலை முதலவாய்க் காதலன் றன்னைத்
தேந்துளி பிலிற்று மலர்க்குழ லிவடன் செயல்வழி நடப்பதே பணித்தாள். 9

இ - ள் : மாந்துளிர்போன்ற மேனியின் அழகினுலும் நோயும் அதற்கு மருந்தும் போலிருக்கும் களிப்புள்ள கண் பார்வையினுலும் சந்தனமணிந்த இளமுலையு மார்பமுமொன்ருய்த் தழுவிக்கொள்ள முதிர்ந்த இன்பத்தினுலும் காந்தள் மலர்போன்ற தன் செங்கைபற்றிய நாள்முதலாகக் கணவனைத் தன் சொல்லின்படி நடக்குமாறு செய்தாள் எ - று.

தேன்துளி சிந்துகின்ற மலரணிந்த அளகத்தையுடைய இவள் தன்னிடத்தில் இச்சைவைத்தவனை விருப்பமின்றிப் பார்த்தால் வருத்தமும் விருப்பத்துடன் பார்த்தால் மகிழ்ச்சியும் அவனுக்கு உண்டாக்குகின்றமையால் 'பிணியுமருந்துமாமதர்விழி' என்ருர்.

" பிணியு மதற்கு மருந்தும் பிறழப் பிறழமின்னும்
பணியும் புரைமருங் கிற்பெருந் தோளி படைக்கண்களே "

— திருக்கோவையார்

தவளமுந் நூலுந் தாமமுந் தாழுந் தடம்புயக் கொழுநனுங் காத
லிவளிள முலையின் போகமே நுகர்ந்தாங் கின்பமாங் கடலிடை யாழத்
துவளுநுண் மருங்குற் குமுதவா யமுதத் துணைவிதன் கொண்கனைப் பெருது
குவளைவாய்க் கருங்கண் மைத்துளி பிலிற்றக் கொடுந்துயர்க் கடலிடை
[யாழ்ந்தாள். 10

இ - ள் : வெண்மைநிறமுள்ள முப்புரியாகிய பூணநூலும் பூமாலையும் பொருந்திய பெரிய புயத்தையுடைய கணவனும் ஆசையினுல் இவளிடத்திலேயே போகம் அனுபவித்துக்கொண்டு இன்பக்கடலில் படிந்திருப்பதினுல் துவளுகின்ற மெல்லிய இடையும் செவ்வல்லிமலர் போன்ற வாயுமுள்ள மூத்த மனைவியானவள் தன் கணவனுடன் சேருதற்கில்லாமல் நீலோற்பல மலர் போன்ற தன் கண்கள் நீர் சிந்தும்படித் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தாள் என்றவாறு.

தனித்துணை யலது தன்றுணை புணராத்
தண்ணறுந் தூய்மலர்க் குழலாள்
நனிதுய ருழந்து புதல்வரைப் பெருளாய்
நன்னலந் தொலைதொறு மிரங்கி
யினியுயிர்ப் பொறைகொண் டாற்றலேன் வினையே
னிம்மையு மறுமையு மிழந்தேன்
புனிதனே யென்னுப் புலம்புகொண் டிறந்து
பொன்னுல கடைந்தன ளன்றே. 11

இ - ள் : தனிமையாயிருக்கும் தன்மையாகிய துணையே யல்லது தன் கணவனையறியாத குளிர்ச்சியும் மணமுமுள்ள நல்ல மலர் அணிந்த அளகத்தையுடைய மூத்தாள் மிகவும் துயரங்கொண்டு புத்திரர்களையும் பெருமல் இளமைப்பருவம் நாளுக்குநாள் நீங்குந்தோறும் இரங்கி இனி இவ்வுடலை வைத்துக்கொண்டிரேன் வினையேனுகிய யான் இவ்வுலக இன்பத்தையும் (புத்திரனில்லாமையால்) சுவர்க்க உலக இன்பத்தையுமிழந்தேன். பரமசிவனே யென்று கூறிப் புலம்பிக்கொண்டு இறந்து பொன்னுலகம் அடைந்தாள் என்றவாறு.

வேறு

இவ்வண்ண நிகழ்காலத் தயலிடத்தோ ரில்லுறையு மந்தணாளன்
செவ்வண்ணத் துவர்வாயும் வனமுலையும் வருத்தநிறை தேய்ந்து தேய்ந்து
மைவ்வண்ணக் கொடுங்காமங் கைமிகலு மிவண்மலர்க்கை வலிதிற் பற்றக்
கைவ்வண்ணக் காவிகந்தாள் கற்பிகவா தன்னேன்கை கடந்து போனுள்.

இ-ள்: இவ்வாறு நடக்குங்காலத்தில் அயல் வீட்டிலிருக்கும் ஒரு பிராமணன் இவளுடைய செம்மைநிறம் தங்கிய பவளம் போன்றவாயும் அழகிய முலையும் தன்னைவருத்த நிறையழிந்து மெலிந்து மெலிந்து இருள் மயமாகிய காமமானது அதிகரித்தலால் இவள் கையை வலிதிற் பற்றினன். அவ்வாறு பற்றவே தன்னைக் காப்பவர்களை இழந்திருப்பவள் தன்னுடைய கற்புநிலையை யிழவாமல் அப்பிராமணன் கையை நீக்கிக்கொண்டு போய்விட்டாள் என்றவாறு.

அந்நிலையே களவொழுக்க மனக்கொள்ளாள் வெறுத்தகன்ற வயலான் கற்
பன்னியிள முலைகிடந்த வெஃகரவா லறிவழிந்து பையுளுற்றேன் [பிற்
கன்னலடு சிலைகுழைத்து வேனிலா னமராடுங் கணைக ளாகஞ்
சின்னபின்னஞ் செயக்காம விடந்தலைக்கொண் டகல்வானஞ் சேர்ந்தா
[னன்றே. 13

இ-ள்: அவ்வாறு சோரப்புணர்ச்சிக்குச் சம்மதியாமல் வெறுத்துப் போய்விட்ட அன்னியனுடைய மனைவியினிடத்திருந்த அவாவினுல் அறிவிழந்து துன்பமடைந்து மன்மதன் கரும்புவில்லை வளைத்துப் போர் செய்யுங் கணைகள் தன்னுடைய உடலைச் சின்னபின்னஞ் செய்வதினுல் காமமாகியவிடம் தலைமட்டுங்கொண்டு இறந்துபோனுன் என்றவாறு. வெஃகரவு - விருப்பம்.

கற்பினிலை கடவாத நிறையிருந்தும் பொறையிருந்துங் கமழ்தார் சூட்டி[டாள்
முற்படத்தன் கேண்மணந்த முற்றிழையை யொருஞான்று முயங்க வொட்
பொற்புடைத்தன் புணர்முலையின் புதுநலமே நுகரும்வண்ணம் புரித லாலே
யிற்பழியில் லாவிவளு மிளமையிலே கைமையுற்ருங் கிருந்தா ளன்றே. 14

இ-ள்: கற்புத்தன்மை கடவாத நிலைமை இவளிடத்திருந்தும் பொறுமையிருந்தும் தனக்குமுன் தன்கணவனுக்கு மாலைசூட்டித் திருமணஞ்செய்து கொண்டவளை ஒரு நாளாவது கணவனுடன் இன்பம் அனுபவிக்க வொட்டாதவளாய் அழகுள்ள தன் கொங்கையின்பத்தையே அனுபவிக்கும்படிச்செய்தலினுல் கற்புடைமைக்குப் பழிநேரிடாமல்காத்துக் கொண்ட இவளும் கைம்பெண்ணுகியிருந்தாள் என்றவாறு.

வளமலிசீர் மகளிரொடு மகிணரிள நலநுகரா வண்ண மாற்றி
யுளமலியு மனக்களியாற் றமதுவழி யேயொழுக வூடல் கூருந்
தளவநகைக் கயல்விழியார் தமைக்காம விடாய் கனற்றத் தளர்ந்து மாழ்கி
யிளமையிலே நான்குபவங் கயினியா யளவிறுன்ப மெய்து வாரே. 15

இ - ள்: வளமையும் சிருமுள்ள மனைவியருடன் கணவன் இன்பம் அனுபவியாதவாறு மாற்றி உள்ளத்திற் பொருந்திய களிப்புடன் தங்கள் சொற்படி நடக்கும்படி ஊடல் கொள்ளுகின்ற முல்லையரும்பினை ஒத்த நகையினையும் சேல்மீனையொத்த கண்களையுமுடைய மாதர்கள் மறு பிறப்பில் தங்களைக் காமவிடாயானது வருத்தச் சோர்ந்து துயரமுற்று இளமையிலே தானே நான்குபிறப்பு வரைக்கும் கைம்பெண்ணாகி அள வற்ற துன்பத்தைப் பொருந்துவார்கள் என்றவாறு.

அறந்தழையுந் தூயமனத் தருந்தவனே யருந்ததிகற் பனைய கற்பாற்
சிறந்தமலர்க் குழலிவடன் சிந்தைகளி கூர்ந்துநறுந் தேங்கொள் போதா
லிறந்தபவத் தெனையருச்சித் தேத்துதலா லெழுபிறப்பு மீட்டும் பாவம்
பிறந்தவிந்தப் பவத்திலொளிர் சுடர்துரக்கு மிருள்போலப் பெயர்ந்த
[தன்றே. 16

இ - ள்: அறமே குடிகொண்டிருக்கும் நல்ல மனதுடைய முனி வனே! அருந்ததியின் கற்பினையொத்த கற்பினால் மேன்மை பெற்ற இவள் மனம் களிப்படைந்து நல்ல மலர்களால் முற்பிறப்பில் என்னை அருச்சித் துத் துதித்தமையால் எழுபிறப்பிலுஞ் செய்தபாவமெல்லாம் பிறந்துள்ள இந்தப் பிறவியில் தானே சூரியனால் போக்கப்பட்ட இருள்போல நீங்கி விட்டது என்றவாறு.

ஈரமலர்ப் பூங்குழலே யென்றிரந்து கரம்பற்றி யிரங்கு கென்னு
வார்வமுற்று நலநுகராத் துயரான்முற் பவத்திறந்த வந்த ணாளன்
றீர்விலொரு தலைக்காமங் கூட்டவிந்தப் பவத்துமிவள் செங்கை பற்றி
வார்முலைத னுகமுறப் புணராம லரவொறுக்க மாய்ந்தா னந்தோ. 17

இ - ள்: குளிர்ச்சிமிக்க பூமாலையணிந்த கூந்தலையுடையவளே! இவ் வேளை உன்மனம் இரங்கவேண்டுமென்று இவள் கையைப் பற்றிக்கொண்டு இரந்து ஆசையுற்றும் இன்பம் அனுபவியாத துயரத்தினால் முற்பிறப்பில் இறந்துபோன பிராமணன் நீங்காத ஒருதலைக்காமமானது கூட்டுவிக்க இப்பிறப்பில் மணஞ்செய்துகொண்டு இவள் கையைப்பற்றியும் கச்சணிந்த இவள் தனங்கள் தன்மார்பிற் பொருந்தும்படி புணர்வதற்கில்லாமல் பாம்பு கடிக்க இறந்துபோனான் என்றவாறு. ஒருதலைக் காமம் - தலைவன் தலைவி என்பாருள் ஒருவரிடத்து மாத்திரம் உண்டான காமவிச்சை.

இறந்தவனே யிவள்கொழுந னல்லனும்மைப் பிறப்பிலிவ ளிலங்கு கேள்வன்
சிறந்தசங்கத் தமிழ்கொழிக்குந் தென்கூடற் றென்னர்பிரான் கன்னி நாட்டிற்
பிறந்துதொழு குலத்தவர்க்கோர் திலகமா யளவில்செல்வம் பெற்று மற்றோ
ரறந்தழைசீ ரணங்கைமணம் புணர்ந்துபுது நலமாந்தி யமர்கின் றானே. 18

இ - ள்: இப்போது இறந்தவன் இவள் கணவனல்லன் முற்பிறவியில் இவளைக்கூடிய கணவன் சிறப்புத்தங்கிய சங்கத்தமிழ் விளங்கும் மதுரைத் தலத்தில் அரசு செய்துகொண்டிருக்கும் பாண்டியனது நாட்டில் பிறந்து பிராமண குலத்துக்கு ஒரு திலகம்போல அளவில்லாத செல்வம்பெற்று இல்லறம் வழுவாமல் நடத்தும் மற்றொரு கன்னிகையை மணம் செய்து இன்பம் அனுபவித்துக்கொண்டுள்ளான் என்றவாறு.

அணையவன்பொற் றடமார்பு மலர்முலையா கழும்பொருந்தி யழுந்தக் கூடிப்
புணைமலரின் பசுந்தாது பொதுளுநறும் பூவணையின் புறத்து மேவிக்
கனவுதொறு மிவள்காமக் கனிநுகர்வா ளாகவந்தக் கனவிற் கூட்ட
நனவிலுறு புணர்ச்சியிலு மளவிறந்த நன்னலமே நல்கு மன்றே. 19

இ - ள்: அவனுடைய பெரிய மார்பும் இவளது பருத்த தனங்களுள்ள மார்பும் பொருந்தி அழுந்தத் தக்கதாகக் கூடிப் பூந்தாதுகள் நிறைந்த மணமுள்ள மலரணையினிடத்தில் பொருந்திச் சொப்பனவத்தைகள் தோறும் இவள் காம இன்பமாகிய பழத்தை உண்பாள். அந்தக் கனவிற் கூடுதல் சாக்கிராவத்தையில் புணரும் புணர்ச்சியினும் அதிகமான நல்ல இன்பத்தைக் கொடுக்கும் என்றவாறு.

அளவுறுகா வதமுந்நூற் றறுபதிற்கப் பாலதா மகழ்சூ ழிஞ்சி
வளநகரி னினிதிருக்கு மகிணனுந்தன் முன்னைவினை வயத்தி னாலே
தளவநகைப் புளகமுலைத் தாழ்குழலிப் பொலங்கொடியைக் கங்குல் தோறு
முளமலியுங் காதலொடு கனவிற்றோய்ந் தும்பர்செல்வ முறுவன் மன்னோ. 20

இ - ள்: அளவுபட்ட முந்நூற்றறுபது காதத்துக்கப்பாலிருக்கும் அகழிசூழ்ந்த மதிலையுடைய வளநகரில் இன்பமுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் இவள் கணவனும் முன்னை ஊழ்வினை வசத்தினால் முல்லையரும்பை யொத்த நகையினையும் புளகம்பொருந்திய தனங்களையும் தாழ்ந்த கூந்தலையுமுடைய பொற்கொம்பை ஒத்தவளாகிய இவளை இரவுதோறும் சொப்பனவத்தையில் ஆசையுடன்கூடி சுவர்க்கபோகம் போன்ற இன்பத்தை அடைவான் என்றவாறு.

இன்னணமுட் களிபெருக விளநலந்துய்த்
தினிதிருக்கு நாளி லிந்தப்
பொன்னுரையிற் பொலிசுணங்கின் வனமுலையா
ளொருபுதல்வற் பெறுவா ளாகக்

கன்னவிரேட் கணவனுந்தன் சிறுவனை நற்
கனவுதொறுங் காண்க வென்னத்
தன்னகரில் லாமுனிவற் குரைத்துமையாள்
மாதினெடு சாற்று கின்ருள். 21

இ - ள் : இவ்வாறு உள்ளத்திற் களிப்புண்டாகி அதிகரிக்கத்தக்கதாக இன்பம் அனுபவித்துக்கொண்டிருக்கும் நாளில் பொன்னுரைபோல் விளங்கும் தேமல்படர்ந்த அழகிய தனமுள்ள இவள் ஒரு புதல்வனைப் பெறுவாள். மலைக்கொப்பாகச் சொல்லத்தக்க புயங்களையுடைய இவள் கணவனும் தன்புத்திரனைச் சொப்பனந்தோறுங் காண்பனென்று தனக்கொப்பில்லாத முனிவனுக்குக் கூறிச் சாரதையைப் பார்த்துப் பார்வதி தேவியார் கூறுகிருர் என்றவாறு.

குனிமதிவா ணுதற்பசிய குவளைவிழிச்
சாரதையே கோதை சூட்டிப்
புனைகலனின் பொறையணிந்து முற்பவத்துன்
புணர்முலைமேல் புணர்ந்தோன் றன்னைப்
பனிமதியின் கிளையெனத்தண் பணிலங்க
டவழுமொரு பழன நாட்டிற்
கனவினிற்கண் டறிகுறியா னனவினுங்கண்
கண்டுமனங் களிப்பை மாதோ. 22

இ - ள் : வளைந்த பிறையை ஒத்த ஒளி தங்கிய நெற்றியினையும், பசுமை தங்கிய நீலோற்பலம் போன்ற கண்களையும் உடைய சாரதையே! முற்பிறப்பில் மணமாலை சூட்டித் திருமங்கிலியந் தரித்து உன்னைச் சேர்ந்து இருந்தவனைக் குளிர்ச்சியுள்ள சந்திரனினம்போலச் சங்குகள் தவழும் வயல்கள் சூழ்ந்த ஒப்பற்ற வளநாட்டில் சொப்பனத்தில் கண்டறிந்த குறிப்பின்படிச் சாக்கிரத்திலும் கண்ணிற்கண்டு மனமகிழ்வை என்றவாறு.

கணவனுநின் ஹெடுகனவிற் புணர்குறியா
னனவிலெதிர் காணு முன்னந்
துணைவியெனத் தெளிவனவ்வா றறிந்தொருவர்க்
கொருவர்பண்டை தொடர்பு பெற்ருற்
புணைதனது மதியாகக் கலைக்கடலைக்
கரைகண்ட புதல்வ னேடே
யிணையில்விர தப்பயனிற் சமபாகங்
கணவனிடத் தீக மன்னே. 23

இ - ள் : கணவனும் உன்னுடன் சொப்பனத்தில் புணர்குறிப்பினுல் எதிர் காண்பதற்கு முன் மனைவியென்று உன்னை அறிந்துகொள்வன்.

அவ்வாறு அறிந்து ஒருவர்க்கொருவர் முன் பிறப்பின் தொடர்பைப் பெற்ருல் தன் அறிவே தெப்பமாகச் சாத்திரமெனுங் கடலைக் கடக்கும் புதல்வனுடன் ஒப்பில்லாத உன் விரதபலத்தில் கணவனுக்குச் சமபங்கு கொடு என்றவாறு.

நின்விரதப் பயனேற்ற கொழுநன்வச மாகியிரு நிலத்தி னீடும்
பொன்மனைவாய் நனவுதொறும் புணராது கனவிலின்பம் புணர்ந்து காமத்
தின்மதுவுண் டுளந்தெவிட்டு நாளிலுயிர்க் கேளிறப்ப னிறந்தா னென்ற
பின்முறையா லெரிமூழ்கி யிருவீரு மெமதுபதம் பெறுவீ ரன்றே. 24

இ - ள்: உன் விரதப்பயன் பெற்றுக்கொண்ட கணவன் வசமாகி இவ்வுலகில் மிக்க பொன்மயமான வீட்டில் சாக்கிராவத்தைகள்தோறும் புணராமல் கனவுதோறும் புணர்ந்து இன்பம் அனுபவித்து அதனிடத்தில் மனவெறுப்புண்டாகும் காலத்தில் உன் உயிர்போன்ற அந்தக் கணவன் இறந்துவிடுவன். அவ்வாறு அவன் இறந்த பின்பு நீ கிரமப்படி தீயில்முழுகி நீங்கள் இருவரும் நம்முடைய பதவியை அடைவீர்கள் என்றவாறு.

வேறு

எனவுரைத் தெழுதா மறைபுரா தனநூ லியாவையு முணர்ந்துளந் தெளிந்த
தனயனை யின்னே பெறுதிநீள் செல்வந் தழைந்தினி வாழ்திமற் றென்னு
வனமுலை மடந்தை மனங்களி சிறப்ப வரங்கொடுத் தாயிழை யவளு
முனிவனுங் காண விமயமீன் றெடுத்த முகிணகை கயிலையை யடைந்தாள்.

இ - ள்: இவ்வாறு பார்வதிதேவியார் கருணைசெய்து எழுதப் படாத வேத முதலிய பழமையான சாத்திரங்களையெல்லாம் உணர்ந்திருக்கும் புதல்வனை இப்பொழுதே பெறுவை. மத்தியில் அழியாத செல்வம் தழைய நீ வாழக்கடவையென்று அழகிய தனங்களையுடைய சாரதையின் மனமானது மகிழ்வினுல் சிறப்படையத்தக்கதாக வரங்கொடுத்தருளி அப்பொழுதே அவளும் அந்த முனிவனும் காணக் கயிலையை அடைந்தாள் என்றவாறு.

வளர்மதிக் கண்ணி யண்ணல்பா கத்து
மாதுமை வரந்தரப் பெற்ற
தளிரியன் மகிழ்ச்சி கூர்ந்தருந் தவன்பொற்
ருளருச் சனைபுரி காலை
முளரிநாண் மலரி னனைதனை யவிழ்ந்து
முருகுகொப் பளித்திடச் செங்கே
ழொளிர்கதிர் விரிக்கும் பரிதியஞ் செல்வ
னுதயமால் வரைமிசை யுதித்தான். 26

இ - ள் : வளைந்த பிறையாகிய மாலையணிந்த பரமேசுவரன் இடப் பாகத்தில் வீற்றிருக்கும் பரமேசுவரி வரங்கொடுத்தருளப் பெற்றுக் கொண்ட சாரதை மகிழ்ச்சியடைந்து அம் முனிவனுடைய திருவடிகளில் அருச்சனை செய்யும்போது தாமரைகளினரும்பு இதழ்விரிந்து தேன் சொரியும்படிச் செம்மைநிறந் தங்கிய ஒளிபொருந்திய கிரணங்களைப் பரப்பும் சூரியதேவன் உதயகிரியிலே தோன்றினன் என்றவாறு.

நாறுபூங் கோதை மாதுமை யோடு நளிர்மதி வேணியன் மகிழ
வீறுயர் விரத மியற்றிய திறத்தால் விளைபய னேதில ரறியா
தாறறி முனிவ னன்னவட் பயந்த வத்தனு மன்னையு மறியக்
கூறினன் கூறி யாயிடை யகன்றோர் குளிர்புன னாட்டக மடைந்தான். 27

இ - ள் : வாசனைகமழும் பூமாலையணிந்த அளகபாரத்தையுடைய உமையம்மையும் குளிர்ச்சியுள்ள பிறைமதியணிந்த சடையையுடைய சாம்பவமூர்த்தி மகிழ்ந்தருளும்படி பெருமை தங்கிய உமாமகேசுவர விரதம் அனுட்டித்த தன்மையினல் மேலுண்டாகும் பலனை அன்னியரறியாத வண்ணம் சாரதையின் தாயுந் தந்தையும் அறியும்படி முனிவர் சொல்லினர். அவ்வாறு கூறி அவ்விடம் விட்டுக் குளிர்ச்சியுள்ள நீர்வளம் பொருந்திய வேறொரு நாட்டில் போய்விட்டார் என்றவாறு.

முனிவர னகல விதிமுறை நோற்ற மொய்குழல் கங்குல்வாய் தோறு
நனையவிழ் செழுந்தார்க் கேள்வனுந் தானு நலனுகர்ந் தின்புறு நாளிற்
பனிவரை யீன்ற கொவ்வையஞ் செவ்வாய்ப் பசுங்கிளி யளித்தநல் வரத்தாற்
கனவுறு கலவி நலத்தினு மவளுட் களித்திடக் கருப்பநேர்ந் ததுவே. 28

இ - ள் : அந்த முனிவர் போய்விட்ட பின்பு விதிப்படி விரதம் இருந்த சாரதையானவள் இரவுதோறும் தேனுடன் மலர்ந்திருக்கும் செழுமையுள்ள பூமாலையணிந்த கணவனும் தானும் இன்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும் நாளில் மலையரையன் செய்த தவத்தினல் அவனுக்குப் புதல்வியாகிய கோவைப்பழம் போன்ற சிவந்த வாயையுடைய பசுங்கிளி மொழியொத்த மொழியையுடையவராகிய பார்வதிதேவியார் அருளிச் செய்த வரப்பிரசாதத்தினல் சொப்பனத்தில் கூடும் கலவியின்பத்திலும் அவள் மனம் களிப்பையடையும்படி கருப்பம் உண்டாகியது என்றவாறு.

கருவளர்ந் திடலான் மாந்தளிர் மேனி கலைமதி யுருவென விளர்ப்பச்
சுரிகுழ லணங்கு சூனிறம் பெறலுந் துணிவிலா ராங்கது கண்டார்
திருநல னிழந்தாள் கற்புமிற் பிறப்புந் திறம்பினளெனப்பழி கூறி
யரவுமுன் கதுவ விறந்தகே டமர்கேட் டதிசயித் தகம்புழுங் கினரே. 29

இ - ள் : அக்கரு வளர்வதினால் மாந்துளிர் போன்ற மேனியானது சோடச கலைகளுள்ள சந்திரனின் வடிவம்போல வெண்மைநிறம் அடையும்படிச் சாரதை கருப்பக்குறி பொருந்தவும் இதன் உண்மை தெரியாதவர்கள் அதைக் கண்டு கைம்பெண்ணாகிய சாரதையானவள் கற்புத்தன்மையையும் குடிப்பிறப்பையும் இழந்துவிட்டாளென்று பழிசொல்ல அதைப் பாம்பு கடித் திறந்துபோனவன் உறவினர்கள் கேள்விப்பட்டு அதிசயித்து மனம் புழுங்கினார்கள் என்றவாறு.

வேறு

அலர்மொழி பொருது நாணி யடுசினந் துரப்பக் கற்பின்
குலமக டாதை யில்லிற் குழுமினர் குறுகி யாங்கே
புலமைசால் குணத்தின் மிக்க பூசுர ரவைமுன் மாய்ந்தோன்
றலைவியை வருக வென்று ரன்னவ டானுஞ் சார்ந்தாள். 30

இ - ள் : தங்களுக்கு நேரிட்டிருக்கிற பழிமொழியைச் சகிக்க மாட்டாமல் வெட்கம் அடைந்து கொடியதாகிய கோபம் அதிகரித்ததனால் சாரதையின் தகப்பன் வீட்டில் வந்துசேர்ந்து அவ்விடத்திலிருக்கும் வேத சாத்திரமுணர்ந்த பிராமணர் சபையின்முன் சாரதையை அழைப்பித்தார்கள். அவளும் அங்கு வந்தாள் என்றவாறு. அலர்மொழி - பழிமொழி; அம்பல் என்பதும் இது.

நிலங்கிளைத் தயர்ந்து நாணி நீள்குழற் றலைகீ ழிட்டோ
ரிலங்கொளி மின்னி னின்று ளெழினலன் யாவு நோக்கிக்
குலங்கெட வடுவுண் டாக்குங் கொடியவ ளிவளா மென்றே
யலங்கலந் தண்டார் மார்பத் தந்தண ரம்பல் சொன்னார். 31

இ - ள் : பூமியைக் காற்பெருவிரலாற் கிளைத்து மனச்சோர்வுடன் நாணமுங்கொண்டு நீண்ட குழலினையுடைய தலையினை வளைத்துப் பூமியைப் பார்த்துக்கொண்டு ஒப்பற்ற ஒளியுள்ள மின்னலைப்போல நிற்பவளுடைய உடலின் அழகினையெல்லாம் கண்டு இவள் குலங்கெடும்படி குற்றத்தை உண்டாக்கும் கொடியவளென்று அலங்கலாகிய குளிர்ச்சியுள்ள பூமாலை அணிந்திருக்கும் மார்பினையுடைய பிராமணர்கள் பழிமொழி கூறினார்கள் என்றவாறு.

வாழ்கலை தவறு செய்த மதியிலி யென்று சொல்வார்
தாழிருங் குழலே யீது தகாதுங்கண் மரபுக் கென்பார்
கீழலை யாயு மீது கீழ்மையே புரிந்தா யென்பார்
ஏழைநீ நிறையி னீங்கி யென்செய்தா யிதனை யென்பார். 32

இ - ள்: குலத்துக்குப் பழுதுண்டாகச் செய்த புத்திகெட்டவளே! இனி நீ உயிருடன் வாழ்வதில்லை என்று சிலர் சொல்லுவார்கள். அடி பெண்ணே! நீ செய்த இந்தக் காரியம் உங்கள் குலத்துக்குத் தகாதென்று சிலர் சொல்லுவார்கள். நீ உயர்ந்த சாதியிற் பிறந்தவளாயிருந்தும் இழிவான காரியத்தைச் செய்தனையென்று சிலர் சொல்வார்கள். அடி மதிகெட்டவளே! பதிவிரதாத் தன்மையைவிட்டு என்னடி இப்படிச் செய்தாயென்று சிலர் சொல்லுவார்கள் என்றவாறு.

என்றவ ரொறுக்குங் காலை யிருமைதேர் சான்றோ ரெண்ணித்
தொன்றுசால் புடைய கற்பின் றொழுகுலங் கெடச்செய் தாளை
மன்றலங் குழலு மூக்கும் வள்ளைவார் காது மின்னே
யொன்றறக் கொய்து போக்கி யூர்க்கயல் கடிக வென்றார். 33

இ - ள்: இவ்வாறு அந்தச் சபையிலிருந்தவர்கள் குறைவுபடுத்திப் பேசும்போது இம்மை மறுமைகளை உணர்ந்த பெரியோர்களாயிருப்பவர்கள் ஆலோசித்துப் பழமையாக வருகின்ற கற்பு நிலையையுடைய பிராமண குலத்துக்குக் கெடுதியுண்டாகச் செய்தவளைத் தலை மயிரையும் மூக்கையும் காதுகளையும் ஒன்றும் விடாமல் அறுத்து இப்பொழுதே ஊருக்கு அயலதாகத் துரத்திவிடுங்கள் என்று கூறினார்கள் என்றவாறு.

கேட்டவை புரிது மென்னக் கிளர்ந்தெழு சினத்த ராகி
யூட்டரக் கனைய கண்ணர் கதுமென வுருத்துச் சீறிச்
சேட்டிளம் பிடியை முற்றுஞ் சிங்கவே றென்னச் சூழ்ந்து
மோட்டிள முலையி னாளை முருக்குவான் குறுகுங் காலை. 34

இ - ள்: அவர்கள் கூறியதைக் கேட்டு அவ்வாறே செய்கிறோமென்று மூளுகின்ற கோபத்தை யுடையவர்களாய் அரக்கனைப்போலக் கண்கள் சிவந்து உக்கிரத்துடன் சீறி விரைவாகப் பெருமையுள்ள ஒரு பெண்யானையைக் கொல்லத்தொடரும் ஆண்சிங்கம் போலச் சூழ்ந்து கொண்டு சாரதையென்பவளை வருத்தும்படிச் சென்றபோது என்றவாறு.

மன்னிய நிறைவ ழாது வயங்கிய கற்பி னாளைப்
பொன்னள வின்ப நல்கும் பொதுநலக் கணிகை யென்றே
சொன்னவர் நாவற் றாழ்ந்த துயர்க்கடல் குளிப்ப ரென்னா
மின்னென விசும்பி னின்றோர் தெய்வதம் விளம்பிற் றன்றே. 35

இ - ள்: நிலைபெற்ற முறைமை தவறாமல் விளங்குகின்ற கற்புள்ள இந்தச் சாரதையை வந்த கணவன் கொடுத்த பொன்னளவுக்குத்தக்க இன்பம் கொடுக்கும் பொதுமகளாகிய வேசையென்று சொல்லுகிறவர்கள் நாக்கறுந்து துக்கக்கடலில் முழுகுவார்களென்று மின்னல் மின்னியது போல விண்ணினின்று ஒரு தெய்வம் கூறிற்று என்றவாறு.

விளம்புசொற் கேட்ட லோடும் வியனகர் மாந்த ரெல்லா
முளங்களித் துவகை பூத்தாங் குவர்க்கட லென்ன வார்த்தா
ரிளங்கொடி கிளைஞ ரோடு தந்தையு மீன்ற தாயுந்
துளங்கிய துன்ப நீங்கித் தொலைவிலா வின்ப முற்றார். 36

இ-ள்: அவ்வாறு கூறிய அசரீரி உரையைக் கேட்ட மாத்திரத்தில் விசாலமுள்ள அந்த நகரத்திலிருக்கும் மனிதர்களெல்லோரும் மனம் களித்து மகிழ்வுகொண்டு பருவகாலத்தில் ஒலிக்கும் கடல்போல ஆரவாரித்தார்கள். சாரதையின் தாய் தந்தையரும் உறவினரும் நடுங்கிய துன்பம் நீங்கி ஒழியாத இன்பம் அடைந்தார்கள் என்றவாறு.

அவ்வழி யறிஞர் தாமு மலர்மொழி கூறி னோரு
நவ்வியங் கண்ணி கற்பி னலனேரற் புதமென் றஞ்சிச்
செவ்விதின் முகங்கீ ழிட்டுத் திருந்துரை யாடா ராகி
யிவ்வண மிரண்டு கன்ன லிருந்துளங் கலங்கி னாரே. 37

இ-ள்: அப்போது அறிஞர்களும் பழிகூறியவர்களும் மான்பார்வை போன்றபார்வையுள்ள சாரதையின் கற்பினன்மையானது அற்புதமுள்ளதென்று பயந்து செவ்விதாக முகத்தைக் கிழிட்டுக்கொண்டு யாதொரு பேச்சுமில்லாதவர்களாய் இவ்வாறு இரண்டு நாழிகை மட்டிலிருந்து மனம் கலங்கினார்கள் என்றவாறு.

வேறு

அற்புத மிஃது சரதமென் றுணரா தகல்விசும் பிடையொலித் தெழுந்த
சொற்படி றென்று தொழுகுலத் தோரிற் சொற்றனர் சிலரவ ரெல்லாம்
பொற்புறு நாவற் றுதிர்ந்திட வாயாற் புழுச்சொரிந் தனரவை காணாக்
கற்பின டகைமை புகழ்ந்தனர் கிளைஞர் கன்னியைத் தழுவினர் மகிழ்ந்தே. 38

இ-ள்: இது அற்புதமானது சத்தியமானது என்று உணராமல் விசாலமுடைய விண்ணில் ஒலித்தெழுந்த அசரீரியாகிய வாக்குப் பொய் யென்று பிராமணர்களிற் சிலர் கூறினார்கள். அவர்களெல்லோரும் அழகு பொருந்திய நாக்கறுந்து விழும்படி வாயின் வழியாகப் புழுக்கள் சொரிந்தார்கள். அவைகளைக் கண்டு கற்புள்ள சாரதையை உறவினர்கள் வந்து தழுவிக்கொண்டு அவள் கற்பின் பெருமையைப் புகழ்ந்துபேசி மகிழ்ந்தார்கள் என்றவாறு.

செய்தவக் கிழமை வேள்விநான் மறையோர் சிலரவ ணிருந்துதெய் வதமுங்
கைதவ முரையா தணங்கனுள் வயிற்றிற் கருப்பமும் வளர்வதா லிந்த
மைதவழ் குழலிக் கெந்தவா றந்தோ வசையறு மெனநவை யுறலு
மெய்தெரிந் தகில கலையுணர்ந் தறிந்த வேதியன் ஒரு வனீதுரைத்தான். 39

இ - ள் : தவஞ்செய்தற்குத்தக்க உரிமையும் யாகங்கள் செய்யும் உரிமையும் உள்ள பிராமணர்களில் சிலர் அங்கிருந்து யார் பொய் கூறினுலும் தெய்வமும் பொய் கூருது. இவள் வயிற்றில் கருப்பமும் நாளுக்குநாள் வளர்வதினுல் இவளுக்கு வசைமொழி எவ்வாறு நீங்குமென்று வருந்துங் காலத்தில் உண்மைதெரிந்து சாத்திரங்களையெல்லாம் கற்ற ஒரு பிராமணன் இந்த வார்த்தை கூறுகிருன் என்றவாறு.

கண்டுகேட் டறியப் படுவன வான காட்சியா லாகம மளவா
லுண்டென வுணருந் திறத்தவா றெல்லா வுலகமு மாயையின் வடிவே
தண்டலின் மாயை மயக்கினுல் வாராத் தகையன யாவையா தலினுற்
பண்டைநா ளிலதாய் நினைவதற் கரிதாம் பான்மைய தொன்றெனத் தருமே.

இ - ள் : கண்டும் கேட்டும் அறியப்படுவதாகிய பிரத்தியட்சப் பிரமாணத்தினுலும் ஆகமப் பிரமாணத்தினுலும் உண்டென்று அறியத்தக்க முறையின்படி எல்லாவுலகமும் மாயைவடிவே. ஒழியாத அந்த மாயை மயக்கினுல் வராதவையுமில்லை. ஆகையால் அந்த மாயை முன்னுளில்லாததாய நினைப்பதற்கு அரிதாகிய பகுதியுள்ள ஒரு காரியத்தைப் புதிதாக உண்டாக்கும் என்றவாறு.

இந்தமா மாயை திங்களங் கண்ணி யிறைவிளை யாட்டெனத் துணிந்து
சந்தநான் மறையு மாகம மனைத்துந் தனித்தனி யுரைத்திடு மென்ரு
லுந்திநாண் மலரி லுலகெலாங் காட்டு மொருவனு மயனுமொன் றறியா
வந்தவா னவன்றன் றிருவிளை யாட்டை யார்கொலோ வின்னதென் றறிவார்.

இ - ள் : இந்த மகாமாயையானது பிறையை மாலைபோல அணிந்தருளிய பரமசிவனுடைய திருவிளையாட்டென்று உறுதி செய்து சந்தமுள்ள நான்கு வேதங்களும் இருபத்தெட்டு ஆகமங்களும் தனித்தனி முறையிடுமென்ருல் நாபிக்கமலத்தில் உலகினைக்காட்டும் மாயவனும் பிரமனும் சிறிதும் அறிந்து கொள்ளமாட்டாத அந்தக் கடவுளுடைய திருவிளையாடலை இத்தன்மையதென்று எவர்கள் அறியத்தக்கவர்கள் என்றவாறு.

ஓதுநான் மறையீர் கேட்டிர்மீன் வயிற்றின் யோசன கந்திவந் துதித்தாள்
மேதியி னகட்டின் மகிடனென் றுரைக்கும் வெந்திறற் ருனவன் பிறந்தான்
ருதுதாழ் பொழில்சூழ் சத்திய புரத்திற் ருழ்குழ லியரனை வருமோ
ரேதுவாற் கால மொன்றிலவ் வயிருர்ந் தெழில்பெறக் கருப்பமுற் றனரே. 42

இ - ள் : வேதங்கள் ஓதும் பிராமணர்களே! கேளுங்கள். மீன் வயிற்றினிடமாக யோசனகந்தி வந்து பிறந்தாள். எருமை வயிற்றினிடமாகக் கொடிய செய்கையையுடைய மகிடாசூரன் வந்து பிறந்தான். மகரந்தங்களுடன் பூ மலர்ந்திருக்குஞ் சோலை சூழ்ந்த சத்தியபுரத்திலிருந்த

தாழ்ந்த அளகத்தையுடைய மாதர்களெல்லோரும் ஒரு காரணத்தால் ஒரே காலத்தில் வயிறு நிறைந்து இடை தோற்றுதல் முதலாகிய குறிகள் தோன்றக் கருப்பம் அடைந்திருந்தார்கள் என்றவாறு.

எரிதவழ் வடிவே லடல்வசு தேவ னிகலின ரிடுதளைப் படுநாட்
கரியமெல் லோதி யுரோணிகே ளின்றிக் கருப்பமுற் றனளிவை யன்றி
யிருமையு முதவுந் தெய்வத வரத்தா லிருடிகண் முனிந்தசா பத்தால்
வரன்முறை யாகித் தொன்றுதொட் டுலகில் வருவன வல்லவும் வருமே. 43

இ-ள்: தீயுமிழும் வடித்த வேலையுடைய வசுதேவன் பகைவரால் தளைபட்டிருந்த நாளில் கறுத்த அளகத்தையுடைய உரோகணியென்னும் அவன் மனைவி தன் கணவனில்லாமலிருந்தும் கருப்பம் அடைந்தாள். இவைகளும் அல்லாமல் இம்மைப் பயனையும் மறுமைப் பயனையும் கருணை செய்யும் தேவவரத்தினாலும் முனிவர்கள் சபித்த சாபத்தாலும் வரன்முறையாகப் பழங்காலந்தொடங்கி வருபவைகள் மாறி வேறே புதுமையாக வருவதுமுண்டு என்றவாறு.

ஐந்தவித் துயர்ந்த வாற்றன்மா தவத்தோ ரகங்கறுத் துரைத்தசா பத்தால்
முந்தைநாட் சாம்ப னகட்டிடை வலிய முசலமொன் றுதித்தது செழுந்தார்ப்
பைந்துண ரிதழிச் செஞ்சடா மகுடப் பரமனைப் பரவுமோர் முனிவன்
மந்திர பலத்தா லன்றுவ நாச்சு வயிற்றினுங் கருப்பமுற் றதுவே. 44

இ-ள்: பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகஞ்செய்து மேன்மை தங்கிய தவ வல்லமையுடைய முனிவர்கள் மனதில் கோபங்கொண்டு கூறிய சாபத்தினால் முன்னாளில் சாம்பனென்பவன் வயிற்றினிடத்தில் வன்மையுள்ள முசலமென்னும் இருப்புலக்கை யுண்டாகியது. பசுமையுள்ள கொன்றைப் பூங்கொத்து மாலையணிந்த செஞ்சுடர் மகுடத்தையுடைய பரமசிவனைத் துதிசெய்யும் ஒரு முனிவனுடைய மந்திரவலியால் வன்னுச்சுவன் என்பவன் வயிற்றிலும் பண்டு கருப்பமுண்டாயது என்றவாறு.

தாதுதாழ் பொகுட்டுத் தாமரைக் கோயிற் ருழ்குழ லனையசா ரதையும்
வேதமா முனிவ னொருவனைப் பணிந்து விரதமொன் றியற்றுதல் புரிந்தா
ளாதலால் வயிற்றிற் கருப்பமுற் றிருந்து மருளவை யகற்றின ளிதனைத்
தீதிலா வேறு மாதரால் வினவித் தேர்ந்துளந் தெளிமினென் றுரைத்தான்.

இ-ள்: மகரந்தம் நிறைந்துள்ள பொகுட்டினையுடைய தாமரைப் பூங்கோயிலிலிருக்கும் திருமகளை ஒத்த இந்தச் சாரதையும் ஒரு முனிவனைப் பணிந்து உமாமகேசுவர விரதம் அனுட்டித்தாள். அந்த விரத பலத்தால் கருப்பம் அடைந்து குற்றமற்றவளாய் இருக்கிறாள். இந்தக் காரியத்தை உத்தம குணமுள்ள சில பெண்களை அனுப்பிக் கேட்டுக்கொண்டு வரக் கூறி உங்கள் மனதிலிருக்கும் ஐயத்தைப் போக்கிக் கொள்ளுங்கள் என்று கூறினான் என்றவாறு.

அன்னது தேர்வான் றெழுகுலத் தமைந்த
வணங்கனுர் செல்கெனச் சென்ற
மின்னிக ரிடையார் வினவலு மவண்முன்
விளைந்தன படிப்படி விளம்ப
வின்னணங் கேட்டோர் மீண்டுவந் துரைத்தார்
யாவரு முணர்ந்தொரு மறையோன்
சொன்னவை முழுதுஞ் சரதமென் றேத்திச்
சுரிகுழ லணங்கையுந் துதித்தார். 46

இ - ள் : அந்தப் பிராமணன் கூறியதை ஒத்துக்கொண்டு சாரதை கருக்கொண்டிருக்கும் முறைமையைத் தெரியும்படி பிராமணப் பெண்களைப் பார்த்து நீங்கள்போய் அறிந்துகொண்டு வாருங்கள் என்று அனுப்ப அவர்கள் போய்ச் சாரதையைக் கேட்டார்கள். அவள் முனிவர் வந்தது முதல் நடந்தவைகளையெல்லாம் முறையாகக் கூற அதைக்கேட்டு வந்து சபையாருக்குக் கூறினார்கள். அதைக்கேட்டு அவர்கள் அனைவரும் இந்தப் பிராமணன் கூறியனவெல்லாம் உண்மைதானென்று அவனைப் புகழ்ந்து சுரிந்திருக்கும் அளகத்தையுடைய சாரதையைத் துதித்தார்கள் எ - று.

செழுமறை யவருங் கவிஞருங் கற்பின் றிறம்புகழ்ந் தகன்றன ராங்கே
பழியறு சிறப்பி னருந்ததி யனைய பனிமொழிச் சாரதை யென்பாள்
குழவியம் பரிதிச் செல்வனைப் போலக் குரைகட லுலகெலாம் விளங்கு
மழவையீன் றெடுத்துக் களிசிறந் துவகை மாக்கடன் மூழ்கினள் மகிழ்ந்தே.

இ - ள் : அதன்பின் அங்கிருந்த பிராமணர்களும் பண்டிதர்களும் போய்விட்டார்கள். அதற்குமேல் பழி நீங்கிச் சிறப்படைந்த அருந்ததியை ஒத்த கற்புள்ள சாரதையானவள் ஒலிக்காநின்ற கடலாற் சூழப்பட்ட இவ்வுலகமெங்கும் விளங்கும் உதயகால இளங்கதிர்போல ஒரு குழந்தையைப் பெற்றுக் களிப்படைந்து மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்தாள் என்றவாறு.

ஈன்றவ ளுவப்ப நன்குசான் மதியோ டிலக்கணக் கிடக்கைய னாகத்
தோன்றியெக் கலையு முணர்ந்துமுந் நூலுந் தொன்மறை விதிவழி சூடி
யான்றசீர்ச் சார தேயனென் றொருபே ரமைவரப் புனைந்தபின் யாண்டோர்
மூன்றக வயிற்றன் னுணர்வினி லிருக்கு முதலவா மறைமுழு துணர்ந்தான்.

இ - ள் : பெற்றவள் மகிழ நன்மை மிக்க விவேகத்துடன் முப்பத்திரண்டு அழகும் இவனிடத்திலிருக்கிறதென்று சொல்லும்படி தோன்றி எல்லாச் சாத்திரங்களையுமுணர்ந்து பழமையான விதிப்படி உபநயனமும் செய்துகொண்டு சிறப்புப் பொருந்திய சாரதேயன் என்னும் பெயரும் பெற்று மூன்று வயதான அளவில் தன் உணர்வினால் இருக்குவேத முதலாய வேதங்களையெல்லாம் உணர்ந்தான் என்றவாறு.

மறைபயில் பாலன் கலையினால் வளரு மதியெனக் கலைகளான் வளர்நா
ளறைகம ழிதழித் தொடையல்சூழ் சடில நாயகன் சிவநிசி வரலு
முறுதிநூ றெளிந்து பாரத கண்டத் துறைபவ ரனைவரு மாங்கே
குறுகுதற் கரிய சிவபத நிகர்க்குங் குறைவில்சீர்க் கோகன்ன மடைந்தார். 49

இ - ள்: இவ்வாறு வேதங்கள் உணர்ந்த அந்தப் புதல்வன் கலைகளுடன் வளருஞ் சந்திரனைப்போல் கலைகளாகிய சாத்திர உணர்ச்சியுடன் வளரும் நாளில் மணங்கமழும் கொன்றைமாலை சூழ்ந்த சடாமகுடத்தையுடைய பரமசிவன் பூசைக்குரிய சிவராத்திரி வந்தது. அந்த நாளில் வேதமுணர்ந்து பரதகண்டத்தில் உள்ளவர்களெல்லோரும் யாவரும் செல்லுதற்கரிய சிவலோகத்தை ஒப்பாகும் குறைவில்லாத சிறப்புடைய கோகன்னத்துக்குச் சென்றார்கள் என்றவாறு.

பொன்புரை கடுக்கை வேணிவா னவனைப் பூசனை புரிசிவ நிசியின்
மன்பதை யெல்லாம் பொருவில்கோ கன்ன மன்னிய வாசகங் கேளாத்
தென்புல வாணர்க் கருங்கட னிருக்குஞ் சிறுவனுந் தானுமா யெழுந்து
தன்புறங் காக்குங் கிளைஞர்சூழ் போதத் தளிரியற் சாரதை போனாள். 50

இ - ள்: பொன்னிறத்தை ஒத்த கொன்றைமாலையை அணிந்த சடையையுடைய பரமசிவனைப் பூசைசெய்யும்படியான சிவராத்திரி நாளில் மக்களெல்லோரும் கோகன்னத்துக்குப் போகிறார்கள் என்னும் சொல்லைச் சாரதை கேள்விப்பட்டுப் பிதிர்த்தேவர்களுக்குச் செய்யுங்கடன் செய்யத்தக்க சாரதேயனென்னும் பெயருள்ள புதல்வனுடன் புறப்பட்டுத் தன்னைப் பாதுகாக்கும் உறவினரும் சூழ்ந்துவரப் போனாள் என்றவாறு.

பூந்துணர் வீழ்ந்து தவழ்நறும் பசுங்கால் புகுந்துலாஞ் சண்பக வேலிக்
காந்தளஞ் சிலம்பில் விளைந்தசெஞ் சாந்துங் கதிர்நிலா முத்தமுங் கொழித்
தீந்தமிழ் மணக்கும் வைகைமா நதிசூழ் தென்புல நாடகன் றுங்கண் [துத்
ஏந்திள முலையாள் சாரதை தவத்தா லெய்திய கொழுநனு மடைந்தான். 51

இ - ள்: அவ்வாறு அவள் போகும்பொழுது பூங்கொத்துக்களில் பொருந்தி வருகின்ற மணமுள்ள தென்றல்காற்று சென்று உலாவுகின்ற சண்பகச்சோலை மலர்ந்திருக்கும் பொதியமலையில் உண்டான செஞ்சந்தனத்தை அப்பியுள்ள நிலவையொத்து முத்துக்களையுங் கொழித்து இனிய தமிழ் மணந்து கொண்டிருக்கும்படியான வையையாறு சூழ்ந்த பாண்டிநாட்டை அகன்று இளமைதங்கிய தனமுள்ள சாரதையின் தவத்தினால் பொருந்திய கணவனும் அவ்விடம் வந்தான் என்றவாறு.

கள்ளவிழ் குழலா ளாயிடைக் கனவிற் கலவிசெய் கொழுநனைக் காணு
வுள்ளுறத் தெளிந்து வனமுலை புளக முறவவன் வடிவெலா நோக்கித்
தெள்ளுதெண் டிரைசூழ் பொலங்கிரி முகட்டிற் சேட்டிளம் பரிதிகண் டாங்கே
முள்ளரை முளரி முறுக்கவிழ்ந் தென்ன முகமலர்ந் தகமலர்ந் தனளே. 52

இ - ள் : தேனுடன் மலர்ந்த மலரணிந்த கூந்தலையுடைய சாரதையானவள் கனவில் தன்னைப்புணரும் கணவனை அவ்விடத்திற்கண்டவுடன் மனதில் தன்னுடைய கணவனேயென்று தெளிந்து அழகிய தனங்களினிடத்திற் புளகமுண்டாக அவன் வடிவையெல்லாம் பார்த்துத் தெளிவுள்ள கடல் சூழ்ந்த உதயகிரியினிடத்தில் உதயமாகுஞ் சூரியனைக் கண்டு அப்பொழுதே முள்ளுகள் பொருந்திய கொடியுள்ள தாமரையரும்பு முறுக்குவிட்டு மலர்வதுபோல முகமலர்ந்து மனமகிழ்ச்சி அடைந்தாள் என்றவாறு.

பண்டைநாண் முதலாக் கனவெலா மின்பம் பருகிய கேளுமன் றன்று
கண்டறி குறியாற் றெளிந்துதன் படிவங் காட்டிய மதலையுங் காணு
வண்டிமிர் குழலாய் நின்னொடு பகரு மாற்றமொன் றுளதென வேறு
கொண்டுள முவகைக் கடலிடை மூழ்கிக் குறித்தன வினவுவான் புகுந்தான்.

இ - ள் : முன்னாள் முதலாகக் கனவுகள்தோறும் சாரதையுடன் இன்பம் அனுபவித்த கணவன் அந்தந்த நாளில் பார்த்தறிந்த குறிப்பினால் தெளிந்து தன்னுருவச்சாயலைக் காட்டிய புதல்வனையுங்கொண்டு வண்டுகள் இசைபாடிக்கொண்டிருக்கும் அளகத்தையுடையவளே ! உன்னுடன் ஒருசொல் பேசவேண்டியதிருக்கின்றது என்று தனித்திருந்துகொண்டு மனமானது மகிழ்ச்சிக்கடலில் முழுகத்தக்கதாகக் குறித்தவைகளைக்கேட்கலானான் என்றவாறு.

மணமலி குழலே யாரைநீ நின்னை
மணம்புணர் கேள்வன்யார் மற்றுன்
உணர்வுடைத் தந்தை யாவனோ வெதுநின்
னூரெது பேரெதென் றுவந்து
துணைவன்முன் வினவக் கலுழ்ந்துதன் மரபு
தொடுத்திள மையின்மணஞ் செய்த
கணவனை யிழத்தல் காறுநின் றுரைத்தாள்
காதலன் மறுத்திஃ துரைத்தான். 54

இ - ள் : மணம் நிறைந்த மலர்மாலை அணியத்தக்க கூந்தலையுடையவளே! நீயார்? உன்னை மணம் செய்துகொண்ட கணவன்யார்? உணர்வையுடைய உன் தந்தை யார்? ஊர் எது? பெயரென்ன வென்று கணவன் வினவச் சாரதையானவள் கண்களில் நீர்பெருகும்படித் துயரம் அடைந்தவளாய்த் தன் மரபுமுதல் இளமையிலேயே மணம் செய்துகொண்ட கணவனை யிழந்தது ஈறாகச் சொன்னாள். அவன் மறுபடியும் இவ்வுரை கூறுகிறான் என்றவாறு.

மன்றலங் கோதாய் நின்னய னின்ற மறையிளஞ் சிறுவநின் மகன்கொல்
அன்றிமற் றயலார் மகன்கொல் யார்மகனென் றறிகலான் போலவன் வினவ
நின்றசீர்ச் சார தேயனென் ளெருபேர் நிலமெலா நிறுவிய புகழோன்
என்றனிப் புதல்வன் பலகலை வேதம் யாவையு முணர்ந்தவ னென்ருள். 55

இ - ள் : *மணம் தங்கும் கூந்தலையுடையவளே! நின் அருகிலிருக்கும் இந்தப் பிராமணப்பிள்ளை உன் மகனோ? அல்லது மற்றொருவருடைய மகனோ? வேறு யாருடைய மகன் என்று அறியாதவன்போல் வினவ இந்த மகன் பெருமை தங்கிய சாரதேயனென்னும் ஒப்பற்ற பெயர் உலகமெங்கும் விளங்கும்படிப் புகழ்பெற்றவன் என்னுடைய புதல்வன் பல சாத்திரங்கள் வேதங்கள் யாவும் உணர்ந்தவனென்ருள் என்றவாறு.*

சொற்றனள் கேட்டு வெடிபட நகைத்துத் தொழுகுலத் துதித்தநின் செய்கை
முற்றவு நன்று நன்றுகா ணென்ன மொழிந்துபைங் காந்தளஞ் செங்கை
பற்றிய ஞான்றே யிறந்தனன் கேள்வன் பாலனை நீபின்னர்ப் பயந்த
தெற்றெனப் பகர்வேன் முகிழ்முலை யணங்கே யேதுகா ரணமிதற் கென்ருன்.

இ - ள் : *அவள் கூறியதைக் கேட்டுக் கடகடவென்று நகைத்துப் பிராமணகுலத்திற் பிறந்த உன் செய்கையெல்லாம் மிகவும் நன்ருயிருக்கிற தென்று கூறிச் செங்காந்தள் மலரையொத்த உன் கைப்பற்றி மணஞ் செய்துகொண்ட கணவன் அன்றே இறந்துபோனுன். பின்பு நீ புதல்வனைப் பெற்றது என்ன அதிசயமென்று சொல்வேன். தாமரையரும்பை ஒத்த தனமுள்ளவளே! கணவனிறந்த பின்பு நீ புதல்வனைப் பெறுதற்குக் காரணமென்ன என்ருன் என்றவாறு.*

அந்நிலை மடந்தை நாணமீ தூர வலர்கதிர் மதிமுக மிறைஞ்சி
யின்னகை புரிந்து தமியனை யிகழ்த லேற்பதோ முழுதுணா ரிறைவ
நின்னையா னென்று மறிந்துள னென்னை நீயுமிவ் வாறறிந் துளையா
லுன்னருந் தகைய விந்நிலைக் கிருவே முள்ளமே சான்றெனப் பின்னும். 57

இ - ள் : *அந்தப் பிராமணன் கூறிய உரையைக் கேட்டவுடன் சாரதையானவள் பரந்த கிரணங்களையுடைய சந்திரனையொத்த முகத்தை வணங்கிக்கொண்டு இனிய நகைசெய்து தமியனுகிய என்னை இவ்வாறு இகழ்வது உமக்குத் தகுதியோ? முழுவதும் அறிந்த கணவனே! உன்னை நான் என்றும் அறிந்திருக்கிறேன். என்னை நீயும் அவ்வாறே அறிந்திருக்கின்றனை. நினைத்தற்கரிய இந்நிலைமைக்கு நம்மிருவர் மனமே சாட்சியென்று கூறிப் பின்னும் கூறுகிருள் என்றவாறு.*

முனிவரன் மேனுண் மொழிந்தது மன்னேன் மொழிப்படி நோன்பியற் றியதும்
பனிவரை யுமையா ளெதிர்ந்தது மெதிர்ந்த பவங்களோ ரிரண்டினு முன்னை
வினைவழி நிகழ்ந்த தொடர்பெலா முணர்த்தி மெய்வர மளித்தது முரையாய்த்
தநயனை விரதப் பயனிலோர் பாதி தன்னெடும் வழங்கின ளணங்கே. 58

இ - ள் : முன்னாளில் முனிவர் கூறியதும் அவர் கூறியவாறு தான் விரதம் இருந்ததும் உமையவள் காட்சி கொடுத்ததும் அவ்வாறு காட்சி கொடுத்துப்போன இரண்டு பிறவியில் உன்னை விதிவசத்தால் தொடர்ந்து வந்த முறைமை தெரிவித்ததுமன்றி உண்மையாகிய வரமருளியதும் கூறிப் புதல்வனைத் தான் இருந்த விரதபலத்தில் பாதியுடன் கொடுத்தாள் என்றவாறு.

அறைகட லுலகிற் பெறற்கரி தாய
பெரும்பொருள் பெற்றெனப் பெற்றுன்
பொறையுடை யணங்கின் றந்தைதாய் கிளைஞர்
பொருந்திட வன்னவ ளுடனே
மறையிளஞ் சிறுவற் கொண்டுபே ருவகை
மகிழ்ச்சிய னாகியாங் ககன்று
சிறையளி பாண்செய் பொதும்பர்சூழ் வைகைச்
செந்தமிழ்ப் பாண்டிநா டடைந்தான். 59

இ - ள் : ஒலிக்கா நின்ற கடல் சூழ்ந்த இவ்வுலகில் பெறுதற்கரிய தாகிய ஒரு பொருளை அடைந்தது போல அடைந்த பிராமணன் கற்பு நிலையுள்ள சாரதையின் தாய் தகப்பன் உறவினர்கள் இவர்களெல்லோரும் சம்மதித்ததாகத் தன் புதல்வனையும் அவளையும் கூட்டிக்கொண்டு மிக்க மகிழ்வும் தன்னை மறக்கும்படியான மகிழ்வுமுள்ளவனாகி அவ்விடம் விட்டு நீங்கிச் சிறகினையுடைய வண்டுகள் இசைபாடும் பொழில் சூழ்ந்த வையை யாறு சேர்ந்த பாண்டிநாட்டை அடைந்தான் என்றவாறு.

வாள்விரி பசும்பொற் புதவுயர் மாட மறுகுசூழ் வளநகர் சார்ந்து
நீள்கருங் குழலாள் புணர்முலைப் போக நீங்கருங் கனவெலா நுகர்ந்து
நாள்பல கழிய விறந்தனன் கேள்வ னலனுகர்ந் திவனையேழ் பிறப்புந்
தோள்பிரி யேனென் றணங்கனை டானுஞ் சுடர்விரி கதழெரி குளித்தாள். 60

இ - ள் : ஒளிபரந்த பொன்னாற் செய்யப்பட்ட கதவுகளையுடைய உயர்ந்த வீடுகள் நிறைந்த வீதிகளுள்ள வளப்பமுடைய மதுரைப்பதியில் சேர்ந்து நீண்ட கரிய குழலையுடைய சாரதையின் போகத்தை அனேகநாள் கனவில் அனுபவித்து அதற்குமேல் இறந்துபோனான். சாரதையானவள் இந்தக் கணவனை ஏழு பிறப்புவரையில் பிரியாமல் இன்பம் அனுவிப்பேன் என்று சுடர் விடுகின்ற தீயில் மூழ்கினாள் என்றவாறு.

தொடுகட லுலகி னலனுகர்ந் துடலந் துறந்தவ ரிருவரும் பின்னும்
வடிமலர்க் கண்ணரிக் கற்பக மிலைந்து மகிணனுந் துணைவியு மாகிக்
கடிநலந் துய்ப்பான் கோடியா தவர்செங் கதிரெலா மொருவழி குழுமி
நெடுவிசும் படைந்த தெனவொளி கெழுமி நிலவுசீர் விமானமே வினரே. 61

இ - ள் : சகரர்களால் தோண்டப்பட்ட கடல் சூழ்ந்த பூவுலகில் இன்பம் அனுபவித்து உடலை ஒழித்த அவ்விருவரும் ஆய்ந்த கற்பகப் பூமாலையணிந்து கணவனும் மனைவியுமாகச் சுவர்க்கபோகம் அனுபவிக்கக் கோடிசூரிய ஒளியெல்லாம் ஒரே இடத்தில் சேர்ந்து நெடியதாகிய ஆகாயத்தினிடத்தில் வந்தது போல ஒளிபொருந்தி விளங்காநின்ற சிறப்பினையுடைய விமானத்திற் பொருந்தினார்கள் என்றவாறு.

ஆங்கினி தமர்ந்து குங்குமக் குவட்டி னணியெனத் திரண்டதிண் புயமுங்
கோங்கிள முகிழி னழகுவீற் றிருந்த குவிமுலைத் தடங்களு நெருங்கத்
தீங்கனி யனைய மெய்யுறு புணர்ச்சித் திருநல னுகர்ந்தபின் தெவிட்டிப்
பூங்குழ லுமையோ டிளமதிக் கண்ணிப் புனிதன்வாழ் சிவபத மடைந்தார்.

இ - ள் : இவ்வாறு விமானத்திலேறிச் சென்றவர்கள் சுவர்க்க லோகத்தில் இன்பமுடன் அமர்ந்து குங்கும மலையின் அழகுபோலத் திரண்ட திண்ணிய புயங்களும் இளமையாகிய கோங்கின் அரும்புபோலக் குவிவாகிய தனங்களும் நெருங்கத்தக்கதாக இனிய பழவர்க்கத்தை ஒத்த இரண்டு உடலும் ஒன்றுபடப் புணர்வதாகிய சிறந்த இன்பம் அனுபவித்துக் கொண்டிருந்து பின்பு அதனை வெறுத்துப் பூமாலை அணிந்த அளகபாரமுள்ள பார்வதியுடன் பரமசிவனுறையும் சிவபதமடைந்தார்கள் என்றவாறு.

இன்னதன் மையதிக் கதையென விதனை யாவரே யாயினுங் கற்றோர்
பன்னினோர் கேட்டோ ரிருநிலத் திம்மைப் படுபயன் விழைந்தனர் நுகர்ந்து
பின்னரு மறுமைப் பலன்சிவ பதமே பெறுகுவர் திண்ணமீ தென்னச்
சொன்னநான் மறையின் பொருண்முழு துணர்ந்த சூதன்மா தவர்க்கெலாஞ்
[சொன்னான். 63

இ - ள் : நைமிசாரணிய முனிவர்களே! இந்த உமாமகேசுவர பூசாபல வரலாறு இத்தன்மையன என்று கூறி, இந்த வரலாற்றை எவர்களேயானாலும் கற்றுணர்ந்தவர்களும் பிறர்க்குச் சொன்னவர்களும் கேட்டவர்களும் பெரியதாகிய இவ்வுலகத்தில் தாங்கள் விரும்பியபடியெல்லாம் இம்மைப் பயனை அனுபவித்துப் பின்பு சுவர்க்கபதமும் அனுபவித்துச் சிவபதம் அடைவார்கள் என்பது உறுதியென்று நான்கு வேதங்களின் பொருள் முழுவதையும் உணர்ந்த சூதமுனிவர் கூறினார் என்றவாறு.

உமாமகேசுவர பூசாபலமுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1081

இருபதாவது

உருத்திராட்சமகிமை உரைத்த அத்தியாயம்

கேட்டமறை வித்தகர் கிளர்ந்துவகை பொங்கி
நாட்டமொரு மூன்றுடைய நம்பனரு ளடியார்
வேட்டணியு மக்கமணி மேன்மையை விரித்தே
கோட்டமில் குணத்துமுனி கூறுகென லோடும். 1

இ - ள்: உமாமகேசுவரபூசையின் சிறப்பைக்கேட்ட நைமிசாரணிய முனிவர்கள் மகிழ்வுடையராய் முக்கண்ணரான பரமசிவன் அருள் பெற்ற அடியார்கள் விரும்பி அணிந்து கொள்ளும் உருத்திராக்க மகிமையை விவரிக்குமாறு கெடுதலில்லாத குணத்தையுடைய சூதமுனிவரே சொல்லுமென்ற அளவில் என்றவாறு.

மக்களுணர் வைக்கொடு மதித்துணர வற்றோ
முக்கணிறை வர்க்கடிமை முற்றினர் தரிக்கு
மக்கமணி யின்பெருமை யற்புதமி தென்னுத்
தொக்கமுனி வர்க்குமுனி சூதனுரை செய்தான். 2

இ - ள்: மனிதர்கள் உணர்ச்சியினல் மதித்து அறியத்தக்கதோ? மூன்று திரிநேத்திரங்களையுடைய பரமசிவனுக்கு அடிமைத்தன்மை நிறைந்தவர்கள் அணியும் உருத்திராக்கத்தின் பெருமை அற்புதமானதென்று சூதமுனிவர் கூட்டமாக இருக்கும் நைமிசாரணிய முனிவருக்குக் கூறினர் என்றவாறு.

எத்தகைய ரேனுமிழி வெய்துதொழில் செய்யு
மத்தகைய ரேனுமுமை யன்பனை வழுத்துஞ்
சித்தமில ரேனுமிறை சீர்மணி தரித்தான்
முத்தரவ ரென்றுமறை முற்றுமுரை செய்யும். 3

இ - ள்: எத்தன்மை உடையவர்களானலும், இழிவான தொழில் செய்யும் தன்மையுடையவர்களேயானலும், பார்வதிநேசனைத் துதிசெய்யும் சித்தமில்லாதவர்களேயானலும் பரமசிவனுடைய சிறப்புள்ள உருத்திராக்கம் அணிவார்களானல் அவர்கள் சிவன் முத்தர்களென்று வேதங்களெல்லாம் கூறுகின்றன என்றவாறு.

நம்பரம னின்பநய னந்தனி லுதித்தே
யும்பர்புக ழக்கமணி பூணுமறி வுள்ளோ
ரம்புவி யிடத்தில்வரு பாவமு மறுத்தே
செம்பொனுல கத்தரனை யொத்தினிது சேர்வார். 4

இ-ள்: நமது கடவுளுடைய முக்கண்களினின்றும் உண்டாகித் தேவர்களால் புகழப்பட்ட உருத்திராக்கத்தை அணிந்து கொள்ளும் விவேகமுள்ளவர்கள் இவ்வுலகில் நேரிடும் பாவங்களையெல்லாம் நீங்கித் தேவருலகத்தில் சிவனை ஒத்து இனிதிற் சேர்வார்கள் என்றவாறு.

என்கொனதி பற்பல வெதிர்ந்தடைவின் மூழ்க
லென்கொல்பரி வேள்விமுத லியாவையு மியற்ற
லென்கொலெழு கோடிவித மந்திரமு மெண்ண
லென்கொறவ மென்றுகன லைந்திடை யிருத்தல். 5

இ-ள்: பலபல நதிகளிற் சென்று முழுகுவதினால் என்ன பயன். அசுவமேத முதலாய யாகங்கள் செய்வதனால் என்ன பயன். சத்தகோடி மகாமந்திரங்களைச் செபித்ததனாலென்னபயன். தவமென்று பஞ்சாக்கினி மத்தியிலிருப்பதினாலென்ன பயன் என்றவாறு.

இத்துணையு நல்குபலம் யாததனி லெண்கூ(று)
ஒத்தபல நல்குவது ருத்திர விழிப்பேர்
சுத்தமணி யென்றுரிய தொல்லைமுனி வோராம்
வித்தகர் தரிப்பரிதில் வேறுபொரு ளுண்டோ. 6

இ-ள்: நதிகளில் முழுகுவது முதலாகக்கூறப்பட்ட இவைகள் எல்லாம் கொடுக்கும் பலன் யாதோ? அதனின் எட்டுமடங்கு அதிகமாகக் கொடுக்கத்தக்கது உருத்திராக்கமென்னும் பெயருள்ள நல்லமணியென்று தவத்துக்குரிய புராதனமுனிவர்களாகிய ஞானவான்கள் அணிந்து கொள்வார்கள். ஆதலால் அந்த மணியினுஞ் சிறந்தபொருள் வேறொன்றும் உண்டோ? இல்லை என்றவாறு.

வேறு

ஆய மாமணி யாயிரம் புனைந்திடி லவரை
மாய னான்முகன் புரந்தரன் வானவர் முதலோர்
பாயு மால்விடைப் பரனெனப் பணிகுவ ரென்றாற்
றாய மாமணி மிலைந்தவர் மனிதரோ சொல்வீர். 7

இ-ள்: அத்தன்மையுள்ள உருத்திராக்கமணி ஆயிரம் அணிந்து கொள்வார்களானால் அவர்களை திருமால், பிரமன், இந்திரன், தேவர்கள் முதலானவர்கள் தாவிச்செல்லும் இடபவாகனரூடராகிய பரமசிவன்

என்று கருதி வணங்குவார்கள் என்ருல் அந்த மணியை அணிந்து கொள்பவர்கள் மனிதர்களோ கூறுங்கள் என்றவாறு.

கடவு ணன்மணி சிரத்தினுங் கரத்தினுங் களத்தும்
படரு மார்பினுந் தோளினுங் காதினும் பகுத்து
மிடையு நல்விர லங்குட்ட மதனினும் விளங்க
வடைவி ஞலறிந் தணிபவர் சிவபத மடைவார். 8

இ-ள்: அந்த உருத்திராக்கமணியைத் தலையினிடத்திலும் காதுகளிடத்திலும் கழுத்தினிடத்திலும் பரந்த மார்பினிடத்திலும் தோள்களின் இடத்திலும் கைகளினிடத்திலும் அந்தந்த இடங்களில் அணிய வேண்டிய தொகைப்படி வகுத்து நன்மை தங்கிய அங்குட்ட விரலிலும் அணிய வேண்டிய முறையை அறிந்து அணிந்துகொள்ளுகின்றவர்கள் சிவபதம் அடைவார்கள் என்றவாறு.

பொங்கு மாணிக்க மாதிய மணியொடு புணர்த்தித்
தங்க மாயறு தகட்டினிற் குயின்றன கலத்தி
னங்கண் மானிலத் தரனக்க மணியினை யணிவார்
பங்க யப்பதந் தொழுபவர் பவக்கடல் படியார். 9

இ-ள்: விளங்குகின்ற மாணிக்க முதலாகிய ரத்தினங்களுடன் சேர்த்துத் தங்கத் தகட்டினுற்செய்யப்பட்ட ஆபரணம்போல உருத்திராக்க மணியை இவ்வுலகத்தில் அணிந்துகொள்ளுகின்றவர்களுடைய திருவடித் தாமரைகளை வணங்குகின்றவர்கள் பிறவிக்கடலில் அழுந்தார்கள் எ-று.

அரனி டத்திலன் பற்றவ ரரனக்க மணியுந்
திருவெண் ணீறுமெய் தரிக்கிலாப் பாதகச் சிதட
ருரிய வஞ்செழுத் துணர்கிலா நீசர்பே ருலகிற்
கரமெ னக்குரை ஞமலிதா னெனப்பவங் கழிப்பார். 10

இ-ள்: பரமசிவனிடத்தில் அன்பில்லாதவர்களும் உருத்திராக்கமும் திருநீறும் தங்கள் உடம்பில் அணிந்துகொள்ளாதவர்களாகிய மூடப் பாவிகளும் மோட்சம் அடைவதற்குரிய திருவைந்தெழுத்தை அறியாத தன்மையுள்ளவர்களும் இப்பெரிய உலகத்தில் கழுதையாகவும் குரைக்கும் நாயாகவும் பிறந்தும் இறந்தும் பிறவியைக் கழிப்பார்கள் என்றவாறு.

இந்து சேகரன் மணியக்க வலயத்தி லேற்று
மந்தி ரந்தரு பலத்தையித் துணையென மதித்துப்
புந்தி யாற்றெரிந் துணர்வதாற் புனலிடைப் படிவோர்க்
கந்த நன்மணிப் படுபுனல் சிவகங்கை யாமால். 11

இ - ள் : சந்திரனைத் திருமுடியில் அணிந்தருளிய பரமசிவனுடைய மணியாகிய உருத்திராக்க வடத்தினல் செபிக்கத் தக்க மந்திரம் தருகின்ற பலனை இவ்வளவென்ன மதித்துப் புத்தியினல் தெளிந்து அறிகின்றவர்கள் யாவர்? நீரில் மூழ்குபவர்களுக்கு உருத்திராக்கத்தில் படும் நீர் சிவகங்கைத் தீர்த்தமாம் என்றவாறு.

எண்ணு மோர்முக மாதியா யீரெழு முகமு
நண்ணு நன்மணி யவற்றிலோர் மணியினை நாடிப்
புண்ணி யோர்கடாம் பூசனை முறையினிற் புரியிற்
றெண்ணி லாமதி வேணியான் பூசையிற் சிறக்கும். 12

இ - ள் : எண்ணுகின்ற ஒருமுக முதலாகப் பதினன்கு முகமும் பொருந்தி இருக்கும் அம்மணியினில் ஒரு மணியினைக் கருதிப் புண்ணிய வான்கள் முறைமையுடன் பூசை செய்தால் தெளிவாகிய நிலவினையுடைய பிறைமதியணிந்த பரமசிவன் பூசையாகவே சிறக்கும் என்றவாறு.

இன்ன தன்மைய மணியின தியல்பெலா மெடுத்துப்
பன்னி யோதிடிற் பங்கயன் முதலினேர்க் கமையா
தென்னில் யாவரே யதனிலை விளம்புவா ரெனினு
முன்ன மந்தமா மணியினு னிகழ்ந்தமை மொழிவாம். 13

இ - ள் : இத்தன்மையுள்ள உருத்திராக்கத்தின் பெருமைகளை யெல்லாம் எடுத்து விவரமாகக் கூறினல் பிரமன் முதலானவர்கட்கும் அமையாதென்றல் ஏனையோர் அதன் பெருமையைச் சொல்லத் தக்க வர்கள் ஆயினும் இந்த உருத்திராக்கத்தினல் பண்டு நடந்த வரலாற்றைக் கூறுகின்றேம் என்றவாறு.

ஒல்கு மாங்குயி லொளித்திட மயிலின முவப்ப
வல்கு நீர்ந்திட மழைமுகி லனுதினம் பொழிந்து
மல்கு சீர்கெழு காச்சுமீ ரத்துக்கு மன்னன்
பல்கு சேனையான் பத்திர சேனனென் பவனே. 14

இ - ள் : மாமரத்திலிருக்குங் குயில்கள் சோர்வடைந்து ஒளிக்கவும் மயில் கூட்டங்கள் மகிழவும் குறைவுகள் நீங்கவும் மேகங்கள் அனுதினமும் பொழிந்து நிறைந்த சீர்தங்கிய காசுமீரநாட்டுக்கு அரசனும் மிக்க சேனையை உடையவனுமாகிய பத்திரசேனனென்பவன் என்றவாறு.

கொற்ற மன்னவ னளித்திடு மரசிளங் குமரன்
செற்ற நீங்குநற் றருமனென் றுரைத்திடுஞ் சேயுங்
கற்ற பேரமைச் சன்றரு காளைதா ருகனு
முற்ற வேதநூன் முதலிய கலையெலா முணர்ந்தார். 15

இ-ள் : வெற்றியுள்ள இவ்வரசன் பெற்றருளிய இளவரசாகிய குற்றம் நீங்கிய அறமென்று கூறப்பட்ட புத்திரனும் கற்றுணர்ந்த மந்திரி பெற்ற புதல்வனுகிய தாருகனென்னும் பெயரையுடைய வீரனும் வேத சாத்திர முதலாகிய கல்விகள் முழுவதும் ஓதியுணர்ந்தார்கள் எ-று.

அரச நீதியும் படைக்கல விஞ்சையி னமைவும்
பொருவி லாவுருச் செவ்வியு மிளமையும் பொற்புந்
தரும ஞானமுங் கருணையுந் தயாவொடு மாண்பு
மிருவ ராகிவே றிருநிலத் திலையென வளர்ந்தார். 16

இ-ள் : இந்தப் புதல்வர்கள் உருவத்தால் இரண்டு பேர்களாகக் காணப்பட்டாலும் அரசநீதியும் வில்வித்தையும் ஒப்பற்ற உருவமும் ஆயுளும் இளமையும் அழகும் அறமும் ஞானமும் கருணையும் தயாளமும் மாட்சியும் ஆகிய இவைகளில் வேற்றுமையில்லையென்னும்படி வளர்ந்தார்கள் என்றவாறு.

இத்தகைய குணங்களுடன் நட்பும் ஒத்திருப்பவர்கள் இவ்வுலகத்திலே வேறொருவரும் இல்லையென்னும்படி இருந்தார்கள் என்று கூறினும் அமையும்.

அன்ன மைந்தர்க ளிருவரும் விலைவரம் பறியா
மின்னு நன்மணிக் கலன்களும் விரைநறுஞ் சாந்தும்
பொன்னின் மேனியிற் புனையல ராகிவெண் பொடியு
மன்னு மக்கமா மணிகளு மேமுற்றும் வனைந்தார். 17

இ-ள் : அத்தன்மையுள்ள புதல்வர்களனைவரும் விலையினளவு அறியப்படாத ஒளிவிடும் நல்ல ரத்தினுபரணங்களும் மணந்தங்கிய சந்தனமும் அழகுள்ள தங்களுடலில் அணிந்துகொண்டு விளங்காதவர்களாய் திருநீறும் நிலைபெற்றதாகிய உருத்திராக்கமுமே உடல் முழுவதும் அணிந்துகொண்டார்கள் என்றவாறு.

அந்த மன்னனு மமைச்சனு மரிதினி னீன்ற
தந்த மைந்தரைத் தனித்தனி யழைத்தினி துரைத்துக்
கந்த நல்விரைத் தேய்வைகள் கலன்பல வளிக்கப்
புந்தி வைத்திலர் மறுத்தனர் பொருவரு நிலையார். 18

இ-ள் : அவ்வரசனும் மந்திரியும் அருமையாகப் பெற்ற தங்கள் தங்கள் புதல்வர்களைத் தனித்தனியாக அழைத்து இனிதான உரைகள் கூறி மணம்பொருந்திய நல்ல கூட்டுவர்க்கஞ்சேர்ந்த சந்தனமும் ஆபரணங்களும் கொடுத்து அணிந்துகொள்ளச் சொன்னார்கள். ஒப்பச் சொல்லுதற்கரியவர்களாகிய அந்தப் புதல்வர்கள் அவைகளில் விருப்பம் வையாமல் மறுத்துவிட்டார்கள் என்றவாறு.

பால ரின்னண மொழுகிடும் பருவத்தி லாங்கண்
ஞால மெங்கணும் பராசர னெனப்பெயர் நவிலுஞ்
சீல மாதவ னெய்தலுஞ் சென்றெதி ரிறைஞ்சி
யேல வேதகும் பூசைக ளியற்றின னிறைவன். 19

இ-ள்: அந்தப் புத்திரர்கள் இவ்வாறு நடக்கும் நாளில் ஒருநாள் உலகமெங்கும் பராசரனென்று கூறும் பெயருள்ள தவசீலராகிய முனிவர் வரவும் அந்த அரசன் எதிர்கொண்டு சென்று பணிந்து அவர் மனதுக்கு மகிழ்வுண்டாகும்படி தகுதியுள்ள பூசைசெய்து என்றவாறு.

அனைய மாமுனி மனமகிழ்ந் தாசிக ளியம்பக்
கனக வாசனத் திருத்துபு காவல னிறைஞ்சி
எனது மைந்தனு மமைச்சர்கோன் மதலையு மிணங்கிப்
பனக மாமணி குயிற்றிய பணியெலா மிகழ்ந்தே. 20

இ-ள்: அந்தப் பராசரமுனிவர் மனமகிழ்ந்து ஆசீர்வசனங்கூற அரசனானவன் அந்த முனிவரைப் பொன்மயமான இருக்கையில் இருக்கச் செய்து பணிந்து என் புதல்வனும் மந்திரி குமாரனும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாத நட்புள்ளவர்களாய் நாகரத்தினம் பதித்த ஆபரணம் முதலான பல ஆபரணங்களை இகழ்ந்து என்றவாறு.

கைகொ டுந்தொடார் கண்கொடு பார்த்திடார் கடிந்து
துய்ய பூதியுஞ் சிவனக்க மணியுமே துலங்கு
மெய்யெ லாமணிந் திருந்தனர் வினையமே தறியேன்
ஐய னேயெனக் குரையென வருந்தவன் கேளா. 21

இ-ள்: அந்த ஆபரணங்களைக் கையினால் தொடாதவர்களாயும் கண்களால் பாராதவர்களாயும் நீக்கி விட்டுப் புனிதமாகிய திருநீறும் உருத்திராக்கங்களுமே உடலில் ஒளிவிடும்படி அணிந்து கொண்டிருக்கிறார்கள். அதன் காரணம் இன்னதென்று அடியேன் அறிந்திலேன். ஐயனே! எனக்குச் சொல்லுமென, அந்த உரையைப் பராசரமுனிவர் கேட்டு எ-று.

மண்டு தெவ்வமர் கடந்தவேன் மன்னவ ரேறே
பண்டி வர்க்குறு பிறவியிற் பழகிய தொடர்பே
கொண்ட டைந்தவிப் பிறப்பினு மந்நிலை கொண்டா
ருண்டு மற்றதன் வரன்முறை கேளென வுரைத்தான். 22

இ-ள்: எதிரேற்று வருகின்ற பகைவருடைய போரைக் கடந்த வேலாயுதத்தை உடைய ராசசிங்கமே! பண்டு இவர்கட்குப் பொருந்திய பிறப்பில் பழகிய தொடர்ச்சியைக் கொண்டு இப்போது வந்த பிறவியிலும் அந்தப் பழக்கத்தை விடாமலிருக்கின்றார்கள். அதற்கொரு காரணமுண்டு அந்தக் காரணத்தைக் கேளென்று சொல்லுகின்றார் என்றவாறு.

மாட மாளிகைக் குடுமியின் முகிறவழ் மனையி
லாட ரங்கினி லார்ந்தபொற் கொடிக்குழா மாட
லோடு மாமதிக் கறைதுடைத் திடுவபோ லொளிருங்
கேடில் சீர்த்திகொள் பெரும்பதி வளநந்திக் கிராமம். 23

இ - ள்: மாளிகையின் உச்சியிலும் மேகந்தவழ்கின்ற வீடுகளிலும் நாடகசாலைகளிலும் கட்டியிராநின்ற பொற்கொடிக்கூட்டம் மேலே அசைதலுடன் ஆகாயத்திற் செல்லுகின்ற சந்திரனுடைய களங்கத்தைத் துடைப்பது போல ஒளிவிட்டுக் கொண்டிராநின்ற கெடுதலில்லாத சிறப்பினையுடைய பெரும்பதியான வளப்பம் பொருந்திய நந்திக்கிராமமென்றொரு நகரமுண்டு என்றவாறு.

அப்பெ ரும்பதி தன்னின்மா னந்தையென் றறையுந்
துப்பெ னச்சிவந் தொளிர்கனி வாயிளந் தோகை
யொப்ப ருந்தவப் பொதுமக ளோவியர் தீட்டுந்
திப்பி யத்துரு வாருயிர் பெற்றெனச் சிறந்தாள். 24

இ - ள்: அந்தப் பெரிய நகரத்தில் மானந்தையென்னும் பெயரினையுடைய பவளம்போலச் சிவந்து ஒளிவிடுகின்ற வாயினையுடையவளாய்த் தவவலிமையுடைய ஒரு கணிகை சித்திரக்காரர் எழுதும் சிறந்த சித்திரமானது உயிர் பெற்றிருப்பதுபோல அழகிற் சிறந்தவள் என்றவாறு.

மேவு பொன்மனை முன்றில்வாய் வெள்ளிடை யின்றாய்
வாவு மாப்படை வேந்தர்த மைந்தரு மதிநூற்
காவன் மந்திரக் கிழவர்தங் கான்முளை யவருந்
தூவு நீணிதி யெட்டியர் குமரருந் தொகுவார். 25

இ - ள்: யாவரும விரும்பத்தக்க பொன்மயமான அவள் வீட்டின் முன்றிலினிடத்து வெளியில்லாமல் தாவிச்செல்லும் குதிரைப்படை முதலாகிய படைகளையுடைய அரச குமாரர்களும் மந்திராலோசனைக்குரிய சாத்திரங்களைக் கற்றுணர்ந்த மந்திரிகளுடைய புதல்வர்களும் மிக்க பொருள் கொடுக்கத்தக்க வைசிய புத்திரர்களும் கூட்டமாகச் சேர்ந்திருப்பார்கள் என்றவாறு.

நீணி திப்பெரு வண்மையிற் பெண்மையி னிலமேற்
காண லாவதோர் திருமக ளிவளெனக் கவினு
மாணி ழைக்கொரு கங்குலின் மருவுவா ரளித்தா
லாணி தீர்ந்தபொன் னயிரக் கழஞ்சென வறைவார். 26

இ - ள்: மிகுதியானபொருள் உள்ள வளப்பத்தாலும் பெண்தன்மையாலும் பூவுலகில் எல்லாரும் பார்க்கும்படி வந்திருக்கும் திருமகளே இவள் என்று கூறத்தக்க அழகுள்ள அக்கணிகையருக்கு ஒரு இரவு வருபவர்

கொடுக்கும் உரையாணி வைத்து மாற்றுப்பார்க்க வேண்டுவது இல்லாத உயர்ந்த பொன் தொகை ஆயிரங்கழஞ்சென்று கூறுவார்கள் என்றவாறு. ஒரு கழஞ்சு - பத்து பணவிடை.

நாளு மன்னவ ணறுமலர் விதிமுறை தூவி
வேளை வென்றகண் விமலனை வழிபடும் வேட
மாளு மன்பரை யரனென வருளொடு பணியுங்
கோளெ றிந்தெதிர் வறியவ ரிரவலர் கொடுக்கும். 27

இ-ள்: அத்தன்மையுடையவள் நாள்தோறும் மணம் தங்கிய மலர்களால் ஆகமவிதிப்படி அருச்சித்து மன்மதனை வென்ற நெற்றிக்கண்ணையுடைய பரமசிவனை வழிபடுவாள்; திருவேடமுடைய அன்பர்களைக் கண்டு சிவமென உள்ளமுருகி வந்தனைசெய்வாள். இதுவுமன்றிக் குற்றம் நீங்கிய வறியவர்கள் இரவலர் வந்தால் இவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவுவாள் என்றவாறு.

அறிவு கொண்டுயர் பொதுமக ணடநவி லரங்கிற்
பொறிகொள் சேவலும் வானரக் குழவியும் பொருந்தத்
தறியி னிற்பிணித் தரனக்க மணிபுனை தாமஞ்
செறிவு றுத்தவை யிரண்டுக்கு மெழில்பெறச் சேர்த்தி. 28

இ-ள்: மெய்யறிவு உடையவளாய் உயர்ந்த அந்தக் கணிகையானவள் நடனஞ்செய்யும் நாடகசாலையில் புள்ளிகள் பொருந்திய சேவலும் வானரக்குட்டியும் பொருந்தத் தூணிற்கட்டி உருத்திராக்கமணிகள் கோத்த மாலையை அவ்விரண்டுக்கும் அழகுபெறத் தரித்து என்றவாறு.

வேறு

வானர முடன்பழகி வாரண நடித்தல்
கானமர் கருங்குழலி தோழியரொ டுங்கண்
டானனம் வியர்ப்பநகை செய்துவிளை யாடித்
தானினி தமர்ந்துபல நாளுமளி சார்வாள். 29

இ-ள்: வானரக் குட்டியுடன் பழகிக் கோழி நடிப்பதை வாசனை தங்கிய கரிய அளகத்தையுடையவள் தோழிகளுடன் பார்த்து முகம் வேர்க்கும்படி நகைசெய்து விளையாடி இனிதாக அமர்ந்து நாள்தோறும் அவைகளிடத்தில் கருணை வைத்திருந்தாள் என்றவாறு.

இன்னண நிகழ்ந்திட விருந்தவண் மனைக்கண்
மின்னுசடி லப்பகவர் வேடநனி மேவிப்
பொன்னினுயர் பூதியொடு மக்கமணி பூணு
மன்னினன் மணிக்கடக முன்கைவணி கேசன். 30

இ - ள் : இவ்வாறு நடக்கும்படியிருந்தவள் வீட்டினிடத்தில் ஒளி விடாநின்ற சடைமுடியையுடைய முனிவர் வேடங்குறைவில்லாமற் பொருந்திப் பொன்னினுஞ் சிறந்த திருநீறும் உருத்திராக்கமும் அணிந்து கொண்டு ரத்தின கடகம் பொருந்திய முன்னங்கையையுடைய வைசியத் தலைவனாகிய ஒருவன் வந்தான் என்றவாறு.

கண்டனளெழுந்தனள் கலாமதி முடித்தோன்
றொண்டனிவனென்றுமுறை யோடுதொழு தெந்தாய்
மண்டல மதிக்கவட ரிட்டுமணி துன்றிக்
கொண்டகட கத்தின்விலை கூறுணர வென்றாள். 31

இ - ள் : மானந்தை என்பவள் கண்டு எழுந்து இளந்திங்கள் அணிந்த பரமசிவனுடைய அடியவரிவரென்று முறைமையுடன் பணிந்து என்னிறைவனே! இவ்வுலகினையெல்லாம் விலையாக மதிக்கும்படி பொன் தகட்டு மணிபதித்து அணிந்துகொண்டிருக்கும் ரத்தின கடகத்தின் விலை யாதோ எனக்குத் தெரியக் கூறென்றாள் என்றவாறு.

சந்திரனெனத்திகழ் தனிக்குடை நிழற்கீழ்
வந்தமனர் முன்கையின் மணிக்கடக மியாவு
மிந்தவயி ரக்கடக மொப்பதல வென்னுக்
குந்தநகை வல்லிகவர் வேட்கையொடு கூற. 32

இ - ள் : சந்திரனைப்போல விளங்குகின்ற ஒப்பற்ற குடையின்கீழ் வருகின்ற மன்னவர் முன்கையில் அணிந்திருக்கும் ரத்தினக் கடகங்கள் எல்லாம் இந்த வயிரமணிக் கடகத்தை ஒப்பாகாதென்று இறகின் குருத்துப்போன்ற கையையுடையவள் வாங்கிக்கொள்ளும் விருப்பத்துடன் கூற என்றவாறு.

வல்லியுரை செய்தது மனத்துணர் குறிப்பு
நல்லவனுணர்ந்துநகை யாடிமட நல்லா
யெல்லொளி மணிக்கடக மின்னவிலை யென்னச்
சொல்லுவ னதற்குநிதி யீதறுணி வாயோ. 33

இ - ள்: அதற்கு அவள் கூறியதும் மனதில் எண்ணிய குறிப்பினை வந்த வைசியன் அறிந்துகொண்டு நகைசெய்து பெண்ணே! சூரியனைப் போல ஒளிவிடும் இந்தரத்தினக்கடகம் இன்னவிலையென்று கூறுகிறேன் நீ அதற்குப் பொருள் கொடுக்கத் துணியமாட்டுவையோ என்றவாறு.

என்றவனுரைத்தலு மிலங்கிழை யியம்புங்
குன்றனைய தோள்வணிக கொங்கைவிலை கூறும்
புன்றொழிலினர் பொருள்கள் கொண்டு பொருணல்கி
நன்றவர்கள் பெண்மையவர் நன்னலமு நன்றே. 34

இ - ள் : இவ்வாறு வைசியன் கூற மானந்தை கூறுகிருள் மலை போன்ற தோள்களையுடைய வணிகேசனே தனங்களை விலைக்கு விற்கும் புன்ருெழிலை உடையவர்கள் ஒரு பொருளை வாங்கிக்கொண்டு அதற்கு விலையாகப் பொருள் கொடுத்தால் அந்தப் பெண்களுடைய பெண்மையும் இன்பமும் நன்றேயாகும் என்றவாறு.

வாழ்பொது நலக்கணிகை மாதர்நெடு மாயன்
வீழ்கரு கவுத்துவமும் விற்குந ரெதிர்ந்தாற்
ருழ்கலவி யிற்றழுவி யேகவர்வ தல்லாற்
சூழ்நிதி விலைக்குதவ ருெல்லுலகி லுண்டோ. 35

இ - ள் : வாழ்கின்ற யாவர்க்கும் பொதுவாகிய இன்பத்தையுடைய கணிகை மாதர்கள் மாயன் விரும்புகின்ற கவுத்துவ மணியேயாணுலும விற்பவர்கள் கொண்டு வந்தால் தங்கிய புணர்ச்சியினுல் தழுவி வாங்கிக் கொள்ளுவதல்லது மிக்க திரவியம் விலைகொடுப்பது பழைமையாகிய இவ்வுலகத்திலுண்டோ இல்லை என்றவாறு.

அன்பிஞெடு கங்கணமெ னங்கைதனி லிட்டால்
முன்புதின மூன்றுனது முல்லைமட வாளி
னின்பமுற மெல்லணையில் யானணவ னென்ஞ
மின்பொருவு நுண்ணிடை விளங்கிழை யியம்ப. 56

இ - ள் : இறைவனே! அன்புடன் இந்தக் கடகத்தை யென்கையி லிட்டால் மூன்று நாள் வரைக்கு முனக்குரிய முல்லை மாலை யணிந்த மனைவி போல இன்பமுண்டாகச் சயனத்தில் உன்னை நானணைவேனென்று மின் போலத்தெரிந்தும் தெரியாமலுமிருக்கும் நுண்ணிய இடையையுடைய கணிகை சொல்ல என்றவாறு.

நன்குரைசெய் தாய்மணிசெய் நற்கடக மீவே
னென்குல மடந்தையி னிசைந்த்தின மூன்றும்
புன்கணிலை யிற்பிறர்கள் போகநுக ரேனென்
றின்கனி மொழிக்கணிகை சூளிடுதி யென்ருன். 37

இ - ள் : கணிகைமாதே! நன்ருகச்சொல்லினை இந்தக் கடகத்தை உன்கையிற் கொடுக்கிறேன். கொடுத்தால் எனக்குரிய மனைவிபோலிருப்பதாக நீ சொன்ன மூன்று நாளும் சொன்னமொழி தவறி மற்ருெருவர் போகத்தை அனுபவிக்கிறதில்லையென்று ஒரு சூளுரை கூறென்ருன் என்றவாறு.

வேறு

புனித வாணிகன் கூறிய மொழிக்கவள் பொருந்தி
மனித ரேயன்றி வாசவன் ருனிவண் வரினு
முனிவ தன்றியே யணைகலேன் மூன்றுநாள் காறும்
பனிகொள் வேணியெம் பரன்றிரு வாணையென் றிசைத்தாள். 38

இ - ள்: *நின்மலனுகிய அந்த வணிகன் கூறிய உரைக்கு அவள் சம்மதித்து மனிதர்களேயல்லாமல் தேவேந்திரன் இவ் விடத்தில் வந்தாலும் இந்த மூன்று நாள் வரையில் நீக்கிவிடுவேனேயல்லாமல் நான் புணரேன் குளிர்ச்சி தங்கிய சடை முடியையுடைய சிவனது ஆணையின் படி யென்று கூறினுள் என்றவாறு.*

என்னு மானந்தை தனக்கவ னிருள்கெட விமைத்து
மின்னு மாமணிக் கடகத்தை விருப்பொடு நல்கிப்
பின்னு மீதொரு மாணிக்க விலிங்கநீ பேணி
யன்ன மேபுரந் தெனக்குமீட் டளித்தியோ வென்ருன். 39

இ - ள்: *என்று கூறிய மானந்தை யென்பவளுக்கு வணிகன் இருள் நீங்கத்தக்கதாக ஒளி விடும் ரத்தின கடகத்தை விருப்பமுடன் கொடுத்து மறுபடி ஒரு மாணிக்க லிங்கத்தைக் காட்டி அன்னம்போல்ப வளே! இதைப் பத்திரமாக வைத்திருந்து மறுபடி எனக்குக் கொடுப்பையா என்ருன் என்றவாறு.*

அணங்கு நீர்மைய ளன்னதே செய்வனென் றதனை
வணங்கி வாங்கித்தன் னடக வரங்கினில் வைத்தே
யிணங்கு மாலைவந் திறுத்தலுங் கணவன்மார் பிறுகச்
சுணங்கு வாய்ந்தெழு வனமுலைச் சுவடுறத் தோய்ந்தாள். 40

இ - ள்: *தெய்வப் பெண்ணையொத்த தன்மையையுடைய மானந்தை யென்பவள் அவ்வாறே செய்கிறேனென்று சொல்லி வணக்கம்செய்து அந்த லிங்கத்தை வாங்கிக்கொண்டு தன்னுடைய நாடகசாலையினிடத்தில் வைத்து மாலைப்பொழுது வந்த அளவில் தன் கணவனுகிய வணிகன் மார்பில் தேமலைப் பொருந்தி வளர்ந்திருக்கும் அழகிய தன் தனங்களின் தழும்புபொருந்தி யழுந்தப் புணர்ந்தாள் என்றவாறு.*

காம வேளுநல் லிரதியு மென்னவே கலந்து
தூம மல்கிய சேக்கையிற் றுயில்கொள நடுநா
ளியாம மெய்திய வேலையி லெரியழல் கதுவித்
தாம நான்றபொன் னரங்கினை முருக்குவான் சமைந்தே. 41

இ-ள்: மன்மதனும் ரதியும்போலக் கலந்து வாசனைப்புகை கலந்த சயனத்தில் நித்திரைசெய்யும் நடு இரவு வேளையில் ரத்தினமாலைகள் கட்டிய பொன்னாலாகிய நாடகசாலை வேகும்படி தீயானது பற்றிக் கொண்டு என்றவாறு.

மஞ்சு போற்றவழ் புகையொடு புலிங்கங்கண் மலியச்
செஞ்சி கைக்கணக் கதழெரி பற்றுபு செல்லத்
துஞ்சு மேல்வையி லிருவருந் துண்ணென விழியா
வஞ்சி யோடின ரன்னமுஞ் சேவலு மென்ன. 42

இ-ள்: அவர்கள் உறங்கும்போது மேகம்போலத் தவழ்கின்ற புகையுடன் தீப்பொறிகள் நெருங்கத்தக்கதாகச் சிவந்த சிகைகளை விட்டெழுகின்ற அக்கினியானது அதிவேகமாகப் பற்றிக்கொண்டு வீடுமுழுவதுமெரிக்க அவ் விருவரும் திடுக்கிட்டு நித்திரை நீங்கிப் பெட்டையன்னமும் ஆணன்னமும் ஓடுவதுபோலப் பயந்து ஓடினார்கள் என்றவாறு.

ஓடும் வேலையி னெண்டொடி பொருக்கெனத் திரும்பி
யாடு நாடக வரங்கினி லரன்மணி யணிந்த
கோடு வாழ்சிறு குரங்கொடு செஞ்சிறைக் கோழி
நேடு வாளவை கண்டுறு பிணியினை நெகிழ்த்தாள். 43

இ-ள்: அவ்வாறு ஓடும்போது மானந்தை என்பவள் விரைவில் திரும்பி நடனஞ்செய்யும் நாடகசாலையில் உருத்திராக்கம் அணியப்பட்ட குரங்குக்குட்டியினையும் சிவந்த உச்சிக் கொண்டையையுடைய கோழியினையுந்தேடிக் கண்டு கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டாள் எ-று.

பிணிநெ கிழ்த்தலுங் குரங்குமச் சேவலும் பெயர்ந்து
கணவெ ரிக்குழாங் கதுவுறு மெல்லையைக் கடந்த
வணிக னல்கிய வவிரொளி மாணிக்க லிங்க
முணரு முன்னமே நீறெழ வெந்தொழிந் ததுவே. 44

இ-ள்: கட்டவிழ்த்து விட்டமாத்திரத்தில் குரங்கும் கோழியும் பற்றிக்கொண்டெரியுங்கூட்டமாகிய தீயிருக்குமிடத்தை விட்டு அப்புறம் போய்விட்டன. அந்த வணிகன் கொடுத்த மாணிக்க லிங்கமானது மானந்தைக்கு ஞாபகம் வருவதற்கு முன் வெந்து நீறாய்விட்டது எ-று.

தூர வேகிநின் றன்னது கண்டதொல் வணிக
னூரி காண்டியோ நான்றரு சிவலிங்க நாதன்
மூரி வெங்கனன் முருக்கிடச் சாம்பராய் முடியத்
தீரு மின்றெடென் வாழ்வெனத் துயரொடு செப்ப. 45

இ-ள்: தூரமாகப்போய் நின்றவணிகன் மாணிக்கலிங்கம் வெந்து போவதைப்பார்த்துப் பெண்ணே! நான் உன் கையிற்கொடுத்த சிவலிங்கப் பெருமான் பலமுள்ளதாகிய தீயானது பற்றுதலால் வெந்து சாம்பலாய் விட்டதைக்கண்டனையோ? ஆதலால் என் வாழ்நாள் இன்றே முடிந்து விடு மென்று துயரத்துடன் கூறினான் என்றவாறு.

இறைவ னேக்கையா லிணைமுலைக் குவட்டிடை யெற்றி
மறுகி நம்பனே சங்கரா வென்றுவாய் விட்டுக்
கறைத ரித்தவேற் கண்ணினீர் கலுழியா யொழுக
வறிவ ழிந்தவ ளரற்றலும் வணிகனு மறைவான். 46

இ-ள்: அதைக்கேட்ட மானந்தை யானவள் வளையலணிந்த கைகளால் இரண்டு தனத்தின் மேலும் அடித்துக்கொண்டு துயரமுற்று நம்பனே சங்கரனே யென்று வாய்திறந்து உதிரம் படியத்தக்க வேல் போன்ற கண்களில் ஆறுபோல நீர்பெருகும்படி அழுது அறிவழிந்து சோர்ந்து விட்டாள். அதைக்கண்டவணிகன் கூறுகிறான் என்றவாறு.

நரந்த வார்குழற் புணர்முலை நறுமலர்க் கொம்பே
யிரங்க லெம்மனோ ரித்துயர் வரினுயிர்க் கிரங்கா
ரரங்கி லேன்சிவ லிங்கம்வெந் தடலையாய் விடுமேற்
புரந்த ராதியர் விலக்கினு மழலிடைப் புகுவேன். 47

இ-ள்: மயிர்ச்சாந்தணிந்த நீண்ட அளகத்தையும் நெருங்கிய தனங் களையுமுடைய நறிய பூங்கொம்பு போல்பவளே! நீ துயரப்பட வேண்டாம். எம்போலியருக்கு இவ்வித துன்பம் நேரிட்டால் உயிரை விட்டுவிடுவார்களே யல்லாமல் அதை யெப்படி விடுகிறதென்று இரங்கார்கள். நாடகசாலையில் வைத்த என் சிவலிங்கம் வெந்து சாம்பலாய்விடுமானால் இந்திரன் முதலானவர்கள் வந்து விலக்கினாலும் தீயில் விழுந்து விடுவேன் எ-று.

மற்று நீயொன்று நினைகலை யனலிடை மடியப்
பற்று மிந்தன மடுக்கியே படுகனல் வளர்க்கக்
கற்றை யங்குழன் மடந்தைநீ பணியெனக் கழறச்
சிற்றி டைக்கொடி யுருமுவீ ழரவெனத் திகையா. 48

இ-ள்: நீ வேறொன்றும் நினைக்காதே தீயில் விழுந்து நான் இறப் பதற்கு உலர்ந்த விறகுகளை அடுக்கி எரியத் தீயை மூட்டும்படி நெருங்கிய அளகத்தையுடையவளே! நீ உத்தரவு செய்யென்று வணிகன் சொல்லச் சிறிய இடையை உடையவளாயுள்ள கொடிபோன்ற மானந்தை திகைத்து என்றவாறு.

வேண்டு நீணிதி யளிக்குவன் வேதியர்க் காற்றிப்
பூண்ட மாவிர தத்தையும் வழுவறப் போற்றி
யாண்ட கைப்பெரு வணிகநீ யழல்புகும் வண்ண
மீண்டு தீதறக் குரவரா லியற்றுதி யென்றுள். 49

இ - ள்: யாதொன்றுக்கும் அஞ்சாத நிலைமையை உடைய வணிகேசனே! வேண்டிய திரவியங்கள் கொடுக்கிறேன். பிராமணர்கட்குக் கொடுக்கச் செய்யத்தக்க விரதங்களையும் பழுதறச் செய்து இப்போது நீ தீயில் விழும்படி நேரிட்ட குற்றம் நீங்கத் தக்கதாகப் பெரியோர்களைக் கொண்டு பிராயச்சித்தம் செய்யென்றுள் என்றவாறு.

நிலம்பொ றுக்கலாச் செம்பொனு னிறைகுடிப் பிறந்தேன்
கலம்பொ றுக்கலா நுசுப்பினுய் வறியர்போற் கருதிக்
குலம்பொ றுக்கலா விழிந்தசொற் கூறுத றவிர்ந்து
தலம்பொ றுக்கலாக் கதழெரி வளர்த்திடச் சமைவாய். 50

இ - ள்: பூமியும் தாங்கமாட்டாத மிக்க பொன்னையுடைய குடியிற் பிறந்தேன். ஆபரணங்களைத் தாங்கமாட்டாத நுண்ணிய இடையையுடையவளே! நீ என்னை வறுமையாளர் போல நினைத்து எங்கள் குலம் பொறுக்காத இழிவான சொல் கூறுவதைவிட்டு இவ்வுலகினர் பார்த்துச் சகிக்கக் கூடாததான வேகமுள்ள தீ மூட்டுவாயாகவென்று வணிகன் கூறினன் என்றவாறு.

என்று சீறிய சுடுசொலால் வணிகர்கோ னிசைப்பக்
குன்று போலுயர் கொங்கையாண் மறுப்பது கொளாது
பொன்று வானென்று பொருக்கெனச் சிலதரைக் கூவித்
துன்று மாரழ லுவர்படுத் தியற்றுமி னென்றுள். 51

இ - ள்: இவ்வாறு கோபித்துச் சுடு சொல்லினல் வணிகேசன் கூறவே பொன்மலைபோல் வளர்ந்த தனத்தையுடைய மானந்தையானவள் தான் தடுப்பதை ஒத்துக்கொள்ளாமல் இறந்துபோவானென்று நிச்சயித்துக்கொண்டு ஏவலாளிகளை அழைத்து விறகுகளிட்டு விரைவாகத் தீ மூட்டுங்கள் என்றுள் என்றவாறு.

சிலதர் மானந்தை பணியினைத் தலைக்கொடு சென்றுங்
கலகி லாத்துவ ரடுக்கின ராரழல் கொளுவி
யிலகு பேரழற் சிகையெழ விழுதுபெய் குழிசி
பலவும் வீசின ரெழுந்தது கொழுங்கனற் படலம். 52

இ - ள்: அந்த ஏவலாளிகள் மானந்தை கட்டளையிட்ட சொல்லைச் சிரசிலேற்றுக்கொண்டுபோய் அளவற்ற விறகுகள் அடுக்கித் தீ மூட்டித்

தீச்சிகை மேலோங்கும்படி குடங்குடமாக நெய்யை ஊற்றினர்கள். அப்படி ஊற்றின அளவில் கொடிய தீயானது கற்றை கற்றையாகச் சிகைவிட்டுக் கொண்டு மேலோங்கி வளர்ந்தது என்றவாறு.

கண்ட தாபத வணிகர்கோன் கடிபுனன் மூழ்கி
மண்டு தீயினை மும்முறை வலஞ்செய்து வணங்கித்
துண்ட வான்பிறை மௌலியான் றிருவடி தொழுதே
யண்ட கூடமட் டாவொலி யெழவனற் குளித்தான். 53

இ-ள்: அதைக் கண்ட வணிகத்தலைவன் மணம் தங்கிய நீரில் நீராடி கொழுந்துவிட்டெரியும் தீயை மூன்றுமுறை வலஞ்செய்து வணங்கி இளம் பிறையணிந்தருளிய சடாமகுடத்தையுடைய சிவபெருமான் திருவடிகளைத் தொழுது அண்ட கூடவரையில் ஓசையெழும்படி அத்தீயில் முழுகினன் என்றவாறு.

வேறு

இந்த வாறு கண்டு துன்ப மெய்தி நின்ற வேழையும்
பந்த மாய கேளிர் தம்மு கம்ப ரிந்து பார்த்திபன்
முந்து மங்கி யிற்ப டமு டிந்த நாய்கன் முன்னமே
தந்த கங்க ணமி தற்கி யைந்த வாறு சாற்றுகேன். 54

இ-ள்: அந்த வணிகேசன் தீயின் முழுகினதைக்கண்டு துயரங் கொண்டுநின்ற மானங்கையானவள் தனக்குப் பந்தமாயிருக்கிற சுற்றத்தார் முகங்களைப்பார்த்துச் சுற்றத்தவர்களே! கேளுங்கள். இப்போது இத்தீயில் விழுந்து இறந்துபோன வணிகேசன் கொடுத்தது இந்தக் கங்கணம் இதைக் குறித்து நடந்த செய்தியைக் கூறுகிறேன் என்றவாறு.

இக்க டக நல்வி லைக்கு மூன்று நாளி யைந்துநின்
புக்கின் மேவு கற்பின் மாது போல வாழ்வ னென்றியான்
றெக்க நாளி லாரு யிர்து றந்து நாய்கன் மாய்ந்ததால்
ஒக்க யானு மார ழற்கு ளிப்ப தன்றி யுய்கலேன். 55

இ-ள்: இந்தக் கடகம் பொறுமான விலைக்காக மூன்றுநாள் உன் மனையில் வாழும் மனைவிபோல உன்னுடன் நான் வாழ்கிறேனென்று சம்மதித்துக்கொண்டேன். அந்த மூன்று நாளுக்குள் வணிகேசன் உயிர்துறந்து இறந்ததினாலே நானும் அவனுடன் இந்தத் தீயில்விழுந்து இறப்பதல்லது இனி உயிருடன் வாழேன் என்றவாறு.

அன்ன லிங்க மென்கை யில ளித்த போது மற்றவன்
சொன்ன துண்டெ னவி யாய்த் துணிந்து போற்றி வையென
வென்னை பாவி யேன்பி ழைத்த வாறி லிங்கம் வெந்ததாற்
றன்னை நேரி லாத சைவ நாய்கன் சாதன் மேயினன். 56

இ-ள்: அந்தச் சிவலிங்கத்தை வணிகேசன் என் கையிற் கொடுத்த போது இது என் உயிர்போலிருப்பது ஆகையால் பத்திரமாக வையென்று கூறியதுண்டு. அவ்வாறிருக்கப் பாவியாகிய நான் மதிமோசம் போனேனே இது என்ன காரணம். சிவலிங்கம் வெந்துபோய்விட்டபடியால் தனக்கு ஒப்பில்லாத சைவசமயப் பத்திமையுள்ள அவ்வணிகேசன் இறந்துபோனுன் என்றவாறு.

என்னி மித்த மாக வந்த தித்து ணைய் மாதலால்
வன்னி யிற்கு ளிப்ப தன்றி வாய்மை பொய்த்து வாழ்வனே
முன்னு ரைத்த வாக மம்பு ராணம் வேத முதலவாய்ச்
சொன்ன சொன்ன யாவை யுந்தொ குத்த வுண்மை யல்லவோ. 57

இ-ள்: இத்தனை காரியமும் என்னிமித்தம் நேரிட்டதாகையால் தீயில் விழுவதல்லது சொன்னசொல் தவறி உயிர்வாழ்கிலேன், சொன்ன சொல் தவறலாகாதென்று நம்முடைய ஆண்டவனல் கூறப்பட்ட ஆகமங் கள் புராணங்கள் வேதங்கள் முதலாகிய எல்லாவற்றிலும் விதித்திருக்கிற உண்மையல்லவோ என்றவாறு.

வேலை வேலை யுள்ள டங்கி மீது யர்ந்து நிற்பதும்
காலை மாலை பானு வெண்க லாமதி யுதிப்பதும்
ஞால மாதி பூத மைந்து நண்ணி யென்று நிற்பதும்
ஆல கால முண்ட வீச னுண்மை யன்றி யாகுமோ. 58

இ-ள்: கடலானது கரைக்குள் அடங்கி மேலுயர்ந்து நிற்பதும் உதயகாலத்திலும் மாலைக்காலத்திலும் சூரியன் உதிப்பதும் சந்திரன் உதிப்பதும் பிருதிவி முதலாய ஐந்து பூதங்கள் எப்போதும் இருப்பதும் ஆலகாலம் உண்ட பரமசிவனுடைய ஆணையன்றி உண்டாகாதாதலால் என்றவாறு.

வாய்மை தப்பி னுர்க ளிந்த மாநி லத்தி லீனராய்த்
தீய்மை யுற்று மேலு ளோர்ப ழிக்க வேதி ரிந்துபின்
தூய்மை யற்ற கும்பி யுட்டு ளைந்த மூங்கு வாரெனு
வாய்ம னுப்ப கர்ந்த வேத சாகை முற்று மறையுமே. 59

இ-ள்: சொன்னசொல் தவறியவர்கள் இவ்வுலகினில் ஈனர்களாய் பாவத்தை அடைந்து பெரியோர்கள் பழிக்கும்படி திரிந்து பின்பு தீங்கு பொருந்திய நரகத்தில் விழுந்து வருந்துவார்களென்று வாய்மையுற்ற மந்தி ரங்களைச் சொல்லுகின்ற வேதமுழுதுஞ் சொல்லுகின்றன என்றவாறு.

ஆத லாலெ னைக்கு றித்த ழுங்கு மாற டாதென
மாத ராடெ ருட்டி யீட்டு மா நி திக்கு வையெலாம்
வேத வேதி யர்க்கு மாவி ரதி யர்க்கும் வறிஞராய்ப்
போது நர்க்கு மகம கிழ்ந்து போது மென்ன நல்கியே. 60

இ - ள் : ஆகையால் என்னைக் குறித்து நீங்கள் வருத்தப் படுவது தகாதென்று மானந்தை தன் சுற்றத்தார் தெளியும்படி சொல்லத் தான் சம்பாதித்த பொருள்களை எல்லாம் வேதமோதிய பிராமணர்கட்கும் பெரிதாகிய விரதங்களை மேற்கொள்ளுகின்ற தபசிகட்கும் ஏழைகளாய் வருகின்றவர்கட்கும் போதுமென்கிறமட்டில் மனமகிழ்ச்சியுடன் கொடுத்து என்றவாறு.

மோன மாகி நீரின் மூழ்கி முப்பு ரத்தை வென்றசீர்
ஞான நாத னடிவ ணங்கி நல்ல ழற்பி ழம்புறுந்
தான மேவ லங்கொ டெய்தி வீழு மெல்லை தன்னிலே
வானி லாமு டித்த வேணி வள்ளல் வந்து தோன்றினன். 61

இ - ள் : இவ்வாறு தானம் செய்துவிட்டபின்பு மௌன விரதங் கொண்டு ஒருவருடனும் பேசாமல் நீராடி திரிபுரதகனஞ் செய்த ஞான வடிவினராகிய பரமசிவனுடைய திருவடிகளை வணங்கி நல்ல தீப்பிழம்பு பொருந்திய இடத்தை வலம் வந்து அக்கினி குண்டத்தில் விழும்போது இளந்திங்கள் அணிந்த சடை முடியையுடைய கயிலாசபதியானவர் தரிசனமானர் என்றவாறு.

கொன்றை துன்று வேணி யுங்கு ளிர்ந்த வைந்து வதனமுங்
கன்ற னீல கண்ட முங்க ரச ரோரு கங்களு
மின்றி ரிந்த மேரு வாய்வி ளங்கு தோளு முந்தியு ந்
துன்று தாளு முன்பு கண்டு தோகை வீழ்ந்தி றைஞ்சினள். 62

இ - ள் : கொன்றைமாலையணிந்த சடை முடியும் குளிர்ந்த ஐந்து திருமுகங்களும் கறுத்த காளகண்டமும் செந்தாமரைமலர் போன்ற திரு அத்தங்களும் ஒளி விளங்கும் பொன்மலை போலாய் விளங்கும் திரண்ட புசங்களும் திருவுந்தியும் பொருந்திய திருவடிகளும் தரிசனமாகக் கண்டு மானந்தை என்பவள் பூமியில் விழுந்தாள் என்றவாறு.

மங்கை நீக னற்குள் வீழ்த லொழிதி நின்ம னத்தினிற்
றங்கு முண்மை யுணரு வான்ச மைந்து பொன்செய் கடகமோ
டிங்கு வந்து மளவ ளாயெ ரிக்கண் வீழ்ந்த வணிகன்யான்
கங்குல் வாய்த்து ணிந்து நின்ற கரும நன்று நன்றரோ. 63

இ - ள் : அவ்வாறு சேவித்துக் கொண்டவளைப் பார்த்து அடிய வளே! நீ தீக்குள் விழுவதை நீங்கு. உன் மனதிற் பொருந்திய மெய்யன்பினை

இவ்வுலகத்தாருக்கு அறிவிக்கும் பொருட்டுப் பொன்னாற் செய்யப்பட்ட கடகத்துடன் இவ்விடத்துக்கு வந்து உன்னுடன் அளவிலாத்தீயில் விழுந்த வணிகன் நாமே. இந்த இரவில் நீ தீயில் விழும்படி நிச்சயித்த காரியம் மிகவும் நன்று நன்று என்றவாறு.

பொதும டந்தை மார்க டேடு பொருளி னசை நீங்கியே
மதியி லங்கு நுதலி நின்னில் வாய்மை பேண வல்லரோ
வதிச யம்பு விக்க ணீது புதிது கண்ட றிந்தனங்
கதிதெ ரிந்து பெறுப தத்தில் விழைத லேது கழறுவாய். 64

இ - ள்: பிறைபோல் வளைவாகிய நெற்றியையுடையவளே! பொது மகளிராயிருப்பவர்கள் பொருளாசையைவிட்டு உன்னைப்போல் சத்தியத்தைக் காப்பாற்றுவார்களோ? இவ்வுலகத்தில் இது அதிசயமான காரியம் நவமாகக் கண்டறிந்தோம் பதவிக்குள் நீ அடைய வேண்டிய பதவி எதுவோ? உனக்கு விருப்ப முள்ளதைக் கூறுவாயாக என்றவாறு.

வேறு

என்று பரம னியம்பு மதுகேட்டுக்
குன்று மரனுங் குழைந்துருகக் கோற்றொடியா
ணின்று தொழுது நிமலா நினதடியே
னென்று மறியே னுரைப்பதுளங் கொள்ளென்ன. 65

இ - ள்: இவ்வாறு பரமசிவன் அருளிச்செய்த திருவாக்கினைக் கேட்டு மலைகளும் மரங்களும் நின்றுருகும்படி மானந்தை யென்பவள் எழுந்து நின்று தொழுது நிருமலனே! உன்னடியவளாகிய நான் ஒன்றுமறியாதவள் இன்ன சொல்ல வேண்டுமென்றுந் தெரியாதவள் எ - று.

தேவரே யாதி திரிபுவனத் துள்ளோர்க
ளேவரே வாழும் பதமு மினிவேண்டேன்
மூவரே யாகிக் குணமூன்ருய் முத்தொழிற்குங்
காவலே யாகிக் கட ந்துநின்ற காரணனே. 66

இ - ள்: தேவர்கள் முதல் மூன்றுலகத்திலிருப்பவர்களில் எவர்கள் வாழும் பதவியும் இனி வேண்டேன். திரிமூர்த்திகளாயும் முக்குணங்களாகியும் முத்தொழிற்குங் காவலாகியும் இவைகளையெல்லாம் கடந்து காரணனாயிருக்குங் கடவுளே! என்றவாறு.

அன்புற் றெனது கிளஞ ரனைவோருந்
துன்பக் கடலுட் டுளையா தெனைப்போல
வின்பச் சிவபதத்தை யெய்தி யினிதாக
வன்புற் றுனதடிக்கீழ் வாழ வருளென்ருள். 67

இ-ள்: அன்புள்ள என் உறவினர் எல்லோரும் துன்பக்கடலில் முழுகாமல் அடியேனைப்போலப் பேரின்பமுள்ள சிவலோகத்திற் சேர்ந்து இன்பமுடன் எக்காலமும் ஒரேதன்மையாக வாழும்படி கருணை செய்ய வேண்டுமென்ருள் என்றவாறு.

கோட்டு விடையமர்ந்த கோமான் குயின்மொழியாள்
கேட்ட வரமனைத்து மீந்தோ மெனக்கிளத்தி
ஈட்டு பெருங்கிளைஞ ரெல்லோ ரொடுமிவள்போய்
வீட்டுநெறிப் பேரின்ப மேவப் பணித்தகன்ருன். 68

இ-ள்: கொம்பினையுடைய இடபவாகனத்தை விரும்பிய பரமசிவன் மானங்தை கேட்டவரமெல்லாம் கொடுத்தோமென்று உரைத்தருளி, அவள் தன் சுற்றத்தாருடன் பேரின்ப வீட்டிற்போய்ச் சேரும்படி அருளிச்செய்து கயிலையங்கிரிக்கு எழுந்தருளினர் என்றவாறு.

ஆட ரங்கைத்தீ முருக்குவேலை யணங்கனையாள்
கூடு பிணிநெகிழ்த்த வானரமுங் கோழியும்போய்
நீடு பலகால நிலவலயத் தேயிருந்து
வீடு குரங்குகண்டாய் வேந்தேநின் கான்முளையே. 69

இ-ள்: நாடகசாலையானது தீப்பற்றி யெரியுங்காலத்தில் தெய்வப் பெண்ணையொத்த மானங்தையானவள் கட்டவிழ்த்துவிட்ட குரங்கும் கோழியும்போய் நெடுங்காலம் இவ்வுலகத்திலிருந்து, பின் இறந்துபோன குரங்குதான் உன் புத்திரன் என்றவாறு.

சோரி பொடித்தனைய சூட்டெழில்கொள் வாரணங்காண்
சீரி யசொற்றேரு மமைச்சன் சிறுவனிவர்
பாரி லவதரித்தும் பண்டுடைய வாதனைகாண்
பேரி யலினக்க மணிபூதி பெற்றணிந்தார். 70

இ-ள்: உதிரம் பொடித்ததை யொத்த உச்சிக் கொண்டையை யுடைய கோழிதான் சிறப்புள்ள சாத்திரங்கள் உணர்ந்த மந்திரி குமாரன். இவர்களிருவரும் பூலோகத்தில் பிறந்தும் பழம் பிறப்புணர்வால் பெரிதான முறைமையுடன் உருத்திராக்கமும் திருநீறும் விரும்பி அணிந்தார்கள் என்றவாறு.

முன்னை யிறந்த பிறப்பின் முதல்வன்மணி
தன்னை யணிந்த தபோபலத்தின் றன்மையான்
மன்னர் தொழுமன்ன வுனக்கு மதலையுமாய்க்
கன்னி மதியமைச்சன் கான்முளையு மாயினரே. 71

இ - ள்: முன் நீங்கிய பிறவியில் பரமசிவனுடைய மணியாகிய உருத்திராக்கம் அணிந்த தவவலிமையால், அரசர்களெல்லாம் வணங்கத் தக்க அரசனே! உன் புதல்வனும் அழிவில்லாத உணர்ச்சியையுடைய மந்திரி குமாரனுமானர்கள் என்றவாறு.

காளை யிளை ளிருவோருங் கண்ணுதலோன்
தாளை நெடுநாட் டணவா தருச்சித்து
வாளை யுகளும் வளநா டினிதாண்டு
வேளையெரித் தோனருளால் வீட்டின்ப மெய்துவரால். 72

இ - ள்: இந்த இரண்டு புதல்வர்களும் பரமசிவனுடைய திருவடிகளை இடைவிடாமல் நீண்டநாள் பூசித்து வாளை மீன்கள் தாவிக்கொண்டிருக்கும்படியான நீர்வளமுள்ள இந்த நாட்டை இன்பமுடன் ஆண்டு காம தகனராகிய பரமனது திருவருளால் முத்தியை அடைவார்கள் எ-று.

ஈங்கிவர்கள் முன்னை யியல்பு மியன்றதுவும்
ஆங்கதனி னுய பயனு லடைந்ததுவும்
தீங்கறநாங் கூறினே ந்தேர்வேந்தே நின்மனத்தில்
ஓங்குவிழை வால்வினவ லுண்டே லுரையென்முன். 73

இ - ள்: இவ்விருவருடைய முற்பிறப்பின் தன்மையையும் அப்போது நடந்ததையும் அதனுல் அடையவேண்டிய பயனை இப்போது அடைந்ததையும் குற்றமற நாம் உனக்குக் கூறினேம். தேரையுடைய் அரசனே! உன் மனத்தில் மிக்க விருப்பத்தினுல் இன்னும் ஏதாவது கேட்கவேண்டியிருந்தால் கூறென்று பராசரமுனிவர் கூறினுர் எ - று.

உருத்திராட்ச மகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1154

இருபத்தொன்ருவது
சீருத்திரமகிமையுரைத்த
அத்தியாயம்

என்ன முனிசூதன் இனிதியம்பி மாதவத்தீர்
மன்னர்மன்னன் மீட்டுமந்த மாதவனைத் தாள்போற்றிப்
பன்னி வினவுவது கேட்டுப் பராசரனர்
பின்னு முரைத்தகதை கேண்மினெனப் பேசினுன். 1

இ - ள்: இவ்வாறு சூதமுனிவர் கூறி, நைமிசாரணிய முனிவர்களே! அவ்வரசனுனவன் பராசரருடைய திருவடிகளிற் பணிந்து துதித்து விஞவுதலைக்கேட்டு மேலும் அவர் கூறிய சிவ வரலாற்றைக் கேளுங்கள் என்று மேலுங் கூறினர் என்றவாறு.

வேறு

ஓங்கியபே ருவகையினு லுடனெழுந்து மன்னவர்கோன்
தேங்கமழு நறுந்தெரியன் முடிதாழச் சென்றிறைஞ்சிப்
பூங்கமலத் தயனனைய புகழ்முனியே நின்னருளால்
தாங்கரிய மனமாயை தணிந்தறிவின் றலைநின்றேன். 2

இ - ள்: மிக்க மகிழ்வினையுடைய அவ்வரசன் பராசர முனிவருடைய திருவடிகளில் தன் முடிபடும்படி வணங்கி, பிரமதேவனை யொத்த புகழுள்ள முனிவரே! தேவரீருடைய கருணையினுல் தாங்குதற்கரிய மனமாயை நீங்கி அறிவினிடத்தில் நின்றேன் என்றவாறு.

வாசனை கமழும் மலர்மாலை அணிந்த மகுடம்.

மைந்தன் வரலாறனைத் துங்கேட்டு மனமகிழ்ந்தேன்
கந்த னனையவிளங் காளையினிக் காசினியை
எந்த வகைபுரப்பான் வாழ்நாள்மற் றெத்துணையுண்(டு)
அந்த முறைதானு மடியேற் கருள்கென்ருன். 3

இ - ள்: அடிகளே! என் மகனது வரலாற்றைக் கேட்டு மனம் மகிழ்ந்தேன். முருகக்கடவுளை யொத்த இவ்விளைஞன் இனி எவ்விதமாக உலகத்தையாளுவான்? ஆயுள் எவ்வளவிருக்கின்றது? அம்முறையையும் கூறி அருளவேண்டுமென்ருன் என்றவாறு.

செம்பொன் முடிக்குரிசில் கேட்டியது செப்பினல்
கம்ப முறநெஞ்சங் கலங்கித் துயருழப்பர்
உம்பர் முதலோரு மென்ரு லுனக்கெய்தும்
வெம்பு கொடுந்துயரம் யாரே விலக்கிற்பார் 4

இ-ள்: பொன்னுற் செய்யப்பட்ட முடி அணிந்த மன்னனே! சொல்லுகிறேன், கேள். என்னவெனில், அதைக் கூறினல் தேவர் முதலானவர்களும் நடுக்கமுண்டாக மனம் கலங்கித் துயரம் அடைவார்களென்ருல் உனக்கு நேரிடும் கொடிய துயரத்தை யார் விலக்குவார்கள் என்றவாறு.

எவ்விடருஞ் சாரா விறைவன்ருள் பெற்றமையால்
செவ்வடிவேல் வேந்தேயான் செப்புகே னின்புதல்வன்
அவ்வியமொன் றில்லாதா ஞறிரண்டாண் டின்றடைந்தான்
கவ்வையுற லின்றுமுத லோரேழ் தினங்கடந்தால் 5

இ-ள்: பரமசிவனது திருவருள் கிடைத்திருப்பதனுல் யாதொரு துன்பமும் நேரிடாது; வேலேந்திய அரசனே! யான் கூறுகிறேன்: உன் புதல்வன் பாவமென்பது சிறிது மில்லாதவன். இப்போது பன்னிரண்டு வயதுடையவனுயினுன். துன்பம் அடையாதே. இன்று முதல் ஏழுநாள் கடந்தால் என்றவாறு.

சாவதுவே திண்ண மெனமுனிவன் சாற்றுதலும்
ஏவுபடச் சாயு மிகலரிமா னேறுபோல்
காவலன்மே தினிமேல் வீழ்ந்துகடைக் கண்முத்தம்
தூவநிலே யில்லாத துயர்க்கடலுண் மூழ்கினுன் 6

இ-ள்: இறப்பது உறுதியென்று முனிவன் கூறலும், அம்புபட்ட மாத்திரத்தில் விழுந்துவிடுஞ் சிங்கம்போல, அரசன் நிலத்திடை வீழ்ந்து கடைக்கண் நீர்த்துளியைச் சிந்தும்படி நிலேபடாத் துயர்க்கடலில் ஆழ்ந்தான் என்றவாறு.

தாங்கி முனிவ னெடுத்துத் தராபதியை
வீங்கு துயர்மாற்றி விழிநீ ரறநீவி
ஓங்கு பொலன்கரகத் துற்றநறுந் தெண்ணீரை
வாங்கி முகங்கழீஇ வந்ததுயர் நீக்கினுன். 7

இ-ள்: துன்பக்கடலில் முழுகிய அரசனைப் பராசரமுனிவர் தாங்கியெடுத்துத் துயரம் நீக்கிக் கண்ணீரைத்துடைத்து மாற்றுயர்ந்த பொன் கரகத்திலிருந்த தெளிவுள்ள நீரைக் கையில் வார்த்துக்கொண்டு அந்த அரசன் முகத்தைக் கழுவி நேரிட்ட துயரத்தை நீக்கினர் எ-று.

வேறு

ஊழ்வினை யுருத்த காலத் துறுதவத் தீன்ற நற்ருய்
வீழ்முலை சுரந்த பாலு முண்டபின் வெய்ய நஞ்சாம்
ஆழ்கடற் பிறந்த நஞ்சு முண்டபி னமிர்த மென்ருல்
வாழிய மாந்த ரெல்லா மிருவினை வயத்தர் மன்னு. 8

இ - ள்: அரசனே! ஊழ்வினை உருத்துவந்த காலத்தில் மிக்க தவத்தினுல் பெற்ற தாயின் முலையினின்று சுரந்தபாலும் உண்டபின் கொடிய நஞ்சுபோலாகும். நல்வினையுற்ற காலத்தில் ஆழ்கடலிலுண்டாகிய நஞ்சும் உண்டபின் தேவாமிர்தம்போலாகும் என்ருல் மக்களெல்லாம் இரு வினை வயப்பட்டவர்களே என்றவாறு.

வீழ் - விரும்பப்பட்ட.

இன்பம்வந் துற்ற காலை யிருங்களி யெய்த ருனுந்
துன்பம்வந் துற்ற காலைத் துயருழந் தழுத ருனு
மன்பதை புரக்கும் வேந்தே யறிவிலார் மாட்சி நல்லோர்
துன்பமு மின்பந் தானுந் தொல்வினைத் தொடர்ச்சி யென்பார். 9

இ - ள்: மக்களைக்காக்கும் அரசே! இன்பம்வந்துகூடிய காலத்தில் மிக்க மகிழ்வடைவதும் துன்பம்வந்து கூடியகாலத்துத் துயரப்பட்டு அழுவதும் அறிவில்லார் செய்கை. அறிவுள்ளவர்கள் இன்பத் துன்பங்கள் பழவினைத் தொடர்ச்சி யென்பார்கள் என்றவாறு.

ஆதலால் வருந்தல் கேட்டி யரூபியா யமல ஞகிச்
சோதியாய் நின்ற வீசன் சுவேச்சையாங் குணங்கண் மூன்றுள்
ஓதுரா சதத்தி லாதி விரிஞ்சனை யுதிப்பித் தன்றே
வேதநூ லனைத்து மந்த விரிஞ்சனுக் கமைத்துப் பின்னும் 10

இ - ள்: ஆகையால் அரசனே! நீ வருந்தாதே; நான் கூறுவதைக் கேள். அரூபியும் நின்மலனும் சோதியுமாய்நின்ற பரமசிவன் தன்னுடைய சுவேச்சையாகும் முக்குணங்களுளொன்ருகிய இராசதகுணத்தில் பிரம தேவனைப் படைத்து வேத சாத்திரங்களை யெல்லாம் அந்தப் பிரம தேவனுக்கு அப்பொழுதே அருளிச்செய்து, பின்னும் என்றவாறு.

வேறு

மாசிலா ஞானமா யணுக்கள் வாழ்வதாய்க்
காசிலா வுபநிட தத்தின் கண்ணதாய்ப்
பாசமாய்த் திடுபசு பதியைப் பற்றிடும்
ஆசில்சீ ருருத்திர வத்தி யாயமும் 11

இ - ள்: குற்றமில்லாத ஞானமாகியும் உயிர்கள் வாழ்வு பெறத் தக்க தாகியும் குற்றமில்லாத உபநிடதத்தினிடத்ததாகியும் ஆணவ மலத்தைக் கெடுத்தருளா நின்ற பசுபதியைப் பற்றிய பழுதில்லாத சிருத்திர அத்தியாயமும் அருளினன் என்றவாறு.

உபநிடதங்கள் - 32.

அருளின னகத்திடை யறிந்த நான்முகன்
தெருளுற வுலகமீ ரேழுஞ் செய்தபின்
இருளறுத் துலகங்க ளுய்ய வெண்ணரியே
பொருடரு வேதங்கள் புகலுங் காலையில் 12

இ - ள்: அருளிச்செய்ததை மனத்துள் அறிந்த பிரமதேவன் தெளிவுறப் பதினன்கு உலகமும் படைத்த பின்பு இவ்வுலகிலிருப்பவர்கள் அஞ்ஞானத்தை நீங்கிக் கடைத்தேற வெண்ணிப் பொருள் தங்கிய வேதத்தைக் கூறும்போது என்றவாறு

நாற்றிசை முகத்தினு நான்கு வேதமும்
தோற்றுநாட் டென்றிசை முகத்திற் றோற்றிய
ஆற்றசா றயித்திய மதனி னுப்பணோய்
ஏற்றசீ ருருத்திர மெழுந்து தோன்றிற்றால். 13

இ - ள்: நான்கு திசைநோக்கும் முகங்களிலும் நான்கு வேதங்களும் உண்டானநாளில் தென்றிசைநோக்கிய முகத்தில் தோற்றிய மகிமை மிகுந்த தைத்திரிய வேதத்தின்நடுவில் மேன்மையுள்ள சிருத்திரமந்திரம் உண்டாயிற்று என்றவாறு.

தித்திரியென்னும் பறவையுண்டு மகிழ்ந்தமையால் தைத்திரிய மென்றுயது எ - று; இஃது இரண்டாம் வேதம்: யசுர் என்பதும் இது.

அத்தகை மந்திர மரீசி யாதியாம்
வித்தக முனிவரர் விரும்பிக் கற்றுடன்
உத்தம வுலகிடை முனிவர்க் கோதிடத்
தத்துவ மறையவர் தாமுங் கற்றனர். 14

இ - ள்: பெருமை மிக்க அந்த மந்திரத்தை மரீசிமுனிவர் முதலாகிய ஞானமுள்ள முனிவர்கள் விரும்பி உணர்ந்து உடனே இவ்வுலகி லிருக்கும் உத்தம முனிவர்களுக்கு உபதேசஞ் செய்யத் தத்துவமுணர்ந்த அம்முனிவர்களும் தெரிந்து கொண்டார்கள் என்றவாறு.

ஆர்வுறு பாவமா மழனற் கோடையால்
பார்மிசை மானிடப் பசும்புல் வாடுதல்
தீர்தரப் பிரணவ மின்னுச் சேர்ந்துபெய்
கார்மழை யொத்ததிக் கடவுண் மந்திரம். 15

இ - ள்: நிறைந்த பாவமாகிய வெதுப்புகின்ற கோடையால் இவ்வுலகத்திலிருக்கும் மனிதர்களாகிய பசிய புற்கள் வாடுதல் நீங்கும்படி பிரணவமாகிய மின்னலைச் சேர்ந்து பொழிகின்ற மேகத்தை ஒத்தது தெய்வீகம் பொருந்திய இம்மந்திரம் என்றவாறு.

மற்றொரு தவங்களேன் மந்தி ரங்களேன்
சிற்றியல் விரதமேன் வேள்விச் செய்கையேன்
சுற்றிய மலங்களைத் துடைத்து முத்தியைப்
பெற்றிட வளிப்பதோர் பிரம மீதரோ. 16

இ - ள்: இம்மந்திரமிருக்க வேறொரு தவங்களேன், மந்திரங்களேன், சொற்ப பயனைத் தருகின்றவிரதங்களேன், யாகத்தொழிலேன், பிறவிதோறுந் தொடர்ந்து வருகிற மும்மலங்களை நீக்கி முத்தியை அளிக்கும் பரமசிவம் இதுவேயாம் என்றவாறு.

பின்னரு நான்முகப் பிதாம கன்பொறை
மன்னிய தேவர்கள் மக்கள் வல்விலங்
கன்னிய வடிவுள வனந்த யோனியும்
பன்னருஞ் சிறப்பினுற் படைத்து முற்றியே. 17

இ - ள்: பிரமதேவன் முன் படைத்ததுமில்லாமல் பின்பும் பொறுமைக்குணமுள்ள தேவர்கள் மனிதர்கள் வலிய மிருகங்கள் இவைகளே அன்றி இன்னமும் பலபல விதமாகிய அனந்தம் யோனி பேதங்களும் சொல்லுதற்கரிய சிறப்புடன் படைத்து என்றவாறு.

புண்ணிய பாவமும் பொருவி னன்மையும்
மண்ணிய தீமையு மகிழ்வுந் துன்பமும்
எண்ணிய நினைப்பொடு மறப்பும் யாவையும்
நண்ணிய வுணர்வொடு வகுத்து நல்கியே. 18

இ - ள்: புண்ணிய பாவங்களும் ஒப்பில்லாத நன்மையும் இவ்வுலகில் நேரிடும் தீமையும் சுகதுக்கங்களும் எண்ணுகின்ற நினைப்பு மறப்புக்களும் பொருந்திய உணர்வுடன் வகுத்துப் படைத்து என்றவாறு.

துறக்கமு நரகமுந் துவன்றிக் காக்கெனப்
பிறைக்குல நான்கெனப் பிறழ்வெண் கோட்டிடைக்
கறைக்குட றிணிந்தமாற் களிற்று வேந்தையும்
மறத்தொழிற் கூற்றையும் பணித்து மன்னனே. 19

இ - ள்: அரசனே! நான்கு பிறைகள்போல ஒளிவிடும் வெண்மை நிறமுள்ள தந்தங்களிடத்தில் பகைவருடல் இரத்தமும் குடரும் நிறையத் தக்க பெரிய ஐராவதமென்னும் யானையையுடைய இந்திரனை நோக்கி நீ சுவர்க்க உலகைக் காத்துக்கொண்டிரு வென்றும் கோபமுண்டாகிய தொழிலையுடைய யமனைநோக்கி நீ நரகத்தைக் காத்துக்கொண்டிரு என்றும் கட்டளையிட்டுப் பின்பு என்றவாறு.

துடிமுதல் காலங்க டோற்றுந் தன்மையுங்
கடிதினில் வருஞ்சுடர்க் கதிருந் திங்களும்
இடையுள கோண்முதற் கிரகம் யாவையும்
அடையுறு பூதங்க ளைந்து மாக்கினன். 20

இ - ள்: கணமுதல் காலங்களுண்டாகும் தன்மையும் மகமேருவை விரைவாகச்சுற்றிவரும் சூரியனையும் சந்திரனையும் அவ்விடத்திலிருக்கும் கோள் முதலாய கிரகங்களையும் ஆகாய முதலாகப் பொருந்திய ஐம்பூதங் களையும் படைத்தான் என்றவாறு.

ஆக்கிய சராசர மனைத்து மவ்விதி
நீக்கிய பகுதியி னெருங்கி யெங்கணும்
போக்கற நிமிர்ந்துசெல் பொழுதிற் கூற்றுவன்
காக்குமந் நரகங்க டழையக் கற்பிப்பான். 21

இ - ள்: இவ்வாறு அந்தப் பிரமன் உண்டாக்கிய சராசரங்க ளெல்லாம் பேதமில்லாமல் நெருங்கி யெவ்விடத்தும் இறத்தலின்றி அதிகரித்துவரும்போது யமன் காவாநின்ற அந்நரகங்கள் தழையும்படி கற்பிக்கின்றான் என்றவாறு.

கூறிய பாவத்தின் கூற்ற வாகிய
சீறிய காமமே முதல தீமையை
வீறுயர் கதையினன் விளித்து நீவிர்போய்
மாறுசெய் துலகிடை மருவி யெங்குமே. 22

இ - ள்: சொல்லுகின்ற பாவத்தின் பிரிவாகிய சீறுகின்ற காம முதலான பாவங்களைப் பெருமைமிக்க தண்டு ஏந்திய யமன் அழைத்து நீங்கள் போய் மாறுபாடு செய்து உலகமெங்கும் பொருந்தி என்றவாறு.

தருமமு நீதியுந் தயாவும் வாய்மையும்
மருவிய தவங்களும் பிறவு மாற்றிநும்
கருமமாந் தீத்தொழில் கணக்கி லாதன
புரிதிர்தீ நரகினைப் புரத்திர் போயென்றான். 23

இ - ள் : தருமத்தையும் நீதியையும் தயையையும் சத்தியத்தையும் பொருந்திய தவங்களையும் மற்ற அறங்களையும் மாற்றி உங்கள் தொழில்களாகிய பாவத்தொழில்களை அனந்தமாகச் செய்து கொடிய நரகத்தைக் காக்கக் கடவீர்களென்றான் என்றவாறு.

அங்கது கேட்டலு மழகிற் றென்றுபோய்த்
தங்கிய வுலகிடை வந்து சார்தலும்
பொங்குசீ ருருத்திர மெவருமே புகன்(று)
எங்கணு நிறைதலாற் றுண்ணென் றேங்கியே. 24

இ - ள் : அந்த வார்த்தையைக் கேட்டமட்டில் எங்கட்கு நன்மையான காரியமென்று காம முதலிய பாவங்கள் சென்று பொருந்திய உலகத்தில் வந்து சேர்ந்த அளவில் மகத்துவமுள்ள சிருத்திர மந்திரத்தை எல்லாருஞ் சொல்லி எவ்விடத்தும் நிறைந்திருப்பதனால் நடுக்கங் கொண்டு ஏங்கி என்றவாறு.

மீண்டன வோடின வெருவிக் காலன்முன்
ஈண்டின வாய்புலர்ந் திளைத்து நின்றன
ஆண்டகை கேட்டிநின் னாணை யாற்றிரு
வேண்டிய விருநில வளாக மேவினோம். 25

இ - ள் : (பயந்து) திரும்பியோடி யமனிடத்தில்சேர்ந்து வாயுலர்ந்து இளைத்து நின்று, ஐயனே! கேட்பாயாக, உன் ஆக்கினையால் செல்வம் வேண்டிய பெரிய உலகத்தினிடத்தில் பொருந்தினோம் என்றவாறு.

கவ்வைமா நதிக்கரை கடவு ளாலயம்
செவ்விய மொழிமறை யாளர் சேர்விடம்
எவ்விட மெவ்விட மென்று கூறுவேம்
பவ்வநின் றிரைப்பது போலப் பாரெலாம். 26

இ - ள் : ஓசையையுடைய பெருமைபொருந்திய நதிக்கரை, தேவாலயம், நல்ல வேதியர் உறைவிடம் எந்தவெந்த விடமென்று பிரித்துச் சொல்லுவோம்; பூவுலகமெங்கும் கடலொலிப்பதுபோல் என்றவாறு.

வல்லசீ ருருத்திர மந்தி ரந்தனை
எல்லையில் யாவரு மினிதி னோதிட
நல்லழற் பிழம்பென நமரைக் காய்தலால்
ஒல்லையில் வெருவிநின் னுழையொ துங்கினோம். 27

இ - ள் : முத்திதரவல்ல சிருத்திர மந்திரத்தை அளவில்லாமல் எல்லாரும் ஓதுகின்றார்கள், அது மிகுந்த திக்கூட்டம்போல நம்மவர்களைக் காய்கின்றதனால் பயந்து விரைவாக உன்னிடத்தில் வந்து சேர்ந்தோம் என்றவாறு.

வேறு

ஏழுகோடி மந்திர மெடுத்தெவ ரியம்பினும்
தாழ்விலாத மந்திரங்க டம்மையொல்லை நீக்குவேம்
சூழ்சடைப் பரமனைந்து தொல்லெழுத்தை யொன்றியே
வாழுமந் திரத்திலோ ரெழுத்தினுக்கு மாழ்குவேம். 28

இ - ள்: *சத்தகோடி மகாமந்திரங்களை எவர்களெடுத்துக் கூறினுலும் தாழ்ச்சியில்லாத அந்த மந்திரங்களை விரைவினில் நீக்கிவிடுவோம்: சூழ்ந்த சடையையுடைய பரமசிவனது பஞ்சாட்சரத்தைப் பொருந்திச் சிறப்புறுஞ் சீருத்திர மந்திரத்திலிருக்கும் ஓர் அட்சரத்துக்கு யாங்கள் வருந்துவோம் என்றவாறு.*

பெருமநீ பணித்தவாறு நரகராசி பேணலேம்
அருமையெந் திறத்தடாது கும்பிபா ழறிந்திடென்(று)
ஒருமையிற் கிளத்தலோடு முததியென்ன வொலியெழத்
தருமராசன் விதியிருந்த சபைபுகுந்து பணியவே· 29

இ - ள்: *இறைவனே! நீ கட்டளையிட்டபடி இனி நரகத்தினைக் காக்கமாட்டோம். காப்பதருமை. அது எங்களாலாகாது. நரகம் பாழாயிருக்கின்றது. அதனை நீ யறிதியென்று சொல்லியவளவில், அதைக் கேட்ட தருமராசன் கடல்போல ஓசையுண்டாகத்தக்கதாக ஆர்ப்பரித்துக் கொண்டு பிரமதேவனிருந்த சபையிற் போய்ப் பணிந்து என்றவாறு.*

செம்பொன் வெற்ப தொன்றுநாலு சிகரமோ டிருந்தென
அம்புயா சனத்திருந்த வண்ணல் வாய்மலர்திறந்(து)
எம்பதத் தடைந்த வாறென் மறலியென் றியம்பவே
வெம்பு நெஞ்ச னெடிதுயிர்த்து வெகுளியோடு முரைசெய்தான். 30

இ - ள்: *ஒரு பொன்மலையானது நாலு சிகரத்துடனிருந்தது போலக் கமலாசனத்திலிருந்த பிரமதேவன் திருவாய் மலர்ந்து தருமராசனே! நீ நம்மிடத்திற்கு வந்த காரணமென்னவென்று சொல்லலும். இயமன் வெதும்புகின்ற மனத்தனுய்ப் பெருமூச்சுவிட்டுக் கோபத்துடன் கூறுகின்றுன் என்றவாறு.*

அய்யநீ பணித்த வண்ண மரியவேழு நான்கெனும்
வெய்ய கோடி கும்பியும் விளங்கியே தழைக்கயான்
செய்ய லாவ தேதினிச் சிறந்தசீ ருருத்திரம்
வையம் யாவு மோதலாலம் மாநிலத்து ளோரெலாம். 31

இ - ள்: *சிறப்புப் பொருந்திய சீருத்திரத்தைப் பூலோகத்தில் இருப்பவர்கள் எல்லோரும் செபித்தலால், ஐயனே! நீ கட்டளையிட்டபடி*

இருபத்தெட்டுகோடி நரகங்களும் விளங்கித் தழைக்கத் தக்கதாக அடியேன் செய்யலாவதென்ன இருக்கிறது? என்றவாறு.

நாகநாடு நண்ணிலார்க ளாரணன் றனித்துவாழ்
போகநாடு நண்ணிலார்கள் புண்டரீக நின்றிரு
யோகநாடு நண்ணிலாரு லோகபாலர் நாடுறார்
ஏகமாய சிவபதத்தி னெல்லையாரு நண்ணினர். 32

இ - ள்: சுவர்க்க உலகில் பொருந்துகின்றார்களல்லர். திருமால் தனித்து வாழ்கின்ற போகநாடு பொருந்துகின்றார்களல்லர். தேவரீருடைய நாட்டிலும் பொருந்துகின்றார்களல்லர். உலகபாலர் நாட்டிலும் பொருந்துகின்றார்களல்லர். ஏகனாகிய பரமசிவனாட்டில் எல்லாரும் பொருந்துகின்றார்கள் என்றவாறு.

புண்டரீக வண்ணலே புராரிவாழ் பதத்தினில்
எண்டிசா முகத்துளோரு மெய்தலான்மற் றேவரே
கொண்டதீமை நரகம்வந்து குறுகுவார்கள் குறுகுமா(று)
அண்டநாத புரிதியல்ல தாள்கலேனென் னரசரோ. 33

இ - ள்: தாமரையில் வீற்றிருக்கும் கடவுளே! பரமசிவனது பதவியில் அட்ட திக்குகளுக்குள் இருப்பவரும் பொருந்துதலால், மற்று யார் வந்து நரகத்திற் பொருந்துவார்கள்? தேவநாதனே! அவ்வாறன்றி நரகத்தில் வந்து பொருந்தும்படி செய். இல்லையேல் என் அதிகாரத்தை விட்டு விடுகிறேன் என்றவாறு.

வேறு

என்று கூறி மறலி யிறைஞ்சலும்
துன்று பங்கய நான்முகன் சூழ்ச்சியால்
நன்று செய்பவர் தங்கட்கு நன்னெறி
அன்றி யேதவ றுற்றுவ தேதென. 34

இ - ள்: இயமன் இவ்வாறு கூறி வணங்குதலும் தாமரையிற் பொருந்திய பிரமதேவன் உணர்ச்சியினால் நன்மை செய்கின்றவர்களுக்கு நன்மார்க்கம் வருவதன்றிப் பொல்லாங்கு வருவதேது என்றவாறு.

ஞால நாயகன் பின்னரு நாடியே
கால னெஞ்சங் கலங்கி யுரைத்ததும்
மூல மோடு நரக முடிந்ததும்
ஏல நீக்குதற் கின்னவை யாமென்றே. 35

இ - ள்: எமன் மனங்கலங்கிக் கூறியதையும் அடியோடே நரக முடிந்ததையும் பிரமதேவன் யோசித்து இதுகளை நீக்குதற்கு இவைகளாகு மென்று தீர்மானித்து என்றவாறு.

கோது செய்யுமஞ் ஞானத்தின் கூறதாய்
வாதஞ் செய்ய வளர்விருப் பின்மையும்
சூது செய்திடுந் துன்மதி யும்புவிக்
கேதஞ் செய்திட வேகுமி னேகியே. 36

இ-ள்: குற்றத்தைச் செய்கின்ற அஞ்ஞானத்தின் பிரிவாய் வாது செய்ய வளர்கின்ற விருப்பமில்லாமையும் சூதுசெய்கின்ற துர்ப்புத்தியையும் பார்த்து, நீங்கள் பூலோகத்தில் துன்பம் செய்யும்படி செல்லுங்கள்; அவ்வாறு சென்று என்றவாறு.

மாச கற்றுசீ ருத்திர மானிடர்
ஆசை பற்றி யனைவரு மோதுதல்
காசி னிக்குண் முழுதுங் கடிந்துநும்
தேச றுத்த செயலை நடத்துவான். 37

இ-ள்: பாவங்களைப் போக்கத்தக்க சிருத்திரத்தில் விருப்பங்கொண்டு பூவுலகிலிருக்கும் மனிதர்கள் எல்லாரும் ஓதுதலைநீக்கி உங்களது கொடிய செய்கையை நடத்த என்றவாறு.

எய்து மென்று பிதாமக னேவலும்
நொய்தி னெய்தி நுணங்கிய கேள்வியால்
செய்த வம்புரி சிந்தையி னண்ணியே
கைத வங்கொடு நெஞ்சைக் கலக்கின. 38

இ-ள்: செல்லுங்களென்று பிரமதேவன் ஏவியவளவில் அவைகள் பூவுலகில் விரைவுடன் வந்து மிகுதியான சாத்திர விசாரணையால் நல்ல தவஞ் செய்கின்ற மனத்திற் பொருந்தி வஞ்சகத்தைக்கொண்டு அந்த மனத்தைக் கலக்கின என்றவாறு.

மடியி னுல்விருப் பின்மை மலியவே
படியு ளோர்கள்சீ ருத்திரப் பற்றுவிட்
டடைவு நீத்தொழுக் கல்லவை செய்தலின்
கொடிய தீநர கங்குடி யேறிற்றே. 39

இ-ள்: சோம்பலினுல் விருப்பமில்லாமையுண்டாக, இவ்வுலகத்திலிருப்பவர்கள் சிருத்திரம் ஓதுதலை விட்டு முறைதவறிப் பாவங்களைச் செய்தலினுல் கொடிய தீநரகத்தில் குடியேறியது என்றவாறு.

பிறை யெயிற்று மறலி பெயர்ந்துதான்
உறை பதித்தலை யெய்தி யுவப்புடன்
குறை வறக்களி கூர்ந்திருந் தானினி
இறைவ நின்மகற் கெய்துவ சொல்லுகேன் 40

இ - ள் : பிறைபோல் வளைவும் வெண்மை நிறமுமுள்ள பற்களை யுடைய எமதருமனானவன் தானிருக்கும் வைவச்சுத பட்டணத்திற் போய் மகிழ்வுடன் குறைவற்றிருந்தான். அரசனே! இனி உன் புதல்வனுக்கு நடப்பதைக் கூறுகிறேன் என்றவாறு.

இடரொ ழிக்கவு மின்னுயிர் நல்கவும்
மிடையுங் காலனை நீக்கவும் வேண்டுமேல்
படைமழுக் கைப் பரமன்சீ ருத்திரம்
தொடையன் மார்ப வியற்றுதல் சூழ்ச்சியால். 41

இ - ள் : துன்பத்தை நீக்கவும், இனியவுயிரைக் கொடுக்கவும், வருகின்ற யமனை நீக்கவும் வேண்டுமானால் மழுவாயுதம் ஏந்திய திருக் கரத்தையுடைய பரமசிவனது சீருத்திரத்தை மாலையணிந்த மார்பனே! சொல்லவேண்டும் என்றவாறு.

யாவ ரேனு மினியசீ ருத்திரம்
நாவி னோதி நளிர்மதி சேகரத்
தேவை யாட்டுதெண் ணீரைத்தஞ் சென்னியில்
தூவின னம னாணை துடைப்பரே. 42

இ - ள் : எவர்களேயானாலும் இனியதாகிய சீருத்திர மந்திரம் நாவினாலோதிப் பரமசிவனுக்கு அபிடேகம் செய்கிற தெளிவுள்ள தீர்த் தத்தைத் தங்கள் தலையில் தெளித்துக்கொண்டால் விதிக்கும் யம தண்டனை நீங்குவார்கள் என்றவாறு.

தாங்கு சீருத்தி ரசம கஞ்சொலித்
தேங்கு மஞ்சன மாட்டிய சீரியோர்
ஆங்க னேபதி னாயிர மாண்டுபோர்
வாங்கு விற்கையாய் வாழ்வொடு வைகுவர். 43

இ - ள் : போரில் வளைக்கும் வில்லேந்திய கையையுடையவனே! எல்லாரையும் ஆதரிக்கும்படியான சிருத்திர சமகஞ் சொல்லிப் பரம சிவனுக்குத் திருமஞ்சனஞ்செய்யும் சிரினையுடையவர்கள் அப்பொழுதே பதினாயிரம் ஆண்டு செல்வத்துடன் வாழ்வார்கள் என்றவாறு.

பத்தி யோடுசீ ருத்திரம் பாருளோர்
சித்தம் வைத்துத் தினந்தொறு மோதினால்
அத்த னின்புற் றவர்க்கருள் செய்திடும்
முத்தி யீது மொழியவும் வேண்டுமோ. 44

இ - ள் : இவ்வுலகிலிருப்பவர்கள் பத்தியுடனே சீருத்திரம் நாள் தோறும் மனமொருமித்து ஓதுவார்களேயானால் பரமசிவன் கருணை கூர்ந்து முத்தி கொடுத்தருள்வர். இதனைக் கூறவும் வேண்டுமோ? எ-று.

ஆத லானின் மதலேக்கு மன்னதிப்
போதி யற்றப் பொருவரும் புண்ணிய
மாத வத்தின் மறையவர்க் கூவென்ருன்
தூது மன்னன்விட் டானவர் துன்னிஞர். 45

இ - ள்: ஆகையால் இப்போது உன் மகனுக்குச் சிருத்திர மந்திரங்கூறிய நீரில் முழுக வைப்பதற்கு ஒப்பற்ற புண்ணியமுள்ள முனிவர்களே அழைப்பாயாகவென்று பராசரமுனிவர் கூறினர். அதைக் கேட்ட அரசன் தூதர்களே அனுப்ப அவர்கள்போய்க் கூறினவளவில் முனிவர்களெல்லாரும் வந்தார்கள் என்றவாறு.

அடைந்த வாயிர மந்தணா ருந்தொழிற்
சடங்கு நீதிப் பராசரன் சாற்றிடக்
குடங்க ளாயிரங் கொண்ட தெண்ணீர் தொடா
இடங்கொ ளெந்தைசீ ருத்திர மெண்ணிஞர். 46

இ - ள்: பராசரமுனிவர் சடங்குவிதி கூற, வந்த ஆயிர முனிவர்களும் ஆயிரங் கும்பங்களிற் பூரித்திருக்கும் நீரைத்தொட்டு மந்திரங்களே அதிட்டிக்கும் பரமசிவனது சிருத்திரம் கூறிஞர்கள் என்றவாறு.

இந்த வண்ணமே ழாந்தின மெய்தலும்
அந்த ணளரோ ராயிரங் கும்பமும்
கந்த னன்னவேற் காளேயை யாட்டிஞர்
மைந்தன் மண்ணிடை வீழ்ந்து மயங்கிஞன். 47

இ - ள்: இவ்வாறு ஏழாம்நாள் வந்தபோது ஆயிர முனிவர்களும் தங்கள் கையிலிருக்கும் கும்பநீரிஞல் முருகக்கடவுளே யொத்த அந்த அரசகுமாரனே நீராட்டிஞர்கள். உடனே அந்தப் புதல்வன் மயங்கிப் பூமியில் விழுந்தான் என்றவாறு.

கண்டு மன்னவன் கையற வெய்தலும்
தண்டு குண்டிகை தாங்கிய தாபதர்
விண்ட வார்பிறை வேணியன் மந்திரம்
கொண்டு பூதிவெண் காப்புக் குறித்திட்டார். 48

இ - ள்: தன் புதல்வன் மயங்கி விழுந்ததை அவ்வரசன் பார்த்துத் துயரங்கொண்டான். அப்பொழுது தண்டு கமண்டலமேந்திய முனிவர்கள் பிறையணிந்த சடையையுடைய பரமசிவனது மந்திரமாகிய சிருத்திரங்கூறி விபூதியு மணிந்தார்கள் என்றவாறு.

அறங்கொள் வேதிய ராசி பகர்ந்திட
மறங்கொள் வேந்தன் மனமகிழ் வோங்கிட
உறங்கி ஞன்றுயி றீர்ந்துணா ருற்றெனத்
திறங்கொண் மைந்த னெழுந்திது செப்புவான். 49

இ - ள் : தருமநெறியைக் கொண்டிருக்கிற முனிவர்கள் ஆசீர் வசனம் கூற வீரமிக்க அரசன் மனத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கத் தக்கதாக நித்திரை செய்தவன் அது நீங்கி எழுந்ததுபோலப் புத்திரனெழுந்து இவ்வுரை கூறுகிருன் என்றவாறு.

வேறு

இத்தலையி னிகழ்ந்தபொரு ளெந்தை யேகேள்
இளம்பிறைபோல் வெள்ளெயிற்ற னெரியுங்கண்ணன்
மைத்தொகுமா மலையனைய வுருவன் மிக்க
மழைமுகிலி னிடிமுழக்க மனையசொல்லான்
கைத்தலத்தி லொருகதையுங் கயிறுமேந்திக் கனன்றெனையே
பிடித்தடர்க்குங் காலை தோன்றி
அத்தலையி லேவிடுவித் தவனைப்பற்றி யடர்ந்தகன்ரு
ரவரெவரோ வறிகி லேனே. 50

இ - ள் : என்னையனே! இங்கு நடந்தவற்றைக்கேள். இளம்பிறை யொத்த வெண்மையாகிய பற்களையுடையவனும் கருமை நிறம் தங்கிய மலையையொத்த வடிவமுடையவனும் இடி முழக்கம்போன்ற சொல்லை யுடையவனுமாகிய ஒருவன் கையினிடத்தில் ஒரு தண்டாயுதமும் பாசக் கயிறும் ஏந்திக்கொண்டு அதிக கோபமுள்ளவனுய் என்னைப் பிடித்து அடிக்குங்காலத்தில், அவ்விடத்தில் சிலர்வந்து அவனைப் பிடித்துக் கட்டிக் கொண்டுபோனுர்கள். அவர்கள் எவர்களோ நானறியேன் என்றவாறு.

என்றுதனிக் குமரனிஃ தியம்பக் கேட்ட
யிகல்வேந்த னுவகையினு லெழுந்து புல்லி
நின்றமறை வேதியர்க்கு முகமன் கூறி
நிதிமாரி யனைவருக்கும் வெறுப்ப நல்கிப்
பொன்றுமக வுயிரளித்த நுங்கட் கின்னே
புரிவதொறு கைம்மாறு காணே னென்னு
அன்றவரோ டிருந்துசுவை யடிசின் மாந்தி
அரியணைமே லதிசயத்தோ டமர்ந்த காலை. 51

இ - ள் : இவ்வாறு ஒப்பற்ற தன் புதல்வன் கூறக்கேட்ட பல முள்ள அரசன் மகிழ்வுடையவனுய்ப் புதல்வனை அணைத்துக்கொண்டு அங்கிருந்த முனிவர்கட்கு உபசார உரைகூறி, திரவியமாகிய மழையை வெறுக்கும்படி யாவருக்குங் கொடுத்து, இறந்த என் மகனுக்கு உயிர் கொடுத்த உங்கட்கு இப்போது செய்யுங் கைம்மாறு ஒன்றும் நான் காணே னென்று கூறி அவர்களுடனிருந்து உண்டு சிம்மாசனத்தில் அதிசயத் துடன் இருந்தபோது என்றவாறு.

தேன்மாரி துளிப்பனபோன் மகதி வீணைத்
திவவுறுதந் திரியின்வழித் தாகத் தோன்றும்
வான்வாயிற் றெனவொலியைச் செவியி லேற்று
மறைமுனிநா ரதனவையின் வந்து தோன்றக்
கான்மாலை பிலிற்றுநறை யொழுகு மார்பன்
கதுமெனச்சென் றிறைஞ்சியிரு கழலும் போற்றித்
தான்வாழு மரியணையின் மருங்கு வேறோர்
தமனியப்பீ டிகைமுனிவன் தனக்கு மீந்தான். 52

இ - ள்: மகதி யாழினைக் கையால் மீட்டத் தக்கதான தந்திரியின் வழியாக ஆகாய வழியிது என்னும்படி தோற்றுகின்ற நாதத்தை யாவர் செவிகளிலும் தேன்மழை துளிப்பதுபோலச் சொரியும் நாரதமுனிவர் அந்தச் சபையில் வந்தவுடன், அவ்வரசன் விரைவில் எழுந்துபோய் இரு திருவடிகளையும் வணங்கித் துதித்துத் தானிருக்கும் சிங்காதனத்தின் அருகில் அம்முனிவருக்கும் வேறொரு இருக்கை கொடுத்தான் எ - று.

மணித் தவிசின் வைகியவ னாசிகூற
மன்னன்மகிழ்ந் தருந்தவத்தோய் மலரின் மேலோன்
கணித்தவுல கீரேழு நொடியி னெய்திக்
காணவல்லா யிறும்பூது கண்ட துண்டேல்
பணித்தியென வினவுதலு மகிழ்ந்து கண்ட
பரிசனைத்து மப்படியே பகர்வா னெஞ்சில்
குணித்துமிக வதிசயித்து வேந்தே யுன்றன்
குமரனியல் கேட்டியெனக் கூற லுற்றான். 53

இ - ள்: அந்தரத்திஞசனத்திலிருந்த நாரதமுனிவர் ஆசிர்வசனஞ் சொல்ல மன்னவன் மகிழ்ந்து அரிய தவத்தையுடையவரே! பிரமதேவன் படைத்த பதினாலு லோகமும் நொடிப்பொழுதிற் சென்று காணத்தக்க வராதலால் ஏதாவது அதிசய முண்டாயிருந்தால் சொல்லுமென்று வினவினவளவில், மகிழ்வுகொண்டு தாம் கண்டதொன்றும் வழுவாமல் சொல்ல நினைத்து மிகவும் அதிசயத்தை உடையவராய், அரசனே! உன் புதல்வனுடைய செய்தியைக் கேளென்று கூறுகிறார் என்றவாறு.

விசும்புநெறி யான்படரும் வேலை கண்டேன்
விடுகயிறு மடுதண்டுங் கரத்தி லேந்திப்
பசும்புயல்போற் கரியநிற மறலி யுன்றன்
பாலனிவன் றனைப்பற்றிக் கொடுபோங் காலை

அசும்பமுது பொழிமதிச்செஞ் சடையோ னேவ
அடல்வீரன் கணத்தினெடு மடைந்து கூற்றைத்
தசும்பொழுகப் பாசத்தாற் பிணித்து வீக்கித்
தருக்கினெடு மைந்தனையும் விலக்கி மீண்டான். 54

இ - ள்: விண்வழியாக நான் போகும்போது வீசுகின்ற பாசக் கயிறும் அடிக்கும் தண்டாயுதமும் கையிலேந்திக்கொண்டு நீருண்ட மேகம் போலக் கருமைநிறமுள்ள காலனைவன் இந்த உன் புதல்வனைப் பிடித்துக்கொண்டுபோகுங் காலத்தில், அமுதத்துளி பொழிகின்ற பிறைமதி அணிந்த சடைமுடியையுடைய பரமசிவன் அனுப்ப, வெற்றி பொருந்திய வீரபத்திரன் கணங்களுடன் வந்து, கூற்றுவனை உதிரம் ஒழுகும்படி பாசத்தினற் கட்டியிறுக்கி இவனை மீட்டுவிட்டான் என்றவாறு.

பிணியினெடு கூற்றுவனைக் கொண்டு வீரன்
பெயருநெறி யிடைத்தரும ராச னெய்தி
அணியுமணி முடிகழலிற் றீண்ட வீழ்ந்தெம்
ஐயனே தக்கன்மக மழித்த கோவே
பணிசெயுநின் னடியருக்கு மடிய னகப்
பற்ருத சிறியனைநீ பற்றற் குள்ளம்
துணியுமதற் கிவனிழைத்த வாறே தென்னத்
தோலாத படைவீரன் சொல்வ தானுன். 55

இ - ள்: அதன்பின் வீரபத்திரர் கட்டின கட்டுடன் காலனைக் கொண்டு போமிடத்தில் யமதருமராசன் வந்து தன்னுடைய ரத்தினமுடி அவரடியில் படும்படி பணிந்து, எங்களையனே! தக்கன் வேள்வியை அழித்த இறைவனே! தொண்டுசெய்கின்ற நின்னடியருக்கும் அடியனுகும்படியும் தகுதியில்லாத இவனை நீ பிடித்துக் கொண்டுபோகத் திருவுளங் கொள்வதற்கு இவன்செய்த குற்றம் யாதோ எனத் தோல்வியடையாத வீரபத்திரர் கூறுகின்ருர் என்றவாறு.

வணங்குவரிச் சிலைத்தடக்கைப் பத்ர சேனன்
மாமதலை சீருத்திர வண்மை யாலே
இணங்குபதி னுயிரமாண் டிருப்பான் றன்னை
ஈராருண் டகவையிலே யிறுதி சூழ்ந்து
நிணங்கொணெடுந் தடிப்பிலவாய்க் கால தூதர்
நெருங்குநரை யறமுருக்கிச் சிறுவ னுன
குணங்குறையி லடியவனைப் புரத்தி யென்ற
கூற்றுதைத்தோன் பணிதலைமேற் கொண்டு வந்தோம். 56

இ - ள்: வளைக்கும் நீண்ட வில்லையுடைய பத்திரசேனராசன் புதல்வன் சீருத்திர மந்திர மகிமையால் பதினாயிரமாண்டு உயிருடனிருப்பவனாயிருக்கப் பன்னிரண்டுவயதில் அவனுக்கு முடிவு கருதி நிணம் பொருந்திய பெரிய தண்டமும் பிலம்போன்ற வாயுமுள்ள காலதூதர் கிட்டிப் பிடித்தார்களாதலால், நீ போய் அவர்களைத் தண்டித்து நற்குணங்களில் குறைவில்லாத அரச குமரனைக் காத்தியென்றருளிய கால சங்கார மூர்த்தி ஏவலைப் பெற்றுக்கொண்டு வருகிறோம் என்றவாறு.

இம்மதலை சிவன்றெண்ட ருரும் வாழ்நாள்
ஈரையா யிரமுடையோ னிவனுக் கிந்த
வெம்மையிடர் விளைவித்த கூற்றைக் கட்டி
விமலன்முனங் கொடுபோவோ மென்ன லோடும்
அம்மவென மதிமயங்கித் தரும ராசன்
ஆறிரண்டாண் டேயிவனுக் காயு வென்னச்
செம்மையுட னுரைத்திடலும் வீரன் கேட்டுச்
சித்திரகுத் திரன்கணக்கிற் றெளியா யென்றான். 57

இ - ள்: இப்புதல்வன் சிவனடிமையாவன்; இவன் பதினாயிரமாண்டு ஆயுளுடனிருப்பவன்; இத்தகைமை உடையவனுக்குக் கொடுந் துயரம் விளைத்த காலனைக் கட்டிக்கொண்டு பரமசிவன் சந்நிதிக்குக் கொண்டு போவோமென்று சொன்னவளவில், தருமராசன், அறிவு மயங்கி இவனுக்குப் பன்னிரண்டு வயதுதானென்று உறுதியாகக் கூறிய அளவில், வீரபத்திரர் கேட்டுச் சித்திரகுத்தன் கணக்கைப் பார்த்து நீ தெளிந்து கொள்வாயாக என்றார் என்றவாறு.

வரவழைத்துத் தருமனுண்மைக் கணக்கன் றன்னை
வதனம்பார்த் திந்தவிள மதலைக் காயுத்
திரவளவை யுரையெனலு மவனுந் தேர்ந்து
செப்புவா னீராறுண் டளவே திண்ணம்
பரவருசீ ருத்திரத்தின் பலத்தி னாலே
பகர்பதினா யிரம்பருவம் பாரில் வாழப்
புரவலனே பின்னெழுதிக் கிடத்தல் கண்டேன்
எனப்புகல அவனுமஞ்சிப் புகல லுற்றான். 58

இ - ள்: அவ்வுரையைக் கேட்ட தருமராசன் சித்திரகுத்தனை வரவழைத்து அவன் முகத்தைப் பார்த்து இந்த இளைஞனுக்குள்ள ஆயுள் முடிவைப் பார்த்துக் கூறென்றான். சித்திரகுத்தன் கணக்கைப் பார்த்துப் பன்னிரண்டு வயதென்பது நிச்சயமே; ஆனால் சீருத்திர பலத்தினால் பதினாயிரம் ஆண்டு பூமியில் வாழும்படி பின்னாலே எழுதியிருப்பதை இப்போது பார்த்தேன் என்று கூற, யமன் பயந்து கூறுகின்றான் என்றவாறு.

புன்மையினுன் மடமையினு லடியார் செய்த
புன்ருெழிலே யேபொறுத்தல் புலவோர் செய்யும்
தன்மையெனுப் புகழ்ந்துநம னிரந்து கூறத்
தனிவீரன் பிணித்தகொடுங் கூற்றை விட்டுத்
தொன்மையதாம் சிவலோக மடைந்தான் வாசத்
தொடைத்தருமன் றன்பதியிற் புகுந்தா னிந்த
நன்மையதி சயத்தகைமை புகல வேண்டி
நாமுனது நகரடைந்தோம் நாம வேலோய். 59

இ - ள்: புல்லறிவினுலும் தெரியாமையினுலும் அடியார்கள் செய்த குற்றங்களைப் பொறுத்துக் காப்பது பெரியோர்கள் செய்கை என்று நமன் வீரபத்திரரைப் புகழ்ந்து இரந்து கூற, அவர் காலனைக் கட்டிய கட்டினையவிழ்த்துப் பழமையாகிய சிவலோகமடைந்தார். வாசனையுள்ள மாலையணிந்த தருமராசன் தன்னுலகம் அடைந்தான். இந்த நல்ல அதிசயத்தைச் சொல்லவேண்டி அரசனே! நாம் உன் நகரத்துக்கு வந்தோம் என்றவாறு.

வேறு

என்று நாரத முனிவர னியம்பலு மெறுழ்வலிக் குவவுத்தோள்
குன்று போல்வளர்ந் தோங்கிட வுவகையங் குரைகட லிடைமூழ்கி
நன்று நன்றென வருந்தவர் முதலிய நான்மறை யவர்ப்போக்கித்
துன்று தாரவன் மைந்தனே டரனடி தொழுதுவீற் றிருந்தானே. 60

இ - ள்: இவ்வாறு நாரதமுனிவர் கூறியவளவில் பலமுள்ள தாய்க் குவிந்திருக்கும் புயங்கள் மலைபோல் வளர்ந்தோங்கிப் பூரிக்கத் தக்க தாக மகிழ்வாகிய கடலில் மூழ்கி, இது மிகவும் நல்ல காரியம், நல்ல காரிய மென்று கூறி, முனிவர்கள் முதலாகிய பிராமணர்களை அனுப்பிவிட்டுப் பூமாலையணிந்த அரசன் தன் புதல்வனும் தானுமாகப் பரமசிவன் திருவடி களைத் தொழுது வாழ்ந்திருந்தான் என்றவாறு.

இந்த மந்திரத் தகுதியு மோதினேர்க்
கிறையவ னருள்கூரும்
அந்த வண்ணமுங் காலனைக்
கடிந்தது மரும்பெறற் றிருமைந்தன்
நந்த றீர்ந்தது மாயுளைப்
பெற்றது நவின்றமாக் கதைதன்னைச்
சிந்தை செய்குநர் படிக்குநர்
கேட்குநர் சிவபத மடைவாரே. 61

இ - ள் : இந்த மந்திரப் பெருமையும், இதைச் சொல்லுகின்றவர்கட்குப் பரமசிவன் கருணைசெய்யும் முறைமையும், காலனைக் கடந்ததும், பெறுதற்கரிய அரசகுமரன் இறத்தல் நீங்கினதும், பதினாயிரமாண்டு இருக்கும் ஆயுள் பெற்றதும் கூறுகின்ற பெருமையுள்ள இந்த வரலாற்றைச் சிந்திப்பவர்களும் படிப்பவர்களும் கேட்பவர்களும் சிவபதம் அடைவார்கள் என்றவாறு.

இன்ன தன்மைய திக்கதை
யெனமுளை யிளமதிச் செழுங்கண்ணி
மின்னு செஞ்சடை யமலனை
நிமலனை விமலனை யடிபேணி
நன்னலந்தரு மிருந்தவக் கிழமைசால்
நவையிலார் களிகூரச்
சொன்ன நான்மறை வியாதன
தருள்பெறு சூதமாமுனி சொன்னான். 62

இ - ள் : இந்த வரலாறு இத்தன்மையுடையதென்று இளம் பிறைமதியை மாலைபோலணிந்திருக்குஞ் செஞ்சடையையுடைய அமலர் நிமலர் விமலர் என்னும் பல திருப்பெயருள்ள பரமசிவனுடைய திருவடிகளைத் தொழுது, நல்ல முத்தி தருதற்கேதுவாகிய தவநெறியுள்ள நைமிசாரணிய முனிவர்கள் ஆனந்தம் அடையும்படி, சூதமுனிவர் கூறினார். அவரோ வேதங்களை வகுத்துக்கூறிய வியாசருடைய சீடராவார்.

சீருத்திரமகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் 1216.

இருபத்திரண்டாவது

வஞ்சுளை முத்திபெற்ற

அத்தியாயம்

மீட்டு மற்றேர்கதை சூதன் விளம்பும்
தீட்ட லாதமறை யோர்திறல் வேந்தர்
ஈட்டு சீர்வணிக ரென்றிவர் மூவர்
நாட்டு வேதநெறி நன்னிலை நின்றேர். 1

இ-ள்: சூதமுனிவர் வேருெரு வரலாறு கூறுகிருர். பரிசுத்தராகிய மறையோர்கள் வெற்றியுள்ள சத்திரியர்கள் நிதிதேடும் வைசியர்கள் ஆகிய இம்மூவரும் விதிவிலக்குகள் கூறும் வேதநெறியிலிருப்பவர்கள் எ-று.

அந்த நூலினதி கார மிலாராய்
வந்த பின்னவரு மாநில மீதில்
சந்த மில்லிழி குலத்தினர் தாமும்
சிந்தை நன்கொருவு தேமொழி யாரும். 2

இ-ள்: அவ்வேதங்களோதும் அதிகாரமில்லாதவர்களாய் வந்த வேளாளரும் பெரிய இந்தவுலகத்திலிருக்கும் மாட்சியில்லாத இழிகுலத்தாரும் மனத்திற் கற்பினிலையில்லாத மாதர்களும் என்றவாறு.

முற்று நன்னதிகண் மூழ்கில ரேனும்
நற்றவம் புரித லுடில ரேனும்
உற்ற பேரற முவந்தில ரேனும்
பற்றி லானடி பணிந்தில ரேனும். 3

இ-ள்: நல்ல நதிகளிளெல்லாம் மூழ்காதவர்களாயிருந்தாலும், நல்ல தவம் செய்யவேண்டுமென்று நினையாதவர்களாயிருந்தாலும், பொருந்திய தருமங்கள் செய்யாதவர்களாயிருந்தாலும், விருப்பு வெறுப்பு இயல்பாகவே யில்லாத பரமசிவனுடைய திருவடிகளைப் பணியாதவர்களாயிருந்தாலும் என்றவாறு.

ஓது தற்கு மரிதா யுணர்கல்லாப்
பாத கத்தொழில்கள் பண்ணின ரேனுஞ்
சோதி நற்பிறை முடித்திடு தொல்லோன்
காதை யிற்படு கருத்தின ராஞல். 4

இ-ள்: சொல்வதற்கு மரியதாய் மனத்தில் எண்ணவுங்கூடாத பாவங்களைச் செய்கின்றவர்களேயானாலும் ஒளியுள்ள பிறையணிந்த ஆதி காரணனாகிய பரமசிவனுடைய வரலாற்றில் சிந்தை வைப்பவர்களானால் என்றவாறு.

பாவ மென்றமொழி பற்றற மாய்த்துத்
தேவ ரும்பரவி வந்தனை செய்யக்
கோவை யங்குமுத வாயுமை கொண்கன்
மேவ ரும்பதவி மேவி யிருப்பார். 5

இ-ள்: பாவமென்கிற சொல்லின் பற்றைக்கெடுத்துத் தேவர்களும் துதித்தெழும்படி கோவைப்பழமொத்த செவ்வாயினையுடைய உமையவள் கணவனாகிய பரமசிவன் வீற்றிருக்கும் சிவபதவியில் பொருந்தி இருப்பார்கள் என்றவாறு.

கரந்தை வார்சடையர் காதையை நாளும்
இருந்து கேட்க வியலாதவர் தாமும்
அகந்தை நீங்கி யரைநாழிகை யேனுந்
தெரிந்து கேட்கினுறு தீவினை மாய்ப்பர். 6

இ-ள்: கரந்தைப் பத்திரமணிந்த நீண்ட சடையையுடைய பரமசிவன் கதையை நாள்தோறும் இருந்து கேட்கக் கூடாமையா யிருப்பவர்கள் தங்களுக்கு இருக்கும் வருத்தத்தை விட்டு அரை நாழிகையாவது நினைவுடன் கேட்பார்களானால் பிறவிகள்தோறும் பொருந்திய தீவினையைக் கெடுப்பார்கள் என்றவாறு.

கலியு கத்துநற் கன்ம மியற்றுதல்
மலிபு ராணநூல் கேட்பது மாட்சியால்
அலையு நெஞ்சம லைவற்று மெய்ந்நெறி
நிலைபெ றுஞ்சிவ யோகத்து நிற்குமே. 7

இ-ள்: கலியுகத்தில் நற்கருமங்கள் செய்தலும் நிறைவுள்ள புராணங்களைக் கேட்பதுமாகிய பெருமையால், சஞ்சலப்படுகிற மனம் அலைவற்று நல்ல நெறியில் நிலைத்திருக்கத்தக்க சிவயோகத்தில் நிற்கும் எ-று.

வஞ்ச கக்கரு நெஞ்சமு மாசிலா
அஞ்செ ழுத்தை யடையவ ரந்தைபோம்
விஞ்சு தீவினை வேரறும் வேரறத்
துஞ்சி லாத்துரி யத்திற் சுகிக்குமே. 8

இ-ள்: வஞ்சகமுள்ளதா யிருண்டிருக்கிற மனமும் குற்றமில்லாத திருவைந்தெழுத்தைப் பொருந்துமாகில் துன்பம் நீங்கும். அதிகரிக்குந்

தீவினைக்குக் காரணமாகிய ஆணவமலம் நீங்கும். அது நீங்கினுல் மாயாத துரியாவத்தையில் சுகித்துக்கொண்டிருக்கும் என்றவாறு.

உம்ப ராரமு துண்டவர் தங்கட்கு
நம்பு காய நரைதிரை மாற்றுமால்
எம்பி ரான்கதை யின்னமு துண்டவர்
வெம்பு காய வினைமுற்று மாற்றுமே. 9

இ - ள்: தேவர்கட்குங் கிடைப்பதற்கரிய அமுதம் உண்டவர் கட்குத் தங்களுடையதென்று நம்பிக்கொண்டிருக்கிற உடலின் நரையை யும் திரையையும் மாற்றிவிடும். நம் இறைவன் வரலாருகிய அமுதம் உண் டவர்கட்கு வருத்தத்துக் கேதுவாகிய உடலின் வினைகளெல்லாம் நீங்கும் என்றவாறு.

ஆன்ற காதையின் மேல்விருப் பற்றவர்
தோன்று முற்கதை பொய்யென்று சொல்பவர்
மூன்று கோடி நரகத்தின் மூழ்கியே
நான்ற நாவுடை நாய்ப்பிறப் பெய்துவர். 10

இ - ள்: மகிமை தங்கிய சிவகதையில் விருப்பமில்லாதவர்களும் முன் நடந்திருக்கும் சிவகதையைப் பொய்யென்று சொல்லுகிறவர்களும் மூன்றுகோடி நரகத்தில் அழுந்திப் பின்பு தொங்கிய நாவுடைய நாயாகப் பிறப்பார்கள் என்றவாறு.

எக்கு லத்தவ ஞயினு மீர்ஞ்சடை
முக்க ணுன்கதை யோது முதல்வனை
மக்க ளுள்ளிவ னும்மக னென்பவர்
கக்கு வாய்ப்புழுக் கான்றிடு நோய்கொள்வர். 11

இ - ள்: எந்தக் குலத்திற் பிறந்தவனே யானுலும் குளிர்ச்சி தங்கிய சடையையுடைய பரமசிவனது வரலாற்றைக் கூறுகின்ற முதல் வனை மனிதர்கட்குள் இவனுமொரு மனிதனென்று எண்ணிக் கூறுகின்ற வர்கள் கக்கும் வாய் புழுக்களைக் கக்கும்படியான வியாதியை யடைவார் கள் என்றவாறு.

ஓங்கு சீர்த்திருக் காதை யுரைக்குநர்
தாங்கு பீடிகை யின்றித் தரையிரார்
ஆங்கண் யாரையு மஞ்சலி செய்திடார்
தீங்கி னேருறை சிற்றவை சேர்ந்திடார். 12

இ - ள்: மேலான மகிமையுஞ் சிறப்புமுள்ள சிவவரலாறு கூறுகின்றவர்கள் தாங்குகிற ஆசனமில்லாமல் தரையில் இரார்கள்.

அவ்விடத்திலிருக்கும் யாரையும் வந்தியார்கள். தீயவர்களிருக்கிற புல்லிய சபையிற் சேரார்கள் என்றவாறு.

சிறியர் தீக்களி செய்யு மிடத்தினும்
அறிவி லாளர்சூ தாடு மரங்கினும்
உறவில் வஞ்சிய ருண்டாட் டிடத்தினும்
பொறியி லாளர் பொருந்து மிடத்தினும். 13

இ - ள்: அற்பர்கள் பாவத்துக்கேதுவாகிய கள் உண்ணுமிடத்திலும், அறிவில்லாதவர்கள் சூதாடும் அரங்கத்திலும், தத்தம் கணவர்களுடன் மாதர்கள் விளையாடிக்கொண்டிருக்கும் இடத்திலும அங்கம் பழுதானவர்களிடத்திலும் என்றவாறு.

கம்ப மால்கரி நல்கினுங் கண்ணகன்
இம்பர் நாடு முழுவது மீயினும்
செம்பொன் மாரி பொழியினுஞ் செஞ்சடை
நம்பன் காதை நயந்து நவிற்றிடார். 14

இ - ள்: அசைதலே இயல்பாகவுடைய பெரிய யானையைக் கொடுத்தாலும், இடமகன்ற இவ்வுலகத்தில் நாடு கொடுத்தாலும், செம்பொன் மாரி பொழிந்தாலும் செஞ்சடையையுடைய பரமசிவனது வரலாற்றை விரும்பிச் சொல்லார்கள் என்றவாறு.

மூவ ராதி முழுதுல கத்துள
தேவர் வாழுஞ் சினகர முன்னரும்
தூவு தண்ணற வுண்டு சுரும்பிமிர்
பூவர் சோலைப் புனித விடத்தினும். 15

இ - ள்: மும்மூர்த்திகள் முதலான எல்லாவுலகங்களிலும் இருக்கிற தேவர்கள் வீற்றிருக்கும் ஆலயங்களின் முன்னும், பெருகா நின்ற குளிர்ச்சி தங்கிய தேனையுண்டு வண்டுகளிசைபாடிக் கொண்டிருக்கத்தக்க மலர்களையுடைய சோலையாகிய புனிதமுள்ள விடத்திலும் என்றவாறு.

தீதி லாத செழுநதி தீரத்தும்
கோதி லார்கள் குழீய விடத்தினும்
வேத வேதியர் வேள்வித் தலையினும்
ஆதி மாதவ ரம்மனை முற்றத்தும். 16

இ - ள்: தீமையில்லாத செழுமையுள்ள நதிதீரத்திலும், குற்றமில்லாதவர்களாகிய நல்லவர்கள் கூடிய இடத்திலும், பிராமணர்கள் செய்யும் யாகசாலையினிடத்திலும், ஆதியாகிய முனிவர்களுடைய ஆசிரமத்தினிடத்திலும் என்றவாறு.

மற்றும் வேறுள புண்ணிய மல்குசீர்
உற்ற தெவ்விட மவ்விடத் தோதுவர்
பற்றி நாளும் பரமன் றிருக்கதை
முற்று மோதி முழுதுணர் கேள்வியர். 17

இ - ள் : இவ்விடங்களிலு மல்லாமல் இன்னுமிருக்கிற புண்ணியம் பொருந்திய சிறினையுடையது எவ்விடமோ அவ்விடத்திலும் வேதாகம சாத்திர புராணங்கள் முழுவதையும் ஓதியுணர்ந்த பெரியோர்கள் அன்புடன் சிவகதையை நாள்தோறும் கூறுவார்கள் என்றவாறு.

நாய கன்கதை நாடொறுங் கேட்குநர்
தூய நீரினிற் றோய்ந்துவெண் ணீறணிந்(து)
ஏய நித்தக் கரும மியற்றிப்பின்
காய வைம்புல னுங்கருத் தொன்றியே. 18

இ - ள் : பரமசிவனுடைய வரலாற்றையே நாள்தோறுங் கேட்பவர்கள் பரிசுத்தமுள்ள நீரில் முழுகித் திருநீறணிந்துகொண்டு தங்கள் வருணுசிரமத்துக்குரிய நாட்கடன்களை முடித்துக்கொண்டு உடலைப்பற்றிய ஐம்புலன்களும் கருத்தும் ஒருவழிப்பட்டு என்றவாறு.

வல்ல தேசிக னுக்கு மணித்தவி(சு)
ஒல்லை நல்கி யுறுபொரு ளீந்துநன்(கு)
அல்ல வாணி கிளத்த லடங்கிவன்
புல்ல ரானவ ரைப்புறம் போக்கியே. 19

இ - ள் : சிவகதை கூறவல்ல ஆசாரியனுக்கு விரைவாக ரத்தினாசனங்கொடுத்து மிக்க பொருளுங் கொடுத்து நல்லதல்லாததாகிய உரை பேசுதலை விட்டு மிகவும் புன்மையானவர்களைப் புறத்தில் போக்கிவிட்டு என்றவாறு.

பத்தி யோடடங்கு பாவகத் தோடுரு
ஒத்த நற்றவி சேற லொழித்துநூல்
வித்த கற்குக்கீழ் மென்றவி சொன்றியே
சித்தம் வேறறக் கேட்பது செவ்விதால். 20

இ - ள் : பத்தியுடனும் ஒடுக்கமுள்ள பாவகத்துடனும் பொருந்திச் சிவகதை கூறுகின்றவர் ஆசனத்துக்குச் சரியான நல்ல ஆசனத்தி லிருப்பதை ஒழித்து அவராசனத்துக்குத் தாழ்ந்த ஆசனத்திலிருந்து கொண்டு மனம் வேறோரிடத்திற் செல்லாத வண்ணமாகக் கேட்குதல் நன்மையாம் என்றவாறு.

அன்றிக் கேட்கு மிடத்தழுக் காற்றினல்
கன்றி வேருேர் பொருளினைக் கற்பிப்பார்
ஒன்ற லாத துரைத்தெதிர் வாதிப்பார்
பன்றி யாயிந்தப் பாரி லுதிப்பரே. 21

இ - ள் : இவ்வாறன்றிக் கேட்குமிடத்தில் பொருமையினல் மனம் வெதும்பித் தங்கள் கற்பனையால் வேறொரு பொருளைக் கூறுகின்றவர்களும் பலபலவாருகக் கூறியெதிரில் வாதுசெய்கின்றவர்களும் இவ்வுலகத்தில் பன்றியாய்ப் பிறப்பார்கள் என்றவாறு.

அன்பி னிற்கதை கேட்ப தலாற்பிறர்
வன்பி னெய்தி மனம்வைத்துக் கேட்பவர்
துன்ப மெய்து சுடலையி லோங்கிய
வின்ப மில்கனி யெட்டிய தாகுவர். 22

இ - ள் : அன்புடன் சிவகதையைக் கேட்பதைவிட்டுப் பிறருடைய வன்மையினில் மனம் வைத்து அவர்கள் கூறும் வேறொன்றைக் கேட்பவர்கள் துன்பம் பொருந்திய சுடலையில் ஓங்கிய மதுரமில்லாத பழத்தையுடைய எட்டிமரமாவர் என்றவாறு.

கூறு மாக்கதை கூட்டுமு னப்பணே
வேறு தங்கரு மத்து விரைந்துபோம்
சீறு சிந்தையர் செல்வத்தைத் துய்க்குங்கால்
ஈறு செல்லா திடையி லிழப்பரே, 23

இ - ள் : சிவகதையை ஆரம்பித்து முடிப்பதற்குமுன் மத்தியில் வேருகிய தங்கள் காரியத்தைக் குறித்து விரைந்துபோய் விடுகின்ற மூர்க்க மனமுள்ளவர்கள் நல்வினையினல் செல்வத்தை அனுபவிக்குங் காலத்தில் தங்கள் ஆயுள்வரையில் அனுபவியாமல் இடையிலிழந்து விடுவார்கள் என்றவாறு.

மஞ்ச மேறியும் வெள்ளிலை மாந்தியும்
நஞ்ச முண்டவர் நற்கதை கேட்குநர்
அஞ்சி யோவென் ரரற்றிக் கழுநுனைத்
தஞ்ச மாகக் கிடந்து தவிப்பரே. 24

இ - ள் : மஞ்சத்தின்மேல் இருந்துகொண்டும் தாம்பூலத்தை போட்டுக்கொண்டும் நஞ்சுண்டருளிய பரமசிவனுடைய வரலாற்றைக் கேட்பவர்கள் பயந்து ஓவென்றழுதுகொண்டு கழுமரத்தினுனியே தஞ்சமாக அதிலிருந்து தவிப்பார்கள் என்றவாறு.

கயிலை யண்ணல் கதையை நிகழ்த்துழித்
துயில் புரிந்திடுந் தொல்வினைப் பாதகர்
வெயில் கரந்தடு வெங்கொடிக் கஞ்சியே
அயின்முட் காட்டுறை கூகைய தாகுவர். 25

இ - ள் : கயிலாசபதியின் வரலாற்றைக் கூறுமிடத்தில் நித்திரை செய்கின்ற பழவினையையுடைய பாவிகள் தன்னைக்கொல்லுகின்ற கொடிய காக்கைகளுக்கு அஞ்சிப் பகலி லொளித்துக் கொண்டு இருண்டிருக்குங் காட்டில் வாசஞ் செய்கிற கோட்டானுவார்கள் என்றவாறு.

படர்ந்த வேணிப் பரமன் றிருக்கதை
கிடந்த சேக்கையிற் கேட்கு மறிவிலோர்
மிடைந்த மால்வரை யுச்சி விடர்புகுந்(து)
அடைந்த மாசுண மாகிப் பிறப்பரே. 26

இ - ள் : விரிந்த சடையையுடைய பரமேசுவரனது சிறப்புள்ள வரலாற்றைப் படுத்திருந்த பாயலிலிருந்தபடியே கேட்கும் அறிவீனர்கள் நெருங்கிய பெரிய மலையின் உச்சியிலிருக்குங் கல் வெடிப்புச் சந்துகளில் புகுந்துகொண்டிருக்கும் பாம்பாய்ப் பிறப்பார்கள் என்றவாறு.

ஈசன் காதைசொல் வானன்றிப் பின்னுமோர்
தேசி கன்பிற னுண்டென்று செப்புமோ
காசு தீர்க்குங் கதைவிளக் கங்கொடு
மாசின் மாக்கண் மனவிரு ணீக்கலால். 27

இ - ள் : சிவகதை கூறுகின்றவர்களை யன்றி வேறே ஒரு ஆசிரியனுமுண்டென்று வேதாகமங்கள் கூறுமோ? (ஏனெனில்) குற்றங்களைத் தீர்க்கத்தக்க சிவசரித்திரமாகிய தீபத்தைக்கொண்டு பழுதில்லாத மனிதர்கள் தங்களுடைய மனவிருளை நீக்குதலினுல் என்றவாறு.

ஆத லால்கதை கேட்கு மவையினைப்
போத மொன்றிய புண்ணிய மாந்தர்கள்
பாத கந்தவிர்க் கும்பய பத்தியாய்
நாத னல்லவை யென்றெண்ணி நண்ணுவார். 28

இ - ள் : ஆகையால் சிவகதை கேட்குஞ் சபையை ஞானம் பொருந்திய புண்ணியவான்கள் பாவத்தை நீக்கும்படியான பயபக்தியுடன் பரமேசுவரனுடைய சந்நிதியென்று கருதி மேற்சொல்லிய குற்றம் யாதொன்று மில்லாமலிருந்து கேட்பார்கள் என்றவாறு.

வேறு

இத்தகைய கதையான்முன் னியன்றகதை யொன்றுரைப்பாம்
தத்துதிரை மணிகொழிக்குந் தடங்கடற்செந் தமிழ்நாட்டின்
மைத்தொருபூம் பொழிலுடுத்த வாட்களமா முதுநகரில்
வித்தகரா யினிதுறையும் வேதியர்க ளனைவோரும். 29

இ - ள்: சிவகதையானது இத்தன்மையுள்ள கதையாகும். இனி முன் நடந்ததொரு சிவகதை கூறுகிறோம். தாவி மேலெழுகின்ற அலைகள் முத்துக்களைக் கொழிக்கும் பெரிய கடலையுடைய தமிழ்நாடாகிய பாண்டிய நாட்டில், மேகங்கள் சேரும்படி பூஞ்சோலை சூழ்ந்த வாட்களமென்னும் பழைய நகரத்தில், ஞானவான்களா யினிதுடன்வாழும் பிராமணர்களனை வரும் என்றவாறு.

தீப்பேணும் தொழிறிறம்பிப் படைதரித்த செய்கையராய்
நாப்பேணு மந்திரமு நற்றெழிலு நனிமறந்து
பூப்பேணி யரன்கழலி லருச்சிக்கும் புந்தியின்றி
மீப்பேணுங் கடவுளர்த முப்போதைக் கடனும்விட்டார். 30

இ - ள்: நித்தியாகுதி செய்யுந்தொழிலை மாறி, ஆயுதமேந்திய கையையுடையராய், நாவினாலுச்சரிக்கும் மந்திரத்தையும் நற்கருமங்களையும் மிகவும் மறந்து, மலர்களெடுத்து அன்புடன் பரமசிவனுடைய திருவடிகளில் அருச்சிக்க வேண்டுமென்கிற விவேகமு மில்லாமல், வானுலகில் வாழுங் கடவுளர்களை எண்ணும் முச்சந்தியினையும் விட்டார்கள் எ - று.

ஆரணமுந் தனியோதார் அந்தணருக் கடாக்கரும
காரணமா நீசர்தொழில் கடைப்பிடித்த மறையோருள்
வாரணிநற் கும்பமுலை வஞ்சுளைதன் மணக்கொழுநன்
தாரணிக்குள் விதுரனெனும் பெயருடையோன் ருளெருவன். 31

இ - ள்: வேதங்களையு மோதாதவர்களாய்ப் பிராமணர்கட்குரிய தல்லாத செய்கைக்குக் காரணமாகிய நீசர்தொழிலை அனுசரித்திருக்கும் பிராமணர்களில் கச்சணிந்த தனங்களையுடைய வஞ்சுளை என்பவள் கணவனாகிய இவ்வுலகத்தில் விதுரனென்று கூறும் பெயரையுடையவனொருவன் என்றவாறு.

பண்பில்லா நெறிபூண்டோன் படிற்றொழுக்கின் றலைநின்றோன்
நன்பிறைற் பொதுமகளி ரிளமுலையி னலந்துய்த்து
வெண்பலா லரவுமிழ்ந்த விடந்தலைக்கொண் டெனக்காமுற்(று)
ஒண்பொனூர் தடமார்பன் றன்மனையை யொழிந்திட்டான். 32

இ - ள் : நன்மையில்லாத ஒழுக்கத்தையுடையவனும் மேலுக்குப் பிராமணவேடமும் உள்ளே நீசத்தொழிலாகிய செய்கையிலிருப்பவனும் ஒளிபொருந்திய பொன்மாலை யணிந்த மார்பையுடையவனுமாகிய அந்த விதுரனென்பவன் நேசத்துடன் பொதுமகளிருடைய இளமைதங்கிய தனங்களிற் புணரும் கலவியின்பம் அனுபவித்துக்கொண்டு பாம்பானது வெண்மை நிறந்தங்கிய பற்களினுற் கக்கிய விடம் தலைக்கேறியதுபோலக் காமந் தலைக்கேறக்கொண்டு தன் மனைவியினிடத்தில் அனுபவிக்குங் கலவியின்பத்தை யொழித்திட்டான் என்றவாறு.

துணைபிரிந்த மடவன்றிற் பேடைபோற் றுயருழந்து
கணமலிந்த கங்குருெறுங் காமசரத் தாலலைந்து
பிணைநெடுங்கண் டுயின்மறப்ப விரகத்தாற் பெரிதுணங்கி
மணமலிந்த சுருளோதி வஞ்சுளையு மிதுசெய்தாள். 33

இ - ள் : வாசனைபொருந்தியதாய்ச் சுருண்ட அளகத்தையுடைய வஞ்சுளையானவள் ஆணன்றிலைப் பிரிந்த பெட்டையன்றிலைப் போல் துயரங்கொண்டு, பேய்கள் சஞ்சரிக்கும் இராக்காலந்தோறும் காமபாணத்தினுல் அலைந்து மான் பார்வைபோன்ற கண் உறக்கத்தை நீக்க விரகத்தினுல் மிகவும் வருந்தி இவ்வாறு செய்யத் தொடங்கினுள் என்றவாறு.

காதலா னறனெருவிக் கற்புநிறை வரம்புமிகந்(து)
ஏதிலா னிழிகுலத்தோ னெருவனெழிற் ரேணசையால்
தாதுலா மலரணையிற் றனிக்காம விடாய்தவிர்வான்
மாதரா டணவாது மருவுநா டனிெருநாள். 34

இ - ள் : காம விரகத்தினுல் அறவழியை நீங்கிக் கற்புநிலையாகிய வரம்பினையுங்கடந்து வஞ்சுளையானவள் அன்னியனுகிய ஒரு இழிகுலத்தானுடைய அழகுள்ள தோளைப்புணரும் ஆசையால் மகரந்தம் நிறைந்த மலரணையில் தனக்குள்ள காமவிடாய் தவிரும்பொருட்டு ஒரு நாளாவது தவிராமல் புணர்ந்துகொண்டிருக்கும் நாளிலொருநாள் என்றவாறு.

பழியுரைதன் செவிவெதுப்பப் பைந்தொடிதன் கற்போர்வான்
பொழிமழையி னரையாமந் தமியனுய்ப் புகுந்திடலும்
கழையிளந்தோள் வஞ்சுளையுங் காளையொருவனு மனைவாய்
விழைவுடன்மென் பூவணைமேன் மெய்குழைய நலனுகர்ந்தார். 35

இ - ள் : இவள் நடக்குங் காரியம் ஊரறிந்து பேசிக்கொள்ளும் பழிமொழி தன் காதுகளைச் சுடுதலினுல் விதுரனென்பவன் வஞ்சுளையின் கற்புநிலை அறிய மழை பொழிந்துகொண்டிருக்கும் நடு இரவில் தன் மனைக்குச் சென்றபோது இளமையான பசிய மூங்கிலையொத்த தோள்களையுடைய அவளும் ஒரு வாலிபனுமாக விருப்பமுடன் வீட்டுக்குள் பூவணைமேல் மெய்குழையப் புணர்ந்துகொண்டிருந்தார்கள் என்றவாறு.

கண்டனன்றுண் ணொனுநெஞ்சன் கதழெரிபோ னெடுஞ்சீற்றம்
கொண்டடையப் படிற்றெழுக்கன் வெருவிமனங் குலைந்தகன்றான்
வண்டுமுரல் குழல்பற்றி வஞ்சுளையை மனங்கலங்கத்
தண்டமிழைக் குவனென்னுத் தாட்டுணையாற் றுகைத்திட்டான். 36

இ-ள்: இவ்வாறிருப்பதைக் கண்டு திடுக்கிட்ட மனமுள்ளவனாய்ப் பற்றியெரியுந்தீப்போல மிகுந்த கோபங்கொண்டு வருவதை அந்தச்சோரன் பார்த்துப் பயந்து ஓடிப்போனான். வண்டுகளிசை பாடிக்கொண்டிருக்கும் படியான அளகத்தைப் பிடித்துக்கொண்டு வஞ்சுளை மனங்கலங்கும்படி தண்டிக்கிறேனென்று தன்கால்களால் மிதித்தான் என்றவாறு.

கனங்குழையு மிகமறுகிக் கணவநீ யென்னுரையும்
சினங்குறைந்து கேட்டதற்பின் செகுத்திடுதி யெனவிரப்ப
மனங்குறைந்து புடையானாய் மலர்க்குழல்விட் டுரையெனலும்
தனங்களிற்கண் ணீரொழுகத் தளிரியலு மிழற்றுவாள். 37

இ-ள்: இரத்தினங்கள் பதித்திருப்பதனால் பளுவான குழை யணிந்த காதுகளை உடையவளாகிய வஞ்சுளையானவள் மிகுதியாக மனம் வருந்திக் கணவனே கோபந்தணிந்து என்னுரையையுங்கேட்டு பிற்பாடு கொன்றுபோடென்று கூற, மனமிரங்கி அடிக்காமல் அளகத்தைவிட்டு, நீ கூறுவதைக் கூறென்றவளவில், தன்னுடைய தனங்களின்மேல் கண்ணீர் சோரும்படி அழுதுகொண்டு தளிர்போன்ற தன்மையுள்ளவள் கூறுகிறாள் என்றவாறு.

வன்கணா லறநெறிவிப் பொதுமாதர் வசமாகி
என்கணார் வமுமின்றி யின்றளவு மிகந்தனை நான்
உன்கணா லருநோக்கம் பெறுதுருகி யுடல்மெலிந்து
புன்கணால் வேனிலான் கணைக்கிலக்காய்ப் புழுங்கினனே. 38

இ-ள்: இரக்கமில்லாமையினால் அறநெறியை மாறிப் பொதுமாதர் வசமாகி என்னிடத்தில் ஆசையில்லாமல் இன்றளவும் நீங்கிவிட்டாய்; நான் உன் கருணை நோக்கம் பெறாமல் நெடுநாளாக மனமுருகி உடல் மெலிந்து துயரங்கொண்டு மன்மத பாணங்களுக்கு இலக்காக வருந்தினேன் எ-று.

நல்லிளமைச் செவ்விநல நாளும்வறி தேகழியக்
கொல்லுலையி னங்கியெனக் காமக் கனல்கொளுத்த
வல்லியம்போற் றென்றல்வர வண்ணிலவுந் தென்கடலும்
அல்லல்செயக் கங்குறெறு மாற்றாதே னயினனே. 39

இ-ள்: நல்ல இளமைப் பருவமும் அழகும் பெண்ணலனும் நாள் தோறும் வீணாகிவிடும்படி கருமானுலைக்களத்தில் உண்டாகும் தீப்போலக் காமாக்கினி கொளுத்தவும் புலிபோலத் தென்றல் வந்து வீசவும், ஒளி

பொருந்திய சந்திரனும் தெளிவுள்ள கடலும் துன்பஞ் செய்யவும் இரவு காலந்தோறும் சகிக்கமாட்டாதவளானேன் என்றவாறு.

காவல நீ மேவுவையென் றிந்நெடுநாட் காத்திருந்தேன்
ஆவல்பெரு கத்தமியே னுற்றேனுய்த் தவறிழைத்தேன்
பூவர்குழன் மாதருக்குங் காளையர்க்கும் பொதுவன்றோ
மேவரிய பெருங்காம மெனவிம்மி விளம்பினள். 40

இ - ள்: என்னைப் பாதுகாக்கத்தக்க கணவனே! இத்தனை நாள் வரைக்கும் வருவையென்று கற்பு நெறியைக் காத்துக்கொண்டிருந்தேன். நீ வராமையினால் காமம் அதிகரிக்கத் தனியாயிருக்கும் நான் சகிக்கமாட்டாமல் குற்றஞ்செய்தேன். காமமானது மாதருக்கும் ஆடவர்களுக்கும் பொதுவல்லவா என்று அழுதுகொண்டு சொன்னாள் என்றவாறு.

இரங்கினன்றன் பாற்றவறென் றெண்ணினன்கேட் டிளங்கொடிநீ
மரங்களொடு கற்குழைய மாழ்கியரற் றுதல்வேண்டா
தரங்கநெடுங் கடலனைய காமநோய் தடுப்பவரார்
சுருங்கவினி யொருசூழ்ச்சி சொல்லுகிறேன் றுணிகென்று. 41

இ - ள்: அவள் இவ்வாறு கூறியதைக் கேட்டுத் தன்னிடத்தில் குற்றம் இருக்கின்றதென்றெண்ணி இரங்கி, இளங்கொடி போன்றவளே! மரங்களும் மலைகளும் குழையும்படி நீ அழுதுசோர வேண்டுவதில்லை. அலைகளையுடைய கடல்போலப் பெரிதாகிய காமநோயை நீக்கத்தக்கவர்கள் ஒருவருமில்லை. இப்போது உனக்கொரு உபாயஞ் சுருக்கமாகச் சொல்லுகிறேன்; அந்தப்படி செய்யென்று என்றவாறு.

வேறு

அந்தணரே யாக விழிகுலத்தோர் தாமாக
வந்தவரை யெல்லாம் வரையாது மேவியவர்
தந்தபொருண் முற்று மெனக்களித்துன் றுகமறச்
சிந்தைமய றீர்வளவுஞ் சேர்குவா யெனப்பணித்தான். 42

இ - ள்: அந்தணர்களேயானாலும் தாழ்ந்த குலத்தவர்களேயானாலும் வந்தவர்களையெல்லாம் நீக்கிவிடாமல் புணர்ந்து, அவர்கள் கொடுத்த பொருள்களையெல்லாம் எனக்குக் கொடுத்து, உன் காமவிடாய் தீரும்படி மனத்தில் உண்டாயிருக்கும் மையல் தீருகிறவரைக்கும் சேர்ந்துகொண்டிருவென்று சொன்னான் என்றவாறு.

நாறுமலர்க் கோதாய் நீநல்கும் பொருள்கொடுத்து
வீறுபெறுங் கொங்கை விலைமகளிர் தோள்விரும்பி
ஊறியவெங் காம மொழியநலந் துய்ப்பனெனக்
கூறியதுகேட் டதற்குக் கோற்றொடியு ந் தானிசைந்தே. 43

இ - ள் : மணம் வீசும் பூமாலையணிந்த அளகத்தையுடையவளே! நீ கொடுக்கும் பொருள்களையெல்லாம் பூரித்திருக்கும் பெரிய தனங்களையுடைய விலைமாதர்களுக்குக் கொடுத்து அவர்களைப் புணர்ந்து எனக்கு உண்டாகிய காமம் ஒழியும்படி இன்பம் அனுபவிக்கிறேனென்று கூறியதைக் கேட்டு அதற்கு அவளும் சம்மதித்தாள் என்றவாறு.

அன்னதுவே செய்வ னடியனே னென்றிறைஞ்சி
மின்னிடையாள் சால மகிழ்ந்து வெளிப்படையாய்த்
துன்னினர் தம்மையெல்லாந் தோடோய்ந் தவரளித்த
பொன்னையெல் லாங்கேள்வற் கேயீந்தாள் பொலங்கொடியே. 44

இ - ள் : அடியேன் அப்படியே செய்கிறேனென்று கணவனை வணங்கி மின்போன்ற இடையையுடைய வஞ்சுளை மிகவும் வெளிப்படையாக வந்தவர்களையெல்லாம் புணர்ந்து, அவர்கள் கொடுத்த பொருளை எல்லாம் தன் கணவனுக்குக் கொடுத்தாள் என்றவாறு.

ஆங்கவனுஞ் செம்பொ னளப்பிலகொண் டன்றன்றே
பூங்கணிகை மாதர் புகழ நனிவழங்கித்
தீங்கனிவா யின்னமுத முண்டுசில நாள்கழிய
வீங்கியமூப் பெய்தி வினைதுரப்பத் துஞ்சினன். 45

இ - ள் : அந்த விரதனென்பவன் தன் மனைவி கொடுக்கிற பொருளையெல்லாம் அப்போதைக்கப்போதே அழகுள்ள வேசையர்கள் புகழும்படி அதிகமாகக்கொடுத்து மதுரமுள்ள பழம்போல இனிப்புள்ள அவர்களுடைய அதரபானமுண்டு சிலநாள் நீங்கினபின் மிகுந்த மூப்படைந்து இறந்தான் என்றவாறு.

தன்கணவன் பொன்றத் தளிரியலுங் கைம்மையுற்று
மின்குலவு பொற்கலனு நீத்துமிக மூப்பெய்திப்
புன்கணுறு காலைப் புராரி சிவநிசிக்கு
நன்குணர்வோ ரெல்லோருங் கோகன்ன நண்ணினர். 46

இ - ள் : தன் கணவன் இறந்துபோகவே வஞ்சுளையானவள் கைம்பெண்ணகிப் பிரகாசிக்கும் மங்கிலியத்துடன் பொன்னுபரணங்களும் நீக்கிவிட்டு மிகுந்த மூப்படைந்து துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் காலத்தில் பரமசிவனுக்குரிய நாளாகிய சிவராத்திரி தரிசனத்துக்குப் பத்திமான்களெல்லாம் கோகன்னத்துக்குப் போனார்கள் என்றவாறு.

அற்றைப் பொழுதி லணியிழந்த வஞ்சுளையும்
சுற்றத் தொடும்போய்த் தொன்னகரின் பாலடைந்து
கொற்றக் கொலைமழுவோன் கோடிதீர்த் தம்படிந்து
கற்றைச் சடையான் றிருவடியைக் கைதொழுதாள். 47

இ - ள் : கைம்பெண்ணுயிருக்கும் வஞ்சுளையும் சிவராத்திரி தினத்தில் அவ்விடத்துக்குப் போகிற உறவினருடன் தானும் போய்ப் பழமையாகிய கோகன்னஞ்சேர்ந்து வெற்றி பொருந்திய கொலைமழுவேந்திய பரமசிவனுடைய கோடிதீர்த்தத்தில் மூழ்கிக் கற்றையாகிய சடையையுடைய பரமசிவன் திருவடியைத் தொழுதாள் என்றவாறு.

மீட்டுந் திருக்கோயில் சூழ்வருங்கால் வேறொருசார்
தீட்டுஞ் சிவதருமம் யாவுமொரு தேசிகன்றன்
ஏட்டின் புறத்தினிய லுணர்ந்து வாசிப்பக்
கேட்டஞ் சியின்னல் கிளர நடுங்கிநின்றாள். 48

இ - ள் : மறுபடி ஆலயத்தை வலமாக வரும்போது அங்கொரு பக்கத்தில் எழுதி வாசிக்கும்படியான சிவதருமமெல்லாம் ஒரு தேசிகன் புத்தகம் வைத்துக்கொண்டு வாசித்துப் பொருள்கூறக் கேட்டுப் பயந்து நின்று துன்பமுண்டாக நடுங்கிநின்றாள் என்றவாறு.

அக்காதை கூட்டு மிறுதிக்க ணந்தணன்முன்
புக்கா டொழுதாள் புராண புராதனனே
இக்காதை சொல்பொருளி னெண்ணரிய பாவநிலை
தொக்கார் படுவதெல்லாஞ் சொன்னு யவற்றுள்ளே. 49

இ - ள் : அந்தச் சரித்திரத்தைக் கூட்டுமுடிவில் தேசிகரிடத்தில் போய் அவர் திருவடியைத் தொழுது அய்யா புராணிகரே! இந்தச் சரித்திரத்தில் கூறுகின்ற பொருளினால் அளவிறந்த பாவஞ்செய்கிறவர்கள் படும்பாடெல்லாம் கூறினீர் அவைகளுக்குள் என்றவாறு.

காம வசத்தாற் கணவன் பிழைத்தசெழுந்
தாம முலையார் தமையொறுக்குந் தண்டத்தான்
வாம நிதம்ப முருக வழன்மடுத்துச்
சேம முசலஞ் செலுத்துவா னென்றுரைத்தாய். 50

இ - ள் : காமவசத்தினால் கொண்டவனைவிட்டுச் சோரம்போன மாதரையெல்லாம் தண்டிக்கும் கூற்றுவன் செழுமையுள்ள மாலையணிந்த முலையையுடைய அவர்கள் அழகிய நிதம்பத்தில் தீயில்காய்ந்த முசலமென்னும் இருப்புலக்கையைச் செலுத்துவானென்று சொன்னீர் எ - று.

கற்பு நிலைகடந்த காமக் கயத்தியரை
நற்பகத்திற் றூண்டிவிட்டு நான்றலைய மேற்றாக்கிப்
பற்பல கூறுக மழுவாய்ப் படத்துணித்து
வற்புறுத்திக் காய்ந்த மணல்சொரிந்து தீய்ப்பரென்றாய். 51

இ - ள் : கற்புநிலை தவறிய காமிகளாகிய கீழ்மைத்தனமுள்ள மாதர்களின் குறியினிடத்தில் தூண்டில்மாட்டித் தொங்கி அலையும்படி

மேலேதூக்கிப் பலபல துண்டாகும்படி கோடலியினல் வெட்டித் துணித்து உறுதிப்படுத்திக் காய்ந்த மணலைச் சொரிந்து தீய்ப்பார்கள் என்று சொன்னீர் என்றவாறு.

காப்புக் கடைகழித்த காமக் கிழத்தியரைச்
சேப்ப வுலைகாய்ந்த திரளிருப்பு நீள்கழுவில்
பூப்பொருவு மல்கு லழலப் பொதுத்தேற்றிக்
கோப்பர் நெடுங்கால மெனவெடுத்துக் கூறினய். 52

இ - ள் : காவலிடத்தைக் கடந்த காமிகளாகிய கிழ்மைத்தனமுள்ள மாதரைச் சிவக்கும்படி தீயில் கலந்த திரண்டதாகிய நீண்ட கழுவில் பூவைப்போல மிருதுவாகிய அல்குல் வெதும்பத்தக்கதாகக் குத்தியேற்றி நெடுங்காலம் வைப்பார்களென்று சொன்னீர் என்றவாறு.

நம்பு கொழுநர் நிலையொருவு நங்கையர்தம்
செம்பொனக லல்குலின்வாய்ச் செம்புருக்கி விட்டதனல்
பம்பு புழுக்கலிப்ப நாய்தசையைப் பற்றியுண
வெம்பு பறவை விருந்தயர வோய்வரென்ருய். 53

இ - ள் : நம்பிய கணவரிடத்திலிருக்கும் நிலைமாறிய மாதர்களுடைய செம்பொன்னிறமுள்ள அல்குலில் செம்பினையுருக்கி விடுவதினல் நிறைவாகப் புழுக்களுண்டாகவும் நாயானது தசையைப் பிடுங்கியுண்ணவும் கொடிய பருந்து முதலிய பட்சிகள் விருந்துண்ணவும் அம்மாதர்கள் சேர்வார்கள் என்றீர் என்றவாறு.

கொண்டோற் பிழைத்த கொழுங்கயற்கண் மங்கையரைக்
கண்டோர் மனநடுங்கக் காரிருப்புத் தீயகலில்
விண்டே யுடலம் வெடிக்க வறுப்பரெனத்
தண்டேய் கரத்துத் தவமுனியே சாற்றினய். 54

இ - ள் : ஒருகையில் தண்டம் ஏந்திய தவமுனிவரே! கொண்டவனை விட்டு மற்றெருருவனைப் புணர்ந்த செழுமையான சேற்கெண்டையை ஒத்த கண்களையுடைய மாதர்களை, பார்த்தவர்கள் மனமும் நடுங்கும்படி தீயிற் காய்ந்த கருமையுள்ள இரும்புத் தகழியிலிட்டு உடல் வெடிக்கும்படி வறுப்பார்களென்று சொன்னீர் என்றவாறு.

நாயடியே னின்னவெலாங் கேட்டு நடுநடுங்கித்
தூய முனிவரனே துன்பக் கடல்வீழ்ந்தேன்
காயும் விடமனைய காமந் தலைக்கொள்ளச்
சேய பருவத்தே கற்பின் றிறம்பிழைத்தேன். 55

இ - ள் : பரிசுத்தராகிய முனிவரே! கொல்லும் விடத்தை யொத்த காமம் தலைக்கொள்ள இளமைப் பருவத்தில் கற்புநிலை கெட்டிருந்தேன்.

ஆதலால் நாயனேயேன் இவைகளையெல்லாங் கேட்டு நடுநடுங்கித் துக்க சாகரத்தில் முழுகினேன் என்றவாறு.

குலமகளிர்க் கேலாத கொள்கையை மேற்கொண்டே
நிலைமையில்லாத் தீப்பெண்டீர் நிற்கு நிலைநின்றேன்
கலனிழந்து மூப்பெய்து காறுமி யான்செய்த
பவவினையின் பாதகத்தைப் பாரி லெவர்செய்தார். 56

இ-ள்: குலமாதர்களுக்குத் தகாத செய்கையை மேற்கொண்டு கற்பு நிலையில்லாத கொடிய மாதர்களிருக்கும் நிலைமையிலிருக்கிறேன். மங்கல நாணிழந்து மூப்புவருமட்டும் நான் செய்த பாவம் உலகத்தில் ஒருவரும் செய்திரார்கள் என்றவாறு.

ஆதலா லீண்டெனக்குச் சாக்காடு மீண்ணியது
தீதிலா வேதிய நீ செப்பியகா தைப்படியே
கோதிஞ லாயபுழுக் கும்பியிடை வீழ்வதுமெய்
ஈதிஞ லுள்ளமுடைந் தெண்ணுத தெண்ணுகின்றேன். 57

இ-ள்: ஆகையினல் இப்போது எனக்குச் சாக்காடும் சமீபித்திருக்கின்றது. தீமையில்லாத முனிவரே; நீர் சொல்லிய சிவகதையின்படி நான் செய்த பாவத்திஞல் புழுக்கள்நிறைந்த நரகத்தில்விழுவது மெய்யே. இதனல் மனம் உடைந்து எண்ணுததும் எண்ணுகின்றேன் என்றவாறு.

காய்ந்து நமன்றூதர் கனன்றுருத்துத் தண்டிக்கின்
ஆய்ந்ததவ மில்லேனை யஞ்சலைநீ யென்றுற்றி
வாய்ந்தநிர யத்தழலில் வாடாம ஞயடியேன்
ஒய்ந்தழுது மாழ்காம லார்வந் துதவுவார். 58

இ-ள்: காலதூதர்கள் கோபித்துத் தண்டித்தால் அப்போது நல்ல புண்ணியஞ்செய்யாத என்னை நீ பயப்படாதேயென்று ஆற்றிப் பொருந்திய நரகாக்கினியால் வருந்தாமலும் நாயடியேன் அழுது தளர்ந்து சோராமலும் யார் வந்து உதவிசெய்வார்கள் என்றவாறு.

என்று பலபலவும் பன்னி யிடருழந்து
நின்று மறைமுதல்வ நீயே புரத்தியெனச்
சென்று நடுநடுங்கிச் சேவடியில் வீழ்ந்திறைஞ்சிக்
கன்று மனத்தாள் கலுழ்ந்துரைப்ப வேதியனும். 59

இ-ள்: இவ்வாறு பல மொழிகள் சொல்லித் துன்புற்று அவர் எதிரில்நின்று, முனிவரே! அடியேனைத் தேவரீரே காப்பாற்றுமென்று நடுநடுங்கிச் சமீபத்திற்போய் அவர் பாதத்தில்விழுந்து பணிந்து வெம்புகின்ற மனத்தையுடையவளாய் அழுது சொல்ல அம்முனிவர் என்றவாறு.

வீழ்ந்தவடன் கைப்பற்றி மெல்லவெடுத் தாயிழையே
ஆழ்ந்தபெரும் பாதகத்தி னச்ச மகன்றிடுவாய்
சூழ்ந்து புரிநினக்கே பின்னிரக்கந் தோன்றுதலால்
ஊழ்ந்த மலரெனவே தீவினைவிட் டோடுங்காண். 60

இ-ள்: பணிந்தவள் கையைப்பற்றி மெல்ல எடுத்து, மாதே! நீ மிருதியாகச்செய்த பாவத்துக்குப் பயப்படும் பயத்தை நீக்கிவிடு. ஆதியில் பாவங்களைச்செய்த உனக்கே இப்போது பயம் உண்டாயிருப்பதினால் பதந் தப்பிய பூப்போல உன் பாவமெல்லாம் உன்னைவிட்டு ஓடிப்போம் எ-று.

காரிகை நின்மூப்பாற் றவம்புரியக் காலமில்லை
மாரி யெனத்தானம் வழங்கப் பொருளின்றால்
சீரிய தாய்ப்பாவ மகற்றச் சிவகதையாப்
பேரியலொன் றுண்டதன்சீர் பேசக் கடைப்பிடியாய். 61

இ-ள்: மாதே நின்னுடைய மூப்பினால் தவஞ்செய்வதற்குக் காலமில்லை; மேலும் மழை பொழிவதுபோலத் தானம் கொடுப்பதற்குப் பொருளுமில்லை; ஆதலால் மகத்துவமுள்ளதாய் உன் பாவத்தைநீக்கச் சிவ கதையாகிய புராணமுண்டு அதன் பெருமையைச் சொல்லக்கேட்டு உன் மனத்தில் உறுதியாக வைத்துக்கொள் என்றவாறு.

யானென தென்றெண்ணி யிருவினையு மீட்டுவது
மானத மேயன்றி மடவரலே மற்றில்லை
ஆன மலமாயை யிருளுக்கு மஞ்ஞான
ஈன முறுபாவ விருளுக்கும் வெய்யவனாய். 62

இ-ள்: என்னுடைய பொருளென்றும் யான் செய்தேனென்றும் எண்ணி நல்வினை தீவினைகளைத் தேடிக்கொள்ளுவது மனத்தின் செயலே அன்றி வேறொன்றுமில்லை. அதற்கு ஏதுவாகிய ஆணவ மலமாயை என்கின்ற இருளுக்கும் அஞ்ஞானத்தாலாகிய கீழ்மையுற்ற பாவமென்னும் இருளுக்கும் அந்தச் சிவகதை சூரியன்போலாகும் என்றவாறு.

கொய்யுளை மாவேள்வி யொருகோடி செய்திடினும்
ஐய னதுகாதை யருள்பெறும்பே றீந்திடுமோ
பையு ளெலாந்தீர்க்கும் பரன்காதைத் தெள்ளமுதை
உய்யவினி தாயருந்தி யும்பர்வீ டெய்துதியால். 63

இ-ள்: கொய்யும்படியான கழுத்து மயிரினையுடைய அசுவமேத யாகம் ஒரு கோடிசெய்தாலும் அவைகளில் சிவசரித்திரம் அருளிச் செய்யப்பெறும் பேறுகளைக் கொடுக்குமோ? துன்பங்களையெல்லாம் நீக்கத் தக்க சிவகதையாகிய தெளிவுள்ள அமிர்தத்தை நீ உய்யும்படி இனிதாக உண்டு மேலான முத்தியை அடைவாயாக என்றவாறு.

முற்ருேகை யோடு விரதந் தவமுயலப்
பெற்ருேர் மனவிருளை நீக்கப் பெறலின்ருல்
சற்ருேதக் கேட்டவருஞ் சாரூப மாவரெனக்
கற்ருேர் புகழ்கதையாற் காலங் கழிப்பாயே. 64

இ - ள்: நிறைந்த மகிழ்வுடன் விரதங்கள் தவஞ்செய்யப் பெற்றவர்கள் மனவிருளை நீக்குந்தன்மை பெறுதலில்லை. சிவகதையில் கொஞ்சம் கேட்டவர்களும் சாரூபம் பெறுவார்களென்று கற்றவர்கள் சொல்லத்தக்க சிவகதையால் உன் காலத்தைக் கழிப்பாயாக என்றவாறு.

உண்டு தலைநாளிற் சாமளனென் ருேதுபெயர்
கொண்ட பெரும்பாவி யவன்வாணுள் குறுகியநாள்
அண்டர் பிரானுமம் புகன்றழியா வீடடைந்தான்
பண்டுபழங் காதைதனிற் கேட்டிலையோ பைந்தொடியே. 65

இ - ள்: சாமளனென்று சொல்லும் பெயர்பெற்ற பெரியபாதகன் முன்னொருவனுண்டு. அவன் மரணகாலத்தில் தேவர்பிராணுகிய பரமேசுவரனுடைய திருநாமங்களைச் சொல்லி அழியாத முத்தியையடைந்தான். மாதே! பழைய புராணவரலாற்றில் நீ முன் கேட்டதிலையோ என்றவாறு.

ஆங்கவனைப் போலுனக்குஞ் சாக்கா டணித்தான(து)
ஓங்கு சிவநாம நாவிஞ லுச்சரித்துப்
பாங்குபெரு காதைதனைக் கேட்கிற் பழவினையாம்
தீங்ககலு நீயுஞ் சிவபதத்திற் சேர்வாயே. 66

இ - ள்: அவனுக்கு வந்ததுபோல உனக்கும் மரணகாலம் வந்திருக்கின்றது. மேன்மை தங்கிய சிவநாமங்களை நாவிஞலுச்சரித்து நன்மை பெற்ற சிவகதையைக் கேட்பாயாகில் உன்பாவங்கள் நீங்கும்; நீயும் சிவபதஞ்சேர்குவாய் என்றவாறு.

பொய்யென்று கொள்ளா தரன்கதையிற் புந்திவைப்பார்
மெய்யென் றவனுமங் கேட்டு வியந்துரைப்பார்
வையம் புகழச் சிவபதத்தில் வாழ்ந்திருப்பர்
ஐயன் றிருவாணை சத்தியமீ தாமென்ருன். 67

இ - ள்: பொய்யென்றெண்ணுமல் சிவகதையை மனத்தில் நம்புகின்றவர்களும் மெய்யாகவே முத்திதரத்தக்க தென்று சிவநாமங்களைக் காதிஞல் கேட்டு மகிழ்ச்சியுடன் வாயிஞற் சொல்லுகின்றவர்களும் இவ்வுலகத்தார் புகழும்படி சிவபதத்தில் வாழ்வார்கள். அவனுணையிது உண்மையென்று கூறிஞர் என்றவாறு.

என்ன மறையோ னியம்புமது கேட்டுருகிக்
கன்னன்மொழி வஞ்சுஃாயுங் காவிவிழி நீர்ததும்ப
அன்ன வழியேநின் னடியனே னின்னருளால்
மன்னு பிறவியெனு மாக்கடலை நீந்தியே. 68

இ - ள்: இவ்வாறு முனிவர் கூறியதைக் கேட்டுக் கரும்பைப் போல இனிக்குஞ் சொல்லினையுடைய வஞ்சுளையானவள் நீலோற்பலம் போன்ற தன் கண்களில் நீர்ததும்ப நின்று, சுவாமிகளே! தேவர் கருணையினால் அடியேன் சிவகதை கேட்டும் சிவநாமங்களைக் கூறியும் என்னுடைய அளவற்ற பிறவிக்கடலைக் கடந்தேன் என்றவாறு.

சென்றே சிவபதத்திற் சேர்ந்திருக்கு மாறுகுணக்
குன்றே திருவுளத்தி லெண்ணிக் குறைமுடிய
இன்றே விளங்கு மிரவுத்திரியு முற்றுவித்து
நன்றே தருகாதை நாளு நவிலென்றாள். 69

இ - ள்: சிவபதத்தில் சென்று சேர்ந்திருக்கும்படி மலைபோல அசையா நிலைமைபெற்ற குணமுள்ள சுவாமி தேவரீர்! திருவுளத்திற்கருதி என்குறைதீர இப்போதே திட்சைசெய்து நன்மைதரும் சிவகதையை நாள்தோறும் கூறியருளுமென்றாள் என்றவாறு.

மாத வனுமன்பின் மனம்பொருந்தி வன்கரத்தால்
பூதி தனைவாங்கிப் புனிதமுற மெய்பூசிக்
காதினது மூலத்திற் கண்ணுதன்மூ லங்கொடுத்துத்
தீதில்கதை யோதியவள் சிந்தைதெளி வித்தானே. 70

இ - ள்: அந்த முனிவரானவர் அன்பில் மனம்வைத்துத் தம்முடைய திருக்கரத்தினால் திருநீறு எடுத்துப் பரிசுத்தமாகும்படி அவள் உடல் முழுவதிலும் பூசிக் காதுக்குள் திருவைந்தெழுத்தை உபதேசித்துக் குற்றமில்லாத சிவகதை சொல்லி அவள் மனம் தெளியச்செய்தார் எ - று.

சைவ நெறிபூண்ட தவக்கொடியு மக்கதையின்
மெய்யுணர்வின் சிந்தையவா நாடோறு மீதூர
மையம ருங்கண்டன் றிருத்தாள் வழிபடலால்
ஐவரையு மைவிடயத் தேகா தடக்கினாள். 71

இ - ள்: சைவநெறி பொருந்திய தவமுள்ள வஞ்சுளையானவள் அந்தச் சிவகதையில் உண்மையறிவுடன் மனத்திலுண்டான ஆசை நாளுக்குநாள் அதிகரிக்கக்கொண்டு காளகண்டத்தையுடைய பரமசிவன் திருவடிகளை ஆராதிப்பதினால் பஞ்சேந்திரியங்களை அவைகளுக்குரிய விடயங்களில் செல்லாதவண்ணம் அடக்கினாள் என்றவாறு.

பத்தி நெறிநின்று பல்விழைவு தான்றவிர்ந்து
முத்தி முனிவரர்போன் முப்போது நீர்மூழ்கிச்
சுத்த மரவுரியே தூசா மருங்குடுத்து
வித்தக னக்கமணி வெண்ணீ றினிதணிந்தாள். 72

இ-ள்: பத்தி நெறியில் நின்று பலவாகிய இச்சைகளை நீக்கி முத்தியடையும் முனிவர்கள்போல மூன்றுகாலத்திலும் நீராடிப் பரிசுத்தமுள்ள மரவுரியை ஆடையாக அரையிலுடுத்து உருத்திராக்கமும் திருநீறும் இனிமையாக அணிந்துகொண்டாள் என்றவாறு.

வேறு

கையார் மழுவெம் படையாய் சரணம் கருணைக் கடலே சரணம் சரணம்
பையா டரவத் தணியாய் சரணம் படர்செஞ் சடையாய் சரணஞ் சரணம்
மையார் கலிவெந் திறநொந் திடவான் மழைமஞ் செனவே வருநஞ் சயிலும்
ஐயா சரணம் சரண மெனையா ளமலா விமலா சரணஞ் சரணம். 73

இ-ள்: திருக்கரத்திலமைந்த மழுவாளனே சரணம் சரணம்: கருணைக் கடலானவனே சரணம் சரணம்: படங்களையுடைய சர்ப்பாபரணங்களை அணிந்தவனே சரணம்: பரந்த செஞ்சடைக்கடவுளே சரணம் சரணம்: கருங்கடல் வற்றவும் தேவர் வருந்தவும் மேகம்போலேவந்த விடமுண்ட ஐயனே சரணம் சரணம்: அடியேனை ஆட்கொண்ட நிமலனே விமலனே சரணம் சரணம் என்றவாறு.

தொத்தா ரிதழித் தொடையாய் சரணம் சுருதிப் பொருளே சரணம் சரணம்
சத்தா கியசிற் குணனே சரணம் சமனுக் கொருவெஞ் சமனே சரணம்
முத்தா ரிளவெண் ணகையம் பிகைதன் முறுகுந் தவசிந் தனைகண் டருளும்
அத்தா சரணஞ் சரண மெனையா ளமலா விமலா சரணம் சரணம். 74

இ-ள்: கொத்தாகப்பொருந்திய கொன்றைமாலை அணிந்த சடாமகுடக் கடவுளே சரணம் சரணம். சத்தாயிருக்கும் ஞானகுணமூர்த்தியே சரணம். காலனுக்குக் காலனாகிய ஐயனே சரணம். முத்துக்கள்போன்ற வெண்ணகையுள்ள பார்வதி தேவியாருடைய உறுதியான தவசிந்தையைக் கண்டருளிய அத்தனே சரணம் சரணம், அடியேனை ஆட்கொண்ட அமலனே விமலனே சரணம் சரணம் என்றவாறு.

கமலா லயனுக் கருள்வோய் சரணங் கயிலைக் கிரியாய் சரணஞ் சரணம்
நிமலா கமதற் பரனே சரணம் நெடுமா லறியாய் சரணஞ் சரணம் [கொண்
சமரா டினர்முப் புரமுங் கடிதிற் றழன்மண் டிடவெண் ணகைவெங் கனல்
டமரா டியவா சரண மெனையா ளமலா விமலா சரணஞ் சரணம். 75

இ - ள் : பிரமதேவனுக்குப் படைப்புத்தொழில் அருள்செய்தவனே சரணம். கயிலாசநாதனே சரணஞ்சரணம். நிர்மல ஆகமங்கள் அருளிய நாதனே சரணம் சரணம். மாயவனும் காணவொண்ணாதவனே சரணம் சரணம். தேவர்களுடன் போர் செய்துகொண்டிருந்த முப்புரங்களும் விரைவில் தீ பொருந்துமாறு வெண்ணகைத் தீயினால் போர்செய்த புராந்தகனே சரணம். அடியேனை ஆட்கொண்ட அமலனே விமலனே சரணஞ் சரணம் என்றவாறு.

வேறு

என்று பலவு மேத்தி யிலங்கிழையாள்
தொண்டு படுசைவத் துறையின் முறைபேணி
நின்று சிவகதையா நிகரில்லாத் தெள்ளமுதம்
ஒன்று படச்செவியா லுண்டுசில நாட்கழித்தாள். 76

இ - ள் : வஞ்சுளையானவள் இவ்வாறு பலவகையாகத் தோத்திரம் செய்து பழமையாகிய சைவநெறியில் நின்று சிவகதையாகிய நிகரில்லாத தெளிவுள்ள அமிர்தத்தை மனம் ஒருவழிப்படச் செவியாலுண்டு பலநாள் கழித்தாள் என்றவாறு.

ஊழின் முறையா லுறுதவத்தாள் பொன்றுதலும்
தாழுஞ் சடையான் றருகணங்கள் வந்தெய்தி
வீழுங் கனக விமான மிசையேற்றி
வாழுஞ் சிவபதத்தில் வஞ்சுளையைக் கொண்டடைந்தார். 77

இ - ள் : உடல்விட்டு நீங்கும் ஊழ்வந்தடுத்துக்கொள்ளவே தவ நெறியுள்ள வஞ்சுளையானவள் மரணமடைந்தபோது தாழ்ந்த சடையுள்ள பரமசிவன் கட்டளையிட்டருளச் சிவகணங்கள்வந்து விரும்பத்தக்க சுவர்ண விமானத்திலேற்றி அழியாமல் வாழ்ந்துகொண்டிருக்கத்தக்க சிவலோகத்தில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள் என்றவாறு.

மூன்று சுடரு மழுங்க முதிரொளியால்
ஆன்ற சிவலோகத் தவிர்கனக மண்டபத்தில்
ஏன்றயன்மால் விண்ணோ ரிருபாலு நின்றேத்த
ஊன்றுமணிக் கோல்பிடித்து நந்தியொரு பாலுலவ. 78

இ - ள் : சூரியன், சந்திரன், அங்கி என்னும் முச்சுடர்களும் மிகுந்த ஒளியினால் மழுங்கும்படி விளங்கும் சிவலோகத்திலிருக்கும் பொன் மண்டபத்தில் பிரமனும், மாயவனும், விண்ணவர்களும் இருபக்கத்திலும் நின்று துதிக்கவும் ஊன்றும் வெள்ளிப்பிரம்பு பிடித்த வண்ணமாக நந்திதேவர் ஒருபுறத்தில் உலாவவும் என்றவாறு.

தக்கன் தலையரிந்த வீரனொரு சாரனுகத்
தொக்ககண நாதரெல்லா மெம்மருங்குஞ் சூழ்போத
முக்கணுறு மைந்து முகமுன்னே னினிதமர்ந்த
மிக்க திருச்சபையின் மெல்லியலைத் தான்விடுத்தார். 79

இ - ள் : தக்கனுடைய தலையையரிந்த வீரபத்திரர் ஒருபுறத்தில் வந்திருக்கவும் மிகுந்த கணநாதர்கள் எந்தப்பக்கத்திலும் சூழ்ந்திருக்கவும் முக்கண்கள் பொருந்திய ஐந்து திருமுகங்களையுடைய பரமசிவன் இனிதாக வீற்றிருக்கும் திருச்சபையில் வஞ்சுளையைக் கொண்டுபோய் விட்டார்கள் என்றவாறு.

அன்ன வளுமீச னடித்தா மரைபரவி
என்ன தவப்பயனிங் கெய்தியதென் றேம்பலுற்றுக்
கன்னன்மொழி மாதுமையைக் கண்ணுதலை யுங்கண்டு
துன்னிய வாநந்த வாரிச் சுழிப்பட்டாள். 80

இ - ள் : அந்த வஞ்சுளையானவள் பரமேசுவரனுடைய திருவடித் தாமரை மலர்களைத் துதித்து எத்தன்மையான தவப்பயன் நம்மை இந்த இடத்திற்குக்கொண்டுவந்ததென்று மகிழ்வடைந்து கரும்பின் இனிமை போன்ற மொழியையுடைய பார்வதி தேவியாரையும் பரமேசுவரனையும் பலமுறை பார்த்து நீங்காத ஆநந்த வெள்ளச் சுழியில் அகப்பட்டுக் கொண்டாள் என்றவாறு.

காவ லவுணர் கட்டறுத்த கண்ணுதலோன்
பாவை மதிமுகத்தை யன்பினெடு பார்த்தருளிப்
பூவை யிமையப் பொலங்கொடிக்கு நாடோறும்
ஏவல் புரிதி யெனப்பணித்தா னின்னுரையால். 81

இ - ள் : காவலையுடைய அவுணர்கள் முப்புரத்தைக் கட்டழித்த பரமசிவன் வஞ்சுளையின் சந்திரன் போன்ற முகத்தைக் கருணையுடன் பார்த்தருளி மலையரையன் புத்திரியாகிய உமாதேவிக்குத் தினந்தோறும் பணிவிடை செய்துகொண்டிருவென்று இன்சொல்லாற் கட்டளையிட்டு அருளினர் என்றவாறு.

ஆரணங்கு போல்வா ளரன்பணிப்ப வெற்புதவும்
காரணிக்கங் கேவல் புரிந்தொழுகுங் காலத்தில்
நாரணனு நான்முகனு மேத்து நவையில்லாப்
பூரணியே கேட்டியெனப் போற்றிப் பணிந்துரைத்தாள். 82

இ-ள் : தெய்வப் பெண்ணையொத்த வஞ்சுளையானவள் பரமசிவன் கட்டளையிட்டருளியபடி பர்வத அரசன் பெற்ற எல்லாவுலகங்கட்கும்

காரணமாகிய பரமேசுவரிக்குப் பணிவிடை செய்துகொண்டிருக்குங் காலத்தில், வஞ்சுளையானவள் உமையவளைப் பார்த்து, பிரமனும் திருமாலும் போற்றி செய்கின்ற பூரணியேயென்று துதி செய்து அடியேன் சொல்லும் விண்ணப்பத்தைக் கேட்டருள வேண்டுமென்று பணிந்து சொன்னாள் என்றவாறு.

பாதவஞ்சூழ் சாரற் பனிவரையின் பாங்கர்தொறும்
ஏதமின்றிப் பன்னா ளிருந்து தவம்புரிந்த
மாதவத்தி னோர்க்கும் வழங்காப் பெரும்பதவி
போதமிலேற் கின்றருளா லீந்த புராதனியே. 83

இ - ள்: பலவகை மரங்கள் சூழ்ந்திருக்கும் பனிமூடிய மலைச்சாரல்களிளெல்லாம் குற்றமில்லாமல் பலநாளிருந்து மகத்தாகிய தவங்கள் செய்த முனிவர்களுக்குங் கொடாத பெரிய பதவியை ஞானமில்லாத எனக்குக் கருணையினால் அருளிச்செய்த புராதனியே என்றவாறு.

யானிப் பதத்தி லினிதிருக்க வென்கணவன்
தானெப் பரிசினனா யெவ்விடத்திற் சார்ந்தானோ
பானற் கருணை விழிப் பைந்தொடியே கூறுகென
நானக் குழலுமையாள் சற்றேநகைத் துரைத்தாள். 84

இ - ள்: அடியேன் இந்தப் பதவியிலிருக்க என் கணவன் எத்தன்மையுடையவனாய் எவ்விடத்திலிருக்கின்றானோ? நீலோற்பல மலர் போன்ற கருணை நோக்கத்தையுடைய தாயே! சொல்லியருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தவளவில், மயிர்ச்சாந்து கமழும் அளகத்தையுடைய உமாதேவியார் புன்னகையுடன் சொல்கின்றார் என்றவாறு.

சந்தார் களபமுலைத் தார்க்குழலே நின்கணவன்
சிந்தா குலமயலாற் றீவினையைச் செய்திறந்து
நந்தாத தீவாய் நரகனைத்துஞ் சேர்ந்தேறி
விந்தா டவியி லலகையாய் மேவிநின்றான். 85

இ - ள்: சந்தனக் குழம்பணிந்த தனங்களையும் பூமாலை அணிந்த அளகத்தையுமுடையவளே! உன்கணவன் மன வியாகுலம் உண்டாக்கத்தக்க விரகத்தினால் பாவங்களையே செய்துகொண்டிருந்து பின்பு இறந்து ஒருக்காலுங் கெடாத அக்கினிமயமாகிய நரகங்களிளெல்லாஞ் சேர்ந்து அவைகளை விட்டேறி விந்தாடவி யென்னும் காட்டில் பேயிருக்கிறான் என்றவாறு.

வேறு

என்று முன்ன மடவா ளிமவான் மகளைத் தொழுதே
அன்னே வன்னே நின்னு லடியே னிவ்வா றெழுக
முன்னே யெனையாள் கணவன் பேயாய் முட்கா னகத்தில்
பொன்னே யனையாய் திரித றகவோ வென்னப் புகன்றாள். 86

இ - ள்: இவ்வாறு சொல்வதற்கு முன் வஞ்சுளையானவள் பார்வதியைத் தொழுது, பொன்போல யாவருக்குங் கிடைப்பதற்கரிய தாயே! உன்னருளால் அடியேன் இவ்வாறிருப்ப, முன்னம் எனையாண்ட கணவன் முட்களையுடைய வனத்தில் திரிவது தகுதியோவென்று சொன்னாள் என்றவாறு.

கல்லார் மணிப்பூ ணுமையாள் கருணை கெழும நோக்கி
எல்லாத் துயர முழுது மொழிவா யொழிவா யென்றே
நல்லா யுனது கணவ னண்ணு மலகை யுருவும்
பொல்லா வினையுங் கழித்துப் புகுதப் புரப்பன் காண்டி. 87

இ - ள்: இரத்தினாபரணங்களணிந்து கொண்டிருக்கும் பார்வதி தேவியார் வஞ்சுளையைக் கருணைபொருந்தப் பார்த்து, உன் கணவன் இப்போது அடைந்திருக்கிற பேயுருவத்தையும் பொல்லாத பாவங்களையும் போக்கி இவ்விடத்திற்கு வர என்றால் காப்பாற்றப்படுவான். ஆகையால் நீ துயரங்களையெல்லாம் விடுவாயாக என்றவாறு.

வாசங் கமழும் குழலாய் மகிணன் பாஙுநீ போகென்(று)
ஈசன் றேவி பின்னு மியறோர் வீணைக் கிழவன்
ஆசொன் றில்லா விஞ்சை யறிதும் புருவை யழையா
நீசென் றிவளோ டந்த நெடுங்கா னகத்தைச் சேர்ந்தே. 88

இ - ள்: வாசனை கமழ்ந்துகொண்டிருக்கும் அளகத்தையுடையவளே! உன் கணவனிடத்துக்கு நீ போகென்றருளிச்செய்து, பின்னும் பார்வதி தேவியார் இசையின் கிரமத்தை அறிந்த வீணைக்குரியவராகிய குற்றமற்ற கலையுணர்ந்த தும்புரு என்னும் முனிவரை அழைத்து, நீ இவளுடன் சென்று அந்தப் பெரிய காட்டிற்சேர்ந்து என்றவாறு.

சந்த மறையின் றலைவ னிசையை யிசையாற் சாற்றி
இந்த மடவாள் கணவ னிருங்கா னகத்திற் பேயாய்ப்
பந்த வினையா லுழலும் பாவ வுருவ நீக்கி
நந்த முலகிற் கொடுவா வென்று நங்கை நவின்றாள். 89

இ - ள்: பரமசிவனுடைய புகழை இசையினாற்பாடி இவள் கணவன் அந்தப்பெரிய காட்டிற்போய்ப் பந்தப்பட்ட முன்வினையினாலுழலும் பாவ

உருவத்தை நீக்கி நம்முடைய உலகத்திற் கொண்டுவாவென்று பார்வதி தேவியார் கூறியருளினர் என்றவாறு.

நன்னித் திலத்தின் வாண்முறுவ னங்கை நவின்ற பணியை
முன்னித் தலைமேற் கொண்டே முகமன் கூறி யிறைஞ்சி
மின்னிற் றிகழு மணிதோய் விமான மீதி னேறிப்
பொன்னிற் பொலியு மேனிப் பூவை யோடும் போனன். 90

இ - ள்: நல்ல முத்துக்களைப்போன்ற தந்தங்களையுடைய பார்வதி தேவியாரிட்ட கட்டளையை (நமக்கு இந்தப் பேறு கிடைத்தது என)த் தம் மனத்தில் எண்ணித் தலைமையாகக்கொண்டு உபசார உரைகள் கூறிப் பணிந்து மின்னலைப்போற் பிரகாசியாநின்ற ரத்தினங்கள் பொருந்திய விமானத்தில் வஞ்சுளை என்பவளை ஏற்றித் தாமும் ஏறிக்கொண்டு தும்புருமுனிவர் போனர் என்றவாறு.

பொன்னிறம் பொலியுமேனிப் பூவை - பொன்போல விளங்குந் திவ்விய தேகம் பெற்ற நாகணவாய்ப் பறவைபோலப் பேசுபவள்.

சிந்தைக் கிணையாய்ப் படரும் விமானஞ் செலுத்திச் சென்றான்
விந்தத் தடவி நடுவ ணடைந்தா னடைந்த வேலைப்
பந்தப் படுதீ வினையிற் பேயாய்ப் படர்நஞ் சுருவோன்
இந்துப் பிளவின் றுணைபோ லிணைகொண் டிலகு மெயிற்றேன். 91

இ - ள்: மனோவேகம்போற் செல்லும் விமானத்தைச் செலுத்திக் கொண்டுபோய் விந்தாடவியினடுவில் அடைந்தார். அடைந்தவளவில் பந்தமாகிய பாவத்தினல் பேயாய்த் திரிந்துகொண்டிருக்கிற விடம் போன்ற கொடியதாகிய உருவத்தையும் இருபிறை போன்ற இரண்டு கோர தந்தங்களையு முடையவனாய் என்றவாறு.

தீயைப் பொருவுங் கண்ணன் சினங்கொண் டுரறி யழுவன்
வாயைப் பிளப்ப னகைப்பன் மலையைக் கடந்து மறிவன்
வேயைக் கரும்பிற் கறிப்பன் விழுவ னெழுவன் றனது
காயத் திடையே புடைப்பன் கதறிக் கறங்கிற் சுழல்வன். 92

இ - ள்: தீயொத்த சிவந்த கண்களையுடையவனும், தனக்குத் தானே கோபங்கொண்டு சீறி அழுகின்றவனும், வாயை ஆவென்று திறப்பவனும், நகைப்பவனும், மலையைத் தாண்டி விழுகின்றவனும், மூங்கில் களைக் கரும்புபோற் கடிப்பவனும், விழுந்து விழுந்து எழுகின்றவனும், தன் உடலிலடித்துக் கொள்கின்றவனும், கதறிக்கொண்டு காற்றாடிபோற் சுழல்கின்றவனுமாயிருக்கின்றான் என்றவாறு.

அன்னோன் றன்னை நோக்கி யந்தோ வந்தோ விவன்றான்
முன்னாண் முயன்ற வினையான் முடிந்த வினைக ளெல்லாம்
பொன்னே காண்டி யென்னப் புகன்று பாசம் வீசப்
பின்னா லவனைப் பிணித்துப் பேய்வல் லுருவந் தீர்ப்பான். 93

இ - ள்: இவ்வாறிருப்பவனைப் பார்த்து ஐயோ இவன் பண்டு செய்த வினைப்பயத்தினால் நேரிட்ட செய்கையையெல்லாம் வஞ்சுளையே! பாரென்றுசொல்லிப் பாசத்தை வீசிப் பின்னாகக் கட்டி வலிய பேயுருவந் தீர்க்க எண்ணினான் என்றவாறு.

வலத்திற் பேர்யாழ் வாங்கி வலித்து நரம்பை வீக்கிப்
புலத்தோ டமைந்த தவத்தோர் புகழ்தும் புருமா முனிவன்
குலத்தோ டிறப்பும் பிறப்பு மில்லாக் குழகன் புகழைத்
தலத்தோர் வானோர் வியப்பச் சதியிற் பாடா நின்றான். 94

இ - ள்: வலப்புறத்தில் பேரியாழையெடுத்து நரம்பினை வலித்துக் கட்டி ஞானத்துடன் பொருந்திய தவசீலராகிய புகழ்பெற்ற தும்புரு முனிவர் குலமும் பிறப்பும் இறப்புமில்லாத பரமேசுவரனுடைய புகழைப் பூலோகத்தாரும் அதிசயிக்கும் தாளக்கிரமத்துடன் பாடுகின்றார் எ - று.

வேறு

நஞ்ச மிருக்கு மணிமிடற்றோய் நெடுமால் சாத்து நயனமலர்க்
கஞ்ச மிருக்கும் பதயுகத்தோ யடிய ரிதயக் கடிக்கமலத்(து)
அஞ்ச மிருக்கு மொருபுறத்தோ யமுதமதியி னலர்கிரணப்
புஞ்ச மிருக்குந் திருச்சடையோய் கயிலைவாழும் புகழோனே. 95

இ - ள்: விடம் பொருந்தியிருக்கும் காளகண்டமூர்த்தியே, மாயவன் சாத்திய கண்ணாகிய தாமரை மலரிருக்கும் பதயுகளமூர்த்தியே, அடியார்கள் இதயதாமரையில் விற்றிருக்கின்ற அன்னம்போன்ற பார்வதி தேவியார் அமர்ந்திருக்கும் இடப்பாகத்தையுடைய கடவுளே, அமுதம் நிறைந்துள்ள பிறையினது விளங்கும் கிரணக்கூட்டம் இருக்கும் செஞ்சடையையுடைய நாதனே, கயிலாயகிரியில் விற்றிருக்கும் புகழோனே என்றவாறு.

மூரி யிருக்குந் துவசத்தோய் முனியா தன்பர்க் கருளவருள்
மாரி யிருக்கும் விழிக்கடையோய் மதுவா றொழுகு மலரிதழி
வேரி யிருக்குஞ் சடைமுடியோய் வெகுண்ட மறலி யுரங்குதித்த
சோரி யிருக்குங் குரைகழலோய் கயிலை வாழுந் தொல்லோனே. 96

இ - ள்: இடபம்பொருந்திய கொடியுள்ளவனே, முனியாமல் அடியார்க்கு அருள்செய்யும்பொருட்டு அருள்மழை நிறைந்திருக்கும் கடைக்

கண்ணுளனே, தேன் ஆறுபோலப் பெருகும் கொன்றை மலர்மாலையின் மணம்தங்கிய சடைமுடியோனே, கோபம்கொண்டு வந்த நமனை உதைத்த காலத்தில் அவன் மார்பிலிருந்து உண்டாகிய உதிரமிருக்கும் வீர கண்டையை அணிந்த திருவடியையுடையவனே, கயிலாசகிரியில் வீற்றிருக்கும் புராதனனே என்றவாறு.

வேத மிருக்குங் கபாலத்தோய் விழையு மிடையர் மகளிர் நவ
நீத மிருக்குஞ் சாயகத்தோ யிமவான் பயந்த நேரிழைதன்
பாத மிருக்கும் புரிசடையோய் பதங்கூர் சுருதி வியாகரண
நாத மிருக்கும் பரிபுரத்தோய் கயிலை வாழும் நம்பரனே. 97

இ - ள்: வேதங்கள் பொருந்திய கபாலத்தையுடையவனே, ஆய்ச்சியர் எடுக்கும் வெண்ணெயுண்ட மாயவனாகிய அம்புடையவனே, மலையரையன் புத்திரியாகிய பார்வதியார் திருவடி தங்கிய திருமுடியாளனே, பதக்கிரமங்களையுடைய வேத வியாகரண நாதம் நிறைந்துள்ள சிலம்பணிந்தவனே, கயிலாயகிரியில் வாழும் நம்பனே என்றவாறு.

தேயா திருக்கு மொருசுடரே தேவ ரேத்து முழுமுதலே
தாயா யுலக முழுதீன்று புரந்து துடைக்குந் தகவோனே
வாயான் மறையோ னுரைத்தருணின் சரிதை கேட்ட மடவரற்காம்
பேயாய் விந்தத் தடைந்தோனை புரவா திருந்தாற் பிழையுண்டோ. 98

இ - ள்: குறையாமலெந்நாளும் ஒரே தன்மையாயிருக்கும் ஒப்பற்ற சோதிவடிவமே, தேவர்கள் துதிக்கும் பரிபூரண காரணனே, தாயாகி உலக முழுவதையும் தந்து காத்து சங்கரிக்குந் தகுதியையுடையவனே, ஒரு பிராமணன் தன் வாக்கினால் சொல்லிய உன் சரிதத்தைக்கேட்ட இம் மாதின்பொருட்டு விந்தாடவியிற் பேயாய்த்திரியுமிவனைக் காவாமலிருந்தால் உனக்குக் குற்றம் சம்பவிக்குமோ என்றவாறு.

என்றுங் கிசையா னேத்துதலு மீசன் புகழான் மனநெகிழ்ந்து
நின்று னுள்ளந் தேறுரைக்க நீத்தந் தெளிவ தெனத்தெளிந்து
முன்றான் புரிந்த தீவினைகண் முழுதுநினைந்து மிகவெருவித்
தன்றாழ் வுரையாழ்த் தும்புருவுங் கேட்க விதனைச் சாற்றினான். 99

இ - ள்: இவ்வாறு யாழிசையால் துதிசெய்தவளவில் பரமசிவன் புகழினால் மனநெகிழ்ந்து நின்றவனுள்ளமானது தேற்றுங்கொட்டையை உரைத்தமாத்திரத்தில் நீர் தெளிவதுபோலத் தெளிந்து முன் தான்செய்த பாவங்களையெல்லாம் நினைந்து மிகுதியாகப் பயந்து யாழ் வாசிக்கும் தும்புருவும் தன் இனிய சொல்லைக்கேட்கச் சொல்லுகின்றான் என்றவாறு.

உமையா னெதிர்ந்த திறத்தானு மரவோ னிசைகேட் டதனுலும்
அமையா திழைத்த பாவமெல்லா மகற்றித் துயரக் கடல்கடந்தே
இமையா முக்கட் செழுங்கனியை யிமைய மயிலோ டேத்துகின்றேன்
கமையா லுயர்ந்தோ யெனவுரைத்துக் கயிலை நாதற் பாடினன். 100

இ - ள்: உம்மை நான் தரிசித்த தன்மையினுலும் பரமசிவனுடைய புகழைக் கேட்டதினுலும் மிகுதியாக நான்செய்த பாவமெல்லாம் நீங்கித் துன்பக்கடலையுங் கடந்தேன். இமையாத முக்கணுடைய செழுமையுள்ள கனியாகிய பரமசிவனையும் உமாதேவியையும் துதிசெய்கின்றேன். நோன்பினுலுயர்ந்த முனிவரேயென்று சொல்லிக் கயிலாயநாதனைப் பாடினன் என்றவாறு.

செக்கச் சிவந்த செழும்பாகே தேனே பாலே தெள்ளமுதே
முக்கட் கரும்பே யைந்துமுகக் கனியே வேத முழுமுத்தே
மிக்க தருமம் பகர்காதை கேட்ட வெனது விளங்கிழைக்காத்
துக்கத் துழல்வேன் றனைப்புரவா திருந்தா லுனக்குத் துகளுண்டோ.

இ - ள்: செக்கச் சிவந்ததாய்ச் செழுமையுள்ள வெல்லப்பாகே, தேனே, பாலே, தெளிவுள்ள அமுதே, முக்கண்ணுள்ள கரும்பே, ஐந்து திருமுகங்களையுடைய கனியே, வேதத்தின் முழுமுதலே, மிகுந்த சிவதரும சரித்திரத்தைக் கேட்ட என் மனைவியின்பொருட்டுத் துக்கத்திலுழலுகின்ற என்னைக் காவாதிருந்தால் உனக்குக் குற்றமுண்டோ என்றவாறு.

பச்சை வல்லி படர்ந்தேறும் பவளக் குன்றே பழமறையின்
உச்சி மிசைவே ரோட்டியென்னு மலவாச் சாகை யொருதருவே
விச்சை மறையோ னின்கதையை விளம்பக் கேட்ட மெல்லியற்காக்
கொச்சை யலகை யானேனை யாளா தொழிந்தாற் குறையுண்டோ. 102

இ - ள்: பச்சைக்கொடி படர்ந்தேறும் பவளமலையே, பழமையாகிய வேதங்களினுச்சியில் வேர்விட்டு எக்காலமுங்கெடாத சாகைகளையுடைய ஒப்பற்றதருவே, ஞானவானுகிய பிராமணன் சொல்லிய உன் சரித்திரத்தைக்கேட்ட என் மனைவியின் பொருட்டு அறிவில் இளைத்த பேயாயிருந்த என்னை யாட்கொள்ளாவிட்டால் உனக்குக் குறையுண்டோ என்றவாறு.

அன்ன மேன மாலயனு மடியு முடியு மடியிணையும்
முன்னி யறிதற் கரிதாய பொருளே மூவர் முழுமுதலே
பன்னு மறையோ னின்சரிதம் பகரக் கேட்ட பார்ப்பனிக்கா
மன்னு மலகை யானேனை யாளா தொழிந்தால் வகையுண்டோ. 103

இ - ள்: பிரமன் அன்னமாகித் திருமுடியைத் தேடியும் திருமால் பன்றியாகித் திருவடிகளைத் தேடியுங் காணுதற் கரியதாயிருந்த பொருளே, மூப்பில்லாத முழுமுதலே, வேதங்களோதியுணர்ந்த பிராமணன் சொல்லிய

உன் சரித்திரத்தைச் சொல்லக்கேட்ட பிராமணத்திக்காகப் பொருந்திய பேயாகிய என்னையாளாதிருந்தால் உனக்கு வசையுண்டோ என்றவாறு.

என்ருன் மகிழ்ந்தா னதிசயித்தா னின்புற் றங்க மயிர்சிலிர்ப்ப
நின்ருன் மலர்க்க ணனந்த நீரா லகல நிறைத்தயர்ந்தான்
கன்ரு வென்ன வுளஞ்சிறந்தான் களித்தான் பாடி யாடினுன்
பொன்ரு வாழ்வு வந்தளித்தா னெங்கோ னென்னப் புலம்பினுன். 104

இ - ள்: என்று துதிசெய்து மகிழ்ச்சியும் ஆச்சரியமும் கொண்டு இன்பமுற்று ரோமங்கள் சிலிர்ப்பநின்று தாமரைமலர் போன்ற கண்களில் ஆனந்தவெள்ளம் பெருகப் பரவசத்தனுகிக் கன்றினையுடைய பசுவைப் போல உள்ளங்கசிந்து களித்தவனுகிப் பாடியாடினுன். கெடாத நித்திய வாழ்வை யெம்மிறைவன் கருணைசெய்தானென்று புலம்பினுன் எ - று.

இந்தப் படியோ ரேழுதின மிறைவன் றிருத்தாள் புகழ்ந்தேத்தி
முந்தை யலகை யுருநீங்கி முயலா தமர ருருக்கொண்டு
புந்தி மகிழ்ந்து சித்திநிலை பொருந்தி விமானம் புகுந்தேறிச்
சந்த முலையா ளடிபரவச் சிவனுர் பதத்தைச் சார்ந்தானே. 105

இ - ள்: இவ்வாறு ஏழுநாள் பரமேசுவரனுடைய திருவடிகளைப் புகழ்ந்து துதிசெய்து முன்னிருந்த பேயுருவம் நீங்கி ஒரு முயற்சியுமில்லாமல் தேவவுருவம் பெற்று மனமகிழ்ந்து சித்திநிலை பொருந்தி விமானத்தில் ஏறித் தன்மனைவி யடிபரவச் சிவபதத்தைச் சார்ந்தான் என்றவாறு.

சென்ருர் மீளாப் பெரும்பதத்தைச் சேர்ந்து சிவனு மிடப்பாகத்(து)
ஒன்ரு நின்ற பெண்ணணங்கு முவப்பக் கணங்கள் பணிகேட்ப
மின்ருழ் வயிரங் குயின்றசெம்பொன் விமானம் விளங்க வீற்றிருந்து
துன்ரு நின்ற சிவபோகந் துய்த்துத் தணவா திருந்தாரே. 106

இ - ள்: இவ்வாறு சென்றவர்கள் மீளாத பெரும் பதவியைச் சேர்ந்து பரமசிவனும் இடப்பாகத்திலிருக்கும் பார்வதிதேவியாரும் மகிழவும் சிவகணங்கள் ஏவல்செய்யவும் ஒளிதங்கிய வயிரங்கள் பதிக்கப்பட்ட செம்பொன் விமானத்தில் விளங்கும்படி வீற்றிருந்து அழியாத சிவபோகத்தை அனுபவித்துக்கொண்டு நீங்காமலிருந்தார்கள் என்றவாறு.

வேறு

ஆதலால் பரமன் சரிதமே கேட்க வழிவிலாப் பெரும்பதம் வேட்டோர்
ஈதலால் வேறு பெருந்தவ முண்டோ வியம்புதற் கிம்பரி லென்னுச்
சூதமா முனிவன் வியந்தினி துரைத்தான் சுருதிமா முனிவரர் கேட்டுக்
காதலா லுருகி யரகர வென்னுக் கரங்கடஞ் சென்னியிற் குவித்தார். 107

இ - ள் : ஆகையால் அழிவில்லாத பெரும்பதவியை விரும்பின வர்கள் பரமசிவன் சரிதையே கேட்கக்கடவர்கள்; இவ்வுலகத்தில் இதை யன்றிச் சொல்வதற்கு வேறு தவமுண்டோவென்று சூதமுனிவர் மகிழ் வுடன் சொன்னார். வேதமுணர்ந்த நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர் கள் கேட்டு அன்பினால் மனமுருகி அரகரவென்று சொல்லித் தங்க ளுடைய கைகளைச் சிரசின்மேல் குவித்துவைத்துக்கொண்டு தொழு தார்கள் என்றவாறு.

தேவர்தம் பெருமான் சிறந்தவஞ் செழுத்தின் சீர்புகழ் மாக்கதை முதலாப்
பாவநின் றகற்றும் புராண நூல் கேட்போர் பலன்பெறன் மொழிகதை யீரு
மேவரப் புகன்ற சிவகதை முழுதும் விழைவுடன் கேட்குந ரவர்தாம்
யாவர்மற் றேனு மாயவன் முதலோ ரெய்தருஞ் சிவபத மடைவார். 108

இ - ள் : தேவர் பெருமானாகிய பரமசிவனுடைய சிறந்த திருவைந் தெழுத்தின் மகிமையைப் புகழாநின்ற சரிதமுதலாகச் சிவபுராணங்களைக் கேட்பவர்கள் பலன்பெறுதலைச் சொல்லுகின்ற சரித்திரம் அந்தமாக விருப்பமுறச் சொல்லிய சிவசரிதமுழுதுங் கேட்பவர்கள் எவர்களேயாயினு லும் அரிபிரமாதிகள் அடைவதற்கரிய சிவபதம் அடைவார்கள் எ - று.

ஞால மோங்குக நான்மறை நீடுக
சீல மன்னவர் செங்கோல் விளங்குக
கால மாமழை மன்னுக காதலாற்
சால வீச னடியார் தழைக்கவே. 109

இ - ள் : இவ்வுலகம் வாழக்கடவது. நான்கு வேதங்களும் வாழக் கடவன. நீதிவழுவாத மன்னவர் செங்கோல் வாழக்கடவது. காலந் தப்பாமல் மழைபெய்யக்கடவது. அன்புடன் சிவனடியார்கள் மேன்மேலும் வாழக்கடவர் என்றவாறு.

வஞ்சுளை முத்திபெற்ற அத்தியாயம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் — 1323

பிரமோத்தரகாண்டம் முற்றுப்பெற்றது.

பிழைத் திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
29	14	பெரும்	பெறும்
49	8	கருனை	கருணை
65	27	னிறத்	னுரைத்
135	18	கொடுத்து	கொடுத்துக்
150	25	எனனு	என்னு
176	11	புத்திரனுவன்	புத்திரனுனவன்
187	25	பறந்த	பரந்த
190	18	தோளனே	தோழனே
210	21	ஊழ்வனை	ஊழ்வினை
225	35	கறறுணாநதார	கற்றுணர்ந்தார்
251	22	மீடடான்	மீட்டான்
264	3	என	என்
288	7	ட்டியகூ	கூட்டிய
314	27	உலகதது	உலகத்து
378 முதல் 392 வரை		பிரமோத்திர	பிரமோத்தர
386	7	வருந்தோ	வந்தோ

பாட்டு முதற்குறிப்பு அகராதி

பக்க எண்

அகழணி	85
அகிலநா	234
அக்காதை	401
அக்காலைநோ	51
அக்காலையி	96
அங்கண்மா	32
அங்கதுகண்	47
அங்கது	377
அங்கமா	296
அங்கமொ	214
அங்குசங்	236
அங்குமா	215
அச்ச	263
அஞ்சனக்	278
அஞ்சனமி	6
அஞ்சலித்	296
அஞ்சுட	325
அஞ்செழுத்	153
அடியனேன்	312
அடுகொலை	324
அடைந்தவ	110
அடைந்தவா	382
அடைந்தோர்க்	300
அடையலர்ச்	113
அணங்கு	361
அண்டர்கள்	231
அண்ணலே	314
அதுவே	298
அத்தகைம	374
அத்தகையநோ	51
அத்தலையோர்	47
அத்துவா	160
அந்த	355
அந்தணரே	399
அந்தணர்	78
அந்தநூ	389
அந்தமா	87
அந்தரத்	290
அந்தரவ	128
அந்தவா	280
அந்தவெண்	287
அந்தவே	184
அந்தவேளையி	295
அந்தோகொ	49
அந்தோசி	109
அந்தோவ	185
அந்நிலைம	348
அந்நிலையே	334
அப்பதி	35
அப்பு	209
அப்பூ	97
அப்பெரும்	357
அப்பெருவ	307
அம்மா	96
அம்முனி	18
அயலகத்	212
அயிலெயிற்	133
அய்யநீ	378
அரசநீ	355
அரசனுன்	22
அரசிழந்	136
அரசிளங்	106
அரனி	353
அரிதி	87
அரியதா	209
அரியநா	183
அரியமா	277
அரியவே	108
அருகுற	170
அருங்கானில்	43
அருஞ்சுடர்த்	63
அருநெறி	104
அருந்ததி	30
அருந்ததிய	152
அருந்ததியு	264
அருந்தவம	57
அருந்தவமு	304
அரும்பவிழ்	128
அரும்புவி	307
அருளின	374
அலங்கல்வெண்	128
அலர்மொழி	340
அவடிரு	157
அவரம	76
அவனவை	168
அவனியை	116
அவ்வண	232
அவ்வண்ணந்	50
அவ்வழிய	342
அவ்வழியோ	38
அவ்வளவிற்	49
அழிமுடை	282
அழியும்	3
அழுது	195
அளவுறுகா	336
அளிகொண்ட	219
அளித்தவை	162
அறங்கொள்	382
அறத்தினி	262
அறத்தினெறி	258
அறந்தழையுந்	335
அறிவி	100
அறிவு	358
அறைகட	349
அற்புத	342
அற்றைப்படு	200
அற்றைப்படுகங்	206
அற்றைப்பொ	400
அற்றைமு	52
அனந்தன்	294
அனைத்துள	238
அனையகா	100
அனையமா	336
அனையவன்	336
அன்பர்க்	124
அன்பினிருத்	122
அன்பினிற்	394
அன்பினு	302
அன்பினொடு	360
அன்பின்	87
அன்புக்கோ	27
அன்புற்றி	201
அன்புற்றெ	368

அன்றிக் 394
அன்றியுமட 117
அன்றியுமற 54
அன்றியுமன் 161
அன்றியுமி 169
அன்றியுமுன் 172
அன்றுமிக் 113
அன்னதன் 57
அன்னதா 29
அன்னதாலு 138
அன்னது 345
அன்னதுகண் 39
அன்னதுநி 125
அன்னதுவே 400
அன்னதே 288
அன்னதேபு 329
அன்னமே 415
அன்னமை 355
அன்னலி 365
அன்னவளை 50
அன்னவன் 154
அன்னவன்ற 251
அன்னவளுமிச 409
அன்னவளுமை 189
அன்னவா 88
அன்னோன் 413
ஆக்கிய 376
ஆங்கணி 50
ஆங்கவர்க் 317
ஆங்கவனுஞ் 400
ஆங்கவனைப் 405
ஆங்கினி 350
ஆசில்சீர்க்கதை 9
ஆசில்சீர்க்குமர 137
ஆடரங் 369
ஆடுமுனி 41
ஆண்டகைகு 61
ஆண்டகையி 32
ஆதலாலஞ்சு 139
ஆதலாலணங் 328
ஆதலாலரன் 315
ஆதலாலிவ் 194
ஆதலாலீண் 403
ஆதலாலெ 367
ஆதலால்கதை 395
ஆதலால்ப 416
ஆதலால்வரு 373
ஆதலாற் 306
ஆதலானி 63
ஆதலானித் 217
ஆதலானின் 382
ஆதலினாலவ 175
ஆதலினிருத 287
ஆதியம் 114
ஆதுல 196
ஆமிஃதெ 37
ஆயகாலையிற் 8
ஆயகாலையின 99
ஆயமாமணி 352
ஆயவனெண் 148
ஆயிடையிற் 41
ஆயிரந்தபனர் 136
ஆயிரமம் 243
ஆயிழைநீயும் 77
ஆயிழைமு 16
ஆயினுமவ 54
ஆயினுமெற் 203
ஆரணங்கு 409
ஆரணந 4
ஆரணநா 305
ஆரணந்தன 159
ஆரணமுந் 396
ஆராமங்க 300
ஆரியவருத் 177
ஆர்வுறு 375
ஆலவாயி 111
ஆலைக்கரு 127
ஆவியந் 282
ஆவினது 38
ஆழியுலகத்தி 229
ஆழியேமுத 290
ஆழ்ந்த 269
ஆறிரட்டி 265
ஆனாதசெ 246
ஆனாததுன் 199
ஆன்ற 391
இக்கடக 365
இக்கதைபோ 257
இங்கிவடா 163
இங்குவை 222
இச்சிவ 37
இடரொழிக் 381
இடைய 253
இடையிபமுகத் 237
இடைவி 207
இணையி 28
இத்தகைம 14
இத்தகையகதை 396
இத்தகையநகர் 42
இத்தகையமாற்ற 228
இத்தகையவா 81
இத்தலையி 383
இத்தலையின் 130
இத்திறநாக 175
இத்திறமவனி 232
இத்திறமிரு 122
இத்திறமைய 106
இத்திறம்வெம் 243
இத்துணையு 352
இந்தப் 416
இந்தமகவு 110
இந்தமந் 387
இந்தமா 343
இந்தவண் 382
இந்தவாறு 365
இந்தவிபூதி 302
இந்தனஞ்சேர் 246
இந்திரசேன 174
இந்திரன் 85
இந்திராதி 291
இந்திரி 312
இந்துசேகரன் 9
இந்துசேகரன்ம 353
இந்துவாண்முகத் 330
இந்நிலை 17
இம்மதலை 386
இம்மை 185
இயாவ 299
இயாவரே 327
இயாவையுந் 274
இரங்கினன்றன் 399
இருடிகண் 187
இருநில 129
இருந்தமறை 270
இருந்தவத் 45

இருந்து	173
இருவர்தம்	102
இலகு	293
இலங்கையின்	35
இல்லறத்தின்	147
இவ்வண்ண	334
இவ்வண்ணம்	304
இவ்வணமுரைத்	117
இவ்வணமுலைப்	33
இவ்வாறுகொற்	65
இவ்வாறுபூசை	89
இவ்வாறுமை	108
இவ்வுல	161
இவ்வுரு	197
இழுது	211
இளங்கதிர்	148
இறந்தபின்	282
இறந்தவனே	336
இறந்தனர்	158
இறுதியெனத்	3
இறைசந்	97
இறைஞ்சி	222
இறையவன்	312
இறைவனை	363
இனிய	182
இனைய	87
இனையளித்	53
இன்பம்வந்	373
இன்றே	98
இன்னகைத்துவர்	330
இன்னணநிகழ்	358
இன்னணந்திங்	319
இன்னணமர	153
இன்னணமுட்	336
இன்னணம்புரிந்	61
இன்னணம்புரியு	63
இன்னதன்	55
இன்னதன்மை	84
இன்னதன்மைய	388
இன்னதன்மையதி	350
இன்னதன்மையம	354
இன்னதாய	302
இன்னதேயருளு	143
இன்னமந்	11
இன்னவாறி	86
இன்னனபன்	134
இன்னுங்கொடு	300
ஈங்கிவர்கள்	370
ஈங்கெம்	53
ஈசன	91
ஈசனென்	111
ஈசன்காதை	395
ஈசன்விர	196
ஈண்டுநல்	107
ஈதவ	162
ஈதுவீறுயர்	241
ஈமத்தி	309
ஈரமலர்ப்	335
ஈன்றவளுவப்ப	345
ஈன்றவெம்	132
உடைத்தெறிந்	305
உண்ட	207
உண்டு	405
உண்ண	51
உண்ணா	272
உதய	72
உதிரமு	105
உந்து	29
உமையவ	133
உமையா	415
உமையெனு	136
உம்பராரமு	391
உம்பர்	36
உய்த்தவூன்	23
உரைத்தவற்	309
உரைத்தவிக்	54
உளக்கம	326
உளத்தினி	313
உளமலி	317
உற்றதாதைய	193
உற்றவாயுள்	211
உற்றவாறெ	28
உற்றவூ	230
உற்றன	262
உற்றாரய	46
உற்றுநின்	279
உற்றுநும்	215
உன்னையீன்	217
உன்னுறு	170
ஊதுலை	292
ஊர்தியி	36
ஊழின்	408
ஊழ்வினை	373
ஊனநீக்கிய	12
ஊனருந்தும்	49
எக்குலத்தவ	391
எக்குலமங்	204
எங்குலக்	33
எங்கள்குலவேந்தர்	248
எங்கள்குலவேந்து	245
எடுத்துற	140
எண்டிகை	148
எண்டொ	291
எண்ணரிய	145
எண்ணார்	166
எண்ணினல்	33
எண்ணுமோர்	354
எண்ணுறு	174
எத்தகைய	351
எத்தலஞ்	34
எத்தவஞ்	328
எத்திறத்	188
எந்தைய	91
எந்நிலையுந்	273
எப்பாதகஞ்	199
எம்மையா	57
எய்துமென்று	380
எரிசிகை	278
எரிதவழ்	344
எரிமணிக்	325
எவ்விகற்பத்	217
எவ்விடருஞ்	372
எழுந்துபடர்	27
எள்ளப்படு	301
எள்ளுறு	80
எற்றியவருத்	104
எனப்புகன்	44
எனமனத்	191
எனவுரைத்	338
என்கொனதி	352
என்பதாய	176
என்பெய	133
என்றது	64
என்றரசன்	255
என்றவ	174

என்றவரொறுக்	341
என்றவர்	187
என்றவளுரை	61
என்றவள்கூறலு	15
என்றவள்சொல்	310
என்றவள்மீட்டு	170
என்றவனியம்பலு	20
என்றவனுரைத்த	151
என்றவனுரைத்தலு	359
என்றாங்	414
என்றாரன்	122
என்றான்கடிதி	246
என்றான்மகிழ்ந்தா	416
என்றிவர்	75
என்றிவை	190
என்றிறை	240
என்றுகூறலு	183
என்றுகூறி	179
என்றுகூறிமறலி	379
என்றுகூறிய	260
என்றுசிந்தை	208
என்றுசீறிய	364
என்றுதனிக்	383
என்றுநாரத	387
என்றுபலதரு	147
என்றுபலபல	403
என்றுபலவு	408
என்றுபரம	368
என்றுபற்	30
என்றுபன்னி	212
என்றுபாலனுக்	223
என்றுபேர்	88
என்றுமன்னவ	80
என்றுமா	329
என்றுமுனி	43
என்றுமெவனி	158
என்றுவினவு	297
என்றுவீறுயர்	58
என்றுவெகு	91
என்றென்றரற்	165
என்றென்று	264
என்றேயரசன்	273
என்னநிகழ்	36
என்னபரமன்	297
என்னமறையோ	406
என்னமாமுனி	107
என்னமுனி	371
என்னலுமே	266
என்னவுரைத்	242
என்னாமுனிவ	200
என்னாமுன்னமெ	122
என்னாமுனமொ	150
என்னாமுன்ன	411
என்னாமொழி	313
என்னாவிவள்	219
என்னாவிறை	249
என்னிமித்த	366
என்னிளங்	106
என்னினுந்	285
என்னுடைய	268
என்னுமானந்தை	361
என்னுமுமைக்கு	109
என்னுமுரை	82
என்னுமுரையு	165
என்னுரைகேளீ	186
என்னுரைவழா	154
என்னுறு	172
என்னைமாழ்கி	213
ஏடவிழ்	230
ஏந்திய	308
ஏமத்	241
ஏழிரண்	60
ஏழுகோடிமந்திரமு	301
ஏழுகோடிமந்திரமெ	378
ஏற்றெதிர்	141
ஏனைநற்	176
ஐந்தவித்	344
ஐந்துபுலனு	120
ஐந்துமுகத்தா	224
ஐந்துமுகமு	270
ஐந்தெழுத்	11
ஐம்புலவழிச்	90
ஐம்புலனெ	125
ஐயகேட்டிநீ	295
ஐயமெய்திய	106
ஐயனேகேட்டி	280
ஐயனேநம்	212
ஐயனேபோற்றி	288
ஐயிருகாதஞ்	167
ஒருபெருங்	285
ஒருவனாய்	159
ஒல்கு	354
ஒழிந்தவினை	19
ஒன்றுமுற்	34
ஓகைபுரி	18
ஓகையொடுநான்	124
ஓகைவாரிதி	58
ஓங்கியபே	371
ஓங்குசீர்	391
ஓடும்வேலையி	362
ஓதுதற்கு	389
ஓதுநான்	343
கங்கா	221
கங்குலின்	238
கங்குல்	103
கங்கைதங்கு	177
கங்கையணி	83
கங்கையை	160
கடலிலும்	282
கடவுணன்	353
கடவுணீ	240
கடற்படை	95
கடுங்கானத்	258
கடுங்கானிற்	265
கடையுகந்	235
கணவனுநின்	337
கண்டடி	156
கண்டதாபத	365
கண்டநமன்	50
கண்டவர்	137
கண்டவுடன்	256
கண்டனள்	24
கண்டனளெ	359
கண்டனன்மகி	192
கண்டனன்றுண்	398
கண்டனை	19
கண்டான்	247
கண்டுகேட்	343
கண்டுபொ	263
கண்டுமன்	382
கண்ணகன்	74
கண்ணீர்	270
கண்ணுதலா	83
கண்ணுதல்	198
கண்ணுமன	271

கண்ணுற்றன 150
கண்மணி 331
கமலால 407
கமையினள் 105
கம்பமால் 392
கம்மிய 281
கயங்கெழு 15
கயிலே 395
கரந்தை 390
கருங்கயல் 311
கருத்துகே 277
கருப்பமுற் 207
கருப்பம் 299
கருப்பயோனி 11
கருப்புவி 291
கருமணி 59
கலியு 390
கலேபல 78
கலேமகள் 127
கல்லார் 411
கல்வி 216
கருவளர்ந் 339
கருவிழி 321
கவ்வைமா 377
கள்ளக் 71
கள்ளவிழ்க 330
கள்ளவிழ்கு 346
கள்ளாரு 219
கறங்குதிரைப் 7
கறைகெழு 236
கற்பினிலே 334
கற்பு 401
கற்றக 183
கற்றுணர் 331
கனங்குழையு 398
கனேகட 316
கனேகுரற்றெண் 268
கனேயா 314
கனேவெண்டிரை 205
கன்னலஞ் 131
கன்னவி 261
காகம் 247
காசிலரக்க 38
காடுகர 244
காட்டிருங் 305
காதலாலொ 316
காதலானறனெ 397
காப்புக் 402
காமதேவனே 276
காமபாணங் 194
காமவசத்தாற் 401
காமவேளுநல் 361
காமனே 216
காரிகை 404
காய்சினக் 294
காய்ந்த 196
காய்ந்து 403
காலமிஃ 166
காலமென்பர் 216
காலமேதோ 297
காரகில் 320
காரணங் 74
காவலநீமேவு 399
காவலவு 409
காவலவன்ற 255
காவலன் 30
காவலன்றேவி 274
காளே 111
காளேயினேரு 370
காளேவே 193
காற்றின் 98
கிளிகளும் 127
குங்குமக் 140
குங்குமஞ்செறி 253
குங்குமமெழு 190
குடங்கையி 188
குடைநிழ 73
குணமில 83
கும்பியின் 286
குரவர்தமைக் 230
குரவவார் 17
குரைபுனலத 163
குரைபுனலுரு 234
குலநாய்கன் 257
குலமகளிர்க் 403
குழலினிற் 67
குழைத்துத் 297
குளிர்கலே 323
குறுமுனி 80
குனிமதிவா 337
குன்றியந் 309
கூறிய 376
கூறுசாத்தி 213
கூறுபல 41
கூறுமாக்கதை 394
கூனிமூத்த 216
கேட்டஞான 295
கேட்டமறை 351
கேட்டமன் 141
கேட்டமாமுனி 279
கேட்டவ 198
கேட்டலுமுனி 31
கேட்டலுமெழு 163
கேட்டவுமையு 110
கேட்டவை 341
கேட்டார் 123
கேட்டாளர 250
கேட்டானெ 218
கேட்டுவ 210
கேளாயி 66
கைகொடு 356
கைக்களி 36
கைதவத்தி 185
கைதவத்தை 194
கைதவமே 48
கைம்மையிற் 54
கையார்மழு 407
கொங்குடைந் 67
கொங்கையங் 135
கொங்கையடி 45
கொடியவு 126
கொடுவினே 168
கொடையிலி 157
கொண்டோர் 402
கொய்யுளே 404
கொய்யுளேமான் 318
கொலேபுரிவா 25
கொலேபெ 276
கொல்லுலே 75
கொற்ற 354
கொன்றைதுன் 367
கொன்றையங் 112
கோகன்ன 40
கோசிகன் 252
கோடிசெங்கதிரா 294

கோடிசெங்கதிர் 314
கோடும் 227
கோட்டமில் 321
கோட்டு 369
கோது 380
கோதைபுனை 248
கோபாலர் 97
கோயில் 28
கோலவி 187
கோலாமைக்கண் 178
கோளுறு 73
கோறல் 299
சங்க 292
சண்பகம் 261
சதுமறை 322
சந்தமறை 411
சந்தமு 153
சந்தனப் 79
சந்தார் 410
சந்திரம 236
சந்திராங் 155
சந்திராங்கதனும் 179
சந்திராங்கதன் 259
சந்திரனெ 359
சாந்தமும் 16
சாபத்தை 23
சார்ந்த 253
சாவதும் 214
சாவதுவே 372
சிதைந்துரு 307
சிந்தைக் 412
சிந்தைசால் 332
சிந்தைவே 15
சிலதர் 364
சிலம்பெதிர் 129
சிவநிசி 59
சிறியருக் 92
சிறியர் 392
சிறியனீ 161
சினகர 62
சீதமதிப் 144
சீதவார் 5
சீர்பெறு 203
சீறலை 186
சுயமரத் 77
சுழிபடு 188
சுற்றமு 166
சூரிய 21
சூழிமால் 65
செக்கச் 415
செங்கதிர் 323
செங்கய 312
செங்கன 37
செங்கை 314
செங்கோன் 268
செந்நிறத் 64
செம்பொன்முடிக் 372
செம்பொன்வெற் 378
செய்தநன்றி 299
செய்தவக் 342
செழுமறை 345
சென்றே 406
சென்றார் 416
சேண்வழி 173
சேதாவி 205
சேர்த்தார் 244
சேயொளிக் 171
சைவநெறி 406
சொல்லாயென 228
சொல்லார் 66
சொல்லிய 197
சொல்லுதி 286
சொற்றனள் 348
சொன்னகாலை 100
சொன்னவா 177
சொன்னவிப் 115
சொன்னவிவை 147
சோரி 369
ஞாலநாய 379
ஞாலமோ 417
ஞானநூ 226
தக்கமறை 226
தக்கன்தலை 409
தக்ககன்பரி 176
தடிமிசை 306
தண்டா 221
தத்துநீர்ப் 239
தத்துவாம் 252
தந்தை 166
தந்நிகரில் 248
தமர 292
தம்முடி 95
தருமசிந் 211
தருமநூ 232
தருமமுநீதி 376
தருமவென 155
தவங்கள் 10
தவளமுந் 333
தனித்துணை 333
தன்கணவன் 400
தன்மனை 93
தன்றாதை 180
தன்னிகரி 254
தன்னுயிர்போ 46
தன்னுருக் 279
தாங்கிமு 372
தாங்கு 381
தாணுவி 86
தாதவிழ் 13
தாதுதாழ் 344
தாதுநிறை 4
தாதையைக் 165
தாமந்திகழ் 149
தாமமணித் 244
தாயர் 215
தாயிழந் 105
தாயுமி 252
திங்கடோறுங் 119
திங்களெனப் 256
திங்களொரு 124
திண்டிறல் 242
திண்டிறற் 286
திருந்தலர் 261
திருமறு 56
திரைக்கட 162
திரையெடுத் 153
திவண்மறி 236
தினகர 324
தீங்குரை 192
தீங்குறு 24
தீதிலாத 392
தீதுறு 60
தீப்பேணும் 396
தீயகள் 53
தீயபசியா 51

தீயூட்டித்	229	நஞ்சினி	67	நீடுசெந்	178
தீயைப்	412	நஞ்சை	195	நீடுபெரும்	146
தீர்ந்த	227	நதியினி	155	நீணிதிப்	357
துஞ்சுஞ்	221	நம்பரம	352	நீணிலமேல்	228
துடிமுதல்	376	நம்புகொ	402	நீதியுமொ	232
துணிவுற்ற	250	நரந்த	363	நீதிவரம்	274
துணைபிரிந்த	397	நரைதிரை	161	நீர்மலிந்த	164
துணைவநீ	189	நல்கிய	14	நீளம்பு	298
துண்டவெண்	325	நல்ல	1	நீள்பனை	278
தும்புருநா	40	நல்லாயிவன்	201	நூனெறி	327
தும்புருவோ	115	நல்லிளமைச்	398	நெஞ்சினில்	308
துயருற்ற	202	நல்வினைத	104	நெஞ்சினின	171
துறக்கமு	375	நல்வினையுழ	19	நெடிமுழங்கிச்	24
துன்பத்	103	நறுமலர்ப்	126	நெடுங்கடல்	157
தூசொடு	327	நறுமலர்மா	189	நெடுநாளி	98
தூயகண்	235	நற்றவத்தோன்	257	நெடும்படைப்	140
தூரவேகி	362	நன்குரைசெய்	360	நெட்டை	277
தெய்வ	271	நன்றுசிவ	81	நெய்வண்ண	180
தெரிவ	10	நன்றுநன்றுநீர்	9	நெளிதிரை	163
தெரிவை	171	நன்னதிக்	167	நேயமோ	308
தென்புல	22	நன்னித்	412	நோயிலா	284
தென்னிலங்கை	40	நாகநாடு	379	நோவினை	208
தேங்குகங்	290	நாகமன்னவர்	291	பகைஞர்	89
தேங்குபே	13	நாடிமூன்று	301	பகைவர	259
தேசான	5	நாணொடு	169	பங்கயத்	234
தேசுறு	128	நாதனுருத்திர	203	பங்கயன்	281
தேயா	414	நாயகன்கதை	393	பச்சை	415
தேரணி	76	நாயடியே	402	பஞ்சபா	240
தேவரே	368	நாளினின்	13	படர்கி	214
தேவர்தம்	417	நாளுமன்	358	படர்ந்தநீ	293
தேவர்நிலை	229	நாறுபூங்கோ	339	படர்ந்தவேணி	395
தேவாதி	272	நாறுமலர்க்	413	படியினை	284
தேன்மாரி	384	நாற்றிசை	374	படுமலை	283
தொடிமலர்ச்	318	நிணநெடு	102	படைமலை	142
தொடுகட	349	நித்தியமா	144	பட்டபின்	286
தொத்தா	407	நிரந்தர	172	பண்டுபாஞ்	306
தொல்லையமு	6	நிருதர்குலத்	39	பண்டைக்	47
தொல்லையம்பழ	295	நிலங்கிளைத்	340	பண்டைநாண்	347
தொல்லையம்பிற	92	நிலம்பொ	364	பண்டைய	75
தொழுகுலத்	154	நிற்புழி	238	பண்டைவா	214
தொழுதனர்	328	நினைவரும்	160	பண்கனி	320
தோழரும்	158	நின்றமர்யார்	249	பண்ணியன்	68
தோளு	218	நின்றமன்	32	பண்ணுறு	131
நகரின்	259	நின்விரதப்	338	பண்பில்லா	396
நஞ்சமிருக்கு	413	நின்னெடுந்	14	பத்திநெறி	407

பத்தியால்	302
பத்தியோடங்கு	393
பத்தியோடு	381
பத்திராயு	222
பதும	70
பரந்தவெங்	284
பரவைசூ	305
பரவையு	80
பருதி	12
பருமரத்	288
பருவத்	201
பலத்தின்	298
பல்லுளைப்	239
பவள	271
பழியுரைதன்	397
பழைய	303
பற்றிய	6
பாகெனுஞ்	217
பாசிலை	126
பாசிழைப்	66
பாதலந்	163
பாதலமே	174
பாதவஞ்சூழ்	410
பாயும்	315
பாரிடைக்	59
பாலரின்	356
பாலை	70
பாலொத்	219
பாவமெ	390
பாவிய	173
பாறுதாழ்	247
பானுமின்	56
பிங்கலையென்	225
பிஞ்சுமதிச்	2
பிணிநெ	362
பிணிமுதிர்ந்திட	208
பிணியினெடு	385
பிறிதொரு	281
பிறையினெடு	146
பிறையெயிறி	31
பிறையெயிற்று	380
பின்னரு	375
பின்னரோர்	281
பின்னுநான்	99
பின்னுமா	182
பின்னுமிஃ	256
பின்னும்மறை	206
புக்கவரவனை	156
புடைத்தவுட	39
புண்ணியபா	375
புண்ணியம்	16
புண்டரிக	379
புண்டாரை	43
புத்திரனில்	197
புரவல	311
புரிகுழ	152
புல்லடு	74
புல்லிய	15
புவனி	277
புனிதமணி	120
புனிதவா	361
புன்மைநெஞ்	194
புன்மையினுன்	387
புன்னைச்	164
பூசனையிறுதி	60
பூசனைவழு	309
பூசுரர்	332
பூட்டுவெஞ்	21
பூந்துணர்	346
பூமண்டலத்	180
பூமேவு	1
பூரணியைத்	2
பூவுறை	130
பெண்ணலத்தினைப்	29
பெண்ணுகி	266
பெருமநீ	378
பெற்றபி	149
பேரறிவின்	81
பேராண்மை	254
பேரியாழ்	68
பைந்தாட்	220
பையரா	253
பைவிரி	151
பொங்கிள	310
பொங்குமா	353
பொங்குவெள்	182
பொதும	368
பொம்மன்	251
பொய்க்கவ	285
பொய்யுட	79
பொய்யென்று	405
பொல்லாநர	269
பொல்லாவ	220
பொறியைந்து	200
பொன்புரை	346
பொன்னெடுங்	79
பொன்ற	215
பொன்னவிர்	287
போதலுற்ற	107
போரணி	173
போர்கெழுவேல்	225
மக்களோ	107
மக்களுணர்	351
மங்கல	168, 169
மங்கைநீக	367
மங்கைமீர்	131
மங்கையம்	152
மங்கையர்	187
மங்கையிள	204
மஞ்சரி	322
மஞ்சமே	394
மஞ்சுசூழ்	130
மஞ்சுபோற்	362
மடங்க	254
மடமாதைப்	267
மடமையி	307
மடவர	320
மடியினுல்	380
மணத்தினி	151
மணஞ்செய்	179
மணமலி	347
மணித்	384
மண்டுபுருவச்	226
மண்டுதிம்புன	184
மண்டுதெவ்வமர்	356
மதவெங்களி	150
மந்தர	34
மந்தியினஞ்	204
மந்திரக்கிழவர்	142
மந்திரக்கிழவன்	112
மந்திரவிதி	93
மயிலொத்த	201
மரகத	149
மருளுறு	18
மலர்தலை	319

மலைமகளை	44
மலைமுதற்	238
மல்லணி	37
மல்கிய	114
மல்குநிதி	167
மல்குமாநிதி	210
மவ்வலங்	262
மறைபயில்	346
மறையவருக்	264
மறையவனொரு	326
மறையவனோ	262
மறையாக	89
மறையுமங்	114
மறையோனென்	39
மற்றநிருபன்	226
மற்றவனுரை	170
மற்றவன்கூ	125
மற்றவன்மனைவி	164
மற்றிவன்	114
மற்றுநீ	363
மற்றுமின்னர்	101
மற்றுமோர்	276
மற்றும்	393
மற்றையவெல்	308
மற்றொருதவங்	375
மற்றொருவரில்	48
மனமறுகுற்	26
மனைபடு	313
மனையிற்	90
மனையின்மி	311
மன்றலங்	348
மன்றறங்கி	101
மன்னவர்தேர்	77
மன்னவர்மகுட	72
மன்னவனந்நகர்	86
மன்னவன்	136
மன்னர்ப	275
மன்னர்ம	254
மன்னவனே	263
மன்னனமு	245
மன்னனு	96
மன்னிய	119
மன்னியநி	341
மன்னுயிர்க்	20
மாகாள	89
மாசக	380
மாசிலா	373
மாசுசூழ்கு	177
மாடமா	357
மாண்ட	227
மாதங்கந்	244
மாதர்பான்	17
மாதவ	31
மாதவனு	406
மாந்தளிர	191
மாந்தளிர்	332
மாயாத	202
மாயிருஞா	25
மாலயன்	62
மாலையம்புய	292
மாலைவன்	184
மாவண்கை	180
மாவியலுந்	245
மாருக்கற்பி	269
மாறிலாத்	267
மாறிலாப்	255
மாறுசெய்	242
மாறுபடும்	249
மாறொடு	243
மான	35
மான்மழு	235
மின்குல	310
மின்னிகர்	316
மீட்டுக்	401
மீட்டுங்	220
மீட்டுமற்	389
மீண்டன	377
முகடு	293
முகையிள	326
முகையுடை	101
முக்கணாயகனம	10
முக்கணாயகன்மு	218
முக்குணத்தின்	213
முக்குணவ	55
முடங்குளைத்	288
முடங்குளைமு	239
முடங்கற்	71
முடிந்தவே	206
முட்டெறு	284
முத்தலைச்	138
முத்திநன்	12
முந்தைநான்	218
முந்தைநூ	99
முருகுவி	293
முழவொலி	149
முளரிப்	70
முற்றுநன்	389
முற்றுநான்	304
முற்றுமிடி	247
முற்றோகை	405
முனிவரனகல	339
முனிவரன்பு	139
முனிவரன்மே	348
முனிவனுமி	33
முன்புறவெ	21
முன்னைநின்	191
முன்னையிறந்த	369
மூதெயில்	94
மூரியிருக்குந்	413
மூவராதி	392
மூன்றுக	271
மூன்றுசுடரு	408
மேவலாளர்	175
மேவுபொன்	357
மேனியினெ	18
மைந்தர்கல்வி	183
மைந்தர்நீங்	125
மைந்தன்மண	197
மைந்தன்வர	371
மையணிக	142
மோன	367
யாக்கியவ	172
யாம்பல	76
யாவரேனு	381
யாவனொரு	138
யானிப்பத	410
யானென	404
வஞ்சக	390
வடுவிலாப்	13
வணங்குவரிச்	385
வணிகமை	241
வதிகடோ	242
வந்தமறை	198
வந்தமுனிக்கு	251
வந்தயோகி	213

வந்தவந்த	246
வந்தவனைக்	25
வந்தாமிறை	251
வந்தானிவ	205
வந்தானை	200
வந்துச	86
வந்துதந்தை	175
வந்துமற	273
வம்பைமு	69
வரதவ	94
வரவழைத்துத்	386
வரிசிலைகுழைய	141
வரிசிலையுழ	23
வரியுடை	283
வருகுல	71
வருதலு	319
வருதியென்	195
வருத்தமி	296
வருபவன்	237
வருமதி	327
வலத்திற்	413
வல்லசீ	377
வல்லதே	393
வல்லம	123
வல்லியுரை	359
வல்லுகி	283
வல்வினையா	26
வளமலிசீர்	335
வளமலிவே	321
வளமறை	237
வளர்மதிக்	338
வளைகடற்	324
வனப்புறு	190
வனைந்த	222
வன்கண	398
வன்பில	195
வாங்கிய	16
வாங்குதிரைக்	145
வாங்குமலை	121
வாசங்க	411
வாசநன்	231
வாமபாகத்	121
வாம்பரித்	318
வாய்மை	366
வாவுந்தி	221
வாவுபரித்	227
வாழுநாளகத்	117
வாழுநாளு	280
வாழுமனை	82
வாழ்கலை	340
வாழ்பொது	360
வாளெனத்	69
வாள்விரி	349
வானமிரு	225
வானமே	159
வானயா	311
வானர	358
வானவர்	134
விசும்புநெறி	384
விஞ்சையரியக்	56
விஞ்சையரினல்	225
விட்டு	209
விண்டலமள	115
விண்டலம்பு	101
விண்டுவே	116
விண்ணகட	137
விண்ணகம்	55
விம்மிவிம்மிநெஞ்	210
விரிகட	192
விரிகதிர்ப்	323
விரைமலர்	132
விரையுற்ற	90
விலைவரம்	73
வில்லா	249
விழித்தனன்	91
விளம்புசொற்	342
வினைய	102
வீழுமெ	212
வீழ்ந்தமன்	258
வீழ்ந்தவட	404
வீழ்ந்தவன்	198
வீழ்ந்தவுடன்	44
வீழ்முக	283
வெங்கலி	178
வெங்காரிருள்	199
வெங்கோ	202
வெஞ்சினக்	209
வெஞ்சினமூ	186
வெண்ணீ	220
வெந்த	48
வெப்பி	279
வெய்ய	52
வெருக்கொள	22
வெளிவர	331
வெள்ளாடுஞ்	48
வெள்ளி	121
வெள்ளைவெண்	289
வெறிகமழ்	319
வெற்புக்	120
வென்ற	103
வேண்டுநன்	185
வேண்டுநீ	364
வேதநான்	10
வேதபார	8
வேதப்	250
வேதமிரு	414
வேதமும்பல	193
வேதமும்வேத	94
வேதமுரை	82
வேதமுனிசா	27
வேதமுனியே	52
வேதமுனிவன்	123
வேதியருக்	266
வேதியன்	263
வேந்தர்	273
வேந்தன்	229
வேயனைய	275
வேலையேழையு	294
வேலைவேலை	366
வேழமென்	194
வையம்	274

ADU AR

2